இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி – III

ஆசிரியர்
எச். என். சின்ஹா

தமிழாக்கம்
கி. ர. அநுமந்தன்

தமிழ் வெளியீட்டுக்கழகம்
தமிழக அரசு

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—182

இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—III

(THE DEVELOPMENT OF INDIAN POLITY-III)

ஆசிரியர் :

எச். என். சின்ஹா

தமிழாக்கம் :

கி. ர. அநுமந்தன், *எம்,ஏ., எம்.எஸ். (விஸ்கான்ஸின்),*
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

பொருளடக்கம்

பக்கம்

13. ஆப்கானியர்களும் அவர்களின் புதுமாதிரியானதோர் முடியாட்சி வகையும் ... 1

14. மொகலாய ஆட்சி - மாட்சி மிக்கதோர் காலம் ... 70

15. அக்பரும், சமயச் சார்பற்ற, இறைமை சான்ற அரசும் ... 127

16. அவுரங்கசீபின் வகுப்புவாதக் கொள்கையானது இந்தோ-இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்குமுறையின் அடிப்படையையே குலைத்துவிடுதல் ... 209

17. முடிவுரை ... 290

பொருள்குறிப்பகராதி ... 308

இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி - III

13. ஆப்கானியர்களும் அவர்களின் புதுமாதிரியானதோர் முடியாட்சி வகையும்

ஆப்கானியப் பேரரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும்

நம்முடைய ஆய்வுக்கு உட்பட்ட காலப் பகுதியில், வட இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆப்கானியர்கள் எழுச்சி பெறலாயினர். அமிர் தைமூரின் படையெடுப்பின் விளைவால் டில்லி சுல்தானிய நாடானது பல சிறு துண்டுகளாகப் பிரிந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டுலோடிகள்ஒருபேரரசைத்தோற்றுவித்தனர். அதில் பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பீஹாரின் ஒரு சில பகுதிகள் ஆகியவை அடங்கி இருந்தன. இந்தப் பேரரசானது முக்கால் நூற்றுண்டு வரை நீடித்தது. அதன் பின்னர் ஆப்கானிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையில், இயல்பாகவே பொதிந்துகிடந்த ஒரு சில குறைபாடுகளின் காரணமாகவும் பாபரது படையெடுப்பின் விளைவாகவும் அது பல சிறு நாடுகளாகச் சிதறுண்டது. ஆனுல், அந்த மொகலாயப் பேரரசர் தாம் வென்ற நாடுகளை ஒன்று படுத்த நேரமில்லாமல் ஐந்தே ஆண்டுகளில் இறந்து போனுர். அவருடைய மைந்தரும், வழித்தோன்றலுமான ஹுமாயூன், இக்கட்டுகள் நிறைந்த ஒரு சூழ்நிலையைக் கட்டுப்படுத்த முயன்று அம் முயற்சியில் தோல்வியுற்றுர். தம் தந்தையிடமிருந்து அவர் பெற்ற பேரரசானது உறுதியான அடிப்படையின்மீது அமைக்கப்படவோ அன்றிப் பாதுகாப்புடன் நிலைநிறுத்தப் பெறவோ இல்லை. ஆப்கானியர்கள் தோற்கடிக்கப்பட்டார்களே யன்றி முற்றிலும் கலைக்கப்பெறவோ அன்றி ஒடுக்கப்பெறவோ இல்லை. மொகலாயரின் வீழ்ச்சிக்குப்பின் தங்களால் இழக்கப்பட்ட பேரரசை மீண்டும் உயிர்ப்பித்துவிடலாம் என்ற பேராசையானது அவர்களது மனத்தில் நீங்காமல் குடிகொண்டிருந்தது. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்குத் தக்க தலைவன்

இல்லாததே அவர்களுக்கு ஒரு பெருங் குறையாக இருந்தது. ஷெர்ஷா என்பவர் தோன்றியபின் அக் குறையும் தீர்ந்தது. ஆப்கானியர்கள் அனைவரும் அவரது கொடியின்கீழ்த் திரண்டனர். அவர்களது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி ஹுமாயூனை இந்தியாவிலிருந்து வெளியே துரத்தி அடித்தனர். இரண்டாவது முறையாக ஆப்கானியப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. இச் சமயம் அது உறுதியான அடிப்படையின்மீது அமைக்கப்பட்டிருந்தது. அதனுடைய பரப்பானது, லோடிப் பேரரசைக் காட்டிலும் மிகுந்திருந்தது. டில்லி சுல்தானிய அரசு தனது புகழேணியின் உச்ச நிலையில் இருந்தபோது அது எவ்வளவு பரப்புடையதாயிருந்ததோ அதற்குச் சமமான பரப்புடையதாய் அது விளங்கியது. இது ஒரு சாதாரணமான சாதனையன்று. எந்த ஒரு வமிச ஆட்சியாளர்களாயிருப்பினும், அவர்களுக்கு இது ஓர் அரும்பெருஞ் சாதனை என்பதில் ஐயமில்லை. அதிலும் இத்தனையும் ஒரே ஒரு மனிதரால் சாதிக்கப்பெற்றது என்பதை நாம் அறியும் போதுதான் அம் மனிதர் எத்தகைய மேதையாக இருக்கவேண்டுமென்பது நமக்குத் தெள்ளிதின் புலப்படுகிறது. வியக்கத்தக்கதொரு திறமை பெற்ற ஆட்சித் துறை நிறுவனத்தை அவர் வகுத்தார். அரசாங்க முறையிலேயே ஒரு புதிய பாணியைத் தோற்றுவித்தார். இனி வரப்போகும் மன்னர்களும் கடைப்பிடித்தற்கேற்றபடி அரசாங்கச் செயல் திட்டத்தில் புதிய முறைகளை அவர் புகுத்தினார். ஆப்கானியர்களின் நடத்தையில் மலிந்துகிடந்த ஊழல்களை அறவே ஒழிக்க அவர் விரும்பினார். சிறப்புமிக்க அவ்வரசரின் திறமைமிக்க கைகளில், பழைய அரசியல் மரபுகளும், நிறுவனங்களும் புதிய வடிவங்களைப் பெற்றன. அவர்பால் காணப்பட்ட எதிர்கால நோக்கும், நடைமுறைக்கொத்த மனப்பான்மையும், அவர் காலத்தே வாழ்ந்த வேறு எந்த மன்னர்களிடையேயும் காணப்பெறவில்லை. என்றும் அழியாது நின்று நிலவக்கூடிய அரசாங்க முறைமைகளையும், பணிகளையும் அவர் ஏற்படுத்திவிட்டுச் சென்றார். அவை அவருடைய பின் சந்ததியார்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது. அவர்பால் பல உன்னதப் பண்புகள் ஒருங்கே செறிந்திருந்தன. அவர் சிறந்ததோர் ஆட்சியாளர் மட்டுமல்லர்; திறமைமிக்க தளபதியாயும், புதியனவற்றை அமைப்பதில் வல்லவராயும் அவர் திகழ்ந்தார். ஆனால், இத்தகைய தலைசிறந்த பண்புகளுடன் கூடிய அவர் நெடுங்காலம் வாழக் கொடுத்துவைக்கவில்லை. தாம் அரிதின் முயன்று அமைத்த பேரரசைக் கட்டியாளும் பேறு அவருக்குக் கிடைக்கவில்லை. அவரே ஒரு சமயம் மனம்விட்டுக் கூறியபடி, அவரது அந்திய காலத்தில் பாரதப் பேரரசு அவர் கைகளில் கிடைத்தது. பேரரசைப் பெற்றபின் ஐந்தே ஆண்டுகள்

தாம் அவர் வாழ்ந்தார். எனவே, இன்னும் நீண்ட காலத்துக்கு வாழ்ந்திருந்தால் அவர் என்னென்னவெல்லாம் சாதித்திருக்கக் கூடுமோ, அவற்றில் ஒன்றையும் அவரால் செய்து முடிக்க முடியாமற் போயிற்று. அவருடைய மகனும், வழித்தோன்றலுமான இஸ்லாம் ஷா தம் தந்தையைப் போன்றே மிகவும் திறமைசாலியாய் விளங்கினார். தந்தைக்கிருந்த எதிர்கால நோக்கும், ஊக்கமும் தனயன்பாலும் மிளிர்ந்தன. அதிகாரத்தைத் தம் கைகளில் குவித்துக்கொள்வதன்மூலமும், அரசாங்கத்தில் அதிகாரச் செறிவை ஏற்படுத்தியும் அவர் பல அரும் பெரும் பணிகளை ஆற்றினார். தம் தந்தையால் கட்டப்பட்ட அரசியல் கட்டடத்தை வலுப்படுத்துவதில் அவர் பெரும்பாலும் வெற்றிபெற்றார். ஆப்கானியர்களிடையே காணப்பட்ட பிரிவு மனப்பான்மைகளை ஒழிப்பதிலும் அவர் வெற்றியையே கண்டார். ஆனால் அவரும் நெடுநாள் ஆட்சி புரியவில்லை. பத்தே ஆண்டுகள் ஆண்ட பின் அவர் மாண்டுபோனார். உடனே ஆப்கானியர்களிடையே அதுவரை அடங்கிக் கிடந்த தீயசக்திகள் அனைத்தும் வெளிக் கிளம்பலாயின. அவராலும் அவருடைய தந்தையாலும் அதுவரை அடக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த தீய இயல்புகள் இப்போது கட்டுக்கடங்காமல் தொழிற்படலாயின. அவர்கள் செய்ய மறந்தவையும் அல்லது அவர்களது அரசியல் திறமையில் காணப்பட்ட ஒரு சில குறைபாடுகளும், மகமது ஷா ஆதில் போன்ற உதவாக்கரை மன்னர்கள் பட்டத்துக்கு வந்த போது, பேருருக் கொண்டு வெளிப்படலாயின. ஹுமாயூன் தலைமையில் மொகலாயர்கள் மீண்டும் இந்தியாமீது படையெடுத்து இழந்த பேரரசை மீண்டும் பெற்றனர். ஆப்கானிய அரசியல் சமுதாய அமைப்பில், ஷெர்ஷாவினாலும், இஸ்லாம் ஷாவினாலும் புகுத்தப்பட்ட ஒற்றுமையும், ஒப்புரவும் ஒரு நொடியில் இருக்குமிடம் தெரியாமல் மறைந்தொழிந்துபோயின. படையெடுத்தவர்களை ஆப்கானியர்கள் ஒற்றுமையின்றித் தனித் தனிக் குழுக்களாக நின்று எதிர்த்தனர். எனவே, இழந்த இடங்களை மீண்டும் மொகலாயர்கள் கைப்பற்றுவதென்பது எளிதாய்ப் போயிற்று.

பதினைந்தே ஆண்டுகள் ஆண்டபின் ஷெர்ஷாவும், இஸ்லாம் ஷாவும் மடிந்துபோனதோர் துர்ப்பாக்கிய நிலையானது, ஆப்கானியரின் பேரரசு அமைப்பைப் பெரிதும் பாதித்தது. இந்தியா போன்ற ஒரு நாட்டில் பேரரசை அமைத்தலென்பது ஒரு நீண்ட காலத் திட்டமென்பதில் ஐயமில்லை. சூர் வம்சத்தவர்களுக்கு அத்தகைய நீண்ட காலம் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கிடைத்த பதினைந்து ஆண்டுகள் மிகக் குறுகியதொரு காலம். அது ஒரு

பேரரசை நிறுவுவதற்குப் போதுமானதாயில்லை. ஹுமாயூன் அரசர் தமது வாழ்நாளுக்குள்ளாகவே இந்தியாவையும், அதன் எல்லைக்கப்பாற்பட்ட காபூல், காந்தஹார் ஆகிய நாடுகளையும், சூர்கள் ஆண்டதைவிட இருமடங்கு காலம் ஆண்டார் என்பது ஈண்டு நினைவுகூர்தற்பாற்று. ஏனெனில், 1540-ல் ஷெர்ஷா ஹுமாயூனை இந்தியாவிலிருந்து துரத்தியடித்தபோது, அவர் ஏற்கெனவேயே பத்து ஆண்டுகள் ஆட்சி செலுத்திவிட்டார். இந்தியாவினின்றும் வெளியேற்றப்பட்டபின் காபூலை அவர் 1555 வரை ஆண்டுகொண்டிருந்தார். அதன்பின் இஸ்லாம் ஷா இறந்த உடனே அவர் ஆப்கானியப் பேரரசின்மீது படையெடுத்து அதனை வென்றார். வென்றபின் ஆறு மாதங்களுக்குமேல் ஆட்சி புரிந்த பின்னர் 1556-ல் அவர் இறந்து பட்டார். ஆப்கானியரின் வீழ்ச்சிக்கு இது ஒரு முக்கிய காரணமென்பது புறக்கணிக்கக் கூடாததோர் உண்மையாகும்.

லோடிகளின் பேரரசு ஆட்சித்துறை அமைப்பின் சிறப்பியல்புகள்

ஆப்கானியப் பேரரசு பல குழுக்களிடையே சிக்கித் தவித்தது. நிலமும் அதிகாரமும் அக் குழுக்களிடையே பிரிக்கப்பட்டுக் கிடந்தன. அரசாங்கத்தின் அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப் பெறுமல் பல குழுக்களிடையே பிரிக்கப்பட்டிருந்தது. எனவே, மன்னரது இறைமை மலர்தற்கும், அதிகாரச் செறிவு ஏற்படுதற்கும் அங்கு வழியில்லாமற் போயிற்று. ஒருவகையான குழு நிலமானிய முறையே (tribal feudalism) ஆப்கானியப் பேரரசு அமைப்பின் சிறப்பியல்பெனக் கூறலாம். அதற்குக் காரணங்கள் இரண்டாகும். ஆப்கானியர் நாட்டைக் கைப்பற்றிய முறை அதற்கொரு காரணமெனலாம். ஆப்கானியரிடையே காணப்பட்ட விசித்திரமான சமுதாய அமைப்பும் அதற்கொரு காரணமெனக் கருதலாம். அவர்கள் பல குழுக்களாகத் தனித்தனியே பிரிந்து இருந்தது, ஒரு வகையில் அவர்களுடைய தலைவரான பஹ்லோல் லோடிக்குச் சாதகமாயிருந்தது. ஹிந்துஸ்தானத்தைக் கைப்பற்ற அது அவருக்குப் பெரிதும் துணையாயிருந்தபோதிலும், கைப்பற்றியதை வைத்துக் காப்பாற்ற அது உதவியாயில்லை. இந்தியா வெல்லப்பட்டபோது, அக் குழுக்களிடையே இருந்த ஒன்றித்த பார்வை, அதன் பின்னர் மறைந்துபோயிற்று. அவர்களிடையே ஓங்கி இருந்த குழு மனப்பான்மையானது மீண்டும் முழு ஆற்றலுடன் தலைகாட்ட ஆரம்பித்தது. வெல்லப்பட்ட நாடுகள் தம்மிடையே பிரிக்கப்பெற வேண்டுமென அவர்கள் பிடிவாதம் பிடிக்கலாயினர். தத்தம் நாடுகளில் அவர்கள் தங்களது

சொந்த நலன்களுக்காக வாழ விரும்பினரே அன்றி, அரசருடைய நலனுக்காக என்று ஒருவரும் வாழ விரும்பவில்லை. எனவே, நாடு பல குழுக்களிடையே துண்டாடப்பட்டது. அதன்பின் அக் குழுக்கள் தத்தம் வலிமைகளை வெளிப்படுத்தும் முறையில் ஒன்றுக்கொன்று போரிட ஆரம்பித்தன. உள்நாட்டுச் சண்டைகள் அதிகமாயினவே ஒழிய, நிலைபேருன ஒரு ராஜ்யத்தை அமைப்பதிலோ அல்லது அதிகாரச் செறிவுமிக்க ஓர் அரசை அமைப்பதிலோ அவர்களுக்குச் சிறிதும் கவனம் செல்லவில்லை. அதனுல் அரசாங்கத்தின் திறமையும் நிலையான தன்மையும் பெரிதும் பாதிக்கப்பட்டன. லோடிப் பேரரசின் முழு அமைப்புமே வெளிநாட்டுப் படையெடுப்புக்கு எளிதில் இரை யாகக்கூடிய ஒரு நிலையை எய்தியது. ஏனெனில், குழுக்களிடையே ஏதாவது அதிருப்தியோ அல்லது தொந்தரையோ அடிக்கடி ஏற் பட்டுக்கொண்டே இருந்தது. நிலமானியப் பூசலோ அல்லது பேராசையோ ஏதாவதொன்று அவற்றிடையே தோன்றி வளர்ந்துகொண்டே வந்தது. இங்ஙனம், தம்முள் போரிட்ட வண்ணம் இருந்த கூட்டங்களை ஒற்றுமையாகப் பிணித்து வைத்தல் என்பது ஓர் அரும்பெருங் காரியமாகவே இருந்தது. எல்லையில்லாத பொறுமையும், தந்திரமும் அதற்குத் தேவைப் பட்டன. அத்தகைய பண்புகள் ஒருசிலருக்குத்தான் வந்து அமைந்தன. பஹ்லோல் லோடி என்பார் அத்தகையோரில் ஒருவர் ஆவர். நய முறையினுலும் பய முறையினுலும், தந்திரத் தாலும் அநுதாபத்தாலும் அவர் ஆப்கானியக் குழுக்களின் ஆற்றலையும் அடக்கவொண்ணு வீரதீரத்தையும் நன்கு பயன் படுத்திக்கொண்டு, ஒரு பேரரசை அமைப்பதில் வெற்றிகண்டார். ஆனுல், அது வலிமையற்றதாய் நன்கு உறுதியான அடிப் படையின்மீது அமைக்கப் பெருத ஒரு கட்டடம் போல் விளங்கியது. எனவே, சிக்கந்தர் லோடி அதன் அடிப்படையை உறுதிப்படுத்தும் முயற்சியில் இறங்கினுர். நிலமானியக் குழு வின் அதிகாரத்தை அடக்கி, அதன்மீது தனது சொந்த அதிகாரத்தை நிலைநிறுத்த அவர் பாடுபட்டார். தமது திறமை யின் காரணமாகவும் சமயோசித புத்தியின் காரணமாகவும் அவர் தமது முயற்சியில் ஓரளவு வெற்றிபெற்ருர். ஆனுல், அதே குறிக் கோளை அடைய அவருடைய மைந்தரான இப்ராஹிம் லோடி முயற்சி செய்தபோது அவர் அதில் பரிதாபகரமான தோல்வி யையே கண்டார். ஏனெனில், திறமையும் சமயோசித அறிவும் அவரிடம் போதிய அளவு இல்லை. அவரிடம் காணப்பட்ட பிடிவாத குணமும் ஆப்கானியர்களுடைய விருப்பங்களைப் புறக் கணிக்கும் மனப்பான்மையும் மன்னிக்கமுடியாத குற்றங்க ளாகும். அவை யாவும் சேர்ந்து குழுக்களிடையே ஒரு வெறுப்பை

உண்டாக்கின. அதன் விளைவாகப் பேரரசில் குழப்பங்கள் தோன்றலாயின. அப் பூசல்களின் ஓசையானது தக்கதொரு சமயத்தை எதிர்பார்த்துக் காபூலில் காத்திருந்த பாபரின் செவிகளை எட்டியது. எனவே, அவர் இந்தியாவின்மீது படையெடுத்தார். பஹ்லோல் லோடியால் வெல்லப்பட்டு, சிக்கந்தர் லோடியால் ஒன்றுபடுத்தப்பட்ட ஒரு பேரரசானது சடசடவெனச் சரிந்து மாய்ந்தது.

லோடிப் பேரரசு நிறுவப்பெறுதல்

லோடிகள் வட இந்தியாவை வென்று கைப்பற்றியது எவ்வாறு, அவ் வெற்றியின் இயல்பு என்ன என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானால், அவர்கள் வெற்றிகண்ட நாட்டுப் பகுதியில் எத்தகைய அரசியல் நிலைமையானது அக்காலத்தே நிலவிற்று என்பதை நன்கு அறிந்துகொள்வது மிக இன்றியமையாததாகும். கி.பி. 1444-ல் சுல்தான் மகமதுஷா என்ற பொம்மை அரசர் இறந்துபட்டகாலை, லேங்காக்கள் (Langahs) என்ற ஓர் ஆப்கானியக் குழுவினர் மூல்தானில் சுயேச்சையடைந்தனர். 'அதற்கு நேர் எதிரான திசையில், ஜான்பூர் மன்னரான இப்ராஹிம் ஷா என்பார், நாட்டின் தென் கிழக்குப் பகுதியின்மீது படையெடுத்து அங்கிருந்த ஒரு சில மாவட்டங்களைக் கைப்பற்றினர். டில்லிக்குத் தெற்கே, குவாலியர் ராஜாவும், இன்னும் ஏனைய பல இந்துத் தலைவர்களும், டில்லி சுல்தானுக்குக் கப்பங்கட்டும் பொறுப்பை வெளிப்படையாகத் தட்டிக்கழித்து வந்தனர். தோயாப் பிரதேசத்தில் ஆண்டுவந்த இந்துத் தலைவர்கள், எப்போதுமே தங்கள்மீது ஆதிக்கம் செலுத்த இயலாத ஓர் அரசாங்கத்தைச் சற்றும் மதியாமல் திமிருடன் நடந்துகொண்டனர். மீவாட்டைச் சேர்ந்த பழங்குடிமக்கள், நாட்டைக் கொள்ளையடித்துக்கொண்டே மீவாட் நகரச் சுவர்களுக்கண்மைவரை வந்துவிட்டனர்.'[1] இத்தகைய குழப்பமானதொரு நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஏற்கெனவேயே சர்ஹிண்ட், சமானு, திபல்பூர், லாகூர் ஆகிய பிரதேசங்களை மானியங்களாகப் பெற்று ஆண்டுவந்த பஹ்லோல் லோடி, தம்மைச் சுல்தான் என அறிவிக்கலானர். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, டில்லியில் சுல்தான் ஆலம் ஷா ஆண்டுகொண்டிருந்தபொழுது, மூல்தான் தன்னிச்சைப்படி ஓர் அரசரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது. பஞ்சாபின் எஞ்சிய பகுதியில், தெற்கே பானிபட் ஹிஸ்ஸார் நகரங்கள் வரையில் இருந்த நிலப்பகுதி

[1] C.H.I., Vol. III, pp. 222-23.

யனைத்தும், பஹ்லோல் வசமாயிற்று. பஹ்லோலின் உறவினரான தர்யாகான் லோடி (Darya Khan Lodi) என்பார் 'சம்பல் மாவட்டங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். அதன் மேற்கு எல்லையானது டில்லிக்கருகே ஜமுனு நதிக்கரையில் அமைந்திருந்த குவாஜா கிஸிர் கோட்டைவரை பரவியிருந்தது. தெற்கே இருந்த இச் சிறு நாட்டை ஒட்டி, தோயாப் பிரதேசத்தின் எல்லைக்குள்ளாகவே, அமைந்திருந்த கோயில் என்ற ஒரு சிறு நாட்டை இசா கான் (Isa Khan) என்ற துருக்கியர் ஆண்டு வந்தார். இந்த நாட்டுக்கும் தெற்கே இருந்த ரப்ரி (Rapri) எனும் நாட்டை ஹாஸன் கான் என்ற இன்னும் ஓர் ஆப்கானியர் ஆண்டுவந்தார். தோயாபின் இடைப்பகுதியின் கீழ்ப்பாகமானது இராஜபுத்திர அரசரான ராஜா பிரதாப் என்பவரின் ஆட்சிக் குட்பட்டிருந்தது. அதில் பாங்காவோன் (Bhongaon), பாடியாலி, கம்பில் ஆகிய இடங்கள் அடங்கியிருந்தன. ஜமுனுவின் மேற்கே பயானுவில் (Bayana) தாவூத்கான் அவ்ஹதி (Daud Khan Auhadi) என்பார் சுயேச்சையாக ஆண்டுவந்தார். இவ் வரசர்கள் யாவரும் பஹ்லோலுக்கு உடந்தையாயிருந்தனர்.'[2] அரண்மனைச் சதி ஒன்றின் விளைவாக பஹ்லோல் டில்லியைக் கைப்பற்றி, 1451ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் தேதி அரியணையில் அமர்ந்தபோது, வெறுக்கத்தக்க மன்னரான ஆலம் ஷா, புதோனுக்கு (Budaon) ஓடிவிட்டார். அங்கிருந்து அவர் பஹ்லோலுக்கு எழுதிய கடிதத்தில், 'அரசியல் இறைமையினுல் தமக்கு எவ்விதமான லாபமோ நற்பலனே கிடையாது என்றும், தம் தந்தையானவர் பஹ்லோலைத் தம் மகனுக வரித்துக்கொண் டிருந்தவர் என்றும், எனவே, தம் மூத்த சகோதரனுகப் பஹ்லோலைக் கருதித் தம் அரசு பொறுப்பை அவரிடம் மகிழ்ச்சியோடும் தங்குதடையின்றியும் ஒப்படைப்பதாயும்'[3] குறிப்பிட்டிருந்தார். இங்ஙனம், டில்லி இறைமையானது சயதுகளிடமிருந்து லோடிகளின் கைகளுக்கு மாறியது.

ஆனுல், அவ் விறைமையானது சத்தோ, சாரமோ அற்றதாகவே இருந்தது. டில்லியில் அரியணை ஏறியதன் விளைவாகப் பஹ்லோல் லோடிக்கு டில்லி ஒன்றுமட்டுமே கைவசமாயிற்று. அவர் இன்னும் வெல்லவேண்டிய பகுதிகள் நிறைய இருந்தன. தோயாப் பிரதேசத்தையும், இன்னும் ஏனைய வட இந்தியப் பகுதிகளையும் வெல்வதிலேயே அவர் தம் வாழ்நாளை எல்லாம் கழிக்கவேண்டியிருந்தது. அவரை ஆற்றல்மிக்க பகைவர்க-

[2] C.H.I., Vol. III, pp. 225-26.
[3] C.H.I, Vol. III, pp. 225-26.

பலர் சூழ்ந்திருந்தனர். டில்லி அரசானது நாளுக்குநாள் தேய்ந்துகொண்டே வந்ததனுல், மத்திய அரசை மதியாமல் விசுவாசமற்ற முறையில் உள்நாட்டுத் தலைவர்கள் நடந்து கொள்ளலாயினர். அரசரை எதிர்த்துக் கலகம் செய்வதென்பது அவர்களுக்குப் பழகிப்போன ஒரு தொழிலாகிவிட்டது. அவர்களிற் பலரை அரசர் மெல்லச் சமாதானப்படுத்தவேண்டி யிருந்தது. வேறு சிலரை முற்றிலும் நசுக்கவேண்டியது அவசியமா யிருந்தது. 'தோயாப் நாட்டு நிலமானியதாரர்களைச் சமா தானப்படுத்தி வழிக்குக் கொண்டுவருவதே நல்லதென்ற கொள் கையை, பஹ்லோல் கடைப்பிடித்தார். டில்லி அரசுக்கு அவர்கள் பணிய மறுத்ததும், ஜான்பூர் அரசுக்குக் கைகட்டிச் சேவகம் புரிய முன்வந்ததும், சூழ்நிலையின் விளைவே எனக் கருதிய பஹ் லோல் அவர்களைச் சற்று அநுதாபத்தோடேயே நடத்தினர்.'[4] அவர்களை அங்ஙனம் உளக் கனிவோடு நடத்தினுல்தான், அவ ருடைய ஜன்ம விரோதியான ஜான்பூர் மன்னரை ஒழிக்க அவர்கள் தமக்கு உதவியாக நின்று போர்புரிவர் என அவர் நம்பினுர். பஹ்லோல் நடத்தியது ஒரு நாடுபிடிக்கும் போராட்டமன்று; அது அவரது ஆட்சி இந்தியாவில் இருப்பதா, மறைந்துபோவதா என்பதைத் தீர்மானிக்கும் வாழ்க்கைப் போராட்டமாகவே இருந்தது. தமது ஆட்சியை எப்படியாவது இந்தியாவில் நிலைபெறச் செய்யவேண்டுமென்பதற்காக அவர் தம்மால் ஆனவரை முயன்ருர். தம் குறிக்கோளை அடைய அவர் பல வழிகளையும் கையாண்டார். சில சமயங்களில் நம்பிக்கைத் துரோகமாக நடந்துகொள்வதன்மூலங்கூட அவர் தமது காரியத்தைச் சாதிக்க முயன்ருர். சில சமயங்களில் சமாதானக் கொள்கையையும், வேறு சில சமயங்களில் வெளிப் படையான வன்முறைப் போரையும் அவர் கையாண்டு தம் அரசுரிமையைக் காப்பாற்றிக்கொண்டார். ஜான்பூரை அழித்து அந் நாட்டைக் கைப்பற்ற அவர் ஒரு கால் நூற்ருண்டுக் காலம் போரிட வேண்டியிருந்தது. தமது நாட்டின் எல்லையைப் பரப்ப அவரால் செய்ய முடிந்தது அது ஒன்றுதானுகும். மூல்தான் அவ ருக்குப் பணிய மறுத்துச் சுயேச்சையாகவே இருந்தது. டில்லிப் பேரரசைக் கைப்பற்றும் துணிகர முயற்சியில் பஹ்லோல் இறங்கியபோது அதற்குப் போதுமான பொருள்வசதியோ ஆள் வசதியோ அவரிடம் அதிகமாக இல்லை. எனவே, அவர் தம் உறவினர்களின் ஆதரவையே நம்பிக் காரியத்தில் இறங்கவேண்டி யிருந்தது. அவர்களது ஆதரவைப் பெறுதற்காக அவர் தமது இறைமையைப் பலிகொடுக்க வேண்டியதாயிற்று. இங்ஙனம்,

[4] Ibid., p. 230.

பிறரை அவர் சார்ந்திருக்க வேண்டிய நிலைமையின் விளைவாக அவர் தம்மை ஓரளவு தாழ்த்திக்கொண்டார். 'சமமானவர் களிடையே முதல்வர்' (Primus Inter Pares) என்று தம்மைக் கருதிக்கொள்வதில் அவர் திருப்தி அடைந்தார். ஆப்கானியக் குழுக்களின் தலைவர்களுக்கும் அவருக்கும் இருந்த தொடர்பில் பெரிதும் சமத்துவமே காணப்பட்டது. மேலும், அவருக்கு உதவி செய்த ஆப்கானியத் தலைவர்கள், இந்தியாவில் ஜாகீர்களை ஏற்கெனவே பெற்றிருந்த அவருடைய உறவினர்கள் மட்டுமல்லர். வேறு பலதரப்பட்டவர்களையும் அவர் தமது நாட்டிலிருந்து வர வழைத்திருந்தார். அவர்களுக்கு எழுதிய கடிதங்களில் அவர் குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுவது யாதெனில், 'கடவுள் தமது கருணையால் இந்த டில்லி ராஜ்யத்தை ஆப்கானியர்களுக்குத் தந்துள்ளார். ஆனால், ஹிந்து நாட்டிலுள்ள ஏனைய அரசர்கள் அவர்களை இந் நாட்டினின்றும் துரத்தியடிக்க விரும்புகின்றனர். நம்முடைய பெண்மணிகளின் மானம் பறிபோவதைப்பற்றிய காரியம் இது. ஹிந்து நாடு வளமிக்கது; பரந்தது; ஏராளமான பேர்களுக்கு அது உணவளிக்க வல்லது. எனவே, தடையின்றி இந் நாட்டுக்கு அனைவரும் வருவீர்களாக! இறைமை என்பது பெயரளவில் என்னிடம் இருக்கட்டும். மற்றபடி நம்மால் வெல்லப்படுகிற நாடுகள் அனைத்தையும் நாம் ஒரு குடிப்பிறந்த சகோதரர்கள்போல நமக்குள் சமமாகப் பிரித்துக்கொள்வோம். ஜான்பூர் சுல்தானாகிய மகமது இப்போது டில்லியை முற்றுகை யிட்டுள்ளார். ஏராளமான ஆப்கானியக் குடும்பங்கள் இங்கே உள்ளன. எனக்கு உதவி செய்யவேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்களானால், அதற்குரிய தருணம் இதுவே. பெரும் படையுடன் இன்றே புறப்படுவீராக.'[5] இங்ஙனம் விடுவிக்கப் பட்ட அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு வந்து பஹ்லோலிடம் பணிபுரிய இசைந்த ஆப்கானியர்கள் பிரபுக்களாக மாற்றப் பட்டனர். ஜாகீர்கள் அவர்களுக்குத் தாராளமாக வழங்கப் பட்டன. பஹ்லோல் தம் பிரபுக்களுக்குப் பின்வரும் கட்டளை யைக்கூட விடுத்தார்: 'ரோ (Roh) பிரதேசத்திலிருந்து ஹிந்து நாட்டுக்கு வந்து என் கீழ்ப் பணிபுரிய விரும்பும் ஒவ்வோர் ஆப்கானியரையும், என்னிடம் கொண்டு வாருங்கள்...அன்னாரின் பாலைநிலங்களைவிடப் பெரியதான ஜாகீர்களை நான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் திருப்தியளிக்கும் வகையில் வழங்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் அவர்களில் எவரேனும், உறவு முறை காரணமாகவோ அன்றி நட்பின் காரணமாகவோ, உங்களில் யாராவது ஒருவரின்கீழ்ப் பணிபுரிய விரும்புவாரே

[5] Elliot and Dawson, Vol. IV, pp. 306-7.

யானுல், அவருக்குத் திருப்தியான அளவு அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் வழங்க உங்களால் முடியுமா என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில், ரோ பிரதேசத்திலிருந்து எவரேனும் வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்றோ, வேலை யில்லை என்றோ கூறிக்கொண்டு, இங்கு வந்துள்ளதாக நான் கேள்விப்படுவேனுனுல், அத்தகைய ஒருவனை வைத்துக் காக்க மறுத்திருக்கக்கூடிய பிரபுவின் ஜாகீர்களை நான் உடனே கைப்பற்றிக் கொள்வேன்'[6].

வல்லமை வாய்ந்த நிலமானியப் பிரபுக்களின் கைகளில் நாடு சிக்குண்டு தவித்தல்

இதன் விளைவானது இவருக்குப் பின் வந்தவரின் ஆட்சிக் காலத்தில்தான் நன்கு உணரப்பட்டது. ஏறக்குறைய வட இந்தியா அனைத்துமே ஆப்கானியத் தலைவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுவிட்டது. 'நாட்டின் பாதி பாகம் ஃபார்முலிகளுக்கும் (Farmulis) மற்ருெரு பாதி ஆப்கானியக் குழுக்களுக்குமாக வழங்கப்பட்டது. இச் சமயத்தில் லோகானி களும் (Lohanis) ஃபார்முலிகளுமே, நாட்டில் தலைசிறந்து விளங்கினுர்கள். சர்வானிகளின் (Sarwanis) தலைவராக ஆஸம் ஹுமாயூன் என்பார் விளங்கினுர். லோடிகளின் தலைவர்களாக விளங்கியவர்கள் நால்வராவர். அவர்களுள் மகமது கான் என்பார் கல்பி (Kalpi) எனும் ஜாகீரின் தலைவராயிருந்தார்; மியான் ஆலம் (Mian Alam) என்பார் எடாவா (Etawah), சந்த் வார் (Chandwar) ஆகிய பகுதிகளின் தலைவராயிருந்தார்; முபாரக் கான் லக்னுேவின் ஜாகீர்தாராயிருந்தார். தௌலத் கான்வசம் லாகூர் தரப்பட்டிருந்தது......ஃபார்முலிகளுள் மியான் ஹுசேன் என்பவர்வசம் சரன் (Saran) சம்பாரன் (Champaran) ஆகிய இரு மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன; மியான் மகமது காலா பஹார் (Mian Muhammed Kala Pahar) என்பார் வசம் அயோத்தி, அம்பாலா, ஹோத்னு ஆகிய பகுதிகளும், மியான் காதி (Mian Gadai) என்பாரிடம் கன்னுேஜிப் பிரதேசமும் மியான் இமாத் (Mian Imad) என்பாரிடம் ஷம்ஷ்ஆபாத் (Shamsabad), தானேசுவர், ஷாஹாபாத் ஆகிய நிலப்பகுதிகளும், மியான் மகமதுவின் சகோதரரான டார்டார் கானிடம் மராஹ்ராப் (Marahra) பகுதியும், குவாஜாஹி ஷேக் சயீத் (Khwajagi Shaik Said) என்பாரிடம் ஹரியானு தேசாவும் இன்னும் சில சிதறுண்ட பர்கானுக்களும் ஒப்படைக்கப்பட்

[6] Ibid., Vol. IV, pp. 307-8.

டிருந்தன.'[7] அவர்கள் தத்தம் நாடுகளில் தனித்தனியே ஆட்சி புரிந்துவந்தனர். இங்ஙனம், பரந்த பிரதேசங்களை ஜாகீர்களாக வழங்கியதோடுமட்டும் சிக்கந்தர் லோடி திருப்தியடையவில்லை. 'ஒவ்வொரு ஜாகீர்தாரும் அவரது ஆட்சிக்குட்பட்ட நிலங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானமனைத்துக்கும் உரிமை உடையவர்கள் என்றும், இம்லாக் (Imlak), வாஸாய்ஃப் (Wazaif) ஆகியவைகளிலிருந்து வரக்கூடிய வருமானத்துக்கு மட்டுமே அவர்கள் உரியவராகார் எனவும் அவர் ஓர் ஆணை பிறப்பித்தார். இங்ஙனம், சுல்தானின் ஒரே ஓர் ஆணையின்மூலம், அய்மா (Aaima)வுக்கு உடையவர்களெல்லாம் விடுவிக்கப் பெற்றனர். ஏனெனில், ஃபர்மனைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஒருவருக்கும் இல்லாதுபோயிற்று. தலைவர்கள் தத்தம் பிரியம்போல் அவரவர் சௌகரியத்திற்கேற்பக் கணக்குகளை எழுதிக்கொண்டு வஸீரின் திவானிடம் சென்று தங்களுடைய வரவுசெலவுக் கணக்குகளைத் தீர்த்துக்கொண்டனர். தலைவர்கள் எவருடைய விவகாரங்களிலும் அரசர் தலையிடுவதை நிறுத்திக்கொண்டார்.'[8] இதோடுகூட, சிக்கந்தர் இன்னும் தாராளமாக நடந்துகொண்டார். ஜாகீராக வழங்கப்பட்ட பகுதிகளில், ஏதாவதொரு பர்கானாவில் அலுவலகக் கணக்குக்கும் மேற்பட்ட விளைச்சல் ஏற்படுவதாக யாரேனும் கூறியபோதுங்கூட, சிக்கந்தர் அதைக் காதில் போட்டுக்கொள்வதில்லை. உபரி தானியம் கிடைத்ததென்பதற்காக அவர் பழைய ஒப்பந்தத்தின் ஷரத்துகளை மாற்றுவதில்லை. அதற்காக ஜாகீரின் ஒரு பகுதியை அவர் திரும்பப் பிடுங்கிக்கொள்வதும் கிடையாது. ஆப்கானியர் ஒவ்வொருவரையும் அவர் ஒரு பிரபுவைப் போலவே நடத்தினார். தமது சொந்த வேலைக்காரர்களைக்கூட அவர் மிக மரியாதையாக நடத்தினார்.[9] இங்ஙனம், அவர்களிடம் அவர் கண்டிப்பில்லாமல் நடந்துகொண்டதனால்தான், அவர்கள் பெரிய பெரிய பரிவாரங்களையெல்லாம் வைத்துப் பராமரிக்க முடிந்ததெனலாம். அவருடைய பெரும் பிரபுக்களில் பலர், சான்றாக ஆஸம் ஹுமாயூன் என்பார் 45,000 குதிரைகளையும், 700 யானைகளையும் வைத்திருந்தார் எனவும், அகமத் கான் என்பார் 20,000 குதிரைகளை வைத்திருந்தாரெனவும் கேள்விப்படுகிறோம். சாதாரணப் பிரபுக்களில் ஒருவரான சய்ஃப் கான் (Saif Khan) என்பார் 6,000 குதிரைகளையும், பிரோஷ்கான் சர்வானி என்பார் 4,000 குதிரைகளையும், அலி கான் உஷி (Ali

[7] Ibid., pp. 547-48.
[8] Ibid., pp. 447-48.
[9] Ibid., Vol. IV, pp. 471-2.

Khan Ushi) என்பார் 4,000 குதிரைகளையும் வைத்துப் பராமரித்து வந்ததாகத் தெரிகிறது.[10]

லோடிப் பேரரசின் பலஹீனம்

இங்ஙனம் அளவுக்குமீறி இடங்கொடுக்கப்பட்ட பிரபுக்கள் ஒரு சிறிய கட்டுப்பாட்டைக்கூடப் பொறுக்க முடியாத அளவுக்குச் சுதந்திர வாழ்வில் பழக்கப்பட்டுவிட்டனர். சுல்தான் சற்றே அதிகார தோரணையில் நடந்துகொண்டபோதும், தமது வீரியத்தைச் சிறிதே வெளிப்படுத்தியபோதும் பிரபுக்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டினர்.

நாடு வெல்லப்படுவதற்கும், அரசு நிலையாக நிறுவப்படுவதற்கும் முன்னர்தான் அவர்களின் கனல் கக்கும் வீரமும், ஆற்றலும் எதிரியை வெல்லப் பெரிதும் பயன்பட்டன. ஆனால், அந்தப் பணி முடிந்த உடனேயே அவர்களின் இயல்பான பண்பும் பழக்கமும் தலை நீட்டலாயின. ஷெர்ஷா ஒரு சமயம் கூறியபடி, 'ஆப்கானியர்களின் பழக்கமே சண்டை போட்டுக்கொள்வதுதான். அவர்களில் எவனாவது ஒருவன் மற்றவனைவிட அதிகமாக நான்கு உறவினர்களைப் பெற்றிருந்தால் போதும்; உடனே, அவன் தன் அயலானைக் கொல்லவோ அகௌரவப்படுத்தவோ கொஞ்சமும் தயங்கமாட்டான்.'[11] சதா சண்டையிடும் மனப்பான்மையானது அவர்களிடையே அடக்கிவைக்க முடியாத அளவுக்கு வளர்ந்திருந்தது. அதனால் ஒழுங்கின்மையும் கட்டுப்பாடின்மையும் அவர்களிடம் வளர்ந்தோங்க ஆரம்பித்தன. இரத்தக் களறியின் மூலந்தான் நியாயத்தைப் பெறமுடியும் என்ற ஒருவித விசித்திரமான எண்ணம் அவர்கள் மனத்தில் குடிகொண்டிருந்தது. எனவே, அவர்கள் ஒருவர்க்கொருவர் அடிக்கடி போரிட்டுக்கொண்டனர். மேலும் அரசர், நாடு ஆகியவைகளின்பால் அவர்கள் கொண்டிருந்த விசுவாசம், தங்களது சொந்தக் குழு அல்லது கூட்டத்தின்மீது கொண்டிருந்த பக்தியைவிடச் சற்றுக் குறைவாகவே காணப்பட்டது. அவர்களுக்குத் தங்கள் குழுதான் முதலாவதாகத் தென்பட்டது. அரசர், நாடு எல்லாம் இரண்டாம்தரமாகவே அவர்களுக்குத் தோன்றின. இத்தகைய மனப்பான்மையானது அவர்களது அரசியல் அமைப்பைப் பெரிதும் பாதித்தது. ஒரே குழுவினைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு ஏனைய குழுவினர்களை எதிர்த்து வந்த

[10]Ibid., p. 545.
[11]Ibid., p. 335.

னர். குழுக்களிடையே பொருமையும் பூசலும் காணப்பட்டன. ஒரு குழு நன்கு வாழ்வதை இன்னொரு குழுவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவை ஒவ்வொன்றும் இராணுவத்தைக் கொண்டிருந்ததாலும் நாடாளும் அதிகாரம் பெற்றிருந்தமையாலும், அவர்களிடையே ஏற்பட்ட போட்டிகளும், போர்களும், வருங் காலத்தே அபாயம் ஏற்படுவதை முன்னறிவிக்கும் வகையில் வளரலாயின. அவற்றால் உண்மையிலேயே அரசரின் அதிகாரத்துக்குப் பெரிதும் பங்கம் ஏற்பட்டது. பேரரசின் அடிப்படையே குலைக்கப்பட்டு விடுவதற்கான அபாயம் ஏற்படலாயிற்று. 'மொகலாயர்கள், சுல்தான் இப்ராஹிமிடமிருந்து நாட்டை வென்ற போது வெறும் வாளினால் அவர்கள் அதைப் பெறவில்லை. ஆப்கானியர்களிடையே காணப்பட்ட சண்டை சச்சரவுகளின் மூலமாகவே அவர் அதைப் பெற்றார்'[12] என்று ஷெர்ஷா பிற்காலத்தே கூறியது முற்றிலும் உண்மையாகும். உண்மையில் இவைதாம் லோடிப் பேரரசில் பொதிந்துகிடந்த பலஹீனங்களாகும். இவற்றாலேயே அப் பேரரசு வீழ்ச்சியுற்றது.

ஆப்கானியர்களிடையே காணப்பட்ட குழு மனப்பான்மையானது ஷெர்ஷாவின் ஆக்கத்திற்கு வழிகோலியது

1526ஆம் ஆண்டில் இப்ராஹிம் லோடி தோற்கடிக்கப்பட்டு பாபர் அரியணை எய்தியபோது, ஆக்ரா, டில்லி ஆகிய இரு நகரங்கள்மட்டுமே அவர் கைவசமாயின. நாட்டின் இதரப் பகுதிகளெல்லாம் ஆப்கானியத் தலைவர்களிடம் இருந்ததால் அவற்றைச் சிறுகச் சிறுகவே பாபர் கைப்பற்ற வேண்டியதாயிற்று. அது உண்மையில் பாபருக்கும் அவருக்குப் பின் வந்த அவருடைய மைந்தரான ஹுமாயூனுக்கும் பெருந்தடையாக இருந்தது. ஆப்கானியர்களுடைய குழு முறைச் சமுதாய அமைப்பும், அக் குழுக்கள்பால் அவர்கள் கொண்டிருந்த விசுவாசமும், மொகலாயர்களுக்குப் பேரிடையூறுகளாக இருந்தன. அவற்றின் காரணமாக மொகலாயர்கள் தங்களது பேரரசைத் தோற்றுவிக்கப் பெரும்பாடு படவேண்டியதாயிற்று. இந்த நிலமானியத் தலைவர்கள் திண்மை மிக்க சுதந்திர மனப்பான்மையுள்ளவர்களாயும், நல்ல செல்வாக்கும் அதிகாரமும் உள்ளவர்களாயுமிருந்ததால், இவர்களை அடக்குவதென்பது இப்ராஹிம் லோடிக்கு எவ்வளவு கடினமாயிருந்ததோ, அதே போன்றுதான் பரந்த பிரதேசங்களுக்குத் தலைவர்களாயும், பெரும்படை நிறுவனங்களுக்கு அதிபர்களாயும் விளங்கிய

---

[12] Ibid., Vol, IV, p. 337.

ஆப்கானியத் தலைவர்கள் பலரை வென்று அடக்குவதென்பது மொகலாயர்களுக்குப் பெரிதும் சிரமமாயிருந்தது. அவர்கள் இருக்கும்வரை நாட்டை வென்று தம்மடிப் படுத்துவதென்பது மொகலாயர்களுக்கு எளிதில் கைகூடுவதாயில்லை. எங்கே திரும்பினுலும் இந்த ஆப்கானிய எதிரிகளே மொகலாயர்களின் கண்களுக்குப் பட்டனர். அவர்கள் நாட்டில் எங்கே பார்த்தாலும் இருந்ததன் காரணமாகத்தான் மொகலாயர்களின் அதிகாரம் வட இந்தியாவில் உறுதியாக நன்கு வேரூன்ற முடியாமற் போய் விட்டது. தோற்கடிக்கப்பட்ட ஆப்கானியத் தலைவர்களும், குழு மக்களும் அடங்கிய ஒரு கட்டுப்பாடற்ற கூட்டமானது எப்போதும் மொகலாயர்களைச் சூழ்ந்துகொண்டே இருந்தது. இழந்த நாடுகளை மீண்டும் பெறவும், புதிய மொகலாயத் தலைவர்கள்மீது பாயவும் சமயம் பார்த்துக்கொண்டே அக் கூட்டம் காத்திருந்தது. அவர்களை ஒன்றுபடுத்த ஒரு மையமான குறிக்கோள் தேவைப்பட்டது. அத்தகைய குறிக்கோளை ஷெர்ஷா வழங்கினுர். அவரது கொடியின்கீழ்ச் சிதறுண்டு கிடந்த ஆப்கானியத் தலைவர்கள் யாவரும் ஒன்று திரண்டனர். ஒற்றுமையற்ற குழு அமைப்பு முறையாலும், கட்டுத் தளர்ந்த நிலமானிய முறையாலும் ஆப்கானியர்கள் எங்ஙனம் இப்ராஹிம் லோடியின் வீழ்ச்சிக்கு வித்திட்டார்களோ அதேபோல மொகலாயர்கள், நாட்டை வென்று தம்மடிப்படுத்த முடியாமல் அவர்களுக்கு முதலில் முட்டுக்கட்டை போட்டவர்களும் அதன்பின் ஆப்கானிய அரசு மீண்டும் உயிர் பெற வழிவகுத்தவர்களும் அவர்களேயாவர். சிதறுண்டு கிடந்த ஆப்கானியர்களை வலிமை பெற்ற ஒரு கூட்டமாகச் சேர்க்கக்கூடிய, மேதைத் தன்மையும், மக்களுக்குத் தலைமை பூண்டு வழிநடத்தும் தலையாய பண்பும் ஷெர்ஷாவின்பால் அமைந்து கிடந்தன. அங்ஙனம், ஒன்றுபட்ட ஆப்கானியர்களைக் கொண்டு அவர் ஹுமாயூனையும், மொகலாயர்களையும் இந்தியாவைவிட்டே துரத்தியடித்தார். மீண்டும் ஆப்கானியர்கள் தலையெடுத்தனர். முன்பு ஆண்டுகொண்டிருந்ததைவிடப் பெரியதும் வலிமை பெற்றதுமான ஒரு பேரரசை அவர்கள் தோற்றுவித்தனர். ஆனுல், இம்முறை அவர்கள் ஆண்டது பதினைந்தே ஆண்டுகள்தாம். அதன்பின் மொகலாயர்கள் மீண்டும் திரும்பி வந்து ஆப்கானியர்களைத் திட்டவட்டமாக அடக்கியொடுக்கினர். அவர்களது பேரரசு குலைக்கப்பெற்று அதன் அடிப்படையில், அதைவிட இன்னும் பரந்ததும், நிலையானதும், புகழ் வாய்ந்ததுமான இன்னும் ஒரு பேரரசு சிறிதுசிறிதாக வடிவெடுக்கலாயிற்று. ஷெர்ஷாவின் மேதைத் தன்மை அக்பருக்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்தது. அவரே அக்பருடைய சாதனைகளுக்கான அடிப்படையை அமைத்துத் தந்தவர் எனலாம். அவ் வகையில்

ஷெர்ஷாவின் மேதைமிக்க ஆட்சியானது பெரிதும் பயனுடையதாயிருந்தது.

சூர் குலத்தவரின் சாதனைகள்

உண்மையிலேயே, ஷெர்ஷா சூர், அவருடைய மைந்தர் சிக்கந்தர் சூர் ஆகிய இருவரும் சாதித்த அரும்பெருங் காரியங்கள் யாவும், அக்பரது ஆக்கவேலைத் திட்டமானது நன்கு அமைக்கப்படுதற்குத் தக்கதொரு முன்னோடியாய் அமைந்தன எனலாம். இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் படித்தர வளர்ச்சியைப் பொறுத்த வரையில் சூர் குலத்தவரின் சாதனைகளை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவதாக, அவர்கள் அதிகாரங்கள் யாவும் மையத்தில் குவிக்கப் பெற்றதோர் அரசாங்கத்தைத் தோற்றுவித்தனர். அதில் அதிகார வர்க்கத்தின் செல்வாக்கு ஓங்கி இருந்தது. இலஞ்ச ஊழல்கள் ஒழிக்கப்பட்டன. திறமை நன்கு வற்புறுத்தப்பட்டது. இரண்டாவதாக, மத்திய அரசாங்கத்தின் இறைமையானது நன்கு போற்றி வளர்க்கப்படுதற்கு ஏற்றதொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அதற்காக வேண்டுமென்றே ஆப்கானிய அரசியல் பழக்கங்கள் கைவிடப்பட்டன. அவற்றுக்குப் பதிலாக அரசரே எல்லா வல்லமைக்கும், பெருமைக்கும், சிறப்புரிமைக்கும், நீதிக்கும் இருப்பிடமானவர் என்று கூறி அரசுரிமையைப் பெரிதும் மேம்படுத்திய இந்திய அரசியல் மரபுகள் கைக்கொள்ளப்பட்டன. அரசுரிமைபற்றி ஆப்கானியர் கொண்டிருந்த கருத்துக்கு அவை முற்றிலும் மாறுயிருந்தன. அவற்றிற்கு உண்மை உருவங் கொடுக்கவேண்டுமாயின், மையத்தில் அதிகாரங்கள் செறியப் பெற்றதும், அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாடுகள் நிறைந்ததுமான ஓர் ஆட்சித்துறை அமைப்பை நிறுவவேண்டுவது இன்றியமையாததா யிருந்தது. அத்தகைய ஆட்சிமுறை நிறுவப்படுதற்குப் பெரிதும் காரணமா யிருந்தவர் ஷெர்ஷா தான் எனலாம். அதிகாரங்கள் மையத்தில் செறியப் பெற்றதும் அதிகார வர்க்கத்தின் கெடுபிடிகள் நிறைந்ததுமான ஓர் ஆட்சி முறையை நிறுவுதல், அரசரின் இறைமையை நிலை நாட்டுதல் ஆகிய இருபெருங் கொள்கைகளை ஷெர்ஷா கடைப்பிடித்தார். ஆப்கானியர்களின் குழுமுறை அமைப்பும், தளர்ச்சிமிக்க நிலமானிய அமைப்பும் அவருடைய கொள்கைகளால் வேரறுக்கப்பட்டன. இஸ்லாம் ஷா, நாம் ஏற்கெனவே பார்த்தபடி தம் தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்துகொண்டதோடு மட்டுமின்றி, அவரைக் காட்டிலும் ஒரு படி அதிகமாகவே தமது வலிமையைப் பெருக்கிக்கொண்டார். அவரது காலத்தே மையத்தில் அதிகாரச் செறிவு மேலும் அதி

கரிக்கப்பட்டது. நிலமானியப் பிரபுக்களின் கொற்றம் ஒடுக்கப் பட்டது. அரசபீடத்தின் சிறப்பு, தெய்விக நிலைக்கு உயர்த்தப் பட்டது. டில்லியில் ஆண்ட சுல்தான்களாகிய பால்பன், அலாவுதின் கில்ஜி, அல்லது மகமது பின் துக்ளக் ஆகிய அரசர்களில் எவருக்குமே ஷெர்ஷாவுக்கு இருந்த தைரியம் இல்லை. அரசியல், சட்டம் அல்லது மதம் ஆகிய துறைகளில், தமது ஆணையே இறுதியானது என்று அறிவிக்கப் போதிய அளவு துணிவும், அதற்கேற்ற பக்கபலமும் அவர்களில் ஒருவருக்கேனும் இல்லை. பதாவுனி (Badaoni) என்பார், மையத்தில் அதிகாரச் செறிவு ஏற்படுத்தப் பட்ட முறைகளை நன்கு விளக்கி எழுதியுள்ளார். அவரது கூற்றின்படி, 'ஷெர்ஷா நாடனைத்தையும் தமது சொந்த மேற் பார்வையின்கீழும் கட்டுப்பாடுகளின் கீழும் கொண்டுவந்தார். தாகி (Daghi) என்ற ஒரு முறையை அவர் கொணர்ந்தார். அதன் விதிமுறைகளின்படி போர்வீரர்களுக்கு ஊதியம் ரொக்கமாக வழங்கப்பட்டது. ஷெர்ஷா தமது அதிகாரத்தை நாட்டின் பல பகுதிகளிலும் செல்லுபடியாக்க இன்னுமொரு முறையைக் கையாண்டார். சர்க்கார்கள் (Sarkars) ஒவ்வொன்றுக்கும் அவர், பல கட்டளைகளை எழுத்துமூலம் அனுப்பிவைத்தார். அவற்றில் ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் நன்கு விரிவாக விளக்கப்பட்டிருந்தன. மதம், அரசியல், சமுதாயம் ஆகியவைபற்றிய முக்கியமான பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு தீர்க்கவேண்டுமென்பதுபற்றிய விரிவான ஆலோசனைகள் அவற்றில் காணப்பட்டன. மிகமிக நுண்ணிய விவரங்களையும் அவை உட்கொண்டிருந்தன. இராணுவ வீரர்களுக்கும், சாதாரணக் குடி மக்களுக்கும், வியாபாரிகளுக்கும், இன்னும் இதர வகுப்பினர் களுக்கும் நன்மை பயக்கக்கூடிய விதி முறைகள் அவற்றில் அடங்கியிருந்தன. அரசாங்க அதிகாரிகள், அவ் விதிகளைத் தத்தம் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில், கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தப்பட்டார்கள். இவை அடங்கிய பத்திரங்களைத் தயாரித்தபோது மதச் சட்டத்துக்கு அவை ஒத்திருக்கின்றனவா இல்லையா என்பதுபற்றி ஷெர்ஷா சிறிதும் கவலைப்படவில்லை. எனவே காஜி, மஃப்டி போன்றவர்களிடம் அவைபற்றி ஆலோசனை எதுவும் கேட்கப்படவேண்டிய அவசியமில்லாது போயிற்று. அப்படிக் கேட்பதும் முறையாகத் தெரியவில்லை.'(12a) இங்ஙனம் காஜிகளையும் மஃப்டிகளையும் நடத்தித் தம் விருப்பப்படியே காரியங்களைச் செய்யக்கூடிய ஒரு மன்னர், தாம் செய்யும் காரியங்கள் இஸ்லாமியச் சட்டத்துக்கு ஏற்றனவா

(12a) Munt Khab - ul - Tawarikh (Translated by Beveridge) Vol. 1, p. 496.

இல்லையா என்பதுபற்றிக் கவலைப்படாத ஓர் அரசர், ஆப்கானிய நிலமானிய மரபுகளை மதிக்கவோ. அன்றி அவர்களின் அதிகாரத்தை எட்டுணையும் விட்டு வைக்கவோ முன்வருவார் என எதிர்பார்ப்பது கூடாத காரியமென்பதில் ஐயமில்லை. அஃது உண்மை என்பது ஆப்கானியப் பிரபுக்களை அவர் நடத்திய விதத்திலிருந்து நன்கு தெரியவருகிறது. மிகவும் பலம் பொருந்திய பிரபுக்களில், குதுப்கான் நாயப் (Qutb Khan Nayab), ஈசா கான் நியாஜி (Isa Khan Niazi), ஹவாஸ் கான் (Khawas Khan), ஜலால்கான் ஜில்வானி (Jalalkhan Jilwani) ஆகியோரை அவர் அடியோடு ஒழித்துக் கட்டினுர். ஒரு சமயத்தில், ஷெர்ஷாவின் மைத்துனரான சாபாஷ்கான் லுஹானி (Shabhaz Khan Luhani) போன்ற பெருமைமிக்க பிரபுக்களும், பிரம்மஜித் கௌர் (Brahmajit Gaur) போன்ற வன்மைமிக்க தளபதிகளும், பதினன்கு அமீர்களும் அவர்கள் மைந்தர்களும் ஒருங்கே குவாலியர் கோட்டைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களிற் பல பேர், பதாவுனி என்பார் கூறியுள்ளபடி ''சிறைப் பட்டிருந்தபோதேயே உடலை உகுத்தனர்.'' லாகூரின் கவர்னரும் ஷெர்ஷாவின் பெருநம்பிக்கைக்குப் பாத்திரமானவரும் பஞ்சாபி லுள்ள நியாஜிகளின் (Niyazis) தலைவருமான ஹைபத்கான் நியாஜி ஆஸம் ஹுமாயூன் (Haibat Khan Niazi Azam Humayun) என்பார்கூட விட்டுவைக்கப் படவில்லை. இடையருத ஊக்கத் தோடும் உறுதியோடும் அவர் அக் கூட்டம் முழுவதையுமே ஏறக் குறைய ஒழித்துக் கட்டினுர். அதோடு அவர்களில் கைதிகளாகக் கைப்பற்றப்பட்டவர்களை, ஆண் பெண் என்ற பேதமின்றி, வயதில் சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடு இன்றி அனை வரையும் மிக மிகக் கேவலமாக நடத்தினுர். நியாஜித் தலை வர்கள் வகித்துவந்த பட்டங்களையும் அவர்கள் பெற்றிருந்த பெருமையையும் அவர் தம் விலைமகளிர்க்கு வழங்கினுர். அப்படிச் செய்ததால் பதாவுனி என்பார் கூறுகிறபடி, ''ஆப்கானி யர்களின் மனம் புண்ணுகியது. ஒரே குலமாய் ஒரே எண்ணத் தவர்களாய் வாழ்ந்த அக் கூட்டத்தார் பெரிதும் வருந்தினர். ஷெர்ஷாவின்மேல் அளக்கொணு வெறுப்பு அவர்களின் உள்ளத்தே உதயமாயிற்று''[13] இவற்றை எல்லாம் அவர் செய்ய முடிந்த தென்றால் அதற்குக் காரணம் அவரிடம் காணப்பட்ட சில அருங் குணங்களேயாகும். மக்களை ஒருங்கே சேர்ப்பதிலும், அவர் களுக்குத் தலைமை பூண்டு நடத்துவதிலும், திடமான நடவடிக்கை எடுப்பதிலும் அவர் பெற்றிருந்த ஆற்றலே அவருடைய சாதனை களின் இரகசியமாகும். எதையும் அவர் அரைகுறையாகச் செய்வ

[13] Ibid., Vol. I. p. 498.

தென்பதோ, தகுந்த முன்னேற்பாடுகளின்றி ஒன்றைத் தொடங்குவதென்பதோ அவரிடம் எப்போதுமே கிடையாது. அவருடைய படைகளில் அவருக்கு முழுநம்பிக்கை இருந்தது. ''அவரது ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் இந்துஸ்தானத்தின் முக்கிய சர்க்கார்களைக் கட்டிக் காக்கவென்று ஐயாயிரம் குதிரை வீரர்களை ஒதுக்கிவைத்திருந்தார்''[14] எனச் சொல்லப்படுகிறது. அதில்தான் அவரது வலிமை அடங்கியிருந்தது. ஏனையவற்றை அவர் தமக்குத் தாமே ஏற்படுத்திக்கொண்டார்.

சூர்களின் குறைபாடுகள்

ஆனால் அவரது ஆட்சிக் காலத்திலேயும்கூட அதிருப்திக் குரல் ஆங்காங்கே ஒலித்தது. பிரபுக்கள் கலகத்திலிறங்கலாயினர். அவர்களில் ஒருவர் தனியே தாம் இறைமை பெற்றுவிட்டதாக அறிவிக்கும் அளவுக்கு ஊக்கம் பெற்றார். எல்லைப் புறங்களில் காக்கர்கள் (Gakkars) பொறுக்கொணுத் தொந்தரவு கொடுத்து வந்தனர். அவர்களை அடக்குதற்கு நிறையச் செலவு ஆயிற்று. என்றாலும், முற்றிலும் அவர்களை அடக்குதல் கூடாமல் போயிற்று. இந்த இக்கட்டுகள் எல்லாம் ஒரு புறமிருக்க, ஆப்கானியர்களின் இயல்பை மாற்றுவதென்பது முடியாத காரியமாயிருந்தது. மன்னர் பேராற்றல் உடையவராயிருந்தும், அவரது படையானது எப்போதும் போருக்குத் தயாராக இருந்தும் ஆழ்ந்த கட்டுப்பாட்டுக்குள் அனைவரும் வைக்கப் பட்டிருந்தும்கூட, இந்தியப் பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் கடைப்பிடிக்குமாறு அவர்களை வற்புறுத்துவதென்பது முடியாத காரியமாயிருந்தது. ஆப்கானிய ஒற்றுமையும் அல்லது ஒப்புரவும், மணலால் திரிக்கப்பெற்ற கயிறெனப் போயிற்று. நிலமானிய மனப்போக்கும், கட்டுப்பாடுகளுக்கு உட்படாத ஒரு திமிரும் அவர்களிடம் காணப்பட்டனவேயன்றி அரசியல் விவேகத்துக்குரிய பண்புகள் சில அவர்களிடம் இல்லை. அவர்களில் மிகப் பெரியவரான ஷெர்ஷாவிடமே அக் குறைபாடு இருந்தது. வெறுமனே ஆப்கானியர்களை ஒன்றாகத் திரட்டிவிடுவதாலும், திறமை மிக்கதோர் அரசாங்கத்தை அமைத்துவிடுவதாலும் மட்டுமே, ஒரு பேரரசை ஏற்படுத்திவிட முடியாது என்பதை அவர் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார். ஏனெனில், ஆப்கானியர்களுக்கு, அவர்களின் இயல்புக்கு மாறாகப் போவதென்பதோ, பழைய பழக்கங்களை மறப்பதென்பதோ கூடாத காரியமாயிருந்தது. ஆப்கானியர்கள் எந்தக் கணத்தில் விசுவாசமற்றவர்

[14] Ibid., p.495.

களாக மாறுகிறுர்களோ, அக்கணத்திலேயே அவரது மாண்பு மிக்க அரசாட்சி முறையும் அப்படியே கவிழ்ந்துவிடுவதற்குக் காத்திருந்தது. இந்துக்களிடம் ஷெர்ஷாவுக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. அவர்களின் விசுவாசத்தை அவர் பெரி தாகப் பாராட்டவும் இல்லை. இராஜபுத்திரர்களை நசுக்க அவர் பாடுபட்டார். ஆனல், அது அநேகமாக முடியாத காரிமென்று தெரிந்தபின்னும், இராஜபுதனத்தைத் தமது நாட்டோடு சேர்த்துக்கொள்வதால் ஏற்படும் நன்மை மிகச் சிறியதே என அவர் உணர்ந்த பின்னரும், அவர்களைச் சமாதானப்படுத்த அவர் ஒரு சிறிதும் முயலவில்லை. அவர் பலவீனமாயிருந்த ஏதோ ஒரு சமயத்தில் மாள்வாவை ஆண்டுவந்த மேதினி ராய்க்கு (Medini Roy) அவர் கொடுத்திருந்த வாக்கைக் காப்பாற்றுமல் விட்டுவிட்டார். அங்ஙனம் செய்தது உண்மையில் சமயப்பொறை இல்லாததன் விளைவே என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்தது. அவருடைய குடிமக்களில் பெரும்பான்மையினரான இந்துக்களின் அன்பையும் விசுவாசத்தையும் அவரால் பெற முடியாது போயிற்று. இந்துக்களை ஒறுக்கவேண்டுமென்று அவர் வெளிப்படையாக எதுவும் கட்டளையிடவில்லை என்பது உண்மையே எனினும், அவர்களுக்குச் சமயப்பொறையை மனப் பூர்வமாக வழங்க அவர் முன்வரவில்லை என்பதும் கண்கூடு. அவருடைய மைந்தரோவெனின், அவர் செய்யாத இரண்டையும் செய்து காட்டினுர். இந்துக்களின் விசுவாசத்தைப் பெற அவர் எவ்விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதோடு கூட அவர்களைப் பலவகையிலும் துன்புறுத்துவதில் இறங்கினுர். ஆப்கானியர்களின்கீழ்ப் பணிபுரிந்து வந்த ஒரே இந்து தளபதி யான பிரம்மஜித் கௌர் (Brahmajit Gaur) என்பாரைச் சிறைப் படுத்திக் கொன்றவர் அவரே. ஆப்கானியப் பிரபுக்களையும் அவர் மிகக் கேவலமாக நடத்தினுர். அவர்களது கோபத்தைக் கிளரும் வகையில் அவர் நடந்துகொண்டார். அதனுல் அவர்களுக்கு அவர்மீது ஒருவித வெறுப்பும் மனக்கசப்பும் ஏற்படலாயின. அவர் மீது கொண்டிருந்த விசுவாசமும் அவர்களிடமிருந்து நாளடை வில் மறைந்தது. வியக்கத்தக்க ஆற்றலும் பண்பும் உடையவர்க ளாயிருந்தும்கூட ஷெர்ஷாவும் இஸ்லாம்ஷாவும், தாம் ஆளும் நாடு இந்தியர்கள் நிறைந்ததொரு நாடாகையால், அவர்களை ஆட்சித் துறையில் அதிகம் அதிகமாகச் சேர்த்துக்கொண்டு, அவர் களது ஆதரவைப் பெற்றுலன்றித் தங்களது அதிகாரத்தை இந்தியாவில் நிலைநிறுத்த முடியாது என்ற சிறு உண்மையை நன்கு புரிந்துகொள்ள முடியாதவர்களாயிருந்தனர். அவர்கள் விரும்பியது மேன்மை மிக்கதோர் அரசபதவியாகும். மையத்தில் அதிகாரங்கள் செறியப்பெற்ற கட்டற்ற முழுவல்லரசை நிறுவ

அவர்கள் எத்தனித்தனர். அஃது இந்து அரசு ஒன்றுக்கு ஏற்ற தொரு மரபேயன்றி டில்லி சுல்தானியர்களால் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய அரசின் குறிக்கோளுக்கு ஒத்ததொரு வழக்கமன்று. எனவே, இந்துக்களின் மரபுக்கொத்ததொரு வலிமைமிக்க கோஞட்சியை நிறுவவேண்டுமாஞல் இந்துக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதும், அவர்களை அரசாங்கப் பணிகளில் மேன்மேலும் ஈடுபடுத்துதல் அவசியம் என்பதும் அவர்களுக்கு விளங்காமல் போனது உண்மையில் பரிதாபத்துக்குரியதோர் நிகழ்ச்சியேயன்றி வேறல்ல. அந்த அளவுக்கு அவர்களுக்கு அரசியல் விவேகம் இல்லை என்று வைத்துக்கொண்டாலும், பொது அறிவைப் பயன்படுத்தியிருந்தால்கூட, அவர்கள் அவ்வுண்மையைப் புரிந்துகொண் டிருக்கக்கூடும். இந்துக்கள் பெரும் பான்மையினராக இருக்கும் ஒரு நாட்டில் அதுவும் அரசாங் கத்தின் அடிப்படையானது பழங்கால மரபுப்படி அமைந்திருக்கும் ஒரு நாட்டில், தங்களுடைய அரசாங்கத்துக்கு இந்துக்களின் விசுவாசம் முழுமையாக வேண்டத்தக்கது என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட வெறும் பொது அறிவு ஒன்றே போதுமானது. அதாவது, இந்துக்களைச் சமாதான முறையில் அணுகவேண்டும் என்பதை அவர்கள் அரசாங்கக் கொள்கையாக அறிவித்திருத்த லொன்றே அறிவுக்கு அழகாகும். அங்ஙனம், அறிவிக்கப்பெற்ற கொள்கையை நடைமுறையில் கொண்டு செலுத்த ஆட்சித் துறையில் இந்துக்கள் பெரிதும் ஈடுபடுத்தப் பெற்றிருப்பதே முறையாகும். நிலையான ஓர் அரசு ஏற்படவேண்டுமாஞல் திறமைமிக்கதோர் அரசாங்கம் அதற்கு இன்றியமையாத தொன்று என்பதை ஷெர்ஷா இயல்பாகவே உணர்ந்து கொண்டார். அத்தகைய அரசாங்கத்தை அவர் மிகுந்த விழிப் போடும் முன் எச்சரிக்கையோடும் அமைத்தார். கிராமத்தி லிருந்து ஆரம்பித்துப் படிப்படியாக அவர் ஒரு திண்ணிய கம்பீர மான கட்டடத்தைக் கட்டிஞர். பேரரசு எனும் அக் கட்டடத் துக்கு இங்ஙனம் உறுதியான அடிக்கல் அமைக்கப்பட்டது. ஏனெனில், கிராமமே அரசாங்கத்தின் அலகாகக் (Unit) கருதப் பட்டது. அங்ஙனம் கருதப்பட்டது முழுக்க முழுக்க இந்திய மரபை ஒட்டியதாகும். ஆட்சித்துறையின் அடித்தளங்களில் அதாவது, கிராம அரசாங்கத்தில் இந்துக்கள் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆஞல், உயர்பதவிகள் எல்லாம் ஆப்கானியர்களுக்குமட்டுமே தரப்பட்டன. இம் முறையையே அவருடைய மைந்தரும் பின்பற்றிஞர். எனவே, அரசாங்கத்தின் பரவலான கொள்கைகளை வகுப்பதில் இந்துக்களுக்கு ஒருவிதச் செல்வாக்கும் இல்லாமல் போயிற்று. இங்ஙனம், வேண்டுமென்றே இந்துக்களைப் புறக்கணித்து அவர்களை ஆட்சித்துறையில் பங்

கெடுத்துக் கொள்ளாதவாறு செய்தாலும் அதே சமயத்தில் வேண்டுமென்றே ஆப்கானியப் பிரபுக்களை அடக்கியொடுக்கி அடிமைகளாக்கியதாலுமே சூர்கள் கட்டற்ற கோனாட்சியை ஏற்படுத்த முடியாமற்போயிற்று. தனிப்பட்ட முழுவல்லரசை நிறுவ வேண்டுமென்ற அவர்களது ஆசையில் மண் வீழ்ந்தது. அவர்களின் ஆட்சிக்காலமும் குறுகியது.

இதிலிருந்து இந்தியாவில் நிலவிய முஸ்லிம் ஆட்சியைப்பற்றிய ஒரு முக்கியமான உண்மை புலப்படுகிறது. முஸ்லிம் அரசர்கள், அடிமை வம்சத்தாரின் ஆட்சிக் காலத்திலிருந்து அக்பர் காலம் வரை, அவர்கள் ஆப்கானியர்களாயிருப்பினும் அல்லது துருக்கியர்களாயிருப்பினும், இந்துக்களைச் சரிவரப் புரிந்துகொள்ள அவர்களில் எவருமே அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் இந்துக்களை வெறுப்புக் கண்களுடன் நோக்கினர். அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் அரசியல் சமுதாய நிறுவனங்களையும் பண்டைய பெருமைகளையும் அவர்கள் புறக்கணித்தனர். பதினான்காம் நூற்றாண்டளவில், உருது என்ற பொதுமொழி ஏற்பட்டுக் கருத்துப் பரிமாற்றத்துக்குத் துணைபுரிந்ததேனும், முஸ்லிம்கள் இந்துக்குடிகளைப் புரிந்துகொள்வதற்கு அஃது உதவி புரியவில்லை. சிலைவணக்கம் செய்பவர்கள் யாவராயிருப்பினும் அவர்களை வெறுக்க வேண்டுமென்ற உணர்வை இஸ்லாம் மதம் முஸ்லிம்களிடையே ஏற்படுத்தியதும், அதன் விளைவாக அவர்கள் பால் பகைமையுணர்ச்சியும் சமயப் பொறையின்மையும் தாண்டவமாடியதும் அதற்கொரு காரணமாகும். டில்லியை ஆண்ட முஸ்லிம் அரசர்கள் பொதுவாக இந்துக்கள்பால் காட்டிய காழ்ப்புணர்ச்சிக்கும், கொடுங்கோன்மைக்கும், அதுவே காரணமாகும். மேலும் இந்துக்களும் முஸ்லிம்களை வெறுப்புக் கண்களோடு நோக்கினர். தங்களது மதப்பற்றால் ஏற்பட்ட ஒரு புறக்கணிப்பு மனப்பான்மை அவர்களிடமும் காணப்பட்டது. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள முடியாமற் போனதற்கு அதுவும் ஒரு காரணமாகும். ஆனால் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களா யிருந்தமையால் அவர்கள் தமது ஆட்சிக்குட்பட்ட குடிமக்களிடம் ஒரு சிறிது தாழ்ந்து வந்து அவர்களிடம் சமாதான மனப்பான்மையுடனோ, அல்லது சற்று அநுதாபத்துடனோ நடந்துகொண் டிருந்திருப்பார்களேயானால், இந்துக்களின் மனப்போக்கை அவர்கள் எளிதில் மாற்றியிருக்கக் கூடும். அவர்களது அலட்சிய மனப்பான்மையை வென்று, அவர்களில் மிகச் சிறந்தவர்களின் நற்சேவைகளை அவர்கள் பெற்றிருக்கக் கூடும். ஆனால், அடிமை வம்சத்து அரசர்களோ, கில்ஜிகளோ, துக்ளக்குகளோ, லோடிகளோ அல்லது சூர்களோ, எவருமே தங்களது இறைமைமிக்க உயர் பீடத்திலிருந்து இறங்கி

இந்துக்களைச் சமாதானப்படுத்த முன்வரவில்லை. அதன் விளைவாக அவர்களது பண்பினையும், பழக்க வழக்கங்களையும் நிறுவனங்களையும் அவர்களால் நெருங்கி நின்று புரிந்துகொள்ள இயலாமற் போயிற்று. ஒரு நாட்டில் திறமைமிக்கதும் நிலைபேறுனதுமான அரசாட்சி ஏற்படுத்தப்படவேண்டுமானல் அந்த நாட்டில் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புகள், மரபுகள் வழக்கங்கள் ஆகியவற்றை முழுமையாகப் புரிந்துகொள்ளுதல் ஆட்சியாளர்களுக்கு மிகமிக இன்றியமையாததென்பதை அவர்கள் ஏனே புரிந்துகொள்ளத் தவறிவிட்டனர்.

டில்லி சுல்தானிய அரசில் ஒருமைப்பாட்டுடன் கூடிய ஜீவனுள்ள அரசாங்கம் இல்லாமை

ஷெர்ஷாவிற்கு முன்பு ஆண்ட முஸ்லிம் அரசர்கள் இந்து அரசாங்க மரபுகளைப் புரிந்துகொள்வதில் ஒரு சிறிதும் அக்கறை காட்டவில்லை. இந்திய அரசாங்க மரபுகளின்படி சுயேச்சை உள்ள கிராமம்தான் அரசாங்கத்தின் மூல அலகாகக் கருதப்பட்டது. அத்தகைய கிராமங்கள் ஒருங்குசேர்க்கப்பட்டு, வெவ்வேறு பெரிய ஆட்சித்துறைப் பகுதிகளாக வெவ்வேறு பெயர்களில் அமைக்கப்பட்டன. அவற்றுக்கெல்லாம் தலைவராக அரசர் விளங்கினர். அரசர் தமது பதவியை ஒரு புனிதமான பொறுப்பாகக் கருதி மக்களின் நலனுக்காக அதைப் பயன்படுத்துவதையே தமது குறிக்கோளாகக்கொண்டார். ஓர் உயர்ந்த குறிக்கோளின்படி கருதப்பட்டபோது அரசர் என்பவர் மனித உருவில் வந்த தெய்வமாக மக்களுக்குக் காட்சி அளித்தார். அவருடைய அதிகாரத்துக்கு வரம்பென்பதே சிறிதும் இல்லாமல் இருந்தது. அவரைச் சூழ்ந்திருந்த புனிதத் தன்மை, அவருடைய பதவி தெய்வத்திடமிருந்து தோன்றியது என்ற எண்ணம், அவரால் செலுத்தப்பட்ட எல்லையற்ற அதிகாரம் ஆகிய இவையெல்லாம் சேர்ந்து வரம்பற்ற வல்லரசுக்கு வழி வகுத்தன. எந்த முஸ்லிம் அரசருமே உரிமை கொண்டாடக் கூடாத முழுவல்லரசை அஃது ஆதரித்தது. எப்போதுமே முஸ்லிம்கள் வரம்பற்ற முடியாட்சிமுறை வரம்புகளை ஏற்படுத்தியதில்லை. அதோடு திண்மையான அடிப்படைகளின்மீது பேரரசு அரசாங்கம் ஒன்றை அமைப்பதிலும் அவர்கள் தவறிவிட்டனர். தங்களுடைய சொந்தக் கருத்துக்களின்படியும் மரபுகளின்படியும் ஓர் அரசாங்க முறையைப் பலவந்தமாகத் திணித்ததொன்றே அவர்கள் செய்த காரியம். தங்களால் அமைக்கப்பட்ட பேரரசுக்குத் தக்க அடிப்படைகள் அமைக்கப்பட வேண்டுமென்பதைப்

பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. வலிமைமிக்க படைகளைக் கொண்டு அவர்கள் நாட்டைச் சூறையாடுவதிலும், கப்பப் பணத்தை வசூல் செய்வதிலும், தங்கள் மத சமுதாய நலன்களைப் பூர்த்தி செய்துகொள்வதிலுமே அவர்கள் தம் கவனத்தைச் செலுத்தினர். அதற்குமேல் எதையும் செய்ய அவர்கள் எத்தனிக்கவில்லை. அதன் விளைவாகத் தொன்றுதொட்டு நாட்டில் நிலவி வந்த மிகத் தொன்மையான இந்திய அரசியலமைப்பு நிறுவனங்கள் புறக்கணிக்கப்பட்டன. தனித்து நின்று செயற்பட்டதாலும், நன்கு பேணப்படாததாலும், அவை நாளடைவில் தமது இயக்கச் சக்தியை இழந்தன. ஆங்காங்கே நிலவிய உள்ளூர் அரசாங்க நிறுவனங்களைக் காப்பாற்றுவதில் முஸ்லிம் அரசர்கள் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. ஏனெனில், நேரடியாக அவற்றோடு அவர்களுக்குத் தொடர்பு எதுவும் இல்லை. உள்ளூர் வட்டாரங்களில் அங்கங்கே இருந்த தலைவர்களிடமே அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர். வருமானத்தை வசூல் செய்வது, அமைதியைப் பாதுகாப்பதுபோன்ற காரியங்களை அத் தலைவர்களே பார்த்துக்கொண்டனர். மக்கள் தம் வரிகளை ஒழுங்காகச் செலுத்திக்கொண்டு, அமைதியோடு வாழ்ந்துவந்தவரையில், அவர்கள் வேறு எதைப்பற்றியும் கவலையின்றி இருந்தனர். அரசாங்கத்தின் அடிப்படையாகக் கிராமமும், அதற்குமேல் பற்பல கிராமங்கள் சேர்ந்த நிலத்தொகுதியும், அவற்றிற்கும் மேலாகப் பர்காணுக்களும், சர்க்கார்களும் இருந்தனவேயன்றி, அவற்றினிடையே ஒரு பிணைப்பும் ஒருமைப்பாடும் இல்லை. ஜீவனுள்ள ஒரு பேரரசு அரசாங்கமாக அவை அமைக்கப்படவில்லை. இந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும் நடைமுறையில் அந்தந்த வட்டாரத் தலைவர்களே அதனதன் அரசர்களாக விளங்கினர். அவரவர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவர்கள் படைகளை வைத்துக்கொண்டும், வருமானங்களை வசூல் செய்துகொண்டும் குட்டிச் சுல்தான்களைப்போலவே அவர்கள் நடந்துகொண்டனர். அத்தகைய பேரரசு அரசாங்க அமைப்பில், பேரரசர் எவ்வளவு வலிமை உடையவர், எவ்வளவு தூரம் அவர் தம் சிற்றரசர்களின் விசுவாசத்தைப் பெறக்கூடியவர் என்பதைப் பொறுத்தே எல்லாம் நடைபெற்றது. அரசியல் நிறுவனங்கள் தொழிற்படுகையில், அதில் ஒரு தொடர்ச்சியோ அல்லது ஜீவனோ காணப்படவில்லை. எனவே, டில்லி சுல்தானிய ஆட்சிக்காலம் முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, வலிமைபெற்ற மத்திய அரசாங்கமானது நடுநடுவே விட்டுவிட்டுத்தான் காணப்பட்டதேயன்றி, ஆற்றல்மிக்க தொடர்ச்சியான அரசாட்சியை நாம் காண முடியவில்லை. அரசர் வலிமையும் திறமையும் கொண்டவரா

யிருந்தவரையில் மத்திய அரசாங்கம் நல்லமுறையில் இயங்கியது. அவர் பலவீனராயிருப்பாராஞல், அரசாங்கமும் தாஞகவே பலவீனமாகி விடுவது வழக்கம். இந்த நிலையில் ஒருமையும் ஜீவனும், திடமும் கொண்டதோர் ஆட்சிமுறை நாட்டில் ஏற்பட வழியில்லாது போயிற்று. எனவேதான் இடைக்கால இந்தியா வில், வரம்பற்ற முடியரசாட்சியை நிறுவத்தக்க அரசியல் மரபு களும் நிறுவனங்களும் ஏற்படாமற் போயின.

நாம் ஏற்கனவே கூறியுள்ளபடி, டில்லி சுல்தான்கள் வெறும் படைத்தலைவர்களாயும், பெரும் நிலப்பரப்புகளை வென்று கைப் பற்றுபவர்களாயும்மட்டுமே இருந்தனர். முஸ்லிம் சமுதாயத் தினரை, மதத்துறையில் தலைமைதாங்கி நடத்தக்கூடிய அளவில் அவர்கள் ஆன்மிகத் தலைவர்களாக விளங்கவில்லை. அத்தகைய தகுதி தங்களுக்கு இருப்பதாக அவர்கள் நடிக்கவும் இல்லை. உண் மையில் மகமது நபியைப்போன்று, மக்கள்மீது வரம்பற்ற அதிகா ரத்தைச் செலுத்தத்தக்க உரிமையை அவர்களால் கொண்டாட முடியவில்லை. முஸ்லிம் குடிமக்களும், தங்களது முழு விசுவாசத் தையும் அரசர்கள்பால் செலுத்த முன்வரவில்லை. அத்தகைய நிலையில், வரம்பற்ற அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய ஒரு முடியரசை ஏற்படுத்துவதென்பது இயலாத காரியமாய்ப் போயிற்று. இந்து அரசியல் சம்பிரதாயங்களையும், நிறுவனங் களையும் ஒப்புக்கொண்டாலன்றி அத்தகைய முடியாட்சி ஏற்படு தல் முயற்கொம்பு என்பதை யாவரும் அறிந்தனர். ஏனெனில், இந்து மரபுகளின்படி மன்னரே மானிடவடிவில் வந்த கண்காணும் தெய்வமெனக் கருதப்பட்டார். இந்து அரசியல் நிறுவனங்களில் பல படித்தரங்கள் இருந்தன. அவற்றிடையே ஒருவகையான பிணிப்பும் இணைப்பும் காணப்பட்டன. அவற்றை, அந்தந்தச் சூழ் நிலைக்கேற்ற அவசியமான சில மாறுதல்களுடன் கடைப்பிடித்தா லன்றி, முழுமையான அதிகாரமுள்ளதோர் முடியாட்சியை ஏற் படுத்துதல் என்பது முஸ்லிம்களுக்கு முடியாத காரியம் என்பது நன்கு தெரியலாயிற்று. அதோடு சமயச்சார்பற்ற கொள்கையை அரசாங்கத்தில் கடைப்பிடிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தக் கூடிய இந்துக்களை ஆட்சித்துறை அலுவல்களில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய்வதும் அத்தகைய குறிக்கோளை அடைவதற்கு மிகவும் இன்றியமையாதது என்பது நன்கு புலப்பட்டது. இத் தகைய முஸ்லிம் ஆட்சிக்கு இன்றியமையாத தேவைகளை டில்லி சுல்தான்கள் கொஞ்சம்கூடப் புரிந்துகொள்ளவில்லை. ஷெர்ஷா ஒருவர்தாம் அதை ஓரளவு புரிந்துகொண்டவர். ஆகையிஞல்தான் வரம்பற்ற அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய முடியாட்சியை நிறுவு வதற்குப் பெரிதும் துணைபுரியக்கூடிய நல்ல திடமான அரசாங்க முறையை உருவாக்க அவர் முயன்ருர். ஆஞல், அவரது

முறையில் ஓர் உயிரூட்டமோ சத்தோ இல்லாமல் இருந்தது. அதற்கு உயிரூட்ட அவர் இந்துக்களின் சீரிய ஒத்துழைப்பை நாட வேண்டி இருந்தது; காலத்துக்கேற்ற இத் தேவையை முழுமையாகப் புரிந்துகொண்டவர் அக்பர் ஒருவர்தாம் எனலாம். எனவேதான் அவர் இந்துக்களைத் தம் பக்கம் சேர்ப்பதில் பெரிதும் அக்கறை காட்டினார். பேரரசுஅரசாங்கத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்வதன்மூலம் அதற்கு உயிரூட்டக்கூடும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அங்ஙனமே அவர் இந்துக்களின் துணை கொண்டு அரசாங்க முறைக்கு வலிவூட்டினார். இந்தக் கூற்றுக்களுடன் நிறுத்திக்கொண்டு, ஆப்கானிய அரசாட்சி முறையை ஆராய்வதில் இனிக் கவனத்தைச் செலுத்துவோமாக.

லோடிகளின்கீழ் அரசாங்க முறைமை

லோடிகளின் அரசாங்க முறையில் ஆப்கானியர்களின் நிலமானியக் கருத்துக்களும் குழுமுறை அமைப்பும் காணப்பட்டன. இந்தியப் பின்னணியில் அமைக்கப்பட்ட ஆப்கானிய நிறுவனமே லோடிகளின் அரசாங்க அமைப்பு என்று கூறலாம். குழு அமைப்புப்பற்றிய எண்ணங்கள் காரணமாக, அரசாங்கமானது முற்றிலும் தனி மனிதர்களின் சொந்த விவகாரமாய்ப் போயிற்று. அதே சமயம் நிலமானியக் கருத்துக்களின்படி அரசாங்கத்தின் அதிகாரமானது நாலாவிடங்களிலும் சிதறடிக்கப்பட்டது. இந்த இரண்டு காரணிகளின் விளைவாக ஓரிடத்தில் அதிகாரம் செறியப்பெற்ற ஆட்சிமுறை உருவாவதற்கு வழியில்லாமல் போயிற்று. சமமானவர்களிடையே முதல்வர் (Primus Inter Pares) என்ற நிலைக்கு அரசர் இழிந்தார். எனவே, அரசரது அதிகாரமானது பெரிதும் குறைக்கப்பட்டது. லோடி சுல்தான் ஏதோ பெயரளவுக்குத்தான் இறைமை பூண்டு விளங்கினார். பலர் பார்த்து அநுமதித்ததே அவரது இறைமையாக விளங்கிற்று. குறைந்தது முதலாவது சுல்தானைப் பொறுத்த மட்டிலாவது இஃது உண்மை. சிக்கந்தர் லோடியும் இப்ராஹிம் லோடியும் இந்த வழக்கத்துக்குச் சற்றே மாறாக நடந்தனர். பெயரளவுக்கு மட்டுமன்றி உண்மையிலேயும் இறைமை பூண்டு விளங்க இப்ராஹிம் லோடி எத்தனித்தார். அக் குறிக்கோளை அடைய வேண்டி, அவர் ஆப்கானியப் பிரபுக்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைக்க முயன்றார். ஆனால், அம் முயற்சியில் அவர் தோல்வியையே கண்டார். அதனால் அவர் தம்மையே அழித்துக்கொண்டதோடு, ஆப்கானியப் பேரரசின் அழிவுக்கும் வகை தேடிவிட்டார். எனவே, லோடிகளின்

ஆட்சிக் காலத்தே அரசரின் அதிகாரமானது எவ்வளவு விரிவா யிருந்ததென்பதையும் எவ்வளவு தூரம் அது நடைமுறையில் கொண்டு செலுத்தப்பட்டதென்பதையும், நாம் நன்கு மதிப்பிட வேண்டுமானால், நிலமானியப் பிரபுக்களாலும், குழுமுறை அமைப்பாலும் அது பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். பஹ்லோல் லோடி தம் பிரபுக் களிடம் காட்டிய மனப்பான்மையைக் கொண்டு இதை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம். ''பலரும் ஒன்ருகக் கூடுகின்ற பொழுதுபோக்குக் கூட்டங்களில் அவர் அரியணையின் மீது அமர்வதில்லை'' என்றும், ''அவர்கள் (பிரபுக்கள்) தம் முன் நின்று கொண் டிருப்பதைக்கூட அவர் அநுமதிப்பதில்லை'' என்றும், அதோடு, ''பலரறியக் கூடுகின்ற அரசவைக் கூட்டங்களில் கூட அவர் அரியணையில் அமராமல், ஒரு கம்பளியின்மீதே அமர்வது வழக்கம்'' என்றும் நாம் கேள்விப்படுகிறோம். மேலும், பிரபுக் களுக்கு அனுப்பிய ஆணைப் பத்திரங்களில் எல்லாம் அவர் அவர்களை ''மஸ்னத் அலி'' (Masnad Ali) என விளித்தார். தம்பால் அவர்களுக்குச் சிறிதேனும் மன வருத்தம் இருப்பதாக அறிந்தாலும் உடனே அவர் அவர்களின் இல்லங்களுக்குச் சென்று தம்மாலானவரை அவர்களைச் சமாதானப்படுத்த முயற்சி செய்வார் என்றும், உடைவாளைத் தமது அரையினின்றும் உருவி வருத்தத்திலிருக்கும் பிரபுக்களின் முன் வைப்பாரென்றும் நாம் கேள்விப்படுகிறோம். இன்னும் சில சமயங்களில் அவர் தமது தலைப்பாகையைத் தம் தலையினின்றும் கழற்றி எடுத்து வைத்து விட்டுப் பிரபுக்களிடம் மன்னிப்புக் கேட்பாராம். அப்போது அவர், ''இப்போது நான் அடைந்துள்ள பதவிக்கு எனக்குத் தகுதியில்லை என்று நீங்கள் நினைத்தால் தாராளமாக வேறு ஒருவரைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு எனக்கு வேறு ஏதாகிலும் ஒரு பதவியைக் கொடுத்துவிடுங்கள்''[15] என்று கேட்பாராம். சுல்தான் சிக்கந்தர் என்பவர் இந்த நிலையில் ஒருசில மாற்றங் களைச் செய்து தமது அதிகாரத்தை வளர்த்துக்கொண்டார். அவர் தம் பிரபுக்களை அநுதாபத்தோடு நடத்தினுரே என்றாலும், அவர்களுக்குச் சமத்துவம் கொடுக்க அவர் முன்வரவில்லை. அவர்கள் தமக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற உணர்ச்சியை அவர் அவர்கள்பால் தோற்றுவித்தார். இப்ராஹிம் லோடி இன்னும் ஒரு படி மேலே சென்று அவர்களை ஒருங்கே நசுக்கி அதன்மூலம் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றார். ஆனால், அவர் அதில் தோல்வியுற்றார். நிலமானிய முறை, குழுமுறை ஆகிய வற்றின் அடிப்படையிலும் அமைந்த ஓர் அரசாங்கத்தை அவரால்

[15] Elliot and Dawson, Vol. IV, pp. 436-37.

எளிதில் கட்டுப்படுத்த முடியவில்லை. வரம்பற்ற முடியாட்சி ஏற்படுத்தக் கடைசி இரண்டு லோடி சுல்தான்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகளில்தான், இந்திய அரசியல் பின்னணி அல்லது சூழ்நிலையின் செல்வாக்கானது நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் பால்பன், அலாவுதீன், மஹமது பின் துக்ளக் ஆகியோர்களால் நிறுவப்பட்ட அரசுரிமை மரபுகள் நிறைந்து சூல்கொண்டு நிற்பதையும் நாம் அறிகிறோம். அத்தகைய மரபுகளை மீண்டும் கைக்கொள்ள லோடி சுல்தான்கள் முயன்ற வேளையில் அதிகாரச் செறிவு ஏற்படுத்தும் முறையை அவர்கள் வகுத்தனர். அஃது ஆப்கானியப் பிரபுக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டது. மேலும், அவர்கள் கடைப்பிடித்த அரசாங்க முறைமையானது, மிகவும் சீரழிந்த நிலையில் ஏற்கெனவேயே சயதுகளின் காலத்தில் தொடர்ந்து இருந்து வந்ததொன்றேயாம். அரசியல் நிறுவனங்களை அமைப்பதில் லோடி ஆப்கானியர்கள், ஆக்கத்திறன் கொண்ட மேதைத் தன்மை எதையும் புலப்படுத்த வில்லை. தங்களது சொந்த நாட்டிலிருந்து எவ்விதமான அரசியல் நிறுவனத்தையும் அவர்கள் கொண்டுவரவுமில்லை. எனவே, சயதுகள் காலத்திலிருந்த அரசாங்க முறையை அப்படியே கைக்கொள்வதே அவர்களுக்கு எளிதாயிருந்தது. பஞ்சாபில் அவர்களுக்கு அத்தகைய அரசாங்க ஏற்பாட்டில் நன்கு அறிமுகம் ஏற்பட்டிருந்தது. எனவே, லோடி அரசாங்கத்தில் தலைசிறந்து விளங்கிய ஓர் அமைப்பில் இருவிதக் கூறுபாடுகளின் கலப்பு காணப்பட்டது. ஆப்கானியர்களின் குழுமுறைக் கொள்கைகளும் நிலமானியக் கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத நிலையில் அதில் இடம் பெற்றிருந்தன. அதோடு டில்லி சுல்தான்கள் காலத்து எழுந்த யதேச்சதிகார ஆட்சி மரபுகளும் அதில் புகுந்துவிட்டன. ஆப்கானிய மரபுகள், டில்லி சுல்தானிய மரபுகளோடு கலந்துவிட்ட காட்சியை நாம் லோடி அரசாங்கத் தில் காணலாம்.

லோடிகள் காலத்திய ராஜரீகம்

நாம் இங்கே தெரிவித்துள்ள கருத்துக்களை மெய்ப்பிக்க வேண்டுமானால் முதலில் ஆப்கானிய அரசருடைய அதிகார மானது தெளிவற்ற ஒரு பொய் அதிகாரமல்ல என்பதை நாம் முதலில் கூறியாகவேண்டும். குடிமக்கள்மீதும் அவர்கள் விவ காரங்களின்மீதும் அவர் ஏராளமான கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் செலுத்திவந்தார். கொள்கை அளவிலும் நடைமுறையிலும் அவரே நீதியின் ஊற்றுகத் திகழ்ந்தார். நாட்டிலுள்ள நிலம், நீர் அனைத்தும் அவரால் அளிக்கப்பட்ட

பரிசாகவே கருதப்பட்டன. அரசியல் கௌரவங்களுக்கெல்லாம் அவரே ஊற்றெனத் திகழ்ந்தார். அதோடு மதத்துக்கு ஒரு பாது காவலராகவும் அவர் விளங்கினார். லோடிகளில் பெரும்பான்மை யோர் மிகவும் மதவெறி பிடித்தவர்களாக இருந்தனர். எனவே, அவர்கள் சில வணக்கத்தை அறவே ஒழிப்பதில்மட்டும் திருப்தி அடையவில்லை. சுன்னி வைதிக பழக்க வழக்கங்களிலிருந்து ஒரு மயிரிழைகூட ஒருவரும் தவறக்கூடாதென அவர்கள் தடை விதித் தார்கள். சிக்கந்தர் லோடி தமது நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு மாகாணத்திலும் ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்பட்ட சலார் மசூதின் (Salar Masud) ஈட்டி ஊர்வலத்தை அறவே ஒழித்ததோடு மீண்டும் அது எங்கும் நடத்தப்படக்கூடாது என்றும் கண்டிப் பாகக் கட்டளையிட்டார். ''கல்லறைகளுக்குப் புனித யாத்திரை போகக் கூடாதென அவர் பெண்களைத் தடுத்தார்.''[16] மொஹரம் பண்டிகையின்போது தஜியாக்கள் (Taziyas) கண் காட்சியாகக் காட்டப்படுவதை அவர் தடுத்தார். அவரது காலத் தில் பெரியம்மைக்குத் தெய்வமாக மதிக்கப்பட்ட சீத்லாவை (Sitla) ஒருவரும் வணங்கக்கூடாதென அவர் தடுத்ததோடு அதை மீறியவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்தார்.[17] மதவெறி தாண்டவமாடிய ஒரு முஸல்மானாக அவர் விளங்கினார். ''இஸ்லாம் மதத்திற்குப் புறம்பானவர் களுடைய கோயில்களையெல்லாம் அவர் தரைமட்டமாக்கி, அவற்றை அடையாளம் தெரியாதவாறு செய்துவிட்டார். மதுராவில் இருந்த கோவில்களை அவர் முற்றிலும் அழித்தார். முக்கியமான இந்துக் கோயில்களை அவர் பிரயாணிகளின் தங்குமிடமாகவும் கல்லூரிகளாகவும் மாற்றினார்.''[17a] இங் ஙனம் சுல்தான்கள் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்திய முறையானது சமுதாயத்துறையிலும் சமயத்துறையிலும் முக்கிய மானப் பல விளைவுகளை ஏற்படுத்தியது. அதனால் சுல்தான்களின் கௌரவம் உண்மையிலேயே உயர்ந்தது என்றும் கூறலாம். ஆனால், இத் துறையில் அவர்களது அதிகாரத்தின் அளவானது மக்களிடையே உலவிவந்த பழக்கவழக்கங்களினால் பெரிதும் குறைவுபட்டது. உலேமாக்கள் அவ்வப்போது அவர்களின் செயல் களைக் கண்டித்தனர். இந்துக்களின் பழக்க வழக்கங்களில் சுல்தான் தலையிடுவதைக்கூட உலேமாக்கள் பல சமயங்களில் தடுத்துள்ளனர். சான்றாக, சுல்தான் சிக்கந்தர் லோடி என்பார் ஒரு சமயம் குருக்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கிருந்த இந்துக் கோயிலை இடித்துத் தள்ளவும் அங்குக் கூடியிருந்த இந்துக்களைப்

[16] Ibid., Vol. IV, p. 448.
[17] Ibid., footnote, 2.
[17a] Ibid., p. 447.

புனித நீராட்டம் ஆடாதவாறு தடுக்கவும் விரும்பியபோது மாலிக் உல் உலமா (Malik-ul-ulama) அரசரைத் தடுத்து, ''பண்டைய கோயில் ஒன்றை இடிப்பது செய்யத்தகாத காரியம்'' என்றும், ''மக்கள் வழக்கமாக செய்து வருகின்ற தீர்த்தாடனச் சடங்கைத் தடுப்பது முறையல்ல''[18] என்றும் கூறினார். அதைக் கேட்ட சுல்தான் தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டார். அரசரது அதிகாரமானது மக்களுடைய பழக்க வழக்கங்களைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் செலுத்தப்படக்கூடிய தென் பதை இந் நிகழ்ச்சி நன்கு எடுத்துக்காட்டுகிறது. உண்மையில் மக்களாட்சி என்ன என்று தெரியாத ஒரு காலத்தே வல்லரசன் ஒருவன் மக்களுடைய பண்டைப் பழக்கவழக்கங்களையும் நெடுங் கால மரபுகளையும் மதிப்பதன் மூலமாகவே குடிமக்களின் அன்பையும் விசுவாசத்தையும் பெற்றுவந்தான். டில்லியை ஆண்ட ஆப்கானிய சுல்தான்களைப் பொறுத்தவரை இது முற்றிலும் உண்மை. ஏனெனில், அவர்களின் ஆட்சியானது அரசர்களின் சொந்த எதேச்சாதிகார ஆட்சியாகவே இருந்து வந்தது. எனவே, எல்லா வகையிலும் மக்களைத் திருப்தி செய்ய வேண்டியது அவர்களது சொந்தப் பொறுப்பாகப் போயிற்று. சுல்தான் சிக்கந்தர் லோடியைப்பற்றி கூறப்படும்போது, ''அவர் மிகமிக நல்லவர். வீரம் பொருந்தியவர். துலாக்கோல் போன்ற நடுநிலைமையை உடையவர். வல்லவர்களுக்கும் மெலிந்தவர் களுக்கும் அவர் ஒரே நீதியை வழங்கினார். வழக்குகளை விசாரிக்கும் போது அவற்றைப்பற்றிய சான்றுகளையெல்லாம் எடைபோட்டுப் பார்த்த பின்னரே தம் தீர்ப்புகளை வழங்குவது வழக்கம். பேரரசின் விவகாரங்களையெல்லாம் அவர் இங்ஙனம் நன்கு சீர்தூக்கிப் பார்த்தே செய்துவந்தார். மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க அவர் பல வகையிலும் முயன்றார். வறியோர்களையும் தாழ்ந்தோர்களையும் அவர் தம் சொந்தப் பொறுப்பில் காற்பாறினார்.''[19] அதோடு, ''இஸ்லாம் சமகுயத்துக் புறம் பானவர்களுக்கும்கூட அவர் நிலங்களை வழங்கினார். அவர்களோ வெனில் தத்தம் நாட்டில் ஆண்டுவந்த இஸ்லாமியத் தலைவர் களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தனர்.''[20] மேலும், அவருடைய கட்டளைகளில் ஒன்று, ''வெவ்வேறு நகரங்களில் உள்ள ஏழை மக்களுக்கு அரசரது கருவூலத்தினின்றும் ஆண்டுக்கு இருமுறை பொருள் வழங்கப்படவேண்டும்''[21] என்று கூறியது. 'இத்' பண்டிகையின்போதும், மஹமது நபியின் மரணத்தைக் குறித்து

[18] Ibid., Tarikhi Daudi, Vol. IV pp. 439-40.
[19] Ibid., p. 445.
[20] Ibid., p. 447.
[21] Ibid.

ஆண்டுதோறும் நடைபெற்ற சடங்குகளின்போதும் ''வரிகளைப் பூரணமாகச் செலுத்தாததற்காகச் சிறையில் அடைக்கப்பெற்ற அனைவரையும் விடுவிக்குமாறு அவர் எழுத்துமூலம் கட்டளை பிறப்பித்தார்.''[22] இத்தகைய அருள் நிறைந்த பணிகளின்மூலம் சுல்தான், மக்களுடைய அன்பையும் விசுவாசத்தையும் தொடர்ந்து பெற முயன்றார்.

ஆனால், சிக்கந்தர் லோடியின் காலத்தில்தான் ராஜரீகமானது ஒரு நிறுவனம் என்ற முறையில் திட்டவட்டமான கௌரவத்தை அடைந்தது. பஹ்லோல் காலத்திய வழக்கத்துக்கு மாறாக, ''ஒவ்வொரு தலைவனும் அவனவனுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே எப்போதும் அரசரது முன்னிலையில் நிற்க வேண்டும்''[23] என்பது வற்புறுத்தப்பட்டது. அதுதான் அக் காலத்தில் அரசவை வழக்கமாகும். அவரது ஆட்சிக்குட்பட்ட தூரப் பிரதேசங்களிலும், அரசருக்கு வழங்கப்படவேண்டிய மரியாதையானது அவருடைய ஆணைகளுக்கு வழங்கப்பட்டது. ''அரசரின் ஆணை ஒன்று வந்திருப்பதாகக் கேட்டவுடனே, ஒவ்வொரு தலைவரும் தமது இருப்பிடத்தைவிட்டு இரண்டு அல்லது மூன்று கோஸ் (Kos) தூரம் சென்று அவ்வாணையை ஏந்தி வருபவரை எதிர்கொண்டு வரவேற்பது வழக்கம். அதன்பின் பெரிய மேடை ஒன்று அமைக்கப்படும். அதன்மீது அரசரின் தூதுவர் சென்று அமர்ந்துகொள்வார். பிரபுவானவர் கீழே நின்றுகொண்டு ஃபர்மனை மிகுந்த பயபக்தியுடனும் மரியாதையுடனும் கைகளில் வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு தலைமீது வைத்துக்கொள்வார். தனிமையில் அது படிக்கப்பட வேண்டியதாயிருப்பின் அங்ஙனமே அவர் செய்வார். மக்கள் யாவருக்கும் தெரிவிக்கப்படவேண்டிய செய்தியாயிருப்பின் அவர் அதை மசூதியின் மேடையினின்றும் படித்துக் காட்டுவார்.''[24] சமமானவர்களிடையே ஒரு தலைவர் (Primus Inter Pares) என்ற நிலையானது மாறிப் பிரபுக்களிடையே அவரது நிலையானது மெதுவாக உயர்ந்துவிட்டது என்பதை மேற்கூறப்பட்ட நிகழ்ச்சியானது நன்கு எடுத்துக் காட்டுகிறது. அதற்குக் காரணம் சுல்தானின் அதிகாரப் பெருக்கமேயன்றி வேறல்ல. அதுவும் நாட்டின் எல்லாக் காரியங்களையும் தாமே தனிப்பட்ட முறையில் வழி நடத்தக்கூடிய திறமை சிக்கந்தர் லோடிக்கு இருந்ததே அவ்வதிகாரப் பெருக்கத்துக்கும் காரணமாகும். அவரைப்பற்றிக் கூறப்படுகையில், ''நாள்தோறும் அவரிடம் எல்லாப் பண்டங்களின்

---

[22] Ibid., p. 448.

[23] Ibid., p. 450.

[24] Ibid., Tarikhi Daudi, Vol. IV, p. 448.

விலையைப்பற்றிய விவரங்களும் வந்து சேர்ந்துவிடும். பேரரசின் வெவ்வேறு வட்டாரங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தைப்பற்றிய விவரமும் அவருக்கு அனுப்பப்பட்டுவிடும். எங்கேயாகிலும் ஏதாவது சிறு தவறு நேர்ந்துவிட்டதாக அவர் அறிந்தாலும் போதும்; உடனே அவர் அதைப்பற்றி விசாரணை செய்யுமாறு கட்டளையிடுவார்''[25]. இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், ''தூரப் பிரதேசங்களுக்கு எப்போது படைகள் அனுப்பப்பட்டாலும் அப்போதெல்லாம் சிக்கந்தர் லோடி, தினந்தோறும் இரண்டு ஃபர்மன்களை அவற்றிற்கு அனுப்பிவைப்பது வழக்கம். காலையில் ஒரு ஃபர்மனும் மாலையில் இன்னொரு ஃபர்மனும் வரும். காலை ஃபர்மனில் துருப்புகள் யாவும் வழிநடந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைய வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கும். மாலை ஃபர்மனில் படைகள் முகாமிட்டபின் என்னென்ன செய்ய வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டிருக்கும்... இந்த விதி எப்போதும் விடாமல் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு சராயிலும் (Serai) இதற்காகவென்று தபால் (Dak Chowki) குதிரைகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன.''[26] இங்ஙனம், மையத்திலிருந்து கட்டளைகள் பிறப்பித்து எல்லாவற்றையும் வழி நடத்தல் என்ற முறையினால்தான் ஆப்கானிய ராஜரீகத்துக்குச் சிக்கந்தர் லோடியின் காலத்தே வலிமையும் கௌரவமும் அதிகரித்தன. தம் தந்தையால் கடைப்பிடிக்கப்பட்ட இம் முறைகளைக் கொண்டுதான் அவருடைய மைந்தரான இப்ராஹிம் லோடி இன்னும் ஒரு படி மேலே சென்று ஆப்கானியப் பிரபுக்களின் போலிச் சலுகைகளை ஒழித்து மத்திய அரசாங்கத்தில், அரசியல் அதிகாரமனைத்தும் தம் கைகளில் செறிவதற்கு வகை செய்து கொண்டார்.

நீதி வழங்குதல்பற்றிய விவகாரங்களில் சிக்கந்தர் லோடி தனிப்பட்ட அக்கறை காட்டினார். ஏனெனில், அதன்மூலம்தான் அக்கால அரசர்கள், தங்கள் அதிகாரத்தையும் பெருமையையும் பெருக்கிக்கொள்ள முடிந்தது. சுல்தான் சிக்கந்தர் நீதி வழங்குவதில் காட்டிய அக்கறையைப்பற்றிப் பல செய்திகள் பேசப்படுகின்றன. ''ஒரு மனிதன் இன்னொருவனை முறைத்துப் பார்ப்பதற்குக்கூட அஞ்சுகிற அளவுக்குச் சிக்கந்தர் லோடியின் நீதிமுறை நிலைபெற்றிருந்தது. அவருடைய வக்கீலான தர்யாகான் லோஹானி (Darya Khan Lohani) என்பார் நாள்முழுவதும் இரவில் முதல் ஜாமம்வரை தமது இருக்கையில் அமர்ந்து நீதி

[25] Ibid., p. 450.
[26] Ibid., p. 466.

வழங்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டார். அரசரது அரண்மனை யில் காஜியும், பன்னிரண்டு உலேமாக்களும் எப்போதும் இருந்து நீதி செலுத்தினர். இந்தப் பன்னிரண்டு அறிஞர்களின் முன்னிலை யில்தான் வழக்குகள் யாவும் வழக்கு மன்றங்களில் விசாரிக்கப் பட்டன. இவர்கள்தாம் அவ் வழக்குகளுக்குரிய தீர்ப்புகளை வழங்கினர். தீர்ப்புகளின் சாரம் என்ன என்பது அக்கணமே சுல்தானுக்கு அறிவிக்கப்பட்டது.''[27] சுல்தான் வெளியே குதிரை மீது சவாரிசெய்துகொண்டிருக்கும்போதுகூட, தீங்கிழைக்கப் பட்டவர்கள் முறையிட்டுக்கொள்ள அநுமதிக்கப்பட்டனர். அங்ஙனம், யாரேனும் முறையிட்டுக்கொள்ள நேர்ந்தால் அக் கணமே அன்னாரின் குறையைத் தீர்த்துவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பது அவர் வழக்கமாகும்.[28] அரசரின் இத்தகைய விழிப்பின் காரணமாகவும், மக்களை நெறிப்படுத்தவும் கட்டுப்படுத்த வும் அவர் எப்போதும் தயாராக இருந்த காரணத்தினாலும்தான் இராஜரீகமானது உறுதியான முறையில் நிறுவப்பெற்றது. அதைப்பற்றி பஹ்லோல் கொண்டிருந்த கருத்துக்கள் யாவும் கொஞ்சங்கொஞ்சமாக மாறுதலடைந்தன. அதன் பலனாக இப்ராஹிம் லோடி வெளிப்படையாகவே, ''அரசர்களுக்கு உற வினர்கள் என்றும், தம் குலத்தவர் என்றும் யாரும் கிடையாது. எல்லா மனிதர்களும், எல்லாக் குலத்தவர்களும் அவருடைய ஊழியர்களேயன்றி வேறல்ல''[29] என்று கூறமுடிந்தது. இப்ராஹிம் லோடியின் காலத்தே அரசருக்கும் அவரது பிரபுக் களுக்கும் இடையே இருந்துவந்த ஒரு தொடர்பானது உண்மை யில் பெரிதும் மாறுபட்டுவிட்டது. ''பஹ்லோல் லோடியின் காலத்தே அவருடன் சமத்துவம் கொண்டாடிய, அகந்தைமிக்க ஆப்கானியப் பிரபுக்கள் யாவரும் இக்காலத்தே பேரரசின் அரியணைக்கு முன்னர், கைகட்டி வாய்பொத்தி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.''[30] இப்படிப்பட்ட சூழ்நிலையில், முடியர சானது வரம்பற்ற வல்லரசாக நாளுக்குநாள் மாறிக்கொண்டு வர ஆரம்பித்தது. ஆனல், திடீரென்று அதற்கு ஒரு முறிவு ஏற் பட்டது. லோடிகள் அதிகார பீடத்தினின்றும் வீழ்ச்சியுற்றனர்.

சயதுகள், லோடிகள் ஆகியோரின் அமைச்சர்கள்

லோடிகளின் வீழ்ச்சிக்குக் காரணம், அவர்களுடைய அரசாங்க முறையில் காணப்பட்ட ஒன்றுக்கொன்று ஒவ்வொத

[27] Ibid., Tarikhi Daudi, Vol. IV, p. 454.
[28] Ibid., p. 448.
[29] Tripthi, some aspects of Muslim Administration, p. 89.
[30] Ibid.,

பல கூறுபாடுகளேயாகும். அவற்றின் விளைவாகத்தான் அவர்களின் ஆட்சிமுறையின் சமநிலை குலைந்து பலவீனமேற்பட்டது. ஏனெனில், அதன் அரசியலமைப்பில், டில்லி சுல்தானிய அரசாங்கத்தின் புறக்கோலமும், ஆப்கானியர்களின் நிலமானிய மனப்பான்மை, குழு மனப்பான்மை ஆகிய உள்ளுணர்வும் அடங்கியிருந்தன. டில்லி சுல்தானியர்களின் அரசாங்க அமைப்பு என்ற உடலை, ஆப்கானியக் குழு மனப்பான்மை என்ற உயிர் இயக்கி வந்ததெனலாம். லோடி ஆப்கானியர்களின் காலத்து வழக்காற்றிலிருந்த ஆட்சித்துறை அமைப்பை விளக்கப் புகுமுன், சயதுகளின் காலத்தே எத்தகைய நிலைமை இருந்தது என்பதை நாம் ஆராயவேண்டும். சயதுகள், லோடிகள் ஆகிய இரு சாராரின் ஆட்சித்துறைக் கூறுபாடுகளை ஒருங்குசேர்த்துப் பார்க்கும்போதுதான் அக்கால அரசாங்கத்தின் முழு உருவத்தையும் நாம் காணமுடியும்.

சயது அரசர்களுக்குத் துணையாக ஏராளமான உயர் அதிகாரிகள் இருந்தனர். அவர்களை அக்கால மரபின்படி அமைச்சர்கள் என அழைக்கலாம். வஸாரத் (Wazarat) பதவி அக்காலத்தேயும் இருந்தது. வஸீர் என்பார், செல்வாக்குமிக்க, மிக முக்கியமான ஒரு பிரபு ஆவார். சயதுகள் காலத்தே மாலிக் உஷ்ஷர்க் (Malik ush Sharq), மாலிக் டுக்ஃபா (Malik Tuhfa), மாலிக் சிக்கந்தர் (Malik Sikandar), மாலிக் உஷ்ஷார்க் சர்வார் ஆகியோர் வெவ்வேறு சமயங்களில் வஸீர்களாய் நியமிக்கப்பட்டிருந்தனர்.[31] வஸீருக்குத் துணையாக ஒரு திவான் இருந்தார். அவர் திவானி அஷ்ரப்[32] (Diwan-i-Ashraf) எனும் அலுவலகத்தின் தலைவராயிருந்தார். சில சமயங்களில் இவ்விரு பதவிகளும் ஒரே ஆளிடம் தரப்பட்டிருந்தன. இவ்விரு பதவிகளுக்குரிய பணிகளின் தன்மைகளும் ஏறக்குறைய ஒன்றாக இருந்ததாலேயே, அவை சில சமயம் ஒருவரிடம் ஒன்றாக ஒப்படைக்கப்பட்டன. வஸீர், திவான் ஆகிய இருவரும் நாட்டின் சிவில் அரசாங்கத்தோடு தொடர்புடைய அதிகாரிகளாவர். அதேபோல, நாட்டின் இராணுவ அமைப்போடு தொடர்பு கொண்ட இரு முக்கிய அதிகாரிகள் இருந்தனர். அவர்கள், ஆரிஸி மாமாலிக் (Ariz-i-Mamalik) போர்வீரர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும் அதிகாரி (Muster Master general), தபீர்[33] (Dabir- செயலாளர்) என்று அழைக்கப்பட்டனர். யானைகளின் காவலர்[34] என்ற ஒருவரும்

[31] Elliot and Dawson, Vol. IV, pp. 46, 53, 58, 78.

[32] Ibid., p. 78.

[33] Ibid., pp. 47, 48.

[34] Ibid., p. 47.

ஹஜிப் [35] (அகமுடையார்) என்ற இன்னொருவரும் சயதுகளின் காலத்தே இருந்ததாகப் பேசப்படுகின்றனர். ஆனல், இந்தப் பதவிகள் எல்லாம் ஏற்கனவே ஒருகாலத்து இருந்த பதவிகளின் சாயையேயன்றி வேறல்ல. ஏனெனில், சயதுகளின் காலத்தே மன்னரின் பெருமையும் வல்லமையும் மறைந்தன. அவர்களது வமிசத்தைத் தோற்றுவித்த கிஸிர்கான் என்பவர் துக்ளக்குகளின் பேரில் நாணயங்களை வெளியிட்டார். மொகலாயர்களின் பேரில் குத்பா ஓதப்பட்டது. ரயதே ஆலா (Rayati Ala) என்ற பட்டத்தையும் அவர் தமக்குத் தாமே சூட்டிக்கொண்டார். அதிலிருந்து அவரது ஆற்றலின் அளவு ஒருவாறு நமக்கு விளங்குகிறது. அவர் மைந்தரோவெனின் அவ்வாறெல்லாம் செய்வதை நிறுத்திக்கொண்டார். அதைக்கொண்டு அவரது அந்தஸ்தில் ஏதோ ஒரு கணிசமான மாற்றம் நேர்ந்துவிட்டது என்று நாம் கருதமுடியாது. ஆட்சிக்கு ஆட்சி மன்னரின் அதிகாரமும் பெருமையும் குறைந்துகொண்டே வந்தன. கடைசியாக பஹ்லோல் லோடி, 1451இல் அவர்களின் அரியணையைக் கவர்ந்துகொண்டார்.

வஸீர், திவான், வக்கீல் ஆகியோர்

லோடி அரசர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு உதவியாகப் பல அமைச்சர்கள் இருந்தனர். அவர்களில் உண்மையிலேயே மிகவும் முக்கியமானவர் வஸீர் என்பவரேயாவர். பஹ்லோலின் ஆட்சிக்கால ஆரம்பத்தில் ஹமீத்கான் என்பவர் வஸீராயிருந்தார்[36] சிக்கந்தர் லோடியின் வஸீராயிருந்தவர் மியான் பூரி (Mian Bhury) என்பவராவார்.[37] வருமானம் பற்றிய காரியங்கள் அனைத்திலும், வஸீரே முடிவான அதிகாரம் உடையவராய் விளங்கினர். வருமானத் துறையை வழிநடத்தவும் கட்டுப்படுத்தவும் அவருக்குத் துணையாயிருந்தவர் திவான் எனப்பட்ட அதிகாரியாவர்.[38] கணக்கு வழக்குகளைப்பற்றிய பதிவேடுகள் அனைத்தையும், ஜாகீர்கள், மானியங்கள்பற்றிய பல்வேறு பத்திரங்களையும், வைத்துக் காத்துவந்த அலுவலகத்தின் தலைவராக திவான் விளங்கினர்.[39] வருமானத்தைப்பற்றிய

[35] Ibid., p. 78.

[36] Fersihta, Vol. I, p. 550; Elliot and Dawson, Vol. IV, p. 436.

[37] Ferishta, Vol. I, p. 594.

[38] Elliot and Dawson, Vol. IV, p. 454.

[39] Ibid., p. 448.

வழக்கு அல்லது முறையீடு எதுவாயிருந்தாலும், அவரே உலேமாவின் துணைகொண்டு அதனைத் தீர்த்துவைத்தார். நீதித் துறையின் தலைவராக விளங்கியவர் வக்கீல் எனும் அதிகாரியாவார். அவர் வஸீருக்குக் கீழே, அவருக்கு அடுத்தபடியாக அல்லது ஒருவேளை சமமாக அதிகாரம் செலுத்தி வந்தவராவார். பிரபுக்களில் முதலிடம் வகித்தவரும், மிக வல்லமை பொருந்தியவருமான ஒருவரே அப்பதவியை வகித்தார். சிக்கந்தர் லோடியின் காலத்தே, பிற்காலத்துப் பீஹாரின் ஆளுநராக நியமிக்கப்பட்ட தார்யாகான் லோஹானி (Darya Khan Lohani) என்பார் வக்கீலாகப் பணியாற்றினர். "நாள் முழுவதும், இரவில் முதல் ஜாமம்வரை, இருக்கையில் இருந்து நீதிவழங்க வேண்டுமென"[40] அவருக்குக் கட்டளையிடப்பட்டது. அவர் தம்முடைய கடமைகளை நிறைவேற்றும்போது அவருக்கு உதவியாக ஒரு காஜியும், பன்னிரண்டு உலேமாக்களும் இருந்தனர். அவர்கள் "அரசரின் சொந்த அரண்மனையிலேயே சதாகாலமும் இருந்துகொண்டு பணியாற்றி வந்தனர்."[41] வருமானம்பற்றிய வழக்குகளில் திவானுக்கு உலேமாக்கள் உதவிபுரிந்தனர். சிவில், கிரிமினல் வழக்குகளில், காஜியும் வக்கீலும் அவருக்கு உதவிபுரிந்தனர். மற்றும் மதசம்பந்தமான வழக்குகளையும், கொள்கை துறந்தவர்கள், அல்லது அறநெறி சமயநெறி முதலியவற்றிற் பிசகியவர்கள்பற்றிய வழக்குகளையும் தீர்க்க அவர்கள் திவானுக்குப் பெரிதும் துணையாயிருந்தனர்.

முக்தாரி முட்லக் (Mukhtar-i-Mutlaq), பக்ஷி (Bakshi),* ஹாஜீப் (Hajib) ஆகியோரும் இன்னும் பிறரும்

சிக்கந்தரின் ஆட்சிக்காலத்தே மிகவும் முக்கியமான அதிகாரியாகக் கருதப்பட்ட இன்னும் ஓர் அதிகாரியும் இருந்தார். அவர் முக்தாரி முட்லக் என அழைக்கப்பட்டார். "சிக்கந்தரின் ஆட்சிமுறைபற்றிய விவகாரங்களனைத்தையும் பொதுவாகக் கவனித்துக்கொண்டவர் அவரே. கல்விமான்களுக்கும் சமய விற்பன்னர்களுக்கும் அவரே நிலங்களையும் வேறு பல பரிசுகளையும் தானமாக வழங்கி வந்தார். முன்னைய ஆட்சிகளில் எதிலுமே காணக்கூடாத அளவில் அவரது அதிகாரம் பெருகி இருந்தது."[42] பிரபுக்களுக்குள் அவர் முதலிடம் வகித்தார். மொக

[40] Ibid., p. 454.
[41] Ibid.
[42] Ibid., p. 450.

லாயர்கள் காலத்தில் இருந்த தலைமை சதர் (Sadr) என்பவரோடு அவரை ஒப்பிடலாம். முக்கியமான பிரபுக்களில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தவர் பக்ஷி[43] என்னும் அதிகாரியாவார். போர்வீரர்களின் கணக்கெடுப்பையும் அவர்களின் சம்பளப் பட்டுவாடாவையும் ஒருங்கே அவர் கவனித்துக்கொண்டார். அரசர் படைகளுடன், நாடுகளைத் தாக்கப் புறப்பட்டபோதெல்லாம் பொதுவாக அவர் அரசருடன் செல்வது வழக்கம். அரசருக்கு அண்டையில் இருந்துகொண்டு அவருக்குப் பணி செய்து வந்த பிரபுக்கள் பலர் இருந்தனர். அவர்களுக்கு அரண்மனை முதல்வர்கள் (Hajib) அல்லது மன்னரின் அணுக்கச் சீமான்கள் என்று பெயர். அவர்கள் பிரபுக்களின் மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தவர் ஆவர். சிக்கந்தர் லோடியின் காலத்தே இத்தகைய நிரந்தரப் பிரபுக்கள் நாற்பதுபேரில் ஒன்பதுபேர் அரசரின் அணுக்கச் சீமான்களாக இருந்தனர்.[44] இவர்களைத் தவிர, அரண்மனையின் தலைவர், சடங்குகளின் தலைவர், யானைகளின் காவலர், தபீர் போன்ற வேறுபல அரசர்களும் இருந்திருக்கக் கூடும். ஆனால் இந்தப் பெயர்கள் எல்லாம் குறிக்கப்படவே இல்லை.

லோடி அரசாங்கத்தின் இயல்பு

இராணுவப் பண்பு தலைதூக்கி நின்ற ஓர் அரசாங்கத்தில் சிவில் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்குமென்பது எதிர்பார்க்கக் கூடாததேயாகும். லோடி அரசாங்கத்தின் ஒரு புதுமையான இயல்பு என்னவென்றால், அதிலிருந்த மிக முக்கியமான பிரபுக்கள் யாவரும் மன்னரோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர்களாகவும் முக்கியமான காரியங்களில் அவருக்கு ஆலோசனை கூறுபவராகவும் இருந்ததேயாகும். அமைச்சர்கள் மட்டுமேயன்றி இவர்களும் மன்னரும் சேர்ந்தே நாட்டின் அரசாங்கமென மதிக்கப்பட்டனர். பஹ்லோல் லோடியைச் சுற்றியும் "சிறப்பு வாய்ந்த தலைவர்கள்"[45] என்று கருதப்பட்ட முப்பத்தாறு பேர் இருந்ததாகவும், சிக்கந்தர் லோடியைச்சுற்றியும் அத்தகைய பிரபுக்கள் நாற்பத்துநான்குபேர் இருந்ததாகவும்,[46] ஃபெரிஷ்டா என்பவர் கூறுகிறார். அவர்களில் பலரும் பொதுவாக மன்னரோடு இரத்தத்தொடர்பு கொண்டவர்களாகவோ அல்லது அவரது குலத்தைச் சேர்ந்தவர்களாகவோ இருந்தனர்.

---

[43]Ibid., p. 457.

[44]Ferishta, Vol. I. p. 566.

[45]Ibid., p. 549.

[46]Ibid, p. 564.

பஹ்லோல் காலத்தும் சிக்கந்தர் காலத்தும் லோடிகளும் ஃபார் முலிகளும்தான் முதலிடம் பெற்றனர். அவர்களுக்குத்தான் எல்லாவிதச் சலுகையும் காட்டப்பட்டது. அவர்களுக்கு அடுத்த படியாக லுஹானிகளும், சர்வானிகளும் முக்கியத்துவம் பெற் றிருந்தனர். சூர்களும் நியாசிகளும் (Niyazis) அநேகமாகப் பெரிய பதவிகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஏனெனில், ''முன்னையோர் பேராசை பிடித்தவர்கள் என்றும், பின்னையோர் ஒரு சிறிதும் விசுவாசம் அற்றவர்கள் என்றும்''[47] கருதப்பட்ட னர். உண்மையில் நாட்டை ஆண்டவர்கள் ஒரு சிறு பணக்காரக் குழுவினரேயன்றி வேறல்லர். ஏனெனில், அதில் பங்குகொண் டிருந்த முக்கியப் பிரபுக்கள் அனைவரும் சுல்தானின் கண்ணியத்தை யும் அதிகாரத்தையும் அதோடு நாட்டின் ஒற்றுமையையும் காக்க உதவியதுமல்லாமல் தத்தம் மானியங்களில் தனித்தனிச் சுல்தான் களைப்போன்று இறைமையுடன் அரசாண்டுவந்தனர். இத்தகைய குழுத்தலைவர்களிற் பெரும்பாலோர் அமைச்சர்கள்போன்ற முக்கியமான பதவிகளில் வீற்றிருந்தனர். அதனால் பிற பிரபுக்க ளெல்லாம் புறக்கணிக்கப்பட்டார்களென்பது பொருளல்ல. டாக்டர் திரிபாடி என்பார் கூறுகிறபடி, லோடி அரசுரிமையானது ஒருவிதக் கூட்டுத்தலைமையையே (Hegemony) குறித்தது. மத்திய அரசாங்கமென்பது பிரபுக்களின் தலைவரைக் கலந்து ஆலோசித் துச் செயல்புரியும் அரசரைக் குறித்ததேயன்றி அரசரைமட்டும் தனிப்படக் குறிக்கவில்லை.

லோடிகளின்கீழ்க் காணப்பட்ட நாட்டுப் பகுதிகள்

இத்தகைய ஓர் அரசாங்க அமைப்பில், அதாவது நாட்டின் ஒரு பாதி ஒரு குழுவுக்கும், மறுபாதி ஜாகீர்களாக ஏனை யோர்க்குமாக வழங்கப்பட்டிருந்த ஓர் இராஜ்யத்தில், திட்ட வட்டமான பரப்புகளைக்கொண்ட அரசியல் நிலப்பகுதிகளும், அவற்றை ஆள்வதெற்கெனப் படிப்படியான தரமுடைய அதிகாரி களும் இருப்பரென்பது எதிர்பார்க்கக்கூடாததொன்றேயாகும். ஆனால், அரசாங்கத்தின் பணியை எளிதாக்குதற்காக அத்தகைய அரசியல் அல்லது ஆட்சித்துறை நிலப்பகுதிகளை வகுக்க வேண்டிய அவசியம் ஆப்கானியர்களுக்கு இல்லாமற்போயிற்று. ஏனெனில், ஏற்கெனவே அத்தகைய பிரிவுகள் இந்தியாவில் இருந்ததை அவர்கள் கண்டனர். டில்லி சுல்தானியர்களின் காலத்திலிருந்து அவ்வித நிலப்பிரிவுகள் இருந்துவந்தன. ஆப்கானியர்கள் அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஆகவேதான் நாம்

[47] Tripathi, Some aspects of Muslim administration, p. 85.

லோடிகளின் ஆட்சியின்கீழ்ச் சர்க்கார்கள்[48], பர்காணுக்கள்[49] போன்ற பிரதேசப் பிரிவுகளைப்பற்றியும், ஆளுநர்கள் அல்லது நாயிபுகள்[50] (Naibs) போன்ற அதிகாரிகளைப்பற்றியும் கேள்விப் படுகிறோம். ஆனால், இந் நிலப் பிரிவுகளின் திட்டவட்டமான பரப்பளவு என்ன என்பதைப்பற்றியும், ஆளுநர்கள் அல்லது நாயிபுகளின் கடமைகள் என்ன என்பதுபற்றியும் நாம் திண்ண மாக எதையும் உய்த்துணரக்கூடவில்லை. ஆளுநர்களைப்பற்றி அடிக்கடிக் குறிப்பிடப்படுவதை நாம் காண்கிறோம். லாகூரை ஆண்ட டாடார் கான் லோடி,[51] (Tatar Khan Lody), பயானவை (Bayana) ஆண்டுவந்த கான் ஜஹான் கார்மாலி (Khan Jahan Kar-mali), டில்லியை ஆண்ட காவாஸ் கான் (Khawas Khan), ஆக்ராவை ஆண்ட சப்தர் கான் (Safdar Khan), மீவாட்டைச் சார்ந்த ஆலம் கான் (Alam Khan), ரப்ரியைச் (Rapri) சார்ந்த கான் ஜஹான் லோஹானி(Khan Jahan Lohani)போன்ற பல ஆளுநர்களைப்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம்.[52] ஃபெரிஷ்டாவால் குறிப்பிடப் படுகிற நாற்பத்துநான்கு ''சிறப்புமிக்க அதிகாரிகளுள்'' ஜலால் கான் லோடி என்பார் கல்பி (Kalpi) எனும் பிரதேசத்தின் நாயிப் எனவும், அகமத்கான் லோடி என்பார் எடாவா (Etawa) என்ற பகுதியின் நாயிப் எனவும், ஹுஸேன் கான் ஃபார்முலி என்பார் சஹரான் பிரதேசத்தின் நாயிப் எனவும், டாடார் கான் என்பார் திஜரா (Tijara) எனும் நிலப்பகுதியின் ஆளுநர் எனவும் விவரிக்கப் பட்டுள்ளனர்.[53] நாயிப் என்பார் ஒருவேளை உதவி ஆளுநராக இருந்திருக்கலாமெனவும், எனவே, தரத்தில் ஆளுநர்க்குக் கீழ்ப் பட்டவராகவே அவர் மதிக்கத்தக்கவர் எனவும் ஒருசிலர் கூறு வர்.[54] நாயிப் என்றால் பகர ஆள் (Deputy) என்பது பொருள். இரண்டாம் அத்தியாயத்தில் நாம் விளக்கியுள்ளபடி டில்லி சுல் தானிய அரசின்கீழ், மாநில ஆளுநர்கள் நாயிப் என்ற பட்டத் துடன், அதாவது சுல்தானின் பகராள் என்ற பட்டப் பெயருடன் விளங்கினர். எனவே, நாயிப் என்ற சொல்லானது வெறுமனே பகர ஆள் என்பதைமட்டுமே குறிப்பதாக நாம் சாதிக்க முடியும். பகராள் எனும்போது அஃது அரசரின் பகர ஆளையே குறிக்கும். அரசரின் பகர ஆளாக அல்லது பிரதிநிதியாக விளங்கியவர் ஏதா

[48] Elliot and Dawson, Vol. IV, p. 468.
[49] Ibid., pp. 453, 454.
[50] Ibid., pp. 466, 468.
[51] C. H .I. Vol. III, p. 231.
[52] Ibid., p. 241.
[53] Ibid.. pp. 510, 511.
[54] Ferishta, Vol. I. p. 565 footnote.

வது ஒரு நிலப்பிரிவை ஆண்டுவந்தவராகவே இருந்தார். உண்மையில் சர்க்கார் என்ற நிலப்பிரிவுக்கு அவர்கள் தலைமை பூண்டு விளங்கினர். நாம் பின்னால் பார்க்கப் போகிறபடி, நாயிப் என்ற பட்டப் பெயரானது மொகலாயப் பேரரசின் நலிவுக் காலத்தே திரிந்து நாளடைவில் நவாப் என்று மாறிற்று.

லோடிகளின்கீழ் ஜாகீர்களும் மன்சப்களும்

ஆளுநர்கள், அமைச்சர்கள் அல்லது அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் ஆகிய பலவகையான அதிகாரிகளுள் எவரும் எந்தத் தராதரத்தைச் சேர்ந்தவர், அவர் பெற்றுவந்த ஊதியம் யாது என்பதைப்பற்றி எதையும் திட்டவட்டமாகக் கூறுவதென்பது மிகவும் கடினமாயிருக்கிறது. அநேகமாக ஒவ்வோர் அதிகாரிக்கும் ஒரு ஜாகீர் அல்லது மானியம் வழங்கப் பட்டிருந்தது. ஒருவருக்கும் ரொக்கமாகப் பணம் எதுவும் சம்பளமாக வழங்கப்படவில்லை. கிஸிர் கான் (Khizr Khan) என்பாரது ஆட்சிக் காலத்தில் "அரசாங்க அதிகாரிகள் சுல்தான் மகமதுவின் காலத்தில் பெற்றிருந்த பர்கானாக்கள், கிராமங்கள், இக்தாக்கள் (Iktas) ஆகியவற்றை மீண்டும் பெற்றனர். அவற்றின்மீது அவர்களுக்கு இருந்த உரிமையானது உறுதி செய்யப்பட்டது"[55] என வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார். அதேபோல முபாரக் ஷா என்பார் கிஸிர்கானுக்குப் பின் ஆட்சிக்கு வந்தபோது, அவரால் நியமிக்கப்பட்ட அமீர், மாலிக்குகள், இமாம்கள், சயதுகள், காஜிகள் ஆகிய ஒவ்வொருவருக்கும் அதற்கு முன்பு பெற்றிருந்த இக்தாக்கள் (Iktas), பர்கானாக்கள், கிராமங்கள், (திக் - Dig), சிறு நிலப்பகுதிகள் (காதி - Khati), ஒதுக்கப்பட்ட நிலங்கள் (மஹ்துத் - Mahdud) ஆகியவற்றை மீண்டும் புதிய மன்னரிடமிருந்து அளிக்கப் பெற்றன. அவற்றில் அவர்களுக்கிருந்த உரிமையும் உறுதியாக்கப்பட்டது."[56] என அறிகிறோம். அதோடு அவர் இன்னும் ஒரு படி மேலே சென்று ஏற்கனவே இருந்ததற்கும் கூடுதலான மானியங்களை அதிகாரிகளுக்கு வழங்க முன்வந்தார். இங்ஙனம், ஜாகீர்களைப் பெருவாரியாக வழங்குகின்ற ஒரு வழக்கமானது ஏற்கெனவேயே இந்த நாட்டில் நன்கு நிலைபெற்று இருந்தது. அதைக் கண்ட ஆப்கானியர்கள் அதை அப்படியே ஏற்றுக்கொள்வதொன்றே எளியதும் இலாபகரமானதுமாகும் என்பதை உணர்ந்தனர். எனவே, அவர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில்,

[55] Elliot and Dawson, Vol. IV, p. 47.

[56] Ibid., p. 54.

தங்களுடைய உறவினர்களுக்கு ஏராளமாக ஜாகீர்களை வழங்கினர். மேலும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி சுல்தான் சிக்கந்தர் போன்ற அரசர்கள், தங்களது மதத்துக்குப் புறம்பானவர்களாயிருந்தாலும் அவர்கள் முஸ்லிம் தலைவர்களின் ஆட்சிக்கு உட்பட இசைவார்களானால் அவர்களுக்குங்கூட நிலங்களை மானியமாக வழங்கத் தயங்கவில்லை என்பதை அறிகின்றோம். இங்ஙனம், அதிகாரிகளுக்கு எல்லாம் ஜாகீர்கள் வழங்குகின்ற வழக்கத்தோடும் ''ஒவ்வொரு ஜாகீர்தாரும், தமது நிலத்தில் இம்லாக் (Imlak), வாஜாய்ஃப் இவற்றிலிருந்து வரும் வருமானத்தைத் தவிர ஏனைய வருமானமனைத்தையும் அடைந்துகொள்ளலாம்''[57] என்ற சுல்தான் சிக்கந்தரது கட்டளையோடுங்கூட, மன்சப்களைப்பற்றியும், அவற்றின் படித்தரங்கள் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம். சிக்கந்தர் லோடியைப் பற்றிக் கூறும்போது நியமதுல்லா (MS. p. 95) என்பார் சிக்கந்தர் பட்டமெய்தியபோது பெரியதொரு விருந்து வைத்தாரென்றும், அதில் ஐம்பத்துமூன்று பிரபுக்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு குதிரையும் ஒரு கௌரவ உடையும் பரிசாக வழங்கப்பட்டனவென்றும், அதோடு உயர்ந்த மன்சப் பட்டங்களும் செல்வமிக்க ஜாகீர்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன''[58] என்றும் கூறியுள்ளதாக அறிகிறோம். அகமத் யட்கார் (MS. p. 103) என்பார் ஹஃப்த் ஹஸாரி[59] (Haft - Hazari) யாயிருந்த பிகான் கான் (Bhikan Khan) என்பவரைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். அதிலிருந்து மன்சப்தார்களிடையே, அவர்கள் தலைமை பூண்டு விளங்கிய வீரர்களின் எண்ணிக்கைக்கேற்ப, பல படித்தரங்கள் இருந்தன என்பது தெள்ளிதின் புலப்படுகின்றது. அதாவது, அக்பரின் காலத்தே இருந்த மன்சப்தாரி முறையைப் போன்றதொரு திட்டம் லோடிகள் காலத்திலேயே இருந்திருக்கக் கூடுமென்பது நன்கு தெரிகின்றது. ஆனால், இதுபற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகளும், சான்றுகளும் மிக மிகச் சொற்பமேயாகையால் எதையும் நாம் திட்டவட்டமாகக் கூறுவது என்பது சற்றுக் கடினமாகவே உள்ளது. ஆனால் மன்சப்தாரி முறையானது நம் நாட்டுக்கு முற்றும் புதிதானதொன்றன்று என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும். பஹ்மினிப் பேரரசில் மன்சப்களும், மன்சப்தார்களும் எங்ஙனம் உண்மையிலே இருந்தனர் என்பதையும், மன்சப்தாரி முறையானது எப்படி ஏற்கனவே இந்நாட்டில் வழக்காற்றிலிருந்தது என்பதையும்

[57] Ibid., pp. 447-48.

[58] Ibid., Vol. IV., p. 445 (Makhzani Afghana) footnote-1.

[59] Ibid., p. 472. footnote-1.

நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். இதுபற்றிய கூற்றுக்களை இத்துடன் நிறுத்திக்கொண்டு, ஷெர்ஷா எனும் பெருமைசால் அரசர், புதியதான குறிக்கோள் ஒன்றால் உந்தப்பட்டு எங்ஙனம் தமது அரசாங்க முறையை அமைத்தார் என்பதைப்பற்றி இனி ஆராய்வோமாக.

ஷெர்ஷாவின், அதிகாரம் மையத்தில் செறியப்பெற்ற ஆட்சிமுறை

தாராளமாக ஜாகீர்களை வழங்கியதாலும், பிரபுக்களைத் தனிப்பட்ட சலுகைகளுடன் நடத்தியதாலும், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு சரிவர அமையாததாலும், ஆப்கானியப் பிரபுக்களிடையே பிரிவு மனப்பான்மையே அதிகமாயிற்றன்றி ஒற்றுமை வளரவில்லை என்பதை ஷெர்ஷா பூரணமாக உணர்ந்திருந்தார். அதோடு அத்தகைய மனப்பான்மையைச் சிக்கந்தர் லோடியாலும், இப்ராஹிம் லோடியாலும் முற்றும் ஒழிக்க முடியவில்லை என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். எனவே, அவர் கூடியவரையில் ஜாகீர் முறையை ரத்து செய்ய விரும்பினார். அடுத்தாற்போல் அவர் தம் குடிமக்கள் அனைவரும் காலம், இடம், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு சிறிதும் பாரபட்சமின்றி நடத்தப்பட வேண்டுமென்பதை வற்புறுத்த நினைத்தார். அடுத்து, அவர் அரசாங்கத்தின் அதிகாரங்களனைத்தையும் தம் கைகளிலேயே முற்றும் குவித்துக்கொள்ள விழைந்தார். இந்த மூன்றும்தான் அவரது அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளாயிருந்தன. அவற்றின் துணைகொண்டே அவர் தமது புதிய குறிக்கோளான வரம்பற்ற முடியரசாட்சியை ஏற்படுத்த முடியுமென்றும், அப்படி ஏற்பட்டால்தான் ஆப்கானிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் குறைபாடுகளெல்லாம் களையப் பெறுமெனவும், அரசாட்சி நீடித்து நடைபெறுமென்றும் நம்பினார். அதனாற்றான் "ஷெர்ஷா, நாட்டின் ஆட்சித்துறைபற்றிய ஒவ்வொரு காரியத்தையும் தாமே கவனித்து வந்தார். வருமானத்தைப்பற்றிய விவகாரம் பெரியதாயிருப்பினும், சிறியதாயிருப்பினும் அதைத் தாமே சொந்தப் பொறுப்பில் கவனித்தார்."[60] அவரது குறிக்கோளெல்லாம் அவரே ஒரு சமயம் கூறியபடி, பெரியோர் என்பவர்களெல்லாம் ஓயாது உழைக்கவேண்டும்; என்றும் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்." நாட்டைப் பொறுத்த காரியங்கள் சிறியனவென்றோ அல்லது அற்பமானவை என்றோ அவர்கள் கருதவே

[60] Ibid., Vol. IV, Tarikh-i-Sher Shahi, p. 410.

கூடாது. அமைச்சர்களிடம் அவர்கள் அளவுக்கு மீறிய நம்பிக்கை வைத்துவிடலாகாது. என் காலத்திய இளவரசர்களின் அமைச்சர்களிடம் காணப்படும் ஊழல்களின் துணைகொண்டுதான் நான் இந்த உலகியல் இராஜ்யத்தைப் பெற்றுள்ளேன்.''[61] எனவே தான் ஷெர்ஷா தம் அமைச்சர்களை எல்லாம் வெறும் செயலாளர்களின் நிலையிலேயே வைத்திருந்தார். சொந்தமாகக் கொள்கைகளை வகுக்கவோ, புதிய சீர்திருத்த முறைகளைப் புகுத்தவோ, அவர்களுக்கு ஒரு சிறிதும் சுதந்திரம் அளிக்கப் படவில்லை. அவர்கள் தத்தம் துறைகளைச் சேர்ந்த மாமூலான பணிகளை இயந்திரம்போல் செய்வதற்குமட்டுமே அநுமதிக்கப் பட்டனர். அதன் விளைவாற்றான் வருமானம், சிவில் ஆட்சித் துறைகளைப் பொதுவாகக் கண்காணிப்பதற்கென்று தனியே வஸீர் ஒருவர் அவரால் நியமிக்கப்படவில்லை. திவானைப் பற்றியும் ஏனைய அமைச்சர்களைப்பற்றியும் எதுவும் குறிப்பிடப் படவில்லை. இதிலிருந்து அமைச்சர்கள் என்போர் ஆட்சிமுறையை நடாத்தவென்று இருந்திருக்கலாமெனவும், ஆனால் அவர்களின் பணியானது ஷெர்ஷாவின் பணியோடு ஒப்பிடப்பட்டபோது அவ்வளவு நொய்யதாகத் தோன்றியிருக்கக் கூடுமென்றும், அதனாற்றான் வரலாற்றாசிரியர்கள் அவர்களைப்பற்றிக் கூறுமலேயே விட்டுவிட்டனர் போலும் என்றும் உய்த்துணர்ந்து கொள்ள இடமுண்டு. உண்மையும் அதுவேயாகும். ஷெர்ஷாவின் ஆட்சியை ''ஓர் ஒற்றைமனித ஆட்சி முறை'' என்று கருதலாம். அதிகாரங்கள் யாவும் ஓரிடத்தில் செறியப் பெறவேண்டும் என்பதே அவரது குறிக்கோளாகும். அக் குறிக்கோளை அடைய வேண்டியே அவர் ஆட்சித்துறைபற்றிய சிறு சிறு நுணுக்கங்களையும் கூடிய வரையில் உன்னிப்பாகக் கவனித்தார். அதோடு அரசாங்கத்தின் கொள்கைகளை அல்லது நாட்டின் பரவலான கொள்கைகளையும் அவர் வகுத்தார். ஷெர்ஷா தாமாகவே செய்ய முன்வந்த பல்வேறு வகையான பணிகளைப் பற்றிக் கூற வந்த பேராசிரியர் கானுங்கோ (Prof. Qanungo) என்பார், ''சதர் என்ற அதிகாரியின் கடமைகளை அவரே மேற் கொண்டார். ஃபர்மன்களை அவரே வாய்மூலம் வெளியிடுவார். அவற்றை முன்ஷிகள் அப்படியே குறித்துக் கொடுப்பர். அதன் பின் அவற்றை அவரே பல இடங்களுக்கும் அனுப்பி வைத்தார். சிப்பந்திகளின் உதவியைக் கொண்டே அப் பணியினைச் செய்தார். என்றாலும், பிறநாட்டு அரசவைகளுக்கும் தமது சொந்தப் பிரபுக் களுக்கும் அவர் எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை மிகப் பெரிய தாகும். அதோடு அவரே நிதியமைச்சராகவும் பணியாற்றினார்.

[61] Ibid., p. 411.

ஒவ்வொரு நாள் கணக்கையும் அவர் பரிசோதனை செய்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பொருள் அனைத்தையும் அவர் வாங்கி வரவு வைத்தார்''[62] என்று குறிப்பிடுகின்றார். எனவே, அவரது அமைச்சரவையானது முக்கியத்துவத்தில் குறைந்தது. ஆகவே, ஷெர்ஷா தாமாகவே உண்மையில் என்னென்ன சாதித்தார் என்பதுபற்றி இனி ஆராய்வோம்.

ஆட்சித் துறைபற்றிய ஏற்பாடுகளில் ஷெர்ஷா தாமாகவே சொந்தமாகப் பெரிதாக எதையும் செய்துவிட்டாரென்ற பெருமையை அவருக்கு நாம் தருவது சற்றுக் கடினமே எனினும், ''ஆரம்பகாலத் துருக்கியர்களையும் லோடிகளையும் போன்று ஷெர்ஷாவும், மாநில அமைப்பைப்பற்றி ஒரு திட்டவட்டமான கொள்கையில்லாதவராகவே இருந்தார்''[63] என்று கூறிவிடுவது அவ்வளவு நியாயமானதன்று. டாக்டர் திரிபாடி என்பார் அங்ஙனம் கூறியுள்ளார். அதற்கு அவர் காட்டும் காரணமென்னை எனில், ''ஒரு புறத்தே மாள்வா, பஞ்சாப் போன்ற பெரு மாநிலங்கள் இருக்கையில், மற்றொரு புறம் டில்லி முதல் பீஹார் வரையில் இருந்த பிரதேசமானது பலப்பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.''[64] என்பதாகும். இக் கூற்று முற்றும் உண்மையன்று. உண்மை என்னவெனில், ஷெர்ஷாவின் காலத்துக்கு முன்போ அல்லது பின்போ மாள்வாவும் பஞ்சாபும் அவ்வளவு பெரிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளப்படவில்லை என்பதேயாகும். ஷெர்ஷா மாள்வாவைக் கைப்பற்ற முயன்றபோது, அது சுயேச்சையாக ஆண்டுவந்த நான்கு மன்னர்களிடையே நான்கு பாகமாகப் பிரிந்து கிடந்தது. மல்லு கான் (Mallu Khan) என்பார் மண்டு, உஜ்ஜயினி, சாரங்கபூர், ரன்தம்பூர் ஆகிய இடங்களையும், சிக்கந்தர் கான்மியானு என்பார் செவாஸ், ஹிந்தியா ஆகிய பிரதேசங்களையும், ராஜா பிரதாப் ஷாவின் இடைப் பாதுகாப்பாளராக (Regent) இருந்த பூரன்மால் என்பார் சந்தேரி, ரெய்சின் ஆகிய இடங்களையும், போபால் என்பார் பிஜாகார்ஹ், தம்ஹா ஆகிய பிரதேசங்களையும் ஆண்டு வந்தனர்.[65] ஷெர்ஷா தமது மாள்வா வெற்றிக்குப்பின் உஜ்ஜயினி, மண்டு, சாரங்கபூர், மன்சூர் ஆகிய பிரதேசங்களைச் சுஜாத்கானுக்கும் (Shujaat khan) ரன்தம்பூரைத் தம் சொந்த மகனை அடில் கானுக்கும், செவாஸ், ஹிந்தியா பிரதேசங்களை ஷம்ஸ்கான், பீஹார் கான், மீர் கான் ஆகிய

[62] Qanungo, Sher Shah, p. 360.
[63] Tripathi, Some aspects of Muslim administration, p. 304.
[64] Ibid.,
[65] Elliot and Dawson, Vol. IV. p. 391.

மூவருக்கும், ரெய்சின் கோட்டையை ஷாபாஸ் கான் சர்வானி என்பாருக்குமாகப் பிரித்து வழங்கினர்.[66] எனவே, சுஜாத் கான் என்பார் ஒரு பெரும் ஆளுநர் பதவி வகித்தவர் என்றும், மாள்வா என்ற மாநிலமனைத்தையும் ஆண்டவர் என்றும் கொள்வது தவருகும். அவர் ஆட்சி செலுத்தியதெல்லாம் மண்டு பிரதே சத்தைச் சுற்றியிருந்த ஒரு நாட்டில் மட்டுமேயாகும். ஆனால், அவர் பெரியதொரு படைக்குத் தலைமை வகித்தார். அதற்குக் காரணம் எல்லைப்புறத்தைக் காக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததேயாகும்.

அதே போன்று பஞ்சாபைப் பொறுத்தவரை "ஆஸம் ஹுமாயூன் என்ற பட்டமளிக்கப் பெற்ற ஹய்பத் கான் நியாஸி (Haibat Khan Niazi) என்பார் ரோடாஸ் (Rohtas) கோட்டைக் கருகில் 30,000 படைவீரர்களை வைத்திருந்தார். காஷ்மீர் நாட்டையும், காக்கர்களின் (Gakkars) நாட்டையும் அவர் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார். திபால்பூர் (Dipalpur), முல்தான் ஆகிய பிரதேசங்கள் ஃபதேஜங் கான் (Fateh Jang Khan) என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவர் அக் கோட்டையில் ஏராளமான செல்வத்தைச் சேமித்து வைத்திருந் தார். மில்வாட் (Milwat) கோட்டையில் ஹமீத் கான் ககர் (Hamid Khan Kakar) என்பார் வைக்கப்பட்டிருந்தார். அவர் நாகர் கோட்டை, ஜ்வாலா, திதவால், ஜம்மு குன்றுகள் ஆகிய வற்றை ஆண்டு வந்தார். அவருக்குச் சொந்தமாயிருந்த நாடு களில் எவருமே அவரை எதிர்த்து மூச்சுவிடக்கூடத் துணிவுடைய வர்களாயில்லை. நிலத்தை எல்லாம் நன்கு அளந்த பின்பே அவர் மலைவாழ் மக்களிடமிருந்து வரி வசூலித்தார். சர்ஹிண்ட் என்ற சர்க்கார், மஸ்னத் அலி காவாஸ் கான் (Masnad Ali Khawas Khan) என்பாருக்கு ஜாகீராக வழங்கப்பட்டது. சம்பல் (Sambhal) என்ற சர்க்காரிலிருந்து அதன் குடியானவர்களும், அவர்களின் தலைவனும் நாஸிர் கான் என்பவரின் துன்புறுத்தலுக்கு அஞ்சி நாட்டிலிருந்தே ஓடிவிட்ட காரணத்தால் ஷெர்ஷா அங்கு மஸ்நதி அலி இஸாகன் என்பாரை அனுப்புவித்தார்"[67] இங்ஙனம், பஞ்சாப் பிரதேசமுங்கூடப் பல சிறு பிரிவுகளாகத் துண்டாடப் பட்டு, செல்வாக்குள்ள பல பிரபுக்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தனவென நன்கு அறிகிறோம். ஹய்பத்கான் என்பார் உண்மையில் வடமேற்கு எல்லைப்புறப் பாதுகாவலரேயாவர். பெயரளவில்மட்டுமே அவர் பஞ்சாபின் ஆளுநராயிருந்தார்.

[66]Ibid., pp. 395, 397, 398.
[67]Ibid., Vol. IV, p. 415.

ஃபதே கானும் அவரோடு சேர்ந்து பஞ்சாபை ஆட்சி செய்தார்[68] எனவே, டாக்டர் திரிபாடியின் முடிவை நாம் ஒத்துக்கொள்வதற்கில்லை. பஞ்சாப், மாள்வா என்று தற்கால நிலவியல்படிக் கருதப்படும் நிலப்பரப்புக்குச் சமமான பெரும் மாநிலங்கள் அக் காலத்தே இருந்தன வென்றும். அவை தனிப்பட்ட ஆளுநர் களின் ஆட்சியின்கீழ் இருந்தனவென்றும் நிரூபிக்கத்தக்க சான்றுகள் இல்லை. ஏனெனில், ஷெர்ஷாவின் ஆட்சியில் சர்க்கார் என்பதுதான் மிகப் பெரிய ஆட்சித்துறைப் பகுதியாகும்.[69] அத்தகைய சர்க்கார்களில் குறைந்தது மூன்றுகிலும், அதாவது மாள்வாவிலிருந்த செவாஸ் சர்க்காரும், பஞ்சாபிலிருந்த சம்பல், சர்ஹிண்ட் சர்க்கார்களுமாகிலும்,[70] ஒவ்வொன்றும் தனித்தனி ஆளுநர் அல்லது மன்னரின்கீழ் இருந்தனவென்பது நன்கு தெரிகிறது.

ஷெர்ஷாவின் கீழ் ஆளுநர்ப் பதவிகள்

பஞ்சாபையும் மாள்வாவையும் போன்றே பேரரசின் ஏனைய பகுதிகளும் சர்க்கார்களாகவும் பர்காணுக்களாகவும் ஒருவேளை பிரிக்கப்பட்டிருந்திருக்கக் கூடும். சான்றாக, நாம் டில்லி, லக்னோ, கல்பி, கன்னோஜி ஆகிய சர்க்கார்களைப்பற்றியும், மல்கோன்ஸா (Malkonsah), ஹத்காந்த் (Hatkant), கோலா (Gola), தில்ஹர் (Tilhar) ஆகிய பர்காணுக்களைப்பற்றியும் கேள்விப்படுகிறோம்.[71] ஷெர்ஷாவின் ஆட்சித்துறை ஏற்பாட்டில் ஒவ்வொரு சர்க்காரும் பல அதிகாரிகளின் கண்காணிப்பில் விடப்பட்டிருந்தது. அதைப் போல ஒவ்வொரு பர்காணுவும் பல துணை அதிகாரிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சர்க்காரிலும் ஒரு முக்கிய ஷீக்தாரும் (Shiqdar) ஒரு முக்கிய முன்சீபும் இருந்தனர். ''அமீல்கள் குடிமக்கள் ஆகிய இருவரின் நடவடிக்கைகளையும் அவர்கள் கண்காணித்து வந்தனர். அமீல்கள் மக்களைத் துன்புறுத்தாமலும் அரசருக்குச் சேரவேண்டிய வருமானத்தை மோசடி செய்யாமலும் அவர்கள் பார்த்துக்கொண்டனர். பர்காணுக்களின் எல்லைகளைக் குறித்து அமீல்களிடையே ஏதாவது தகராறு ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைக்கவேண்டியவர்களும் அவர்களே.''[72] பர்காணுக்களில் இருந்து வரவேண்டிய வரித்

[68] Ibid., p. 398.
[69] Ibid., p. 395.
[70] Ibid., p. 415.
[71] Ibid., pp. 415-17.
[72] Ibid., p. 414.

தொகைகளை வசூல் செய்தவர் அமீல் என்ற அதிகாரியாவர். தாங்கள் வசூலித்த தொகைகளைப்பற்றியும் தங்களுக்கு உட்பட்ட வட்டாரங்களின் நிலைமைகுறித்தும் அவர் முக்கிய ஷீக்தார், முக்கிய முன்சீப் ஆகியவர்களுக்கு அவ்வப்போது அறிக்கைகளை அனுப்பிவைத்ததோடு பேரரசருக்கும் நேரடியாக அத்தகைய தகவல்களைத் தெரிவித்துக்கொண்டு வந்தார்.[73]

அமீல்கள், ஷீக்தார்கள், முன்சீபுகள் முதலியோர்

அமீல் பதவியானது மிகமிக இலாபகரமானதும் செல்வாக்குப் பொருந்தியதுமாக இருந்ததாகத் தெரிகிறது. ஷெர்ஷா ஒரு சமயம் அதைப்பற்றிக் குறிப்பிடுகையில், "ஒரு வட்டாரத்தை ஆட்சிபுரிவதில் வருகின்ற வருமானத்தைப் போல வேறு எந்தப் பணியிலும் அவ்வளவு வரும்படியோ நன்மைகளோ கிடைப்ப தில்லை,"[74] என்று கூறுகிறார். அமீல்தாரி என்பது தற்கால இந்திய மாவட்டக் கலெக்டர் பதவிக்கு ஒருவேளை சமமாக இருக்கக்கூடும். இரண்டாண்டுக்கு ஒருமுறை அவர்கள் இடம் விட்டு இடம் மாற்றப்படவேண்டுமென்று ஷெர்ஷா ஒரு விதி வகுத்திருந்தார்.[75] ஒவ்வொரு பர்காணாவிலும் அமீல் என்பவரோடுகூட "ஒரு ஷீக்தாரும் ஒரு முன்சீபும் பொருளாளரும் பாரசீக எழுத்தர் ஒருவரும் ஹிந்து எழுத்தர் ஒருவரும் இருந் தார்கள்." வரி வசூல் செய்வதை ஷீக்தார் கவனித்துக் கொண்டார். அதோடு சட்டத்தை மீறுபவர்களையும், அவர் தண்டித்தார். வரி வசூல் செய்யும்போது ஏற்படுகிற வழக்கு களையும் அவர் தீர்த்து வைத்தார். பொதுவாக, நாட்டில் அமைதி யையும் ஒழுங்கையும் அவர் நிலைநாட்டினார். இங்ஙனம் அவர் தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவசியமான பல போலீஸ் பணிகளைச் செய்துவந்தார். முன்சீப் என்னும் அதிகாரி "எல்லைப் புறங்களிலுள்ள படைக்குதிரைகளின் அடையாளச் சூடுகளைப் பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்." அவருடைய முன்னிலையில்தான், "ஒவ்வொரு மனிதனும் தனது குதிரையை கொண்டுவந்து காட்டி சூடு போட்டுக்கொண்டான். தன்னிடம் உள்ள குதிரைகள் எவ்வளவு என்று ஒவ்வொருவனும் கணக்கு ஒப்பு வித்ததும் அப்போதே ஆகும்."[76] அரசருக்குச் சேரவேண்டிய வரித்தொகைகளை வசூலித்தபின்னர் அமீல் அதைப் பொருளாள

73Ibid., p. 413.
74Ibid,, Vol. IV. p. 416.
75Ibid.
76Ibid., p. 551.

ரிடம் அல்லது ஃபோத்ததாரிடம் (Fotahdar) ஒப்படைத்தார். இரண்டு கர்குன்கள் (Karkuns) பொருளாளருக்கு உதவி செய்தனர். முன்சீப் என்பவர் வரிவசூல் சம்பந்தமான கணக்குகளையும் படையில் சூடு போடப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு போர்வீரனும் கொடுத்த கணக்கையும் குறித்து வைத்துக் காப்பாற்றினர்.

படையில் சூடுபோடுவதை முன்சீபுகள் பரிசோதனை செய்தல்

அப்பாஸ்கான் போன்ற எழுத்தாளர்கள், சர்க்கார்களில் தலைமை முன்சீப் ஒருவர் இருப்பதைப்பற்றிப் பேசுகின்றார்களே ஒழிய, பர்காணுக்களில் இருந்த முன்சீபுகளைப்பற்றி அவர்கள் குறிப்பிடுவது இல்லை. முன்சீபுகள் பலர் இருந்தாலன்றி, தலைமை முன்சீப் என்று ஒருவர் இருப்பது முடியாத காரியம். அப்படி இருப்பதாகக் கூறுவது அபத்தமாகும். ஆனால், பேராசிரியர் கானுங்கோவும், டாக்டர் திரிபாடியும் அப்பாஸ்கானின் கூற்றுக்களை அப்படியே கொஞ்சங்கூடத் தயக்கம் இன்றி ஒப்புக் கொண்டுவிட்டனர். அதனால் மிகப் பெரியக் குழப்பம் ஏற்பட்டு விட்டது என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது அவசியமாகும். இந்தக் குழப்பத்தை வாஹியாதி முஸ்தாகி (Wakiat-i-Mushtaki) என்னும் நூல் நீக்கிவிடுகிறது. "எல்லைப்புற படைக் குதிரைகளின் அடையாளச் சூடுகளைப் பரிசோதிப்பதற்காக முன்சீபுகள் நியமிக்கப்பட்டனர்."[77] என்று அந்நூல் கூறுகிறது. அதே ஆதாரத்தைக் கொண்டு நாம் இன்னொரு செய்தியையும் அறிகின்றோம். எல்லைப்புறங்களில் மட்டுமன்றி நாட்டில் கேந்திரஸ்தானங்கள் எல்லாவற்றிலும் படைகள் இருந்ததாக நமக்கு அதிலிருந்து தெரியவருகிறது. "ஷெர்ஷா, நாட்டின் வடபகுதியில் ஒரு படை வைத்திருந்தார்... வங்காளம், ரோடாஸ் (Rhotas), மாள்வா, சித்தூர்க் கோட்டை, காஜ்வரா (Khajwara) தந்தேரா (Dhandhera) நாகோர், ஜோத்பூர், ரன்தம்பூர், பஜ்வரா (Bajwara) ஆகிய இடங்களில் எல்லாம் படைகள் வைக்கப்பட்டிருந்தன. படைகளோ அல்லது படைத்தலைவரோ இல்லாத கோட்டை ஒன்றும் அவர் காலத்து இல்லை"[78] என்று அந்நூல் குறிப்பிடுகிறது. இங்ஙனம் நாடெங்கும், படைகள் வைக்கப்பட்டிருந்ததாக நமக்கு நன்கு தெரியவருகிறது. எனவே, பர்காணுக்கள் ஒவ்வொன்றிலும் படைகள் இருந்திருக்க வேண்டும்

---

[77] Ibid.

[78] Ibid., Vol, IV p. 551.

அப்படைகளைக் கணக்கெடுக்க முன்சீபுகளும் அப் பர்காணுக்களில் இருந்திருக்க வேண்டும். அதனுற்றுன் பர்காணுக்களில் "குதிரைகள் சூடு போடப்படும் சமயத்தில் ஒவ்வொரு மனிதரும் வந்து தமது குதிரையைக் காட்டி முன்சீபிடம் கணக்கு ஒப்புவித்தார்"[79] என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றுர். வாஹியத்திலிருந்து கிடைக்கின்ற இந்த முக்கியமான செய்தியை டாக்டர் திரிபாடி அநேகமாகக் கவனித்திருக்கமாட்டார் என்று தெரிகிறது. பேராசிரியர் கானுங்கோவும் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அதனுற்றுன், தலைமை முன்சீபின் கடமைகளைப்பற்றி விரிவாக ஆனுல் தவருக என்னென்னவோ சரடு விட்டுள்ள அவர் சாதாரண முன்சீபுகளைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் விட்டுவிட்டார். தமக்குக் கீழ் பணிபுரியும் பல முன்சீபுகள் இல்லாதபோது தலைமை முன்சீப் என்று எப்படி ஒருவர் இருக்கக்கூடுமென்பதை நினைத்துப் பார்க்க அவருக்கு நேரமில்லை. எனவே, அவர் செய்துள்ளது மன்னிக்கமுடியாத மாபெருந் தவறு என்பதில் ஐயமில்லை.[80]

ஷெர்ஷாவின் இராஜ்யத்தில் பர்காணுக்கள்

அதேபோன்று ஷெர்ஷாவின் இராஜ்யத்தில் இருந்த பர்காணுக்களின் எண்ணிக்கையைப்பற்றிக் கூறும்போதும், அப்பாஸ்கான்முதல் ஆசிரியர்கள் பலரும் நமக்குத் தெளிவைவிடக் குழப்பத்தையே அதிகம் விளைவிக்கின்ற முறையிலேயே எழுதிவைத்துள்ளனர். எல்லியட் (Elliot), அப்பாஸ் கான் ஆகியோரின் கூற்றுக்களைப் பேராசிரியர் கானுங்கோ நன்கு ஆராய்ந்தபின், ஷெர்ஷாவின் நாட்டில் 1,13,000 கிராமங்கள் இருந்தன வென்ற முடிவுக்கு வருகிறுர். கிராமங்களைத்தான் அப்பாஸ்கான் தவருகப் பர்காணுக்கள் என்று அழைக்கிறுர் என்பது அவரது முடிபாகும்.[81] பேராசிரியர் கானுங்கோவின் இந்த முடிபினை டாக்டர் திரிபாடி என்பார் சுத்த முட்டாள்தனமானது எனக் கண்டிருக்கிறுர். அவர் கண்டிப்பது சரியேயாகும். ஏனெனில், கானுங்கோவின் கூற்று உண்மை எனக் கொள்வோமானுல், 1,13,000 கிராமங்களை நிர்வகிக்க 5,65,000 அதிகாரிகளும், 2,26,000 துணை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.[82] இது சற்றும் பொருந்தாக் கூற்று

---

[79] Ibid.

[80] Qanungo, Sher Shah, p. 356.

[81] Ibid., p. 351.

[82] Tripathi, Some aspects of Muslim Administration, p. 352.

என்பதில் ஐயமில்லை. இதைவிட வஹியதி முஷ்டகி (Wakiat-i-mushtaki) எனும் நூலில் கூறப்பட்டுள்ளது அதிக நியாயமானதாக இருக்கும்போல் தெரிகிறது. அதில் ஷெர்ஷாவுக்குட்பட்ட ''பிரதேசங்களில் எல்லாவற்றிலும் சேர்த்து மொத்தம் 13,000 பர்காணுக்கள்''[83] இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த எண்ணிக்கை தோராயமாகச் சரியானது என்று கொள்வோமானால், பர்காணுக்களை ஆட்சி புரிய 65,000 அதிகாரிகள் இருந்தார்கள் என்பதை நாம் வலியுறுத்த முடியும். ஷெர்ஷாவின் ஆட்சிச் சக்கரத்தின் அச்சு பர்காணு ஆட்சியேயன்றி வேறன்று. ஏனெனில், பர்காணுக்களுக்குக் கீழே கிராமங்கள்தாம் இருந்தன. ஒவ்வொரு கிராமத்துக்கும் இரண்டு சாதாரண அதிகாரிகள் இருந்தனர். அவர் முக்கதம் (Muqaddam), பட்வாரி (Patwari) என அழைக்கப்பட்டனர். பர்காணுக்களுக்கு மேலே சர்க்கார்கள் இருந்தன. அவற்றை ஆள ஷிக்தாரே ஷிக்தாரான் (Shiqatara-i-Shiqataran), முன்சிஃபே முன்சிஃபான் (Munsif-i- Munsifan) என்ற இரண்டு உயர் அதிகாரிகள் இருந்தனர். ஆனால், சர்க்கார்கள் அல்லது பர்காணுக்களில் பணிபுரிந்த அதிகாரிகள் இவர்கள்மட்டுந் தான் என்று கருதுவது தவறாகும்.

சர்க்கார், பர்காணு ஆகியவற்றின் ஆட்சித்துறை அமைப்பு

மேற்சொன்ன அதிகாரிகளோடு, அமீர், ஃபௌஜ்தார் என்போர் சர்க்காரிலும், கானுங்கோ என்பார் பர்காணுவிலும் பணிபுரிந்து வந்ததாகக் கேள்விப்படுகிறோம். சான்றாக, ஷெர்ஷாவினால் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட வங்காளமானது காஜி ஃபஜிலத் (Qazi Fazilat) என்ற அமீரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. ''இராஜ்யம் முழுவதுக்கும் அமீர்''[84] என அவர் அழைக்கப்பட்டார். அதேபோல் டில்லி சர்க்காரில் மியான் அகமது கான் சர்வானி என்பார் அமீராகவும், ''அடில்கான் என்பார் ஷிக்தாராகவும், ஹதீம்கான் என்பார் ஃபௌஜ் தாராகவும்''[85] பணியாற்றினர் என அறிகிறோம். ஷிக்தார், அமீர் ஆகிய அதிகாரிகளோடு ஃபௌஜ்தார் என்பாரும் குறிப்பிடப்படுவதைப் பார்க்கும்போது ஷிக்தார் என்பார் சிவில் சம்பந்தமான பணிகளையும், ஃபௌஜ்தார் இராணுவ சம்பந்தமான காரியங்களையும் கவனித்து வந்திருக்கவேண்டு

[83]Elliot and Dawson, Vol. IV, p. 551.
[84]Ibid., Vol. IV, p. 417.
[85]Ibid., p. 415.

மென்று ஊகிக்கலாம். சர்க்காரின் தலைநகரில் வைக்கப்பட்டிருந்த படைப் பகுதிகளின் தளகர்த்தராக ஃபௌஜ்தார் விளங்கியிருக்கக் கூடும். தலைமை ஷிக்தார் என்பவர் அமீல்கள், குடிமக்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல், மக்களை அமீன்களின் கொடுங்கோன்மையினின்றும் பாதுகாத்தல், அரசருக்குச் சேரவேண்டிய வருமானத்தை அமீல்கள் அபகரிக்காமல் பார்த்துக்கொள்ளல், எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைத்தல், சட்டத்தை மீறிய நடவடிக்கைகளைத் தடுத்தல் முதலிய போலீஸ் பணிகளைப் பொதுவாகச் செய்துவந்திருக்கக் கூடும். அமீர் என்பவர் சர்க்காரின் ஆளுநராகப் பணியாற்றினார். சர்க்காரில் வேலைபார்த்த எல்லா அதிகாரிகளும் அவரது ஆணைக்குட்பட்டே நடந்தனர். பொதுவான முறையில், அவர் எல்லா அதிகாரிகளின்மீதும் தமது கட்டுப்பாட்டைச் செலுத்தினார். சர்க்காரின் நல்லரசாங்கத்துக்கும், வளத்துக்கும் அவரே இறுதிப் பொறுப்பு வாய்ந்தவராயிருந்தார். டில்லி சர்க்காரை ஆண்டுவந்த அகமத்கான் சர்வானியும், சம்பல் சர்க்காரின் பொறுப்பை மேற்கொண்டிருந்த இசாகான் சர்வானி (Isakhan Sarwani)யும் தங்களது ஆட்சியை மிகத் திறம்பட நடத்தியதைக் கண்டு உளம் பூரித்த ஷெர்கான் ஒரு சமயம், ''டில்லி சர்க்கார் முதல் லக்னோ சர்க்கார் வரை எனக்குக் கவலைப்பட வேண்டியது ஒன்றுமில்லை''[86] எனப் புகன்றார். இங்ஙனம் அவர் அகமத்கான் சர்வானியைமட்டும் குறிப்பாகப் புகழ்ந்துவிட்டு, ஷிக்தாராயிருந்த அடில்கானையும், ஃபௌஜ்தாராயிருந்த ஹதிம் கானையும்பற்றி ஒன்றும் கூறாது விட்டு விட்டதைக் கொண்டு, அமீர்ப் பதவியின் பூரண முக்கியத்துவமும் நன்கு வெளிப்படுகிறது. தமது வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் சுஜாத்கான் என்பார் பீஹார், ரோடாஸ் ஆகிய பிரதேசங்களின் ஃபௌஜ்தாராக இருந்தார்.[87] சுஜாத்கான் பதவியினின்றும் நீக்கப்பட்டு மானம் அழிவுற்றபோது, ஹாஜிகான் (Haji Khan) ஜுனைத்கான் (Junaid Khan) ஆகியோர் மண்டு, உஜ்ஜயினி, சாரங்கபூர் ஆகிய இடங்களைக் கொண்ட பிரதேசத்தின் ஃபௌஜ்தார்களாகச் சிலகாலம் பணியாற்றினார்.[88] இந்த ஹாஜிகான் என்பார் பிற்காலத்தே ''12,000 குதிரைகளுக்குத் தளகர்த்தராக'' விளங்கினார். இதிலிருந்து ஃபௌஜ்தாரின் உண்மையான நிலைமையானது நன்கு புலப்படுத்தப்படுகிறது. அவர் உண்மையிலேயே அமீர் அல்லது சர்க்காரின் ஆளுநர்க்குச் சகபாடியாக

[86] Ibid., p. 416.
[87] Ibid., Vol. IV, p. 382.
[88] Ibid,, p. 395.

இருந்து பணியாற்றி வந்தார். ஆனால், அந்தஸ்தில் அவர் அமீருக்குச் சற்றுத் தாழ்ந்தவராகக் கருதப்பட்டார். குதிரைகள் சூடு போடப்பட்டதைக் கண்காணித்து வந்த தலைமை முன்சீப், ஃபௌஜ்தாரின் சக அதிகாரிகளுள் முக்கியமானவராயிருந்தார்.

சர்க்காரிலும் பர்கானாவிலும் ஜீவனுள்ள ஒரே சீரான ஆட்சித்துறை நிறுவப்பெறல்

பர்கானாவில், கானுங்கோ என்ற ஓர் அதிகாரி ஷெர்ஷாவின் காலத்துக்கு நெடுநாளைக்கு முன்பிருந்தே ஆட்சி செலுத்தி வந்தார். ஆனால், ஷெர்ஷாவின் காலத்தே அவரது முக்கியத்துவம் பெரிதும் குறைந்தது. ''அவருடைய காலத்துக்கு முன், நிலங்களை அளக்கின்ற வழக்கம் இல்லை. ஆனால், ஒவ்வொரு பர்கானாவிலும் ஒரு கானுங்கோ இருந்துவந்தார். பர்கானாவின் கடந்தகால நிலை எப்படி இருந்தது, தற்கால நிலை என்ன, எதிர் கால நிலை எப்படியிருக்கும் என்பவற்றை எல்லாம் அரசர் அவரிடமிருந்தே தெரிந்துகொண்டார்.''[89] எனவே, நிலவரியைத் திட்டம் செய்வதற்காக நிலங்களை அளக்கவேண்டுமென ஷெர்ஷா தீர்மானித்தபோது அத்தகையோரின் முக்கியத்துவமானது பெரிதும் குறைந்தது. குடியானவர்களோடு நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களிடம் நேரில் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள ஷெர்ஷா விரும்பினார். ஆனால் இடையில் வருகின்ற தரகர்கள் முற்றும் இல்லாமல் அவரால் ஆட்சி புரியவும் முடியவில்லை. வரி வசூல் செய்வதற்காக அவர் முக்கதங்களின் (Muquaddams) உதவியை நாடவேண்டியிருந்தது. ஏனெனில், ''ஒவ்வோர் அறுவடையின்போதும் நிலத்தை அளக்க வேண்டுமென்றும், அந்த அளவுக்கு ஏற்பவும் விளைச்சலுக்கு ஏற்பவுமே வரிகளை வசூலிக்க வேண்டுமென்றும், அவர் ஆளுநர்களுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தபோதுங்கூட'' முக்கதத்துக்கு அதில் பாதி பங்கைக் கொடுத்துவிட வேண்டுமெனவும் அவர் ஆணையிட வேண்டியிருந்தது.[90]

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து, ஷெர்ஷா பெரும் பெரும் மாநிலங்களை அமைக்கவில்லை என்ற முடிவுக்கு நாம் வரக்கூடும். அதோடு சர்க்கார்களே நாட்டின் மிகப் பெரிய ஆட்சித் துறைப் பகுதிகள் என்பதையும், அவை எல்லாம் அவராலேயே பல தரமாகப் பிரிக்கப்பட்ட அவருடைய சொந்த அதிகாரிகளாலேயே

[89] Ibid., p. 414.
[90] Ibid., Tarikh-i-Sher Shahi, p. 413.

நேரடியாக ஆளப்பட்டன என்பதையும், கிராமங்களெல்லாம் ஓரளவு மட்டுமே அதிகாரிகளாயிருந்த (Semi Official) நபர்களைக் கொண்டு ஆளப்பட்டன என்பதையும் நாம் அவற்றிலிருந்து நன்கு அறியலாம். சர்க்காரில் இருந்த அதிகாரிகள், அதாவது தலைமை ஷிக்தார், தலைமை முன்சீப், ஃபௌஜ்தார் ஆகிய மூவரும் சமமான அதிகாரமுள்ளவர்களா யிருந்தனர். அமீர் அல்லது ஆளுநர்க்குமட்டுமே அவர்கள் கட்டுப்பட்டவர்கள். சர்க்கார் நல்ல முறையில் அரசாளப் பெறுதற்கு அமீர் என்பார் அரசருக்கே நேரடியான பொறுப்பு வாய்ந்தவராயிருந்தார். தலைமை முன்சீப் என்பார் பர்காணுவின் முன்சீபுகளின் பணிகளை யும், தலைமை ஷிக்தார் என்பார் பர்காணுவின் ஷிக்தார்களின் அலுவல்களையும் கண்காணித்து வந்தார். இவ்விருவரும் அமீல் களுடன்கூட, நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, பேரரசரிடம் நேரடியான தொடர்பு கொண்டிருந்தனர். முன்சீபின் பணிகளைச் சில சமயங்களில் பேரரசரே கண்காணித்தார். ''அதற்காக அவ் வப்போது அவர் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று வருவது வழக்கம்.''[31] ஃபௌஜ்தார் என்பார், பெயரளவில் அமீருக்கு உட்பட்டவராயிருந்தபோதும், உண்மையில் அரசருக்கே கட்டுப் பட்டவரா்யிருந்தார். அதாவது, சர்க்காரிலுள்ள தலைமை முன்சீபால் அவர் தமது ஆட்சிப் பகுதிக்குள் நியமிக்கப்பெற்றிருந் ததாலும் அவருடைய உதவியை எதிர்பார்த்து இருந்ததாலும் அவர் தலைமை முன்சீபுமுன் அவ்வப்போது சூடு போடப்பட்ட குதிரைகளைக் கொணர்ந்து நிறுத்திக் கணக்கு ஒப்புவித்தல் அவரது கடமையாய் இருந்தது. அதேபோல பர்காணுவில் ஷிக்தார்களும், அமீல்களும் இதர அதிகாரிகளும் முன்சீபுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டி இருந்தது. இங்ஙனம், ஷெர்ஷா சர்க்காரிலும் பர்காணு விலும் அமர்த்தப்பட்டிருந்த அதிகாரிகளின்மீது ஒருவித இரட்டைக் கட்டுப்பாட்டைச் சுமத்தினார். அதே சமயம் ஆட்சித் துறை நிறுவனத்தை அமைத்தபோது தடைசெய்து சமப்படுத்தும் கொள்கையைக் (Principle of checks and balances) கடைப்பிடித் தார். சர்க்காரில் இருந்த அதிகாரிகள் ஒவ்வொருவரும் தத்தம் வட்டாரத்தின் அதிகாரியான அமீலுக்குக் கட்டுப்பட்டவராக இருந்தபோதும் நேரிடையாக அவர்கள் அரசருக்கும் பொறுப்பு வாய்ந்தவராக இருந்தனர். அவர்கள் மேற்பார்வை இடும் அதிகாரிகளாய் இருந்தபோதுங்கூட அரசரே பர்காணுவுக்கு நேரில் சென்று அமீல், முன்சீப் போன்றவர்களின் பணியைக் கண்காணித்து வந்தார். மேலும், பேரரசர்களிடம் அவர்களுக்கு நேரிடையான தொடர்பு இருந்த காரணத்தால் அவர்கள்

[31] Ibid., Vol, IV, Wakiat-i-Mushtaki, p. 551.

ஒவ்வொருவரும் ஒரே பணியில் ஈடுபட்ட சம அதிகாரிகளாக விளங்கினர். ஒருவருக்கொருவர் தடையாகவும் அவர்கள் இருந்தனர். ஷெர்ஷா இங்ஙனம் தமது ஆட்சிமுறைத் திட்டத்தில் ஒரு சீர்மையை நிலைநாட்டினர். அதிலே அவர் தமது சொந்தமான திறமையைப் பெரிதும் காட்டினர். வெவ்வேறு கூறுபாடுகளையும் அவர் ஒருங்கே பிணைத்து, இதன்மூலம் ஒருமைப்பாடும் ஜீவனும் கொண்ட ஓர் ஆட்சித் துறையை நிறுவினர். சீரழிந்து கிடந்த ஓர் ஆட்சித்துறை நிறுவனத்தின் உடைந்த பொருள்களின்மீது அவர் ஜீவனுள்ள ஒருமை வாய்ந்த ஓர் ஆட்சித்துறை முறையை நிறுவினர் எனலாம். இஸ்லாம் ஷா தம் தந்தையின் கொள்கையை அடி பிறழாது பின்பற்றினர். தந்தையின் ஆட்சிமுறை அமைப்பில் அவர் இம்மியளவும் மாறுதலை ஏற்படுத்தவில்லை.

''ஷெர்ஷா இஸ்லாம் ஷா ஆகியோரின் காலங்களில் முக்கதம்கள் எனப்படுவோர் அவருடைய சொந்தக் கிராமங்களின் எல்லைகளைப் பாதுகாத்து வந்தனர்.''[92] ''ஷெர்ஷா என்பார் கிராமங்களில் நடைபெறும் திருட்டுகளுக்கும் அல்லது கொள்ளைகளுக்கும் அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்த முக்கதம்களே பொறுப்பானவர்கள் என்று வற்புறுத்தினர். ஓர் இடத்தில் ஒரு திருட்டோ, கொள்ளையோ நடந்துவிட்டால் அந்த இடத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள முக்கதம்களைப் பிடித்துச் சிறை செய்து திருட்டுப்போன பொருள்களுக்கு ஈடு செய்ய வேண்டுமென அவர்களைப் பலவந்தப்படுத்த வேண்டுமென ஷெர்ஷா அமீர்களுக்கும் (வரி வசூலிப்பவர்கள்), ஆளுநர்களுக்கும் கண்டிப்பான கட்டளைகளைப் பிறப்பித்தார்.''[93] இதிலிருந்து கிராமங்களின் அமைதிக்கும் ஒழுங்குக்கும் முக்கதம்கள்தான் பொறுப்பானவர்களாகக் கருதப்பட்டது என்று நன்கு தெரிய வருகிறது. நல்ல அரசாங்கத்தை நாட்டில் ஏற்படுத்த அவர் பெருவாரியாகப் பாதைகளை அமைத்தார். கௌர் (Gaur) பிரதேசத்திலிருந்து அயோத்திவரை ஒன்றும், பனுரஸிலிருந்து பர்கான்பூர் வரை இன்னொன்றும், ஆக்ராவிலிருந்து ஜோத்பூர் வரை இன்னொன்றும், பயானுவிலிருந்து ஆஜ்மீர் ஜான்பூர் வரை இன்னொன்றுமாக நான்கு பாதைகளை அவர் அமைத்தார். இந்தப் பாதைகள் படைத் துருப்புகள் ஓரிடத்திலிருந்து இன்னும் ஓர் இடத்துக்குச் செல்ல வழி செய்தன. அதனுல் நாட்டின் இராணுவத் தேவைகள் உண்மையில் பூரணமாக்கப்பட்டன. அதோடு நாட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் அரசரின்

---

[92] Ibid., 421.

[93] Ibid., Vol. IV, p. 420.

கண்காணிப்பில் வந்தன. அதன்மூலம் குற்றங்களைக் கண்டு பிடிப்பதும் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதும் எளிமையாயின.

மன்சப்தாரி ஜாகீர் முறைகள்

ஷெர்ஷாவின் ஆட்சி முறையில் புத்தம் புதிய அம்சங்கள் ஒன்றுமில்லை. ஆனால் கட்டுப்பாடு, திறமை ஆகியவற்றை அவர் கண்டிப்பாக ஆட்சி முறையில் புகுத்தினார் என்பதில் ஐயமில்லை. அரசாங்கத்திட்டம் முழுவதையுமே அவர் இராணுவ அடிப்படையில் அமைத்திருந்தார் எனத் தெரிகிறது. ஒவ்வோர் அரசாங்க ஊழியனும் ஒவ்வொரு மன்சப் அல்லது இராணுவப் பதவியைக் கொண்டிருந்தான். அதற்கேற்பவே அவனது ஊதியம் வழங்கப் பட்டது. இந்த மன்சப்களில் பல படித்தரங்கள் வகுக்கப்பட்டிருந்தன. ஒரு சமயம் ஹஜிகான் என்பாரது விசுவாசத்தையும் திறமையையும் பாராட்டி அவர் அப் பிரபுவுக்கு ''12,000 குதிரைகட்குத் தளபதி''[94] என்ற பட்டத்தை வழங்கினார். சம்பல் சர்க்காரை ஆண்டுவந்த இசாகான் என்பார், ''ஐயாயிரம் குதிரைகளை வைத்துப் பராமரிக்க வேண்டும்''[95] என ஷெர்ஷா கட்டளையிட்டார். சுஜாத் கான் பத்தாயிரம் குதிரைப்படையினர்க்கு அதிபதி என்று அழைக்கப்பட்டார்.[96] அந்தப்புரத்தில் பணிபுரிந்து வந்தவர்கள்கூட இராணுவப் பதவிகளை ஏற்கவேண்டுமெனவும், அவரவர்க்குரிய குதிரை சூடு போடப்பட்டதாக நிரூபித்த பின்னரே அவர்கள் தங்களது ஊதியத்தைப் பெற வேண்டுமென்றும் அவர் ஓர் ஆணையை வெளியிட்டார்.[97] இங்ஙனம் நியமிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் அவர் ரொக்கமாக ஊதியம் வழங்கினாரென்பதை நிலைநாட்ட முடியாது. ஏனெனில், பேரதிகாரிகளுக்கும், சிற்றதிகாரிகளுக்கும் ஜாகீர்கள் வழங்கப்பட்டன என்பதற்கு நமக்கு நிறையச் சான்றுகள் கிடைத்துள்ளன. இசாகான் என்பாரைச் சம்பல் பிரதேசத்தின் ஆளுநராக அவர் நியமித்தபோது, ''உம்முடைய குடும்பத்துக்காகவும், பழைய குதிரை வீரர்களுக்காகவும் நாம் உமக்குக் கேண்ட் (Kant), கோலா (Gola), தில்ஹர் (Tilhar) ஆகிய பர்காணுக்களை மானியமாக வழங்குகிறோம்''[98] எனக் கூறியதாகச் சொல்லப்படுகிறது. சுஜாத் கானுக்கு ''உஜ்ஜயினி, மண்டு,

[94] Ibid., p. 396.
[95] Ibid., p. 426.
[96] Ibid., p. 426.
[97] Ibid., p. 412, Footnote 1.
[98] Ibid., Vol. IV, p. 415.

சாரங்கபூர், மன்சூர் ஆகிய இடங்கள் ஜாகீர்களாக வழங்கப் பட்டிருந்தன''[99] சாதாரணப் போர்வீரர்களுக்குக்கூட ஜாகீர்கள் வழங்கப்பட்டன.[100] சுஜாத்கான் என்பார் எங்ஙனம் ஒரு சமயம் தம் அமைச்சர்களின் பேச்சைக் கேட்டுத் தம் போர்வீரர் களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த ஜாகீர்களைத் தமக்கே என எடுத்துக்கொண்டதன்மூலம் துயரமடையவேண்டிய நிலை ஏற் பட்டது என்பதைப்பற்றி நாம் கேள்விப்படுகிறோம். பல சமயங் களில் மன்சப்தார்களுக்கு மாதச் சம்பளங்கள் வழங்கப்பட்டன.[101] படைகள் திறமையுடன் விளங்க வேண்டுமென்பதற்காக அவர் குதிரைகளுக்குச் சூடு போடும் வழக்கத்தைப் புகுத்தினார். மன்சப் தார்கள் தங்கள் குதிரைகளின்மீது அடையாளம் பொறிக்க வேண்டுமென்பதை அவர் வற்புறுத்தினார். ''அந்தப்புரத்தில் இருந்தவர்கள்கூடத் தங்கள் குதிரைகளுக்குச் சூடு போடுமாறு வற்புறுத்தப்பட்டனர். அங்ஙனம், சூடு போட்டவர்களுக்கு மட்டுமே சம்பளம் வழங்கப்பட்டது. எனவே, வீதி பெருக்குபவன் கூடத் தன் குதிரைகளின்மீது அடையாள முத்திரையைப் பொறித்தான்''[102] ஒவ்வோர் அதிகாரிபற்றியும் அவர் வைத் திருந்த குதிரைகள்பற்றியும் விளக்கப் பட்டியல் (Descriptive Rolls) ஒன்று தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. அத்தகைய விளக்கப்பட்டியல் தயாரிக்கப்படுவதை ஷெர்ஷா கட்டாயமாக்கி, நடைமுறையில் கொண்டு செலுத்தினார். இந்தச் செய்திகளி லிருந்து நாம் அறியக் கிடக்கும் உண்மை எதுவெனில், அதிகாரிகள் எனப்படுவோர் அனைவரும், அவர்கள் அரண்மனையில் வேலை பார்ப்பவர்களாயினும், அல்லது இராஜ்யத்தின் வெவ்வேறு பாகங்களில் தொழில் புரிபவர்களாயினும் வெவ்வேறு இராணுவப் பதவிகளை வகித்து வந்தனர் என்பதேயாம். பேரர சின் எல்லைப்புறங்களில் அல்லது தூரப் பிரதேசங்களில் நியமிக்கப்பட்டிருந்த அரசாங்க அதிகாரிகள்கூட, அவர்கள் அமீர்களாயிருப்பினும், ஃபர்டுகள் (Fards - தனிப்பட்டவர்கள்) அல்லது கிரோதார்களாயிருப்பினும் (Girodars - அதிகாரிகள்) ஜாகீர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இஸ்லாம் ஷா என்பார் ''தமது ஆட்சிக்குட்பட்டிருந்த மாநிலங்களில் இருந்த ஜாகீர் களனைத்தையும் பறிமுதல் செய்து, ஜாகீர்களைக் கொண்டிருந்த வர்களுக்குத் தமது கருவூலத்திலிருந்து ரொக்கப் பணத்தை ஊதியமாக வழங்கினார்'' என்று சொல்லப்பட்டபோதிலும்,

[99] Ibid., p. 396.

[100] Ibid., p. 425.

[101] Ibid., p. 413.

[102] Ibid., p. 412. Footnote: Wakiati Mushtaki, M.S., p. 99.

''ஷெர்ஷாவின் காலத்தே ரொக்கமாக ஊதியம் பெற்றுவந்த அனைவர்க்கும் அவர் நிலத்தையும் பர்காணுக்களையும் ஜாகீராக வழங்கினார்''[103] என்றும், வஹியத் என்ற நூலின் ஆசிரியர்மூலம் கேள்விப்படுகிறோம். இவை அனைத்திலிருந்தும் நமக்கு இயல்பாகவே தெரிகின்ற உண்மை யாதெனில், ஷெர்ஷாவின் காலத்தும் இஸ்லாம் ஷாவின் காலத்தும் ஜாகீர் முறையானது நடைமுறையில் இருந்துவந்தது என்பதேயாகும். அரசரிடமிருந்து மன்சப்களைப் பெற்றிருந்த அரசாங்க அதிகாரிகள் அனைவரும், தத்தம் பதவியின் படித்தரத்துக்கேற்பக் குதிரைகளை வைத்திருக்கிறார்களா என்பதையும், அவற்றிற்குச் சூடு போட்டுச் சரிவரத் தீனி வைத்துப் பராமரிக்கிறார்களா என்பதையும், தம் ஜாகீர்களுக்குரிய கணக்கு வழக்குகளைச் சரிவர ஒப்புவிக்கிறார்களா என்பதையும் கண்காணிக்கப் பர்காணுக்களில் முன்சீபுகளும், சர்க்கார்களில் தலைமை முன்சீபுகளும் நியமிக்கப்பட்டார்கள். அமீர்கள், ஃபௌஜ்தார்கள் முதல் மிகக் கீழான அதிகாரிவரை ஒவ்வொருவரும் வைத்திருந்த குதிரைகளையும், போர்வீரர்களையும் பரிசோதிக்க வேண்டுவது முன்சீபுகளின் கடமையாகும். இங்ஙனம், மன்சப்தார்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதென்பது நன்கு தடுக்கப்பட்டது. மன்சப்தார்களின் பொறுப்பின்மைக்கு ஒரு தடையாயிருந்ததுபோலவே, முன்சீபுகள் படைகளில் கட்டுப்பாடும் திறமையும் ஓங்குவதற்கொரு கருவியாயிருந்தனர். பேரரசர் அவ்வப்போது தாமே பல இடங்களுக்கும் சென்று பரிசோதனை நடத்தியதன்மூலம் முன்சீபுகளின் பணி பெரிதும் எளிதாக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இராணுவத் தன்மை

ஷெர்ஷாவின் காலத்தே சேனைகள் நாட்டின் பல பாகங்களிலும் வைக்கப்பட்டிருந்தன. நாடு பிடிக்க வந்த ஒரு படையின் கீழ் நாடு முழுவதுமே இருப்பதுபோல் ஒரு காட்சி தென்பட்டது. அதிலிருந்து அவரது ஆட்சி முறையானது எவ்வளவு தூரம் இராணுவப் பண்புடன் விளங்கியதென்பது நமக்குத் தெள்ளிதின் புலப்படுகிறது. நாடெங்கும் படைகள் மிக விழிப்பாக ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன. எல்லைப்புறங்களிலும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் மிகவும் வலிமையுள்ள படைகளை வைப்பதில் அவர் மிகமிக விழிப்போடு கவனம் செலுத்தினார். ஹய்பத்கான் நியாஜி (Haibat Khan Niazi) என்பார் 30,000 வீரர்கள் கொண்ட படையுடன் கக்கர் (Gakkar) பிரதே

[103] Ibid., pp. 479-80.

சத்தையும், காபூல் பாதையையும் கண்காணித்து வந்தார். ஃபதே ஜங் (Fateh Jung) என்பார் திபல்பூரிலும் முல்தானிலும் இருந்துகொண்டு வட சிந்துவையும், காந்தஹார்ப் பாதையையும் பாதுகாத்து வந்தார். ஹமீத் கான் (Hamid Khan) என்பார் மில் வாட் (Milwat) கோட்டையிலிருந்துகொண்டு நாகர் கோட்டையைச் சுற்றியிருந்த பிரதேசம், ஜம்மு குன்றுகள், காஷ்மீர்ப் பாதை முதலியவற்றைப் பாதுகாத்து வந்தார். காவாஸ் கானும், இசாகான் நியாஜியும் ஜோத்பூர், ஆஜ்மீர், நாகோர் ஆகிய இடங்களிலிருந்து இராஜபுதனத்தை அடக்கி ஆண்டனர். சுஜாத் கான் என்பார் 10,000 குதிரை வீரர்களையும், 7,000 துப்பாக்கி வீரர்களையும் கொண்டு மாள்வாவைக் கட்டியாண்டார். இத்தகைய முக்கியப் படைப் பகுதிகளோடு இன்னும் பல சிறிய படைப் பகுதிகளும் இருந்தன. குவாலியரில் 1,000 துப்பாக்கி வீரர்களைக் கொண்ட படை ஒன்றும், பியானாவில் 500 துப்பாக்கி வீரர்களைக் கொண்ட படையொன்றும், ரான்தம்பூரில் ஒரு குதிரைப் படைப் பகுதியும், 1,600 பேர் கொண்ட துப்பாக்கிப் படையும், சித்தூரில் 3,000 பேர் கொண்ட துப்பாக்கிப் படையும், சூனரில் 1,000 வீரர்கள் அடங்கிய துப்பாக்கிப் படையும் ஒரு குதிரைப் படைப் பகுதியும், ரோட்டாஸில் 10,000 வீரர்கள் கொண்ட துப்பாக்கிப் படையும், வங்காளம், கல்பி, லக்னோ, தந்தேரா ஆகிய இடங்களில் ஒவ்வொரு குதிரைப் படைப்பகுதியும் இருந்தன[104] எனக் கேள்விப்படுகிறோம். இந்த விவரங்கள் அநேகமாக ஒப்புக்கொள்ளப்படத்தக்கனவே யாகும். ஆனால், துப்பாக்கிப் படையினரின் எண்ணிக்கைதான் சற்று மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே, அது சரியானதெனக் கொள்வதற்கில்லை. "1,50,000 குதிரைப்படை வீரர்களும், 25,000 காலாட் படை வீரர்களும் துப்பாக்கிகள் அல்லது விற்களை ஏந்தியபடி எப்போதும் ஷெர்ஷாவிடம் இருந்து வந்தனர்"[105] எனத் தரீக்-இ-ஷெர்ஷாஹி (Tarikh -i- Sher Shahi) எனும் நூல் குறிப்பிடுகின்றது. நாட்டின் ஏதாவதொரு பகுதியில் கலகத்திற்கான அறிகுறி ஏதேனும் தென்பட்டால், உடனே ஒரு படையை ஏவி, அங்கே போய்க் கலகக்காரரைப் பணியவைக்கும்படி அவர் ஆணையிடுவது வழக்கம். "ஜமுனா, சம்பல் நதிக்கரைகளில் இருந்த ஜமீன்தார்கள் கலகத்தில் ஈடுபடுவதாகத் தெரிந்தவுடனே ஷெர்ஷா சர்ஹிண்ட் சர்க்காரிலிருந்து 12,000 குதிரை வீரர்களைக் கொணர்ந்து ஹத் காந்த் (Hat Kant) பர்கானாவிலும் அதனைச் சுற்றியிருந்த பிரதேசங்களிலும் ஏவிவிட்டார். அவர்கள்

[104] Ibid., Vol. IV, pp. 416-17.

[105] Ibid., p. 415.

அப்பகுதிகளிலிருந்த குடியானவர்களையும் ஜமீன்தார்களையும் அடக்கி ஒடுக்கி அமைதியை நிலை நாட்டினர்.''[106] சம்பல், கன்னோஜி சர்க்கார்களில் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டபோதும் அவர்களுக்கெதிராக இத்தகைய நடவடிக்கைகளே எடுக்கப் பட்டன.[107] உண்மையில் இராணுவத்தை இங்ஙனம் பல்வேறிடங் களிலும் குந்தவைத்த காரணத்தினுலேதான் நாடெங்கும் அமைதி யும் ஒழுங்கும் ஏற்பட்டன. இஸ்லாம் ஷா இக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றினுர். அதன்மூலம் ஆப்கானியப் பிரபுக் களின் கொற்றத்தை அடக்குவதில் அவர் அநேகமாக வெற்றி பெற்ருர்.

நிலவரி நிர்ணயமும், வருமானத்துக்காக வரியிடலும்

திறமைமிக்க படையும், செம்மையான பொருள்வளமுமே வலிமையானதும் நிலைபேறுனதுமான முடியாட்சிக்கு இன்றியமை யாத நிபந்தனை என்பதை ஷெர்ஷா உண்மையிலேயே நன்கு உணர்ந்தவரென்று தெரிகின்றது. எனவே, வருமானத் துறை நிர்வாகத்தில் அவர் திறமையைப் புகுத்துவதில் தனிப்பட்ட அக்கறை செலுத்தினுர். நிலவரியை வசூல் செய்வதில் பயிர்களின் விளைச்சலுக்குத் தக்கவாறு வரி நிர்ணயம் செய்யும் முறையைக் கடைப்பிடித்தார். ஒவ்வொரு பிகாவிலும் (Bigha) இரண்டு பருவங்களில் ஒவ்வொன்றிலும் விளைவிக்கப்பட்ட முக்கியமான பயிர் விளைச்சலில் முதல் தரம், இடைத்தரம், கடைத்தரம் என்ற மூவகையான விளைச்சலும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு பிகாவிலும் விளைந்த முதல்தர, இடைத்தர, கடைத் தர விளைச்சல்கள் மொத்தமாகக் கூட்டப்பட்டு வந்த அளவு மூன்ருல் வகுக்கப்படுவதன்மூலம் அதன் சராசரி விளைச்சல் என்ன என்பது கணிக்கப்பட்டது. அச் சராசரி விளைவில் மூன்றில் ஒரு பகுதி அரசாங்கத்துக்குச் செலுத்தப்படவேண்டிய திறை என நிர்ணயிக்கப்பட்டது''[108] இந்த முறையோடு நிலத்தை அளக்கும் முறையும் கடைப்பிடிக்கப்பட்டது. எங்கெங்கெல்லாம் முடி யுமோ அங்கங்கெல்லாம் கடுமையான எதிர்ப்பினைத் தூண்டாத முறையில் நிலங்கள் அளக்கப்பட்டன. ''சாகுபடி செய்யப்பட்ட தும், சாகுபடி செய்யப்படாததுமான (மஜ்ருவா ராகாயிர் மஸுரா — Mazrua ra ghair mazura) நிலங்களை எல்லாம் அளக்க

[106] Ibid., Vol. IV, p. 416.

[107] Ibid., pp. 415-16.

[108] Tripathi, Some aspects of Muslim Administration, p. 299.

வேண்டிய பொறுப்பு அகமத்கானிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிராமணர்களின் (இந்துக்கள்) உதவியைக்கொண்டு அவர் அப் பணியைச் செய்தார். இந்த அளவையை அடிப்படையாய்க் கொண்டு பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் நில உரிமையாளர்களின் பட்டாக்களும் சாகுபடி செய்யப்பட்ட நிலப் பகுதிகளின் அளவையும், அவற்றின் வெவ்வேறு பாகுபாடுகளும் குறிக்கப்பட்டிருந்தன.''[109] இங்ஙனம், நிலங்கள் முறையாக அளக்கப்பட்டதும், அதன்பின்னரே வரிகள் நிர்ணயிக்கப்பட்டதும், அதோடு அமீல்கள் ஷிக்தார்களின் கண்காணிப்பும், பேரரசருடைய சொந்த நுணுக்கமான மேற்பார்வையும் சேர்ந்து நாட்டில் செம்மை சான்ற நிதிநிலை ஏற்படவும், குடியானவர்களுக்கு நியாயம் கிடைக்கவும் வழிவகுத்தன எனலாம்.

ஷெர்ஷாவின்கீழ் நீதிமுறை

இடைக்கால இந்தியாவின் எல்லா முஸ்லிம் அரசர்களுமே நீதியின் மேம்பாடுபற்றி உயர்வான எண்ணங்களைக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களில் எவருக்குமே நீதித்துறையை எப்படி அமைப்பது என்பது தெரியவில்லை. ஷெர்ஷா என்பார், ''மதச் சடங்குகள் அனைத்திலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது நீதி வழங்கலேயாகும். முஸ்லிம் மத விசுவாசிகளும், இஸ்லாமுக்குப் புறம்பானவர்களுமான மன்னர்கள் அனைவருமே இதை ஒப்புக் கொள்கின்றனர்.''[110] என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது. மேலும், ''ஒவ்வோர் இடத்திலும் அவர் நீதிமன்றங்களை ஏற்படுத்தியதாக''[111] அப்பாஸ்கான் என்பார் கூறுகின்றார். ஆனால் அக்கால மக்களும், மன்னர்களும், நீதி வழங்கலைத் தானம் வழங்குவதைப் போன்று முற்றும் அரசரின் சொந்த விஷயம் என்றே கருதினர். ஆங்காங்கே பல இடங்களில் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டும், நீதிபதிகள் நியமிக்கப்பட்டும் இருந்தார்கள் என்பது உண்மையே எனினும், இக்காலம் முழுவதிலும், முறையாகவும் தொடர்ச்சியாகவும் எவ்விதமான நீதிமுறை அமைப்பும் ஏற்படுத்தப்படவில்லை. அவ்வித நீதிமுறை அமைப்பை ஏற்படுத்திய பெருமையை ஷெர்ஷாவுக்கும் நாம் தருவதற்கில்லை. நீதிபற்றி அவர் கொண்டிருந்த மனப்பான்மையானது மிகவும் பண்பற்ற தொன்றாயிருந்ததென்பது குலசத்துத் தவாரிக் (Khulasat-ut-Tawarikh) என்ற நூலில் கூறப்படும் ஒரு நிகழ்ச்சியிலிருந்து நன்கு

[109] Ibid., p. 301.
[110] Elliot and Dawson, Tarikh-i- Sher Shahi, Vol.IV, p.411.
[111] Ibid., p. 417.

தெரியவருகிறது. ஆக்ராவில் வாழ்ந்துவந்த ஒருவருடைய மனைவி குளிப்பதற்காக ஆடைகளைக் களைந்துவிட்டு அம்மணமா யிருந்த சமயத்தில் அடில் கான் என்ற இளவரசர் பான்பீடா ஒன்றை (தாம்பூலம் தரிப்பதற்காக மடிக்கப்பெற்ற வெற்றிலை) அவள்மீது வீசி எறிந்ததாகச் சொல்லப்படுகிறது. இளவரசன் தான் அப்பெண்மீது கொண்டிருந்த காமவேட்கையைக் குறிப்பாக உணர்த்திய அச் செய்கையை, அப் பெண்மணி பெரிதும் வெறுத் துத் தன் கணவனிடம் அதுபற்றிக் கூறினாள். அவளுடைய கணவன் உடனே ஷெர்ஷாவிடம் சென்று நடந்ததைக் கூறி முறை யிட்டான். உடனே ஷெர்ஷா இளவரசனை அழைத்து, குற்றம் இழைக்கப்பட்ட பெண்ணின் கதி அவனுடைய மனைவிக்கும் ஏற்படவேண்டுமெனப் பணித்தார். அதாவது, இளவரசனின் மனைவி உடைகளைக் களைந்து குளிப்பதற்குத் தயாராகிக்கொண் டிருக்கும் வேளையில் அவள்மீது ஒரு பீடாவை எறியுமாறு அவர் தம்மிடம் முறையிட்டுக்கொண்ட மனிதருக்குக் கட்டளையிட் டார். இதில் எதுவும் நீதி உணர்வு பெரிதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், நீதிபற்றிய விவகாரங்களில் அரசரது வார்த்தையே முடிவானது என்ற உண்மைமட்டும் நன்கு வெளிப் படுகிறது. மீர் ஆதில்கள் (Mir Adils), காஜிகள் ஆகியோர் சிவில் வழக்குகளை விசாரிக்கவென்று நியமிக்கப்பட்டதாகமட்டும் நாம் கேள்விப்படுகிறோம்.[112]

பரோபகாரச் செயல்கள்

ஷெர்ஷாவும் இஸ்லாம் ஷாவும் தங்களது ஆட்சியின் இராணு வத் தன்மையை ஓரளவு குறைக்கவேண்டி மக்களுக்கு நலன் விளைக்கக்கூடிய பற்பல பரோபகாரச் செயல்களைச் செய்தனர். அதன்மூலம் அவர்கள் மக்களின் விசுவாசத்தைப் பெற எண்ணினர். ஷெர்ஷா நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி தமது பேரரசின் பல்வேறு பகுதிகளை இணைக்கக்கூடிய பல பாதை களை அமைத்தார். படைகள் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடம் செல்வதும், பிரயாணம் செய்வதும், வியாபாரம் நடத்துவதும் அவற்றின்மூலம் எளிமையாக்கப்பட்டன. மேலும், ''ஏழைப் பிரயாணிகளின் சௌகரியத்துக்காக ஒவ்வொரு நெடுவழியிலும், இரண்டு கோஸ் (Kos) தூரத்துக்கு ஒன்றாக ஒவ்வொரு சராய் (Sarai) அல்லது சத்திரம் அமைக்கப்பட அவர் ஏற்பாடு செய்தார்.... வெவ்வேறு பாதைகளில் மொத்தம் 1700 சராய்களை அவர் அமைத்தார். ஒவ்வொரு சராயிலும் நீர் நிறைந்த பானைகள்

---

[112] Tarikh -i- Daudi, M. S., p. 204.

பல வைக்கப்பட்டன. யார் வேண்டுமானாலும் அவற்றிலிருந்து நீரை அருந்தித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள அநுமதியளிக்கப் பட்டது. ஒவ்வொரு சராயிலும், இந்துக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதற்காகப் பிராமணர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். இந்துப் பிரயாணிகள் குளிப்பதற்குத் தண்ணீர் அல்லது வெந்நீரும், உண்பதற்கு உணவும், உறங்குவதற்குப் படுக்கையும் கொடுத்து அப் பிராமணர்கள் ஆதரித்தனர். அதோடு பிரயாணிகளின் குதிரைகளுக்குத் தேவையான தீனியும் வழங்கப் பட்டது. சராய்களுக்குள் நுழைபவர்கள் யாராயிருந்தாலும் அவரவர் பதவிக்குத் தக்கபடி அரசாங்கத்திடமிருந்து சௌகரி யங்களைப் பெறவேண்டுமென்பது ஒரு விதியாகக் கடைப்பிடிக்கப் பட்டு வந்தது.''[113]

1700 சராய்களை ஷெர்ஷா கட்டினாரென்பதை ஓரளவு நம்பலாமென்றாலும், சாதாரண இந்துப் பிரயாணிகளுக்கும் அவர்கள் ஏறிச்சென்ற பிரயாணிகளுக்கும் அவ்வளவு மகத்தான ஏற்பாடுகள் அச் சராய்களில் செய்யப்பட்டிருந்திருக்கக் கூடுமா என்பது பெரிதும் ஐயப்பாட்டுக்கு உரியதேயாகும். அது நம்பக் கூடாத ஒரு செய்தியாகவே தோன்றுகிறது. அரசாங்க அதி காரிகள் தங்களது வேலை காரணமாக ஊருக்கு ஊர் போய்க் கொண்டிருந்தபோதும், மாற்றல் காரணமாக இடம்விட்டு இடம் சென்றபோதும், சராய்களில் தங்கினால் அவர்களுக்கு அவரவர் பதவிக்குத் தக்கபடி, உணவு, படுக்கை முதலியவை அரசாங் கத்தால் அளிக்கப்பட்டிருக்கக் கூடுமென்பதே உண்மையா யிருக்கலாம். ஆனால், ஓரிடம் விட்டுப் பிறிதோரிடத்துக்குப் பயணம் செய்த சாதாரண ஏழை மக்களுக்கு அத்தனை சௌகரி யங்கள் செய்யப்பட்டன என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. நாம் இத்தகைய முடிவுக்கு வந்தது சரியே என்பதற்கு இஸ்லாம் ஷாவின் ஆணை ஒன்று துணைச் சான்றாய் அமைகிறது. அவ்வாணையானது ஏழைப் பிரயாணிகளின் துன்பம் களைய வேண்டி இன்னும் அதிகமான சத்திரங்கள் கட்டப்படவேண்டு மெனவும், ''ஒவ்வொரு சராயிலும் பிச்சை வழங்கப்படுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டு''மென்றும் கூறியது. இஸ்லாம் ஷாவின் தந்தையின் காலத்து ஏழைமக்களுக்கு அரசரின் பாடி வீடுகளிலேயே பிச்சை வழங்கப்பட்டு வந்தது. அதை மாற்றி அவர் சராய்களிலேயே தானம் வழங்குதற்குரிய ஏற்பாடு செய்தார். ஏனெனில், வழிப் பயணம் செய்யும் ஏழைகளுக்கு அன்றாடம் ஏதாவது படியளந்தாலன்றி அவர்கள் மனநிறைவும்

[113]Elliot and Dawson, Vol. IV, p. 418.

அமைதியும் எய்த மாட்டார்களென்பது அவரது எண்ண மாகும்.''[114]

ஆப்கானியர்களின் நிலமானிய மரபுகள் மீண்டும் உயிர்ப்பிக்கப் பெறல்

மத்திய அரசாங்கத்தில் அதிகாரமெல்லாம் செறியும்படி செய்தும், இராணுவ பலத்தைப் பெரிதும் அதிகரித்தும், ஷெர்ஷாவும் இஸ்லாம்ஷாவும் தங்களது சிறப்பை, ஏறக்குறைய வரம்பற்ற இறைமையின் அளவுக்கு மேலோங்கச் செய்திருந்த போதிலுங்கூடக் கோனுட்சியானது இன்னும் நிறுவன ரீதியில் சரியான அடிப்படையில்லாமலே இருந்தது. அதிகாரச் செறிவை ஆப்கானியர்கள் அவ்வளவாக விரும்பவில்லை. அரசரது வரம்பற்ற இறைமையை அவர்கள் பின்னும் அதிகமாக வெறுத்தனர். அதோடு ஓர் அரசர் இறந்தபின் அவருடைய மூத்த மகனே பட்டத் துக்கு வரவேண்டுமென்ற சட்டத்தை ஆப்கானியர்கள் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. ஷெர்ஷாவின் மரணத்துக்குப்பின் அவருடைய மூத்த மகனை அடில்கானை அரியணையில் அமர்த்து வதற்குப் பதிலாக அவருடைய இரண்டாம் மகன் ஜலால்கானை, வல்லமை வாய்ந்த ஒரு பிரபுக் கூட்டம் மன்னராக்கியது. ''இறைமை என்பது பேரரசின் பெரும் பிரபுக்களாகப் பார்த்து அவர்களுக்குப் பிடித்தமான ஒரு நபருக்குக் கொடுக்கின்ற பரிசே யன்றி வேறன்று. அப்பரிசு இன்று அவருக்குக் கிடைத்துளது'' என்று ஜலால்கானின் ஆதரவாளர்கள் அறிவித்தனர். முடி யரசைப்பற்றி ஆப்கானியர்கள் கொண்டிருந்த கருத்துக்கள் தக்க சமயம் பார்த்து வெளிப்படுவதை இங்கே காண்கிறோம். அவர்கள் இங்ஙனம் கொண்டாடிய உரிமையை ஷெர்ஷாவாக இருந் திருந்தால், துச்சமென வெறுத்து ஒதுக்கியிருப்பார். இஸ்லாம் ஷாவும் அங்ஙனமே தமது வலிமையை உணர்ந்த அக்கணமே, பிரபுக்களின் கொற்றத்தை அடக்கியிருப்பார். என்றாலும், தங்கள் குழு மரபுகளை மறக்க ஆப்கானியர்களால் முடியவில்லை. இஸ்லாம் ஷா இறந்தவுடனே, அவருடைய மகனும் வழித் தோன்றலுமாயிருந்த ஒரு சிறுவனைக் கொன்றுவிட்டு மகமதுஷா ஆதில் என்பார் அரியணையைக் கைப்பற்றிக்கொண்டபோது ஆப்கானியப் பிரபுக்கள் அதை ஒரு பெருங்குற்றமாகக் கருத வில்லை. இப்படி ஒரு மாபெருங் குற்றம் செய்தவரென்றும் பாராமல், வெறுக்கத் தக்க கடூரமான இயல்புடைய புதிய சுல்தானைப் பிரபுக்கள் யாவரும் ஆதரித்தனர். நடந்துபோன

[114] Ibid., pp. 470-80.

காரியமென்பதால் அவர்கள் சுல்தானின் இழிந்த செயலுக்கும் ஈடு கொடுத்தனர்.

மேலும், புதிய சுல்தான் திறமையற்றவர் என்பது தெரிந்தவுடனே, ஆப்கானியர்களின் நிலமானிய மனப்பான்மைகள் புறம் போந்து தலைவிரித்தாடலாயின. இஸ்லாம் ஷாவின் வலிமையும் திறமையும் இல்லாத மதுமது ஷா ஆதில் அவரைப்போன்றே ஆப்கானியப் பிரபுக்களின் கொற்றத்தை அடக்கவும், இஸ்லாமியச் சமயத்தை வன்முறையால் புகுத்தவும் முயன்றார். அதன் விளைவாகப் பயங்கரமான கிளர்ச்சி ஒன்று எழுந்தது; நாடு சின்ன பின்னமாக்கப்பட்டது. பஞ்சாபில் சிக்கந்தர் ஷா சூர் என்பாரும், தோயாபிலும் மத்திய இந்துஸ்தானத்திலும் இப்ராஹிம் ஷா சூரும், வங்காளத்தில் மகமது ஷா சூரும் சுயேச்சை அடைந்தனர். அவர்கள் தம்மை மன்னர்கள் என்று அறிவித்துக் கொள்ளலாயினர். அவர்களுடைய பேராசையைத் தடுப்பதற்குள் மகமதுஷா ஆதிலுக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. இங்ஙனம், நாடானது பல்லாற்றானும் கலகங்களுக்குள்ளாகி, நான்கு பிரிவுகளாகப் பிரிந்து கிடந்ததைக் கேள்வியுற்ற ஹுமாயூன், தாம் இழந்த இந்துஸ்தானப் பேரரசை மீட்க நினைத்துக் காபூலினின்றும் புறப்பட்டு வந்து பஞ்சாபையும் டில்லியையும் 1555இல் கைப்பற்றிக்கொண்டார். டாக்டர் திரிபாடி என்பாரின் கூற்றுப்படி, ''முதலாவது, இரண்டாவது ஆப்கானியப் பேரரசுகளின் வரலாறென்பது ஓர் அரசரின் தனித் தலைமையை வற்புறுத்திய கொள்கைக்கும், ஆப்கானியக் குழுக்கள் பலவற்றின் தலைமையை வற்புறுத்திய கோட்பாட்டுக்கும் ஏற்பட்ட போராட்டத்தின் வரலாறேயன்றி வேறன்று. அரசருக்கும் பிரபுக்களுக்கும் நடைபெற்ற போராட்டத்தில் அரசர் சில வெற்றிகளைப் பெற்றார் என்பதில் ஐயமில்லை. ஆனால், சாக்டை (Chaghtai) படையெடுப்பால் இப்போராட்டம் தடைப்பட்டபோதும், இறுதியில் ஆப்கானிய அரசு ஒழிந்துவிட்ட போதும் இரு முறைகளிலும், இந்த இருமுனைப் போராட்டத்திற்கு ஒரு தீர்வு காணப்படவில்லை. ஆனால் போராட்டத்துக்குக் காரணமாக இக் கோட்பாடுகள் மொகலாயர்கள் காலத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. அவற்றிற்குத் தீர்வுகாணும் பொறுப்பு மொகலாயர்களுக்கு விடப்பட்டது.''[115] அவர்கள் அச் சிக்கலுக்குத் தீர்வுகாண்பதில் எவ்வளவுதூரம் வெற்றி பெற்றனர் என்பதை இனி வரப்போகும் அத்தியாயங்களில் காண்போம். ஆனால் சூர்களினால் சாதிக்கப் பெற்ற காரியங்களால் அவர்கள்

[115] Tripati, Some aspects of Muslim Administration, p. 104.

பெரும் பயன் பெற்றனர் என்பதில் ஐயமில்லை. கலீஃபாவினுடைய ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளவும் இந்தியாவில் அக் கலீஃபாக்களின் நிலையைத் தாங்கள் அடையவும் தீர்மானித்த சூர்கள், டில்லி சுல்தான்களால் கடைப்பிடிக்கப்பட்ட பழைய வழக்கங்களைக் கைவிட்டு விட்டதேயன்றி, அக்பருக்கு வழிகாட்டிகளாகவும் இருந்தனர். அக்பரால் மேற்கொள்ளப்பட்ட காரியங்கள் எளிமையாக முடியச் சூர்களின் சாதனைகள் பெரிதும் துணை புரிந்தன. சான்றாக, ஷெர்ஷா சூர் சுல்தானாக அல்லது அரசனாக உண்மையாகவே விளங்க எண்ணியபோது, அதற்கு எவருடைய சம்மதத்தையும் கோர அவர் எண்ணவே இல்லை. தமது இறைமை ஒப்புக்கொள்ளப் பெறவும், தமது வல்லமையும் பெருமையும் நிலைநாட்டப் பெறவும் அவர் யாருடைய தயையையும் எதிர்பார்த்து நிற்கவில்லை. அளவை நூல் விதிப்படி இயங்கும் தன்மை பொருந்திய மனமும், சாதாரண மனித சக்திக்கும் அப்பாற்பட்ட ஆற்றலும் கொண்ட அவரால் கலீஃபாவின் அதிகாரத்தைத் தம்முடைய அதிகாரத்தைவிட உயர்ந்தது என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை. அப்படி ஒப்புக்கொள்வதென்பது தமது பெருமைக்கும் நிலைமைக்கும் இழுக்கானது என அவர் நினைத்தார். டில்லி சுல்தானிய அரசில், குத்புதீன் முபாரக் ஷா ஒருவர்தாம் இமாம் அல்லது கலீஃபா என்ற பட்டத்தைச் சூடிக் கொண்டார். இந்த நடவடிக்கையின் முழு முக்கியத்துவத்தையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் முஸ்லிம் உலகத் தலைவராயிருந்த கலீஃபாக்களை டில்லி சுல்தான்கள் எங்ஙனம் கருதி, எங்ஙனம் நடத்தினார்களென்பதை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். அப்போதுதான் டில்லி சுல்தான்கள் கைக்கொண்ட இறைமையின் உட்பொருளும் சிறப்பியல்பும் நன்கு புலப்படும். இந்தியாவில் முஸ்லிம் மன்னர்களின் நிலை என்ன என்பதுபற்றிய சரியான உண்மை அப்பொழுதே வெளிப்படும்.

டில்லி சுல்தான்கள் கைக்கொண்ட இறைமையின் இயல்பு

ஒரு நாட்டுக்கு மன்னராயிருக்கும் ஒருவர், அந் நாட்டுக்குப் புறம்பேயுள்ள ஒரு சக்திக்குப் பணிவதாகவோ, விசுவாசம் செலுத்துவதாகவோ காட்டிக்கொள்வாரானால், அஃது அவரது இறைமைக்கே ஊறு விளைப்பதாகுமென்பதையும், இறைமையின் சத்தில் பெரும்பகுதி இழக்கப்பட்டு விடுமென்பதையும் நாம் தொடக்கத்திலேயே கூறிக்கொள்வது இன்றியமையாததாகும். உண்மையில் அத்தகைய அரசர், வாழ்க்கையின் அளவை நூல்

தத்துவப்படி, இறைவரெனக் கருதப்படுதற்குத் தகுதியற்றவ ராவார். ஆனால் துரதிருஷ்டவசமாக, டில்லியில் ஆண்ட முஸ்லிம் அரசர்கள் அனைவரும், கஜினி முகமது உட்பட, அப்பலவீனத் தின் விளைவால் தம் பெருமையில் சற்றுக் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். மறைமுகமாகவோ அல்லது வெளிப்படை யாகவோ இவர்கள் கலீஃபாவுக்கு வணக்கம் செலுத்தி வந்தனர். தங்களுடைய நாணயங்களில் இவர்கள் கலீஃபாக்களின் பெயர் களைப் பக்தி விசுவாசத்துடன் பொறித்துக்கொண்டதன் மூலமும், குத்பாக்களில் அவர்களின் நாமங்களை ஓதுவதன் மூலமும், அல்லது தம்முடைய பதவியை நியாயமானதென ஏற் றுக்கொள்ளுமாறு, கலீஃபாவை வேண்டிக்கொள்வதன்மூலமும், இவர்கள் கலீஃபாக்களுக்குப் பணிவு காட்டினர். கஜ்னிவிடுகள் அரசின் வரலாற்றின் தொடக்கத்தில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளின் விளைவாக, மகமதுவும், அவருடைய சந்ததியாரும், தங்களுடைய பதவிகளை அங்கீகரிக்குமாறு கலீஃபாக்களைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மகமது கஜினியின் சுல்தான் பட்டமானது பாக்தாத் கலீஃபாவினால்தான் உறுதியாக்கப் பட்டது. மசூத் என்பாரும் அங்ஙனமே, கலீஃபாவுக்கு ஒவ்வோர் ஆண்டும் 2,00,000 தினார்களையும், 10,000 துணிகளையும் அனுப்பு வதாக உறுதி கூறியபின் அவரது அங்கீகாரத்தைப் பெற்றார். கலீஃபாவும் மனமுவந்து அவருக்கு முறையான பதவிச் சின்னத்தை வழங்கியதோடு, ஸாஹிர் கிலாஃபத் உல்லா அமீருல் மியூமினின் (Zahir Khilafat Ullah Amir-ul-Muminin) என்ற பட்டத்தையும் வழங்கினார்.[116] டில்லி சுல்தானிய அரசு நன்கு நிறுவப்பெற்று, முஸ்லிம் அரசர்களின் இறைமை நன்கு நிலைநாட்டப்பட்டதெல் லாம் இல்துத்மிஷ் (Iltutmish) காலத்திலிருந்துதான் தொடங்கு கிறது எனலாம். அவரைப்பற்றி, "சுயேச்சையான சுல்தான் என்ற தமது நிலையை வலுப்படுத்திக்கொள்ளவும், முஸ்லிம் சட்டத்தின்படி ஒரு பதவியை எய்தவும் இல்துத்மிஷ் பாக்தாத் கலீஃபாவிடமிருந்து கௌரவ உடை ஒன்றைப் பெற்றுக்கொண் டார் என்று பேசப்படுகிறது."[117] பால்பன்கூட இத் தேவையை உணர்ந்ததாகத் தெரிகிறது. அவரது காலத்துக்குள் கலீஃபாப் பதவியானது மங்கோலியர்களால் ஒழிக்கப்பட்டுவிட்டபோதிலும் கூட, இறந்துபோன கலீஃபாவின் பெயரானது குத்பாக்களில் ஓதப் படவும், நாணயங்களில் பொறிக்கப்படவும் அவர் ஆணையிட் டார். மற்றும், தமது இறைமையை அங்கீகரிக்குமாறு கலீஃபா வைப் பணிவுடன் கேட்டுக்கொள்ள, அவர் தம் மகனுக்குங்கூட

[116] Elliot and Dawson, Baihaki, Vol. II, p. 50.

[117] Tripathi, Some aspects of Muslim Administration. p. 26.

அறிவுரை கூறினர். அலாவுதீன் கில்ஜீ தம் மாபெரும் வல்லமையை வைத்துக்கொண்டு, கலீஃபாவைப்பற்றிப் பொருளற்ற முறையில் குறிப்பிடுவதை அறவே கைவிட்டிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில், உண்மையைக் கூறுமிடத்து, கலீஃபா என்ற தனி மனிதரைவிடக் கலீஃபாப் பதவிக்குத்தான் முஸ்லிம் உலகம் முழுவதும் வணக்கம் செலுத்தி வந்ததேயன்றி வேறன்று. எனவே, தம்மைக் கலீஃபாவின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்வதே உசிதமானது என அலாவுதீனும் நினைத்தார். அதன்படி "யமினுல் கிலாஃபத் நஸிர் அமீருல் மியூமினின் (Yamin-ul-Khilafat Nazir Amir-ul-Mumunin) என்ற பட்டம் சூட்டிக் கொண்டார். யமினுல் கிலாஃபத் என்றால் கிளாஃபத்தின் வலது கை என்றும், நஸிரி அமீருல் மியூமினின் என்றால் விசுவாசிகளின் தலைவருக்குத் துணைவர், அதாவது, கலீஃபா என்பதும் பொருளாகும். கியாசுதீன் துக்ளக்குங்கூடக் கலீஃபாவுக்கு விசுவாசம் செலுத்துவதினின்றும் சிறிதும் வழுவவில்லை. அவர் தம்மை நஸிரி அமீருல் மியூமினின் என்றே அழைத்துக்கொண்டார். மகமதுபின் துக்ளக் தமது ஆட்சியின் ஆரம்ப காலத்தில், தம் முன்னோரின் வழக்கத்துக்கு மாறாகக் கிலாஃபத்தை முற்றும் புறக்கணித்தார். தம் நாணயங்களில் "அல் சுல்தான் ஜில்லி அல்லா" (Al Sultan Zilli Allah), அதாவது 'இறைவனின் நிழலாகிய சுல்தான்' எனத் தம்மைப்பற்றிப் பொறித்துக்கொண்டார். ஒரு சில நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் உண்மையிலேயே அவர் கொண்டாடிய உரிமைபற்றியும் இறைமைபற்றியும் மிக முக்கியமான செய்திகளைத் தெரிவிக்கின்றன. ஒரு நாணயத்தில், "இறைமை என்பது எல்லார்மீதும் சுமத்தப்படுவது ஒன்றன்று. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குமட்டுமே அது வழங்கப்படுவதாகும்" என்ற வாசகம் காணப்படுகிறது. இன்னும் சில நாணயங்களில், "சுல்தானுக்குக் கீழ்ப்படிபவர்கள் உண்மையில் கடவுளுக்கு அடிபணிபவர்களேயாவர்" என்றும், "கடவுள் சுல்தானைத் தாங்குபவர்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன[118]. இத்தகைய அறிவிப்புகளால் அவருடைய குடிமக்கள் ஒருவேளை கொதிப்படைந்திருக்கக்கூடும். அவர் தாம் விரும்பியபடி யாவும் திருப்தியான முறையில் நடைபெறவில்லை என்று தெரிந்தவுடனே தம் போக்கை முற்றும் மாற்றிக்கொண்டார். கலீஃபாவினிடம் முற்றும் மாறான முறையில் நடந்துகொள்ளலானார். தம்முடைய பதவியை அங்கீகரித்து உறுதி

[118] H. Wright, Coins of the Indian Museum, Calcutta, pp. 58-59, Lane Poole, Coins of the British Museum—Local Muhammadan Dynasties, pp. 63, 68.

யளிக்குமாறு அவர் கலீஃபாவைப் பணிவுடன் கேட்டுக்கொண்டார். தம்மீது அருள்பாலிக்குபடியும் அவரைக் கேட்டுக்கொண்டார். குத்பா அவரது பெயரில் ஓதப்பெற வேண்டுமென்றும், நாணயங்களில் அன்னாரது பெயர் பொறிக்கப்பட வேண்டுமென்றும் அவர் கட்டளையிட்டார். இங்ஙனம், அவர் கலீஃபாவிடம் முற்றும் சரணடைந்தார். இதற்குள்ளாகக் கலீஃபா பீடமானது எகிப்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. அவ்வளவு தூரத்தில் இருந்துகொண்டு கலீஃபா தம் ஆசிகளை முஸ்லிம் மக்களுக்கு வழங்கியபோதிலும், இந்தியாவிலிருந்த முஸ்லிம் சமுதாயம் முழுவதும் அவ் வாசிகளால் ஏதோ நன்மையானது மாயமாக ஏற்படக்கூடும் என்று நம்பி அதை எதிர்பார்த்து இருந்தது. ஃபெரோஸ் ஷா பட்டத்திற்கு வந்தபின்னர் டில்லி சுல்தான்கள் எகிப்தியக் கலீஃபாவுக்கு முற்றும் அடிபணிந்து நின்றனர். அடிமை அரசர்கள் 'நஸிரி அமீருல் மியூமினின்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். மகமது பின் துக்ளக் 'யமீனுல் மியூமினின்' என்ற பட்டத்தைத் தரித்துக்கொண்டார், ஆனால் ஃபெரோஸ் ஷா 'நாயப்' (Nayab) அல்லது கலீஃபாவின் பிரதிநிதி என்று தம்மை அழைத்துக்கொண்டார். முதலில் அவர் ''சைஃபுல் அமீருல் மியூமினின்'' (Saiful-Amir-ul-Muminin) என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டார். சிறிது காலம் கடந்து அவர் அப்பட்டத்தை மாற்றிக்கொண்டார். 'நாயபே அமீருல் மியூமினின்' (Nayab Amir-ul-Muminin) என்றும், ''அல் கலீஃபாயே அமீருல் மியூமினின்' (Al-Khalifa-i Amir-ul-Muminin) என்றும் தம்மை அழைத்துக்கொண்டார். துக்ளக்குகளுக்குப் பின்னர் லோடிகள் தங்களுடைய அரசுரிமையானது நிலையாக இருக்குமென்ற நம்பிக்கை இல்லாதவர்களாய் இருந்தனர். அதனால் அவர்கள் 'நாயப்' அல்லது 'அமீருல் மியூமினின் கலீஃபா' என்று தங்களை அழைத்துக்கொண்டனர். கலீஃபாவிடம் டில்லி சுல்தான்கள் காட்டிய மனப்பான்மையும், நடந்துகொண்ட விதமும் பொதுவாக இப்படிப்பட்டனவே யாகும். அவரிடத்திலிருந்து தங்களுடைய பதவிகளுக்கு உறுதியளிப்புக் கிடைத்ததால் அதன்மூலம் அவருக்குத் தாங்கள் கடமைப்பட்டிருப்பதாக உணர்ந்தனர். ஏனெனில், அக் காலத்தே கலீஃபாதாம் முஸ்லிம் விசுவாசிகளின் தலைவர் என்றும், இப் பூமியில் 'மகமது நபியின் பிரதிநிதி' அவரே என்றும் எல்லோரும் ஒப்புக்கொண்டனர். மதத்துறையில் அவர் செலுத்திய தலைமையானது உலகியல் துறைத் தலைமைக்கும் ஆதாரமானது என அக் காலத்தே நம்பப்பட்டது. அதனாலேதான் டில்லியை ஆண்டுவந்த சுல்தான்கள், கலீஃபாவிடமிருந்தே தங்களுக்கு எல்லா அதிகாரமும் வருவதாக எண்ணினர். இதன் விளைவாக இந்தியாவில் வாழ்ந்த குடிமக்கள்

டில்லி சுல்தான்களிடம் ஒருமித்த விசுவாசத்தைக் காட்ட இடமில்லாமல் போயிற்று.

சூர்கள் முழுமையான இறைமையை எய்துதல்

இங்ஙனம் அவர்களுடைய இறைமையானது கலீஃபாவின் மேலான அதிகாரத்தை அங்கீகரித்ததாலும், அதற்குப் பணிவு காட்டியதாலும் பெரிதும் அளவில் சுருங்கியது. நாம் ஏற்கனவே கூறியுள்ளபடி மத குருமார்கள் அரசர்மீதும், அரசாங்கத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்த அதுவே காரணமாயிற்று. எனவே, தங்களது இறைமையானது முழு உருவத்தோடும் முழுமையான அதிகாரத்தோடும் பெருமையோடும் விளங்கவேண்டுமானால் இந்தியச் சுல்தான்கள் கலீஃபாவுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருந்திருக்கக்கூடாது என்பது தேற்றம். அதாவது, இந்திய சுல்தான்கள் அஃது எவ்வளவுதான் உசிதமானதாய் இருந்தபோதிலுங்கூட நாணயங்களில் கலீஃபாவின் பெயரைப் பொறிப்பதன் மூலமும், குத்பாக்களில் கலீஃபாவின் பெயரைப் ஓதுவதன் மூலமும் கலீஃபாவுக்குத் தாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதைப் புறத்தே காட்டியிருக்கலாகாது. ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்வதைத் தவிர வேறு வழியில்லாதவர்களாய் இருந்தனர். எனவே, தங்களுடைய அதிகாரத்தின்மீதும் பெருமையின்மீதும் விருப்பமில்லாமலேயே பல தடைகளை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். கலீஃபாவைத் தங்களுக்கும் மேலானவர் என்று அவர்கள் கருதிக்கொண்டிருந்த வரையில் அவர்கள் வரம்பற்ற இறைமையைக் கொண்டாட முடியாத நிலையில் இருந்தனர். இத்தகைய இழிவான நிலையிலிருந்து ஷெர்ஷாவும் அவருடைய சந்ததியார்களுமே முதன்முதலில் விடுபட்டுத் தங்களுடைய இறைமையானது எவர்க்கும் கட்டுப்படாதது என்பதையும், சுயமானது என்பதையும் நிலைநாட்டினர். ஷெர்ஷா ''சுல்தானுல் ஆதில் அல் அமீருல் காஜி (Sultan-ul-Adil-Al-Amir-ul-Ghazi)என்று தம்மை அழைத்துக்கொண்டதோடு 'கலீஃபத் துஸ் ஸமான்' (Khalifat - uz - Zaman) என்றும், ''சுல்தானுல் ஆதில் ஷெர்ஷா ஹுல் அல்லா கிலாஃபது'' (Sultan-ul-Adil-Shershah Khuld Allah Khilafatu) என்றும் தம்மை அழைத்துக்கொண்டார். இதில் ''முன்னைய இரண்டு பட்டங்களும் ஆரம்ப காலத்துத் துருக்கியர்களையும் தைமூரையும் நமக்கு நினைவு படுத்துகின்றன. கடைசியில் கூறப்பட்ட பட்டமானது தமக்குத் தாமே தம்மை விளம்பரப் படுத்திக்கொள்வதாய் அமைந்துள்ளது. மிக்க அமைதியும் மிதமான பண்பும் எதையும் நன்கு ஆராய்ந்து செய்யும் இயல்பும் கொண்ட ஷெர்ஷாவே தம்மைக் கலீஃபாவென வெள்ளி, செப்பு,

நாணயங்களில் பொறித்துக்கொண்டாரென்பது உண்மையில் மிகமிகக் குறிப்பிடத் தக்கதொன்றாகும். முபாரக் ஷா கில்ஜியின் செயலைவிட ஷெர்ஷாவின் செய்கையானது மிகமிக முக்கியத் துவம் வாய்ந்ததாகும்[119]. உண்மையில் ஷெர்ஷாவானவர் கலீஃபாவுக்கு வெறுமனே விசுவாசம் தெரிவிப்பதெல்லாம் பொருளற்றது என்பதை நன்கு அறிந்திருந்தார். தம்முடைய ஆற்றலிலும் திறமையிலும் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது. கிலாஃபத் பதவிக்கு அவர் உரிமை கொண்டாடியதை இந்தியா வில் வாழ்ந்த தீவிர முஸ்லிம் வகுப்பாளர்கூட எதிர்க்கவில்லை. அவருடைய ஆட்சித் துறையில் காணப்பட்ட திறமையின் நிறை வானது அவருடைய உரிமைக்கு ஒரு வேகத்தை அளித்தது. —மற்றும் அவரிடத்தே காணப்பெற்ற மனிதப் பண்பும், கல்வி யறிவும் திறமையும் அவருடைய உரிமையை வற்புறுத்த அவருக்கு நல்ல தகுதிகளாய் வந்து அமைந்தன. அவருக்குப் பின்னர் அவருடைய மகனை 'இஸ்லாம்ஷா கலீஃபதுல் ஆதில்' (Khilafatul -Adil) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். சமயத்துறை, உலகியல் துறை ஆகிய இரு துறைகளிலுமே அவர் தமது நாட்டை உண்மையிலேயே வழிநடத்தினர் என்பதை அறிகின்றோம். அவருடைய சொற்களே சட்டமாக மாறின. அவற்றை எதிர்க் கவோ, கீழ்ப்படிய மறுக்கவோ எவராலும் முடியாமல் இருந்தது. அக்பரால் ஏற்படுத்தப்பட்ட வரம்பற்ற முடியரசாட்சிக்கு இவை யெல்லாம் முன்னோடிகளாய் அமைந்தன. சூர்கள் இறைமையின் உட்பொருளைத் தங்களது சொந்த வடிவத்திலேயே காண்பதில் பெருவெற்றி பெற்றனர். எனவே, கோனாட்சி என்பது ஒரு நிறுவனம் என்ற முறையில் என்றும் இல்லாதவாறு சிறப்பில் உயர்ந்தது. எனவே, இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் படித்தர வளர்ச்சி வரலாற்றைப் பொறுத்த வரையில் இறைமைபற்றிய இக் கருத்தின் வளர்ச்சியை நாம் விழிப்பாகக் கவனிக்க வேண்டும். இடைக்கால இந்தியாவில் வளர்ச்சிபெற்ற இந்த இறைமைக் கொள்கையானது இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் வளர்ச்சிக்கு ஒரு பெருங் காணிக்கையெனக் கருதலாம்.

---

[119] Tripathi, Some Aspects of Muslim Administration. p. 98.

14. மொகலாய ஆட்சி — மாட்சி மிக்கதோர் காலம்

மொகலாயரின் ஆட்சிக் காலமானது இந்திய வரலாற்றின் மாட்சிமிக்க காலங்களுள் ஒன்றாகும். இடைக்காலத்தின் இறுதியிலும், தற்காலத்தின் தொடக்கத்திலும் வந்துறுகின்ற இக்காலத்திலேதான் இடைக்காலத்தின் இயல்புகள் யாவும் தற்காலப் பண்புகளாக மாறி அமையப் பெறுகின்றன. இக் காலத்திலேதான், சமயத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும், தீவிர மனப்பான்மையானது மாறித் தாராள மனப்பான்மை தலையெடுக்கிறது. அரசியல் துறையில் இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட வல்லாட்சியானது மாறிப் பகுத்தறிவின் பாற்பட்ட நல்லாட்சி ஏற்படத் தொடங்கியதும், இக்காலத்திலேதானாகும். அடக்குமுறை ஆட்சியைக் கைவிட்டு அரசாங்கம் தகை சான்ற ஒரு தந்தையைப்போல் மக்களைப் பேணலாயிற்று. மொகலாய அரசாங்கம் உண்மையிலேயே மக்களின் ஆதரவு பெற்ற ஒரு தேசீய அரசாங்கமெனவும், மொகலாய அரசானது பண்பாட்டின் அடிப்படையில் அமைந்ததோர் அரசெனவும் கருதத் தக்கதா என்பதைப் பின்னர்ப் பரிசீலனை செய்வோம். ஏனெனில், அது மொகலாய ஆட்சியின் பல கூறுபாடுகளுள் ஒன்றேஒன்றைமட்டுமே குறிப்பதாகும். நம் ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில் அது மிகமிக முக்கியமான பகுதியே என்றாலும், அதை நாம் ஈண்டுப் பெரிதுபடுத்துவதற்கில்லை. உண்மையிலேயே மொகலாயரின் ஆட்சிக் காலத்தில், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. குறிப்பிடத்தக்க அருஞ்சாதனைகள் பலதுறைகளிலும் நிறைவேற்றப்பட்டன. அரசியல், சமயம், கலை, பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளிலுமே அரும்பெருஞ்செயல் பல நிகழ்த்தப்பெற்றன. இடைக்கால இந்திய வரலாற்றில் இஃது ஈடும் எடுப்புமற்றதொரு காலமாகத் திகழ்கிறது. முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் நீண்ட நாட்களாகவே ஏற்

பட்டுவிட்ட சீரழிவு திடீரெனச் செப்பமடையத் தொடங்குகிறது. என்றும் இல்லாதபடி வாழ்க்கையில் புத்துணர்ச்சி ஒன்று காணப்படுகிறது. கட்டுப்பாடுகள் தளர்கின்றன. புதியதொரு தெம்பும், செழுமையும் மக்களிடம் ததும்புகின்றன. புதிய மரபுகள் தோன்றுகின்றன. புத்தம் புதிய துறைகளில் ஈடுபாடும் மதிப்பும் ஏற்படத் தொடங்குகின்றன. சிந்தனை வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் புதுப்புதுப் பாதைகள் திறந்து வழிவிடுகின்றன. இக் காலத்தே அறிஞர்களின் பார்வைக்கு அகப்படாத அறிவுத்துறையே ஒன்றுமில்லை என்று கூறிவிடலாம். அவர்களின் கைபட்ட அனைத்தும் அப்படியே உருமாறிப் போய்விடுவதை நாம் பார்க்கிறோம். ஆக்கச் செயல்கள் எங்கே பார்த்தாலும் மலிந்து கிடந்து அக் காலத்தை அணி செய்கின்றன. 1526 முதல் 1740 வரை - அதாவது, இரு நூற்றாண்டுகளைத் தன்னகத்தே கொண்ட இக் காலத்தில், இடையே வந்த ஆப்கானிய ஆட்சிக் காலமாகிய பதினைந்து ஆண்டுகளைத் தவிர ஏனைய காலமெல்லாம் ஊக்கமும் ஆக்கமும் செறிந்த காலமேயாகும். எனினும், இதில் ஒரு நூற்றாண்டுக் காலத்திலேதான், முழுக்க முழுக்க வியக்கத்தக்க வீரச் செயல்களும், திண்மைமிக்க தீரச் செயல்களும் பல்லாற்றானும் இயற்றப்படுகின்றன. அதன் விளைவாக இக் கால அளவு முழுமைக்குமே புகழ் ஏற்படுகிறது. சமகாலத்தவர்களைத் திகைக்க வைக்கக்கூடிய அளவில் இக் காலமானது புகழேணியின் உச்சியை எய்தி இருந்ததெனக் கூறலாம். இத்தகைய புகழ் மண்டிய நூற்றாண்டானது அக்பரது ஆட்சிக் காலத்தில் தொடங்கி, ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தோடு முடிகிறது (1556—1657). இந் நூற்றாண்டிலேதான் பெரிய பெரிய வெற்றிகள் ஏற்படுகின்றன. வெல்லப்பட்ட நாடுகள் ஒருங்கே சேர்க்கப்படுகின்றன; பேரரசு அமைக்கப்படுகிறது. எதிர்காலத்தை ஊடுருவ வல்ல அரும் பெருங் கொள்கைகள் ஆக்கப்படுகின்றன. அரசியல் கலையில் புதிய முறைகள் கையாளப்படுகின்றன. கலைத்துறையில் புதிய பாதைகள் வகுக்கப்படுகின்றன. சமயத் துறையில் புதிய இயக்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்த நூற்றாண்டின் பாதியளவு காலத்தை அக்பரின் ஆட்சிக்காலம் கவர்ந்துகொள்கிறது. அப் பேரரசரின் மேதைத்தன்மை தனது அழிக்கமுடியாத முத்திரையை இக் காலத்தின்மீது பதித்துவிட்டுப் போயிருப்பதை நாம் உணர்கிறோம். இந்திய இஸ்லாமிய அரசியலமைப்பு, ஒழுங்குமுறை (Polity), படித்தர வளர்ச்சி பெற்று முழுமை (Evolution) பெற்ற வரலாற்றில் அவரது ஆட்சிக் காலம் சுவைமிக்கதொரு பகுதியாக விளங்குகிறது. கோனாட்சி முறையானது (Monarchy), அஃது ஓர் அரசியல் அமைப்பு என்ற முறையிலும், ஆட்சித்துறையில் அடையத்தக்க ஒரு குறிக்கோள் என்ற

நிலையிலும், தன் வளர்ச்சியின் உச்சநிலையை எய்தியது இக்காலத்திலேதான் எனலாம்.

மொகலாய வெற்றியின் தன்மை

அத்தகைய வியத்தகு வளர்ச்சியினை மொகலாய அரசு எங்ஙனம் எய்தியது என்பதையும், பொதுவாக மொகலாய ஆட்சியின் பல்வேறு சாதனைகளும் எங்ஙனம் சாதிக்கப்பட்டன என்பதையும் நாம் உள்ளவாறு புரிந்துகொள்ள வேண்டுமானால், மொகலாய வெற்றியின் இயல்பினை நாம் நன்கு பரிசீலனை செய்யவேண்டும். ஏனெனில், மொகலாய வெற்றியில் காணப்படக்கூடிய தனிப்பட்ட ஒரு தன்மையாலேதான், மொகலாய ஆட்சித்துறை வளர்ச்சியின் போக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக் காலத்தின் இணையற்ற சாதனைகளுள் ஒன்றாக அவ் வளர்ச்சி அமையப்பெற்றதற்கும் மொகலாய வெற்றியின் அச் சிறப்பியல்பே காரணமாகும். இந்தியாவை வென்ற பலருள் மொகலாயர்கள்மட்டும் எவ்வாறு அவ்வளவு தூரம் வளர்ச்சியடைய முடிந்தது என்பதையும், வெற்றியாளர்களில் ஏனையோர் ஏன் அவ்வளவு முன்னேற்றம் காண முடியவில்லை என்பதையும் நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். மேலும், மொகலாயர்கள் என்ற ஒரே வம்சத்தவர்கள் எங்ஙனம் அவ்வளவு நீண்ட காலம்வரை ஆட்சி புரிய முடிந்தது என்பதையும், மக்களின் நேசத்தையும் பாசத்தையும் அவர்கள் அத்துணை நீண்ட நாட்களுக்கு எங்ஙனம் தொடர்ந்து பெற முடிந்தது என்பதையும் நாம் நன்கு புரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். அதிலும் ஏனைய எல்லா அரசர்களுள்ளும் அக்பர் எனும் பேரரசர்மட்டும் எப்படிக் கோனாட்சியின் தரத்தை அதன் உச்சநிலைக்கு உயர்த்த முடிந்தது என்பதையும், என்றும் எவருமே கண்டிராததொரு மேன்மையான நிலைக்கு அக் கோனாட்சியை அவரால் எங்ஙனம் கொண்டு வரமுடிந்தது, அதனால் இந்தோ - இஸ்லாமிய அரசு எங்ஙனம் புதியதொரு சிறப்பியல்பை அடைந்தது என்பதையும் நாம் நன்கு உணர்ந்துகொள்வது நலமுடைத்தாகும். இத்தனைக்கும் மொகலாயர்களும், அவர்களுக்கு முன்பு வந்த படையெடுப்பாளர்களைப் போன்றே இந்தியாவுக்கு அந்நியர்கள் என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும். எனவே, ஈடும் எடுப்புமற்ற அவர்களுடைய சாதனைகளை விளக்க வேண்டுமானால், அவர்களது வெற்றியில் ஏதோ ஒரு தனிச்சிறப்பு இருக்க வேண்டும் என்பதையும், நாடுகளை வெல்வதிலும் வென்ற நாடுகளைச் சேர்த்து அமைப்பதிலும் அவர்கள் ஏதோ ஒரு நூதனமான முறையைக் கையாண்டிருக்க வேண்டுமென்பதையும் நாம் அறுதியிட்டுக் கூறிவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. மொக

லாயர்கள் இந்தியாவை வென்று அடிப்படுத்தத் தொடங்கிய போது இங்கு இருந்த நிலைமையும், வேறு முஸ்லிம் அரசர்கள் இந்தியாவை வெல்ல வந்தபோது இருந்த நிலைமையும் முற்றும் வெவ்வேறானவை. அதேபோன்று தங்களை வளைத்துக்கொண்ட இடையூறுகளை மொகலாயர்கள் நீக்கிய வகையும், ஏனைய முஸ்லிம் அரசர்கள் அவற்றை எதிர்கொண்ட முறையும் வெவ்வேறானவை. இடையூறுகளைச் சமாளிக்க மொகலாயர்கள் கடைப்பிடித்த கைதேர்ந்த முறைகளின் அடிப்படையிலேயே, அவர்களது பிற் காலச் செயல்களும் அமைந்தன. இந்தோ - இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையின் வளர்ச்சியும் அதனாலேயே பெரிதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம்.

முஸ்லிம்கள் இந்தியாவை வென்ற வரலாற்றில், மொகலாயர் களின் வெற்றியானது ஒரு தனிச் சிறப்பைப் பெறுகின்றது. ஏனெனில், அவர்களின் வெற்றி வெறும் புற வெற்றியேயன்றி அக வெற்றியுமாய் அமைந்துளது. வெல்லப்பட்ட மக்களின் உடல்களையும் உடைமைகளையும்மட்டும் கைப்பற்றி விட்டதோடு அவர்கள் அமைதி பெறவில்லை. அவர்களின் உள்ளங்களையும் அன்னார் கவர்ந்துகொண்டனர். அங்ஙனம், அவர்கள் மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ள முடிந்ததற்குக் காரணம், அவர்கள் இந்தியாவை வெல்லத் தொடங்கியபோது அங்கு நிலவிய ஒரு விசித்திரமான சூழ்நிலையே யாகும். அவர்களைச் சூழ்ந்துகொண்ட நூதனமான சிக்கல்களே அவர்களின் நடத்தை களைப் பெரும்பாலும் தீர்மானித்தன. அந்தச் சூழ்நிலையை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்காக நாம் பாபரின் படையெடுப்பு நேர்ந்த காலத்தில் இந்தியாவின் அரசியல் நிலைமை எப்படி இருந்தது என்பதைப்பற்றி விரிவாக ஆராய வேண்டுவதில்லை. மேலும், பாபரின் படையெடுப்புக் காலத்தில் இந்தியாவில் காணப்பட்ட நிலைமைகள்மட்டுமே மொகலாயரின் வெற்றியைத் தீர்மானித்தன என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில், மொகலாயரின் உண்மையான வெற்றியானது, பாபரின் வெற்றிக்கு முப்பது ஆண்டுகள் கழிந்த பின்னரே தொடங்கியது. அதன்பின் பதினாறும் நூற்றாண்டு முழுவதும் அவ் வெற்றி தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆகவே, பதி னாறும் நூற்றாண்டு முழுவதிலும் இந்தியாவில் காணப்பட்ட அரசி யல் சூழ்நிலையை நாம் நன்கு ஆய்தல் வேண்டும். அந் நூற்றாண் டின் முதற் கால் பாகத்தைமட்டும் ஆராய்வதால் பயனொன்று மில்லை. மேலும் பாபர், ஹுமாயூன் ஆகியோர் கடைப்பிடித்த முறைகளைவிட அக்பர் கைக்கொண்ட வழிகளையே நாம் பெரி தும் கவனமாக நோக்குதல் வேண்டும்.

ஆப்கானியர்களும், மொகலாயர்களும்

பதினாறும் நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலையை நோக்குங்கால், நாம் அங்கே இந்துக்களேயன்றி முஸ்லிம்களும் நாடுகளை அமைத்துக்கொண்டு ஆண்டுகொண்டிருந்ததைப் பார்க்கிறோம். ஒருபுறம் இந்துக்களாகிய இராஜபுத்திரர்கள் ஆங்காங்கே சிறு சிறு நாடுகளை அமைத்துக்கொண்டு ஆண்டுவந்தனர். அந் நாடுகள் யாவும் நெருக்கமற்ற ஒரு கூட்டரசாக (Confederation) இணைந்திருந்தன. அவ்வரசு சில சமயங்களில் நன்கு வலிமை பொருந்தியதாகவும், வேறு சில சமயங்களில் வலிமையற்றதாகவும் விளங்கிக்கொண்டு வந்தது. ஆனால், எப்போதுமே, அஃது இறுக்கமற்றதொரு தளர்ந்த பிணைப்பாகவே இருந்து வந்தது. அக் கூட்டரசின் உறுப்பு நாடுகளிடையே, திண்மைமிக்க பிணைப்பு என்றுமே இருந்ததில்லை. இஃது இங்ஙனமாக, மற்றொரு புறத்திலே பரப்பிலும், மதிப்பிலும் வெவ்வேறு நிலையிலிருந்த முஸ்லிம் நாடுகள் பல ஆங்காங்கே காணப்பட்டன. அவை யாவும் ஆப்கானியப் பேரரசில் அடங்கியிருந்தன. அந்தப் பேரரசு உண்மையில் அக் காலத்திய அரசுகளிலெல்லாம் வலிமைமிக்க தொன்றாகவே திகழ்ந்து வந்தது. எனவே, மொகலாயர்கள் இந்தியாவை வென்றபோது அவர்கள் இஸ்லாமுக்குப் புறம்பான இந்துக்களைமட்டுமேயன்றி முஸ்லிம்களையும் தோற்கடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதாவது, தங்களைப்போலவே இஸ்லாம் மதத்தைத் தழுவி நின்ற ஆப்கானியர்களையும் அவர்கள் அடக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உண்மையில் அவர்கள் முதன்முதலில் எதிர்க்க நேர்ந்தது முஸ்லிம்களையே ஆகும். முஸ்லிம்களை வென்றபின்னரே அவர்கள் இந்துக்களோடு பொருதனர். ஆப்கானியர்கள் துணிவும் தந்திரமும் ஒருங்கே பெற்றிருந்த காரணத்தால் அவர்களை வெல்வது மொகலாயர்க்கு அருமையாகவே இருந்தது. தங்களது அதிகாரத்தை விட்டுக் கொடுக்க ஆப்கானியர்கள் எளிதில் முன்வரவில்லை. விடாப்பிடியாக எதிர்த்துப் பார்த்த பின்னரே அவர்கள் மொகலாயர்க்கு அடிபணிந்தனர். எனினும், அவர்களது நாடு அனைத்தையும் ஒரேயடியாக மொகலாயர்களால் பிடித்துக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், நாம் ஏற்கனவே விளக்கியுள்ளபடி ஆப்கானிய ஆட்சி முறையானது அங்ஙனம் விசித்திரமாக அமைந்திருந்தது. அவ்வாட்சி முறையில் நாடனைத்தையும் ஒருங்கே கைப்பற்றுவதென்பது மொகலாயர்க்கு முடியாத காரியமாய்ப் போய்விட்டது. விட்டு விட்டு நடைபெற்ற படை எடுப்புகள் மூலமாகவே மொகலாயர்கள் ஆப்கானியரின் நாடுகளனைத்தையும் அடிப்படுத்தினர். அவர்களின் வெற்றி முற்றுப்பெற நீண்ட காலம் பிடித்தது.

பானிபட் போர்க்களத்தில் பாபர் வெற்றி பெற்ற நிகழ்ச்சியானது, பேரரசுப் பாதையில் அவர் முதல் அடி எடுத்துவைத்ததைக் குறிப்பிட்டதேயன்றி வேறன்று. பேரரசு என்னும் இலக்கை எய்துமுன், அவரும் அவருடைய மகனை ஹுமாயூனும், பேரரான அக்பரும் எத்தனையோ இன்னல்களையும் துன்பங்களையும் அநுபவிக்க வேண்டியிருந்தது. பல ஆண்டுகளாக அவர்கள் பட்ட பாடுகளின் விளைவாகவே மொகலாயப் பேரரசானது திட்டவட்டமாக அமையப்பெற்று ஆட்சி செய்யப்பட்டதெனலாம். ஏனெனில், பாபர் உயிரோடு வாழ்ந்தவரையில், ஒவ்வொரு கணமும் அவர் ஓயாமல் ஆப்கானியர்களோடு போராடித் தீரவேண்டியிருந்தது. நாட்டின் பற்பல பாகங்களில் தங்களது ஆட்சியை நன்கு நிலை நாட்டிவிட்ட ஆப்கானியப் பிரபுக்களிடமிருந்து அவர்களின் நாடுகளைப் பறிப்பதில் பாபர் தம் முழுச் சக்தியையும் பயன்படுத்த வேண்டியதாயிற்று. எனினும், அவர் தமது காரியத்தில் முழுமையான வெற்றியைப் பெறவில்லை என்பது, ஹுமாயூனின் அநுபவங்களினின்றும் தெற்றென விளங்குகிறது. ஹுமாயூன் அரியணையையே இழக்கும் நிலை ஏற்பட்டது. பாபர் இறந்து பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே அவர் நாட்டைவிட்டே ஓட்டப்பெற்றதும், ஆப்கானிய ஆட்சி ஷெர்ஷாவின் தலைமையில் மீண்டும் நிறுவப்பெற்றதும், ஆப்கானிய எதிர்ப்பின் திண்மையை நமக்குத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. மேலும், ஹுமாயூன் பட்ட பாடுகளை எல்லாம் அக்பரும் தமது இளமைக் காலத்தே பட நேர்ந்தது. பதினைந்தே ஆண்டுகள் நிரம்பப்பெற்ற பாலகனாயிருந்தபோதே அக்பர், டில்லி அரியணைக்காகப் போட்டியிட்ட சீரும் சிறப்புமிக்க நான்கு பெரிய ஆப்கானியத் தலைவர்களை எதிர்க்கவேண்டி நேர்ந்தது. பைராம்கான் என்ற பெருமகனார், தம் அரும்பெருங் குணங்களால் அக்பரைக் காப்பாற்றாமலிருந்திருந்தால், அவருக்கும் அவருடைய தந்தைக்கும் நேர்ந்த கதியே நேர்ந்திருக்குமென்பதில் சற்றும் ஐயமில்லை. பைராம்கான் இரண்டாம் பானிபட் போர்க்களத்தில் வெற்றி பெற்றதோடு அமையாது, ஆப்கானியர்களின் வலிமையைப் படிப்படியாக ஒடுக்குவதில் பெரிதும் ஈடுபட்டார். அவர் மொகலாய ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த நான்காண்டுக் காலத்துக்குள் ஆப்கானியர்களின் கொற்றத்தை அறவே ஒடுக்கிவிட்டார். முதலாம் பானிபட் போர்க்களத்தின்மூலம் பாபர் இந்திய அரியாசனத்தைப் பெற்றதுபோன்றே இரண்டாம் பானிபட் போரின் மூலம் அக்பர் இந்தியாவின் ஆட்சியைப் பெற்றார். அப் போர்க்களம் ஆப்கானியர்களிடையே ஒரு பெருந் திகிலை ஏற்படுத்திவிட்டது. எனினும், ஆப்கானியர்கள் தரைமட்டம் ஆக்கப்படுமுன் மதிநலமிக்க அக்பர் எத்தனையோ போர்களில் ஈடுபடவேண்டி

யிருந்ததோடல்லாமல் எத்தனையோ இராஜதந்திர முறைகளையும் கைக்கொள்ள வேண்டியதாயிற்று. அப்படியிருந்தும், ஆப்கானியரின் எதிர்ப்பு முழுமையாக ஓயவில்லை. ஜஹாங்கீர் காலத்தும் அது தொடர்ந்து நடைபெற்றது. ஆப்கானியரின் இறுதிப் போராட்டமானது ஷாஜஹானது காலத்தில் நடைபெற்றது. எஞ்சிநின்ற அவர்களின் ஆட்சி அனைத்தும் பூண்டோடு அவரது ஆட்சிக்காலத்திலேதான் மாய்ந்தது. அவர்களின் பலத்தை வெற்றிகரமாகக் குறைத்தவரும், மீண்டும் வலிமைபெறுவண்ணம் அவர்களை நசுக்கியவரும் அக்பரே எனினும், அவர்கள் இறுதியாக ஒழிக்கப்பெற்றது ஷாஜஹான் ஆட்சிக்காலத் தொடக்கத்திலே தான் எனலாம்.

மொகலாயர்களும் இராஜபுத்திரர்களும்

மொகலாயர்கள் வெல்லவேண்டியிருந்த மற்றுமோர் எதிரியாயிருந்தவர்கள் இராஜபுத்திரர்களாவர். பாபர் இந்தியாவை வெல்ல முற்பட்ட காலத்தில் அவர்கள் இராணா சங்கிராம சிங் எனும் தலைவரின்கீழ் நன்கு வளர்ச்சிபெற்று, அதிகாரத்திலும் உயர்விலும் உச்சநிலையை எய்தி இருந்தனர். இந்தியாவுக்குள் படையெடுத்து வரும்படி பாபருக்கு இராணா அழைப்பு விடுத்தாரா இல்லையா என்பதுபற்றி நாம் இங்கே கவலைப்படத் தேவையில்லை. நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது யாதெனின், பாபர், பானிபட்டில் பெற்ற வெற்றியானது அவரை இந்தியப் பேரரசராக ஆக்குதற்குப் போதுமானதாயில்லை என்பதுவே யாகும்.

பேரரசு எனும் கட்டடத்தின் அடிக்கல்லை நாட்டுமுன் அவர் இராணாவோடு போரிடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏனெனில், பாபரின் திட்டங்களை உணர்ந்துகொண்ட இராணா அவரை எதிர்க்க அஞ்சவில்லை. தைமூர், முகமது கஜினி, முகமது கோரி இவர்களைப் போன்றும், ஒருசில வெற்றிகளுக்குப்பின் பாபர் இந்தியாவைவிட்டுத் தம் நாட்டுக்கே திரும்பிவிடுவார் என்று எதிர்பார்த்திருந்த இராணா, அஃது அங்ஙனமில்லை என்று தெரிந்தவுடன் வெகுண்டு பாபரை எதிர்க்க முற்பட்டார். எனவே, பாபர் பானிபட்டில் தாம் பெற்ற வெற்றியைக் கன்வாவில் உறுதி செய்யவேண்டி நேர்ந்தது. பாபர் கன்வாப் போர்க்களத்தில் இராஜபுத்திரர்களின் கூட்டுறவை வன்மையாகத் தாக்கி அழித்தார். அதிலிருந்து இந்திய அரசியல் வானிலிருந்து இராஜபுத்திரர்களின் தொல்லை மறைந்தது. அதன்பின் இந்தியாவை முறையே படிப்படியாகப் பாபர் வெல்ல முற்பட்டார். தமது

ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி அவர் தம் குறிக்கோளை அடைய இராஜபுத்திரர்களின் வீழ்ச்சி ஒரு துணையாய் அமைந்தது. கன்வா தோல்விக்குப்பின் இராஜபுத்திரர்கள் எதிலும் கலந்துகொள்ளாமல் வாளா தனித்திருந்தனர். பாபரும் அவர்களைத் தனித்திருக்குமாறு விட்டுவிட்டார். ஏனெனில், அவர் சாதிக்க வேண்டிய காரியங்கள் வேறு பல இருந்தன. ஆனால், அவற்றை எல்லாம் நிறைவேற்றுமுன் அவர் இறந்துவிட்டார். அவர் விட்டுச்சென்ற காரியத்தை நிறை வேற்றவேண்டிய பொறுப்பு அவருடைய மகனான ஹுமாயூன் தலையில் வந்து விடிந்தது. சரிவர வெல்லப்படாத ஆப்கானியர்கள் ஒரு புறமும், முணுமுணுப்புடன் அடங்கியிருந்த இராஜ புத்திரர்கள் இன்னொரு புறமும் எந்த நேரத்திலும் தாக்கக் கூடிய அபாயமான நிலையிலிருந்த ஒரு பேரரசையே பாபர் தமது மகனுக்கு வழிமுறைச் சொத்தாக (legacy) விட்டுச் சென்றார். போதிய அளவு திறமைபெற்ற தலைவர்கள் இல்லாத காரணத்தால் இராஜபுத்திரர்கள் ஹுமாயூனை எதிர்க்கத் துணியவில்லை. அதற்கு மாறாக ஆம்பர், மீவார் போன்ற இராஜபுத்திர நாடுகள் ஹுமாயூனின் தனித் தலைமையை ஏற்றுக்கொண்டன. ஆனால், ஹுமாயூன் நண்பர்களை வாழ்விக்கவோ அன்றிப் பகைவர்களை வீழ்விக்கவோ தெரியாத ஓர் அப்பாவி. தம்மை நாடி வருபவர்களின் குண நலன்களைத் தக்கபடி எடை போடத் தெரியாதவர் அவர். மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் அவர்களின் பெருந் தலைவராக நின்று பணியாற்றும் தெம்பும் துணிவும் அவர் மாட்டு ஒரு சிறிதும் காணப்படவில்லை. அவர் தொடர்புகொள்ள வேண்டி நேர்ந்தவர்கள் யாவரேயாயினும், அவர்களை அவரால் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடன் தொடர்பு கொண்ட இராஜபுத்திரர்கள், ஆப்கானியர்கள், அவருடைய சொந்த உடன் பிறந்தோர் ஆகியோரின் குண நலன்களில் எவை வலிமையானவை, எவை வலிமையற்றவை என்பதைக்கூட அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, அரச பதவியில் இருப்பவர்கள் என்றுமே அநுபவித்திராத பல துயரங்களை அவர் மேற்கொள்ள நேர்ந்தது.

இராஜபுத்திரர்களின் தனிப்பட்ட சில குணநலன்களை அவர் அறியவில்லை. அவர்கள் வல்லவர்க்கு வல்லவர்கள். நல்லவர்க்கு நல்லவர்கள். வன்முறையின்மூலம் தங்களை வென்று அடிப்படுத்த ஓர் எதிரி வருகிறானெனத் தெரிந்தால் அவரை அவர்கள் விடாப் பிடியாக எதிர்ப்பார்கள். ஆனால் அவர்களுடைய கண்ணியத்தையும், பெருந்தன்மையையும் மதித்து நடந்துகொள்பவர்களிடம் அவர்கள் எளிதில் பணிந்துவிடுவார்கள். இந்தக் குணச்சிறப்பை

ஹுமாயூன் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை. அதே போல ஆப்கானியரின் தனி இயல்பையும் அவர் அறியவில்லை. போர் விரும்பிகளாகிய ஆப்கானியர்கள் எதிரிகள்பால் தீராத பகைமை பாராட்டுவதோடு மட்டுமின்றி, பலவிதமான தந்திரங்களையும் கைக்கொள்ளத் தக்கவர்கள் என்பதும் அவருக்குத் தெரியாத தொன்றாகும். இந்த இரண்டு இனத்தவருள் ஒருவரை நட்புச் செய்துகொண்டு அவர்மூலம் இன்னொருவரை அழிக்கக்கூடிய தந்திரமும் அவருக்குத் தெரியவில்லை. அங்ஙனம் நடந்துகொள்ளும் மனப்பான்மையும் அவரிடம் காணப்படவில்லை. தம்முடைய தனித்தலைமையை ஒப்புக்கொண்ட இராஜபுத்திரர்களின் ஆதர வையும் விசுவாசத்தையும் பெற அவர் ஒருவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. இராஜபுத்திரர்கள் அவரது உதவியை நாடியபோதெல்லாம் அவர் வாளா இருந்துவிட்டார். சான்றாக, இராணி கருணாவதிபற்றிய நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். குஜராத்தை ஆண்டுவந்த பகதூர்ஷா என்பார் மீவார் நாட்டைத் தாக்கியபொழுது அதன் இராணியான கருணாவதி, ஹுமாயூனின் உதவியை நாடினாள். இராஜபுத்திரர்களுக்கே உரிய கண்ணியத் தோடும், கம்பீரத்தோடும் அவள் உதவிக்காக ஹுமாயூ னிடம் விண்ணப்பித்துக்கொண்டாள். ஹுமாயூனைத் தன் உடன்பிறந்தவராகக் கருதுவதன் அடையாளச் சின்னமாகத் தன் கைக்காப்புகளை அவள் அவருக்கு அனுப்பி வைத்தாள். கைக் காப்புகளைக் கண்டவுடனே தன் சொந்தத் தங்கையைக் காக்க விரையும் தமையனைப்போல் உதவிக்கு விரையவேண்டுவது வீரர் களின் கடமையாகும். அத்தகைய இராஜபுத்திர வீரப்பண்பாடு ஹுமாயூனிடம் அரும்பவில்லை. இராணியின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கத் தக்க நய நாகரிக வீரமரபும் (Chivalry), கற்பனை உள்ளமும், முன்மதியும் அவர்பால் காணப்படவில்லை. அதற்கு மாறாக அவர் மதிகெட்ட முறையில் மாள்வா, குஜராத் நாடுகளின் மீது பாய்ந்தார். அதனால் பலன் ஒன்றும் காணாமல் மனம் நொந்தார். பின்னர், அவர் ஷெர்ஷாவிடம் மோதிக்கொண்டார். ஷெர்ஷா ஹுமாயூனையும் மகிழ்ச்சியூட்டி மயக்கிவிட்டு, அதே சமயம் தம் அதிகாரத்தையும் வலிவாக்கிக்கொண்டுவிட்டார். இறுதியில், சௌசாவிலும், கன்னோஜியிலும் ஹுமாயூன் தோற் கடிக்கப்பட்டது, அதன்பின் அவர் முதலில் பஞ்சாபுக்கும் பின்பு சிந்துவுக்கும் ஓடினது, ஜோத்பூர் அரசரது அழைப்புக்கு இணங்க அங்கே செல்லமுயன்றது, பின்னர் அபாயம் வருமென அறிந்து அங்கிருந்து திரும்பிக் காயும் வெயிலிலே கடுமையான மணற் கடலைக் கடந்து ஓடிவந்தது, இறுதியாக இந்தியாவைவிட்டே அவர் வெளியேறியது - எல்லாமே ஒரு சோக நாடகமாக நமக்குக் காட்சியளிக்கும். இந்தியாவிலேயே பிறந்து இந்தியாவிலேயே

வளர்ந்த ஆப்கானியர்களோடு ஒப்பிடும்போது மொகலாயர்கள் இந்தியாவுக்கு அந்நியர்கள் என்பதை அவர் உணரத் தவறி விட்டார். அதோடு ஆப்கானியருக்கும் இராஜபுத்திரர்களுக்கும் நல்லுறவு இல்லை என்பதை அறிந்த பின்னராகிலும் இராஜ புத்திரர்களின் நட்பைப் பெறக்கூடிய ஒரு நல்வாய்ப்பு தானாகவே அவருக்கு வந்தபோது அதை அவர் சரிவரப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். அதன்மூலம் ஆப்கானியரை அவர் ஒடுக்கி இருக்கலாம். ஆனால், அத்தகைய அரிய வாய்ப்பையும் அவர் நழுவவிட்டு விட்டார்.

அக்பரும் இராஜபுத்திரர்களும்

ஹுமாயூன் செய்த அத்தகைய மாபெருந் தவறுகளை இழைக்கத்தக்க நிலையில் விதி அக்பரை வைக்கவில்லை. மிக இளைய வயதிலேயே அவர் அரியணை யேறிவிட்டாரெனினும், மொக லாயர்களை வளைத்துக்கொண் டிருந்த சிக்கலான நிலைமையையும், அந் நிலைமைக்கேற்ற தேவைகளையும் அவர் மிக எளிதில் உய்த் துணர்ந்துகொண்டார். அரியணைக்காக அவரோடு போட்டி யிட்டவர்களோடு அவர் போரிட்ட காலத்தில் பொதுவாக மொகலாயர்களின் நிலைமை எவ்வளவு நெருக்கடியானது என்பதையும் சிறப்பாகத் தம் சொந்த நிலைமை எவ்வளவு அபாயகரமானதென்பதையும் அவர் நன்கு உணர்ந்துகொண் டார். தம் உடன் பிறந்தானாகிய மிர்ஸா ஹகீம் என்பாருக்கு ஓர் ஒட்டு நிலமாகத் (appendage) தரப்பட்ட காபூலுக்கு அவரால் திரும்பிப் போக முடியவில்லை. இந்துஸ்தானில் இருந்த தம் விரோதி களுக்கு எதிராக ஹஜீம் மிர்ஸாவின் உதவியை நாடவும் அவரால் கூடவில்லை. தம் பிரபுக்களிடமிருந்தும் அவர் அதிகமாக உதவி எதையும் எதிர்பார்க்க முடியவில்லை. தம் எஜமானரின் நலன்களை விடத் தங்கள் நலனிலேயே குறிக்கோளா யிருந்த பிரபுக்களே அவரைப் பெரிதும் சூழ்ந்திருந்தனர். இந் நிலையில் ஆப்கானியர் களிடமிருந்து பறிக்கப்பெற்ற நாட்டில் வாழுகின்ற மக்களின் விசுவாசத்தைப் பெற அவர் யாதொன்றும் செய்யவில்லை. ஆனால் மக்களை ஆளுகின்ற ஒரு திறனைப் பிறவியிலேயே பெற்றுவிட்ட பேறு அக்பருக்குக் கிடைத்திருந்தது. ஓர் அரசருக்கு இருக்க வேண்டிய பண்புகள் யாவும் அவரிடம் இயல்பாகவே குடிகொண் டிருந்தன. எனவே, மொகலாயப் பேரரசு நிலையாக இந்தியாவில் ஏற்பட வேண்டுமானால் அதற்கு என்னென்ன தேவை என்பதை அவர் எளிதில் அறிந்துகொண்டார். ஆப்கானியரை அடியோடு வேரறுத்து இராஜபுத்திரர்களை முழுமையாக அடிபணிய வைக்க வேண்டிய இன்றியமையாமையை அவர் உணர்ந்தார். ஆனால்

அது மிகவும் கடினமானதொரு காரியமென்பதையும், அதை நிறைவேற்ற வேண்டுமானுல் பொருட்செலவு நிரம்பவும் ஆகும் என்பதையும், எனவே, அது விவேகமற்ற செயல் என்பதையும் அவர் அறிந்தார். ஆகவே, அத்தகைய இக்கட்டுகளை எல்லாம் இராஜதந்திர முறைகளால் ஒவ்வொன்ருகக் களைந்துவிட வேண்டுமென்று எண்ணினுர். இங்கேதான் இஸ்லாம் ஷா, ஷெர்ஷா போன்றவர்கள் இராஜபுத்திரர்கள்பால் கடைப் பிடித்த கொள்கை அவருக்குத் துணையாக வந்தது. ஷெர்ஷா அவர்களின் பலத்தை ஒடுக்கினுரேயன்றி சிடுசிடுப்பை அடக்க வில்லை. அவர்கள் ஆப்கானியர்களை உள்ளூற வெறுத்து வந்தனர். ஏனெனில், போர்மூலமாயும் இராஜதந்திர முறைகளாலும் ஆப்கானியர்கள் அவர்களை வென்று அவர்தம் இறுமாப்பை அடக்க அறிந்திருந்தார்களேயன்றி, அவர்களின் அன்பையும் விசுவாசத்தையும் பெறத்தக்க பெருந்தன்மையான நடத்தை அவர்கள்பால் மருந்துக்கும் காணப்படவில்லை. ஆனுல், அக்பர் ஆப்கானியர்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியவர்கள் இராஜ புத்திரர்களே என்பதை உணர்ந்துகொண்டார். எனவே, அவர்களை வெல்ல அடக்குமுறைக் கொள்கையை - அதாவது, பயமுறையைக் கடைப்பிடிப்பதைக் கைவிட்டு நயமுறையை - அவர் கையாளலானுர். ஆப்கானியர்கள் செய்த தவறெல்லாம் சமாதான முறை சிறிதும் கலவாத வன்முறையைக் கையாண்டு இராஜபுத்திரர்களை அடக்க அவர்கள் எத்தனித்ததேயாகும். இந்தத் தவறு மீண்டும் ஏற்படாதவாறு அக்பர் காத்துக் கொண்டார். டாட் (Tod) என்னும் ஆசிரியர் கூறுகிறபடி, "அவர்களுக்கு (இராஜபுத்திரர்களுக்குப்) பூட்டப்பட்ட விலங்கு களுக்குப் பொன் முலாம் பூசுவதாக இருந்தது அவரது நடத்தை" எனலாம். இந்தக் குறிக்கோளுடன் அவர் மானிட உறவில் பெரிதும் இளக்கம் தோய்ந்த உறவு முறைகளை இராஜபுத்திரர்கள் பால் கொள்ளத் தொடங்கினுர். அதாவது, இராஜபுத்திர இளவரசிகளை அவர் மணம் புரிந்துகொண்டார். அதோடு அவர் களின் நம்பிக்கைகளுக்கு அவர் மதிப்புக் கொடுத்தார். அவர்களை நண்பர்களாகவும், உறவினர்களாகவும் ஏற்றுக்கொண்டார். ஆனுல் ஷெர்ஷாவோவெனின், அவர்களை வென்று அடிப்படுத்திய பின் பகைவர்களைப் போன்றும், அடிமைகளைப் போன்றும் நடத்தினுர். இங்ஙனம் இந்த இரு பேரரசர்களும் வெவ்வேறு கொள்கைகளைக் கடைப்பிடிக்க நேர்ந்ததற்குக் காரணம் அவர்கள் தங்கள் பேரரசை நிறுவ முயன்றபோது அன்னுரை எதிர்கொண்ட வெவ்வேறு வகையான சிக்கல்களே காரணமெனலாம். ஷெர்ஷாவைப் பொறுத்தவரையில் மொகலாயர்களை நாட்டை விட்டுத் துரத்த வேண்டுமென்பதே அவரது முக்கிய குறிக்கோளாக

இருந்தது. அது நிறைவேறிவிட்டால் அப்புறம் யாருடைய தயவும் அவருக்குத் தேவையில்லாதிருந்தது. ஆப்கானிய அரசு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுவிட்டால் அதற்குமேல் அவர் அஞ்ச வேண்டிய கடினமான சிக்கல்கள் வேறு எதுவுமிருப்பதாக அவருக்குத் தென்படவில்லை. ஏனெனில், ஆப்கானிய ஆட்சிக்கு மக்கள் ஏற்கனவே பழக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குக் கீழ்ப் படிந்து நடப்பதும், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டு நிற்பதும் அவர்களுக்குப் பழகிய பாடங்களாயிருந்தன. எனவே, இராஜ புத்திரர்கள் தம்மோடு சமாதானமாயிருக்கவேண்டும் என்பது பற்றி அவர்கள் ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால், அக்பரை எதிர்கொண்டு நின்ற புதிர் வேறு வகையானதாகும். மொகலாயப் பேரரசை மீண்டும் உயிர்ப்பிப்பதுமட்டுமன்றி, அதை மக்களுக் குகந்ததாக மாற்றியமைக்க வேண்டியதும் தமது கடமையாகும் என்பதை அவர் உணர்ந்தார். அதே சமயம் தாம் ஓர் அந்நியர் என்ற விரும்பத்தகாத நிலையில் இருந்துகொண்டே தமது குறிக் கோளை அடையப் பாடுபட வேண்டுமென்பதையும் அவர் அறிந் திருந்தார். மொகலாயர்களை இந்துக்கள் சந்தேகக் கண்களுடன் பார்த்தனர். எனவே, இராஜபுத்திரர்களை அக்பர் வென்றபோது அவ்வெற்றியின் விளைவாக அவர்கள் மனத்தில் தோன்றக்கூடிய கசப்புணர்ச்சிகளை அறவே நீக்கிவிடவேண்டுமென அவர் அரும் பாடுபட்டார். வாளாலும், இரத்த வெள்ளத்தாலும் அவர்களது உள்ளத்தில் தோற்றுவிக்கப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளைக் களைய, அவற்றுக்கீடாக நட்புணர்ச்சியையும், நல்லுறவையும் அவர்கள் பால் அவர் காட்டிக்கொண்டார். அவர்களின் சமய உணர்ச்சி யையும், வேறு பல நம்பிக்கைகளையும் மதித்து நடந்துகொண்டார். இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போன்று அவர் அவர் களோடு திருமணத் தொடர்பையும் ஏற்படுத்திக்கொண்டார். திருமண உறவு முறையின்மூலமாக வென்றோர்க்கும் வெல்லப் பட்டாருக்குமிடையே இருக்கக்கூடிய பிளவு அகன்றது. அவர்க ளிடையே நட்பும் நல்லுறவும் வளர ஆரம்பித்தன.

இராஜபுத்திரர்கள் வியக்கத்தக்க முறையில் மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு நன்றி காட்டலாயினர். அவர்கள் அக்பரிடம் தம்மை அப்படியே முழுமையாக ஒப்படைத்துவிட்டு அவரோடு முழுமனத்துடன் ஒத்துழைக்கலாயினர். பேரரசின் வாழ்வுக்காக அவர்கள் தாராளமாக இரத்தம் சிந்த முன்வந்தனர். நாட்டின் பல்வேறு மூலை முடுக்குகளுக்கும் சென்று காவல் வீரர்களாகப் பணியாற்றிப் பேரரசின் நலனைக் காக்க அவர்கள் தயங்கவில்லை. ஆப்கானிஸ்தானம் போன்ற வறண்ட பனி நிலங்களாயினும், வங்காளச் சமவெளிபோன்ற சேறும் சகதியும் நிறைந்த சதுப்பு

நிலங்களாயினும் அவர்கள் முணுமுணுப்பின்றிச் சென்று பணியாற்றினர். பேரரசின் முக்கியமான பதவிகளில் எல்லாம் அவர்களுக்கு இடம் கிடைத்தது. பேரரசுக் கொள்கையினை வகுப்பதில் அவர்கள் சிறந்த பங்கெடுத்துக்கொண்டனர். அவர்களின் சாதி, சமய உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் பெருமைப்படுத்த வேண்டியே அக்பர் பல புதிய ஆணைகளைப் பிறப்பித்தார். இந்துக்களுக்கெதிராக முஸ்லிம்கள் கடைப்பிடித்து வந்த கொள்கையை முற்றும் மாற்றியமைக்கத்தக்க வகையில் அவர் பல புதிய ஏற்பாடுகளைச் செய்தார். ஜெஸியா வரி, யாத்திரிகர் வரி போன்ற வரிகளை ஒழித்தல், ஆட்சித்துறையின் எல்லாப் பகுதிகளிலும் இந்துக்களுக்கு இடமளித்தல், உலுமாக்களின் தனிப்பட்ட சிறப்புரிமைகளை அகற்றல், சமயப்பொறை போன்ற பல செயல்களின்மூலம் அவரது கொள்கையின் தாராளத்தன்மை நன்கு வெளிப்பட்டது. டில்லியில் ஆண்டுவந்த ஏனைய முஸ்லிம் அரசர்களின் கொள்கைகளுக்கு முற்றும் மாறுபட்ட கொள்கையை அவர் கடைப்பிடிக்கிறார் என்பதை அவரது ஒவ்வொரு செயலும் இந்துக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டியது. இராஜபுத்திரர்களோடு அவர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு காரணமாகவே அவர் முஸ்லிம் அரசியல் அமைப்பில் அத்தனை புதுமைகளை எல்லாம் புகுத்தினார். அப் புதுமைகளின்மூலந்தான் அவர் இந்துக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் விருப்பத்தோடு கூடிய பணிவையும் பெற முடிந்தது. இந்துக்களுக்கு அவரது ஆட்சி இனிப்பாகத் தோன்றியதற்கும் அவையே காரணமெனலாம். இங்ஙனமாக, ஆப்கானியர்களின் ஆட்சியை இந்தியாவிலிருந்து ஒழிக்க வேண்டி, இயல்பாகவே சிறந்த போர்வீரர்களாயும், அரசியல் வித்தகர்களாயும் இருந்த மொகலாயர்கள் இந்துக்களின் விசுவாசத்தையும், போருணர்ச்சிமிக்க இராஜபுத்திரர்களின் கீழ்ப்படிதலையும் பெற்று அதன் அடிப்படையில் தமக்கே உரிய ஒரு பேரரசை நிறுவ முயன்றனர்.

பிற்போக்குக் கொள்கை—அவுரங்கசீபின் நடவடிக்கை

ஆனால், இவை யாவும் ஒரு குறிக்கோளை அடைதற் பொருட்டேயன்றி வேறன்று. பேரரசை நிறுவுதல் என்ற குறிக்கோளையடைய இவை யாவும் கருவிகளாய் அமைந்தன. தைமூர் வம்சத்தாரின் நிலை அடிப்படையிலேயே ஆட்டங் கண்டிருந்ததுவும், ஆப்கானியர்களின் விடாப்பிடியான எதிர்ப்பும், இராஜபுத்திரர்களின் திமிரான அலட்சிய மனோபாவமும், மக்களின் ஆழ்ந்த அவநம்பிக்கையும் சேர்ந்து மொகலாய மன்னர்களைப் பெரிதும்

விழிப்புள்ளவர்களாக்கிவிட்டன. தம்மை எதிர்கொண்ட இடுக்கண்களைக் களைய அவர்கள் தமது முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டியதாயிற்று. அன்னாரின் தலைமை தாங்கும் ஆற்றலும் இராஜதந்திர முறைகளும் மிக உச்சநிலையில் செயல்பட்டன. அவர்களது எதிர்கால அறிவும், மக்களின் பண்புகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வன்மையும் அவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. அக்பருக்கு இப் பண்புகள் யாவும் இயல்பாகவே அமைந்திருந்தன. மிகச் சிக்கலான சூழ்நிலைகளையும் அப்படியே தமக்குச் சாதகமாக மாற்றிவிடக்கூடிய தெய்விக சக்தி ஒன்று அவர்பால் மிளிர்ந்தது. தொடக்கத்தில் மொகலாயர்களைச் சூழ்ந்து நின்ற தொல்லைகளை எல்லாம் அவர் தம் மேதையின் திறத்தால் நன்கு முழுமையாகப் புரிந்துகொண்டு அவற்றை அப்படியே மாற்றி அமைத்துவிட்டார். இராஜபுத்திரர்களின் உதவியைக்கொண்டு அவர் ஆப்கானியர்களை நசுக்கிவிட்டபின் தமது பேரரசை உறுதியான அடிப்படையின்மீது நன்கு நிறுவினார். ஆனால், அக்பருக்கும் ஜஹாங்கீருக்கும் பின்பு, மொகலாய ஆட்சியில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. கொள்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஏனெனில், மொகலாயர்களுக்குத் தொல்லை விளைத்து வந்த ஆப்கானியர்களின் இறுதி அதிகாரமும் ஒழிக்கப்பட்டு மாய்ந்துவிட்டது. இராஜபுத்திரர்கள் தாமாகவே வந்து தமது முழு ஆதரவையும் மொகலாய அரசர்களுக்கு வழங்கினர். இந்துக்களும் முழு மனத்துடன் மொகலாய ஆட்சியை ஆதரித்தனர். இவை யாவும் மொகலாயப் பேரரசின் அடிப்படையானது நன்கு ஆழமானதாயும், அகலமானதாயும் அமைவதற்குத் துணை புரிந்தன. எங்கே பார்த்தாலும் சீரும் செல்வமும் கொழித்தன. சமயப்பொறை நாடெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. இலக்கியம், கலை, பண்பாடு ஆகிய துறைகளிலெல்லாம் முன்னேற்றம் காணப்பட்டது. இங்ஙனம், நிலையான ஒரு பேரரசு எல்லா வளங்களோடும் அமைந்துவிட்டபின் மொகலாயர்கள் அதற்கெல்லாம் காரணமாயிருந்த சாதனங்களையும், கொள்கைகளையும் மறந்தனர். இராஜபுத்திர ஆதரவாலும், இந்துக்களின் ஒத்துழைப்பாலும் கிடைக்கக்கூடிய உயரிய பயன்களை அவர்கள் குறைத்து மதிப்பிடலாயினர். அதோடு அக்பரால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையையும் அவர்கள் அடியோடு மாற்றிவிட்டனர். ஷாஜஹான் காலத்திலிருந்தே அக்பரின் கொள்கை கைவிடப்படலாயிற்று. அவுரங்கசீபின் காலத்தில் அது முற்றும் கைவிடப்பட்டது. 1632ஆம் ஆண்டில் ஷாஜஹான் தமது பேரரசில் இந்துக் கோயில் எதுவும் கட்டப்படலாகாது எனத் தடையாணை விதித்தார். இங்ஙனம், கொள்கையில் ஒரு பிற்போக்கு ஏற்பட்டது. ஏனெனில், ஏற்கெனவே பேரரசு மிகப்

பெரிதாய் வளர்ந்துவிட்டது. பரந்தும், விரிந்தும் கிடந்ததொரு மாண்புமிக்க பேரரசை ஆண்டுவந்த அரசர்களுக்கு, மக்களின் ஆதரவெல்லாம் தேவையில்லாததொன்றாயிருந்தது. எனவே, மக்களை மகிழ்விக்கத் தக்க முறையில் கொள்கைகளை வகுக்க வேண்டிய கட்டாயமும் அவர்களுக்கு இல்லாமற் போய்விட்டது. மேலும், அவுரங்கசீப் போன்ற மனிதர்களுக்கு அத்தகைய கொள்கைகளில் நம்பிக்கையோ, மதிப்போ ஒருசிறிதும் இல்லை. கடவுளுக்கு விரோதமான கொள்கை என அதை அவர் நினைத்தார். எனவே, குடிமக்களுக்கும், மொகலாய மன்னர்களுக்குமிடையே சிறிது சிறிதாக மனத்தாங்கல் ஏற்படலாயிற்று. அம்மனத்தாங்கலானது, அவுரங்கசீபின் பிற்போக்குக் கொள்கைகளாலும், சமய வெறி பிடித்த நடவடிக்கைகளாலும் மேலும் மேலும் வளர்ந்ததேயன்றிக் குறையவில்லை. அவரது அடாப்பிடிக் கொள்கையின் காரணமாக மதுரையிலும், காசியிலும் இந்துக் கோயில்கள் பல இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்படுகின்றன; ஜெஸியா என்ற தலைவரியானது இந்துக்கள்மீது மீண்டும் சுமத்தப்படுகிறது. அதை எதிர்த்து வந்து, அவருடைய இணையடிகளில் அடியற்ற மரமென வீழ்ந்த மக்கட் கூட்டத்தின்மீது யானைகள் ஏவிவிடப்பட்டு நசுக்கிக் கொல்லப்படுகின்றனர். ஒருபுறம் இராஜ புத்திர நாடு ஒன்றைத் தம் நாட்டோடு இணைத்து, அதன் உரிமையாளர்களை அடக்கி ஒடுக்குவதன்மூலம் அவர் இராஜபுதன நாடு முழுவதையும் பகைத்துக்கொள்வதைப் பார்க்கிறோம். இராஜ புத்திர நாடுகள் அனைத்தும் அவருக்கு எதிராகச் சீறி எழுகின்றன. இன்னொரு புறம், சத்நாமிகள், கலகத்தில் ஈடுபடுகின்றனர்; மராட்டியர்கள் மொகலாய அரசருக்கு எதிராக நடந்துகொண்டு மொகலாயரின் அதிகாரத்தை மறுக்குமாறு தூண்டப்படுகின்றனர். இங்ஙனம், இந்த சோகக் கதையானது மேலும் மேலும் வளர்ந்து இறுதியில் பேரரசே கவிழ்ந்துவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. எங்கே பார்த்தாலும், சீற்றமும் அவநம்பிக்கையும் அலங்கோலமும் தாண்டவமாடத் தொடங்குகின்றன. சிறிது சிறிதாக மக்களுக்கு அரசாங்கத்தின்மீது இருந்த நம்பிக்கையானது குறைந்து, இறுதியில் முழுவதுமாக மறைந்துவிடுகிறது. அதோடு அவர்கள் மொகலாய ஆட்சிக்கு அளித்துவந்த ஆதரவும் மாய்கிறது. அமைதியும், செல்வாக்கும் குன்றுகின்றன. அவுரங்கசீப் தம் இறுதி யாத்திரையைத் தொடங்குமுன்பே, ஒரு காலத்தே அக்பரின் மதிமிக்க மேதைத் தன்மையால் சீரும் சிறப்புமுற ஓங்கியிருந்த ஒரு பேரரசானது அழிவு என்னும் ஆழ்ந்த பள்ளத்தாக்கின் விளிம்புக்கே விரையத் தொடங்கி விடுகிறது. இவ்வாறு பலவகை இன்னல்கள், இடுக்கண்களிடையே மொகலாயப் பேரரசு மேலும் ஒரு முப்பது ஆண்டு

களுக்குத் தள்ளாடித் தத்தளித்துக்கொண்டு காலந்தள்ளுகிறது. பழைய பெருமைமிக்க பேரரசின் ஒரு சாயையாகவே அப்போது அது காட்சியளிக்கிறது. அதன்பின் நாதர்ஷா இந்தியாமீது படை எடுத்தபோது பேரரசு எனும் கட்டடம் அப்படியே சடசட வெனச் சரிந்து தரைமீது சாய்கிறது. அதன் சீரும் சிறப்பும், செல்வமும் செல்வாக்கும், எல்லாம் மண்ணோடு மண்ணாகின்றன. நாதர்ஷா படையெடுப்பு நிகழ்ந்த இருபத்தைந்து ஆண்டு களுக்குள், ''இப் புவனத்துக்கே ஓர் ஊன்றுகோலாய் நின்ற'', மேன்மைதங்கிய மொகலாயப் பேரரசர், பக்சார் போர்க் களத்தின் இறுதியில், பிறநாட்டு வாணிபக் குழுவினர்களின் பாசறையிலே தஞ்சம் புகவேண்டிய பரிதாபமான நிலை ஏற்பட்டு விடுகிறது. பக்சாருக்குப்பின் ஏழாண்டுகள் கழித்து அதே பேரரசர், மராட்டியத் தளபதியான மாதவ ராவ் சிந்தியாவின் சிறையில் -விருந்தினராயிருக்க இசைகின்றார். அதுதான் அவுரங்கசீப் தம் வழிவந்தோர்க்கென விட்டுவைத்த செல்வமாய் அமைந்தது. ஆம்! பேரரசு சின்னபின்னமாகச் சிதறல், வமிசத்தின் மானம் அழிதல், இறுதியில் கிழக்கிந்தியத் தீவு களோடு வாணிபம் செய்யவந்த ஒரு வாணிபக் கூட்டத்தாரின் ஆட்சி இந்தியாவில் ஏற்படல் - இவைதாம் அவுரங்கசீப் தம் பிற்காலச் சந்ததியினருக்கு விட்டுச்சென்ற செல்வமாகும். முஸ்லிம்களும், இந்துக்களும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டு அடிமைகளாய்ப் பின்னர் உழலவேண்டி நேர்ந்ததென்றால் அதற் கெல்லாம் மூலகாரணமாய் அமைந்தவர், சமயத்தின் உருவமாய் நின்ற அவுரங்கசீபேயாவர். அவர்தாம், தீவிரமான தமது சுன்னி மதத்தைக் காக்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுக்காக அக்பரின் நிலையான அரும்பெருஞ் சாதனைகளைத் தவிடுபொடி யாக்கியவர்; இந்தியாவை இரத்தவெள்ளத்தில் தோயவைத்து நெருப்பால் எரித்தவரும் அவரே. இறுதியில் அவராலேதான் மொகலாயப் பேரரசு எளிதில் ஆங்கிலேயர்களின் கைகளுக் குட்பட்டது.

அவுரங்கசீப் தம் சந்ததியார்க்கு விட்டுச் சென்ற சொத் திற்கும், அவர் தம் முன்னோர்களின் வழிமுறையாகப் பெற்ற சொத்திற்கும் என்ன வேற்றுமை! உண்மையில் அக்பரால் கட்டப்பட்ட கோட்டையானது அவுரங்கசீபால் தகர்த்தெறியப் பட்டது; அக்பர், நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி, பதினாறாம் நூற்றாண்டில் மொகலாயப் பேரரசைச் சூழ்ந்து நின்ற இக்கட்டு களுக்கேற்றதொரு தனிப்பட்ட கொள்கையைத் தமக்கென வகுத்துக்கொண்டு அதன்படி நடந்துகொண்டதாலேயே அத்தனை பெரிய பேரரசை வென்று நிலைப்படுத்த முடிந்தது. அவர் கைக்

கொண்ட தனிப்பட்ட முறையே மொகலாய வெற்றியின் தனிப் பண்பாய் மிளர்கிறது. மொகலாயர்கள் பெற்ற வெற்றி, வெறும் புய வலிமையால்மட்டுமே பெற்ற வெற்றியன்று. மக்கள் ஒருவரிடம் ஒருவர் கொண்ட நம்பிக்கையாலும், ஒத்துழைப் பாலும் அது பெறப்பட்டதாகும். வெறும் நிலப்பரப்பைமட்டுமே அவர்கள் வென்றார்களென்பதன்று. அதில் வாழ்ந்துவந்த மக்களின் உள்ளங்களையும் அவர்கள் கவர்ந்துகொண்டார்கள். அவர்கள் இங்ஙனம் பெற்ற வெற்றியால், வென்றோர்களும், வெல்லப்பட்டவர்களும் ஒருங்கே மனமாற்றம் அடைந்தனர். யாவருடைய பொதுநலன்களையும் முன்னிட்டு அவர்கள் இரு சாராருமே தங்களால் எவ்வளவு சிறந்த முறையில் பாடுபட முடியுமோ அவ்வளவு உயர்ந்த முறையில் பாடுபட்டனர். அதன் மூலம் யாவர்க்கும் சம்மதமான ஒரு பொது மரபுரிமை (heritage) உருவாக்கப்பட்டது. இந்த அரும்பெருஞ் சாதனையினாலேதான் வரலாற்றாசிரியர்கள் வேறுவழியின்றி அவர்களது அரசாங்கத்தை 'அடிப்படையிலேயே தேசீயத் தன்மை பொருந்திய அரசாங்கம்' (Essentially a national government) என்றும், அவர்களது அரசைப் 'பண்பாட்டின் அடிப்படையில் அமைந்ததோர் அரசு (Culture state) என்றும் அழைக்க வேண்டியதாயிற்று. இதையெல்லாம் நோக்கும்போதுதான் இந்தோ - இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் வளர்ச்சி வரலாற்றை நுண்ணிதின் ஆராய வேண்டுமென்ற வேட்கையானது இயல்பாகவே நம்முள் எழுகிறது.

அக்பரின்கீழ் அமையப் பெற்ற இந்தோ — இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறை

முஸ்லிம்கள் இந்தியாவை ஆட்சி புரிந்துவந்த நீண்டகால வரலாற்றில், அக்பர்முதல் அவுரங்கசீப் வரை ஆட்சி புரிந்த கால எல்லையானது, எங்ஙனம் பண்பாட்டிலும் முன்னேற்றத்திலும் தலை சிறந்து விளங்குகின்றதோ அங்ஙனமே இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் வளர்ச்சியைப் பொறுத்த வரையிலுங்கூட அக் காலம் சிறப்புற்று விளங்குகிறது. உண்மை யில் இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையானது இக் குறிப்பிட்ட காலத்திலேதான் தனது வளர்ச்சியின் உச்ச நிலையை அடைந்தது. அக்பரின் காலத்தே அஃது எய்தியிருந்த நிலையைப் போன்று அவ்வளவு உயர்ந்த நிலையை, இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறை அதற்கு முன்போ

அல்லது பின்போ அடைந்ததில்லை என அறுதியிட்டுக் கூறலாம். அரசியல் துறையில் அடையத்தக்க குறிக்கோள் என்ற முறையில் பார்க்கும்போதும், ஓர் அரசியல் நிறுவனம் என்ற நிலையில் வைத்து நோக்கும்போதும், அக்பரின் அரசு ஓர் எல்லையற்ற பொதுமைத் தன்மையுடனேயே நமக்குக் காட்சியளிக்கிறது. அக்பரைப் பொறுத்தவரையில் அவரே நாட்டின் தனித் தலைமையைப் பெற்றிருந்தார். அரசே அரசாங்கமாகவும், அரசாங்கமே மன்னனாகவும் அவருக்குத் தென்பட்டன. அதில் தவறேதுமில்லை. காரணம், அவரது காலத்தே ஐரோப்பாவி லாகட்டும் அல்லது ஆசியாவிலாகட்டும் எங்குமே அத்தகைய கருத்தே உலவி வந்தது. அரசு என்ற சொல்லின் உண்மையான பொருளைக் குறிப்பிடக்கூடிய ஒருவராய் அக்பர் திகழ்ந்தார். அரசாங்கமென்பது அவரது தனி உடைமையாய் விளங்கியது. நாடும், நாட்டில் வாழ் மக்களுடன் அவரது தனிச் சொத்தாகக் கருதப்பட்டது. அவரது ஆட்சிக் காலத்துக்கு முன்பும் பின்பும் எந்த முஸ்லிம் அரசரும் எய்தி இராத உன்னத நிலையை அவர் அடைந்தாரென்றால், அதற்குக் காரணம் அவரது சொந்த ஒப்புயர்வற்ற உத்தமப் பண்புகளேயன்றி வேறல்ல. அவரது ஆளுமையின் (personality) தனிச்சிறப்பு வாயிலாகவே, கோனாட்சி என்ற அரசியல் நிறுவனம் அத்தனை உயரிய நிலையை அக் காலத்தே அடைந்தது. உண்மையிலேயே, இன்று நாம் இறைமை என்ற கருத்து எத்தகைய உட்பொருளைக் கொண்டுள்ளதாகக் கருதுகிறோமோ, அத்தகைய பொருளை உட்கொண்டதோர் அதிகாரத்தையே அவர் மன்னருக்கு உரியதெனக் கோரினார். இது விந்தையென்றால் அக் கோரிக்கையானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதென்பது இன்னும் விந்தைக்கோர் விந்தை என்பதில் ஐயமில்லை. இன்று நாம் ஒரு நாட்டை "இறைமை பொருந்திய தேசீய நாடு" என அழைக்கும்போது, அந் நாடானது, உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலுங்கூட எவராலும் கட்டுப்படுத்த இயலாத ஒரு தனித்தலைமையைப் பெற்றுள்ளது என்ற பொருளை மனத்திற் கொண்டே பேசுகிறோம். அக்பர் அத்தகைய நிலையினுக்கே, நாட்டின் அதிபதி என்ற முறையில் தமது பதவியை உயர்த்திக் கொண்டார். எனவே, அவர் இறைமையின் உறைவிடமாகத் திகழ்ந்தார். இறைமை என்பது ஒரு மானுட வடிவில் வாழ முடியுமென்றால், அத்தகைய உருவமாக அக்பர் விளங்கினார். இறைமை என்ற சொல்லின் உண்மையான பொருளுக்கு ஓர் இலக்கணமாக அவர் வாழ்ந்தார். அக்பர் இங்ஙனம் இறைமை கொண்டாட முடிந்ததென்றால், இந்தோ-இஸ்லாமிய அரசும் அதே போன்று இறைமை கொண்டாட முடியுமென்பது ஒருதலை.

அக்பரால் செலுத்தப்பட்ட இறைமையின் உட்பொருள் என்ன என்பதுபற்றியும், அதன்மூலம் இந்தோ - இஸ்லாமிய அரசு பெற்ற இறையதிகாரத்தின் இயல்பு என்ன என்பதுபற்றியும் பின்னல் பரிசீலனை செய்வோம். ஆனல், ஒன்றுமட்டும் ஈண்டுக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்: அதாவது, அக்பரது இறையதிகாரத்தின் சாரமாவது, அவரது அரசியல் கொள்கையின் விளைவேயன்றி, வேறன்று. நாடுகளை வெல்வதில் அக்பர் கடைப்பிடித்த கைதேர்ந்த முறைகளும், ஆட்சிக்கலையின் நுட்பங்களும் சேர்ந்துதான் அவரது இறைமைக்கு வழி வகுத்தன எனலாம். அம் முறைகள் யாவும் அவராலேயே கண்டுபிடிக்கப்பட்டவை. மொகலாயர்கள் தங்களைச் சூழ்ந்து நின்ற இக்கட்டான நிலைமையினின்றும் மீள்வதற்கு அவை மிகமிகத் தேவைப்பட்டன. இங்ஙனம், அக்பர் தம் சொந்தத் திட்டங்களின்படி, நாடுகளை வென்று நிலைப்படுத்தவேண்டிக் கடைப்பிடித்த புதுமையான முறைகளின் விளைவாகவே, அவர் தன்னேரில்லாத் தனித் தலைமையை நாட்டில் பெறமுடிந்தது எனலாம். இனி, இவ்வுண்மையை ஈண்டுக் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் விளக்கப் புகுவோமாக! அதோடு, அக்பரின் இறைமை எத்தகைத்து என்பதையும் ஆராய்வோமாக!

மொகலாயக் கோனுட்சிமுறைக்கும், டில்லி சுல்தானிய ஆட்சிமுறைக்குமுள்ள வேற்றுமை

டில்லி சுல்தான்கள் வரம்பற்ற கோனுட்சியை நிலைநாட்ட முயன்று அம் முயற்சியில் தோல்வியடைந்துவிட்டார்களென்றும், சூர் (Sur) மன்னர்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டதால்தான் அரசு எனும் மரக்கலத்தை அவர்கள் சுக்குநூருக்கிவிட்டனர் என்றும் நாம் ஏற்கெனவே இந்நூலில் வேருரிடத்தில் கண்டோம். இதற்குரிய முக்கிய காரணமாவது, முஸ்லிம் குடிமக்களிடையே அவ்வரசர்கள் வகித்து வந்த ஓர் இரண்டுங்கெட்டான் நிலையே ஆகும். வேறெங்குமே காணக்கூடாத ஒரு சிக்கலான சூழ்நிலையில் டில்லி சுல்தான்கள் ஆட்சிபுரிய நேர்ந்தது. அரேபியாவுக்கு வெளியே இருந்த நாடுகளுக்கு, இஸ்லாம் பரவியபோது முஸ்லிம் மன்னர்கள் நாடுகளைப் பிடிக்கின்ற குறிக்கோள்களை மட்டுமின்றி, பிடிக்கப்பட்ட நாடுகளில் வாழும் மக்களை இஸ்லாத்துக்கு மதமாற்றம் செய்யவேண்டுமென்ற குறிக்கோளையும் கொண்டிருந்தனர். இந்தியாமீது படையெடுத்த முஸ்லிம் அரசர்களும் இதே குறிக்கோளைக் கொண்டே இந்தியாவினுள் நுழைந்தனர். ஆனல், அவர்களது எண்ணம் ஈடேற

வில்லை. நாட்டைக் கைப்பற்றுவதில் அவர்கள் முழுமையான வெற்றி பெற்றனர். ஆனுல், மக்களை மதமாற்றம் செய்வதில் அவர்களால் ஒரு சிறிதும் வெற்றி காண முடியவில்லை. நாட்டில் வாழ்ந்த பெரும்பாலான சாமானிய மக்களை அவர்கள் மாற்ற முடியவில்லை. எனவே, இஸ்லாமிய அரசின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று நிறைவேருமலேயே கிடந்தது. அதைக் கண்ட தீவிர முஸ்லிம்களும் குருமார்களும் அக் குறிக்கோள் நிறைவேற்றப் பெறவேண்டுமென எப்போதும் கூக்குரலிட்டுக் கொண்டே இருந்தனர். உலேமாக்கள் (Ulemas) அரசைக் குறைகூறுவதையும், முஸ்லிம்களல்லாத குடிமக்கள்மீது அடக்கு முறைக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு அரசரைத் தூண்டு வதையுமே தங்களின் முக்கியக் கடமையாகக் கொண்டனர். அதன் விளைவாக இஸ்லாம் சமயக் குருமார்களின் செல்வாக்கு அரசியலில் ஓங்கத் தலைப்பட்டது. அரசாங்க நடவடிக்கைகளை அவர்கள் ஓரளவு கட்டுபடுத்தலாயினர். சுல்தானும் அவர்களை ஒரேயடியாக மீறி நடக்க முடியாத நிலையில் இருந்தார். உலே மாக்களுக்குக் கட்டுப்படுகின்ற அளவுக்கு அவர்களின் தனித் தலைமை குன்றியது. அதன் விளைவாக முஸ்லிம் அரசர்கள் தங்களது குடிமக்களோடு கொண்டிருந்த உறவு முறையில் இரு பெரும் மாற்றங்கள் அல்லது பயன்கள் விளைந்தன. முதலா வதாக, முஸ்லிம் குடிமக்கள் அத்தனை பேரின் விசுவாசத்தையும் சுல்தான் முழுமையாகப் பெற முடியாது போயிற்று. ஏனெனில், அவர்கள் முஸ்லிம் மதாசாரியர்களுக்குப் பெரிதும் கட்டுப் பட்டிருந்தார்கள். மதாசாரியர்கள் போட்ட கோட்டை மற்ற வர்கள் தாண்டமாட்டார்கள். முஸ்லிம் மக்களின் வாழ்க்கையின் மீது உண்மையிலேயே ஆட்சி புரிந்து வந்தவர்கள் இத்தகைய சமயக் குருமார்களேயாவர் எனலாம். இரண்டாவதாக, முஸ்லிம் களல்லாத குடிமக்களின் முழுமையான விசுவாசத்தையும் முஸ்லிம் மன்னர்களால் பெற முடியவில்லை. அம் மன்னர்கள் இந்துக்களுக்கெதிராகக் கடைப்பிடித்த அடக்குமுறைக் கொள் கையே அதற்குக் காரணமாகும். இந்தியாவில் ஆண்டுவந்த முஸ்லிம் மன்னர்கள் சமயத்துறையில் தலைமை கொண்டாட முடியவில்லை. அதாவது, கிலாஃபத் (Khilafat) உரிமையை அவர்களால் கொண்டாட இயலவில்லை. அதே சமயத்தில் மதத்தின் செல்வாக்கு அரசாங்கத்தினூடே ஆழ்ந்து நுழை வதையும் அவர்களால் தடுக்க முடியவில்லை. இந்த இக்கட்டான நிலையில் முஸ்லிம் அரசர்கள் தங்களைக் கலீஃபாவின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு, அரசியல் காரியங்களில் சமய குருமார் களின் தலையீடுகளை வாளா பொறுத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று. இதன் விளைவாக வரம்பற்ற

கோனுட்சி முறை நாட்டில் நிறுவப்படுவதென்பது முடியாத காரியமாகிவிட்டது. அதேபோல இந்திய மரபுகளையும் அரசாங்க நிறுவனங்களையும் முஸ்லிம் மன்னர்கள் ஏற்றுக்கொள்வதென் பதும் இயலாமற் போயிற்று, அவற்றைக் கடைப்பிடித்திருந்தா லாவது ஒருவேளை வரம்பற்ற கோனுட்சி ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால், அதற்கும் வழியில்லாமற் போய்விட்டது. ஏனெனில், இந்திய மரபுகளையும், நிறுவனங்களையும் ஏற்றுக்கொள்வதென்பது அவர்களது இந்திய எதிர்ப்புக் கொள்கைக்கே விரோதமான தாகும். மேலும், அரசாங்கத்தில் இந்துக்கள் பங்கெடுத்துக் கொள்வதையும் அவர்கள் விரும்பவில்லை. இரண்டாவதாக இந்துப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டால், தெய்விக உரிமை யின் வழியே அரசு இயங்குகிறது எனும் கொள்கை, சமயப் பொறைக் கொள்கை போன்ற தங்களுக்கு உடன்பாடில்லாத பல கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டி நேரிடலாமெனவும் அவர்கள் அஞ்சினர்.

முஸ்லிம்களின் ஆட்சிக் கலையில் அனைவரும் ஒப்பமுடிந்த ஒரு பெருங் கொள்கையைக் கைவிட்டுவிடுவதென்பது டில்லி சுல்தான் களுக்கு, அவர்கள் அப்போதிருந்த சூழ்நிலையில் இயலாத காரிய மாயிருந்தது. இஸ்லாம், இந்தியாவில் நுழைந்தபோது அஃது இருந்த நிலையில் சுல்தான்கள் அதனை மீறும் துணிவைப் பெறக் கூடவில்லை. கஜினி மகமது, முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவில் கடைப்பிடிக்க வேண்டிய குறிக்கோள்களுக்கு அடிகோலினுர். மகமது கோரி அவற்றை அப்படியே பின்பற்றினுர். அவரை, அவரது வழிவந்த வம்சத்தவர்கள் அப்படியே அடிபற்றினர். இஸ்லாமியப் படையெடுப்பாளர்கள் போரில் வெற்றிபெற்ற காரணத்தால் இந்துக்களை அடக்கியொடுக்குவதையும் அவர்களை முகமதிய மதத்துக்குப் பலவந்தமாக மாற்றுவதையுமே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அத்தகைய மனப்போக் குடன் அவர்கள் இருக்கும்வரை இந்துக்களின் ஒத்துழைப்பை அவர்கள் பெற எத்தனிப்பார்களென எதிர்பார்ப்பது நடவாத காரியமேயாகும். அதோடு சமயப்பொறையைக் கடைப்பிடிப் பதற்கும், இந்து அரசியல் நிறுவனங்களை ஏற்றுக்கொள்வதற்கும் அங்கே இடமில்லை. இறுதியாக, முஸ்லிம் அரசர்களின் போர் வெறியெல்லாம் ஒருவாறு ஓய்ந்து, நாடு பல துண்டுகளாகப் பிரிந்த பின், இந்துஸ்தானத்திலும், தக்கணத்திலும் ஆங்காங்கே இருந்த பல சிற்றரசர்கள் இந்துக்களுடன் சமாதான முறையில் வாழ வேண்டுமென்ற கொள்கையையும், சமயத்துறையில் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற கொள்கை யையும் மேற்கொண்டு ஆட்சிபுரிந்தனர். ஒரு புதிய சூழ்நிலை

அப்போது உருவாயிற்று. அச் சூழ்நிலையால் ஷெர்ஷாவும் பாதிக்கப்பட்டார். அவர் சமயத்துறையில் ஒரேயடியாக அடக்கு முறைக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. அதேபோன்று அவர் சமயப்பொறைக் கொள்கையைத் தீவிரமாகக் கடைப் பிடித்தாரென்றும் கூறிவிடுதற்கில்லை. ஆட்சித் துறையைப் பொறுத்தவரையில் அவர் திறமையையும் கட்டுப்பாட்டையும் பெரிதும் வற்புறுத்தினர். அரசாட்சியை நன்கு அமைப்பதில் அவர் ஒரு மேதையாக இருந்த காரணத்தால் இந்திய ஆட்சி முறையின் நுட்பத்தை அவர் அறிந்து அதைத் தமது ஆட்சி முறையில் புகுத்தினர். அதாவது, அவர் கிராமத்தை ஆட்சித் துறையின் அலகாகக் (unit) கொண்டார். கிராம ஆட்சி என்ற அடிப்படையின்மீது அவர் தமது ஆட்சிமுறைக் கட்டடத்தை எழுப்பினர். அடிப்படையை நன்கு வலுப்படுத்தி அதன்மீது ஏனையவற்றை எழுப்பவேண்டுமென்ற கொள்கையை அவர் கடைப்பிடித்தார். அக் கொள்கையை அவர் செயலாக்கும்போது, இந்துக்களை அவர் தம்முடன் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளவோ, அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவோ முயல வில்லை. ஆப்கானிய ஆட்சி முறையில் அவரால் தோற்றுவிக்கப் பட்டு வளர்க்கப்பட்ட பலவீனம் அதுவேயாகும். அப் பலவீனத் தின் அடிப்படையில், வரம்பற்ற ஒரு வல்லாட்சியை ஏற்படுத்த இஸ்லாம் ஷா என்பார் முயன்றதாலேயே அவர் ஆப்கானிய ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தவராகிவிட்டார். ஷெர்ஷாவே இன்னும் நீண்ட நாள் உயிரோடு இருந்திருப்பாரேயானாலுங்கூட வரையறையற்ற ஒரு முடியாட்சியை, ஆப்கானியர்கள் ஏற்படுத்தியிருக்க முடியாது. ஏனெனில், இந்துக்களின்மீது அவர்களுக்கு இருந்த ஓர் அலட்சிய மனப்பான்மையும், சமய சம்பந்தமான காரியங்களில் அவர்கள் வெளிப்படுத்திய தீவிர மனப்பான்மையும், அரசியல் துறையில் அவர்கள் கொண்டிருந்த நிலமானிய ஏற்பாடும் (Feudal organization) கட்டுப்பாடுகளற்ற ஒரு முடியாட்சி ஏற்படுவதற்கு முற்றும் விரோதமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டன.

மொகலாயர்கள் புதிய இறைமாட்சிக் கொள்கையையும், பண்பாட்டையும் கொணர்தல்

மொகலாயர்கள் இந்தியாவுக்குள் வந்தபோது அவர்கள் தம் முடன் புதியதொரு கண்ணோட்டத்தையும் கொணர்ந்தனர். அவர்கள் உண்மையிலேயே பண்புசெறிந்தவர்களாக விளங்கினர். முக்கியமாகத் தைமூர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வாழ்க்கை,

சமயம் இவைபற்றி மிகப் பரந்த நோக்கமும், தாராள மனப் போக்கும் உடையவர்களாயிருந்தனர். அவர்கள் ஆட்சி புரிவதில் வல்லவர்களாயிருந்தனர். அரசாங்கத்தைப்பற்றியும், அரசைப் பற்றியும் அவர்கள் பல உயர்ந்த மரபுகளைக் கைக்கொண்டு விளங் கினர். அம் மரபுகள் டில்லி சுல்தான்களால் வளர்க்கப்பெற்ற னவும், ஆப்கானியர்களுக்குப் பழக்கப்பட்டனவுமான கோட்பாடு களுக்கு முற்றும் மாறுபட்டவைகளாயிருந்தன. தாராள மனப் போக்கிலும், பண்பாட்டின்பால் அவர்களுக்கிருந்த ஆர்வத் திலும், அரசாங்கம், இறைமாட்சி இவைபற்றி அவர்கள் கொண் டிருந்த மரபுகளிலும் அவர்கள் இந்துக்களையே பெரிதும் ஒத்திருந் தனர். அவர்கள்பால் மிளிர்ந்த தாராளத்தன்மையும், பண்பும் அவர்களின் குடும்பத்தில் வழி வழியாகவந்த முந்தையோர் சொத்தெனலாகும். அமீர் தைமூரின் காலத்திலிருந்தே அம் மரபுரிமைப் பண்புகளின் வரலாற்றை நாம் தொடங்கக்கூடும். அவை அவ்வளவு பழமையானவை. தைமூர், கலையில் பெரிதும் ஆர்வமுள்ளவர். இலக்கியத்தில் அவருக்கு நல்ல ஈடுபாடு இருந்தது. நாகரிகமான பழக்க வழக்கங்களில் அவருக்கு நாட்டம் பெரிதும் காணப்பட்டது. மத்திய ஆசியாவில், சாமர்க்கண்டு, பொஹாரா போன்ற நகரங்களைப் பண்பாட்டின் இருப்பிடங் களாகத் திகழச்செய்த பெருமை அவருடையதேயாகும். தைமூரின் மகனை ஷாருக் என்பவரும் தந்தையைப்போலவே பெரும்புலவர்களையும், கலைஞர்களையும், கவிஞர்களையும் ஆதரிப்ப தில் கண்ணுங் கருத்துமாயிருந்து பெரும் புகழ் ஈட்டினர். ஆசியா வின் பல பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள் அவரது அவைக்களத்தை நாடிவந்தனர். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அவர் அழைப்புகளையும் விடுத்தார். ஷாருக்கின் தனயரான உலுக் பேக் (Ulug Beg) என்பாரும் சிறந்த போர்வீரராக இருந்ததோடு மட் டுமேயன்றி, அறிவியலில் வல்லுநராயும் திகழ்ந்தார். அறிவியலை வளர்க்க வேண்டி அவர் அரும்பாடுபட்டார். வானவியல் கலையை வளர்ப்பதற்காக அவர் சாமர்க்கண்டு நகரில், ஒரு மலை அடிவாரத் தில் மூன்றடுக்கு மாளிகை ஒன்றைக் கட்டுவித்தார். அதோடு அவர் தாமே சில வானவியல் அட்டவணைகளைத் தொகுத்தார். பாபரின் தாய்வழிப் பாட்டனரான யூனுஸ் கான் என்பார் மிக உயர்ந்த பண்பினர். மங்கோலியர்கள்பால் காணப்படக்கூடிய மூர்க்கத் தன்மையானது அவரிடம் மருந்துக்கும் காணப்படவில்லை. அவர் ஒரு கவிஞராயும், ஓவியராயும், எழுத்தாளராயும், இசைவாண ராயும், அறிவியல் வல்லுநராயும் இன்னும் பலவற்றில் திறமை மிக்க பல்கலை மேதையாகவும் விளங்கினர். பாபரைப் பொறுத்த வரையில் அவரும் ஒரு பல்கலைச் செல்வரெனின் மிகையாகாது. பல துறைகளில் அவர் ஏற்றம் பெற்றிருந்தார். போரில் வீர

ராயும், வெற்றி வேந்தராயும் விளங்கிய அவர் அதே சமயத்தில் ஒரு பெரும் புலவராயும், கவிஞராயும், உயிரோட்டமிக்க உரை நடை எழுத்தாளராயும் விளங்கினர். அவர் எங்கே சென்றாலும் அவரை மக்கள் அன்புடன் வரவேற்றனர். அவரும் அம் மக்களின் நாடுகளை எல்லாம் வளப்பமிக்க நாடுகளாக ஆக்கினர். இந்துஸ்தானுக்கு வந்திருந்தபோது, ஒருபுறம் போர்ப்பறை முழக்கிக் கொண்டிருந்த அதே வேளையில் அவர் அழகிய தோட்டங்களைப் பயிர் செய்வதிலும் முனைந்திருந்தார். ஓயாத தொல்லை எனும் புயல் வீசிக்கொண்டிருந்த அவரது வாழ்நாளில், அவர் ஒரு சில அமைதியான கணநேரங்களைத் திருடி அந் நேரங்களைத் தம் ஒப்புயர்வற்ற நினைவுச் சின்னமான தம் வரலாற்றை வரைவதிலும், 'துருக்கி திவான்' என்ற துருக்கிமொழி யாப்பிலக்கணத்தை யாத்தலிலும், அம் மொழியில் பல விளக்க உரைகளை எழுதுவதிலும் செலவிட்டார். அவர் திறமைமிக்க ஓர் இசைவாணர். கலைத்துறையில் ஒரு முன்னோடி. இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல் அவரிடம் சூஃபிக் கொள்கைகளின் உயிரூக்கமானது ததும்பி வழிந்தது. மாஸ்நவி (Masnavi) என்பது அவருக்கு இன்பத்தின் ஊற்றாகத் திகழ்ந்தது. இங்ஙனம், தைமூர் குடும்பத்தினரின்பால் விலைமதிக்க முடியாத பண்பாட்டின் செல்வங்கள் பலவும் மண்டிக்கிடந்தன. இவை யாவும் சேர்ந்து தீவிர இஸ்லாத்தின் முனையை மழுக்கிவிட்டன. தாராள மனப்பான்மையானது அவர்கள்பால் தாமாகவே அரும்பலாயிற்று.

நல்லவேளையாக மொகலாயர்கள் இந்தியாவுக்குள் அடி எடுத்து வைப்பதற்கும், சமயத்துறையில் தாராள இயக்கத்தின் சிகரமெனத் தகும் ஓர் இயக்கம் இங்கே தோன்றுவதற்கும் சரியாக இருந்தது. பக்தி இயக்கம் என்பதே அத்தகைய தாராள இயக்கமாகும். அவ்வியக்கத் தலைவர்கள் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் எனப் பறைசாற்றினர். இறைவனது முன்னிலையில் யாவரும் சமம் என்று கூறினர். புறச் சடங்குகளால் இறைவனை மகிழ்விக்க முடியாதென்றும், இறைவன்பால் பக்தி கொள்வதால் மட்டுமே அவன் அருளைப் பெறலாமென்றும், பக்தியே தூய்மையின் சின்னம் எனவும், கடவுளிடம் இரண்டறக் கலப்பதொன்றே மானிட வாழ்வின் குறிக்கோள் என்றும் அவர்கள் போதித்தனர். சாத்திரச் சடங்குகளையும், வைதிகக் குருமார்களையும், போலிப் புற வேடங்களையும், சமய முறைகளையும் அவர்கள் பெரிதும் கண்டித்தனர். அறிவுக்கு அப்பாற்பட்ட ஆன்மிக அநுபவங்களைப் பற்றிப் (Mysticim) பக்தி மார்க்கத்தினர் கொண்டிருந்த கொள்கைகள், சூஃபி சமயத்தினர் அதுபற்றிக் கொண்டிருந்த

கொள்கைகளையே பெரிதும் ஒத்திருந்தன. அக்பர், ஜஹாங்கீர் போன்ற மொகலாயப் பேரரசர்கள் இவ்வியக்கத்தின் உட்பொருளை நன்கு உணர்ந்து போற்றினர். இங்ஙனம், அவர்களது மனவியல்பிலேயே பண்பாட்டுணர்வு நன்கு ஊறிக் கிடந்த காரணத்தால், இந்திய மனப்பான்மையோடு அவர்களுக்கு ஒரு தொடர்பு இயல்பாகவே ஏற்பட்டது. அடிப்படையான இந்திய உணர்வும், அவர்களது இயல்பூக்கமும் ஒன்றாகவே அமைந் திருந்தன. நாம் அறிந்த வரையில் பக்தி மார்க்கத்தை ஒட்டிய பாடல்களைப் புனையும் அளவுக்கு அக்பருக்கு அதில் ஈடுபாடு இருந்தது. நான்கடிகளில் அமையப்பெற்ற உணர்ச்சி மிக்க பக்திப் பாடல்களை அவர் ஹிந்தியில் இயற்றியுள்ளார். அவருடைய மாற்றாந்தாயின் மகனான அப்துல் ரஹீம் கானி கானா (Abdul Rahim Khani-Khana) என்பவரும் ஹிந்தி மொழியில் பக்தி ததும்பும் பல பாடல்களை இயற்றியுள்ளார். பக்தி மார்க்கத்தில் அவர் அக்பரைக் காட்டிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இத்தகைய ஆன்மிகத் தொடர்பின்மூலம் அக்பர் தம்மால் ஆளப்பட்ட மக்களின் அன்பையும் ஆதரவையும் எளிதில் பெற முடிந்தது. இந்துக்களின் ஒத்துழைப்பும், சேர்க்கையும் இன்றி அரசாங்கத்தை நடத்துவதென்பது மிக அரிது என்பதை அவர் எளிதில் புரிந்துகொண்டார். இந்துக்களின் கூட்டுறவும், அவர்களது பண்பாட்டின் சாரமும் மனத்துக்கு நன்கு பிடித்துப் போன ஒருவருக்கு, அவர்களின் அரசியல் மரபுகளும் நிறுவனங் களும் பிடிக்காமற் போக நியாயமில்லை. உண்மையில், தைமூர் வம்சத்தவரின் அரசாங்கக் கொள்கைகளைப் பெரிதும் ஒத்திருந்த இந்திய இறைமாட்சிக் கொள்கைகளையும், அரசாங்கக் கோட் பாடுகளையும் அவர் பெரிதும் உணர்ந்து போற்றியிருக்க வேண்டும். மேலும், ஷெர்ஷா என்பார் ஏற்கெனவே அதிகார வர்க்கத்தை உட்கொண்ட ஓர் அரசாங்க நிறுவனத்தை மிக நல்ல முறையில் அமைத்து வைத்திருந்தார். அது தைமூர்க் குடும்பத்தாரின் இறை மாட்சிக் கொள்கைக்குப் பெரிதும் ஒத்திருந்தது. எனவே, அக்பர் அதை அப்படியே ஏற்றுக்கொண்டார். மொகலாயர் களுக்கு ஏற்கெனவே நன்கு பழக்கமான ஒரு கோனாட்சி முறையை அமைப்பதொன்றே அக்பரின் கடமையாய் அமைந்தது. அங்ஙனம் அமைப்பதில் அவர் தம் முன்னோர்களான சிங்கிஸ் கான், தைமூர் போன்றவர்களால் உண்டாக்கப்பட்டு, அவர்களின் வழித் தோன்றல்களால் வளர்க்கப்பட்ட அரசு மரபுகளிலிருந்து நிறையக் கடன் வாங்கிக்கொள்ள முடிந்தது.

மொகலாயக் கோனுட்சியின் சமயச் சார்பற்ற தன்மை-தெய்விக உரிமையின் வழிப்பட்ட ஆட்சி

தைமூர் வம்சத்தவர்களுக்கு நன்கு பழக்கமான கோனுட்சி நிறுவனம் துருக்கிய மங்கோலியர்களின் நிறுவனங்களினின்றும் தோன்றியதொன்ருகும். அதனுடைய தோற்றத்தின் வரலாற்றை இன்னும் சிங்கிஸ்கான் காலத்துக்கேகூடக் கொண்டு போகலாம். ஏனெனில், அவருடைய முன்னேரான புஜஞ்ஜார் கான் நைருன் (Buzanjar Qaan Nairun) என்பார் தாம் தெய்வத்தின் வழித் தோன்றல் என்று கூறியுள்ளார். ஆலங்குவா (Alanquwa) என்ற அவருடைய தாயார் தெய்விகமான ஒளிக்கதிர் ஒன்றின்மூலம் கருவுற்ருரெனப் புராணக் கதை கூறுகிறது. எனவேதான் அவருடைய சந்ததியார் நைருன் அல்லது ஒளி வழிப் பிறந்தவர்கள் (light-born) என்று அழைக்கப்பட்டனர். அவ் வம்சத்தில் ஒன்பதாம் தலைமுறையில் வந்த சிங்கிஸ்கான் இங்ஙனம் தெய்விக வழித் தோன்றலாகவும், அதே சமயம் இவ்வுலகத்தையே வென்றதனுல் ஏற்பட்ட கம்பீரத்தோடு கூடிய ஒரு பேரரசராயும் திகழ்ந்தார். தன்னேரில்லாத் தனித் தலைமை அல்லது இறைமை என்பது அவருடைய சந்ததியார்களின் பிறப்புரிமையாக மாறியது. அக் குடியிற் பிறப்பதொன்றே ஒரு பெரும் பேறெனஎல்லாராலும் கருதப்பட்டது. தைமூரைப்போன்ற வெற்றி வீரரும் அரசருங்கூட மருமான் என்ற பொருள் கொண்ட குர்கான் (Gurgan) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்வதில் மிகவும் பெருமை அடைந்தனர். ஏனெனில், அவருடைய முன்னேரான கரசார் நுயான் (Quaracar Nuyan) என்பவர், சிங்கிஸ்கானின் மகனுன சஹ்தை கானின் (Chaghtai Khan) மகளை மணம் புரிந்திருந்தார். அந்த வகையில் அவர் பண்டைய குடும்பப் பெருமையைப் பாராட்டுவதில் அக்கறை காட்டினுர். அதேபோல அவர் அமீர் (அதிகாரி) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்வதிலும் பெரிதும் அக்கறை காட்டினுர். ஏனெனில், சிங்கிஸ்கானின் வழித்தோன்றல்களின் அதிகாரத்தின்கீழ்ப் படைத்தலைமைப் பதவியைத் தைமூரின் முன்னேர்கள் பரம்பரையாகப் பெற்று வந்தனர்.[1] தைமூரின் (Timurids) வல்லமையின் உச்சியை எட்டியபோதுங்கூடச் சிங்கிஸ் கானை ஒரு மாதிரியாகக் கொள்ளத் தவறவில்லை. ஒருவனுக்குப் பிடித்தமான மங்கை ஒருத்தியைத் தன்வயப்படுத்திக்கொள்வது என்ற அற்பகாரியத்தில்கூட அக்பர் சிங்கிஸ்கானுல் வகுக்கப்பட்ட

---

[1] அக்பர் நாமா (பிவரிட்ஜ் என்பாரால் மொழிபெயர்க்கப் பட்டது) (Asiatic Society of Bengal Publications) பக். 204 • அடிக் குறிப்பு - 2.

விதியையே பின்பற்றியதாக அறிகிறோம்.[2] இங்கே நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டுவது யாதெனில், சிங்கிஸ்கானும் அவருடைய சந்ததியார்களும், அடிப்படையிலேயே சமயச் சார்பற்ற அரசர்கள் என்பதும், இறைவனின் ஆணைப்படி பெற்ற வெற்றியின் அடிப்படையிலேயே இறைமையைக் கொண்டாடியவர்கள் என்பதுமே யாகும். ஏதோ ஒரு மதத்தின் காவலர்கள் என்ற முறையிலோ, அல்லது ஏதோ ஒரு மகமதுவின் கையாட்கள் என்ற முறையிலோ அவர்கள் இறைமை கொண்டாடவில்லை. மகமதுவின் ஆணைகளைப் பரப்புவதற்கென்றே பல நாடுகளைத் தாங்கள் வென்றதாகவும் அவர்கள் நினைக்கவில்லை. அவர்கள் யாருடைய பிரதிநிதியாகவும் அல்லது கலீஃபாவாகவும் எண்ணிக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களது சொந்த உரிமையின் பேரிலேயே அரசாண்டனர். அவ்வுரிமையே தெய்விக உரிமை (Divine Right) எனப்பட்டது. அவர்கள் வகித்து வந்த பதவிக்கும், செலுத்தி வந்த அதிகாரத்துக்கும் யாருடைய சம்மதமும் தேவைப்படவில்லை. முக்கியமாக, கலீஃபாவின் சம்மதம் அவர்களுக்குச் சிறிதும் தேவையில்லாதிருந்தது. ஏனெனில், இறுதியாக வந்த கலீஃபா அவர்களின் முன்னோர்களிடம் சரணாகதி அடைந்தவர். அதோடு அவர்களின் ஆணைப்படி அடித்துக் கொல்லப்பட்டவர். அவர்கள் வைத்ததே மங்கோலிய வம்சத்தின் சட்டமாயிருந்தது. அல்லது வழிவழி வந்த அரசர்களின் கட்டளைகளே அவர்களின் சட்டமாகத் திகழ்ந்ததென்றும் கூறலாம். இஸ்லாமிய இறைமைக் கொள்கையின்படி, கலீஃபா, ஷாரியத் (Shariat) சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர். ஆனால், மொகலாய அரசர் அவ்விதக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவரல்லர்.''[3] அவர் விருப்பத்தின் வழியேதான் சட்டங்கள் ஆக்கப்பட்டன. ஆனால், அவை அவர்களது வம்சத்தின் பழக்க வழக்கங்களுக்கு முரணாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவரது கடமையாகும். அவரால் வெளியிடப்படும் அவசரச் சட்டங்கள், வம்ச பரம்பரையின் மரபுகள் அல்லது வழக்கங்கள் அல்லது அறநெறிகள் ஆகியவற்றின் உட்கருத்துக்கு ஏற்ப அமைந்து விடுமானால், அவரது இறைமையைக் கட்டுப்படுத்தக் கூடியது வேறொன்றுமில்லை. அவர் இப் பூமியில் கடவுளின் பிரதிநிதியைப் போன்று விளங்கினார். அவருக்கு இணையானவர்கள் வேறு எவரும் நாட்டில் இருக்கமுடியாது. சமநிலையில் உள்ள சிலரின் மத்தியில் முதன்மையானவராக இருந்து ஆட்சி

[2]C. H. I. Vol. IV, p. 86.

[3]திரிபாடி (Tripathi) எழுதியுள்ள ''முஸ்லிம் ஆட்சிமுறையின் சில பண்புகள் (Some aspects of Muslim Administration) பக். 106ஐப் பார்க்க.

புரிய (Primus Inter pares) மொகலாய கான் (Mughal Khan) விரும்பவில்லை. அமீர் தைமூரின் இறைமைக் கொள்கை அதுவன்று. "கடவுள் ஒருவரே யானதாலும், அவருக்குக் கூட்டாளி எவரும் இல்லாததாலும், அவருக்கு இப் பூமியில் பிரதிநிதியாக இருக்கக்கூடியவரும் ஒருவராகத்தான் இருக்க முடியும்"[4] என்பது அவரது கொள்கை. உலக விவகாரங்களைப் பொறுத்தவரையில், தாமே இறைவனின் பிரதிநிதி என்று கூறிக் கொண்டதுபோல், மத விவகாரங்களைப் பொறுத்த வரையில் தாமே மகமதுவின் பகராள் எனவும் அவர் விளம்பினார். கலீஃபா வின் நிலைக்கு அவர் தம்மை உயர்த்திக்கொள்ள ஒருசிறிதும் தயங்கவில்லை. மெய்யாகவே அவர், "மகமதுவின் மதத்தைப் புதுப்பிக்கவும், வளர்க்கவும் வந்த ஒருவர்" எனத் தமக்குத் தாமே ஒரு பட்டத்தையும் சூட்டிக்கொண்டார் (முரவஜ்வமுஜத் தித்-Muraw waj wa Muajaddid). இங்ஙனம் இஸ்லாம் மதத்தை வளர்க்கவும் புதுப்பிக்கவும் வந்த அரசமரபில் தம்மை எட்டாவ தாக அவர் எண்ணிக்கொண்டார். அவருடைய முன்னோர்களான எழுவர் முறையே உமார் அப்துல் அஜீஸ், மாமுன், முக்தாதிர் பில்லா, ஆஸாதுத்தௌலா, சுல்தான் சஞ்சார், கஸன் கான், அல்செய்து கான் என்போராவர். இவர்களில் ஒவ்வொருவரும் அவரவர் ஆண்டுவந்த சிறு நாடுகளில் தனித் தலைமை செலுத்தி வந்தனர். கலீஃபாக்களில் சிலரைப்போல அவரும் குத்பாவைத் தம் பெயராலேயே படிக்கலானார். அபுல் ஃபாஸல் (Abul Fazl) எழுதுவதாவது: "அவருடைய பல வெற்றிகளுக்குப்பின் எகிப்திய அரசர் தம் பெயராலேயே ஏராளமான சிவப்பு, வெள்ளை நாண யங்களை வெளியிட்டார். அதோடு மக்கா, மதீனா போன்ற பல தூய தலங்களிலுள்ள சமய மேடைகளில் அவர் தமது பெய ராலேயே குத்பாவைப் படிக்கச் செய்தார்."[5] தைமூரின் சந்ததி யார் தம் தம் நாடுகளில் உண்மையிலேயே இறைமை பெற்றவர் களாயிருந்தபோதுங்கூடக் கொள்கையளவில் அவர்கள் சிங்கிஸ் கானின் பிரதிநிதி ஒருவரே—அதாவது, மங்கோலியரின் மாண்பு மிக்க கான் என்பவரே—முடிவான இறைமையதிகாரத்தைப் பெற்றவர் என்பதை ஒப்புக்கொண்டனர். அபுசயத் மிர்ஸா என்பார் ஒருவர்மட்டுமே, இந்த வழக்கத்துக்குச் சற்றே புறம் பாகச் சென்று 'பாது-ஷா' என்ற பட்டத்தைத் தாமாகவே தமக்குச் சூட்டிக்கொண்டார். அவரைப் பின்பற்றிப் பாபரும் 1507ஆம் ஆண்டில் பாதுஷா என்ற பட்டத்தை முறையாகச் சூட்டிக்கொண்டார். "கீழை நாடுகளில் உதுமானியர்கள்

---

[4] Ibid., p. 107.

[5] அக்பர்நாமா, தொகுதி 1, பக். 212.

கொண்டாடிய போலிப் பெருமைகளும், பாரசீகத்தில் சஃபவி களின் தோற்றமும் மத்திய ஆசியாவிலுள்ள மாவாருன்நகார் (Maawaraunnahar) நாட்டில் ஷாய்பானிது(Shaibanids)களின் வளர்ச்சியும் தைமூர் வம்சத்தினரின் புகழை மங்கச் செய்துவிடு மெனத் தோன்றியது. ஒரு காலத்தில் தைமூர் வம்சத்தினரே மேற் சொல்லப்பட்ட இனத்தார்மீது ஆதிக்கம் செலுத்திவந்தனர். ஆனால், நாளடைவில் அவர்கள் தனித்தனியே பிரிந்து தைமூர் களின் பெருமையையே மங்கச் செய்யும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுவிட்டனர். உதுமானியச் சுல்தான் கைஸர் (Qaisar) என்ற பட்டத்தையும் சஃபவி மன்னர் 'ஷா' என்னும் பட்டத்தை யும் ஷாய்பானிதுகள் சுல்தான் என்ற பட்டத்தையும் சூட்டிக் கொள்ளலாயினர். அபு சயித் (Abu Sayyid) மிர்ஸா என்பாரது விருப்பத்தையொட்டி, பாபரும் பாதுஷா என்ற சிறப்புமிக்க உயர் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.''[6] பாபர் தமது பாரம்பரியத்தைப்பற்றிப் பெரிதும் பெருமைப்பட்டுக்கொண் டார். பரம்பரையாக வருகின்ற இறையுரிமையில் அவருக்கு நம்பிக்கை மிக உண்டு. ஆகையாற்றான், அவர் இறுதியாகப் பஞ்சாபின்மீது படையெடுத்தபோது, அங்கு வாழ்ந்த மக்களிடம் தாம் பஞ்சாபை ஆளச் சட்டப்படி உரிமை உள்ளவர் என்றும், ஏனெனில், தமது முன்னோரான தைமூருக்கு அந்நாடு ஒரு காலத்தே சொந்தமாயிருந்தது என்றும் அறிவித்தார். அதன்பின் அவர் தாம் கைப்பற்றிய நாடுகளைத் தாமே தனிப்பட்ட முறையில் ஆள விரும்பினார். தமக்கும் மேலாக எவரையும் ஏற்க அவர் உடன் படவில்லை. எவருக்கும் கீழ்ப்படியாத தன்மையே இறைமை என அவர் நம்பினார். ''அரசாட்சி புரியும்போது அதில் இன்னொருவர் பங்கு கொள்வதென்பது நான் கேட்டறியாததொன்று''[7] என்று அவர் கூறியுள்ளதினின்றும் இறைமையைப்பற்றி அவர் கொண் டிருந்த கருத்தை நாம் தெள்ளிதின் உணர்ந்துகொள்ளலாம். கலீஃபா ஒருவருக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிதல் என்பதைக் கற்பனையாகக்கூட அவரால் எண்ணிப் பார்க்க இயலவில்லை. எகிப்தை ஆண்டுவந்த உதுமானியச் சுல்தானுக்குத் தாம் தாழ்ந்த வர்கள் என்ற நினைப்பும் தைமூரிகளுக்கு இல்லை. அதற்கு மாறாக, அச் சுல்தானைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்பே அவர்களிடம் ஓங்கி இருந்தது. எனவே, மண்ணுலக அதிகாரங் களைப் பொறுத்தவரையில், குருமார்களின் தலையீட்டை எவ் வாற்றானும் அனுமதிக்கத் தைமூரிகளில் எவரும் தயாராயில்லை என்பது நன்கு பெறப்படுகின்றது.

[6]Tripathi, Some Aspects of Muslim Administration, p. 111.
[7]பாபர், ''நினைவுக் குறிப்புகள்'' (Memoirs), பக். 293.

சமயத்துறையிலும் உலகியல் துறையிலும் அரசருக்கிருந்த இறைமை

இறைமையைப்பற்றி ஹுமாயூன் கொண்டிருந்த கருத்தானது, ஆதிகாலத் துருக்கியர்களின் கருத்தையே பெரிதும் ஒத்திருந்தது. துருக்கியர்கள், தங்கள் அரசர்களை மண்மீது வாழும் இறைவனின் சாயை என நம்பினர். ஹுமாயூனும் அவ்வாறே நம்பினார். அவரது அரண்மனை வரலாற்றாசிரியரான கவாந்தமீர் (Khwandamir) என்பார் அவரை 'உலகியல் துறையிலும், சமயத்துறையிலும் தனித்தலைமையுடன் விளங்கும் இறைமையின் மானுட உருவம்' (ஜமாய் சுல்தானதி ஹகீகிவா மாஜாஜி—Jamai Sultanati Haqiqi va Majazi)[8] என்றும், 'இறைவனின் சாயையான மேன்மை தங்கிய அரசர்' (ஹஜ்ரதி பாத்ஷா ஜில்லிலாஹி - Hazrati Pad Shah Zill-i-Ilahi)[9] என்றும் குறிப்பிடுகின்றார். மேலும், அவரது அரசியல் நிறுவனங்களும், ஆட்சி புரிதற்கான ஆதரிசமுங்கூட இறைவனிடமிருந்தே போந்தனவென்று (இல் ஹமாதி ரப்பானி வ வரீகதி ஸுப்பானி-Ilhamati Rubbani Va Varidati Subbani)[10] அவர் நம்பினார். அபுல் ஃபாசல் (Abul Fazl) எனும் ஆசிரியர் அவரை 'இன்சானி காமில்' (மன்பதையின் நிறைவு-perfection of humanity) என அழைக்கின்றார். இத்தகைய கருத்துக்கள் கட்டற்ற கோனாட்சி நன்கு வளர்வதற்குரியதொரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டன. அதோடு அது நிற்கவில்லை. ஹுமாயூன் தம்மைக் கதிரவனுக்கு ஒப்பிட்டு அடிக்கடி பேசி வந்தார். ''கதிரவன் எங்ஙனம் இந் நிலவுலகத்தின் மையமாகத் திகழ்கிறானோ, அங்ஙனமே அப் பெருவொளியோடு நெருங்கிய தொடர்புடைய தலைவிதியைக் கொண்ட அரசரும் மக்கள் உலகத்தின் மையமாக விளங்குகிறார்'' என்பதை அவர் நம்பினார். அந் நம்பிக்கையின்படியே தம்மை மையமாகக் கொண்ட பன்னிரண்டு ஆட்சித் துறைகளை நாட்டில் அமைத்தார். அரச ஊழியர்கள் யாவரும் அப் பன்னிரு துறைகளில் அடக்கப்பட்டனர். ''கதிரவனுலகத்தின் பன்னிரண்டு ராசிகளைப் (Zodiac) போலவே அவர் பன்னிரண்டு பகுதிகளைக் கொண்ட கூடாரம் ஒன்றை அமைத்து, அதன் நடுவே அமர்ந்துகொண்டார். சூரியன் தன் கதிர்க்கற்றைகளை நாற்புறமும் அனுப்புவதேபோல், மன்னரும் தம் பேரரசு முழுமைக்கும் தமது ஒளியே மேற்சொன்ன பன்னிரு ஆரைகள்(Lattices)மூலம் பரப்புவதாக''[11] அவர் நம்பினார்.

[8] ஹுமாயூன் நாமா, British Museum, Or. 1762 f. 126. r.

[9] Ibid (முன்சொல்லப்பட்ட அதே நூலில்) 133. r.

[10] அதே நூலில் பார்க்க.

[11] Tripathi Some aspects of Muslim Administration, pp. 116-117

விநோதமான அவரது இத்தகைய கருத்துக்கள், அவர் கௌர் (Gaur) நகரில் தங்கியிருந்தபோது கடைப்பிடித்த புதுமையானதொரு நன்னடத்தை முறை(Form of Etiquette)யின்மூலம் நன்கு வெளிப்பட்டன. அங்கே அவர் தமது மகுடத்தின்மீது ஒரு திரையைப் போட்டுச் சற்று நேரங்கழித்து அதை நீக்கினார். திரை நீக்கப்பட்டவுடன் ஏற்கெனவே சொல்லி வைத்தபடி அங்குக் குழுமியிருந்த குடிமக்களனைவரும், 'இதோ ஒளி வீசுகிறது' என்று கூவினர். அதோடு அவர் தம் உடைவாளை ஆற்று நீரில் தோய்த்துக் கழுவி வெளி எடுத்து, யார்மீது இவ்வாளைச் சூட்டுவது[12] என்று கூறினார். இத்தகைய பகட்டான பழக்கங்களெல்லாம், அரசபதவியைப்பற்றி அவர் கொண்டிருந்த உன்னதமான எண்ணங்களையே குறிப்பிட்டுக் காட்டுகின்றன. அவ்வெண்ணங்கள் யாவும் இந்துக்கள் அரசுரிமைபற்றிக் கொண்டிருந்த கருத்துக்களையே பெரிதும் ஒத்திருந்தன. மக்களுலகின் நடுவில் தாம் ஒரு பகலவன் என்ற அவரது நம்பிக்கையானது, ஆதியில் அவருடைய முன்னோர்களெல்லாம் தெய்விக ஒளியொன்றினின்றும் பிறந்தவர்கள் என்ற புராணக் கதையினின்றும் பிறந்ததெனக் கருதலாம்.

மொகலாயர்கள் அரசுரிமைபற்றிக் கொண்டிருந்த கருத்தும், இந்துக்கள் அதுபற்றிக் கொண்டிருந்த கருத்தும் ஒன்றேயாகும்

அரசுரிமை(Kingship)பற்றிய இத்தகைய கோட்பாடுகளையும், மரபுகளையுமே அக்பர் தம் வழிமுறைச் சொத்தாகப் பெற்றார். தெய்வத்தினின்றும் தோன்றியது, கடவுளின் சாயையாக நிற்பது, அரசியல் துறையில் தனித்தலைமை, சமயத் துறையில் தலைமை அல்லது கிலாஃபத் - இவையே மொகலாய அரசுரிமையின் அல்லது பாதுஷாஹியின் முக்கியப் பண்புகளாய்க் கருதப்பட்டன. இத்தகைய இறைமாட்சியே அக்பருக்குக் கிடைத்தது. இங்கேயுங்கூட இறைமாட்சிபற்றி மொகலாயர்கள் கொண்ட கருத்தும், இந்துக்கள் கொண்டிருந்த கருத்தும் ஒன்றேயாகக் காட்சியளித்தன. இந்துக்கள் அரசர் என்பாரை இந்நிலவுலகில் வாழும் ஒரு பெருங் கடவுள்[13] எனவும், சமய விளக்கம் செய்ய வந்தவர்[14] எனவும், அரசியல் இறைமையின் உறை

[12] Badaoni, translated by Ranking: Vol. 1, p. 573.
[13] Manu S. B. E., Vol. XXV, Chap. VII, 3-8.
[14] (Dharmapravartaka) Kautalya, Bk. iii: Chap. I.

விடம்[15] என்றும் காலத்தின் போக்கை ஆக்குபவர்[16] என்றும் கருதியதைப்போன்றே மொகலாயர்களும் நம்பினர். பக்தி மார்க்கமானது எங்ஙனம் அக்பரால் பெரிதும் விரும்பப்பட்டதோ அதேபோன்று அரசுரிமைபற்றி இந்துக்கள் கொண்டிருந்த கருத்தும் அவருக்கு மிகவும் பிடித்தமாயிருந்திருக்கக் கூடும். இங்கே நாம் இந்துக்கள் மொகலாயர்கள் இவர்களிடையே காணப்பட்ட இன்னோர் இணைப்புச் சங்கிலியை, தொடர்புக் குரிய வழியை அவர் கண்டிருக்கக் கூடும். அரசுரிமைபற்றி இந்துக்கள் கொண்டிருந்த குறிக்கோளும், மரபுகளும், அவர் தம் முந்தையோரிடமிருந்து வழிமுறையாகப் பெற்ற மரபுகளைப் பெரிதும் ஒத்திருந்த காரணத்தாலேயே அவர் இந்துக்களுக்கும் மொகலாயர்களுக்கும் பொதுவானதொரு குறிக்கோளை வகுப் பதில் இந்துக்களின் உதவி பெரிதும் தேவையாயிருப்பதை உணர்ந்து அவர்களைப் பயன்படுத்திக்கொண்டார் எனலாம். இத்தகைய பணியில் அவர் இந்துக்களின் மனப்பூர்வமான முழு ஆதரவையும் பெற்றார். ஏனெனில், ஒரே கொள்கையுடையோர் களாயிருந்தமையால் அவர்கள்பால் அக்பர் இயல்பாகவே ஈர்க்கப்பட்டார். ஆனால், அதை முதன்முதல் கண்டு கொண்ட பெருமை அக்பருக்கே உரியதாகும். அவருடைய தந்தையாலோ பாட்டனாராலோ அவ்வுண்மையை உணர்ந்து கொள்ள இயலவில்லை. அவர் ஒருவருக்கே வட இந்தியாவில் மொகலாயர்களைச் சூழ்ந்து நின்ற நிலைமையின் கெடுபிடியானது தெளிவாகத் தெரிந்தது. இராஜபுத்திரர்களின் துணைகொண்டு தான் ஆப்கானியர்களை ஒழிக்கமுடியுமென்ற உண்மையை அவர் ஒருவரே நன்கு புரிந்துகொண்டு அதற்கேற்ப இராஜபுத்திரர் களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டுமென்று அரும்பாடு பட்டார். குறிக்கோள் ஒன்றை அடைதற்கான சாதனமாக, சமயத்துக்குகந்த ஓர் உபாயமாக (Expediency) அவர் எதைக் கைக் கொண்டாரோ அதுவே பண்பாட்டுத் துறையிலும், கொள் கைத் துறையிலும் ஆழ்ந்ததொரு பிணைப்பை இந்து - முஸ்லிம்க ளிடையே ஏற்படுத்திவிட்டது. அவ்வுறவின் மூலமே அவர் இந்துக் களின் உண்மைச் சிறப்பை உள்ளவாறே புரிந்துகொள்ள முடிந்தது. இராஜபுத்திரர்களோடு அவர் கொண்ட தொடர்பின் மூலமே அவர் பொதுவாக இந்துக்களின் பண்புகளை உணரவும் அவர்களைத் தம் பக்கமாக ஈர்த்துக்கொள்ளவும் இயன்றது எனலாம். அதனால் ஏற்பட்ட விளைவுகள் விலைமதிக்க முடியா தனவாயிருந்தன. ஏனெனில், ஆள்கின்றவர்கள், ஆளப்படுகின்ற

[15] Banskhera Copper plate Inscription of Harsha.

[16] Raja kalasya karanam, Mbh-Ch. IXIX, 79.

வர்கள் இடையே இருக்கக்கூடிய பேத உணர்ச்சியானது மறைய வும், அவர்கள் இரு சாராரும் தம்மிடையேயுள்ள வேற்றுமைகளை எல்லாம் மறந்து அரசியல் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் பொதுவான ஒரு குறிக்கோளையும் மரபுரிமையையும் உருவாக்கு தற்கான சிறந்த முயற்சியில் ஈடுபடவும் அது பெரிதும் துணை புரிந்தது எனலாம்.

அக்பர்

சுல்தானுல் - இஸ்லாம் (Sultan- ul- Islam) **ஆகவும், அமீருல் மியூமினின்** (Amir- ul- Muminin—*விசுவாசிகளின் தளபதி*) **ஆகவும், ஜில்லில்லாவாகவும்** (Zill-i- Allah - *இறைவனின் சாயை*) **விளங்குதல்.**

இதுகாறும் கூறப்பட்ட முன்னுரையை இதோடு நிறுத்திக் கொண்டு இனி, அக்பர் நிலைநாட்ட விரும்பிய அரசுரிமையின் தன்மை என்ன என்பதுபற்றி முதலிலும், அத்தகைய அரசுரி மையை அவர் எங்ஙனம் நிறுவினார் என்பதுபற்றி இரண்டாவ தாயும் ஆராயமுற்படுவோமாக! அரசுரிமையில் என்னென்ன கூறுபாடுகள் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி அக்பரின் தந் தையும் முன்னோர்களும் என்ன கருதினார்கள் என்பதை நாம் ஏற்கனவே கண்டோம். அவற்றிலிருந்து அக்பர் கொண்டாடிய அரசுரிமையின் உட்பொருளை நாம் எளிதே அறிந்துகொள்ளலாம். ஏனெனில், முன்னோர்களால் வழங்கப்பட்ட மரபுகளை அக்பர் அப்படியே ஏற்றுக்கொண்டார். சிங்கிஸ்கான், அமீர் தைமூர் என்ற இருபெரும் ஆசிய வெற்றி வேந்தர்களின் சந்ததியில் வந்த தாகப் பெருமைப்பட்டுக்கொண் டிருந்த அக்பர், தமது இறை மாட்சியானது பிரபுக்களின் தயவினால் கிடைக்கப்பெற்ற ஏதோ பரிசு என்றோ, முஸ்லிம் சமுதாயமானது பார்த்துத் தேர்ந்தெடுத்த தால் வந்த ஒரு பதவி என்றோ நினைக்கக்கூடவில்லை. அவருடைய புகழ்மிக்க முன்னோர்களையும், குடும்ப மரபுகளையும் அவரால் ஒரு கணங்கூட மறக்க முடியவில்லை. அங்ஙனம் மறக்கமுடியாத வரைக்கும், தீவிர இஸ்லாமியக் கோட்பாடுகளை ஒரு கணங்கூட அவரால் ஒப்புக்கொள்ள இயலவில்லை. அக்பரின்பால் இணையற்ற பக்தியுடன் ஒழுகியவரும், ஒப்புயர்வற்ற பணிகளை அக்பருக்குச் செய்தவருமான பைராம்கான்கூட மொகலாய அரசியலமைப் பில் இன்றியமையாதவராகக் கருதப்படவில்லை. பாதுஷாவோடு ஒப்பிடும்போது அவர் பாதுஷாவின் இணையடிகளை முத்தமிடத் தக்க அடிமை அல்லது வெறும் ஊழியரேயன்றி வேறல்லர் என்பதே அக்காலக் கொள்கையாகும். பிரபு என்பவன் அரசாங்

கத்தின் ஒரு குழவியே என்றும், அவன் எவ்வளவு பெரியவஞ யிருந்தாலும், அரசாங்கத்துக்கு அவன் எவ்வளவோ உதவி செய்பவஞயிருந்தாலும், அல்லது பெரிதும் வல்லமையுள்ளவஞ யிருப்பினும், அவன் அரசாங்கத்தின் வெறும் கருவியாகவே மதிக்கப்பட்டானேயன்றி வேறு வகையில் அவன் மதிக்கப் பெறவில்லே. எனவே, அரசபதவி என்பது பிரபுக்களால் அளிக்கப் பட்டதொரு கொடை என நினைக்கப்பட வழியில்லே. அதே முஸ்லிம் சமுதாயம் தான் பார்த்து ஓர் அரசரைத் தேர்ந்தெடுக்கக் கூடிய நிலையிலில்லே. கடவுளின் நிழல் எனக் கருதப்பட்ட மன்னனே, அதாவது ஜில்லிலாஹியை தன் பிரியப்படி வரித்துக் கொள்ளும் உரிமை முஸ்லிம் சமூகத்துக்கு இல்லே. அக்பர் அரசுரி மையைத் தமது பிறப்புரிமையாகக் கொண்டாடினர். அதே போல் பிறப்பிலேயே தமக்குக் கிலாஃபத் என்ற சமயத்துறைத் தலைமையும் கிடைத்ததாக அவர் கூறிக்கொண்டார். ஏனெனில், அமீர் தைமூர் முதற்கொண்டு அவருடைய தந்தை வரையில் அனைவரும் அவ்வுரிமையைக் கொண்டாடினர். அமீர் தைமூர் இன்னும் ஒரு படி மேலே சென்று சமயத்தை வளர்க்கவும், புதுப் பிக்கவும் வந்த ஒருவர் எனத் தம்மை அழைத்துக்கொண்டார். அதாவது, முரவஜ்வ முஜத்தித் (Murawwajwa Muajaddid) என அவர் பட்டம் சூட்டிக்கொண்டார். அதோடு மக்கா, மதீனு ஆகிய இடங்களிலிருந்த சமய மேடைகளில் தமது பெயராலேயே குத்பா படிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தினர். ஷாய்பானி கான் என்பார்கூட 'இக் காலத்து இமாம்' என்றும் 'கருணையின் மிக்க கலீஃபா' என்றும் பட்டங்களேச் சூட்டிக்கொண்டார். இறுதி யாக, முபாரக்ஷா, ஷெர்ஷா போன்ற டில்லி சுல்தான்கள் இத்தகைய பட்டங்களேச் சூட்டிக்கொண்டனரென்றல், அக்பரைப் போன்ற பேரரசர் ஒருவர் அவற்றைச் சூட்டிக்கொள்வது சாலவும் பொருத்தமுடைத்தாகுமென்பதில் சிறிதும் ஐயமில்லே.

பதாவுனி (Badaoni) என்ற ஆசிரியரின் கூற்றுப்படி அக்பர் "சமயத்துறைத் தலைமையையும், உலகியல் துறை இறைமையை யும் ஒருவரே பெற்றிருக்க வேண்டுமென்பதில் பெரிதும் அக்கறை காட்டினர். ஏனெனில், மற்ருெருவருக்குத் தாம் கீழ்ப் படிந்து நடத்தல் என்பதை அவர் சுமக்கமுடியாத ஒரு பாரமெனக் கருதினர். மேலும், தீர்க்கதரிசியான மகமதுவும், அவருக்குச் சட்டப்படி ஏற்பட்ட சந்ததியார்களும், அமீர் தைமூர், ஸாஹிப் கிரான் (Cahib qiran), மிர்ஸா உலுஃக் பேஹி குர்கான் (Mirza Ulugh Begi Gurgan) போன்ற வல்லமைமிக்க அரசர்களும் இன்னும் பலரும் குத்பாவைத் தாங்களே படித்த காரணத்தால் அவர்களேப் பின்பற்றித் தாமும் அங்ஙனமே செய்ய அக்பர்

விழைந்தார். ஆனால், புறப்பார்வைக்குமட்டுமே அவர் பிறரைப் பின்பற்றுவது போல் காட்டிக்கொண்டாரேயன்றி உண்மையில் அவர் அக் காலத்திய முஜ்தாஹித்தாகத் தோற்றமளிக்க விரும்பினார்.''[17] ஆனால், முஜ்தாஹித் என்ற பட்டத்தோடுமட்டும் அக்பரால் திருப்தி அடைய முடியவில்லை. அதைவிட உயர்ந்த பட்டமாகிய சுல்தான் - இ - ஆடில் அல்லது இமாம் - இ - ஆடில் என்ற பட்டத்தை அவர் சூட்டிக்கொண்டார். அதன்மூலம் அவர் குறைவிலா நிறைவைக் (Infallibility) கொண்டாடினார். முஸ்லிம் சமுதாயமும் அவரது விருப்பத்துக்கு இசையவேண்டியதாயிற்று. அதன் விளைவாக 'இஸ்லாமின் அரசர் (சுல்தானுல் இஸ்லாம் — Sultan-ul-Islam), பக்தர்களின் தளபதி (அமீருல் மியூமினின்-Amirl-ul-Muminin), கடவுளின் சாயை (ஜில்லிலாஹி-Zill-i-Allah) முறையில் அவர் வெளியிடுகின்ற ஆணைகள் யாவும், யாவராலும் சிறிதும் முணுமுணுப்பின்றிக் கீழ்ப்படியப்படுதல் வேண்டுமென்பது உறுதியாயிற்று. ஏனெனில், அவ்வாணைகள் '' மிக மிக நல்லவரும், அறிவு செறிந்தோரும், கடவுளுக்கு அஞ்சுபவருமான '' ஓர் அரசரால் வெளியிடப்பட்டவையாகும். '' நன்மை எல்லாம் உண்டாக முதற் காரணமாயிருப்பவர் அரசரே '' என அக்பர் மொழிந்தார். மன்னனை வெறுமனே காண்டலென்பதுங்கூடக் ''கடவுள் வழிபாட்டின் ஒரு பகுதியே'' எனக் கருதப்பட்டது. ஆகையினால் அவர் '' இறைவனின் சாயை எனத் தம்மை முறைப்படி அழைத்துக்கொண்டார்''[18] இந்தக் கூற்றுகள் யாவும் அரசுரிமைபற்றி அக்பர் கொண்டிருந்த கருத்துக்களையும், அதன் உட்பொருளையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. எல்லாக் காரியங்களிலும் முழுமையான வரம்பற்ற இறைமை - தற்காலத்தே இறைமை என்பது என்ன பொருளில் கருதப்படுகிறதோ அப் பொருளில் - என்பதுவே அரசர் ஒருவருக்கு உரியதொரு பண்பாகும் என அவர் கருதினார். இஸ்லாமியச் சமயச் சார்பான காரியங்களிலும், அரசைச் சார்ந்த வினைகளிலும், அக்பரின் அதிகாரம் தனித்தலைமையுடன் விளங்க வேண்டுமென அவர் எண்ணினார். இறைமை என்ற உயர் பீடத்தில் அமர்ந்துகொண்டு, அவர் தம் சமயத்தவர்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்றும், அரசுபற்றிய விவகாரங்களையும் வழிநடத்த வேண்டுமென்றும், இவ்விரண்டையும் நடுநிலையோடு கூடிய நேர்மைநெறி (Equity) நின்று கவனிக்க வேண்டுமென்றும் அவர் விரும்பினார். அவரது பின்னைய விருப்பத்தை நிறைவேற்றும்

[17] Lowe, Badaoni, Vol. II, p. 276.

[18] Ain-i-Akbari, translated by Jarrett, Vol. III. p. 398. ஆய்ன்-இ-அக்பரி. ஜாரட் என்பாரால் மொழிபெயர்க்கப் பட்டது.

போது இஸ்லாமின் நலன்கள் தனக்கு அடிப்பட்டு நிலவவேண்டுமா அல்லவா என்பதைத் தீர்மனிக்க வல்லவர் அவர் ஒருவராக மட்டுமே இருக்கவேண்டுமென்பதும் அவரது விருப்பமாகும். இவ்வதிகாரத்தைப் பொறுத்தவரையில் வேறு எவரது தலையீட்டையும் பொறுத்துக்கொள்ள அவர் தயாராயில்லை. ஏனெனில், பாதுஷாஹி என்பது ஜில்-இ-இலாஹியை, அதாவது கடவுளின் சாயை என்பதையும் சமய, உலகியல் துறை இறைமையையும், அதாவது, சுல்தானதி ஹகீகிவ முஜாஜி (Sultanat-i-Haquqi va Mujazi) என்பதையும் உட்கொண்டு விளங்கியது. அவற்றின் விளைவாக அவர் பக்தர்களின் தலைவராகவும், அதாவது அமீருல் மியூமினின் (Amir-ul-Muminin) என்ற அதிகாரியாயும், நடுநிலையோடும் நீதியோடும் ஆட்சிபுரியும் அரசராகவும், அதாவது சுல்தான்-இ-ஆதில் (Sultan-i-Adil) ஆகவும் பணியாற்றக் கூடிய உரிமை கிட்டியது.

சுல்தான்-இ-ஆதில் என்ற முறையில் அக்பர் செலுத்திய இறைமை

அக்பரது இறைமாட்சியின் உட்பொருள் அல்லது தன்மையைப்பற்றிய ஆராய்ச்சி இவ்வளவுக்குப் போதுமானது. இவ்விறைமாட்சியைச் செயற்படுத்த அவர் கடைப்பிடித்த முறையானது, இஸ்லாமிய அரசியல் கலையில் பயன்படுத்தப்படும் முறைகளிலேயே ஒரு புரட்சியைத் தோற்றுவித்துவிட்டது. அவர் இரண்டுவித மாறுபட்ட கடமைகளை ஒரே சமயத்தில் மேற்கொள்ள முன்வந்தார். இந்தியாவிலுள்ள இஸ்லாமியச் சமுகத்தின் இணையற்ற தலைவராக இருக்கவும், அதேசமயத்தில் நேர்மையோடும் நீதியோடும் அரசாட்சி புரியவும் அவர் விரும்பினர். இங்ஙனம், இரட்டை வேடத்தில் நடிப்பதென்பது எவ்வளவு கடினமான காரியம், உண்மையில் அஃது எப்படியிருக்க முடியும் என்பதை எல்லாம் அக்பர் நன்கு உணர்ந்திந்தார். அவ்விதம் நடக்கும்போது என்னென்ன அபாயம் ஏற்படக்கூடும் என்பதையும் அவர் முன்கூட்டியே தெளிவாக அறிந்திருந்தார். ஏனெனில், இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு நாட்டில் சமயத் துறையிலும் அரசாங்கத் துறையிலும் அவர்களுக்குப் பெருமளவில் சலுகைகளைச் கொடுத்து ஆதரித்தாலன்றி யாவருக்கும் நேர்மையாகவும் நீதியோடும் நடந்துகொள்ள இயலாது என்பது பொது அறிவு படைத்த எவராலும் எளிதில் உணர்ந்து கொள்ளத் தக்கதாகும். முஸ்லிம் சமுதாயமானது, நாட்டை ஆள்கின்ற ஒரு கூட்டமாதலால், அதற்குத் தனிப்பட்ட

முறையில் சில சலுகைகள் வழங்கப்படுவது இயற்கையே யாகும். தனிப்பட்ட முறையில் நடத்தப்படவேண்டுமெனக் கோருவதற்கு முஸ்லிம்களுக்கு உரிமை இருந்தது. அதே சமயத்தில் முஸ்லிம்களுக்கே எல்லாச் சலுகைகளேயும் காண்பித்துவிட்டு, முஸ்லிம்களல்லாத சமூகத்தாரை எல்லா வகையிலும் அடக்கி விடுதலென்பதும் மொகலாயர்களின் நலன்களுக்கு அவ்வளவு உகந்ததாயில்லை. நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி இந்தியாவில் காணப்பட்ட மிக இக்கட்டான நிலைமை காரணமாக அக்பர், இராஜபுத்திரர் களின் நட்பைப் பெறவும், அதன்மூலம் ஆப்கானியர்களின் எதிர்ப்பை அடக்கவும், அவர்களை அடக்கியபின் பொதுவாக எல்லா இந்துக்களின் ஆதரவைப் பெறவும் படிப்படியாக முயற்சி செய்ய வேண்டியதாயிற்று. இந்த நிலையில் மேற்சொன்ன இரண்டு நிபந்தனைகளும் நிறைவேறினலன்றி மொகலாய ஆட்சி நன்கு நாட்டில் அடிகோலப்பெறவும், அது மக்களால் ஆதரிக்கப்பெறவும் இயலாதென்பதை யாவரும் உணர்ந்தனர். எனவே, அக்பர் சமயச்சார்பான செயல்களில்மட்டும் மகமதுவின் பிரதிநிதியாக இருந்து, அவரது காலத்திய கலீஃபாவாகவும், வெறும் அமீருல் மியூமினின் (Amir-ul-Muminin) ஆகவும் இருந்துவிடுதலென்பது போதாததாயிருந்தது. சுல்தான்-இ-ஆதில் என்ற முறையில் அவர் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான நீதியையும் நேர்மை நெறியையும் வழங்கி ஆட்சி புரிய வேண்டியது இன்றியமையாததாயிருந்தது. அப்படி நடப்பதென்பது அக்பருக்குங்கூட முடியக்கூடாத ஒரு துணிகரச் செயலாகவே இருந்தது. ஏனெனில், மகமதுவின் பிரதிநிதி என்ற நிலையில் அவர் இஸ்லாமின் வளர்ச்சிக்கு ஓயாது பாடுபட வேண்டியது அவரது கண்டிப்பான கடமையாயிருந்தது. அக்கடமையை அப்படியே மேற்கொள்ள வேண்டுமானால், ஏனைய சமயங்களெல்லாம் ஒழிக்கப்பட்டு, உண்மையான இஸ்லாம் சமயம் மட்டுமே நாட்டில் பரப்பப்படுதற்கான வழிவகைகளை அரசர் கண்டுபிடிப்பது இன்றியமையாததாகும். ஆனால், சுல்தான்-இ-ஆதில் என்ற நிலையில் அவர் இஸ்லாமைப் பரப்பவும், முஸ்லிம்களல்லாதார்மேல் அடக்குமுறைகளைக் கையாளவும் முடியாத நிலையில் இருந்தார். இவ்விதம் இரண்டுவகையான, அதே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலைகளில் நின்று செயல் புரிவதென்பது மிகவும் கடினமான காரியம் என்பதில் ஐயமில்லை. இவை இரண்டையும் பொருத்துவிக்கச் செய்யக் கூடிய எந்தவிதமான முயற்சியும், மிகக் கொடூரமான பலன்களை விளைவிக்கும் என்பதும் தேற்றம். எனினும், அக்பர் அவ்விதம் செய்யத் துணிந்து இறங்கினர். இறங்கினது மட்டுமின்றி அதில்

மிக ஆழமாகவும், அதற்கப்பாலும் சென்றார். அமீர்-உல்-மியூமினின் என்ற அவரது பதவியைவிடச் சுல்தான்-இ-ஆதில் என்ற பதவிக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதற்கேற்ப நடந்துகொண்டார். அமீருல் மியூமினின் பதவிக்குரிய கடமைகள் சுல்தான்-இ-ஆதில் பதவியின் அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கும் வகையில் அவர் நடந்துகொண்டார். அங்கேதான் அக்பரது சாதனையின் தனித்தன்மை வெளியாயிற்று. தமது இறைமையின் தன்மையை உருவாக்கும் முயற்சியில் அவர் கடைப்பிடித்த நூதன முறை அதில்தான் வெளிப்படுத்தப்பட்டது. அதை அக்பரின் தனிப்பட்டதோர் உயரிய சாதனை என நாம் கூறுவதற்குக் காரணமென்னை எனில், ஷெர்ஷா, இஸ்லாம்ஷா, முபாரக்ஷா போன்றவர்கள் எல்லாம், கிலாஃபத் உரிமையைக் கைக்கொண்டபோது, இஸ்லாம் சமயத்தின் தேவைகளைப் பேரரசின் தேவைகளுக்கு அடிப்படுத்தவில்லை. அவர்களுக்கு அவை இரண்டும் ஒன்றாகவே தோன்றின. அல்லது இரண்டாவது தேவை முதலாவதில் ஒன்றித்துப் போய்விட்டதாக அவர்கள் எண்ணினர். இஸ்லாம், பேரரசு இவைபற்றிய சிக்கல்களில் அவர்கள் நேர்மை நெறிக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. நேர்மை நெறி என்பது அவர்களது அரசாங்கத்தின் உள்ளுணர்ச்சியாக நின்று அவர்களை ஊக்கவில்லை. வேறு சொற்களில் சொல்ல வேண்டுமானால், அக்பர் செய்தது போல் அவர்கள் கிலாஃபத் உரிமையோடு சுல்தான்-இ-ஆதில் பதவிக்குரிய உரிமைகளையும் ஒருங்கு சேர்த்துக் கொண்டாட முடியவில்லை. முடியுமென்று அவர்களால் நினைக்கவும் கூடவில்லை. தைமூரும், ஷாய்பானி கானும் கிலாஃபத் பட்டத்தைச் சூட்டிக் கொண்டபோது, அவர்களை எதிர்கொண்ட சிக்கல்கள் முற்றும் வேறானவை. ஏனெனில், அவர்கள் முழுக்க முழுக்கத் தூய இஸ்லாமியச் சமுதாயங்களையே ஆண்டனர். அச் சமுதாயங்களுக்கு நேர்மையும் நீதியும் இஸ்லாம் கொள்கைகளுக்கேற்ற கோட்பாடுகளில்மட்டுமே அடங்கியிருந்தன. ஆனால், இந்தியா விலோவெனின், அது கூடாத காரியமாயிருந்தது. அதாவது, இந்துக்கள் தாங்கள் முஸ்லிம்களோடு கொள்ளக்கூடிய தொடர்புகளைப்பற்றிய வழக்குகளில் நடுநிலையான நேர்மைத் தீர்ப்பைப் பெற, இஸ்லாமியக் கொள்கைகள்மட்டும் போதா என்றும், அவற்றை நேர்மை நெறியின் அடிப்படையாகத் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் கருதினர். இந் நிலையில் இஸ்லாமியக் கொள்கைகளுக்கேற்பமட்டும் நாட்டினை ஆளாமல், நேர்மை நெறிக்கு ஏற்ற வகையில் மக்களை ஆளவேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் மொகலாயர்கள் நன்கு உணர்ந்தனர். அக்பர் ஆட்சிப் பீடத்துக்கு வந்தபோது அத்தகைய கொள்கை பெரிதும்

அவசரமாக வேண்டப்பட்டது. எனவே, அக்பர் அதைக் கடைப் பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதை அவர் அரசியல் உபாயம் அல்லது சூழ்வினைத் திறம் (Expediency) என அழைத் தார். அதுவே அவரது அரசுரிமைக் கொள்கையின் வழிகாட்டி யாய் அமைந்தது. அத்தகைய கொள்கையை நடைமுறையில் பயன்படுத்தத்தக்க சட்ட சம்மதமானது (Legal sanction) அவர் சுல்தான்-இ- ஆதில் என்று ஓர் அரச ஆணையின்மூலம் அறிவிக்கப் பட்டபோது கிடைத்தது. அத்தகைய ஆணை அல்லது மஜ்ஹர் முழுநிறை ஆணை (Infallibility Decree) எனப்படுவதாகும். அவர் தமது அதிகாரத்தின் உச்ச நிலையில் நின்றபோது, உலேமாக்களிட மிருந்து கீழ்க்கண்ட கொள்கைக்குச் சம்மதத்தைப் பெற்று விட்டார். அதாவது, ''எதிர்காலத்தே, சமயம்பற்றிய ஒரு வினவுக்கு முஜ்தாஹித்துகள் வெவ்வேறான விடைகளைக் கூறு கின்ற நிலை ஏற்படுமானால் மேன்மை தங்கிய அரசர் பார்த்து, நாட்டின் நன்மையைக் கருதி, அவ் வினாப்பற்றி அறிவிக்கப்பட்ட விடைகளுள் ஏதாவதொன்றைச் சரியானதென எடுத்துக் கொள்வாரானால் அதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். காலம், இடம் இவற்றுக்கேற்ற அரசியல் சூழ்நிலைத்திறமென (Political expediency) ஒரு கொள்கையை அரசர் தம் நுண்ணிய அறிவுத் திறத்தாலும், உய்த்துணரும் சக்தியாலும் முதிர்ந்த ஞானத்தாலும் உணர்ந்து அதை ஒட்டி ஓர் ஆணையை வெளி யிடுவாரானால்'' அந்த ஆணையை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ''முஜ்தாஹித்துகளும், நாட்டு மக்களனைவரும் அவ் வாணைக்குக் கட்டுப்பட வேண்டும்.'' மேலும், அவர்கள் ஒப்புக் கொண்டு அறிவித்ததாவது: ''மேன்மை தங்கிய அரசர் இன்னும் புதியதோர் ஆணையை வெளியிட வேண்டியது அவசியமென நினைத்து அங்ஙனம் வெளியிடுவாரானால், நாங்களும் நாட்டு மக்களும் அதேபோல அதற்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருக் கிறோம்; ஆனால் அத்தகைய ஆணையானது குரானிலுள்ள ஏதே னும் ஒரு வசனத்துக்கு ஏற்புடைத்தாக இருக்க வேண்டுவதல் லாமல், நாட்டு மக்கள் அனைவர்க்கும் உண்மையிலேயே நன்மை பயக்கத் தக்கதாயும் இருக்கவேண்டும்; மேலும், அத்தகைய ஆணையை எவ்வகையிலேனும் மறுக்கக்கூடிய குடிமக்கள் இறந்த பின் நரகதண்டனைக்கு ஆளாவது மட்டுமின்றி இவ்வுலகத்திலேயும் சொத்துக்களையும், சமயச் சார்பான சிறப்புரிமைகளையும் இழந்து துன்புறுவர்''[19]

[19] Lowe, Badaoni, Vol. II, p. 279.

அக்பரின் மஜ்ஹர் அல்லது முழுநிறை ஆணையின் பயன்

மஜ்ஹர் எனும் இப்பத்திரத்தைக் கொண்டுதான் அக்பர் தமது அரசுரிமை அல்லது இறைமை எனும் குறிக்கோளை அடையப் பாடுபட்டார். அதன்படி சமய சம்பந்தமான வழக்குகளில் அக்பரே இறுதித் தீர்ப்பை வழங்கவல்லவர். சமயச் சார்பாக எழக்கூடிய ஐயப்பாடுகளுக்கு வெவ்வேறான கருத்துக்கள் விடையாகக் கூறப்படுமானால், அதுபற்றி முடிவாக ஒரு கருத்தைக் கூறி யாவரையும் சமாதானப்படுத்த வேண்டுவது அவரது கடமை. அதோடு அவர் ஆணைகளை வெளியிடும்போது, அவை குரானின் கோட்பாடுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளனவா இல்லையா என்பதைமட்டுமே கவனிப்பதன்றி, ''நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்மையான நன்மை பயப்பதாக'' அவை அமைந்துள்ளனவா என்பதையும் நோக்குதல் வேண்டும். நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் ஆணைகளை வெளியிடுதல் என்பது மொகலாய ஆட்சி இந்தியாவில் நன்கு வேரூன்றுவதற்குத் துணைபுரியும் வகையில் ஆட்சிமுறைக் கொள்கைகளை வகுத்து, அவற்றை நடைமுறையில் பயன்படுத்துவதென்பதையே குறிப்பிடுமெனலாம். அப்படியானால், அவர் இஸ்லாமியச் சமுதாயத்துக்கு மட்டுமின்றி, ஏனைய எல்லாச் சமுதாயங்களையும் உட்கொண்ட தேசீய சமுதாயத்துக்கே (Nation) நன்மை பயக்கும் வகையில் ஆணைகளை வெளியிட வேண்டுமென்பது பெறப்படுகின்றது. இஸ்லாமியச் சமூகத்தின் நன்மைக்காகப் பேரரசின் நலன்கள் கைவிடப்படாமல் அவர் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதும் அதினின்றும் போதருகின்றது. மேலும், பேரரசின் அரசாங்க நடைமுறையில் இஸ்லாமியக் கட்டளைகளும் சட்டங்களும் கடைப்பிடிக்கப்படலாகாது என்பதும் உறுதியாகின்றது. எனவேதான் அக்பர், எவை எல்லாம் சமுதாயங்கள் அனைத்துக்கும் நன்மையானவையோ, யாவருக்கும் சமமாகவும் நியாயம் தவறாமலும் நீதி வழங்கக்கூடியவையோ, சமய சந்தர்ப்பங்களுக்கேற்ற சூழ்நிலைத் திறன்களோ அவற்றைத் தமது அரசுரிமையின் வழிகாட்டிக் கொள்கைகளாக வைத்துக்கொண்டார். எனவே, அவரது ஆட்சியில் இஸ்லாமுக்குத் தனிப்பட்ட சலுகை காண்பிக்கப்படுவதென்பது இயலாமற் போய்விட்டது. முஸ்லிம்கள் மட்டுமே அரசாங்கத்தில் பங்கு பெறுவதும், எல்லாச் சிறப்புரிமைகளையும் செல்வத்தையும் பெற்று இன்புறுவதென்பதும் முடியாமற் போய்விட்டது. இங்ஙனம் நாட்டிலுள்ள எல்லாச் சமூகத்தினருக்கும் மதங்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்க வேண்டுமானால், நாட்டில் சமயப்பொறைக் கொள்கையானது

கடைப்பிடிக்கப்பட வேண்டுவதும், இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்குமிடையே இருந்த வெறுக்கத்தக்க வேறுபாடுகள் எல்லாம் நீக்கப்படுவதும், இந்துக்கள்மீது விதிக்கப்பெற்ற வேண்டப் பெறுத வரிகள் யாவும் ஒழிக்கப்படுவதும், பேரரசின் ஆட்சி முறையில் இந்துக்களைத் தாராளமாக சேர்த்துக்கொள்வதும் அரசாங்கத்தின் இன்றியமையாத கடமைகளாகின்றன. இந்தக் கடமைகளை அக்பர் மேற்கொள்ள முன்வந்தார். அப்படி மேற் கொள்வதொன்றே மொகலாய இறைமையின் உட்பொருளாக விளங்கத்தக்கதென்றும், இந்திய மக்களின் விருப்பத்துக்கு உகந்தவாறு அப்போதே அஃது அமையக் கூடுமெனவும் அக்பர் நன்கு உணர்ந்திருந்தார். எனவேதான் அவர் தமது ஆட்சியின் பிற்காலத்தில் எல்லாச் சமயங்களும் சமம் எனவும், இஸ்லாம் சமயம்மட்டுந்தான் உண்மையை உட்கொண்டது என்பது ஒப்புக்கொள்ளத் தகாதது எனவும் அறிவிக்க முடிந்தது. தீர்க்க தரிசியாக விளங்கவும், புதிய மதமொன்றை உண்டாக்கவும் அவர் அங்ஙனம் அறிவிப்பதொன்றே ஒரே வழியாகக் காணப் பட்டது. ஆனுல், அஃது ஏரு மடைக்கு நீர் கட்டுவதுபோன்று மிகக் கடினமான காரியமாகவே இருந்தது. மலைக்கத் தக்க பேரிடையூறுகளை அவர் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டி யிருந்தது. ஏனெனில், சுல்தான்-இ-ஆதில் என்ற நிலையில் தொழிற்பட ஆரம்பித்ததும், தாமே எல்லாவற்றிற்கும் தலைவர் என்ற இறைமைக் கொள்கையை வெளியிட்டதும், தாம் என்றுமே எதிலுமே தவறிழைக்க முடியாதவர் என்ற முழுநிறைக் கொள்கையை (Infallibility) அறிவித்ததும், எல்லாம் சேர்ந்து ஏற்கெனவே குமுறிக்கொண் டிருந்த ஒரு சூழ்நிலையை வெடிக்கச் செய்துவிட்டன. எனினும், அவ் வறிவிப்பு நிகழ்ந்த சில மாதங் களுக்குப் பின்னரே, கி. பி. 1580இல் நாடெங்கும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஏனெனில், அவர் ஏற்கெனவேயே வகுத்து வைத் திருந்ததும், கொஞ்சங்கொஞ்சமாக நடைமுறையில் புகுத்திக் கொண்டு வந்ததுமான ஒரு கொள்கையே அப்போது சட்டத்தின் உருப் பெற்றுச் சமயத்திலும் இடம் பெற்றது.

குடிமக்கள் அனைவரையும் பாரபட்சமின்றிச் சமமாக நடத்திய முதல் முஸ்லிம் அரசர் அக்பரே

அக்பர் மிக இளைஞராயிருந்தபோதே உயரிய கொள்கைகளை வெளியிட்டவர். பைராம் கான் முறியடிக்கப்பெற்ற சிறிது காலத்துக்குள்ளாகவே அவர் தம் பிரியம்போல் நடக்கத் தலைப் பட்டார். டில்லி சிம்மாதனத்தில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்த அவருடைய முன்னேர்களில் வேறு ஏந்த அரசருமே வெளியிடத்

துணியாத ஆட்சித்துறைக் கொள்கைகளை அவர் மளமளவென வெளியிடலானர்: ''முஸ்லிம்களின் உணர்ச்சிகளை ஒரு சிறிதும் மதியாமல், தம் முன்னோர்கள் கைக்கொண்ட பழக்கத்துக்கு முற்றும் மாறாக, ஜெஸியா வரியையும், யாத்திரிகர் வரியையும் ஒழித்தபோது அக்பர் இருபத்தொன்று அல்லது இருபத்திரண்டு ஆண்டுகளே நிரம்பப்பெற்ற இளைஞர் என்பதை நாம் நினைவு கூரும்போதே நாம் அவரது மனத்திண்மையைக் கண்டு உண்மையிலேயே பெருவியப்படையாமல் இருக்கமுடியாது. சற்று நேரத்துக்குமுன் விளையாட்டைத் தவிர வேறொன்றிலும் நாட்டம் இல்லாதவர் போன்றிருந்த ஒரு சிறுவர், இத்தகைய மன உறுதியோடு செயல்படுவதைக் கண்ணுறும் எவரும் இறும்பூதெய்தாமல் இருக்கமுடியாது.''[20] அவர்தாம் உண்மையிலேயே, ''இந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும் தம் குடிமக்கள் அனைவரையும் ஒரவஞ்சனையற்ற முறையில் சமமாக நடத்தவேண்டுமென்று நினைத்த முதல் முஸ்லிம் அரசர்''[21] ஆவார். இத் துறையில் அவர் முதல் அடி எடுத்துவைத்தபோது அவர் இன்னும் இளைஞராக, அதாவது பத்தொன்பதே ஆண்டு நிரம்பப் பெற்றவராக இருந்தார். 1562ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவர் ஆஜ்மீருக்கு யாத்திரை சென்றிருந்தபோதுதான் அங்ஙனம் நடந்துகொண்டார். ''ஆஜ்மீருக்கு அவர் போய்க்கொண் டிருக்கும் வழியில், அவர் ஆம்பர் நாட்டு அரசரான பிஹாரிமால் என்பாருக்குத் தம்மை வந்து கண்டு போகுமாறு அழைப்பு விடுத்தார். முதன்முதலாக அவரது அரண்மனைக்கு வந்து அடிபணிந்த இராஜபுத்திர மன்னர் பிஹாரிமாலே யாவர். அவர் அக்பரின் அழைப்பை ஏற்று, அவரது ஆணைக்குக் கீழ்ப்படிந்து குடும்பசகிதமாக வந்து அக்பரைக் கண்டுகொண்டார். அப்போது அவர் தம் மகளை மணந்துகொள்ளுமாறு அக்பரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.''[22] அக்பர் பிஹாரிமாலின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். மேற்கொண்டு பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் அவர் ஆம்பர் நாட்டு இளவரசியை மணம் புரிந்துகொண்டார். அதோடு, மான்சிங் என்பாரைப் பேரரசின் சேவகத்தில் ஒரு பெரும் பதவியில் அமர்த்தினர். இஃது ஒரு புதிய முறை. இதன் உறுபயன் என்ன என்பதை அக்பர் மிக இளமைக் காலத்திலேயே உணர்ந்துகொண்டுவிட்டதாய்த் தெரிகிறது. இதில் அவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் அவருடைய தந்தை எனலாம். ஏனெனில், அரசியல் காரணங்களுக்காக

[20] Smith, Akbar the Great Mughal, p. 67.
[21] C. H. I. Vol. IV, p. 84.
[22] அதே நூலில் பக்கம் 81 ஐப் பார்க்க.

இந்தியப் பிரபுக்களின் குடும்பங்களில் திருமணத்தொடர்பு கொள்ளவேண்டுமென்ற கொள்கையை முதன்முதலாக நடைமுறைக்குக் கொண்டுவந்தவர் ஹுமாயூனே யாவர். மக்களின் விசுவாசத்தைப்பெற அது மிகச் சிறந்த பயனுள்ளதொரு வழி எனக் கருதினர். ''961இல் ஹுமாயூன் இந்தியாவுக்குத் திரும்பிய போது இந்திய நாட்டு முஸ்லிம் ஜமீன்தார்களோடு திருமணத் தொடர்பு கொள்ளுமாறு தம் பிரபுக்களை அவர் தூண்டினர் என்றும், ஜமால்கானின் மூத்த மகளைத் தாம் மணந்துகொண்ட பின், இளைய மகளை மணந்துகொள்ளுமாறு பைராம்கானை அவர் கேட்டுக்கொண்டாரென்றும்''[23] நாம் கேள்விப்படுகிறோம். அக்பர் இன்னும் ஒரு படி மேலே சென்று இந்திய முஸ்லிம் பிரபுக்களின் குடும்பங்களில் மட்டுமின்றி, இராஜபுத்திரக் குடும்பங்களிலும் திருமணத்தொடர்பு கொள்ளத்தொடங்கினர். இராஜபுத்திர இளவரசிகளை மணம் செய்துகொண்டு, அதன்மூலம் தம் உறவினர்களாக வருகின்ற இராஜபுத்திரர்களை அரசாங்கப் பெரும் பதவிகளில் அமர்த்தியபோது அக்பர் உண்மையிலேயே தம் முன்னோர்கள் எவருமே கொண்டிராத விரிந்த நோக்கு, தாராள மனப்போக்கு, அரசியல் விவேகம் ஆகிய நற்பண்புகளை வெளிப்படுத்தியதையே காண்கிறோம். இராஜபுத்திரர்களோடு இங்ஙனம் திருமணத் தொடர்பு கொண்டும் அவர்களைப் பெரும் பதவிகளில் அமர்த்தியும், தம் தாராள மனப்பான்மையை வெளிப்படுத்திய அக்பர், அதே சமயத்தில் யாத்திரிகர் வரியையும் ஜெஸியா வரியையும் ஒழித்ததால் இந்துக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றர். அதோடு அத்தகைய செயல்களின்மூலம் ''அக்பர் இந்துக்களுக்குமட்டுமேயன்றி, முஸ்லிம்களுக்கும் ஒரு தந்தையைப்போல் விளங்கவேண்டுமென்ற கண்ணியமான தீர்மானத்தைக் கொண்டவர் என்பதையும், நாட்டு மக்களின் மதத்துக்குப் புறம்பானவர்களும், அவர்களோடு இரத்தத்தொடர்பு அற்றவர்களுமான ஒரு சிறு இராணுவ (விசுவாசிகளான!) கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதைவிடப் பொதுவான இந்தியாவின் பேரரசராக விளங்கவேண்டுமெனவே அவர் விரும்புகிறர் என்பதையும்,'[24] நாடு உணர்ந்துகொள்வதற்கு முதல் வாய்ப்புக் கிட்டியது.

இந்துக்கள் பெரும் பதவிகளில் அமர்த்தப்பெறல்

அக்பரின் பிற்காலச் செயல்களிலிருந்து இதை அறியலாம். மேற்சொன்ன வெறுக்கத்தக்க இரு வரிகளையே அன்றி, அவர்

[23]Ain-i-Akbari, Vol. I, p. 334.

[24]C. H. I., Vol. IV. p. 82.

அவருடைய முன்னோர்களால் எல்லா மக்களிடமிருந்தும் வசூலிக்கப்பட்ட நாற்பது வெவ்வேறு விதமான வரிகளையும் ஒழித்தார். அவ் வரிகளில் பல, இந்துக்கள்மீதுமட்டுமே விதிக்கப்பட்டவையாகும்.

அரசாங்கத்தை நடாத்துவதில் அவர் இந்துக்களைத் தாராளமாகச் சேர்த்துக்கொண்டார். அதிலும் இராஜபுத்திரர்களுக்கு அவர் தனிப்பட்ட சலுகைகளை அளித்தார். சான்றாக, ராய், சுர்ஜன் ஹாடா என்பவர் ரான்தம்பூர்க் கோட்டையை அக்பரிடம் ஒப்படைத்துவிட்டுச் சரணாகதி அடைந்தபோது-அதாவது, அக்பரின் ஆட்சிக்காலத்தில் பதினான்காம் ஆண்டில் - காதா கடாங்கா (Gadha Katanga) என்ற நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டாரென்பது யாவருக்கும் நன்கு தெரிந்தவொன்றேயாம். லாகூர் நகரைச் சேர்ந்த காத்ரி (Khatri) இனத்தைச் சேர்ந்த ராஜா தோடர்மால் என்பார், திறமைமிக்க பொருள்நிர்வாகி என்றும் தானைத் தளபதி என்றும் புகழ் அடைந்ததோடு பேரரசில் பல உயர் பதவிகளை வகித்தாரென்பதையும் அறிகிறோம். அக்பரது ஆட்சிக் காலத்து இருபத்திரண்டாவது ஆண்டில் அவர் வாஸிர் (Wazir) பதவியையும், இருபத்தேழாவது ஆண்டில் வக்கீல் பதவியையும் அடைந்தார். ராஜா மான்சிங் என்பார் பேரரசு ஆட்சியில் பல உயர் பதவிகளை வகித்து, வாழ்க்கையில் சிறப்பாக வாழ்ந்த பின்னர் ஜபூலிஸ்தானின் (Zabulistan) ஆளுநராகவும், அதன்பின் பீஹாரின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார். அவரது சுவீகாரத் தந்தையான ராஜா பகவான்தாஸ் என்பார் பஞ்சாபின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்துக்கள் பலர் அவர்களுள்ளும் சிறப்பாக இராஜபுத்திரர்கள் பெரும் மன்சப்தார்களாக நியமிக்கப்பட்டனர். ஐயாயிரம் குதிரை வீரர்களுக்கு அதிபதியாக மூன்று மன்சப்தார்களும், நாலாயிரத்து ஐந்நூற்றுக்கு அதிபதியாக இரு மன்சப்தார்களும், இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கு அதிபதியாக ஐவரும் அதைவிடத் தாழ்ந்த பதவிகளில் பலரும் அக்பரால் நியமிக்கப்பட்டனர். திரு. ப்ளோச்மேன் என்பார் (Mr. Blochman) கூறுகிறபடி, "ஏழாயிரம் குதிரை வீரர்களுக்கு அதிபதி எனும் பதவிக்கு மான்சிங்கை அக்பர் உயர்த்தியபோது ஒவ்வொரு மகமதிய அதிகாரிக்கும் மேலாக ஓர் இந்துவை உயர்த்திய பெருமை பெற்றார். ஆனால், அதே சமயத்தில் எம். ஷாருக் (M. Shahrukh) என்பாரும் அஸீஸ் கோக் (Aziz Kokh) என்பாரும் அதேபோன்ற உயர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டனர் என்பதும் உண்மையேயாம்."[25]

[25] Ain-i-Akbari, Vol. I, p. 341.

இராஜபுத்திரர்களையும் அல்லது தம்முடைய இராஜபுத்திர உறவினர்களைபும்மட்டுமே அக்பர், பதவிகளில் அமர்த்திஞர் என்று கொள்ளமுடியாது. பரம்பரை பரம்பரையாக இந்தியாவை ஆண்டுவந்தவர்கள் என்ற முறையிலும், போர்க் குண மிக்கவர்கள் என்பதாலும், இராஜபுத்திரர்கள் வேறு இனத்தவரைவிட அதிகமாகப் பதவிகளில் அமர்த்தப்பட்டன ரெனினும், அக்பர் ஏனையோரை முற்றும் புறக்கணித்தாரெனக் கூறமுடியாது. காத்ரி இனத்தைச் சேர்ந்த ராஜா தோடர்மால், வாஸிர், வக்கீல் போன்ற பெரும்பதவிகளை எங்ஙனம் எய்தலுற் ருர் என்பதை நாம் ஏற்கனவே கண்டோம். அவருடைய மகனுங்கூட அக்பரின் தொண்டராகச் சேர்ந்தார். எனினும், பெருஞ் சிறப்பெதுவும் எய்தவில்லை. காத்ரி வகுப்பைச் சேர்ந்த ராய் பத்ரா தாஸ் என்ற இன்னும் ஒருவரும், எழுநூற்றுவர்க்கு அதிபதியாக விளங்கிஞர். பரமாநந்தர் என்ற ஒருவர் ஐந்நூற்று வர்க்கு அதிபதியாகவும், தந்தையும் மகனுமான மதுரதாஸ், சதுரதாஸ் என்ற இருவரும் இருநூற்றைம்பதுக்கு அதிபர்களாயும் விளங்கினர். பிராமணகுலத்தைச் சேர்ந்த பீர்பால் என்பார் அக்பரோடு மிக நெருக்கமாகப் பழகியவர் என்பதும், அவர்மீது ஏராளமான செல்வாக்கைச் செலுத்தி வந்தார் என்பதும் யாவ ரும் நன்கறிந்ததொன்றேயாம். அவர் முக்கியமான மன்சப்தாரி களில் ஒருவராய்த் திகழ்ந்தார். இரண்டாயிரத்துக்கு அதிபராக அவர் விளங்கிஞர். அவருடைய குமாரரான லாலா என்பவர் அதைவிடச் சற்றுக் குறைந்த பதவியில் இருந்தார். ஒரிஸா வெல்லப்பட்டபோது, இராஜபுத்திரர்களல்லாத வேறு பலர் மன்சப்தாரிகள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஒரிஸாவின் ஜமீன்தாரான ராஜா ராம்சந்திரா என்பவர் ராஜா மான்சிங்கின் குமாரர்களைப் போன்று, ஐந்நூற்றுவர்க்கு அதிப ரான மன்சப்தாராக விளங்கியதாக நாம் கேள்விப்படுகிருேம். நீலகாந்தா என்ற மற்றும் ஒரு ஜமீன்தார் முந்நூற்றுவர்க்கு மன் சப்தாராகவும், அத்வந்த், சுந்தர் என்ற வேறிரு ஜமீன்தார்கள் இருநூற்றைம்பதினர்க்கு மன்சப்தார்களாகவும் திகழ்ந்தனர். அக்பரின்கீழ், 500இலிருந்து 5000 வரை எண்ணிக்கைகொண்ட குதிரைவீரர்களுக்கு அதிபதி என்ற மன்சப்தாரிப் பதவிகள் மொத்தம் 252 இருந்தன. அவற்றில் 32 பதவிகள் இந்துக்கள் கைகளில் இருந்தன. 200முதல் 400வரை எண்ணிக்கை கொண்ட மன்சப்தாரிப் பதவிகள் 163 இருந்தன. அவற்றில் இருபத்தைந்து பதவிகளில் இந்துக்களே அமர்ந்திருந்தனர்.[26] இதிலிருந்து பேரரசில் இருந்த மிக உயர்ந்த பதவிகளில் 13·7

[26] Ain-i-Akbari, Vol. I, p.537.

சதவீதமான இந்துக்களுக்கே தரப்பெற்றிருந்தது என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். 10முதல் 150 வரை எண்ணிக்கை கொண்ட சாதாரண மன்சப்தாரிப் பதவிகள் மொத்தம் 1,388இல் இந்துக்கள் பெற்றிருந்த பதவிகளின் சதவிகிதம் இன்னும் அதிக மாகக்கூட இருந்திருக்கலாம்.[27] எனவே, இங்கு அக்பர் தமக்கு முன்பு இந்தியாவை ஆண்ட டில்லி சுல்தான்கள் எவருமே பின் பற்றாததொரு கொள்கையைக் கடைப்பிடித்துள்ளதையும், அவருடைய கொள்கையானது டில்லி சுல்தான்களின் கொள் கைக்கு முற்றும் மாறானதொன்றென்பதையும் நாம் காண் கிறோம்.

பசு வதை தடுக்கப் பெறல்

இந்துக்களின் ஆதரவையும் நன்மதிப்பையும் பெறவேண்டி, அக்பர் பசுக்கள் கொல்லப்படுவதையும், மாட்டிறைச்சி உண்ணப்படுவதையும் தடுத்தார். பதௌனி என்பார் அக்பரது இத் தடையுத்தரவு எங்ஙனம் தோன்றியது என்பதைக் கூறி யுள்ளார். அவர் கூறியுள்ளதாவது: " அக்பர் விதித்த இத் தடை களெல்லாம் தோன்றிய விதம் வருமாறு: பேரரசர் மிக இளைய வயதிலிருந்தே கயவர்களான இந்துக்களின் மத்தியில் வளர்ந் தவர். பெரும்பாலும் அவ்விளவயதில் அவர் இந்துக்களின் கூட்டுறவையே பெற்றிருந்த காரணத்தால் அவர்களது கொள் கையிலும் ஈடுபாடு கொண்டார். பசுவுக்கு மதிப்பளித்தல் என்ற அவர்களின் கொள்கை (இந் நிலவுலகம் நிலையாக இருப்ப தற்கு அதுவே காரணமென்பது அவர்தம் கருத்து) அவரது உள்ளத்திலே நன்கு ஆழமாகப் பதிந்துவிட்டது.[28] எனவே, அக்பர் தீர்க்கதரிசி என்ற நிலையை அடைந்து தீனே இலாஹி (Din-i-Illahi) என்ற மதத்தை அல்லது தவ்ஹித்தே இஸ்லாம் (தெய்விகமான ஒரு தெய்வ வணக்கம்) என்ற மதத்தை நாட்டில் கொணர்ந்தபோது, வாரத்தின் முதல் நாளில் மிருகங்கள் கொல் லப்படுவதைக் கண்டிப்பாகத் தடுத்தார். ஏனெனில், கதிர வனுக்கு அது புனிதமான நாளாகும். இந்த ஆணையானது நாடனைத்துக்கும் பரப்பப்பட்டது. அதற்கு எதிராக நடக்கக் கூடிய எவருக்கும் கொலைத் தண்டனையானது விதிக்கப் பட்டது.[29]

---

[27]ஆயின்-இ-அக்பரி, பக். 527.

[28]முந்த்ஹாபத் தவாரீக் (Muntkhab-ut-Tawarikh, translated by Lowe), Vol. II, p. 312.

[29]Badaoni, quoted by Blochmann in Ain-i-Akbari, Vol. I, p. 200.

சமயப் பொறை இல்லாமை பேரரசின் நலனுக்கு உகந்ததன்று

அக்பர் இந்துக்களைமட்டுமே சமாதானப்படுத்த முனையவில்லை. இந்துக்களைப்போலவே ஜைனர்களையும் அவர் நேசித்தார். ஜைனர்கள், இந்திய ஜொராஸ்டிரியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரிடமும் அவர் ஒரே முறையில் நட்புப் பாராட்டினார். தமது பேரரசில் வெவ்வேறு வகையான சமயங்களை மேற்கொண்ட வெவ்வேறு சமுதாயத்தினர் வாழ்கின்ற காரணத்தால், அவர்களுக்கெல்லாம் பிடித்தமான முறையில் மொகலாய அரசை அமைக்கவேண்டுவது அவசியமென்பதைக் கண்டுகொண்ட அக்பர் முதலில் அந்த வெவ்வேறு சமயங்களிலும் அடங்கியுள்ள உண்மைகள் எவை எனக் கண்டுகொள்ள விரும்பினார். அதற்காக அவர் இபாதத்கானா (Ibadat khana) எனும் மண்டபத்தில் விவாத அரங்கு ஒன்றை நடத்தினார். அவ் விவாதங்களினின்றும், அவர் தம் விருப்பத்தை ஒருவாறு நிறைவேற்றிக்கொண்டார். அதோடு இஸ்லாம் ஒன்றுமட்டுந்தான் உண்மைக்கும் ஞானமுதிர்ச்சிக்கும் இட்டுச் செல்லும் மார்க்கம் என்ற நம்பிக்கை அவர்பால் தளர்ந்தது. உண்மைக்கு இட்டுச் செல்லத்தக்கது இஸ்லாமியச் சமயம் ஒன்றுமட்டுமன்று என்ற உறுதிப்பாடு அவரிடை ஏழலாயிற்று. எனவே, வாழ்க்கையைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்துக்கள் மாறின. ஒரு சமயத்தவருக்கும் மற்றுமொரு சமயத்தவருக்குமிடையே வேற்றுமை பாராட்ட அவர் மறுத்தார். தம் குடிமக்களனைவருக்கும் சமமாக நீதி வழங்கவேண்டும் என்ற நியாய உணர்ச்சி அவர்பால் எழுந்தது. உண்மை என்பது எல்லாச் சமயங்களிலும் காணப்படுவதொன்றாகும் என்பதை அவர் உணர்ந்துவிட்ட காரணத்தால் அவர் எவரிடத்தும் ஓரவஞ்சனையாக நடக்கக்கூடவில்லை. அவ்வித நியாய உணர்ச்சியால் உந்தப்பட்ட காரணத்தாற்றான் அவர் நாம் ஏற்கெனவே பார்த்தபடி சுல்தன்-இ-ஆதில் என்ற நிலையில் செயற்பட்டார். அந் நிலையில் அவர் இஸ்லாமிய மதநிபுணர்களுக்கு மேலான ஒரு தனித்தலைவராகத் தம்மை உயர்த்திக்கொண்டாரென்பதையும் நாம் முன்பே கண்டோம். சுல்தான்-இ-ஆதில் என்ற நிலையானது, நீதி என்ற குறிக்கோளின் வடிவமாயும் அல்லது பொதுவாகச் சமயப்பொறை என்று கருதப்படுகிற கொள்கையின் வடிவமாகவும் கருதப்பட்டது. அத்தகைய நிலையில் நின்று பணிசெய்ய அக்பர் முன்வந்தது, அக்பரின் ஆழ்ந்த நம்பிக்கையொன்று செயல்படுதற்கு வசதியளித்தது. சமயப் பொறையின்மை என்பது இஸ்லாமிய ஆட்சி முறையின் அடிப்படை

கொள்கையாக இருப்பதென்பது, மொகலாயப் பேரரசின் நலனுக்கு உகந்ததன்று என்ற அவரது அசைக்கொணு நம்பிக்கையைச் செயலாக்கச் சுல்தான்-இ-ஆதில் என்ற புதிய பதவி அவருக்குத் துணையாயிருந்தது. முழுநிறை ஆணையின் (Infallibility Decree) நோக்கமும் அதுவேயாகும் பேரரசுக்கு எது நல்லதோ அதையே அவ்வாணையும் வற்புறுத்தியது. பாரபட்சமின்மையும், நீதியும்மட்டுமே, இந்தியாவில் அக்பரது ஆட்சியின் வழிகாட்டிக் கொள்கைகளாக விளங்கவேண்டுமென்பதை அது வற்புறுத்தியது.

தீவிர முஸ்லிம்களின் கலகங்கள் ஒடுக்கப்படலும், சதரே சதுர் என்ற பதவியானது ஒழிக்கப் பெறுதலும்

அக்பர் கடைப்பிடித்த அக் கொள்கையானது இஸ்லாமின் கொள்கைகளுக்கும், இந்திய முஸ்லிம்கள் நீதிபற்றிக் கொண்டிருந்த கொள்கைகளுக்கும் முற்றும் மாறுனதாயிருந்தது. சிலை வணக்கத்தைப் பொறுத்துக்கொள்வது என்பதை இஸ்லாம் நஞ்செனவெறுத்து ஒதுக்கியது. எனவே, மேற் சொன்ன ஆணையானது வெளியிடப்பட்ட சில காலத்துக்குப்பின் தீவிர இஸ்லாமின் காவலர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து அக்பருக்கு எதிராகக் கூக்குரலிடத் தொடங்கினர். அபாயகரமான ஒரு புதுமையைப் புகுத்தியதால் இஸ்லாமுக்கு விரோதமாக அக்பர் நடந்துகொள்வதாக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கிழக்கு மாகாணங்கள், அக்பரின் ஆட்சியின்மீது ஏற்பட்ட வெறுப்பால் அவருக்கு எதிராகக் குமுறிக்கொண்டு இருந்தபோது ஜான்பூரின் காஸி (Qazi) என்ற முறையில் முல்லா மகமத் யஜ்தி (Mullah Mahamed Yazdi) என்பார், அக்பருக்கு விரோதமாகக் கலகம் செய்தல் நியாயம் என்று கூறுகிறவகையில் ஒரு ஃபத்வா அல்லது கட்டளையை வெளியிட்டார். அக் கட்டளை அக்பரின் எதிரிகளுடைய கைகளை வலுக்கச் செய்தது. அவர்கள் காபூலின் அரசரும், அக்பரின் இளைய சகோதரருமான மிர்ஜா மகமது ஹஹீம் என்பவருக்கு இந்தியாமீது படையெடுத்து டில்லி அரியணையைக் கைப்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்தனர். உண்மையில் அஃது அக்பருக்குப் பேரபாயமான ஒரு சூழ்நிலைதான். எனினும், அவர் தமது இணையற்ற ஆற்றலின் துணைகொண்டு நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டார். இளைஞரான மிர்ஜாவுக்குத் தக்க பாடம் கற்பிக்கப்பட்டது. அவர் விழிப்படைந்து தம் தவறுகளுக்காகவும் அவசர நடத்தைக்காகவும் வருந்தி மன்னிப்புக்

கேட்டுக்கொண்டார். கிழக்கு மாகாணங்களில் அமைதி ஏற்படுத்தப்பட்டது. கலகத்தைத் தூண்டிய உலேமாக்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஜான்பூர் காஸியும், வங்காளத்தின் காஸியும் அக்பரின் ஆணைப்படிப் படகுகளில் கொண்டுவரப்பட்டபோது, படகுகள் கவிழவே, அவர்கள் இருவரும் நீருக்கு இரையாயினர். "தமக்கு எதிராக இருப்பவர்கள் என ஐயுறப்பெற்ற முல்லாக்கள் ஒவ்வொருவரையும் அவர் அழிவு எனும் அறைக்குள் தள்ளினார்."[30] இங்ஙனம், இஸ்லாம் மதத்தின் தீவிரக் குருமார்கள் யாவரும் அவருடைய இணையடிகளில் வந்து விழுமாறு செய்யப்பெற்றனர். அவர்களுக்குத் தரப்பட்டிருந்த சிறப்புரிமைகள், அதிகாரங்கள் யாவும் பறிக்கப்பட்டன. அக்பர் காபூலிலிருந்து திரும்பியபோது கேட்ட வெற்றி முழக்கமானது குருமார்களின் அதிகாரத்துக்குச் சாவு மணியாக அமைந்தது. அக்பரின் இறைமைக்குத் தடையாயிருந்த அவர்களின் அதிகாரம் மாய்ந்தது. 1581ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரவி ஆற்றங்கரையைக் கடந்த அன்றே அக்பர் சதரே சதுர் (Sadr-i-Sadur) என்ற பதவியை ஒழித்தார். அதற்குப் பதிலாக அவர் புதிய ஆறு மாவட்டச் சதர்களை நியமித்தார்.

அக்பர் புதியதொரு மதத்தின் தீர்க்கதரிசியாக விளங்கலும், 'ஒரே அரசர், ஒரே நாடு, ஒரே மதம்' என்ற அவரது குறிக்கோளும்

இந்தக் கலவரங்களெல்லாம் அக்பருக்கு ஒன்றை நினைவுபடுத்தின. முன்பெல்லாம் மங்கலாகக் காட்சியளித்து வந்த உண்மை ஒன்று இப்போது அவருக்குத் தெற்றெனவிளங்கலாயிற்று. இஸ்லாமின் கருத்துக்கள், இந்தியாவின் ஏனைய மதங்களுக்கு உடன்படா என்பதை அவர் திண்ணமாக உணர்ந்துகொண்டார். அதே சமயம், தாம் ஒரு முஸ்லிமாக இருக்கும் வரையும் மகமதுவின் சீடன் என்று சொல்லிக்கொள்கிற வரைக்கும் எல்லா மதங்களுக்கும் சம உரிமை வழங்குகிற சமயப் பொறைக்கொள்கையையும் அவரால் வெளிப்படையாக ஆணையிட்டு அமலாக்க முடியவில்லை. அப்படி ஆணையிடுவது இஸ்லாமின் அறநெறிக்கே புறம்பானதாக அவருக்குப் பட்டது. எனவே, அவர் இஸ்லாம் மதக் கட்டுப்பாடுகளினின்றும் விலகிக்கொள்ள விழைந்தார். மகமதுவின் சீடர் என்ற முறையில் சமயப் பொறைக் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியவில்லை என்றால், அதை உதறிவிடுதலே நலமென அவருக்குப் பட்டது. "1580ஆம் ஆண்டுத்

[30] Lowe, Badaoni, Vol. II, p. 285.

தொடக்கத்திலேயே, தலைநகருக்குப் போய்க்கொண்டிருந்த இயேசு சபைப் பாதிரிமார்களிடம் அக்பர், பொதுச் செபங்கள் நடைபெறும் இடங்களிலெல்லாம் மகமதுவின் பெயரைப் பயன் படுத்தவதாகாதெனத் தாம் தடை விதித்துள்ளதாகக்[81] கூறினார். மஜ்ஹார் அல்லது முழுநிறை ஆணை ஒன்றுக்கும் பயன்படாது என்பதை அவர் அறிந்துகொண்டார். குரானில் வறுபுறுத்தப் பட்டுள்ள கொள்கைகளை, அதாவது தீர்க்கதரிசியான மகமதுவின் கொள்கைகளை, நாட்டுக்கு உண்மையிலேயே நன்மை பயக்கும் கொள்கைகளோடு, அதாவது அரசியல் சூழ்விலைத் திறத்தோடு பொருத்துவதற்கான அதிகாரம் மேற்படி ஆணையினுலெல்லாம் கிடைக்காது என்பதை அவர் நன்கு உணர்ந்துகொண்டார். அறநெறிப்படியும் அது முடியாத காரியம் என்பதும் அவருக்கு விளங்கிவிட்டது. இஸ்லாமிய அறநெறிக்குப் புறம்போதல் என் பதைத் தவிர்க்க வேண்டுமானுல் இஸ்லாம் மதத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு இஸ்லாம், இந்துமதம், ஜைனமதம், ஜொராஸ்டிரிய மதம் ஆகியவற்றினின்றும் வேறுபட்ட ஒரு புதிய மதத்தின் தீர்க்கதரிசி எனத் தம்மை அழைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என அவர் உணர்ந்து அங்ஙனமே நடக்கவேண் டியதாயிற்று. இந்த மதங்களை எல்லாம் பின்பற்றுகிற மக்களின் மன்னவன் என்ற முறையில் அவர் மற்ற மதங்களை எல்லாம் மறுதலிக்கிற ஒன்றை ஆதரித்து ஏனையவற்றைப் புறக்கணிப்ப தென்பது முடியக்கூடாத காரியமாய்ப் போயிற்று. இவ்விக் கட்டான நிலையினின்றும் கரையேற, இபதத்காணவில் நடை பெற்ற வாதங்களின்மூலம் அவர் பெற்ற அநுபவமானது பெரிய தொரு வழிகாட்டியாய் அமைந்தது. அதிலிருந்து அவர் நாட்டி லுள்ள ஒவ்வொரு மதமும் தன்னைத்தானே உயர்வாகவும், ஏனைய மதங்களை எல்லாம் வெறுப்பதாகவும் கருதும் நிலையில் இருப் பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே, அவற்றுள் ஏதாவது ஒன்றைத் தாம் ஆதரித்தால் அது மற்ற மதங்களை எல்லாம் வன்முறையில் தாக்கத் தொடங்கிவிடும் என்பதையும் அறிந் திருந்தார். இந்து மதம் இஸ்லாமோடு என்றுமே பொருந்தாது என்பதோடு, அங்ஙனமே ஜைனமதமும், ஜொராஸ்டிரிரிய மதமுங் கூட இந்து மதத்துடன் ஒத்துப் போக முடியாதென்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. குப்தர்களின் காலத்துக்கு முன்னர்ப் பண்டைய இந்தியாவிலிருந்த மதங்கள் ஒன்றோடொன்று எங்ஙனம் மோதிக்கொண்டன என்பதைப் பார்க்கும்போது, அக்பரின் முடிவு எவ்வளவு சரியானதென்பது நமக்குத் தெள்ளிதின் புலப்படுகின்றது. எனவே, அக்பர் புதியதொரு மதம் தோற்று

[81] Smith, Akbar the Great Moghul, p. 214.

விக்கப்படுவது அவசியமென நினைத்தார். அப் புதிய மதம் ஏனைய எல்லா மதங்களின் அடிப்படையான உண்மைகள் யாவற்றையும் உட்கொண் டிருக்கவேண்டுமென்று அவர் விரும்பினூர். அத்தகைய மதத்தை உருவாக்கத் தகுதியானவர் தாம் ஒருவரே என்றும் அவர் நம்பினூர். சமயப்பொறை அத்தகைய மதத்தின் தலையாய பண்பாய் மிளிர்தல் வேண்டும். அஃது எல்லாச் சுல் ஹி குல் (Sulh-i-kul)லோடும் சமாதானமாய் வாழ வேண்டும். இந்த எண்ணம் உண்மையிலேயே மிகப் பயனுள்ளதொரு கருத்தாகும். எந்த ஒரு மனிதனது மூளையினின்றும் உதிக்கக்கூடிய கருத்துக்களிலெல்லாம் மிகச் சிறந்ததொன்றாக இது கொள்ளத்தக்கதாகும். இத்தகைய மதமானது வேறுபட்ட மதங்கள் ஒன்றுக்கொன்று குறை கூறிக்கொள்வதையும், சரிவர ஒன்றையொன்று புரிந்துகொள்ளாமல் மனக்கசப்பு ஏற்படுத்திக் கொள்வதையும் தடுத்து, நாட்டில் அரசியல் செல்வாக்கு வளரவும், அக்பரிடம் யாவருக்கும் ஒற்றுமையோடு கூடிய விசுவாசம் வளரவும் உதவியாயிருக்குமென அவர் நம்பினூர். அவரது குறிக்கோளான இறைமாட்சியை அடைய, எல்லா மக்களும் யாதொரு பிளவுமின்றி அவரிடம் விசுவாசமாயிருக்க வேண்டுவது அவசியமாயிருந்தது. அத்தகைய ஒருமித்த விசுவாசத்தைப் பெறவேண்டுமானூல் அக்பர் சுல்தான்-இ-ஆதில் லாகமட்டுமே இருந்து, முஸ்லிம், இந்துக்கள், பார்ஸிகள், ஜைனர் ஆகிய யாவருக்கும் சமமான நீதி வழங்கி வருவது மட்டும் போதாது என்பதை அக்பர் தம் கடுமையான அநுபவங்களினின்றும் நன்கு உணர்ந்திருந்தார். அதாவது, சமயப்பொறையைக் கைக்கொள்வதால்மட்டுமே, குடிமக்கள் அனைவருடைய ஒருமித்த ஒத்துழைப்பையும் விசுவாசத்தையும் பெறமுடியாதென்பதை அவர் அறிந்தார். முதன்முதலில் அவர் அவ்வித நோக்கத்திலேதான் முயன்றூர். ஆனூல், அதற்கு எதிர்ப்புத் தோன்றியதன் விளைவாக, வேறு நல்ல திடமான ஒரு முறையைப் பின்பற்றித் தம் குறிக்கோளை அடையவேண்டுமென அவர் தீர்மானித்தார். அரச ஆணையின் மூலம், அதாவது முழுநிறை ஆணைமூலம் சமயப் பொறையைப் புகுத்துவது கூடாது என அவர் தீர்மானித்தார். தம் மக்களை ஆணையொன்றின்மூலம் ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்துவதை விட, அவர்கள்முன் புதியதொரு சமயத்தையே, அதாவது எல்லா மதங்களின் கூட்டுறவாக இருக்கக்கூடியதும், சமயப் பொறையை உட்கொண்டதும் அதன் விளைவாக, எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாயும், எல்லாரது வாழ்க்கையின்மீதும் ஆதிக்கம் செலுத்தக்கூடியதாயும், ஒருவர்க்கொருவர் ஒத்துப் போவதை எளிதாக்க வல்லதாயும், அடக்குமுறைப் பண்பு சிறிதும்

இல்லாததாயும் அமைந்த புதியதொரு மதத்தையே உருவாக்கிச் சமர்ப்பித்துவிடுதல் நலமென அவருக்குப் பட்டது. 'ஓர் அரசர், ஒரு நாடு, ஒரு மதம்'-இதுவே அவரது குறிக்கோள்; எல்லாம் நலமாகவே முடியும் என்ற அவரது பலமான நம்பிக்கையில் தோன்றியது இது. அவரது புதிய மதத்தில் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. சீருஞ் சிறப்பும் அமைதியும் கொண்ட பொற்காலம் ஒன்றை அஃது உண்டாக்க முடியுமென்பது அவரது நம்பிக்கை. மதங்களிடையே ஓர் ஒப்புரவு ஏற்படவும், மன்னரின் இறைமைக்கு எவ்விடத்தும் நல்ல மதிப்பு ஏற்படவும் அது துணையாயிருக்குமென்றும் அவர் நம்பினர். அவரது இந்த ஆர்வ மிக்க நம்பிக்கையைப்பற்றி இயேசு சபை ஆசிரியரான பர்தோலி (Bartoli) என்பார் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அவர் கூற்றின்படி அக்பர் ஒரு சமயம் பெருங்கூட்டம் ஒன்றைக் கூட்டினர். அக் கூட்டத்துக்கு அவர், ''கல்வி கேள்விகளிற் சிறந்த புலவர்களையும், சுற்றிலுமுள்ள நகரங்களிலிருந்த இராணுவத் தளபதிகளையும்'' அழைத்திருந்தார். அவர்களை விளித்து அவர் பின்வருமாறு கூறலுற்றார்: ''ஒரு தலைவனுல் ஆளப்படும் பேரரசில், மக்கள் தம்முள் வேறுபாடு கொண்டவர்களாய்ப் பிளவுபட்டு நிற்பது சரியன்று. வேறுபட்டு நிற்பதோடு மட்டுமல்லாமல் அவர்களிலே ஒருசிலர் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்கிறார்கள். எனவே, நாட்டில் எத்தனை மதங்கள் இருக்கின்றனவோ, அத்தனை பிளவுபட்ட சண்டைக் கும்பல்கள் ஏற்பட்டுவிட்டன. எனவே, அவற்றை எல்லாம் ஒன்று சேர்ப்பது நம் கடனாகும். ஆனல், அப்படி ஒன்று சேர்க்கப்படும்போது அவை எல்லாமே அதில் ஒன்றாக இருக்கும் வகையில் கலக்கப்பட வேண்டும்; ஒரு மதத்திலுள்ள நற்பண்பு கெடாமலேயே மற்றொன்றில் இருக்கின்ற இன்னும் சிறந்த பண்பை எடுத்துக்கொள்ளும் முறை கையாளப்படவேண்டும். அப்படிச் செய்தால் கடவுளுக்கு அது பெருமை செய்ததாகவும், மக்களுக்கு அமைதியை வழங்கியதாகவும், பேரரசின் பாதுகாப்புக்கு வழி செய்ததாகவும் அமையும்.''[32] அவரது குறிக்கோளென்னவெனில், புதிய மதம் ஒன்றைத் தோற்றுவித்தலேயாகும். அதை அவர் தீனே இலாஹி, அதாவது தெய்விக மதம் அல்லது தவ்ஹீதே இலாஹி (Tawhid-i-Ilahi), அதாவது தெய்விகமான ஒரு தெய்வ வணக்கம் (Divine Monotheism) எனக் குறிப்பிட்டார். அதைக்கொண்டு அவர் மூன்று செயல்களை நிறைவேற்றிக்கொள்ள எண்ணினர். முதலாவதாக, அதனுல் கடவுளுக்குப் பெருமை ஏற்படுவதோடு, மக்களை உண்மையிலேயே சமய உணர்ச்சி உள்ளவர்களாக ஆக்கி

[32] Ibid. (அதே நூல்) பக். 211-12.

விடும். இரண்டாவதாக, ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லாத மதக் கும்பல்களிடையே ஓர் ஒப்புரவும் அமைதியும் ஏற்படும். மூன்ருவதாக, மக்கள் அனைவருடைய ஒருமித்த விசுவாசத்தின் மூலம் நாட்டின் பாதுகாப்பு நன்கு உறுதிப்படும். பேரரசர் அக்பரும் புதியதொரு மதத்தின் தீர்க்கதரிசியாக விளங்குவார். அவர் சமயத் தலைமையையும் அரசியல் தலைமையையும் ஒன்ருகக் கலக்க விரும்பினுர். இதில் அவர் ஒருவேளை மகமதுவின் செய்கையைப் பின்பற்றி நடந்திருக்கலாம். ஆனுல், அவரது தீனே இலாஹியும், மகமதுவின் மதமும் வேறு வேருனவை. இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகிற எல்லாச் சமயங்களிலும் காணப்படும் மிகச் சிறந்த கோட்பாடுகளின் கலவையாக அது விளங்கும். எனவே, அஃது எல்லா மதத்தினர்க்கும் ஏற்புடைத் தாக இருக்கும். அதை ஒப்புக்கொள்வோர் அரசர்பால் நான்கு வகையில் பக்தியினைச் செலுத்தல் வேண்டும். மேன்மைதங்கிய அரசர்பால் அவர்கள் பக்திபூண்டு அவருக்காக உயிர், உடைமை, மானம், மதம் ஆகிய நான்கையும் தத்தம் செய்யத் தயாரா யிருக்கவேண்டும். அதை ஒப்புக்கொள்வோர், அதில் தமக்குள்ள ஒப்பற்ற விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டுமானுல், தாம் அதுகாறும் கடைப்பிடித்துவந்த சமயத்தை அடியோடு கைவிட்டு விடவேண்டும். இங்கேதான் அக்பரின் உட்கிடக்கையை உள்ள வாறே புரிந்துகொள்வதற்கான உபாயம் நமக்குத் தெரிகிறது. புது மதத்தில் சேருபவர்களெல்லாரும், தங்களது பழைய மதத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென வற்புறுத்துவதன்மூலம், பல மதங்கள் இருந்த இடத்தில் ஒரு மதத்தை நிலைநாட்டி விடலாம் என அவர் நம்பினுர். அப்படி ஏற்பட்டுவிட்டால் சமயப்பொறை என்ற கொள்கைக்கு இயல்பாகவே அவசிய மில்லாமற் போய்விடும். சமயப்பொறையை வற்புறுத்து வதற்காக, முழுநிறை ஆணை போன்ற ஓர் அரசகட்டளை வெளி யிடப்படவேண்டிய அவசியமும் அப்போது இல்லாமற் போகும். ஆணை ஒன்றின்மூலம், பலருடைய வெறுப்புக்களுக்கும் ஆளாகாமல் அமைதியான ஒரு சூழ்நிலை ஏற்பட அது துணைபுரியும். இப்படி யெல்லாம் எண்ணிச் செயல்பட்ட அக்பர், சமயப்பொறைக் கொள்கைக்கு முரணுக இஸ்லாம் மதத்தையே ஒறுக்க அவர் முற்படுகிருர் எனக் கருதப்படும் அளவுக்குக் கடுமையான நடவடிக்கைகளை முஸ்லிம்களுக்கு எதிராக எடுக்க நேர்ந்த தென்ருல், அதற்குக் காரணம் அவரது புதிய மதமானது இஸ்லாம் மதத்தால் பெரிதும் எதிர்க்கப்பட்டதேயாகும். அவரது அரசாங்கக் கொள்கைக்குச் சிறிதும் விட்டுக்கொடுக்காத முறை யில் இஸ்லாமியர் பிடிவாதமாக நடந்துகொண்டதே அவரது செய்கைக்குக் காரணமாகும். முஸ்லிம்களின் குற்றங்களை

அவரால் மன்னிக்க முடியவில்லை. 1580, 1581ஆம் ஆண்டு களில் அவர் பெற்ற கசப்பான அநுபவங்களிலிருந்து, அடக்கு முறை ஒன்றின் மூலமாகமட்டுமே, முஸ்லிம்களின் கொடுக்கானது களையப்பட்டு அவர்கள் தீங்கற்றவர்களாக மாற்றப்பட முடியும் என்றும், அவர்களது போர்க்குணம் அப்போதே மாற்றப்படலா மெனவும் அவர் உறுதியாக நம்பினர். சுல்தான்-இ-ஆதிலாக விளங்க அவர் விரும்பி முயன்றபோது, இஸ்லாம் அவரது உடம்பில் தைத்த முள்போன்று நின்று அவருக்குத் தொல்லை விளைவித்ததாகையால், அந்த முள்ளானது அவரை மேலும் துன்புறுத்தாவண்ணம் அதன் முனையை மழுக்க வேண்டுவது அவர் கடமையாயிற்று.

சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் ஒருமித்த இறைமையின் வடிவமாக அவுரங்கசீப் ஆகும்வரை மொகலாய இறைமாட்சி இருந்தவாறு

இங்ஙனமே, அக்பர் இந்தியாவில் மொகலாய ஆட்சியை நிலைநாட்ட வேண்டுமென்ற வேணவாவால் உந்தப்பட்டும், தற்காலத்தே இறைமை என்று கருதப்படுகின்ற ஒன்றுக்குப் பெரிதும் இணையானதோர் இறைமாட்சியை அல்லது பாது ஷாஹியை வரம்பற்றதாயும், யாவர்க்கும் பொதுவானதாயும் இருக்கும் வகையில் நாட்டில் நிலவச்செய்ய வேண்டுமென்ற விருப்பத்தால் தூண்டப்பட்டும், இந்துக்கள்பால் சமயப் பொறையோடு கூடிய சமாதானக் கொள்கையைக் கடைப்பிடித் தார். ஆனால், அங்ஙனம் கடைப்பிடிப்பது, அவர் வகித்துவந்த கலீஃபாப் பதவிக்கும், அமீர் உல் மியூமினின் (Amir-ul-Muminin) பதவிக்கும் பொருந்தாததாக இருந்த காரணத்தால் அவர் அரசியலும் அறநெறியும் கலக்கப்பட்ட ஒருவகையான புதிய சமயத்தை உண்டாக்கிக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட் டது. அதன்மூலம் அவர் சமயப்பொறைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு, எல்லோரும் ஒருமுகமாகத் தமக்கு, அதாவது, பேரரசராயும் தீர்க்கதரிசியுமாயிருக்கும் ஒருவருக்குக் கீழ்ப்படிந்து விசுவாசம் செலுத்தவேண்டுமென வற்புறுத்துவது எளிதாயிற்று. இங்ஙனம், அவர் வெறும் அரசியல் இறைமையைக் காட்டிலும் மிகப் பரந்த பொருளை உட்கொண்டதும், மகமதுவின் நடத் தையைப் பின்பற்றி அமைந்ததுமான ஓர் இறைமையை அடையப் பாடுபட்டார்.

ஆனால், அம் முயற்சியில் எவ்வளவு தூரம் அக்பர் வெற்றி யடைந்தார் என்பதைப் பிற்கால வரலாறு நமக்குத் தெள்ளிதின்

புலப்படுத்துகிறது. அவர் காலத்து வாழ்ந்தவர்களாலேயே அஃது ஏளனம் செய்யப்பட்டது. மக்களிடையே இந்தத் தெய்விக மதமானது ஒருவிதமான வரவேற்பையும் பெறவில்லை. ஏதோ உலகச்சார்பான நன்மைகள் சிலவற்றை அக்பரிடம் எதிர்பார்த்து அவரை மகிழ்விக்க விரும்பிய ஒரு சிலரைத்தவிர ஏனையோர் அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பொதுவாக, அம்மதத்தின்பால் மக்களுக்கு வெறுப்பு ஏற்படாவிடினும் ஒருவிதமான அலட்சியம் காணப்பட்டது. அக்பரின் மிக நெருங்கிய நண்பர்களான மான்சிங் போன்றவர்கள் அதைத் தழுவ முன்வரவில்லை. எனவே, அச்சமயமானது தன்னை உண்டாக்கியவரோடு தானும் மாய்ந்தது. அக்பருக்குப்பின் அது வாழமுடியவில்லை. ஆனால், ''தெய்விகச் சமயமானது அக்பரின் அறிவு முதிர்ச்சிக்கோர் அடையாளமாகவன்றி, அவரது கயமையின் சின்னமாகவே காட்சியளிக்கிறது''[33] என்று கூறுவதென்பது அக்பரின் உண்மையான உள்ளக்கிடக்கையை நன்கு புரிந்துகொள்ளாதாரின் கூற்றேயன்றி வேறன்று. நாட்டில் நிலவும் தலையாய அரசியல் பதவியையும் சமயப் பதவியையும் ஒரே மனிதரிடம் இணைக்கவும், அவ்வொருவருக்கே எல்லாக் குடிமக்களுடைய ஒருமித்த விசுவாசத்தைப் பெறவும், மொகலாயப் பேரரசின் கட்டுக்கோப்பைக் காக்கவும் விரும்பிய ஒருவரின் விருப்பத்தில் முளைத்ததே தெய்விகச் சமயம் என அறுதியிட்டுக் கூறலாம். இந்தக் குறிக்கோளை அடையவேண்டி முதலில் அவர் இந்துக்களின் அநுதாபத்தோடு கூடிய ஆதரவை நாடினார். அதன்பின் சுல்தான்-இ-ஆதில் என்ற பதவிக்குரிய அதிகாரத்தைச் செலுத்தலானார். அப்படிச் செய்தபோது அது யாவராலும் வெறுக்கப்பட்டு எதிர்க்கப்பட்டதால், அவர் தம்மையே தீர்க்கதரிசியாகக் கொண்ட புதியதொரு மதத்தை உண்டாக்கினார். புதியதொரு பேரரசைத் தோற்றுவித்ததுபோல் அவர் புதியதொரு மதத்தையும் ஏற்படுத்தினார். இயல்பாகவே அவர்பால் பொதிந்து கிடந்த அகமுக நோக்கும் (Mystic Nature), பல்சமய ஆர்வமும் (Eclectic) அவரது அரசியல் நோக்கத்தால் நல்வடிவு கொடுக்கப்பட்டு மலர்ந்தன. அவர் தம் குடிமக்களின் நன்மையையும், தம் வம்ச பரம்பரையின் நலனையும் ஒருங்கே வளர்க்க எண்ணிய போது, அவரது மனத்தில் அப்பழுக்கில்லை. மனமார அவர் அத்தகைய நலனை விரும்பினார் எனக் கூசாமல் கூறலாம். அவரைப் பொறுத்தவரையில் அந்த நலனானது, கடவுளுக்குப் பெருமை செய்வதிலும், மக்களுக்கு அமைதியைத் தேடித் தருவதிலும், பேரரசின் பாதுகாப்பை நிலைநிறுத்தலிலுமே அடங்கி

[33] அதே நூல், பக். 222.

யிருந்தது. இவை யாவற்றையும், அரசியல் இறைமையையும் சமயத் தலைமையையும் ஒருங்கே சேர்ப்பதன்மூலம் எளிதில் அடையக்கூடுமென அவர் நம்பினர். அந்த ஒரே நோக்கத் தோடேயே அவர் தீர்க்கதரிசியாகத் தம்மை மாற்றிக்கொண் டார். பேரரசோடு கூடிய ஒரு மதத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதே அவரது குறிக்கோளாகும். அக் குறிக்கோளை அடைய அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பிற் காலத்தே மிக நல்ல பலன்களை விளைவித்தன. அவர் தோற்று வித்த மதம் அவரோடேயே மாய்ந்துவிட்டதென்பது உண் மையே. தீர்க்கதரிசி என்ற பட்டத்தை அவருக்குப்பின் யாரும் சூட்டிக்கொள்ளவில்லை. எனினும், அவர் கொண்டாடிய ஏனைய உரிமைகள் யாவும் அவருக்குப் பின்பும் நிலைத்தன. வழக்கறி ஞர்கள், சமய அறிஞர்கள் (Theologians) ஆகியவர்கள் யாவரை யும்விட அரசர் உயர்ந்தவர் என்ற கொள்கையும், சமயத்துறை அரசியல் துறை இரண்டுக்கும் அரசர் தலைவர் என்ற கோட்பாடும், அரசரே கடவுளின் பிரதிநிதி, அவர் சமயப்பொறையைத் தம் ஆணையால் நிலைநாட்ட வல்லவர், குடிமக்கள் அனைவரது நலன் களையும் அநுசரித்து அவர் ஆட்சி புரியலாம் என்பனபோன்ற கொள்கைகளும் அவருடைய சந்ததியார்களால் நன்கு கடைப் பிடிக்கப்பட்டன. இங்கேதான், பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அலாவுதீன் கில்ஜியாலும், மகமது பின் துக்ளக் காலும் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு முறையானது முற்றுப்பெறு வதைப் பார்க்கிறோம். அம் முறையின்கண், முஸ்லிம் சமய வாதிகள் அரசுபற்றிய காரியங்களில் தலையிடுவது கண்டிக்கப் பட்டது; சமயவாதிகள் அரசியலில் கலந்துகொள்ளத் தகுதி யற்றவர்கள் எனக் கருதப்பட்டது. இஸ்லாமிய மதமும், இஸ்லாமிய அரசும் செயல்படக்கூடிய அதிகார வரம்பு வெவ்வே றென்று கொள்ளப்பட்டது; இந்தோ-இஸ்லாமிய அரசுக்கும், இந்தியாவிலிருந்து இஸ்லாம் மதத்துக்குமுள்ள தொடர்பு புதிய முறையில் அமைக்கப்பட வேண்டுமென்பதை அது வற்புறுத்தி யது. இந்தப் போக்கானது இறுதியாக இந்தோ-இஸ்லாமிய அரசின் வெற்றியில் முடிந்தது. நாட்டின் இறைவனாகவும், சமயத்தின் முதல்வனாகவும் அல்லது தீர்க்கதரிசியாகவும் மன்னர் சிம்மாதனத்தில் அமர்த்தப்பட்டார். அரசியல் துறையின் தலைமை என்ற இறைமையையும், சமயத் துறையின் தலைமை என்ற தீர்க்கதரிசித் தன்மையையும் ஒருங்கே சேர்த்து, அதன்மூலம் நாட்டு மக்கள் அனைவரும் யாதொரு பேதமும் இன்றி ஒருமுகமாகத் தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமென வற்புறுத்தியதொன்றே அக்பரின் மிகப் பெருஞ் சாதனையாகும். ஜில்லிலா (Zill-i-Allah) என அவர் சூட்டிக்கொண்ட பட்டத்தின்

உட்பொருளும் அதில் அடங்கியதேயாகும். அவருடைய சந்ததியார்கள் பின்பற்றுதற்குரிய ஒரு முன்மாதிரியாக அஃது அமைந்தது. அவுரங்கசீபைத் தவிர அவரது வழிவந்த அனை வரும், ஜில்லிலா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். உலகியல் துறை, ஆன்மிகத் துறை இரண்டிலும் அவர்கள் தலைமை கொண்டாடினர். அதன்மூலம் டில்லியில் ஆண்ட அவர்களுடைய முன்னோர்கள் என்றுமே அநுபவத்திராத அதிகாரத்தையும், பெருமையையும், தூய்மையையும் அவர்கள் பெற்றனர்.

இங்ஙனமாகத்தான், இறைமாட்சி என்பது ஒரு நிறுவனம் என்ற முறையில் உயரியதொரு நிலையையும் பெருமையையும் அடைந்தது. அதாவது, அக்பரது காலத்துக்குமுன் அதன்பால் காணப்படாத இறைமையை அது பெற்றது. இறைமாட்சிக்கு ஏற்பட்ட ஏற்றத்தின் அளவுக்கேற்ப இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறையானது தலைசிறந்த வளர்ச்சியை அடைந்தது. அரசு என்பது மன்னர் என்பாரின் ஆளுமையின் மூலமாக வெளிப்படத் தொடங்கியது. அலாவுதீன் கில்ஜியும், மகமது பின் துக்ளக்கும் ஆரம்ப காலத்தில் செய்த முயற்சிகள், ஷெர்ஷாவினாலும், இஸ்லாம் ஷாவினாலும் ஊட்டி வளர்க்கப் பெற்று, அக்பர் காலத்தே பலன் தரத்தொடங்கின; இந்தோ-இஸ்லாமிய இறைமாட்சிக்கும் அதன்மூலம் இந்தோ-இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்குமுறைக்கும், புதியதொரு சிறப் பியல்பு ஏற்பட்டது. அவற்றை, அவரது வழிவந்தவர்கள் அடி பிசகாமல் பின்பற்றினர். அவை தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்ட வரையில் மொகலாய ஆட்சியானது, தேசீய நோக்கத்தை உண்மையிலேயே பிரதிபலிக்கலாயிற்று. ஸர் ஷாஃபட் அகமது கான் (Sir Shaafaat Ahmed Khan) என்பார் கூறியுள்ளபடி அஃது 'அடிப்படையிலேயே ஒரு தேசீய அரசாங்கமாக' விளங்கியது. இந்தக் குறிக்கோளிலிருந்து அவர்கள் எப்போதெல்லாம் சிறிதே விலகினார்களோ அப்போதெல்லாம் முடிவிலாத் துயரமும் தடுக்க முடியாத அழிவும் வந்து சேர்ந்தன. அஃது எப்படி நிகழ்ந்தது என்பதுவே பின்வரும் அத்தியாயங்களில் ஆராயப்படும் பொரு ளாக இருக்கும்.

15. அக்பரும், சமயச் சார்பற்ற, இறைமை சான்ற அரசும்

அக்பரது ஆட்சியில் அரசு சமயச் சார்பற்றதாகிறது

இதுகாறும் கூறியவற்றால், தைமூர் முதல் அக்பர் வரையுள்ள மொகலாய அரசர்கள் எங்ஙனம் ஒருவர் விடாமல் தெய்விக உரிமையின் வழியே இறைமை கொண்டாடி வந்தனர் என்பது தெற்றென விளங்குகின்றது. ''எல்லாம் வல்ல இறைவர் யாதாமொரு மனிதனை அரியணையில் அமர்த்தி அதன்மூலம் இறைமையை அவனுக்கு வழங்கும்போது, அதோடுகூடத் தனிப் பட்டதொரு பெருமிதத்தையும், ஞானத்தையும் அன்னார்க்கு அளிக்கிறார். அதன்மூலம் மன்பதை அனைத்தையும் அவன் தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்கிறான்'' ஆகையால், ''அவன் நீதியுள்ள ஓர் அரசன் கடவுளின் சாயையாயிருக்கிறான்''[1] என்று அமீர் தைமூர் நம்புகின்றார். அக்பர் தைமூரைக் காட்டிலும் ஒரு படி மேலே சென்று பின்வருமாறு அறுதியிட்டுக் கூறுகின்றார்: ''மன்னனைக் கண்ணாரக் காண்பதுவே, இறைவழிபாட்டின் ஒரு பகுதியாகும். வெறும் சம்பிரதாயத்துக்காக வேண்டிக் கடவுளின் சாயை என மன்னர் அழைக்கப்படுகிறார். ஆனால், உண்மையில் அவரைக் காண்பதுவே, நம்மை எல்லாம் படைத்தவனையும், எல்லாம் வல்லவரின் பாதுகாப்பையும் நமக்கு நினைவுபடுத்துவதற்

---

[1] (The Mulfuzat-Timury) மல்ஃபூசத் தைமூரி அல்லது துருக்கி மொழியில் எழுதப்பட்ட மொகலாய மன்னர் தைமூரின் நினைவுக் குறிப்புகள்; அபு தாலிப் ஹுசைனி (Abu Talib Hussyny) என்பாரால் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டுப் பின்னர் மேஜர் சார்ல்ஸ் ஸ்டீவர்ட் என்பாரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதில் பக். 6, 7ஐ பார்க்க (J. Murray, Albemari Street), *1830*.

குரிய ஒரு சாதனமாகும்''[2] அரசபதவிபற்றி அவர் கொண்டிருந்த இத்தகைய எண்ணங்களாலேயே உலகியல் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் தமக்குத் தனித்தலைமை இருப்பதாகக் கூறி, அவர் அவ்விரண்டு தலைமைகளையும் தாமே மேற்கொண்டொழுகலானார். அதனால் அதிகாரங்கள் மையத்தில் செறிந்தன (Centralization); அதோடு அரசு சமயச் சார்பற்றதாக விளங்கவும் வழி ஏற்பட்டது. இந்தியாவின் இஸ்லாமிய அரசின் உட்பொருளையே அவர் மாற்ற முயன்றார். மக்களுக்கு ஒரு புதிய சமயத்தையும் தந்துதவ முன் வந்தார்.

அக்பரது காலத்தில் அரசு சமயச் சார்பற்றதாக மாறிற்று. ஏனெனில், ''நம்புவோர்களின் சமுதாயம்'' (Society of Believers) ஒன்றுக்கு நாடு சொந்தமாயிருந்த நிலை மாறி விட்டது. இஸ்லாமிய அரசு ஒன்றுக்குத் தலைமை தாங்கவோ, அன்றி இஸ்லாமியப் படைகளுக்குத் தளபதியாய் விளங்கவோ, அக்பர் மறுத்தார். ஏனெனில், முதலாவதாகத் திறமைமிக்க நிர்வாகிகளாயும், தீரமிக்க தளபதிகளாயும் இருந்த முஸ்லிம்களல்லாதார் பலர் அவருக்குக் கீழ்ப் பணியாற்றி வந்தனர். அவரது அதிகாரமானது நிலைநாட்டப்பட, முஸ்லிம்களின் ஆதரவு எவ்வளவு தேவையாயிருந்ததோ அவ்வளவுக்கு முஸ்லிம்களல்லாதாரின் ஒத்துழைப்பும் வேண்டத்தக்கதாயிருந்தது. இரண்டாவதாக புதுப்புது நாடுகளை வெல்லவேண்டுமென்பதில் அவரது நாட்டமெல்லாம் சென்றதேயன்றி, தூய்மையான சமயப் போர்களில் ஈடுபடுவதில் செல்லவில்லை. 'தைமூரிகளின் பேருக்கும் பெருமைக்கும் ஏற்ப ஒரு பேரரசைத் தோற்றுவிக்க வேண்டும்; கடவுளின் பரிசாக வந்த அதிகாரத்தை நன்கு வலுப்படுத்தவேண்டும்; யாவராலும் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய ஓர் இறைமையை நிலைநாட்டவேண்டும்'- இவையே அக்பரின் பெரு விருப்பங்களாய்த் திகழ்ந்தன. இந்த நோக்கங்களெல்லாம் உலேமாக்களின் ஆசையில் மண்ணைத் தூவுவனவாய் இருந்தன. அரசின்மேல் ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்று அவர்கள் கொண்டிருந்த பெரு விருப்பம் நிறைவேறவில்லை. என்றுமே காணாத அளவில் அரசு சமயச் சார்பு அற்றதாக மாறியது. அக்பரின்கீழ் இந்தோ-இஸ்லாமிய அரசானது புதிய முறையில் செயல்படத் தொடங்கியது. குடிமக்களையும், உலேமாக்களையும் அவர் நடத்திய விதமும், அரசாங்கத்தில் எல்லா வகுப்பு மக்களுக்கும் இடம் தந்து அவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரமும் அளிக்க முன்வந்த அவரது

[2] ஆய்ன்-இ-அக்பரி (Ain-i-Akbari); ப்ளோச்மேனால் (Blochmann) மொழிபெயர்க்கப்பட்டது.

தாராளக் கொள்கையும், பேரரசின் தேவைகளுக்கேற்பப் புதிய மதம் ஒன்றைத் தோற்றுவிக்க அவர் செய்த முயற்சிகளும் ஆகிய எல்லாம் அவர் புதியதோர் இந்தோ- இஸ்லாமிய அரசை நிறுவப் பாடுபடுகிருர் என்பதையே தெளிவாக எடுத்துக்காட்டின. உண்மையிலேயே அவரது அரசு பெரிதும் சமயச் சார்பற்றதாகவே விளங்கியது. அக்பர் ஏற்படுத்திய நிர்வாக முறைகள் யாவற்றிலும் இச் சமயச் சார்பற்ற தன்மையானது தக்க முறையில் பிரதிபலித்தது. எனவே, இத்தகைய ஆட்சி முறைகளை அடுத்தாற்போல் நாம் பரிசீலனை செய்வோமாக!

சதரே சதுர் பதவியும் அதன் அதிகாரங்கள் அகற்றப்படலும்

அக்பருக்கு வெறும் கலீஃபாவாகவோ அல்லது தீர்க்கதரிசியான மகமதுவின் பிரதிநிதியாகவோ இருந்து மக்களின் கீழ்ப்படிதலைப் பெற வேண்டுமென்ற விருப்பம் இல்லை என்றும் கடவுளின் தனிப்பட்ட பிரதிநிதி என்ற முறையில் எல்லோரும் ஒருமிக்கத் தமக்குப் பணிய வேண்டுமென அவர் வற்புறுத்தினுர் என்றும் ஏற்கெனவே கண்டோம். எனவே, அவர் கலீஃபாக்களைவிட உயரியதொரு பதவிக்குத் தாம் தகுதி உள்ளவர் என்பதைக் காட்டிக்கொண்டார். அரசின் கொள்கைகளையும் அதன் அமைப்பு முறையையும் தம் சொந்த விருப்பத்திற்கேற்பவே வகுத்துக்கொண்டதன் மூலமும், தம்மாலேயே ஆக்கப்பட்டதும் அல்லது ஒப்புக்கொள்ளப்பட்டதுமான சட்டங்களின்படி மட்டுமே நீதி வழங்கி வந்தமையாலும் அவர் அத்தகைய தகுதி உடையவர் என்பதை வெளிப்படுத்தினுர். முஸ்லிம் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் 'ஃபக்கிகள்' அல்லது முஸ்லிம் சட்ட நிபுணர்கள் அரசின்மீது பெருமளவில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர் என்பதை ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியம். அரசு கடைப்பிடித்த கொள்கையிலும் அதனுல் வழங்கப்பெற்ற நீதியிலும் அவ் வாதிக்கமானது தொனித்தது. அலாவுதீன் கில்ஜி என்பார் எதேச்சாதிகாரமான முறையில் அவர்களைக் கட்டுப்படுத்தப் பார்த்தும் பயனில்லை. அவர்களை நோக்கி அவர், ''அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையிலும் அரசாங்கத்திலும்'' தலையிடுவதை நிறுத்திக்கொள்ளும்படி ஆணையிட்டார். எனினும், அவர்களின் தலையீட்டை அவராலும் அவருக்குப்பின் வந்த எவராலும் தடுக்க முடியவில்லை. அரசின் கொள்கையையும் நீதி வழங்கும் முறையையும் அவர்கள் பெரிதும் உருவாக்கி வந்தனர். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, 'பாபரின் நினைவுக்

குறிப்பு'களிலிருந்துதான் முதன் முதலாகப் படிக்கிறோம். கராபாக்(Qarabagh)கைச் சேர்ந்த ஷேக் ஷராப் என்பவர் அப்துல் அஜீஸ் என்பவரால் தூண்டப்பட்டோ அல்லது அவராகவோ வெளியிட்ட ஆணை ஒன்றில் கொடுங்கோலாட்சி புரிந்ததாக பாபர்மீது குற்றம் சாற்றியதுமன்றி லாகூரில் உள்ள இமாம்களையும் அதற்கு உடன்படுமாறு தூண்டினார். இதைக் கேட்ட பாபர் பெரிதும் கோபமுற்று ஷேக் ஷராப் என்பவரையும் லாகூரின் இமாம்களையும் கைது செய்யும்படி கம்பரே அலி அர்குன் (Qambar-i-Ali Arghun) என்பாருக்குக் கட்டளை இட்டார். அங்ஙனமே அவர்கள் கைது செய்யப்பட்டு அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டனர். ஆனால் என்ன தண்டனை கொடுக்கப் பட்டதென்று தெரியவில்லை.[3] ஆனால், இதே முறையில் காஸ்-உல்-குஸாத் (Kazi-ul-Kuzat) என்பவர் அக்பரிடம் நடந்து கொண்டபோது அவர் எத்துணைக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார் என்பதை ஈண்டு நோக்கவேண்டும். ஈவிரக்கம் இன்றி அவர் அன்னாரை ஒடுக்கித் தமக்குப் பணியுமாறு செய்தார். ஒருவர்பின் ஒருவராக அவர்களை அக்பர் ஒழித்துக்கட்டினார். அவர்களை ஒழிக்க அவர் கையாண்ட முறைகள் அவ்வளவு நேர்மையானவை என்று கருதத்தக்கன அல்ல. அதன்பின் அவருக்கு எதிராக எவ்விதமான முணுமுணுப்பும் ஏற்படவில்லை. உலுமாக்கள் அவருடைய காலடியில் விழுந்து வணங்கியபோதும், அக்பர், அவர்களுக்கு மானியமாக அளிக்கப்பட்ட நிலங்களைப் பறித்துக்கொண்டார். அல்லது ஏதாவது ஒரு காரணத்தின்மேல் அந்த மானியங்களைக் குறைத்தார்.[4] ப்ளோச்மேன் என்பார் (Blochmann) உண்மையாகவே பின்வருமாறு கூறியுள்ளார்: "அக்பர் சயூர்கல் (Sayurghal) நிலங்களில் பெரிதும் தலையிட்டார். தாம் விரும்பிய நிலங்களை அவர் எதேச்சாதிகாரமாக எடுத்துக்கொண்டார். பல மகமதிய ஆப்கன் குடும்பங்களை ஒழித்து அந்த நிலங்களையெல்லாம் அவர் பறித்துக்கொண்டார். அதன்மூலம் அவர் தமக்குச் சொந்தமான நிலங்களை அல்லது கலிச்சா நிலங்களைப் (Khalicha lands) பெருக்கினார். காதர் (Cadr) என்ற பேரதிகாரியின் அதிகாரத்தை அவர் முழுவதுமாக உடைத்தெறிந்தார். அவரது பெருமை எக்காலத்தும், அதிலும் சிறப்பாக மொகலாயர்களின் காலத்தில் மிகப் பெரிதாயிருந்தது. அவர் காத்ரே ஜஹான் (Cadr-i-Jahan) என்ற பட்டப்பெயருடன் அப்போது விளங்கினார். புதிய அரசர் ஒருவர் ஜுலஸ் (Julus)

---

[3] பாபரின் நினைவுக் குறிப்புகள் Memoirs of Babar (translated by Beveridge), Vol. III, pp. 687-8.

[4] Ain-i-Akbari (translated by Blochmann), Vol. I, p. 269.

அல்லது பட்டம் எய்தும்போது, அதைச் சட்டரீதியாக்குதற்கு அவரது ஆணை தேவைப்பட்டது. அக்பரது காலத்தில்கூட இவர் உயர் அதிகாரிகளில் நான்காவது இடத்தைப் பெற்றிருந்தார். இவருடைய அதிகாரங்கள் மிகப் பெரியனவாயிருந்தன. நாட்டின் தலையாய சட்ட அதிகாரிகள் இவர்களேயாவர். மதக்காரியங் களுக்காகவும், பரோபகாரக் காரியங்களுக்காகவும் பயன்படுத் தப்பட்ட எல்லா நிலங்களும் இவர்களது மேற்பார்வைக்கு உட்பட்டிருந்தன. அரசரைக் கேளாமலேயே அத்தகைய நிலங் களை மானியமாக வழங்க இவர்கள் எல்லையற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். மதசம்பந்தமான சட்டங்களைப் பொறுத்த வரையில் இவர்களே தலையாய சட்ட அதிகாரிகளாக இருந்தனர். அத்தகைய சட்டங்களை மீறினவர்களைச் சமய ஒறுப்புக்கு ஆளாக் கும் உயர் அதிகாரிகளும் (High Inquisitors) அவர்களாகவே விளங்கினர். சான்றாக, அப்துன் நபி (Abdun Nabi) என்ற சதர் அதிகாரி, வைதிகச் சமயத்துக்கு விரோதமாக நடந்து கொண்ட இருவருக்கு மரணதண்டனை விதித்தாரென அறி கிறோம்.''[5] அக்பரது ஆட்சிக்காலத் தொடக்கத்தில் அப்துன் நபி எத்தகைய பெருநிலையில் இருந்தாரென்பதை அக்பரே அவரது ''மிதியடிகளைக் கையிலேந்தி அவரது இணையடிகளுக்கு முன் ஏந்தி நின்று அவருக்குப் பெருமை செய்வது வழக்கம்''[6] என்பதைக் கொண்டு நன்கு அறிந்து கொள்ளலாம். ஆனால், அதே அப்துன் நபி 1578ஆம் ஆண்டில் அவரது உயர் பதவியிலிருந்து நீக்கப் பட்டார். அவருடைய பெருமைகள் யாவும் அவரிடமிருந்து அகற்றப்பட்டன. 1581ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காபூலி லிருந்து வெற்றியுடன் திரும்பி அக்பர் வந்துகொண்டிருந்த போது ரவி நதியைக் கடந்த உடனேயே ஆறு மாகாணச் சதர்களை (Sadr) நியமித்தார். டில்லி, மாள்வா, குஜராத் ஆகிய நிலப் பகுதிக்கு ஒருவரும், ஆக்ரா, கல்பி, கலஞ்ஜர் ஆகிய இடங்களுக்கு ஒருவரும், ஹாஜீப்பூர் முதல் ஷர்ஜூ வரை பரந்திருந்த நிலப் பகுதிக்கு மற்றொருவரும், பீஹார், வங்காளம், பஞ்சாப் ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொருவருமாக ஆறு அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். இவர்களில் தலைமைச் சதராக அப்துன் நபிக்குப் பின் வந்தவர் சுல்தான் காஜா (Sultan Khwaja) என்பவர், தெய்விக சமயத்தின் உறுப்பினராக, 1585இல் அவர் இறக்கும் வரை இருந்தவர். அவருக்குப்பின் அமீர் ஃபதுல்லா (Fathullah) என் பார் தலைமைச் சதராக ஏழு ஆண்டுகள் பதவி வகித்தார். ஆனால், அவரது பதவியின் முக்கியத்துவம் வெகுவாகக் குறைந்துவிட்டது.

[5] அதே நூலைப் பார்க்க. Ibid., (translated by Blochmann), Vol. I, pp. 270-71.

[6] Ibid (அதே நூலில்).

சான்ருக, அவர் ஒரு முக்கிய அரசியல் காரியமாகத் தக்காணத்திற்கு அனுப்பப்பட்டபோது அவருக்குப் பதிலாக அவருடைய பணியாள் ஒருவனே அவரது அதிகாரத்தைச் செலுத்தி வந்தான் எனக் கேள்விப்படுகிறோம். பதெளனி என்பார் கூறியுள்ளபடி ஐந்து பிகா நிலங்களைக்கூட மானியமாக வழங்க அவருக்கு அதிகாரமில்லை. உண்மையில் அவரது சதர்ப்பதவி ஒரு கற்பனைப் பதவியாகவே இருந்தது. ஏனெனில், அவரிடம் இருந்த எல்லா நிலங்களும் பறிக்கப்பட்டுவிட்டன.[7] ஃபதுல்லாவிற்குப் பிறகு சதர்ஜஹான் என்பவர் அப் பதவிக்கு வந்தார். ஆனால் அவர், தெய்விகச் சமயத்தில் உறுப்பினராக இருந்தார். இங்ஙனம் அப் துன்நபிக்குப் பின்னர், அக்பர் தமது தீர்க்கதரிசிப் பதவியை ஒப்புக்கொண்டு தம்மிடம் மிகமிகப் பணிவாக நடந்துகொள்பவர்களாகப் பார்த்துச் சதர்களாக நியமிக்கலானார். அவர்கள் அக்பரின் விருப்பத்திற்கேற்பவே நடந்து வந்தனர். தாமாக எந்தப் பணியிலும் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் தரப்படவில்லை. மாகாணங்களில் சதர்கள் திவான்களுக்குக் கட்டுப்பட்டு இருந்தனர். எனவே, அங்கேயும் அவர்களுக்கு அதிகாரமோ கௌரவமோ இல்லாமற் போயிற்று.

அக்பர் காலத்தில் சட்டமும் நீதியும் சமயச் சார்பற்ற தன்மையை அடைதல்

சட்டத்துறையிலும் நீதித்துறையிலுங்கூட அக்பர் தம் முழுத் திறமையோடும் மேற்கண்டவாறே செயல்பட்டார். பேரரசில் இருந்த ஒவ்வொரு பெரிய நகரத்திலும் ஒரு முக்கிய காஜியை (Qazi) அவர் 1581ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் நியமித்தார். சான்ருக, காஜி சத்ருடீன் லாகூரி (Sadruddin Lahori) என்பவர் பரோச் நகரின் காஜியாக நியமிக்கப்பட்டார். அவர் ''மஹ்துமுல் முல்க் (Makhdum-ul-Mulk) என்பவரைவிட ஒரு படி அதிகமாகவே சுயேச்சையாகத் தம் பிரியம்போல் சிந்தனை செய்து வந்தவர்.''[8] என மதிக்கப்பட்டவர். ஜான் பூருக்கு முல்லா அப்துஸ் ஷாகூர் குல்தார் (Mulla Abdus Shakur Guldar) என்பவரும், பீஹாருக்கு முல்லா மஹமத் மாசூம் (Mulla Muhammed Masum) என்பவரும் காஜிகளாக நியமிக்கப்பட்டனர். குரானில் காணப்பட்ட தூய சட்டத்தை (Holy Law) நடைமுறையில் பயன்படுத்துவதே காஜிகளின் கடமையாகும். அதைப் பொருள் விளக்கம் செய்வது மஃப்டிகளின் கடமையாகும்.

[7] பதெளனி, தொகுதி II, பக். 254.

[8] Ibid., Vol. II, p. 354.

என்னினும், தூய சட்டமானது முஸ்லிம் சட்டத்தின் ஒரு பகுதியே ஆகும். முஸ்லிம் சட்டத்திற்கு அது ஒரு முக்கிய ஆதாரமாக இருந்தபோதும் அதன் ஒரு சில பகுதிகளே நாட்டில் நன்கு நிலை நாட்டப்பட்டு, நிலவி வந்த வழக்கங்களும் சென்றகாலத்தே ஆட்சி புரிந்த மன்னர்களின் ஆணைகளும் நிகழ்காலத்தில் நாட்டை ஆளும் மன்னனின் ஆணைகளும் சேர்ந்து தீர்மானித்தன. முஸ்லிம் அல்லாதார் பெரும்பான்மையாக வாழும் இந்தியா போன்ற நாட்டில், அதுவும் அவர்களைச் சமாதானப்படுத்துவதே தம் நோக்கமாகக் கொண்ட அக்பரது ஆட்சியில், வழக்காற்றில் இருக்கிற அல்லது மன்னனின் விருப்பத்தை ஒட்டிய சட்டங்கள், குரானியத் தூய சட்டத்தையும் நீதி வழங்குகின்ற முறையையும் மிகப் பெரிதும் பாதிக்கும் என்பதை உறுதியாகக் கூறலாம். தீவிர இஸ்லாமிய மதத்தை அக்பர் புறக்கணித்து எல்லாச் சமயங்களிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியபோது அவர் முஸ்லிம்கள், முஸ்லிம்கள் அல்லாதார் ஆகிய எல்லா மக்களது சமய வாழ்க்கையையும் பெரிதும் பாதிக்கக்கூடிய பல ஆணைகளை வெளியிட்டார். அவருக்குமுன் இருந்த எவரும் அவரைப்போல் குரானியத் தூய சட்டத்தை உதறித் தள்ளத் துணிவுகொள்ள வில்லை. ஒருசிலர் தங்களுடைய சுயநல நோக்கங்களை நிறை வேற்றிக்கொள்வதற்காக, காஜிகள், முஃப்திகள் (Muftis) ஆகியோரின் துணைகொண்டு தூய சட்டத்தை ஓரளவு திரித்துக் கூற முன்வந்தனரேனும் அக்பரைப்போல் வெளிப்படையாக அவற்றை மீற எவரும் முன்வரவில்லை. உண்மையிலேயே அக்பர் இன்னும் ஒரு படி மேலே சென்று முஸ்லிம் சட்டத்தின் உட் பொருளுக்கே விரோதமான முறையிலும், இந்துக்களின் சட்டத் திற்குக்கூட முரணான வகையிலும் பல ஆணைகளைப் பிறப்பித்தார். சான்றாக, ஜமீன்பாஸின் (Zaminbos) பெயரில், ஸிஜ்தா (Sijdah) மன்னர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும், மருத்து வர்களின் ஆலோசனையின்படி உடலைக் குணப்படுத்துவதற்காக மது அருந்தலாம் என்றும், மாட்டிறைச்சி உண்ணக்கூடாதென் றும், ஒருவன் தன் ஒன்றுவிட்ட சகோதர-சகோதரிகளிடையே திருமணம் செய்துகொள்வதால் காமக் கிளர்ச்சி மிக அற்ப மாகவே ஏற்படுமாகையால் அத்தகைய நெருங்கிய உறவினர் களோடு திருமணத் தொடர்பு கொள்ளக்கூடாதென்றும், இள வயதில் பிறக்கின்ற குழந்தைகள் மிகப் பலவீனமாக இருக்கு மாதலால் பதினாறு வயது நிரம்பப் பெறாத சிறுவர்களும், பதினான்கு வயதை அடையாத சிறுமிகளும் திருமணம் செய்து கொள்ளக் கூடாதென்றும்''[9] அவர் பல ஆணைகளைப் பிறப்பித்

[9] Ibid., Vol. II, p. 311, 312, 315.

தார். மேலும், வாரத்தின் முதல் நாளில் மிருகங்கள் கொல்லப் படுவதை அவர் கண்டிப்பாகத் தடுத்தார். ஏனெனில், அது கதிரவனுக்குரிய தூய தினமாகக் கருதப்பட்டது. அடிமை முறையானது முற்றும் தடுக்கப்பட்டது. அடிமைகளை விற்பனை செய்வதையும் ஒருவரது தனிப்பட்ட சுயேச்சையைக் கெடுப்பதை யும் அவர் தடுத்தார். இந்தியரின் வழக்கத்திற்கு விரோதமாக விதவைகள் சதி என்னும் முறையைக் கைக்கொள்ளும்படி அவர்களின் விருப்பத்திற்கு விரோதமாக வற்புறுத்தப்படலா காது[10] என்றும் அவர் கட்டளையிட்டார். நீதி வழங்குவதில் ஒரு மாகாணத்தின் சுபாதாரோ அல்லது ஆளுநரோ ''ஒரு தனிப் பட்ட மனிதனின் சமயக் கொள்கையில் தலையிடக்கூடாது''[11] என அவர் கண்டிப்பாகக் கட்டளை இட்டிருந்தார்.

இந்தக் கட்டளைகளிலிருந்து, தூய சட்டத்தின் (Holy Law) மீது அரசரின் ஆதிக்கமானது எவ்வளவு தூரம் கட்டுப்பாடுகளை விதித்து வந்துளது என்பது நன்கு தெளிவாகிறது. அந்த வகை யில் இக் கட்டளைகள் பெரிதும் குறிப்பிடப்படத் தக்கனவாகும். உண்மையில் நீதித் துறையில் அக்பர் இத்தகைய இறைமையைக் கொண்டாடினார். ''நீதிபற்றிய காரியங்களில், மன்னரே தனித் தலைமை பெற்றவர். மக்களின் குறைகளைக் களைதல் இறைமை வாய்ந்த மன்னர்களுக்கே உரிய கடமை'' என்பது அவரது கருத்து. எனவே, அவரே மேல் முறையீட்டு நீதிமன்றமாகத் திகழ்ந்தார். அவரது இந்த அதிகாரங்களைச் செயலாக்கியவர்கள் காஜியும், மீர் ஆதில் என்ற அதிகாரியும் ஆவர். ஆனால், அவர்கள் அரசரின் 'நீதித்துறைப் பேராட்களாகவே'[12] (Judiciary delegates) விளங்கினரேயன்றி வேறல்ல. எனவே, அரசரின் 'நீதித் துறைப் பேராட்களாகிய' அவர்கள் குரானின் கட்டளைகளைவிட அரசரின் ஆணைகளுக்கே அதிக மதிப்பைக் கொடுத்ததில் வியப் பொன்றுமில்லை. 1579ஆம் ஆண்டிலிருந்து அக்பர் தம்மைச் சுல்தான்-இ-ஆதில் என அறிவித்துக்கொண்டார். அதன்படி அவர், ''குரானிலுள்ள வாசகங்களின்படி மட்டுமல்லாமல்'' ''எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில்'' ஆணைகளை வெளியிடுதற்கான அதிகாரத்தைப் பெற்றார். அவ்வதிகாரத் தகுதியை மறுக்கக்கூடியவர்கள் எவரும் இலராயினர். ஆகை யினால், அவருடைய கட்டளைகளிலும், சட்டங்களிலும் சமயச் சார்பற்ற தன்மையை நாம் திட்டவட்டமாகக் காண முடிகிறது. அச் சட்டங்களின் வழியே நீதியும் சமயச் சார்பற்ற முறையில்

---

[10] Ain-i-Akbari, Vol. II, Bk. iii, p. 42 (Ain 1V).

[11] Ibid., p. 38.

[12] Ibid., Vol. II, Bk. III. p. 41.

வழங்கப்பட்டது. சட்டங்களிலும், நீதி முறையிலும், சமயத்தின்பால் அதிகபட்சமான சார்பு என்பது மிக அரிதாகவே காணப்பட்டதென்று கூறலாம். இந்த உண்மையானது மிகமிகக் குறிப்பிடப்படுதற்கானதொன்றுகும். ஏனெனில், அதன் மூலமாக அவரது அரசாங்கமானது, அதாவது, அவருடைய ஆட்சியின்கீழ் அமையப்பெற்ற இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையானது சமயச் சார்பற்ற தொன்றுக மாறியது.

அக்பர் கொண்டாடிய இறைமாட்சியானது அவர் மக்களிடம் சொந்த முறையில் கொண்ட நெருங்கிய தொடர்பால் ஏற்பட்ட செல்வாக்கின் அடிப்படையில் அமைந்தது

அடுத்து நாம் அக்பரது ஆட்சி முறையின் சிறப்பியல்புகளை நோக்குதல் அவசியம். அங்ஙனம் நோக்கும்போது, மிகத் திறமை வாய்ந்ததும், அதிகாரச் செறிவு நிரம்பியதுமான ஓர் ஆட்சிமுறை அவருக்குக்கீழ் நடைபெற்று வந்ததை நாம் அறிகிறோம். அதோடு மக்களோடு அரசர் நெருங்கிய நேரடித் தொடர்புகொண் டிருந்தார் என்பது அவ்வாட்சி முறைக்குத் தனிப்பட்ட ஒரு பெருமையை உண்டாக்குகிறது. இறைமாட்சிக்கும், அது வெளிப்படுதற்கொரு கருவியாயிருக்கும் ஆட்சித்துறை நிறுவனத்துக்குமுள்ள நெருங்கிய தொடர்பை அக்பர் நன்கு கண்டுகொண்டார். எனவே, இறைமாட்சியின் அல்லது அரச பதவியின் தன்மையை மாற்றிவிடக் கூடுமானால், அரசாங்கத்தின் தன்மையானது தானுகவே மாறிவிடும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஓர் அரசாங்கமானது மக்களால் மனமார விரும்பப்பட வேண்டுமானல், அது வெறும் நல்ல கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துவிட்டால்மட்டும் போதாது. அதிலே மனிதத் தொடர்பின் ஒரு வாடை வீசவேண்டும். அத் தொடர்பால்தான் அரசாங்கத்துக்கும் குடிமக்களுக்குமிடையே ஒரு நேசம் வளர முடியும். மனித உறவின்மூலம் நேசத்தை மக்களிடையே வளர்க்க வேண்டுமானல், நாட்டை ஆளும் மன்னர் தமது ஆளுமைத் திறத்தின் மூலமாகத்தான் அதைப் பெறமுடியும். மக்களுடைய உணர்வுகளுக்கு மகிழ்வூட்டுகிற முறையில் அரசபத்வியானது அமைக்கப்படலாம். அரசபதவிக்குரிய இத் தேவையானது அக்பரிடம் சிறப்பாக நிறைவெய்தியிருந்தது. மக்களிடம் அவர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும் ஆழ்ந்த அநுதாபமும் அவரது பிற்கால அரச

வாழ்வுக்குப் பெரிதும் துணையாயிருந்தன. அரசுபற்றியும், அரசாங்கம்பற்றியும் எழக்கூடிய எல்லாச் சிக்கல்களையும் விடுவித்தற்கான புதிய முறைகளை அவர் தம் அநுபவங்களின்மூலம் கற்றுக்கொண்டார். மக்களின் முழு அன்பையும் பெற்று அவர்களது உள்ளக்கோயிலிலே நிலையான ஓர் இடத்தைப் பெறும் வகையில் அவர் நடந்துகொண்டார். அரசபதவியை மிக மிகச் செல்வாக்குமிக்க நிறுவனமாக மாற்றியமைத்த பெருமை அவருடையதேயாம். அவரிடத்திலே மக்களுக்கு ஒருவகைப் பாசமும் பிணைப்பும் ஏற்படுமாறு அவர் செய்துவிட்டதால், அரச பதவிக்கே விலைமதிக்கவொண்ணாத மதிப்பையும், பெருமையையும் இது தந்துவிட்டது. ஒரு சில நயநாகரிகப் பழக்க வழக்கங்களைப் புகுத்தியதன்மூலம் அவர் மக்கள் அனைவரின் உள்ளங்களையும் கவர்ந்துகொண்டார். ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அவரது ஆசியைப் பெற அரண்மனையின் முன் குழுமி நிற்கும் மக்கட் கூட்டத்தின்முன் அவர் தவறாமல் தோன்றிக் காட்சியளித்து ஆசிவழங்கிய வழக்கமானது அவர்பால் ஒரு தெய்விகப் புனிதத் தன்மையை ஏற்படுத்திவிட்டது. 'ரக்ஷா பந்தனம்' (Raksha Bandhan), தீபாவளி, இளவேனிற்காலப் பண்டிகை முதலியவற்றைக் கொண்டாடியதன் மூலமும் கற்றறிந்த புலவர்களையும் சாதுக்களையும் கொண்ட விவாத அரங்குகளையும் பேச்சு அரங்குகளையும் அமைத்தல், நாள்தோறும் எல்லாச் சடங்குகளுடன் கூடிய அரண்மனைத் தர்பாரை நடத்தல், தூய தலங்களுக்கு அடிக்கடி யாத்திரை சென்று வருதல் போன்ற இன்னோரன்ன பல நற்செயல்கள் அவரது அன்றாட வாழ்வை அணி செய்து வந்தமையால் மக்கள் அவரைத் தெய்வம்போல் போற்றி வழிபடலாயினர். ஒரு வகையான அரச வழிபாடு நாட்டில் தோன்றத் தொடங்கியது. அஃது ஏறக்குறைய பண்டைய இந்துக்களின் அரசியல் முறையில் காணப்பட்ட ஒரு வழக்கத்தைப்போலவே இருந்தது. அரசாங்கத்தின் போக்கையும், மக்களின் மனப்பாங்கையும் மாற்றியமைக்க அப் பழக்கம் ஒரு கருவியாய் அமைந்தது. முஸ்லிம்களும் முஸ்லிம்களல்லாதாரும் அரசாங்க அலுவல்களில் பெரிதும் பங்குகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டதால், அரசாங்கம் உண்மையிலேயே பரந்ததோர் அடிப்படையில் அமைந்ததாயும், மக்களின் செல்வாக்கையும் ஆதரவையும் பெற்றதாயும் மாறியது. குறிப்பிட்ட ஒரு சமுதாயம் அல்லது வகுப்புக்குமட்டுமேயன்றிக் குடிமக்கள் அனைவரின் நலன்களுக்குமாகப் பாடுபட வேண்டுமென்ற அருமையான கொள்கைகளை உட்கொண்டதாய் அரசு விளங்கத் தொடங்கியது.

அக்பரின் அரசாங்கம் சமநிலையும் ஒருமைப் பாடும் ஒருங்கே கொண்டதாகும்

அக்பரது அரசாங்கம் பெரிதும் சிக்கல் வாய்ந்தது. வேறு பட்ட பல கொள்கைகள் அதில் விழிப்போடு ஒன்றாகப் பிணைக்கப் பட்டிருந்தன. அரசியல் நிறுவனங்கள் பலவும் ஒன்றுக்கொன்று மீறாமல் தடைசெய்துகொண்டு ஒரு சமநிலையில் நிற்றல் என்ற கொள்கையின் வழி (Principle of Checks and Balances) அரசாங் கம் இயங்கி வந்தது. தனது சொந்தச் சக்தியைக் கொண்டே அரசாங்கமெனும் பொறியானது ஓட்டப்பட்டது. அதற்கு வேண்டிய சக்தியை அது தானே உற்பத்தி செய்துகொண்டது. அரசின் பற்பல துறைகளினிடையே ஒரு பெரிய உட்பிணைப்புக் காணப்பட்டது. ஒரு துறை மற்றொன்றால் தடைசெய்யப்பட்டு, எந்தத் துறையும் தன் வரம்பு மீறமுடியாத நிலையில் இருந்தது. அதே சமயத்தில் அவை யாவும் மன்னர்பால் தொடுக்கப்பட்டிருந் தன. அவற்றிற்கு வேண்டுமான ஆற்றலும், அடையவேண்டிய குறிக்கோளும், மன்னனிடமிருந்தே பெறப்பட்டன. ஒவ்வொரு துறையும் ஆற்ற வேண்டிய பணிகள், மிகவும் செப்பமற்ற முறை யில் பிரிக்கப்பட்டிருந்தனவே எனினும், அவை யாவும் ஒரு மனிதரிடம் ஒன்றாகக் குவிக்கப் பெற்றிருந்தன. அதாவது, அரசர் என்ற ஒரு மனிதரின்பால் இவ் வெல்லா அதிகாரங்களும் செறிந்திருந்தன. இந்த அரசாங்க அமைப்பு முழுவதுமே, ஓர் ஒற்றுமைச் சக்தியால் உந்தப்பட்டுத் தானாகவே இயங்கிக்கொண்டு வந்தது. அதிலே ஒரு சமநிலையை ஏற்படுத்தியதுதான் அக்பரது மேதையில் உதித்த ஆக்கத்திறனின் சிறந்த சாதனையாகும். அக்பரது ஆட்சியுங்கூட ஒரு தனிப்பட்ட மனிதரது ஆட்சியே எனினும், அவருக்கே உரிய அவரது ஆக்கத் திறனின் விளைவாக அது தனது இறுகிய தன்மையை (Rigidity) இழந்து, மிக இளகிய தன்மையைப் (Plastic form) பெற்றது. உயிரோட்டத் துடன் விளங்கும் ஓர் அமைப்புக்குரிய பண்புகளெல்லாம் அதற்கு வந்து சேர்ந்தன. அக்பரின் அரசு நிறுவன அமைப்புமுறையானது அவருடைய அரசாங்க முறைக்கு ஒரு புதிய வலிமையையும் உயிர் ஊட்டத்தையும் உண்டாக்கியது. அதனால் அஃது ஓர் உயிருள்ள ஜீவனே (Organism) போன்று செயல்படுதற்கு முடிந்தது. ஆற்றல் மிக்க ஒரு மனிதரின் ஆளுமைத் துணையைக்கூட ஓரளவு உதறித் தள்ளிவிட்டு அது பணியாற்ற முடிந்தது. இத்தகைய காரணத்தாற்றான், அவரது அரசாங்க முறையானது பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் உயிருடன் வாழ முடிந்தது. அடுத்தடுத்து வந்த நூற்றாண்டுகளில் ஏற்பட்ட எத்தனையோ இக்கட்டுகளையும் கடந்து, இறுதியாக அஃது இந்தியாவின்

பிரிட்டிஷ் ஆட்சிமுறையின் அடிப்படையாக அமைந்ததற்கும் இதுவே காரணமெனலாம்.

அவரது அரசாங்க முறையில், நிறுவனங்களிடையே ஒருவிதப் பிணைப்பு காணப்பட்டது. அதில் மாபெரும் ஆற்றல் மறைந்து கிடந்தது. இந்தப் பிணைப்பும், ஆற்றலுமே, பொதுவாக மொகலாய அரசாங்கத்தின் சிறப்பியல்புகளாகும். டில்லி சுல்தான்களின் அரசாங்க முறை அக்பருடையதைப் போல் அவ்வளவு செப்பமுடையதன்று. அப்போதைய சூழ் நிலைக்குத் தேவையான அளவில் ஏதோ அரைகுறையாக அமைக்கப்பட்டதோர் அரசாங்கமாகவே அது திகழ்ந்தது. அதுவும் தொடர்ச்சியாக ஒரே மாதிரி செயல்படவில்லை. நடுநடுவே விட்டு விட்டுத்தான் அது பணியாற்றி வந்தது. போரில் வெற்றி பெற்ற முஸ்லிம் அரசர்களின் நலனுக்காகவே பெரும்பாலும் அது பாடுபட்டது. சிறப்பாக, நாட்டின் மைய அதிகாரத்தின் நிலையை உறுதியாக்குவதற்காகவே அது பயன்பட்டது. எனவே, நாட்டுமக்கள் அனைவரது ஆதரவும் அதற்குக் கிடைக்கவில்லை. அதன் அடிப்படையும் பலமாக அமையவில்லை. அத்தகைய அடிப்படையை உண்டாக்க ஷெர்ஷா பாடுபட்டாரெனினும், அவர் பழைய அரசாங்கத்தின் புற அமைப்பையும், உட்பொருளையும் சிறிதும் மாற்றவில்லை. அவரது அரசாங்கத்தின் நோக்கமும் செயலும், டில்லி சுல்தானிய மரபொழுக்கங்களுக்கு அதிகமாக மாறுபட்டிருக்கவில்லை. அரசாங்கத்தை அமைப்பதில் அவர் திறமைக்கு முதலிடம் கொடுத்தார். அடுத்து, அவர் பொதுமக்களின் நலனில் அக்கறை காட்டினார். ஆனால் பொது மக்களின் ஒத்துழைப்பை அவர் பெற முயலவில்லை. ஆளப்படுவர்களின், அதாவது, முஸ்லிம்களல்லாதவர்களின் கூட்டுறவையும் ஆதரவையும் அவர் நாடவில்லை. அரசின் கொள்கைகளை வகுப்பதில் அவர்களுக்கு எவ்விதமான பங்கும் தரப்படவில்லை. அவர்களின் விருப்பு வெறுப்புகளைப்பற்றி அவர் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. அரசியல் காரியங்களில் அவர்களைக் கலந்தாலோசிக்க வேண்டுமென அவர் நினைக்கவில்லை. இந்துக்களின் நலனை வளர்க்கக் கூடியதென்பதற்காக அவர் ஒருமுறை வகுத்த கொள்கையில் எவ்வித மாற்றத்தையும் எப்போதும் செய்ததில்லை. அரசாங்கம் மக்களிடமிருந்து இங்ஙனம் ஒதுங்கியே நின்று செயலாற்றியது. அதுகாரணமாக மக்களுக்கு, அஃது அறநெறிப்படி ஒப்புக்கொள்ளத் தக்க அரசாங்கமாகத் தோன்றவில்லை. எவ்வளவோ திறமை மிக்கதாயும், பொதுவாக எதிர்பார்க்கிற அளவுக்கும் அதிகமாகவே விழிப்பு மிக்கதாயும் அவர்களது அரசாங்கம் விளங்கியபோதிலும் மக்களின் ஆதரவு

அதற்குக் கிடைக்கவில்லை. அப்படிப் போனது ஒரு பெருங் குறையேயாகும். ஷெர்ஷாவினல் பெரிதும் வற்புறுத்தப்பட்ட திறமையாலும் விழிப்பாலும் அக் குறை களையப்படுவது கூடாமற் போயிற்று. அக் குறையின் விளைவாக அரசாங்கத்தின் அடிப் படையே தளர்ந்தது. அக்பரது அரசாங்கத்தில் காணப்பட்ட வலிமையும் பிணைப்பும் அதில் காணக்கூடவில்லை. எல்லா வகுப்பு மக்களையும் தாராளமாக அரசாங்கத்தில் அணைத்துக்கொண்டு சென்றதாலும், எல்லா வகுப்பினரின் நன்மையையும் குறிக் கோளாய்க் கொண்டு கொள்கைகளை வகுத்துக்கொண்டு சென்றதாலுமே, அக்பரது காலத்து அரசாங்கத்தின் உட் பொருளே முற்றும் மாறியமைய முடிந்தது. அதனல் ஆட்சி முறை அமைப்பில் புதியதொரு விறுவிறுப்பு ஏற்பட்டது. திடங்கொண்ட ஓர் உயிருடைய ஜீவனே போன்று அது செயற் படத்தொடங்கியது.

அக்பரின் அரசாங்கம் 'இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்டதா' என்பதும், பெரும் பான்மையும் அந்நியர்களாலேயே நடத்தப்பட்ட தொன்று என்பதும்

மொகலாய அரசாங்க முறையை விவரிக்கப் புகும் ஒரு சிலர், "உண்மையிலேயே அது பெரும்பான்மையான அளவில் அந்நிய ராலேயே நடத்தப்பட்ட ஒன்று" எனக் குறிப்பிடுகின்றனர். ஏனெனில், அதிகாரிகளுள் ஏறக்குறைய எழுபது சதவிகிதத்தினர், ஹுமாயூன் இந்தியாவுக்கு வந்தபோது அவருடன் கூட வந்தவர் களாயும், அல்லது அக்பர் ஆட்சி எய்தியபோது வெளிநாட்டி லிருந்து வந்தவர்களாகவுமே இருந்தனர். எஞ்சிய முப்பது சத விகிதத்தினரில் இந்துக்கள், இந்திய முஸ்லிம்கள் ஆகிய இரு சாராருமே கலந்து காணப்பட்டனர். கொள்கையளவில் பொது ஊழியமானது எல்லாருக்கும் பொதுவானதாகவும், இந்துக் களுக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய தாயும் இருந்தபோதிலும், நடைமுறையில் உண்மையாகவே இந்துக்கள் வகித்துவந்த பதவிகள் எண்ணிக்கையில் மிகமிகக் கொஞ்சமேயாகும்.[13] இஃது உண்மையே எனினும், அக்பரது அரசாங்கத்தின் மிகச் சிறந்த பண்பு இதனல் மாறிவிடாது. பேரரசில் வாழும் எல்லா மக்களுக்கும் உண்மையான நன்மை யைப் பயக்கும் வகையில் கொள்கையை வகுத்துதவவும் அங்ஙனம் வகுப்பதில் இந்துக்களைப் பெரிதும் கலந்துகொண்டதுமே அக்பரின்

[13]Edward and Garrett, Mughal Rule in India, p. 163.

சிறப்பாகும். அச் சிறப்பானது மேற்சொன்னவற்ருல் மங்கி மறைந்துவிடாது. உண்மையிலேயே அவரது கொள்கையின் உட்பொருளை உருவாக்கப் பெருமளவுக்கு உதவி செய்தவர்கள் இந்துக்களேயாவர். இந்துக்களோடு பழகி வந்ததாலேயே அக்பருக்கு அத்தகைய கொள்கை உதயமாயிற்று என்று கூறலாம். எனவே, அரசாங்கப் பொது ஊழியத்தில் இந்துக்களுக்கு முஸ்லிம்கள் எத்தனை சதவிகிதம் அதிகம் என்பதை நாம் ஒரு பொருட்டாய் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. அரசாங்கப் பணியில் அமர்த்தப்பட்டவர்களில் எழுபது சதவிகிதத்தினர் முஸ்லிம்களாக இருப்பினும் அரசாங்கத்தின் பொதுக் கொள்கையானது இந்துக்களுக்கு ஏற்புடையதாகவும் அவர்களுக்கு உண்மையான நன்மையை உண்டாக்குவதாகவும் இருக்குமேயானுல் இந்துக்கள் அரசாங்கத்துக்குத் தங்கள் முழு மனத்தோடு கூடிய ஒத்துழைப்பையும் கீழ்ப்படிதலையும் நல்குவர் என்பதில் ஐயமில்லை. ஓர் அரசாங்கமானது உண்மையிலேயே மக்களுக்கு உகந்த முறையில் இருக்கவேண்டுமானுல் அதிகாரமானது யாரால் செலுத்தப்படுகிறது என்பதைவிட எங்ஙனம் செலுத்தப்படுகிறது என்பதிலேயே அதிகமான கவனம் செலுத்தப்படவேண்டுமென்பது பொது அறிவு படைத்த எவருக்கும் புலனுவதொன்றும். அக்பரது அரசாங்கத்துக்குப் புதியதொரு தனிச் சிறப்பை அளித்தது அத்தகைய கோட்பாடேயாகும். இந்துக்கள் எவ்வளவு தூரம் அரசாங்கப் பதவியில் அமர்த்தப்பட்டார்கள் என்பதைக் கொண்டு அவரது அரசாங்கத்தின் சிறப்பியல்பு அமையவில்லை. இந்துக்களைப் பதவிகளில் நியமிக்கவேண்டுமென்பது அக் கொள்கையின் ஒரு பகுதியேயாகும். அதன் சாரத்தைப் பிழிந்தெடுத்து எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் அதை அமைத்த பெருமை அக்பருக்குரியது. தம் குடும்பத்தாரிடமிருந்தும், டில்லி அரியணையை அலங்கரித்த தம் முன்னேர்களிடமிருந்தும் அவர் பெற்ற நிறுவனங்களையும் கருத்துக்களையும் மிக மிகத் திறமையான முறையில் ஒன்று சேர்த்துத் தனிப்பட்ட முழுமையான ஜீவனுள்ள ஒரு பொருளாக மாற்றியமைத்தவர் அக்பரேயாவர். அவருக்கு முன்னும் பின்னும் இந்தியாவை ஆண்ட முஸ்லிம் அரசர்களில் எவரும் அத்தகைய திறமையை வெளிப்படுத்தியதில்லையென்று திண்ணமாகக் கூறலாம். ஆனுல் அவரது அரசாங்கத்தில் காணப்பட்ட பிணைப்பும் அதில் மறைந்து கிடந்த பெருவலிமையும் அதில் அடங்கியிருந்த ஒருசில மேன்மை மிக்க அரசாங்கக் கொள்கைகளின் விளைவேயாகும். ''நாட்டிலுள்ள மிக உயர்ந்த சிவில், இராணுவப் பதவிகளுக்கு முஸ்லிம்களேயன்றி இந்துக்களும் தகுதி பெற்றவர்களாகக் கருதப்பட வேண்டுமென்பதும் நாட்டில்

நிலவும் பல்வகைச் சமயத்தவரும் அவரவர்க்கு விருப்பமான வகைகளில் தெய்வத்தை வழிபடுதற்கு முழு உரிமை இருக்க வேண்டுமென்பதுமே''[14] அத்தகைய தலைசிறந்த கொள்கைகளாகும்.

வென்றவர்களும் வெல்லப்பட்டவர்களும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணத்துடன் ஒத்துழைப்பதை வளர்த்த இத்தகைய அரசாங்கக் கொள்கைகளும், இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கமும் ஒன்றினோடு ஒன்று ஒத்துப் போவதென்பது இயலாத காரியம். டில்லி சுல்தானிய அரசாங்கத்துக்கே அக் கூற்றுப் பொருந்துவதாகும். ஏனெனில், அஃது என்றும் இராணுவ ஆதிக்கத்தைமட்டுமே வைத்துக்கொண்டும், வன்முறைகளைக் கடைபிடித்தும் அரசின் நலம் ஒன்றையே கருத்தில் கொண்டும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தது. ஆனால் அத்தகைய இராணுவ ஆதிக்கக் கொள்கையானது கைவிடப்பட்டு, அக்பரது காலத்தில் சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கை மேற்கொள்ளப்பட்டதால், அக்பரின் அரசாங்கத்தை இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் என்று கூறுவது முறையன்று. பொது நன்மையை முன்னிட்டு அக்பர் செய்த பல காரியங்களைப் பார்க்கும்போது அக்பரின் அரசாங்கம் வன்முறையின்பாற்பட்டதன்று என்பதைத் திண்ணமாக உணரலாம். உண்மையில் மக்களின் புறவாழ்வு சிறக்கவும், அகவாழ்வு செழிக்கவும், அறிவும் பண்பாடும் வளரவும் ஓயாமல் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், நீதி, வருமானம் போன்ற சிவில் துறைகள் மிகமிக விழிப்போடும் கவனத்தோடும் அமைக்கப்பட்ட முறையும் அக்பர் தம் குடிமக்களை ஒரு தந்தைபோல் பேண விரும்பினார் என்பதையே நமக்குத் தெள்ளென எடுத்துக் காட்டுகின்றன. எனவே, இராணுவ பலத்தை அக்பரது அரசாங்கம் அடிப்படையாகக் கொண்டிருத்தல் என்பது இயலாத காரியம். ''சாதாரண சிவில் ஆட்சி முறையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளில் முக்கியமானவர் பலரும் இராணுவத் தளபதிகளாக இருந்த''[15] காரணத்தால் அவரது அரசாங்கத்தை இராணுவப் பண்பைக் கொண்ட அரசாங்கம் என்று கூறிவிடுதற்கில்லை. ஏனெனில், அரசாங்க அதிகாரிகளுக்கு இராணுவப் பதவிகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஊதியம் எளிதாக வழங்குதற்குரிய நல்லதொரு முறையாகவும், ஆட்சித்துறைபற்றிய பல சிக்கல்களை

[14] Smith, Akbar the Great Moghul, p. 356.

[15] Ibid., p. 357.

அகற்றுவதற்கு அஃது ஓர் உபாயமெனவும் அக்பரது காலத்தில் கருதப்பட்டது. எத்தகைய அரசாங்கப் பதவிகளை ஒருவர் வகித்த போதிலும் அதாவது, சமையற்கட்டில் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது முறையான படையில் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்களில் ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் இராணுவப் பதவி வகித்து வந்ததாகவே கருதப்பட்டார்கள். ஆனால் அது போலிப் பதவிமுறை என்பது யாவருக்கும் தெரியும். எனினும், அதன்மூலமாக அவர் சில நன்மைகளைப் பெற்றார். தம் அதிகாரிகளிடமிருந்து குறிப்பிட்ட துணைப் படைவீரர்களை அவர் பெறுவதற்கு அம்முறை துணை செய்தது. இத்தனை வீரர்களை வைத்துக் காப்பாற்ற வேண்டுமென ஒவ்வோர் அதிகாரியும் வற்புறுத்தப்பட்டார். வீரர்களை வைத்துப் பராமரிக்க அரசரே சம்பளம் வழங்கினார். சமயத்தில் அதிகாரிகள் அரசருக்குத் தந்து உதவ வேண்டிய படைவீரர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பப் பதவியும் சம்பளமும் உயர்ந்தன. எனவே, இம் முறையின்மூலம் அரசர் தம் அதிகாரிகளிடமிருந்து ஒரு சில தனிப்பட்ட ஊழியங்களை அன்றாடம் பெற முடிந்ததோடு அவர்களின்மூலம் சமயத்தில் துணைப்படை உதவியையும் நிச்சயமாகப் பெற வழி ஏற்பட்டது. அக்காலத்தே முறையான தரைப் படைகள் அமைப்பது வழக்கத்தில் இல்லை. ஏனெனில், எல்லா மக்களுமே போர்க் கருவிகளை வைத்திருந்தார்கள். அவசியம் நேர்ந்தபோது அரசர் அவர்களை இராணுவ ஊழியத்திற்கென அழைத்துக்கொள்வார். அக்பர் தம்முடைய எல்லா அதிகாரிகளுக்கும் இராணுவப் பதவிகளை வழங்கியது ஏனென்றால், பதவிகளின் படித்தரங்களை நிர்ணயிப்பதற்கும் அவரவர்க்கேற்ற ஊதியங்களை வழங்குவதற்கும், அவர்களால் வைத்துப் பராமரிக்கப்பட்ட துணைப் படையைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் அஃது எளியதோர் முறையாக இருந்ததேயாகும். ஆனால், பதவி பெற்ற ஒவ்வொருவரும் அப் பதவியால் குறிக்கப்பெற்ற துருப்புகளின் எண்ணிக்கையைக் கண்டிப்பாக வைத்திருந்தார்கள் என்பது பொருளன்று. பல சமயங்களில் அவர்கள் எவ்விதமான படையையும் வைத்திராதவராய்க்கூட இருந்தனர். மற்றப்படி அரசர் வேண்டும்போது தங்களுடைய துருப்புகளோடு அவர்களும் சேர்ந்து போராடும்படி அழைக்கப்படலாம் என்ற பொருளைமட்டுமே அது குறித்தது. அதைக்கொண்டு அக்பரது அரசாங்கம் இராணுவப் பண்பைக் கொண்டது என்று கூறிவிட முடியாது. அரசர் வேண்டும்போது அவருடைய அதிகாரிகள் இராணுவ ஊழியம் செய்யவேண்டுமென்ற கடமையானது, மக்கள்மீது இராணுவ ஆட்சியைப் பலவந்தமாகத் திணிப்பது என்பதிலிருந்து முற்றும் வேறுபட்டது. அரசாங்கமானது ஒரு சிறிதும் கலப்படமற்ற வன்

முறையைக் கொண்டு நடத்தப்படும்பொழுதே, அஃது இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறை என்று கருதப்படுதல் நியாயமானதாகும். அதாவது, ஓர் அரசாங்கத்தின் கொள்கையும் நடவடிக்கைகளும் ஓர் இராணுவ வல்லரசின் கொள்கைகளையும் செயல்களையும் ஒத்து விளங்கும்போதுமட்டுமே அதை இராணுவப் பண்பு கொண்ட ஆட்சிமுறை என்று கூறலாம். எனவே, மன்சப்தாரி முறையின்மூலம் அக்பரது அரசாங்கமோ அல்லது அவருக்குப் பிற்பட்ட ஒரு மொகலாய அரசாங்கமோ இராணுவத் தன்மையை எய்தியது என்று கருதுதல் கூடாது. பிற்கால அரசின் பல்வேறு துறைகளையும் நாம் பரிசீலனை செய்து பார்ப்போமானால், அக்பர் காலத்தும் பிற்கால மொகலாயர் காலத்தும் அவை எவ்வளவு தூரம் இராணுவத் தன்மையற்றன வாக இருந்தன என்பதை நாம் நன்கு அறியலாம். அக்பரின் அரசாங்கத்தை 'மக்களைத் தந்தைபோல் பேணும் அரசாங்கம்' எனவும் அல்லது 'மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஒரு தன்னரசு' எனவும் கருதுதலே பெரிதும் பொருத்தம் உடைத்தாகும்.

அக்பரது அரசாங்கம், மக்களைத் தந்தைபோல் பேணிய அரசாங்கம் அல்லது மக்கள்நலம் பேணிய கருணை கொண்ட தன்னரசு (Paternal or benevolent autocracy)

அக்பரின் தன்னரசில், அரசர் குடிமக்களைத் தம் குழந்தைகளைப்போன்று கருதுகிற ஓர் உணர்வு அல்லது மனோபாவம் காணப்பட்டது. ஆகையினால், அவர் இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைவரின் நலனையும் பேணுவதையே தமது குறிக்கோளாகக் கொண்டார். எப்பாடு பட்டாகிலும், தம் சொந்தச் சுகத்தைத் தியாகம் செய்தாகிலும் அக் குறிக்கோளை அடைந்துவிட வேண்டும் என அவர் விரும்பினார். இத்தகைய ஓர் உணர்வினால் உந்தப்பட்டவராய், அவர் டில்லி சுல்தான்களின் இஸ்லாமிய அரசில் காணப்பட்ட கோணல் மாணல்களைத் திருத்துவதிலும், அத்துமீறிய வீண் அதிகாரங்களை ஒழிப்பதிலும் முனைந்தார்; அதே உணர்வால் உந்தப்பட்டவராய், அவர் மக்களுடைய சமுதாய வாழ்வின் கோலங்களை (Contours) மாற்றி அமைக்கலானார். ஒரு தந்தை தம் மக்களிடம் எப்படி நடந்துகொள்வாரோ, அத்தகைய மனோபாவத்துடனேயே அவர் மக்களின் சமுதாய வாழ்வில் குறுக்கிட்டார். ''என் குடிமக்களும் என் சொந்த மக்களும் என்னைப் பொறுத்தவரையில் ஒரே நிலையில் இருப்பவர்களே'' என்று அவர் கூறுவது வழக்கம். அக் கூற்று

வெறும் வாய்ப்பேச்சு மட்டுமன்று. அஃது அவரது ஆழ்ந்த நம்பிக்கையினின்றும் புறப்பட்டதாகும். இந்தத் தந்தை மனோபாவத்தோடு, இன்னும் ஒரு நல்ல கருத்தும் சேர்ந்து அதை மேலும் வலுப்படுத்தியது. அதாவது, ''மன்னரே நன்மை அனைத்துக்கும் வித்தானவர்'' என்றும், ''அவரது நடத்தைக் கேற்பவே எந்த நடவடிக்கையின் திறனும் அமையும்''[16] எனவும் அவர் நம்பினார்.

இத்தகைய நம்பிக்கையானது இந்துக்களின் அரசியல் குறிக்கோளை ஒத்திருந்தது. மன்னரே காலத்தை ஆக்குபவர்—''ராஜா காலஸ்ய காரணம்'' என்பது இந்துக்களின் கருத்தாகும். நன்மைகள் யாவற்றிற்கும் அரசரே காரணமானவர் அல்லது வித்தானவர் என்பது உண்மை என நம்பப்பட்டதாயின் அக்பர் சோம்பேறித்தனமாக உட்கார்ந்துகொண்டு, நடப்பது எப்படியோ நடக்கட்டும் என்று இருந்திருக்க முடியாது. அவரது உயர்வுமிக்க பதவிக்கேற்ற பொறுப்புகளை மேற்கொள்ள முன்வர வேண்டியது அவரது கடமை. மக்கள் அனைவரின் நன்மையையும் வளர்க்கும் வகையில் அவர் அப் பொறுப்புகளை ஏற்கவேண்டுவதே முறை. இந்தக் குறிக்கோளின்படிப் பார்க்கும்போது மக்களின் வாழ்வில் மன்னர் தலையிடக்கூடாதது ஒன்றுமே இல்லை எனலாம். அதன்படிப் பல்வேறு வகையான ஆட்சித் துறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுவது அரசரின் கடமையாகிறது. எனவேதான் அவர் மக்கள் எதை உண்ணவேண்டும், எம்மாதிரிக் கேளிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பனவற்றையெல்லாம் தீர்மானிப்பதில் முனைந்தார். சமுதாய அறநெறியையும், சமய நம்பிக்கைகளையும் வகுப்பதில்கூட அவர் தலையிடலானார். பொருள்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தல், பொருள் உற்பத்தியாளர்கள், தொழில் நிறுவனங்கள், கச்சாப்பொருள் உற்பத்தி, தொழிலாளிகளின் கூலிகள், கல்வித்துறை, அறப்பணி, உலக நடை இவற்றை அவசியமான அளவு கட்டுப்படுத்தல் ஆகிய பணிகளையும் அவர் மேற்கொண்டார். இவைபற்றிய விவரமான கட்டளைகளை அவர் அதிகாரிகளுக்கு வழங்கினார். அவற்றை அடிபிசகாமல் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அவர், அவர்களை வற்புறுத்தினார். இவற்றோடுகூடப் பதௌனி என்பார் கூறியுள்ளபடி அவர், ''அரசியல் துறையிலும், சமயத்துறையிலும் உள்ள அதிகாரங்களனைத்தையும், தம்மிடமே ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டுமெனவும்''[17] விரும்பினார். சமயத்

[16] Ain-i-Akbari (translated by Jawett), Vol. III, p. 398.
[17] Badaoni, Vol. II, p. 268.

துறையில் அவர் கொண்டாடிய தலைமையைச் செயலாக்க வேண்டி, அவர் மக்களின் ஆன்மிகத் தலைவன் என்று தம்மைத் தாமே நியமித்துக்கொண்டார். அவருடைய இக் குறிக்கோளை நிறைவேற்ற வெளியிட்ட ஆணைகளைப்பற்றிப் பின்னர் ஆராய்வோம். நன்மைகளின் வித்தாக அக்பர் தம்மைக் கருதிக்கொண்ட பொழுது, மேற்சொன்ன கருத்தின் அடிப்படையிலேயே அவர் அவ்வண்ணம் கருதினார். மக்களின் தனிப்பட்ட வாழ்வில் உரிமையுடன் அவர் தலையிட்டதைப் பார்க்கும்போது மக்கள் அவர்பால் எத்தகைய அன்பும் விசுவாசமும் வைத்திருந்தார்கள் என்பது நன்கு வெளியாகின்றது. மக்களுடைய வாழ்க்கையில் மிகமிக அற்பமான நிகழ்ச்சிகளையுங்கூட அவர் மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அவர்களுடைய உடலுக்கும் உள்ளத்துக்கும் தேவையான யாவற்றையும் தமக்கே உரிய சொந்தப் பாணியில் அவர் வழங்கினார். திருமணத்திலிருந்து அறநெறி வரை உள்ள, பல காரியங்கள் எப்படி எப்படி நடைபெற வேண்டுமென்பதை அவர் தாமே கூறியருளினார்.

கொத்தவால்களும் வரிவசூலிப்பவர்களும் தங்கள் பணிகளை எவ்வாறு மேற்கொண்டு ஒழுகவேண்டுமென்றுகூட அவர் வற்புறுத்தினார். இவற்றையெல்லாம் பார்க்கும்போதுதான், மக்களுடைய மனத்தில் அவர் எத்தகைய சிறந்த இடத்தைப் பெற்றிருந்தார் என்பதும் அவர்தம் அன்பையும் ஆதரவையும் மிக எளிதிற் பெறுகின்ற பேராற்றல் அவர்பால் பொதிந்து கிடந்தது என்பதும் நமக்குத் தெற்றெனத் தெரிகின்றன. உண்மையிலேயே அக்பர் இத்தகைய ஆற்றலைப் பெற்றிருந்தது போன்று அவருக்கு முன்பும் பின்பும் அரசாண்ட முஸ்லிம் அரசர்கள் எவருமே பெற்றிருக்க முடியாது என்று துணிந்து கூறலாம். அரசருக்கு உரிய கடமைகள் என அக்பர் தமக்குத் தாமே ஏற்படுத்திக்கொண்ட பணிகளை அவருக்குப் பின்வந்த மொகலாய அரசர்களும் கடைப்பிடித்தார்கள். இத்தகைய பணிகள் அரசு என்ற நிறுவனத்தின் தவிர்க்கமுடியாத கடமைகளாக நாளடைவில் மாறிவிட்டன. அஃது எங்ஙனம் நிகழ்ந்தது என்பதே பலருக்குத் தெரியாவண்ணம் அப் பணிகள் அரசோடு ஒன்றித்துவிட்டன. எனவே, இந்தோ-இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையின் தனிப்பட்ட சிறப்பியல்பாக அஃது மாறி அமைந்தது. இவை அனைத்தையும் சுருக்கிக் கூறுமிடத்து அக்பரால் ஏற்படுத்தப்பட்ட மொகலாய அரசாங்கமானது சமயச் சார்பற்ற தன்மையைப் பெற்றிருந்தது என்றும், புற அமைப்பைப் பொறுத்தவரை அஃது ஒருமுகப்பட்ட அரசாங்கமாகவும் (Unitary), அதே சமயத்தில் பலதரப்பட்ட அதிகாரி

களைக் கொண்ட அரசாங்க நிறுவனமாயும் (Heirarchy) விளங்கிற்றென்றும், தந்தை மக்களைப் பேணுவதுபோன்ற உணர்வுடன், குடிமக்களைக் காத்துவந்த கருணையோடு கூடிய தன்னரசாக அது விளங்கிற்றென்றும் தயக்கமின்றிக் கூறலாம். இவை யாவும் ஒரே ஒரு மனிதரின் சாதனையாகும். அதுவே பிற்கால மொகலாய மன்னர்களின் ஆட்சி முறைக்கு ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்தது. அதன்மூலம் இந்தோ-இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையின் போக்கும் மாறியது.

முன்னுரையாய் அமைந்த இக் குறிப்பை இதோடு நிறுத்திக் கொண்டு அவரது அரசாங்கத்தின் ஆட்சித்துறை நடவடிக்கை பற்றிய விவரங்களை இனி விரிவாக ஆராய்வோமாக :

பேரரசின் அரசாங்க அமைப்பு

(i) ஆட்சித்துறை நிலப்பகுதிகள் :

பொதுவாகக் கூறப்போனால் பேரரசின் அரசாங்கமானது இரண்டு தனிப்பட்ட பகுதிகளை உட்கொண்டது எனக் கூறலாம். பேரரசு அல்லது மத்திய அரசாங்கம் என்றும் மாநில அல்லது பேரரசுக்குட்பட்ட அரசாங்கம் என்றும் இருவகையான அரசாங்க அமைப்புகள் அதில் இருந்தன. அவை இரண்டும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருந்தன. அதே சமயம் அவை ஒருமுகமாகத் தொழில்படும் வகையில் நன்கு பிணைக்கப்பட்டிருந்தன. மத்திய அரசாங்கமானது பற்பல துறைகளை உட்கொண்டதாய் இருந்தது. அவற்றுள் முக்கியமானவற்றையெல்லாம் அரசர் தம் கைகளிலேயே வைத்துக்கொண் டிருந்தார். எனவே, அதிகாரங்கள் அரசர்பால் செறிந்திருந்தன. பேரரசுக்கு உட்பட்ட அரசாங்கங்கள் அல்லது மாநில அரசாங்கங்கள், மத்திய அரசாங்க அமைப்பையே பின்பற்றின. மத்தியில் காணப்பட்ட அத்தனை அரசாங்கத்துறைகளும் மாநிலத்திலும் காணப்பட்டன. மாநிலத்தின் அல்லது சுபாவின் தலைவர் சுபாதார் அல்லது சிபசாலார் (Sipahsalar) என்று அழைக்கப்பட்டார். அவர் பேரரசரின் பிரதிநிதியாக மாநிலத்தில் பணியாற்றினார். பெயர் ஒன்றைத் தவிர, மற்ற எல்லாவற்றிலும் அவர் ஓர் அரசராகவே மாநிலத்தில் விளங்கினார். பேரரசு, சுபாக்கள் என்று அழைக்கப்பட்ட பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் அவற்றின் எண்ணிக்கை பன்னிரண்டாக இருந்தது; தக்காண வெற்றிக்குப் பின்னர் அது பதினைந்தாக மாறியது. சுபாக்கள் சர்க்கார்களாகவும் (Sarkars), சர்க்கார்கள் பர்காணுக்கள்

(Parganas) அல்லது மகல்களாகவும் (Mahals) பிரிக்கப்பட்டிருந் தன. சான்றாக, அலகாபாத் என்ற சுபாவானது "177 பர்காணுக் களையும் 10 சர்க்கார்களையும் உட்கொண்டதாக இருந்தது"[18] என்றும், "பீரார் என்ற சுபாவில் 16 சர்க்கார்களும் 142 பர்காணுக்களும்"[19] "வங்காளம் என்ற சுபாவில் 24 சர்க்கார் களும் 787 மகல்களும்"[20] இருந்தன என்று நாம் கேள்விப் படுகிறோம். மகல்கள் என்பனவும் பர்காணுக்கள் என்பனவும் ஒன்றே. அவையே பேரரசின் உட்பிரிவுகளில் மிகச் சிறியன வாகும். பர்காணுக்கள் அல்லது மகல்கள் என்பன பல கிராமங்கள் ஒன்று சேர்ந்த கூட்டங்களைக் குறிக்கும். ஆட்சித் துறைபற்றிய காரணங்களுக்காகவும் இராஜதந்திர காரணங்களை முன்னிட்டும் இக் கிராமக் கூட்டங்கள் அமைக்கப்பட்டன. ஆட்சித் துறையின் அடிப்படைக் கூறாக அல்லது அலகாகப் (Unit) பர்காணுவை முதன்முதலாக எடுத்துக்கொண்டவர் ஷெர்ஷா என்னும் அரசர் ஆவர். அவருடைய நாட்டில் பதின்மூன்றாயிரம் பர்காணுக்கள் இருந்தன. அக்பரது பேரரசில் இருந்ததாக அபுல் ஃபாசல் என்பவரால் விரித்துரைக்கப்படுகிற பதினைந்து சுபாக்களில் ஏறக்குறைய மூவாயிரம் பர்காணுக்கள்[21] இருந்தன. அதிலிருந்த பதினைந்து சுபாக்கள் வருமாறு: அலகாபாத், ஆக்ரா, அயோத்தி, ஆஜ்மீர், அகமதாபாத், பீஹார், வங்காளம், டில்லி, காபூல், லாகூர், முல்தான், மாளவம், பீரார், காந்தேஷ், அகமதுநகர். ஷெர்ஷாவின் பர்காணு அக்பருடையதை விட அளவில் சிறியது என்பதையே இது காட்டுகிறது. ஒரு பர்காணுவுக்கு எத்தனை கிராமங்கள் என்பதைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமானது. புவியியல் அமைப்பை ஒட்டியும் ஆட்சி முறைச் சௌகரியத்தை முன்னிட்டும் கிராமங்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டுச் சுபாவாக அமைக்கப்பட்டன. ஒன்றுக் கொன்று அருகாமையில் அமையாத அல்லது புவியியல் தொடர்பு இல்லாத (Geographical Contiguity) கிராமங்கள் "பல்வகைக் கிராமங்கள்"[22] (Miscellaneous Villages) எனவும், "ஒதுக்கப் பட்ட கிராமங்கள்"[23] எனவும் (Detached Villages) அழைக்கப் பட்டன. ஒரு பர்காணுவின் பரப்பளவு ஐந்து லட்சம் பிகாக்களி

---

[18] Ain-i-Akbari, Vol. II, p. 160.

[19] Ibid., p. 231.

[20] Ibid., p. 129.

[21] Ibid., Vol. II, p. 115.

[22] Ibid., Vol. II p. 330 (As under Sind Sagar Doab).

[23] Ibid., p. 340 (As under the Sarkar of Hajkun).

லிருந்து[24] ஒரு சில நூற்றுப் பர்காணுக்கள் வரை[25] மாறுபட்டிருந்தது. அக்காலச் சூழ்நிலைக்கு மிக மிகக் குறிப்பிடத்தக்க சிறப்பாகக் கருதப்பட்டது என்னவெனில், ஒவ்வொரு சர்க்காரும் பர்காணுவும் நன்கு அளக்கப்பட்டதும் வரித்தொகை எவ்வளவு செலுத்தப்பெறவேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்டதுமாகும். மேலும், அங்கிருந்த ஜனத்தொகையின் தன்மை அந்தந்த இடத்தின் புதுமைகள், உள்ளூர் விளைவுகள், வியாபாரம், தொழில் போன்ற பலதுறைப்பட்ட செய்திகளும், இன்னும் பலன் தரத்தக்க பல செய்திகளும் அக்காலத்தே நன்கு கணிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டிருந்தன. எனவே, அக்பரின் ஆட்சித்துறை அலகுகள் ஷெர்ஷாவின் ஆட்சித்துறைப் பகுதிகளைவிடப் பெரியன வாக இருந்தபோதிலும் அவை நன்றாக ஆட்சி செய்யப்படவில்லை என்றோ, சரிவரக் கட்டுப்படுத்தப்படவில்லை என்றோ கூற முடியாது.

(ii) ஆட்சித்துறை நிறுவனம் (Administrative Set up):

அக்பரின் நிறுவனங்கள் அபுல் ஃபாசல் என்பாரது கூற்றுப்படி, ''மூன்று பகுதிகளாகப்''[26] பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு பகுதி அரண்மனை நிர்வாகத்தையும், இரண்டாவது பகுதி தரைப் படையையும், மூன்றாவது, பேரரசின் நிர்வாகத்தையும் கவனித்துக்கொண்டன. பேரரசு விவகாரம் ஏதோ மனம் போன போக்கில்தான் பிரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பெரும்பாலும், பேரரசின் நலன்களை முன்னிட்டும், நிர்வாக சௌகரியங்களை ஒட்டியுந்தான் அவை பிரிக்கப்பட்டிருக்கக் கூடும். அரண்மனை விவகாரங்கள்பற்றிய பகுதியில் பற்பல துறைகள் காணப்பட்டன. அரசரின் அந்தப்புரம், பேரரசுக் கருவூலம், விலையுயர்ந்த கற்கள் அடங்கிய களஞ்சியம், நாணய உற்பத்திச் சாலை (Mint), செலாவணித் துறை (Department of Currency), பேரரசுப் பிரயாணங்களின் தேவைகளைக் கவனித்துக் கொண்ட துறைகள், அரசரது வெளியூர் முகாம்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி அளிக்கும் துறை, அரண்மனை அலங்கரிப்புத் துறை, பேரரசுச் சமையற்கட்டு, பேரரசுக் கிடங்கு, பழங்கள், வாசனைத் திரவியங்களைப் பெற்றுத் தரும் நிறுவனம், ஆடை உற்பத்திச் சாலை, குதிரைக் கொட்டில், யானை, ஒட்டகம், கோவேறு கழுதைகள் போன்ற விலங்குகளின் கொட்டில்கள், பேரரசுக் கட்டடங்கள், பாதைகள் போன்ற

[24] Ibid., p. 285 (as under the Sarkar of Delhi).
[25] Ibid., p. 330.
[26] Ibid., Vol. I, preface by the author and p. 153.

பொது நன்மைக்குரிய சாதனங்கள், அறச்சாலைகள், இறுதியாக இராணுவக் கிடங்குகள், வெடிமருந்துச் சாலைகள் ஆகியவற்றை நிர்வகிக்கும் நிறுவனங்கள் என்ற பல துறைகள் அரண்மனை பற்றிய ஆட்சித்துறைப் பகுதியில் அடங்கியிருந்தன. தரைப் படை நிர்வாகப் பகுதியில், மன்சப்தார்கள், அகாதிகள் (Ahadis), இன்னும் ஏனைய துருப்புகளைத் திரட்டவென்று ஓர் அமைப்பும், குதிரைகளுக்குச் சூடு போடுதலைக் கண்காணிக்கவென்று ஒரு நிறுவனமும் இருந்தன. மேலும், அதில் வாகியாநவிஸ்களின் (Waqianawis) கடமைகளைக் கண்காணிக்கவும், சன்னத்துகள் (Sanads), கொடைகள் (Donations), தானங்கள் (Alms), சயூர்கல் (Sayurghal) ஆகியவை அளிக்கப்படுதலை மேற்பார்க்கவும், கடற் படை அமைப்பைக் கவனிக்கவும், திருமணங்கள், கேளிக்கைகள், கல்வி போன்ற சில்லறை விவகாரங்களைக் கவனிக்கவும் எனப் பல துறைகள் இருந்தன. பேரரசு நிர்வாகப் பகுதியில் நாம் இன்று பொதுத்துறை ஆட்சித்துறைகள் என்று கருதுவனவற்றைப் போன்ற நிறுவனங்கள் பல அடங்கியிருந்தன. பேரரசு, சுபாக் களாகவும், சர்க்கார்களாகவும், மகல்கள் அல்லது பர்காணுக் களாகவும் பிரிக்கப்படுதலை மேற்பார்க்கவும், அவற்றின் அளவை (Survey), வரி நிர்ணயம் (Assessment) ஆகியவற்றைக் கண்காணிக் கவும், மாநில ஆளுநர்கள், சேனைத்தலைவர்கள், ஃபௌஜ்தார்கள் ஆகியோரின் அதிகாரங்களையும் கடமைகளையும் மேற்பார்க்கவும் எனப் பல ஆட்சித்துறைப் பகுதிகள் அதில் காணப்பட்டன. நீதித்துறைகள், வருமானத்துறை, பட்டணப் பகுதிகளைக் கண்காணிக்கும் துறை போன்றவையும், இன்ன பிற சில்லறைத் துறைகளும் அதில் அடங்கியிருந்தன.

ஆட்சித்துறைப் பகுதிகள் இங்ஙனம் பிரிக்கப்பட்டுப் பின் தொகுக்கப்பட்டபோது, சயூர்கல், திருமணம், கல்வி, தான தர்மம், கேளிக்கைகள் போன்றவை ஏன் தரைப்படைப் பகுதி யில் அடக்கப்பட்டன என்பதைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினமாகவே உள்ளது. ஒருவேளை அவை யாவும் பேரரசு அரண்மனைப் பகுதியிலோ, அன்றிப் பேரரசு நிர்வாகப் பகுதி யிலோ அடக்கமுடியாத ஆட்சித்துறைப் பகுதிகளாக இருந் திருக்கக்கூடும். சயூர்கல், திருமணம், கல்வி, தானதர்மம், கேளிக்கைகள் போன்றவற்றை கண்காணிக்கும் பொறுப்பு சதர் (Sadr) என்ற அதிகாரி ஒருவரைமட்டுமே சார்ந்ததாகும். ஆனால், சதர்களின் பணிகளைத் தம்முடைய நேரடியான கண் காணிப்புக்குள் வைத்திருக்கவேண்டும் என்பதை அக்பர் ஒரு கொள்கையாகவே கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அவ ருடைய சதர்களிற் பெரும்பான்மையோருக்கு நிலங்கள் வழங்கப்

பட்டிருந்தனவே அன்றி மன்சப் பதவிகள் தரப்படவில்லை. தரைப் படையுங்கூட அக்பரின் நேர்முகமான கட்டுப்பாடுகளுக்கு அடங்கியே இருந்தது. தரைப்படையின்மீதும், சதர்களின் பதவிமீதும் அவர் தம் பணிகள்மீதும், அக்பர் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களைக் கண்காணித்து வந்தமையால் அவ்விரு துறைகளிடையே நெருங்கிய ஓர் உறவு ஏற்பட்டது. அத்தகைய நெருங்கிய உறவின் விளைவாகவே மேற்சொன்ன காரியங்கள் யாவும் பேரரசுப் படைப்பகுதியுள் அடக்கப்பட்டிருக்கலாமெனத் தெரிகிறது.

அக்பரின்கீழ் நடைபெற்றுவந்த ஆட்சி முறையைப்பற்றி அபுல் ஃபாசல் என்பார் கொடுத்துள்ள விளக்கத்தில் இரு முக்கியமான செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவதாக, பேரரசு அரசாட்சியில் என்னென்ன துறைகள் அடங்கி இருந்தன என்பதையும் அவை ஒவ்வொன்றும் என்னென்ன கடமைகளை மேற்கொண்டன என்பதையும் அது குறிப்பிட்டுக் காட்டுகிறது. மேலும், ஒவ்வொரு துறையிலும் தக்கபடியான பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்களென்பதும், அவர்களிடையே அவரவர்க்குரிய தரங்களும், பணிகளும் முறையே நிர்ணயிக்கப்பட்டிருந்தன என்பதும் நமகுத் தெரியவருகின்றன. இந்த வெவ்வேறு துறைகளிலும் பணியாற்றி வந்தவர்கள், அவரவரது பணியின் முக்கியத்துவத்துக்கேற்ப, நான்கு பகுதியினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர் என்பதைப் பின்னர்ப் பார்க்கப்போகிறோம். இரண்டாவதாக, இந்த அரசியல் அமைப்பில் அரசரின் சொந்த விவகாரங்களுக்கும், பொது ஆட்சித் துறைப்பற்றிய விவகாரங்களுக்கும் சிறிதும் பேதம் கற்பிக்கப்படவில்லை என்பதைப் பார்க்கிறோம். அரசரது அந்தப்புர நிர்வாகத்திலிருந்து, நீதி வழங்கும் அதிகாரம்வரை எல்லாம் ஒரே தராசில் நிறுக்கப்பட்டன. அவை யாவும் பேரரசு ஆட்சி வரம்புக்குள் அடங்கிவிட்டன. எனவே, அரசரின் விருப்பத்தை ஒட்டியே அவற்றிற்கு அதிகமாகவோ, குறைவாகவோ, முக்கியத்துவம் அமைந்தது. மன்னரது நலனைச் சார்ந்தது எதுவாயினும் அது பேரரசு ஆட்சியின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. ஏனெனில், அரசனையே இராஜ்யமாகக் கருதிய காலம் அது. அரசன் மூலமாகவே அரசு வெளிப்படுகிறது என யாவரும் நினைத்தனர். அதிகாரம், பெருமை, நீதி யாவற்றிற்கும் அவனே மூலமாகக் கருதப்பட்டான். நாடும், அந் நாட்டில் இருக்கும் எல்லா நிலமும், நீரும், மக்களும் அவனுக்கே உரிய உடைமையாகக் கருதப்பட்டன.

(iii) பேரரசின் பணியாட்கள் (Staff of the Imperial Administration) :

அக்பர் ஒருவராலேயே உண்டாக்கப்பட்டும், நடத்தப் பட்டும் கண்காணிக்கப்பட்டும் வந்த அரசாட்சி முறையிலுங் கூடப் பேரரசின் ஊழியர்கள் மிக முக்கியமான இடத்தை வகித் தனர். அபுல் பாஸ்சல் எனும் ஆசிரியர், அவர்களின் முக்கியத்து வத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறுர். அவர்களை நான்கு பிரி வினராக அவர் பிரித்துள்ளார். அப் பிரிவுகளில் அடங்கியோர் வருமாறு : (1) அரசினைச் சார்ந்த பிரபுக்கள் ; (2) வெற்றிக்குத் துணைபுரிந்தவர்கள். (3) அரசரின் உடன் கூட்டத்தார். (4) கடைநிலை ஊழியர்கள். அவரவர் செய்தொழில் சிறப்புக் கேற்பவே மேற்கண்ட வகுப்பினர் ஒருவர்பின் ஒருவராக வைக் கப்பட்டனர்.

அரசின் பிரபுக்களில் வக்கீல் (Vakil) என்பவர் மிக முக்கிய மானவர். '' அவர், பேரரசரின் பிரதிநிதியாக அரண்மனையைப் பொறுத்த எல்லாக் காரியங்களிலும் விளங்கினுர். ''[27] மீர்மல் (Mir Mal) என்பவர் மற்றுமொரு பெரும் பிரபு ஆவர். பேரரசரது சொந்தச் செலவுப் பணத்தை அவரே நிருவகித்து தந்தார். பேரரசரின் முத்திரையை வைத்திருந்தவரும் அவரே. மீர் பக்ஷி (Mir Bakshi) என்பவர் பேரரசரின் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதை மேற்கொண்டார். அவர் ஏறத்தாழ இக் காலத்திய சம்பளப்பட்டுவாடா அதிகாரியைப் (Pay Master General) போன்றவர். மீர் அர்ஸ் (Mir Arz) அல்லது பர்பேகி (Barbegi) என்னும் பிரபு நீதிமன்றத்திற்கு மக்களை இட்டுவரும் அதிகாரியாகவும், அவர்களின் மனுக்களை மன்னரிடம் கொடுப்ப வராகவும் விளங்கினுர். குர்பேகி (Qurbegi) என்பவர் பேரரசின் விருதுகளைத் தாங்கிச்சென்ற அதிகாரி ஆவார். மீர்தோஸக் (Mir Tozak) என்பவர் சடங்குகளுக்கெல்லாம் தலைவர். மீர்பஹ்ரி (Mir Bahri) என்பவர் துறைமுகங்களுக்கும் கடற்படைக்கும் தலைவர். மீர்பர் (Mir Bar) என்பார் பேரரசுக்காடுளின் கண்காணிப் பாளர். மீர் மன்சில் (Mir Manzil) என்பார் இராணுவப் பண்டக சாலைத் தலைவர். கான்சலார் (Khwansalar) என்பார் பேரரசின் சமையற்கட்டை மேற்பார்ப்பவராக இருந்தார். மீர் முன்ஷி (Mir Munshi) என்பார் அரசரின் அந்தரங்கச் செயலாளராக இருந்தார். குஷ்பேகி (Qushbegi) என்ற பறவைக்கூண்டு கண்காணிப்பாளரும், அக்தர்பேகி (Akhtarbegi) அல்லது பொலிகுதிரைகளின் மேற் பார்வையாளரும் அரசரின் பிரபுவர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. அவர்களுக்கு அடுத்தாற்போல் வெற்றிக்குத் துணைபுரிந்த

[27] Ibid., Vol. I, Abul Fazl's preface, p. 5.

கூட்டத்தார் வீற்றிருந்தனர். அக் கூட்டத்தில் வஜீர் அல்லது திவான், முஸ்டாஃபி (Mustaufi) அதாவது, கணக்குத் தணிக்கைத் தலைவர் அல்லது உதவித் திவான் சாஹிபீடௌஜி (Sahib-i-taujih) அல்லது இராணுவக் கணக்குத் தணிக்கை அதிகாரி, அவர்ஜாநவிஸ் (Awarjah Nawis) அல்லது அரண்மனை அன்றாடச் செலவுகளின் கண்காணிப்பாளர், மீர்சாமன் (Mirsaman) அல்லது அரண்மனைப் பண்டகசாலைத் தட்டுமுட்டுச் சாமான்களின் அதிபதி, நாஜீரி புயூதத் (Naziri Buyutat) அல்லது பேரரசின் தொழிற்சாலைக் கண்காணிப்பாளர், திவானி புயூதத் (Diwani Buyutat) அல்லது பேரரசுப் பண்டகசாலை, தொழிற்சாலைகள் ஆகியவற்றின் கணக்கர், முஷ்ரீஃப் (Mushrif) அல்லது கருவூலச் சிப்பந்தி, வாகியாநவிஸ் (Waqia Nawis) அல்லது அரண்மனைப் பதிப்பாளர், அமீல் (Amil) அல்லது அரச நிலங்களின் வரி தண்டுவோர் ஆகிய இவர்கள் மேற்சொன்ன இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் யாவரும் வஜீரின் ஆணைக்குக் கட்டுப் பட்டவர்கள். மூன்றாவது வகுப்பில் பின்வரும் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் சதர் (Sadar), மீர் ஆதில் (Mir Adil), காஜி (Qazi), மருத்துவர், வானநூல் நிபுணர், கவிஞர், ஜோசியர்கள் ஆகியோர் ஆவர். இவர்கள் அரசரின் உடன்கூட்டத்தார் என அழைக்கப்பட்டனர். கடைநிலை வகுப்பாராகக் கருதப்பட்ட நான்காவது வகுப்பில் சாதாரண ஊழியர்களே காணப்பட்டனர். அவர்கள் ''அரண்மனையில் அரசருக்கு வேண்டிய பணிகளைச் செய்து வந்தனர்.'' உணவு பரிமாறும் ஊழியர், படைக்கலன் ஏந்துவோர், நீர், சர்பத் ஆகியவற்றை அளிப்பவர், இரத்தினக் கம்பளங்களையும் அரச உடுப்புகளையும் வைத்துக் காத்த பணியாளர்கள்[28] ஆகியோர் இவ் வகுப்பிற்கு உட்பட்டவர்களாவர்.

இத்தகைய தொகுப்பானது மிக மிகச் செயற்கையானது; ஏதோ மனம் போன போக்கில் செய்யப்பட்டது. இதில் பலதரப்பட்ட அதிகாரிகளுக்குரிய நிலைகள் நன்கு வகுக்கப்படவில்லை. அவரவரின் தொழிற் சிறப்புக்கேற்றபடிப் பதவியின் தரம் நிர்ணயிக்கப்படவில்லை. அரசின் பிரபுக்கள், வெற்றிக்குத் துணை புரிந்தோர், அரசரின் உடன் கூட்டத்தார் ஆகிய இம் மூன்று வகுப்பினரும் முறையே பேரரசுக் குடும்பம், பேரரசுப் படை, பேரரசு ஆட்சித்துறை இவற்றை நடத்தி வந்தனர் என்றும் நாம் கருதுதற்கில்லை. முதல் மூன்று வகுப்பினர் வெவ்வேறு தரப்பட்ட மன்சப் பதவிகளுக்கு உரியவர்களாயிருந்தபோது, நான்காவது வகுப்பினர் கடைநிலை ஊழியர்களாக இருந்தனர் என்றுமட்டுமே கூறமுடியும்.

---

[28] Ibid., Vol. Abul Fazl's preface, p. vii.

(iv) குஷல்கானு(Ghushalkhana) - உள்மன்றம் (Inner Council):

மேற்கண்ட பட்டியலைப் பார்க்கும்போது அக்பரது அவையில் முக்கிய அமைச்சர்களாக வீற்றிருந்தவர்கள், வக்கீல், வஜீர், மீர்பக்ஷி, சதர் ஆகிய நால்வருமே ஆவர் என்று ஸ்மித் என்னும் ஆசிரியர் கூறியுள்ள கூற்றை நாம் ஒப்புக்கொள்ள முடியாமல் போகிறது. டாக்டர் இபின் ஹாஸன் என்பார் மேற்சொன்ன நான்கு அமைச்சர்களோடு மீர்சமன்[29] என்பவரும் சேர்ந்து ஐந்து பேர் அக்பரது அவையில் வீற்றிருந்ததாகக் கூறுகிறுர். அதையும் நாம் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. அக்பர் ஆட்சிப்பொறுப்பைச் சொந்தமாக ஏற்றுக்கொண்டபின், அவருடைய அதிகாரி களுக்கு ஒருவிதமான சுதந்திரத்தையும் அவர் கொடுக்கவில்லை என்பதையே அறிகிறோம். அவர்கள் எவ்வளவு உயர்ந்த அதிகாரிகளே யாயினும், அல்லது அவர்கள் தாங்கள் பணியாற் றும் ஆட்சித் துறைகளின் தலைவர்களாய் இருந்தபோதிலுங்கூட அவர்களை அக்பர் தம் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத் திருந்தார். எனினும், தம் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் என்று அவரால் கருதப்பட்ட ஒரு சிலரை அவ்வப்போது கலந்து ஆலோசிக்கும் வழக்கமும் அவர்பால் காணப்பட்டது. ஒரு கொள்கையை வகுப்பதிலும் அல்லது அதை நடைமுறையில் நடத்துவதிலும் எந்த அளவுக்கு ஒருவர் துணைபுரிகிறுரோ அந்த அளவுக்கு அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அக்பருக்கு ஒருவர் எவ்வளவு தூரம் பயன் உடையவராய் இருந்தாரோ அதற்கு ஏற்பவே அரசியலில் அவருக்குப் பதவி உயர்வும் வேறு பல சிறப்புகளும் ஏற்பட்டன. அரசாங்கத் துறை களில் தலைவர்களாக இருந்ததால்மட்டுமே அவர்களுக்குப் பெருமை ஏற்படவில்லை; அப்படித் தலைவர்களாக இருப்பதும் இல் லாததும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது. சான்ருக, அபுல் ஃபாசல் அல்லது மான்சிங் அல்லது தோடர்மால் அல்லது பீர்பால் போன்றவர்களை அவர் எப்போதும் கலந்து ஆலோசிப்பது வழக்கம். தலைநகரில் அவர்கள் இல்லாத சமயம் தவிர, ஏனைய சமயங்களிலெல்லாம் அக்பர் அவர்களைக் கலந்து ஆலோசித்தே மிக முக்கியமான அரசாங்கக் காரியங்களைச் செய்து முடிப்பது அவரது பண்பாகும். ஒரு வகையான அந்தரங்க ஆலோசனைச்சபை அக்பர் காலத்தில் இருந்ததாக ஒரு சிலர் கூறுகின்றனர். அது கேபினட் சபையைப் போன்றது என்று கூறமுடியாது. எனினும், மன்னர் அன்ருடம் கலந்து ஆலோசனை புரிகிற ஒரு சபையாக அது விளங்கி வந்

[29] Dr. Ibn Hasan, The central structure of the Mughal Empire, pp. 235-52.

திருக்கக் கூடும் என்பது சரியென்றே தோன்றுகிறது. அஃது குஷல்கானு என்ற பெயர் கொண்ட ஒரு பேரவையாகத் திகழ்ந்தது. ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்திலேதான் அச்சபை யானது முதன்முதலில் தோன்றியது. அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவியில் இருந்தவர்கள்மட்டுமே அதில் இடம் பெற்றிருந்தனர். அரசாங்கத்தின் மிக முக்கியமான அலுவல்களை யெல்லாம் அவர்கள் தமக்குள் விவாதித்தனர். போர், சமாதானம் முதலிய மிக இரகசியமாக வைத்திருக்கப்பட வேண்டிய செய்திகள், இச் சபையிலேயே நன்கு விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.[30] அக்பரது காலத்தில் இத்தகைய சபை இருந்ததா என்பதைப்பற்றி வெளிப்படையாக ஒன்றும் தெரியவில்லை. எனினும், ஆய்ன்-இ-அக்பரி என்ற நூலில் காணப்படும் ஒரு சில பகுதிகளிலிருந்து அத்தகைய சபை ஒன்று அக்பர் காலத்தில் இருந்திருக்கலாமென நாம் ஒருவாறு உய்த்துணர முடிகிறது. அவருக்குப்பின் வந்த அரசர்களின் காலத்தில் அது மிகமிகப் பயனுள்ள ஒரு நிறுவனமாக மாறிவிட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அக்பர் அவ்வப்போது மக்களுக்குக் காட்சி அளித்து வந்தார் என்று அபுல் ஃபாசல் என்பவர் எழுதியுள்ளார். காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் அவர் மக்களுக்குக் காட்சி தருவது வழக்கம். காலையில் அவர் அளித்த காட்சிக்குத் 'தரிசனம்' என்று பெயர். அப்போது அவர் அரண்மனைக்கு வெளியே வந்து நின்று பலதரப்பட்ட மக்களுக்கும் ஆசி வழங்குவார். மாலையில் அவர் அத்தாணி மண்டபத்தில் இருந்து அனைவருக்கும் காட்சி தருவார். ''பொதுவாகப் பகற்பொழுதின் முதல் ஜாமத்திலேயே அவர் அத்தாணி மண்டபத்தில் கொலு வீற்றிருப்பது வழக்கம். சில சமயம் அவர் அந்தி நேரத்திலோ அல்லது இரவிலோ சபையைக் கூட்டுவதுமுண்டு.''[31] இரவு நேரத்தில் அவர் தமது ''தனிப்பட்ட கொலு மண்டபத்தில்'' அரசவையைக் கூட்டுவது வழக்கம். அங்குச் சில சமயங்களில் தத்துவம், சமயம், சமுதாய அரசியல் நிறுவனங்கள்பற்றிய சிக்கல்கள் ஆகியவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். ''வேறு சில சமயங்களில் பேரரசு சம்பந்தமானவையும் பொது வருமானத்தைப்பற்றியனவுமான செய்திகள் விவாதத்துக்கு வரும். அப்போது மேன்மை தங்கிய அரசர் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற ஆணைகளை

[30] Khosla, Mughal Kingship and Nobility, p. 51.

[31] Ain-i-Akbari (translated by Blochmann, Vol. I, p. 155; edited by Lt. Col.D. G. Phillott and published by A. S. Bengal 1927 and 1939).

வழங்குவார்.''[32] இதுதான் அரசரின் அந்தரங்க ஆலோசனைச் சபையென தோன்றுகிறது. மனூச்சி (Manucci) என்பாரால் குஷல்கானு என்று அழைக்கப்படுவதும் இதுவாகவே இருக்கலாமெனத் தெரிகிறது. இங்கேதான் நாட்டின் மிக முக்கியமான அதிகாரிகள் ஒன்றுகூடி ஆலோசனை புரிந்திருக்கக்கூடும் எனவும் கருத இடம் உண்டு. காலை நேரத்தில் அக்பர் அத்தாணி மண்டபத்தே காட்சி அளித்தபோது அவர், அதிலிருந்த ஒரு ஜன்னலுக்கருகில் அமர்ந்துகொண்டு நிர்வாகக் காரியங்களை கவனிப்பது வழக்கம். ''இங்கேதான் அவர் அமைதியாக நீதி வழங்குகிறார் அல்லது நீதி வழங்குவதைப்பற்றி ஆய்கின்றார். அல்லது, அதிகாரிகளின் சிறப்புகளை அவர் மதிப்பிடுகிறார். இந்தச் சமயத்தில்தான் ஓர் அரசாங்க அதிகாரியும் பலதரப்பட்ட அறிக்கைகளையும் அவரிடம் சமர்ப்பிக்கின்றார். அதோடு அவர்களது பலதரப்பட்ட தேவைகளையும் விளக்குகிறார். மேன்மை தங்கிய அரசரும் அதற்கெல்லாம் தகுந்த முறையில் தம் ஆலோசனைகளை வழங்குகின்றார்.''[33] இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், மாலை நேரத்தில் அக்பர் தம் தனிப்பட்ட கொலு மண்டபத்தில் வீற்றிருந்தபோது பேரரசு சம்பந்தமானதும், பொது வருமானத்தைப்பற்றியதுமான பொதுக் கொள்கைகளும், விதி முறைகளும் விவாதிக்கப்பட்டன என்பதும், அதற்கேற்ற ஆணைகளை மேன்மைதங்கிய அரசர் வழங்கினர் என்பதும், காலை நேரத்தில் கூட்டப்பட்ட அரசவையில் ஒவ்வோர் அதிகாரியும் அவரவருடைய கஷ்டங்களையும் அல்லது தேவைகளையும் அரசரிடம் கூறி, அவரது ஆலோசனையை நாடினர் என்பதுமேயாகும். அரசாங்கக் காரியங்களைப்பற்றி விவாதிக்காத சமயங்களில் அவர், ''நாவன்மை மிக்க மெய்யறிஞர்களோடும்,'' ''சீலமிக்க சூஃபிகளோடும்'' நடுநிலை மிக்க வரலாற்று ஆசிரியர்களோடும், உரையாடல் நிகழ்த்துவது வழக்கம்.[34] இந்த விளக்கத்திலிருந்து தினந்தோறும் அக்பர் ஒருசிலர் அடங்கிய சபையினைக் கலந்து ஆலோசித்தார் என்றும், அச் சபையில் உயர்ந்த அதிகாரிகளை அன்றி அக்பரது நம்பிக்கைக்குகந்த வேறு மனிதர்களும் இடம் பெற்று இருந்தனர் என்றும் தெளிவாகத் தெரிகிறது. பேராசிரியர் கோஸ்லா (Khosla) என்பவர் கூறியுள்ளபடி அக்பர் நாள்தோறும் இல்லாவிடினும் அடிக்கடி கலந்து ஆலோசித்துக்கொண்டு வந்த பெரும் அதிகாரிகள், வக்கீல், வஜீர் அல்லது முஷ்ரீபீ திவான், (Mushrif-i- Diwan) சதரே

[32] Ibid., p. 164.
[33] Ibid., Vol. I, p. 165.
[34] Ibid., Vol. I, p. 164.

சதுர் (Sadar-i-Sadur), மீர் சாமன் அல்லது கான்சாமன் (Khan Saman), திவானி குல், மீர்பக்ஷி[35] மீர்அர்ஸ், மீன் முன்ஷி போன்ற மிக முக்கியமான அமைச்சர்களே ஆவர்.

அவர்கள் தாம் வகித்துவந்த பதவிகளின் முக்கியத்துவம் காரணமாகவும், ஆற்றிவந்த பணிகளின் பெருமை காரணமாக வும், அரசருக்கு அறிவுரை கூறத் தகுதி பெற்றிருந்தனர். ஆனால் அவ் வறிவுரைகளை ஏற்றுக்கொள்வதும் கொள்ளாததும் அரசரது விருப்பத்தைப் பொறுத்தனவேயாகும். எனினும், அவர்கள் அரசருடைய கருத்துக்களின் வேகத்தை ஓரளவு தணித்திருக்கக் கூடும் என நிச்சயமாகக் கூறலாம். அவர்கள் இடித்துக் கூறிய சொற்களின் விளைவாக அரசாங்கக் கொள்கையும், ஆட்சித்துறை ஏற்பாடுகளும் அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டு இருக்கக் கூடும். தகுதிவாய்ந்த அமைச்சர் எவரும் தமக்குக் கிடைக்க வில்லை என்று அக்பர் கூறிக்கொண்டிருந்தாரே எனினும், அமைச் சர்கள் அவர்மீதும் அவரது ஆட்சியின்மீதும் பெருஞ் செல்வாக் கைச் செலுத்தி வந்தனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அமைச்சர்கள் என்ற சொல் இக்காலத்தே எப்பொருளில் வழங்கப் படுகிறதோ அந்த உயர்ந்த பொருளில் அக்பர் காலத்து அது கருதப்படவில்லை என்றே கூறலாம். அவர்கள் அரசின் செயலா ளர்களைப் போன்றே பணியாற்றினர். ஆனால், அவரவர்களது ஆட்சித்துறைகளின் அதிகார வரம்புக்குள் அவர்கள் பெருமளவு சுயேச்சையுடன் விளங்கினர். வருந்தத்தக்கதொரு குற்றம் நிகழ்ந்தாலன்றி அரசர் அவர்களின் சுயேச்சையில் தலையிடுதல் கிடையாது.

(v) ஆட்சித் துறைகளிடையே காணப்பட்ட பிணைப்பு (Interlinking of Departments) :

ஆட்சித் துறை எவ்வாறு அமைக்கப்பட்டது, அதிலிருந்த பல அதிகாரிகளுக்கும் என்னென்ன பணிகள் இடப்பட்டன என்பதை இனி ஆராய்வோம். அங்ஙனம் ஆராயும்போது அவ் வாட்சித் துறைகளின் பணிகள் யாவும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருத்தலை நாம் காண்கிறோம். அப் பிணைப்பின் விளைவாக ஆட்சி முறையில் ஒரு சமநிலை காணப்பட்டது. ஒரு துறையில் பணிபுரியும் பலருள் எவரேனுமொருவர் சரியாகத் தம் கடமையைச் செய்யாது விட்டுவிட்டால், அவரைத் திருத்திச்

[35]Ibid., pp. 273-74. Ain 12 under the Army (Bk. II) indicates their order of precedence (அவர்களின் தராதரம் இதில் குறிப்பிடப்படுகிறது).

சரியான வழியில் செலுத்தவும், ஆட்சித் துறைகளிடையே ஏற்படக்கூடிய முரண்பாடுகளை நீக்கி ஓர் ஒப்புரவை உண்டாக்கவும் அது பெரிதும் துணை செய்தது. ஆட்சித் துறைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே பிரிக்கப்பட்டுத் தனித்தனியே செயல்படக்கூடிய அதிகாரப் பிரிவினைமுறை அங்கே கடைப்பிடிக்கப்படவில்லை. ஒரோவழிக் காணப்பட்ட அதிகாரப் பிரிவினையும் மிகவும் குழம்பிய நிலையிலேயே இருந்தது. பேரரசின் காரியங்கள் அனைத்தும், நாம் ஏற்கெனவே பார்த்தபடி மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பேரரசுக் குடும்பம், படை, ஆட்சித்துறை இவையே அப்பிரிவுகளாகும். ஒவ்வொரு பிரிவிலும் பல துறைகள் தலைநகரில் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு சில துறைகளின் கிளைப் பகுதிகள் மாநிலங்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. ஏனெனில், அவற்றின் நடவடிக்கைகள் பேரரசின் மூலை முடுக்குகளிலெல்லாம் செல்லத் தக்கனவாயிருந்தன. அதே போன்று தம்மையொத்த தலைநகரத்துறை ஒன்றோடு தொடர்பில்லாதனவும், ஆனால் அதே சமயம் மத்திய அரசாங்கத்துக்கு உட்பட்டனவுமான ஒருசில துறைகள் மாநிலங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அத்தகைய பல துணைத்துறைகள் மாநிலங்களிலோ அல்லது மத்தியிலோ, பேரரசின் நலனை வளர்க்கும் முறையிலும் கட்டுப்படுத்தும் முறையிலும் அமைந்திருந்தன. சான்றாக, பேரரசுக் குடும்ப நிர்வாகத்தில் காணப்பட்ட அந்தப்புரம், சமையற்கட்டு, கிடங்குகள், குதிரைக் கொட்டில்கள் போன்றவற்றை மேற்பார்வை செய்து வந்த ஆட்சித்துறைகளுக்குச் சொந்தமாகத் தனிப்பட்ட முறையில் ஏராளமான அதிகாரிகளும், அவ் வதிகாரிகளின் கட்டுப்பாடுகளுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்ட பல சிப்பந்திகளும், கணக்கர்களும் இருந்தனர். ஆனால் அவற்றின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட மாநிலக்கிளை அலுவலகங்கள் ஒன்றும் இல்லை. அதே சமயத்தில் பேரரசுக் கருவூலமானது, பேரரசுக் குடும்பத் துறையோடு தொடர்புகொண் டிருந்ததோடு, நாட்டின் எல்லாப் பாகங்களிலும் அதற்குட்பட்ட கிளை நிறுவனங்களைக் கொண்டிருந்தது. எனவே, பேரரசுக் குடும்பத் துறையில் காணப்பட்ட ஏனைய பகுதிகளைப் போலன்றி அது தனிப்பட்ட நிலையில் இயங்கி வந்தது. அதனோடு வஜீர்களும் வக்கீல்களும் தொடர்பு கொண்டவர்களாயிருந்தனர். மாநில நீதித்துறை மீர் ஆதில், காஜி, மஃப்டி ஆகிய அதிகாரிகளை உட்கொண்டு இருந்தது. ஏறக்குறையச் சுயேச்சை கொண்ட நிறுவனமாக அது விளங்கிற்று. நீதி சரிவர வழங்கப்படவில்லை என்றும் அல்லது அநீதி விளைக்கப்பட்டது என்றும் மாநிலங்களிலிருந்து பேரரசருக்கு அவ்வப்போது அறிக்கைகள் அல்லது மனுக்கள் செல்வது உண்டு. ஆனால், மாநில நீதித்துறையோடு தொடர்பு கொள்வதற்கு அவை தவறு செய்யும்

போது அவற்றைத் திருத்துவதற்குத் தகுந்ததொரு மத்திய நிறுவனம் இல்லை. அநீதி, அடக்குமுறை ஆகியவற்றிற்குத் தகுந்த தண்டனைகள் கொடுக்கப்படுவது அரிதாகவே இருந்தது. உண்மையிலேயே இந்த அரசாங்கத்துறைகள் அனைத்தும் அவற்றின் அன்றாடப் பணிகளைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட சுயேச்சையான ஆட்சித்துறை நிறுவனங்களாகவே விளங்கின. ஆனால், மறைமுகமாகவோ அல்லது நேரிடையாகவோ அவை ஒன்றை ஒன்று சார்ந்து நின்றன. அங்ஙனம் அவை பிணைக்கப்பட்டு இருந்ததற்குக் காரணம் 'மன்சப்தாரி முறை' என்ற பொதுவான பேரரசுப் பணிமுறையேயாகும். இரண்டாவதாகப் பல துறைகளையும் இணைக்கக்கூடிய மத்தியக் காரியாலயம் ஒன்று அக்பரது ஆட்சியில் காணப்பட்டது. தஃப்தர் (Daftar) என அழைக்கப்பட்ட அக் காரியாலயத்தில் அப்வாபுல்மால் (Abwab-ul-Mal), அப்வாபுத்தஹவில் (Abwabuttahawil), தவுஜி (Taujih) 'வாகியாநவிஸ்' (Wakianawis) என்ற ஆட்சித்துறைகள் அடங்கி இருந்தன. மூன்றாவதாகப் பேரரசு நீதிமன்றமும் ஆலோசனைச் சபையும், மத்திய மாநில ஆட்சித்துறைகளை இணைத்துவைத்தன எனலாம். ஒவ்வொரு நாளும் பேரரசின் நலனை ஒட்டிய பற்பல காரியங்களும், மேற்சொன்ன நீதிமன்றத்திலும் மன்னர் அவையிலும் நன்கு விவாதிக்கப்பட்டன. புதிய கொள்கைகள் பல அங்கேதான் உருவாக்கப்பட்டன. நீதி வழங்கப்படுவதற்குரிய இறுதி மேல் முறையீட்டு நீதி மன்றமாக அது விளங்கிற்று. பொதுவான ஆட்சித்துறைபற்றியும், மக்களது திருமணம், கல்வி, உணவு, உடை, உலகநடை போன்ற பலவற்றைப் பற்றியும் புதிய புதிய ஆணைகளை அவை வெளியிட்டன. மனிதர்கள், ஓவியங்கள், கலைப் பொருள்கள் ஆகியவற்றின் தரங்களை மதிப்பிட்ட நிறுவனமும் அதுவே. பேரரசின் மூளை என அதைக் கூறலாம். அதிலிருந்துதான் பேரரசின் ஏனைய பகுதிகளுக்கு வாழ்வும் வழி வகையும் கிடைத்தன எனலாம்.

(vi) முக்கிய அதிகாரிகள் :

(a) **வக்கீல் :** மத்திய அரசாங்கத் துறைகள் எங்ஙனம் செயலாற்றுகின்றன என்பதைப்பற்றியும், அவை மாநில அரசாங்கங்களோடு எங்ஙனம் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றியும் மேற்கொண்டு ஆராயுமுன் பேரரசின் ஒரு சில முக்கிய அதிகாரிகளின் கடமைகளைக் குறிப்பிடுதல் நலம். அதிகாரிகள் அனைவருக்கும் தலைவராக இருந்தவர் வக்கீல் என்பவராவார். ''அவரே பேரரசு சம்பந்தமானதும் பேரரசுக் குடும்பத்தோடு தொடர்புள்ளதுமான எல்லாக்

காரியங்களையும் பேரரசரின் பிரதிநிதியாக இருந்து கவனித்துக்கொள்கிறார். அவர் தமது அறிவு முதிர்ச்சியின் காரணமாக, மன்னரது அவைக்கு ஓர் அணிகலனாக விளங்குகிறார். நாட்டில் உள்ள அரும்பெருங் காரியங்களை எல்லாம் அவர் தமது நுண்ணறிவின் திறத்தால் வெற்றிகரமாக நடத்துகின்றார். தீராத சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்றார். அதிகாரிகளை நியமிப்பதும் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதும் பதவிகளிலிருந்து இறக்குவதும் அல்லது நீக்குவதும் அவரது விருப்பத்தின் வழியே நடைபெறுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் அதிகாரிகள் அவரது நேரடியான மேற்பார்வைக்கு உட்படாமலிருந்தாலும் மறைமுகமாக அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறார். பொருளாதாரக் காரியாலயங்களின் தலைவர்களிடமிருந்து அவர் அவ்வப்போது அறிக்கைகளைப் பெறுகின்றார். அவ்வறிக்கைகளின் சுருக்கத்தை அவர் நுண்ணறிவோடு தொகுத்து வைத்துக்கொள்கிறார்.''[36] உண்மையிலேயே அவர் அரசரின் ஏகப்பிரதிநிதியாக விளங்கினார். அவரிடம் நான்கு விதமான நிறைவுகள் காணப்படவேண்டும் என்று அக்பர் வலியுறுத்தினார். அவர் தமது உயிர் (ஜான்), உடைமை (மால்), சமயம் (தீன்), மானம் (நாமுஸ்-Namus) ஆகிய நான்கினையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும். பொருளாதார சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும்பற்றிய பத்திரங்களில் அவரது முத்திரையானது பதிக்கப்பெற்றது. அதோடு நிலமானியம் வழங்கல், அதிகாரிகளை நியமனம் செய்தல் போன்ற பத்திரங்களிலும் அவரது முத்திரையானது பதிக்கப்பெற்றது. சிபசாலர்களையும் (Sipahsalars), சுபாக்களில் (Subha) அவர்களுக்கு உட்பட்டிருந்த பல்வேறு நிறுவனங்களையும் கட்டுப்படுத்தியவர் அவரே. பேரரசின் குடும்ப விவகாரங்களையும் அவரே கவனித்து வந்தார். படைகளை அமைத்தல், முக்கியமான ஆட்சித்துறை நடவடிக்கைகளை வகுத்து வழிநடத்தல் ஆகியவற்றைச் செய்தவரும் அவரே. மற்ற எல்லா அமைச்சர்களுடைய கடமைகளையும்விட அவரது பணி மிகவும் கடினமானது. அவர் தற்காலப் பிரமதமந்திரியைப் போன்ற நிலையில் இருந்தார். அரசரையும் அரசாங்கத்தையும் இணைத்து வைக்கும் சங்கிலியாக அவர் விளங்கினார். எப்போதெல்லாம் வக்கீல் உண்மையிலேயே திறமை உடையவராக இருந்தாரோ அப்போதெல்லாம் மன்னர் ஓரளவு இருக்குமிடம் தெரியாமலே ஆட்சி புரிந்து வந்தார். ஆனால், மன்னர் அக்பரைப் போன்று திறமைமிக்கவராக இருந்தபோது வக்கீலின் முக்கியத்துவம் பெரிதும் குறைந்தது. அப்போது அரசரே யாவரையும்

[36] Ibid., preface to Vol. I, p. 5.

ஊக்கப்படுத்தியும் வழி நடத்தியும் வந்தவராவார். கடவுளது அருளால் தமக்கு திறமை மிக்க ஒரு மந்திரி கிடைக்கவில்லை என்று அக்பரைப் போன்றவர்கள் கருதினர். அக்பர் ஒருவேளை தமக்குப் பணிபுரிந்த வக்கீல், வஜீர் போன்ற மந்திரிகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தமக்குத் திறமைமிக்க மந்திரிகள் கிடைக்கவில்லையென்று கூறியிருக்கலாம். வக்கீல் என்பார் பல சமயங்களில் புகழ்மிக்க தளபதியாகவும் இருப்பது வழக்கம். அப் பதவியை வகித்து வந்த பைராம்கான், முனிம்கான், அப்துர்ரஹீம், கானிகானு, மீர்ஸா அஜீஸ் கோகா போன்றவர்கள் பெரும் புகழும் பெற்ற வீரதீரம் நிரம்பிய பெருந்தளபதியாக இருந்தவர்கள். பேரரசின் பொருளாதார நிலையை அவர்கள் எவ்வாறு கட்டுப்படுத்தினர் என்பதை அபுல் ஃபாசல் என்பவர் பின் வருமாறு கூறுகின்றார்: "பொருளாதார அலுவலகங்கள் அவருடைய உடனடியான பார்வைக்கு உட்படாமல் இருந்தாலும் பொருளாதார அலுவலகங்களிலிருந்து அவ்வப்போது அவற்றின் தலைவர்கள் அறிக்கைகளை அனுப்பிவைப்பது வழக்கம். அவ்வறிக்கைகளின் சுருக்கங்களை எடுத்து அக்பர் வைத்துக்கொள்வது வழக்கம்"[37] "வஜீர் (Wazir) என்னும் பொருளமைச்சர் பொருளாதாரம்பற்றிய மர்மங்களை தீர்க்கமுடியாமல் திணறும் போது, அவர் வக்கீலின் உதவியை நாடுவது வழக்கம்."[38] அக்பரது ஆட்சியின்கீழ்ப் பின்வரும் வக்கீல்கள் பணியாற்றினர்: அவர்கள் பைராம்கான், முனிம்கான் (Munim Khan) அட்கா கான் (Atgah-Khan), பகதூர் கான் (Bahadur Khan) காஜா ஜஹான் (Khwajah Jahan), கான்கானன் (Khan Khanan), மீர்ஸா கான், கானி ஆஸம் மீர்ஸா அஜீஸ் கோகா (Khani Azam Mirza Aziz Koka) என்பவராவர்.

(b) வஜீர் அல்லது முஷ்ரிபி திவான் (Wazir or Mushrifi Diwan):

முக்கியத்துவத்தில் வக்கீலுக்கு அடுத்தாற்போல் வருபவர் வஜீர் (Wazir) அல்லது திவான் என்பவராவார். "அவர் பொருளாதாரக் காரியங்கள் அனைத்திலும் பேரரசரின் பிரதிநிதியாக இருக்கிறார். பேரரசரின் கருவூலங்களை அவர் கண்காணிக்கிறார். பேரரசுக் கணக்குகளை அவர் தணிக்கை செய்கிறார். நாட்டின் வருமானங்களையெல்லாம் திரட்டிவைக்கும் பொருளாளராக அவர் விளங்குகிறார். உலகம் என்னும் காட்டை அவரே சாகுபடி செய்கிறார். உண்மையாகவே அவர் ஒரு கணக்கர் (Book-

[37] Ibid.

[38] Ibid.

keeper), முஷ்டாபி (Mushtaufi) என்ற அதிகாரிக்கு மிக சிக்கலாகத் தோன்றும் காரியங்களை அவரே விளக்கிக் கூறுகிறார். அவராலும் விளக்கக்கூடாதனவற்றை அவர் வக்கீலிடம் கேட்டுக்கொள்கிறார்.'' ''வரி தண்டுவோர் அனைவருக்கும், நாட்டின் வருமானம், செலவு ஆகியவைபற்றிய பொறுப்பை வகிக்கும் அனைவருக்கும்.''[39] அவரே தலைவர். பொருளாதாரத்துறை அனைத்துக்கும் அவர் தலைவராகத் திகழ்ந்தார். தற்காலத்தில் நாம் கருதுகிறபடி பின்கண்ட துறைகள் யாவும் அதில் அடங்கி இருந்ததாகக் கூறலாம். அதாவது, சிவில் (Civil) இராணுவ கணக்குத் தணிக்கைத் துறைகளும், நில வருமானம், சிவில் இராணுவக் கிடங்குகள், பேரரசுக் கருவூலம், பொதுவான குறிப்பேடுகள் இரகசிய ஊழியம்—இவைபற்றிய துறைகளும் அதில் அடங்கியிருந்தன. அரசாங்கத்தின் இக் குறிப்பிட்ட துறையின் பெருமை காரணமாக, இப்படிப் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரும் ''வெற்றிக்குத் துணை புரிந்தவர்கள்'' என்ற பட்டத்தைப் பெற்றனர். அபுல் ஃபாசல் என்பவர்தாம் அப் பட்டத்தை வழங்கியவர். பின்னர், அக்பர் அதை ஏற்றுக்கொண்டார். அக்பரின்கீழ்ப் பணியாற்றிய வஜீர்கள் பின் வருமாறு: மீர் அஸீசுல்லா துர்பாத்தி (Mir Azizullah Turbati), கொராஸான் நாட்டுக் காஜா ஜலாலுடின் மகமத் (Khwajah Jallaluddin Muhammed of Khorasan) குவாஜா முய்னுடின் ஃபராங்குடி (Khwajah Muinuddin Parankhudi), குவாஜா அப்துல் மஜீத் அசாஃப்கான், விசிர்கான் (Vizirkhan), முஜாஃபர்கான், இராஜா தோடர்மல், சிராஜ்நாட்டு குவாஜா மன்சூர் (Khwajah-Shah-Mansur of Shiraj), குலீஜாகான் (Qulija Khan) குவாஜா ஷம்ஷுதீன் காவாஃபி (Khwajah Shamsuddin Khawafi).

இது சம்பந்தமாக அபுல் ஃபாசல் என்பவரால் குறிப்பிடப்படுகின்ற இரண்டு பெரிய அதிகாரிகளைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் முஷ்ரிஃபி திவான், திவானி குல் (Diwan-i-kul) என்பவராவர். அவரது கூற்றுப்படி வக்கீல் பதவிக்குத் தகுதியானவர்கள் ஒருவரும் கிடைக்காதபோது அரசர் ''வக்கீலின் சிறப்பியல்புகளில் ஒரு சிலவற்றையாவதுகொண்ட ஒரு மனிதரைத் தேர்ந்தெடுத்து அவரை முஷ்ரிபி திவானாக நியமிக்கிறார். அப் பதவியானது திவானி பதவியைவிடச் சற்று உயர்ந்தது; ஆனால், வக்கீல் பதவியைவிடச் சற்றுத் தாழ்ந்தது.''[40] மேலும் அவர் பேகம்கள், இளவரசர்கள் ஆகியோருக்குப் பணம்

[39] Ibid.

[40] Ibid., preface to Vol. I, p. 6.

வழங்குவதைப்பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்: ''முஷ்ரிஃப் என்பார் (கணக்கர்) முதலில் ஓர் இரசீதை எழுதுகிறார். அதில் பணத்தைப் பெறுபவர் கையொப்பம் இடுகின்றார். அதன்பின் அது திவானுக்கு அனுப்பப்படுகின்றது. திவானது இசைவினைப் பெற்றதும் அது முஷ்ரிஃப், முஷ்டாஃபி (Mustaufi), நாசீரி புயூதத் (Nazir-i-Buyutat), திவானி குல் (Diwan-i-kul), கான் சாமன் (Khan Saman), திவானின் முஷ்ரிஃப்''[41] ஆகியோரால் முறையே கையொப்பம் இடப்படுகிறது. இங்கே அதிகாரி களுடைய பெயர்கள் கீழிருந்து மேலாகக் குறிக்கப்பட்டுள்ளன. திவானிக் குல் என்பவர் முக்கியப் பொருள்துறை தணிக்கைத் தலைவர் போன்று (Chief Controller of the Finance) காட்சியளிக் கிறார். அதாவது, கணக்கு வழக்குத் தணிக்கையை மேற் கொண்ட அதிகாரியாக அவர் காணப்படுகின்றார். ஆனால், முஷ்ரிஃபி திவான் என்பவர் அவரைவிடச் சற்று உயர்ந்தவராகத் தெரிகின்றார். இக் காலத்திய நிதிமந்திரிக்கு அவரை ஒப்பிடலாம். அதிகாரிகளின் தராதரமானது அபுல் ஃபாசலின் இன்னொரு கூற்றால் நன்கு உறுதிப்படுகின்றது. அதில் அவர் முத்திரைகளின் வரிசைக்கிரமத்தை விளக்குகிறார். அதிலிருந்து அம் முத்திரை களுக்குச் சொந்தமான அதிகாரிகளின் தராதரங்கள் நமக்குத் தெரியவருகின்றன. அரசரின் ஃபர்மன்களும் (Farmans), பரவான்சாக்களும் (Parwanchas), பாரத்துகளும் (Baraths) எழுதப்பெற்றபின் நன்றாக மடிக்கப்பெறுகின்றன என அவர் கூறு கின்றார். அதன்பின் ''அவற்றினுடைய முதல் மடிப்பில் வக்கீலின் முத்திரை பதிக்கப்பெறுகின்றது. அதற்கு எதிர்த்தாற்போல், ஆனால் சற்றுக் கீழே தள்ளி, திவானி முஷ்ரிஃப் தமது முத்திரையைப் பதிவிடுகிறார். முத்திரையில் பாதி முதல் மடிப் பிலும், மற்றொரு பாதி இரண்டாவது மடிப்பிலும் விழுமாறு அவர் முத்திரையைப் பதிவிடுகிறார். பிறகு அதேமாதிரி, ஆனால் அதைவிடச் சற்றுக் கீழே தள்ளிச் 'சதர்' என்பவரின் முத்திரை பதிக்கப்பெறுகிறது. மீர்மல், கான் சாமன், பார்வான்சி முதலியோர் இரண்டாவது மடிப்பில் முத்திரை இடுகிறார்கள். அப்படி இடும்போது அதில் ஒரு சிறு பகுதியானது முதலாவது மடிப்பில் விழும்படி பார்த்துக்கொள்கிறார்கள். திவான், பக்ஷி ஆகியோருடைய முத்திரைகள் இரண்டாவது மடிப்பின் முனைக்கு மேல் போவதில்லை. ஆனால், திவானி ஜஸ்[42] (Diwan-i-Juz)

---

[41] Ibid., Volume I, p. 273.

[42] 'திவானி ஜஸ்' என்றால் மாநிலத் திவான் என்பது பொருள்.

பக்ஷி ஜஸ்[43] (Bakshi-Jus), திவானி பியூதத் (Diwani-Buyutat) ஆகியோருடைய முத்திரைகள் மூன்றாவது மடிப்பில் இடப்படு கின்றன. முஷ்டாஃபி என்பார் நான்காவது மடிப்பிலும், ஷாஹிபி தவூஜி (Sahibi-Taujih) ஐந்தாவது மடிப்பிலும் முத்திரை இடுகின்றனர்.[44] இந்த விளக்கத்திலிருந்து நமக்கு அதிகாரிகளின் தராதரம் நன்கு தெளிவாகத் தெரிகின்றது. வக்கீலுக்குப்பின் முஷ்ரிஃபி திவான் என்பவர் முக்கியமான அதிகாரியாகக் காணப் படுகிறார். அதன்பின் சதர், மீர் அல்லது கான்சமான், திவான், திவானி குல், பக்ஷி அதாவது மீர் பக்ஷி என்பவர்கள் முறையே முக்கியத்துவம் பெறுகின்றனர். புலோச்மன் (Blochmann) என்பார் தெரிவித்துள்ளபடி[45] வஜீர் என்பவரும் திவானிகுல் என்பவரும் ஒருவரேயானால் அபுல் ஃபாசல் என்பவர் தமது 'ஆயின்-இ-அக்பரி' என்ற நூலின் முதலாம் தொகுதியின் முன்னுரையில் கூறுகின்றபடி மீர் சாமன் என்பவர், ''அவரது கட்டளைகளுக்கு உட்பட்டவர்கள்'' என்று ஆகிறது. ஆனால், முத்திரைகள் பதிக்கப்பெறுகிற வரிசைக்கிரமத்தைப் பார்க்கும் போது திவானி குல் என்பவர் மீர்ஸாமனைவிடத் தாழ்ந்தவர் என்ப தும், முஷ்ரிஃபி திவான் என்பார் மீர்சாமனைவிட உயர்ந்தவர் என்பதும் நன்கு பெறப்படுகின்றன. இரண்டாவதாக, வக்கீ லுக்கு அடுத்தாற்போல் வருகிற ஒரே பெரிய அதிகாரி முஷ்ரிஃபி திவான் என்பதும் நன்கு தெரியவருகின்றது. அவரைப்பற்றி அபுல் ஃபாசல் கூறுகையில் அவரது பதவியானது, ''திவான் பதவியைவிடச் சற்றே உயர்ந்ததும் அதே சமயம் வக்கீல் பதவியைவிடச் சற்றே தாழ்ந்ததும் ஆகும்'' என்கின்றார். இந்த விளக்கமானது வஜீர் பதவிக்கும் பொருந்தக்கூடியது. எனவே, முஷ்ரிஃபி திவான் பதவியும் வஜீர் பதவியும் ஒன்றே என முடிவு கட்டலாம். வஜீர் என்பார் பேரரசின் திவான்களையும் அமீல்களை யும் இன்னும் பலரையும் கட்டுப்படுத்தி வந்தார். வக்கீல் பதவிக்கு உரிய பெரும் பொறுப்பும் அதிகாரமும் ஒரு சிலரிடத்து மட்டுமே காணப்பட்ட காரணத்தால், அப் பதவி அடிக்கடி காலியாய்க் கிடந்திருக்குமெனநம்ப இடமுண்டு. முற்றும் நம்பத் தகுந்தவரும், முழுமையான தகுதி பெற்றவருவான வக்கீல் ஒருவர் கிடைக்காதபோது முஷ்ரிஃபி திவான் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டார். வக்கீலினுடைய கடமைகளுள் மிகவும் கடினமானவற்றை மேற்கொள்ளவும், அதே சமயத்தில் திவானி குல் என்பவருக்கும் தமது உதவிக்கரத்தை நீட்டவுமே அவர்

[43] பக்ஷி ஜஸ் என்பது மாநில பக்ஷியைக் குறிக்கும்.

[44] Ain-i-Akbari, Vol. I, pp. 273-74.

[45] Ibid., Vol. I, p. 495. Foot Note.

நியமிக்கப்பட்டார். ஆட்சித்துறையின் சிவில் பகுதியை ஒட்டிய பொருளாதார விவகாரங்களைத் திவானி குல் என்பார் கண் காணித்தார். இராணுவ சம்பந்தமான பொருளாதாரக் காரியங் களை மீர்பக்ஷி என்பார் கவனித்துக்கொண்டார். வஜீர் அல்லது முஷ்ரிஃபி திவான் என்பார் வக்கீலுடைய கடமைகளை மேற் கொள்ளுமாறு வேண்டப்பட்டபொழுது மேற்சொன்ன இரண்டு விதமான பொருளாதாரக் காரியங்களையும் அவரே ஒருங்கு கண்காணித்தார்.

பேரரசின் திவான்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்ந்தவர் திவானி குல் எனும் அதிகாரியாவார். ஒவ்வொரு சுபாவுக்கும் ஒவ்வொரு மாநிலத் திவான் இருந்தார். எத்தனை சுபாக்கள் இருந்தனவோ அத்தனை மாநிலத் திவான்கள் இருந்தனர். அவர்கள் திவானி ஜுஸ் (Diwan-i-Juz) என அழைக்கப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை முதலில் பன்னிரண்டாக இருந்தது. பின்னர், அது பதினைந்தாக மாறியது. மேலும், ஒவ்வோர் அரசாங்கத் துறைக்கும் ஒவ்வொரு திவான் இருந்தார். பேரரசுத் தொழிலகங்களுக்கு ஒரு திவான்[46] இருந்ததாக நமக்குத் திட்ட வட்டமாய்த் தெரிகிறது. ஜாகீர்களின் கணக்கு வழக்குகளைத் திவானி ஜாகீர்[47] என்பவர் கவனித்து வந்தார். அகாதிகளுக் (Ahadis)கென்று[48] தனிப்பட்ட ஒரு திவான் இருந்தார். அதே போலப் பொது அற நிலையங்களுக்கு, அதாவது சயூர்கலுக்கு (Sayurghals) ஒரு திவானி சாதத்[49] (Diwan-i-Saadat) என்பவர் கணக்குகளைப் பார்த்துக்கொண்டார். இங்ஙனம், திவானி குல் என்பவருக்கு உட்பட்ட பல திவான்கள் இருந்தனர். அவர்களை யெல்லாம் அடக்கி ஆளுதல் என்பது அவருக்குப் பெரியதொரு காரியமாக இருந்தது. ஆகையால்தான் பேரரசில் இருந்த கருவூலங்களையெல்லாம் நிர்வகிக்கும் பொறுப்பு முஷ்ரிஃபி திவான் (Mushrif-i-Diwan) அல்லது வஜீர் என்பவருக்குத் தரப் பட்டது. பேரரசில் மொத்தம் பன்னிரண்டு கருவூலங்கள் (Treasuries) இருந்தன. அவற்றில் ரொக்கத் தொகைகளை வழங்குவதற்கென ஒன்பது கருவூலங்களும், விலையுயர்ந்த கற்கள், தங்கம், கல் பதிக்கப்பெற்ற நகைகள் ஆகியவற்றை வழங்கு வதற்கென மூன்று கருவூலங்களும் இருந்தன. இவற்றையெல் லாம் கண்காணிக்க வஜீர் என்னும் அதிகாரிக்கு இரண்டு துணை அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் கருவூலத்தின் முஷ்டாஃபி என்றும் முஷ்ரிஃப் என்றும் அழைக்கப்பட்டனர்.[50] வஜீர் என்

[46] Ibid., Vol. I.,p. 272.
[47] Ibid., p. 271.
[48] Ibid., p. 259.
[49] Ibid., Vol. I, p. 278.
[50] Ibid., author's preface to Vol. I, p. 6.

பவர் பேரரசுக் கருவூலங்களில் தலைமைக் கண்காணிப்பாளராக வும், முஷ்டாஃபி என்பவர் உதவித் தலைமைக் கண்காணிப்பாள ராகவும், முஷ்ரிஃப் என்பவர் அபுல் ஃபாசல் என்பார் கூறுகிறபடி அரண்மனைக் கருவூலத் தலைவராகவும் திகழ்ந்தார்.[51] கருவூலத் தின் தலைமைக் கண்காணிப்பாளர் அல்லது நிதியமைச்சர் என்ற முறையில் முஷ்ரிஃபி திவான் என்பார் இயல்பாகவே திவானி குல், மீர்பக்ஷி ஆகியோரைக் கட்டுப்படுத்தி வந்தார். அதோடு பேரரசு நாணய உற்பத்திச்சாலைகளின் தலைமைக் கண்காணிப் பாளராகவும் அவர் கருதப்பட்டார். ஏனெனில், இராஜா தோடர்மல், குலீஜ்கான் ஆகிய வஜீர்களின் காலத்தில் நாணயச் செலாவணியானது பல மாற்றங்களை அடைந்தது.[52]

(c) மீர் பக்ஷி :

மீர்பக்ஷி எனும் அதிகாரியைப் பொறுத்தவரை இர்வின் (Irvine) எனும் ஆசிரியர் பின்கண்ட கடமைகளை வரை யறுத்துக் கூறியுள்ளார். அவரது கூற்றின்படி, பட்டாளத்துக்கு ஆள்சேர்ப்பதும் ஒரு சில பதிவேடுகளை (Registers) வைத்துப் பாது காப்பதும், அதாவது நாட்டிலுள்ள உயர் அதிகாரிகளின் (மன்சப் தார்களின்) பெயர்கள் வரிசையாய் எழுதப்பட்ட பட்டியல், அரண்மனைக் காவலாளிகளின் பெயர்ப் பட்டியல், ஊதியம் வழங்கு பற்றிய விதிகள், ரொக்கமாக ஊதியம் வழங்கப்பட்ட அதிகாரி களின் பெயர்ப் பட்டியல் முதலியவற்றை வைத்துக் காத்தலும் அவரது முக்கியக் கடமையாகும். மேலும், முக்கியமான போர்க் களங்கள் அமைக்கப்பட்டபோது, அவற்றில் பல்வகையான தளபதிகளுக்கும் உரிய இடங்களை வகுத்துக் கொடுத்து, அவரவ ரது இடங்களில் அவரவரை நிறுத்தி வைத்தவர் அவரே. போர்க் களத்தின் முன்னும், பின்னும், பக்கவாட்டிலும் இன்னின்ன தளபதிகள் நிற்கவேண்டுமென்பதை அவரே தீர்மானித்தார். படையில் உட்கொள்ளப்பட்ட வீரர்களின் பட்டியலை அரசர் முன் படைக்க வேண்டுவதும் அவரது பொறுப்பாகும். படைத் தலைமை யைக்கூட அவரே ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அங்ஙனம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமன்று.''[53] ஒரே சமயத்தில் அவர் சம்பளப் பட்டுவாடா அதிகாரியாகவும் (Pay-Master) படை நிர்வாகத் தளபதியாகவும் (Adjutant General) விளங்கினர். இராணுவக் கணக்கு வழக்குகளைக் கண்காணித்த

[51] Ibid., Vol. I. p. 14.

[52] Ibid., pp. 32-39.

[53] Smith, op. cit., p. 358.

வரும் அவரே. ஸாஹிபி தௌஜி (Sahibi-Taujih) அல்லது இராணுவக் கணக்கர், பக்ஷிகள், உதவி பக்ஷிகள் அனைவரும் அவர்கீழ்ப் பணிபுரிந்தவர்களே.[54] மாநிலங்களில் பணிபுரிந்த பக்ஷி ஜுஸ் (Bakshi-Juz) எனும் அதிகாரிகளும் அவர்க்குக் கீழே பணிபுரிந்து வந்தவர்களேயாவர். அகாதிகள் (Ahadis) அல்லது இராணுவக் கனவான்கள், பேரரசுத் தொழிலகங்கள், படைத் துறைகள் ஆகிய பலவற்றுக்கும் தனிப்பட்ட ஒரு சம்பளப் பட்டுவாடா அதிகாரி அல்லது பக்ஷி இருந்தார். அக்பர் காலத்து மீர்பக்ஷிகளாகப் பணியாற்றியவர்கள் பதினன்கு பேர்களாவர். அவர்கள் குவாஜா ஜஹான் (Khwajah Jahan), சிஜிஸ்தான் நாட்டுக் குவாஜா தஹீர் (Khwajah Jahir of Sijistan), மௌலானா ஹபி பிஹ்ஸாடி (Maulana Habi Bihzadi), மாஷத் நாட்டு மௌலானா டார்விஷ் மகமத் (Maulana Darwish Muhammad of Mashad), கொராசான் நாட்டு மௌலானா இஷ்க்யு முஹிம் (Maulana Ishqu Muqim of Khorasan), பதக்ஷன் நாட்டுச் சுல்தான் மகமத் (Sultan Mahmud of Badakshan), லாஷ்கர் கான் (Lashkar Khan), ஷபாஸ் கான் (Shahbaz Khan), ராய் பர்க்கோடம் (Rai Purkhotam), ஷேக் ஃபரீதி புகாரி (Shaikh Faridi Bukhari), பாக்தாதைச் சேர்ந்த காஸி அலி (Qazi Ali of Bagdad), ஜாஃபர் பேக் அசாஃப் கான் (Jafar Beg Asaf Khan) குவாஜா நைஜாமுடீன் அகமத் (Khwajah Nizamuddin Ahmad), குவாஜாஹி ஃபத்துல்லா (Khwajahi Fathullah) என்போராவர். இந்தப் பதினன்கு மீர்பக்ஷிகளும் அக்பரது ஆட்சிக் காலமான ஐம்பது ஆண்டுகளில் நியமிக்கப்பட்டவர்கள். எனவே, சராசரி ஒவ்வொருவரின் பதவிக்காலமும் ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகளாகின்றன. இது மிகக் குறுகிய பதவிக்காலம் என்பதில் ஐயமில்லை. எனவே, அடிக்கடி வெவ்வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது. மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருந்து பணியாற்றும் அதிகாரிகள் குறுகிய காலத்துக்குமட்டுமே அப் பதவியில் நீடிக்கவிடப்படுவதென்பது திறமை, நாணயம் இரண்டும் கெடாமல் அவர்கள் நடந்துகொள்வதற்கு, உறுதுணையான நிபந்தனைகள் என்பதை நாம் அறிவோம். எனவே, அக்பர் கால மீர்பக்ஷிகளும் அங்ஙனமே நாணயங் கெடாமல் திறமையாகப் பணிபுரிந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. பொருள் பற்றிய கடமைகளைப் பொறுத்தவரை மீர் பக்ஷி, திவானி குல் ஆகிய இருவரும் ஒரே மாதிரியாகவே செயலாற்றினர். ஆனல், ஒரே ஒரு வேறுபாடுமட்டும் உண்டு: அதாவது, "இராணுவ சம்பந்தமான பணிகளுக்கு" ரொக்கமாகவும், ஜாகீராகவும் ஊதியம்

[54] Ain-i-Akbari, Vol. I, p. 271.

வழங்கும் கடமையை மீர்பக்ஷி மேற்கொண்ட காலை, இராணுவ சம்பந்தமல்லாத பணிகளுக்குச் சம்பளம் வழங்கும் கடமையைத் திவானி குல் கைக்கொண்டார். சான்றாக, "பேரரசின் யானைக் கொட்டில்கள், குதிரை லாயங்கள், பாரவண்டிகள், துறை முதலிய வற்றில் பணி புரிந்தோருக்கு"[55] வழங்கவேண்டிய ஊதியங்கள் அல்லது பேகம்கள், இளவரசர்கள் ஆகியோரின் சம்பளங்கள், திவானி சாதத் (Diwani Saadat) என்பாரின் கண்காணிப்புக்கு உட்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் அல்லது சயூர்கல் (Sayurghals) தொழிலகங்களில் பணிபுரிந்த சில அதிகாரிகளின் சம்பளங்கள் முதலியவற்றைக் கவனித்துக்கொண்டவர் திவானி குல் எனும் அதிகாரியேயாவார். அவருக்குத் துணை அதிகாரியாகப் பணியாற்றியவர் முஸ்டாஃபி (Mustaufi) எனப் பட்டார். அவரது மேலதிகாரியாக இருந்து அவரைக் கட்டுப் படுத்தியவர் முஷ்ரிஃபி திவான் அல்லது வஜீர் எனப்படுபவர். வஜீரே சிவில், இராணுவம் ஆகிய இரு துறைகளின் பொருள் பற்றிய காரியங்களுக்குத் தலைமை தாங்கியவர்; அதாவது நிதி அமைச்சராக விளங்கியவர். இங்கு நாம் குறிப்பிட வேண்டிய முக்கியமான உண்மை ஒன்றுளது. அக்பரது ஆட்சிமுறை முழுக்க முழுக்க இராணுவத் தன்மை பொருந்தியதன்று என்பதே அவ்வுண்மையாகும். அவரது ஆட்சி முறையை வர்ணிக்கும் ஆசிரியர்களில் சிலர் அது முழுமையும் இராணுவ அடிப்படையில் அமைந்தது எனக் கூறுவர். ஆனால், அவரது அரசாங்கத்தில் சிவில் துறை என்று ஒன்று தனியாக இருந்ததென்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். உண்மையில், அச் சிவில் துறையானது அரசாங்கத்தின் மிக முக்கியமான பகுதியாய் விளங்கியது. அதன் பொருளாதார விவகாரங்களைக் கண்காணிக்கவும், அதன் செயல்களை நெறிப்படுத்தவும் தனியே ஒரு நிறுவனம் அமைக்கப் பட்டிருந்தது. அதன் தலைவரே திவானி குல் என்பவராவர்.

(d) சதரே சதுர் (Sadr-i-Sadur):

திவானி குல் என்பவரைப்போன்று சதரே சதுர் என்பவரும் முற்றும் சிவில் தன்மை பொருந்திய ஒரு துறையின் தலைவராவர். அவருடைய கடமைகள் ஏராளமானவை. அதே சமயம் பலவகைப் பட்டவை. நிர்வாகத்துறைத் தலைவராயும், சமய ஒறுப்புத் தலைவராயும் (Grand Inquisitor), அறப்பணிகளின் கண் காணிப்பாளராயும், உயர் நீதிபதியாகவும், குத்பா படிப்ப வராகவும் இருந்து அவர் பல்வேறு பணிகளை ஆற்றி வந்தார். அரசரின் உடன் கூட்டத்தாரில் (Companion) ஒருவராக அவர்

[55] Ain-i-Akbari, Vol. I, p. 272.

மதிக்கப் பெற்றார். அக்பர் பட்டத்துக்கு வருமுன், பொதுவாக, சதரே சதுர் அல்லது சதரே ஜஹான் என அழைக்கப்பட்ட அவர், பெருமதிப்பும் செல்வாக்கும் உடையவராக விளங்கினார். ஏனெனில், முதலாவதாக, அவரே புதிதாகப் பட்டமெய்தும் ஒருவரது அரசுரிமையைச் சட்டபூர்வமாக ஆக்கியவர் (Legalized). இரண்டாவதாக, எல்லா அறப்பணிகளும் அவரது இசைவின் பேரிலேயே நடைபெற்றன. மதாதி மாஷ் எனப்பட்ட (Madad-i-Maash) நில மானியங்களும், வஜிஃபா (Wazifah) எனப்பட்ட ரொக்க மானியங்களும் நான்கு வகைப்பட்ட மனிதர்களுக்கு வழங்கப்பட்டன. "முதலாவதாகத் தத்துவ விசாரம் செய்பவர்களுக்கும், இரண்டாவதாகத் தந்நலம் துறந்து தவம் செய்து வந்தவர்களுக்கும், மக்கள் சகவாசத்தை அறவே வெறுத்துத் துறவுபூண்டவர்களுக்கும், மூன்றாவதாக ஏழைகளுக்கும் பலவீனர்களுக்கும், நான்காவதாகப் பெருங்குடியில் பிறந்தும் போதிய அறிவும், திறமையும் இன்மையால், தாமே உழைத்து ஒரு தொழில் செய்து சம்பாதிக்க இயலாதவர்களுக்கும்"[56] அவ்வுதவிப் பணமானது தரப்பட்டது. உதவிப் பணம் அல்லது நிலம் வழங்கப்படுமுன், அப் பணத்தையோ நிலத்தையோ வாங்குவதற்குரிய சூழ்நிலையில் ஒருவர் இருக்கிறாரா என்பதை, அறிவும் அநுபவமும் அதே சமயம் கருணையுள்ளமும் கொண்ட அதிகாரிகள் நன்கு விசாரித்தபின்பே அவை வழங்கப்பட்டன. "அப்படிப்பட்ட அதிகாரி சதர் என அழைக்கப்பட்டார். காஜியும், மீர் ஆதில் எனும் அதிகாரியும் சதருக்குக் கட்டுப்பட்டு அவருக்குக் கீழே பணி புரிந்தனர். அவருடைய முக்கியமான கடமைகளை எல்லாம் கவனித்துக்கொள்ளக் கணக்கர் ஒருவர் இருந்தார். பொருளாதார சம்பந்தமான காரியங்களை அவர் பார்த்துக்கொண்டார். இக்காலத்தே அவர் திவானி சதத் என அழைக்கப்படுகிறார்."[57] அவரே பேரரசின் நீதி பரிபாலனத் துறைக்குத் தலைவர். அத் துறையில் மாநிலச் சதர்களும், காஜிகளும் மீர் ஆதில்களும் இருந்தனர். நீதி வழங்குதல் என்பது ஆங்காங்கே நடைபெறுகின்ற ஓர் உள்ளூர் விவகாரமாக இருந்த காரணத்தால் அநேகமாக வழக்குகள் அரசரது உயர் நீதி மன்றத்திற்குப் போவதில்லை. எனவே, தலைமை மேல் முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவராக அவர் விளங்கவில்லை. நீதி மன்றங்களிடையே முறையான படித்தரம் எதுவும் காணப்படவில்லை. நாட்டின் இறுதி மேல் முறையீட்டு நீதி மன்றமாக விளங்கியவர் பேரரசரே ஆவர். எனவே, மாநிலச்

[56] Ibid; p. 278.
[57] Ibid. Vol. I, p. 278.

சதர்களைக் கண்காணிப்பதும் அறப்பணிகளுக்கான மானியங்களை வழங்குவதுமே சதரே சதுரின் முக்கியக் கடமைகளாக இருந்தன. மாநிலங்களில் இருந்து வரும் மேல் முறையீடுகளைக் கேட்கின்ற கடமை அவருக்கு அநேகமாக இல்லை என்றே கூறலாம். சமயத் துறையின் காவலராகவும், தலைவராகவும் அவர் திகழ்ந்தார். சமுதாயத்தின் அறநெறிகளைப் பாதுகாத்தவரும் புனிதக் குரானியச் சட்டங்களைப் பாதுகாத்தவரும் அவரே. அக்பரது காலத்தில் நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி இந்த அதிகாரியின் முக்கியத்துவம் பெரிதும் குறைந்தது. ஏனெனில், தலைமையான சதரின் கடமைகளை அக்பர் பல மாநிலச் சதர்களிடையே பிரித்துக் கொடுத்துவிட்டார். அபுல் ஃபாசல் என்பார் கூறுகிற படி, ''மேன்மைதங்கிய அரசர், மக்களுக்கு ஞானத்தைப் போதிக்கவும் அவர்களிடையே பக்தியை வளர்க்கவும் வேண்டி, குறிப்பிட்ட இந்தத் துறையில் பெரிதும் கவனம் செலுத்துகிறார். சுயநலம் சிறிதுமற்ற சதர்களையே அவர் வட்டார அதிகாரிகளாகவும், மாநில அதிகாரிகளாகவும் நியமிக்கிறார்.''[58] பேரரசில் பின்வரும் சதர்கள் பணியாற்றினர்: அன்னூர் மீர் ஃபதுல்லா (Mir Futhullah), ஷேக் காடய் (Sheik Gadai) குவாஜாஹி மகமத் சலீஹ் (Khwajahi Muhammed Salih), மௌலானா அப்துல் பாஹி (Maulana Abdul Baqi), ஷேக் அப்துன் நபி (Shaik Abdun Nabi), சுல்தான் குவாஜா (Sultan Khwajah), மீரான் சதர் ஜஹான் மஃப்டி (Miran Sadr Jahan Mufti) என்பவர்களாவர்.

(e) மீர் சாமன் (Mir Saman):

மீர் சாமன் என்பவர் பேரரசின் கிடங்குகளுக்கும் தொழிலகங்களுக்கும் தலைவராகப் பணியாற்றினார். அவருக்குக்கீழ்த் திவானி பியூதத் (Diwan-i- Buyutat), நாஸிரி புயூதத் (Nazir-i- Buyutat), கான் சலார் (Khwan Salar), மீர் பகவால் (Mir Bakawal) என்பவர்களும் இன்னும் சில அதிகாரிகளும் பணியாற்றினர். முதலில் கூறப்பட்ட இருவரும் பேரரசரால் நிர்வகிக்கப்பட்ட கிடங்குகளையும் தொழிலகங்களையும் கண்காணித்து வந்தனர். நாட்டில் அப்போது 'ஏறக்குறைய நூறு' பேரரசுக் கிடங்குகள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே பொருளாளர்கள்[59] (Treasurers) நியமிக்கப்பட்டிருந்தனர். தொழிலகங்கள், கிடங்குகள் ஆகியவற்றின் பொது மேற்பார்வையாளராகப் பணியாற்றியவர் நாஸிரி பியூதத் (Naziri Buyutat) என்பவராவர்.

[58] Ibid., p. 280.

[59] Ibid., p. 14.

அவற்றின் பொருளாதார விவகாரங்களைத் திவானி பியூதத் (Diwani Buyutat) எனும் அதிகாரி கவனித்துக்கொண்டார். ''பேரரசுத் தொழிலகங்களின் வரவு செலவுகளையும், தொழிலாளி களின் ஊதியங்கள், கை இருப்புகள் ஆகியவற்றையும் தானியம், புல் முதலியன வாங்கப்படுவதற்காக ரொக்கமாயும், பண்டங்களாயும் வழங்கப்பட்ட துணை ஊதியங்களையும் (allowances)''பற்றிய விவகாரங்களைத் திவானி பியூதத்[60] என்பார் கவனித்துக்கொண்டார். சமையற் கட்டின் தலைவரா யிருந்த மீர் பகவால் (Mir Bakawal) என்பவரோடு அவரும் சேர்ந்துகொண்டு, பேரரசுச் சமையற்கட்டுக்கு மூன்று மாதங் களுக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்து வைப்பது வழக்கம். சமையல் துறையின் கண்காணிப்பாளராக விளங்கி யவர் குவான்சலார் (Khwansalar) என்பவராவர். அவர் கானி சாமன் (Khan-i-Saman) என்பவருக்குக் கட்டுப்பட்டவர். பேரரசின் போர்கருவிக் கிடங்கில் இருந்த போர்க்கருவிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள் முதலியனவும் அவரது கண்காணிப் பிலேயே இருந்தன. இவற்றையெல்லாம் உற்பத்தி செய்த பேரரசுத் தொழிலகங்களும் கானி சாமனின் கட்டுப்பாட்டுக் குள்ளேயே இருந்தன.

(f) மீர் அர்ஸ் (Mir Arz):

மீர் அர்ஸ் என்பார் அரண்மனை சம்பந்தமான பல்வேறு அலுவல்களையும் மேற்கொண் டிருந்தார். அவர் அரசரது நம்பிக் கைக்குப் பாத்திரமான ஒரு மன்சப்தார் ஆவார். ''அரசவை சம்பந்தமான பல்வேறு சடங்குகளையும் நன்கு அறிந்திருந்த ஒருவரே மீர் அர்ஸாக நியமிக்கப்படுகிறார்.''[61] அரசரது கட்டளைகள் யாவும் மீர் அர்ஸ் மூலமாகவும், அரண்மனைக் காவலர் தலைவரின்மூலமாகவுமே வெளியிடப்படுகின்றன. இவ் விருவரும் ''இரவிலும் பகலிலும் எப்போதும் அரண்மனையில் இருந்துகொண்டு அரசரால் இடப்படும் கட்டளைகளுக்காகக் காத்துக் கிடப்பர்''[62] வாகியாநவிஸ் (Wakianawis) என்ற அதிகாரியின் துறையைச் சேர்ந்தோர் அரசவையின் அன்றாட நடவடிக்கைகளைக் குறித்து வைத்து வெளியிடும்போது அவற்றைச் சரி பார்த்துச் சான்று பகர வேண்டியவரும் அவரே.[63] அப்படி அவர் நற்சான்று பகர்ந்த பின்னரே அக் குறிப்புகள் அரசருடைய

[60] Ibid., p. 262.

[61] Ibid., p. 267.

[62] Ibid.

[63] Ibid., p. 269.

ஒப்புதலைப் பெறுதற்காக அவருடைய முன்னிலையில் சமர்ப்பிக்கப் படும்.

(g) மீர் முன்ஷி (Mir Munshi):

பேரரசரின் அந்தரங்கக் காரியதரிசியாக (Private Secretary) விளங்கியவர் மீர் முன்ஷி என்பவராவர். பேரரசரின் கடிதப் போக்குவரத்துகள் அனைத்தையும் அவரே கவனித்துக்கொண் டார். பொதுக் காரியங்கள்பற்றியும், வெளிநாட்டு உறவுபற்றிய இராஜதந்திர காரியங்கள்பற்றியும் எழுதப்பட்ட கடிதங்கள் அனைத்துக்கும் அவரே பொறுப்பாளியாவர். இலக்கியச் சுவை யோடு கூடிய உரைநடை வரைவதில் அவர் வல்லுநராயிருந்த தோடு, கையெழுத்துக் கலையிலும் அவர் திறமிக்கு விளங்கினர். சான்ருக, மகமது ஆஷ்கார் (Muhammad Asghar) என்ற கையெழுத்துக் கலைஞர் ஹுமாயூனின் அரசவையில் மீர் முன்ஷியா யிருந்ததோடு, பின்னர் அக்பரின் மீர் முன்ஷியாகவும் திகழ்ந்தார்.[64] அக்பரின் காலத்தே மிகச் செல்வாக்குடன் விளங்கியவரும் ஒப்பற்ற திறமையுடனும் விளங்கியவருமான அபுல் ஃபாசல் என்பார் அந்தரங்கக் காரியதரிசியாக விளங்கினர். அக்பருக்கு அவரிடத்தில் ஏராளமான நம்பிக்கையிருந்தது. அவருடைய படிப்பிற்காகவும் அவருடைய திறமைகளுக்காகவும் அக்பர் அவரிடத்தில் பெருமதிப்பு வைத்திருந்தார். அக்பர் அவர் காலத்திய ஆசிய மன்னர்களோடு கடிதப் போக்குவரத்துக் கொண்டு இருந்தது அபுல் ஃபாசலின் உதவியாலேயாகும். பாரசீக மன்னரான ஷாவோடும் அல்லது மத்திய ஆசிய மன்னரான அப்துல்லாகான் உஸ்பெக் என்பவரோடும் அவர் நடத்திய கடிதப் போக்குவரத்துக்கள் யாவும் அபுல் ஃபாசல் என்ற அவரது அந்த ரங்கக் காரியதரிசியால் தயாரிக்கப்பட்டவையே யாகும். இரகசிய ஆலோசனைகளை மன்னர் நடத்தியபோதெல்லாம் அவர் அபுல் ஃபாசலையும் வேறு சில நம்பிக்கைக்குகந்த நபர்களையுமே உடன் வைத்துக்கொண்டு விவாதிப்பது வழக்கம்.

(h) அஹ்டா பேஹி (Akhtabegi):

இவர்களேயன்றி, அரசரைச் சுற்றியும் இருந்து பல கடமை களை மேற்கொண்டு வந்த உயர் அதிகாரிகள் வேறு சிலரும் இருந் தனர். அவர்களுள் ஒருவர் அஹ்டாபேஹி என்பவராவர். அவர் பேரரசின் குதிரை லாயங்களைக் கவனித்து வந்தார். குதிரைகள் என்ருல் அக்பருக்குக் கொள்ளை ஆசை எனவும், "அரசாங்கத்தின்

[64] Ibid., p. 101.

முப்பிரிவுகளிலும், வெளிநாட்டுப் படையெடுப்புகளிலும் பெரிதும் இன்றியமையாதனவாய் விளங்குபவை குதிரைகளே என அவர் நம்பியதே அதற்குக் காரணமெனவும்'' அபுல் ஃபாசல் குறிப்பிடு கின்றார். பேரரசுக்குச் சொந்தமான குதிரை லாயங்களில் ஒரு சமயம் பன்னிரண்டாயிரம் குதிரைகள் இருந்தன.[65] தரைப் படையைப் பொறுத்தவரை குதிரைப்படையானது எவ்வளவு முக்கியமானதென்பதை உணர்ந்திருந்த அக்பர் அவற்றைப் பேணுவதில் பெரிதும் அக்கறை காட்டினார். ''அரசாங்கத்துக்குச் சொந்தமான குதிரைகள் அனைத்தையும் கட்டிக்காத்தவர் அட்பெஹி என்ற அதிகாரி ஆவார். குதிரைப் படையைப் புரந்து வந்த எல்லா அதிகாரிகளும் அவருடைய ஆணைக்குக் கட்டுப் பட்டவர்களே. அவர் நாட்டின் மிக உயர்ந்த அதிகாரிகளுள் ஒருவராயிருந்தார். சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்த பெருங் கனவான்கள்மட்டுமே அப் பதவியை வகிக்கமுடியும். தற்போது அப் பதவியில் வீற்றிருப்பவர் கான் கானன் (Khan Khanan) என்ற உயர் அதிகாரியே யாவார்.''[66] அவருடைய ஆணைக்குட்பட்டு ஏராளமான அதிகாரிகளும் ஊழியர்களும் தொழில் புரிந்துவந்தனர். அவர்கள் யாவரும் சேர்ந்து பெரிய தொரு நிறுவனமாக விளங்கினர். உயர்வான மன்சப்தாரிகள் பலரும், முஷ்ரிஃபுகளும் (Mushrifs), கண்காணிப்பாளர்களும், குதிரை மருத்துவர்களும், சேணத் தொழிலக நிர்வாகிகளும், குதிரைகளைப் பிடிப்போர், அவற்றைப் பழக்குவோர், அவற்றைப் பேணுவோர் ஆகியோரும் அடங்கியதாய் அந் நிறுவனம் விளங் கிற்று.

குர்பேகியும் மீர் மலும் (Qurbegi and Mir Mal) :

பேரரசின் விருந்துகளை ஏந்திச் சென்றவர் குர்பேகி எனப் பட்டார். பேரரசரின் சொந்தப் பணத்தை நிர்வகித்து வந்தவர் மீர் மல் எனப்பட்டார். அவருடைய கடமைகள் என்ன என்பதை நிச்சயமாகவோ துல்லியமாகவோ சொல்ல இயலாது. ஏனெனில், அதுசார்பான தகவல்கள் பல நன்கு அகப்படவில்லை. அபுல் ஃபாசல் என்பார் பின்வருமாறு கூறியுள்ளது ஒருவேளை மீர் மலைப்பற்றியே இருக்கக் கூடுமெனத் தெரிகிறது. அதாவது, ''மேன்மை தங்கிய அரசர் ஏராளமான பணத்தைத் தம் பிரபு ஒருவரது பொறுப்பில் விட்டிருக்கிறார். அதில் ஒரு பகுதியைப் பணப் பையில் போட்டு அவர் தூக்கிக்கொண்டு அரசருடன்

[65] Ibid., p. 140.

[66] Ibid., p. 145. கான் கானனாய் இருந்தவர் பைராம் கானின் மகனான அப்துல் ரஹீம் என்பவராவர்.

செல்கிறுர்.'' அவரைப்பற்றி மேலும் சொல்லப்படுவதாவது: ''பொதுமக்களுக்குப் பேட்டி அளிக்கப்படும் பட்டி மண்டபத்தில் (Audience Hall) வறியோர்க்கு வழங்குவதற்கென ஒரு குறிப்பிட்ட அளவு தங்க நாணயங்களேயும் வெள்ளி நாணயங்களேயும் அவர் வைத்துள்ளார்.'' மேலும், பேரரசரின் ஆணையின்படி அவர் அரண்மனையில் எப்போது பார்த்தாலும் ஒரு கோடி டாம் நாணயங்களேத் தயாராக வைத்திருந்தார்.[67]

அரசின் பல்வேறு துறைகளின் செயல்முறை

பேரரசு அரசாங்கத்தின் சில முக்கியமான அதிகாரிகளின் அலுவல்களேப்பற்றி நாம் இதுகாறும் சுருக்கமாக ஆராய்ந்தோம். இனி அரசின் சில முக்கியமான துறைகள் எவ்வாறு செயல்பட்டன என்பதை விளக்க முற்படுவோமாக:

(a) பேரரசின் கருவூலம் (Imperial Treasury):

ஆட்சித் துறைகளுள் முதலாவதாக வைத்து எண்ணப்படத் தக்கது கருவூலமாகும். அக்பரது இளமைக் காலத்தே அதை இடிமட் கான் (Itimad Khan) எனும் திறமைமிக்க அதிகாரி நிர்வகித்து வந்தார். கருவூலத்தின் தளபதியாக விளங்கிய அவர் நன்மை பயக்கும் பல விதிமுறைகளேக் கொணர்ந்து, அவற்றின் மூலம் பொருளாதாரத் துறையைப் பலவகையிலும் செப்பனிட்டார். பேரரசின் கருவூலத்துக்கு வாரம் (Rent) செலுத்தி வந்த நிலங்களும், ஜாகீர் நிலங்களும் தனித்தனியே பிரிக்கப்பட்டன. நாணயமும் உற்சாகமும் மிக்க கரோரிகள் (Karoris) என்ற அதிகாரிகள் வரி வசூல் செய்வதற்கென நியமிக்கப்பட்டனர். வரி திரட்டுதல் அதைப் பேரரசுக் கருவூலத்தில் சேர்ப்பித்தல் இவைபற்றிய விதிகள் பல இருந்தன.' அவை வருமாறு: ''கருவூலக் காப்பாளர் (Treasurer - மாநில அதிகாரி) ஒருவர், இரண்டு லட்சம் டாம்கள் திரட்டிய உடனே அதை அவர் அரசவையைச் சார்ந்த கருவூலத் தளபதிக்கு அனுப்பி விடவேண்டும். திரட்டப்பட்ட தொகை எத்தன்மையது என்பதை அவர் குறிப்பிட்டு, அக் குறிப்பையும் அவர் பணத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். பேஷ்குஷ் (Peshkush) வரவுகளே (கப்பப்பணம்) வாங்கித் திரட்டத் தனிப்பட்ட கருவூலக் காப்பாளர் ஒருவர் இருந்தார். அதே போன்று நஸர் (Nazar) வரவுகளேச் (சன்மானங்கள்) சேகரிக்கவும், பிள்ளேயில்லாச் சொத்துக்களே அரசாங்கத்திடம் சேர்ப்பிக்கவும், அரசரைத் துலாபாரம் செய்விப்பதால்

[67] Ibid., p. 14.

ஏற்படும் செலவுகளையும், தர்ம கைங்கரியங்களுக்காக ஏற்படும் செலவுகளை மேற்கொள்ளவும் தனித்தனியே கருவூலக் காப்பாளர்கள் நியயிக்கப்பட் டிருந்தனர். அவற்றை யெல்லாம் செவ்வையான முறையில் பிரித்து வழங்குவதற்கும் தக்க கட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மேற் பார்வையாளர் களும், தரோகாக்களும் (Darogas), சிப்பந்திகளும் (Clerks) நல்ல நாணயமுள்ளவர்களாகப் பார்த்தே நியமிக்கப்பட்டனர். ஒவ் வொரு துறைக்கும் ஆண்டொன்றுக்கு ஆகக்கூடிய செலவுத் தொகையானது பொதுக் கருவூலத்தில், அவ்வத்துறைக்குரிய ஒவ்வொரு பொருள்காப்பாளரிடம் கட்டப்பட்டது. பொருளை வழங்கப்போகும் பொருள் காப்பாளர்களிடம் சரியான பற்றுச் சீட்டுகள் (Receipts) வழங்கப்பட்டன.''[68] பேரரசின் கருவூலத் தில் பன்னிரண்டு பிரிவுகள் அடங்கியிருந்தன, அவற்றில் ஒன்பது ரொக்கத் தொகைகளைத் திரட்டி வழங்கி வந்தன. விலையுயர்ந்த கற்கள், தங்கம், கல் வைத்த நகைகள் ஆகியவற்றைத் திரட்டவும் வழங்கவும் தனியே வேறு மூன்று கருவூலங்கள் இருந்தன. பேரரசுத் தொழிலகம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே பொருட் காப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தினந்தோறும், மாத வாரியாகவும், காலாண்டு வாரியாகவும், ஆண்டு வாரியாகவும் ஏற்படுகின்ற வரவு செலவுக் கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்வதும், கரிவூலக் காப்புத் தலைவரிடம் அக் கணக்குகளை ஒப்புவிப்பதும் அவருடைய கடமைகளாகும்.[69]

(b) பேரரசின் நாணயச் சாலை (Imperial Mint):

பேரரசின் கருவூலத்துக்கு அடுத்தாற்போல் முக்கியமாக வைத்து எண்ணப்படத் தக்கது பேரரசின் நாணயச் சாலையாகும். அது பல கலைநுட்பங்கள் செறிந்ததொரு துறையாக விளங்கிற்று. நம்பிக்கைக்குப் ப்ாத்திரமான அதிகாரிகளே அதில் நியமிக்கப் பட்டிருந்தனர். நாணய அச்சீட்டுக் கலையில் வல்லுநர்களா யிருந்த தொழிலாளிகளே அதில் வேலை பார்த்தனர். பேரரசு அனைத்திலுமாக ஏராளமான நாணயச் சாலைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் தக்க அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழ் நன்கு தொழிற்பட்டு வந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்த நாணயச்சாலைகளை அம்மாநிலச் சுபேதார்களே கண்காணித்து வந் தனர். அவற்றின் இறுதியான தலைவராய் விளங்கியவர் தலைநகரி லிருந்த திவானிமுஷ்ரிஃப்(Diwan-i-Mushrif) அல்லது வஜீர் (Wazir) என்பவராவர். அபுல் ஃபாசல் என்பாரின் கூற்றுப்படி தங்க

[68] Ibid.

[69] Ibid., p. 14.

நாணயங்கள் பேரரசில் நான்கு இடங்களில்மட்டுமே, அதாவது தலைநகர், வங்காளம், அகமதாபாத், காபூல் ஆகிய இடங்களில் மட்டுமே அச்சிடப்பட்டன. வெள்ளி நாணயங்களும், செப்பு நாணயங்களுங்கூட அவ்விடங்களில் அச்சிடப்பட்டன. அதோடு, அவை வேறு பத்து இடங்களிலும் அச்சிடப்பட்டன. அதாவது, அலகாபாத், ஆக்ரா, உஜ்ஜயினி, சூரத், டில்லி, பாட்னு, காஷ்மீர், லாகூர், முல்தான், தண்டா ஆகிய இடங்களில் அவை அச்சிடப் பெற்றன. செப்பு நாணயங்கள்மட்டுமே அச்சிடப் பெற்ற நகரங்கள் இருபத்தெட்டாகும். அவையாவன: ஆஜ்மீர், அயோத்தி, அடாக், ஆள்வார், பதோன், பெனுரஸ், பக்கார், பாஹ்ரா, படான், ஜான்பூர், ஜலந்தர், ஹரித்துவாரம், ஹிஸார், ஃபிராஸா, கல்பி, குவாலியர், கோரக்பூர், காலனுர், லக்னே, மாண்டு, நாகோர், ஸர்ஹிண்ட், சியால்கோட், சரோன்ஜ், சாரங்கபூர், சாம்பல், கன்னேஜி, ரான்தம்பூர்[70] என்பன வாகும். இந்தப் பட்டியல் அவ்வளவு சரியானதென்று கருதற் கிடமில்லை. ஏனெனில், அக்பர் மரணத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் அது தயாரிக்கப்பட்டது. எனினும், நாணயச்சாலைகள் பேரரசில் எங்கெங்கு அமைந்திருந்தன என்பதைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்வதற்கு அது துணைபுரிகிறது.

நாணயச்சாலையின் அமைப்பைப் பொறுத்தவரையில் அஃது ஒரு தரோகாவின் (Darogah) தலைமையில் இயங்கி வந்தது. அதுபற்றிய முழுப் பொறுப்பையும் அவரே மேற்கொண்டு அதை நடத்தி வந்தார். அவருக்குக் கீழ்ச் சராஃபி (Sarafi) என்ற அதிகாரி பணிபுரிந்து வந்தார். நாணயங்கள் எந்த அளவுக்குத் தூய்மையா யிருக்கவேண்டுமென்பதை அவர் தீர்மானித்தார். தொழிலாளிகளைக் கண்காணிக்கும் பொறுப்பை அமீன் (Amin) என்ற அதிகாரி மேற்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. "தரோகாவுக்கும், ஏனைய தொழிலாளிகளுக்கும் அவர் துணையாயிருக்கிருர். எது நியாயமோ அதை அவர் நிலைநாட்டு கிருர். சண்டை சச்சரவுகளை அவரே தீர்த்து வைக்கிருர்." அன்ருடச் செலவுகளைக் கணக்கெழுதி வைத்தவர், முஷ்ரிஃப் எனும் அதிகாரியாவார். முறையாக அவர் நாட் குறிப்பு எழுதி வந்தார். கருவூலக் காப்பாளர் "இலாபங்களை எல்லாம் நன்கு கவனித்து வந்தார். அவரது நடத்தையில் நேர்மை மிளிர்ந்தது." நாணயச்சாலை அலுவல்களை மேற்பார்வையிட்டவர்கள் இந்த அதிகாரிகளேயாவர். ஏனையோரெல்லாம் உண்மையில் தொழி லாளிகளே. அவர்கள் நாணய அச்சீட்டுப் பணியின் வெவ்வேறு கட்டங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். எடை போடுவோன்

[70]Ibid., pp. 32-33.

(Weighman) உலோகக் கலவையை (Ore) உருக்குவோன், உலோகத் தகடுகளை உருட்டுவோன், சுத்திகரிக்கப்பட்ட உலோகத்தை உருக்குவோன், தங்கம், வெள்ளி, செம்பு உலோகக் கட்டிகளை அச்சிடப்பட்ட நாணயங்களின் அளவுக்கேற்ப வெட்டித் தரும் ஜரபுகள் (Zarrab), நாணயங்களில் எழுத்துப் பொறிப்பவர், வட்டமான நாணயங்களை இரு வார்ப்புருக்களுக்கு (Dies) இடையில் வைத்துச் சம்மட்டிகளின் துணைகொண்டு இரு புறங்களிலும் அச்சுப் பதிப்பவரான சிக்காச்சி (Sikkachi) போன்ற பல தொழிலாளிகள் நாணயச்சாலையில் பணி புரிந்தனர்.[71] எடையிலும், தூய்மையிலும் வேறுபட்ட பல்வேறு வகையான நாணயங்கள் இருந்தன.

(c) பேரரசுக் குடும்பம் (Imperial Household) :

அடுத்தபடியாக நம்மால் கருதத்தக்கது பேரரசின் குடும்பமாகும். அக் குடும்பம் வாழ்ந்த இடம் ஒரு சிறு நகரமென விளங்கிற்று. அதில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தொழில் புரிந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியே ஒவ்வொரு துறைக்குத் தலைமைப் பூண்டு விளங்கினர். ஒவ்வொரு துறையும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப் பிரிவுகளை நிர்வகித்த சிப்பந்திகளின் கடமைகள் நன்கு வரையறுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் சொந்தமாகப் பல பெண் தரோகாக்களும், மேற்பார்வையாளர்களும் சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் யாவரும் சேர்ந்த நிறுவனமானது பேரரசின் ஒரு தனிப்பட்ட துறையாக விளங்கிற்று. அதில் யாவும் ஓர் ஒழுங்குமுறைப்படி அமைந்திருந்தன; மிக உயர்ந்த பதவியிலிருந்த பெண்களின் ஊதியங்கள் 1028 ரூபாய்கள் முதல் 1610 ரூபாய்கள் வரை சென்றன. சாதாரண ஊழியர்களின் சம்பளங்கள் 20 ரூபாய்கள் முதல் 51 ரூபாய்கள் வரையும், சிலசமயம் இரண்டிலிருந்து நாற்பதுரூபாய்கள்வரையும் சென்றன. ''மிகத் திறமையும் உற்சாகமும் நிறைந்த எழுத்தர் (Writer) ஒருவர்'' அந்தப்புரச் செலவுகளைக் கண்காணித்து வருகிறார். ரொக்கத் தொகைபற்றியும் பண்டகசாலை இருப்புப் பொருள்கள்பற்றியும் அவர் முறையாகக் கணக்கு வைத்திருந்தார். பெண்டிர்களின் மனுக்களைப் பரிசீலனை செய்து அவர்களுக்குத் தேவையான பணத்தை வழங்குவதற்காகத் தஃபில்தார்களும் (Tahbildars - ரொக்கப் பொருள்காப்பாளர்கள்) துணைத் தஃபில்தார்களும், பொதுக் கருவூலக் காப்பாளர் ஒருவரும் இருந்தனர். அந்தப்புர நிர்வாகத்தின் வெவ்வேறு கட்டங்களில் பங்கு பெற்ற

[71] Ibid., p. 20-22.

பல அமைச்சர்கள் இருந்தனர். ஆனால், நிர்வாக இறுதி அதிகாரமானது வக்கீல் (Vakil) அல்லது மன்னரிடமே பொதிந்திருந்தது. ''அந்தப்புரத்தின் உட்பகுதியானது அடக்கமான, அதே சமயம் சுறுசுறுப்பு வாய்ந்த மடந்தையரால் காக்கப்பட்டு வருகிறது. அவர்களில் பெரிதும் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் மேன்மை தங்கிய அரசரின் அறைகளைச் சுற்றியும் காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். வேலியடைப்புக்கும் வெளியே அலிகள் காவலாளிகளாக அமர்த்தப்பட்டுள்ளனர். சரியான தூரத்துக்கப்பால் விசுவாசமிக்க இராஜபுத்திரக் காவலர்கள் பணி புரிகின்றனர். அவர்களுக்கும் அப்பால் வாயிற்காப்போர் நின்றிருந்தனர்.[72]

(d) பேரரசுப் படை (Imperial Army):

நாட்டிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், பயன் மிக்கதும், அதே சமயம் மிகச் செலவு பிடிப்பதுமாயிருந்த துறை படைத்துறையே எனலாம். அது பல கிளைகளாகப் பிரிந்து அரசாங்கப் பொறி அனைத்திலுமாகப் பரவிக்கிடந்தது. அதோடு தொடர்பு கொண்டிருந்த துறைகள் பலப்பல. அவையாவும் அதற்குத் துணைத் துறைகளாகவோ அன்றி அதற்கு ஆள் திரட்டித்தரக்கூடிய துறைகளாகவோ அமைந்திருந்தன. பேரரசுப் பண்டகசாலைகள், குதிரைக் கொட்டில்கள், ஆட்களையும் மிருகங்களையும் திரட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்த துறைகள், குதிரைகளுக்குச் சூடுபோடுவதைக் கண்காணித்த துறை, மன்சப்தார்கள், அகாதிகள் (Ahadis) போன்ற அதிகாரிகளுக்கு ஊதியம் வழங்குதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நிறுவனங்கள் இவை யாவும் ஒன்றுக்கொன்று சங்கிலிபோல் பிணைக்கப்பட்டுப் படைத்துறையாக அமைந்திருந்தன. அபுல் ஃபாசல் என்பார் படையைப்பற்றி விவரிக்கும்போது தொடக்கத்தில் கூறுவதாவது: ''மேன்மை தங்கிய அரசர், பேரரசுப் படையினைத் தமது ஒப்பற்ற அறிவுரை கொண்டும், ஆலோசனையைக் கொண்டும் வழி நடத்தி வருகிறார். தமக்குக் கீழ்ப்படியாதவர்களை அவர் பலவகையிலும் கட்டுப்படுத்திவருகிறார்.''[73]

படைதனில் மூன்று பிரிவுகள் இருந்தன. நாட்டிலுள்ள ஜமீன்தார்களால், அரசரின் கட்டளைகளுக்கிணங்க அவ்வப்போது அனுப்பப்பட்ட படைவீரர்கள் ஒருவகையினராவர். அவர்களை முறையாகத் திரட்டப்படாத நிலையற்ற படையினர் (Irregulars)

[72]Ibid., p. 241.
[73]Ibid., p. 241.

எனலாம். அடுத்தாற்போல் ஒரு வகையான நிலப்படை என நம்மால் கருதப்படக்கூடிய குதிரைப் படையினர் இருந்தனர். ''அவர்கள் தங்கள் குதிரைகளின்மீது பேரரசுச் சின்னத்தைப் பொறிக்கும்படி அல்லது சூடு போடும்படி அரசரால் வற்புறுத்தப் பட்டனர். அவர்கள் ஒன்று திரட்டப்படவும், பல தரங்களாகப் பிரிக்கப்படவும் த்க்கவர்கள்: நிலப் படையின் இன்னொரு பகுதியில் அகாதிகள் என்ற போர் வீரர்களும், ''வரிவசூல் செய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராவர்திகளும் (Barawardi) அடங்கி இருந்தனர். படையின் மூன்றாவது பகுதி காலாட் படையை உட்கொண்டிருந்தது. அப் படையில் பல்வேறு வகைகள் காணப்பட்டன. குதிரைப் படையைப் போன்று அவையும் ஒருவகையான நிலப்படையாய் விளங்கின.

மன்சப்தாரி முறை

படையின் பெரும்பகுதியானது குதிரை வீரர்களையே உட் கொண்டிருந்தது. ஏனெனில், காலாட்படையைவிடக் குதிரைப் படையையே பெரிதும் சார்ந்து நிற்கும் வழக்கம், மொகலாய ரிடையே பெரிதும் காணப்பட்டது. குதிரைகளைச் சூடு போடு வதில் அவர்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியையும் கவனத்தையும் நாம் பார்க்கும்போது இம் முடிவு உண்மையே என்பது மேலும் வற்புறுத்தப்படுகின்றது. மன்சப்தாரி முறை முழுவதுமே உண்மையில் குதிரைப்படைத் தளபதிகளின் வெவ்வேறு படித்தரங்களைக் காட்டுகின்ற ஒரு முறையேயன்றி வேறு அன்று. அந்த ஒரு மன்சப்தாரும் குதிரைப்படையையன்றிக் காலாட்படையை வைத்திருக்கவில்லை. கொள்கையளவில் அறுபத்து ஆறும்[74] உண்மையில் முப்பத்துமூன்றுமாய் மன்சப்தாரி முறையில் பல படித்தரங்கள் இருந்தன.[75] இவர்களுள் அரச பரம்பரையைச் சேர்ந்த மூன்று இளவரசர்கள் மிக உயர்ந்த பதவியைப் பெற்றிருந்தனர். அவர்கள் 7,000 முதல் 10,000 குதிரைகளின் அதிபதிகளாகக் கருதப்பட்டனர். எஞ்சிய முப்பத்துமூன்று பதவிகளை ஏனையோர் வகித்து வந்தனர். அவர்கள் முறையே: 5,000, 4,500, 4,000, 3,500, 3,000, 2,500, 2,000, 1,500, 1,250, 1,000, 900, 800, 700, 600, 500, 400, 350, 300, 250, 200, 150, 120, 100, 80, 60, 50, 40, 30, 20, 10 குதிரைகளின் அதிபதிகளாகக் கருதப்பட்டனர். இவ்வதிபதிகள் அவரவர்க்குரிய குதிரைகளை, எண்ணிக்கைப்

---

[74] Ibid., p. 249.

[75] Ibid., pp. 320-587.

பதிவுக் காலங்களில் நேரில் கொண்டுவரும்படி வற்புறுத்தப் பட்டனர். அங்ஙனம் கொண்டுவரப்பட்ட குதிரைகளுக்குச் சூடு போட்டனர். அச் சூட்டின்மூலம் குதிரைகளின் உடல்களில் அரசாங்கச் சின்னம் பொறிக்கப்பட்டது. ஏற்கெனவே அவை சூடு போடப்பட்டிருந்தால் அதன்மூலம் ஏற்பட்டிருந்த சின் னங்கள் பரிசீலனை செய்யப்பட்டுச் சரிபார்க்கப்பட்டன. எல்லா மனிதர்கள், மிருகங்கள்பற்றிய விவரங்களும் அடங்கிய விவரப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது.

வேலை நியமனம், சம்பளப் பட்டுவாடா இவைபற்றிய விதிகள்

இத்தகைய தளபதிப் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டு மானால் அதற்கு ஒரு நிபந்தனை அல்லது விதி உண்டு: ''ஒவ்வோர் அமீரும் முதலில் இருபது குதிரைகளின் அதிபதிகளாகவே (Bisti) தொடங்கவேண்டும். அவர்கள் எச்சமயத்தும் தங்கள் ஆட் களோடு குதிரைமீது ஏறிப் போர்புரியத் தயாராய் இருக்க வேண்டும். கட்டளையிடப்பட்டதற்கேற்பவே அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். முறைப்படி அவர் இருபது குதிரை வீரர் களோடு குறித்த காலத்தில் அரசர்முன் தோன்றுவாரேயானால், அக் குதிரைகள் சூடு போடப்படுவதோடு அவர்கள் பதவியும் உயரும். நூறு அல்லது அதற்கு மேற்பட்ட குதிரைகளின் தளபதியாக அல்லது ஸாதியாக (Sadi) நியமிக்கப்படுவார். மன்சப்புகளின் தரத்துக்குத் தக்கபடி ஒவ்வொருவரும் யானைகளை யும், குதிரைகளையும், ஒட்டகங்களையும் வைத்துப் பராமரித்தல் வேண்டும். அவர்கள் பராமரித்து வரும் மிருகங்களின் எண்ணிக்கையைப் பதிவு செய்யும் நாள் வரும்போது அவர்கள் தங்களுடைய புதிய படையை முழுவதுமாகக் கொண்டுவரக் கூடுமானால் அவர்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். அவரவரின் திறமைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப ஹஸாரியாகவோ (Hazari) தோஹஸாரியாகவோ (Duhazari), அன்றி மன்சப் பதவிகளிலெல்லாம் மிக உயர்ந்த பஞ்சஹஸாரியாகவோ நியமிக்கப்படக்கூடும். கணக்குப் பதிவு நடைபெறும் காலங் களில் சரியான எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்களை அரசரிடம் காண்பிக்க முடியாதவர்கள் அவர்களுடைய பதவியினின்றும் கீழிறக்கப்பட்டார்கள்.''[76] இத்தகைய பல கட்டுத் திட்டங்கள் இருந்தபோதும் மன்சப்தார்கள் அரசாங்கத்தை ஏமாற்றி வந்தார்கள். ''தங்களுடைய சொந்த வேலையாட்களையும்,

[76] Badaoni, Vol II, p. 190.

குதிரைச் சேவகர்களையும் போர் வீரர்களுடைய உடையில் தோன்றும்படி செய்து கணக்கெடுப்புக் காலங்களில் அவர்கள் அரசரை ஏமாற்றுவது வழக்கம்.''[77] அவர்கள் தம்தம் ஜாகீர்களுக்குத் திரும்பிப் போனவுடன் குதிரைச் சேவகர்கள் அவரவர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இந்தக் குறைகளை நீக்க அக்பர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். ''குதிரைகள் ஒவ்வொன்றும் கட்டாயமாகச் சூடு போடப்பட வேண்டுமென வற்புறுத்தினர். மேலும், குதிரைகளின்மீது குறிக்கப்பெற்ற சின்னங்களின் விவரங்கள் அடங்கிய ஒரு விளக்கவுரைப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.''[78] அவர் அநுபவமுள்ள ஐந்து பெரிய அதிகாரிகளை நியமித்தார். அவர்கள் முறையே மனிதர்கள், குதிரைகள், அவர்களுக்குச் சேரவேண்டிய ஊதியங்கள் ஆகியவற்றைக் கவனித்துக்கொண்டனர். திறந்தவெளி ஒன்றில் அம்மனிதர்கள் ஒன்று கூட்டப்பட்டனர். அங்கே அவர்கள் ஐந்து அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழ் விளக்கப் பட்டியலை (Descriptive Rolls) தயாரித்தனர். இப் பட்டியலின் அடிப்பாகத்தில் அவர்களுடைய சம்பளத் தொகை குறிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரிகளின் மேற்கையெழுத்து இடப்பட்டபின் பொது மேற்பார்வையாளர் அல்லது தாக்கின் தரோகா (Darogah of the Dagh) என்பாரிடம் பட்டியல் கொடுக்கப்பட்டது. தரோகா என்பார் பேரரசிடம் அப் பட்டியலைச் சமர்ப்பித்தார். அரசர் அதை நன்கு பரிசீலனை செய்தபின் சம்பளத் தொகையை உயர்த்த வேண்டுமென்றோ அல்லது குறைக்க வேண்டுமென்றோ ஆணையிடுவார். ''இங்ஙனம், விளக்கப்பட்டியலானது சரியெனச் சான்று இதழ் வழங்கப்பட்டபின் அதில் வாகியாநவிஸ் என்பவரும் மீர் அர்ஸ் என்பவரும் காவல் வீரர்களின் தலைமையதிகாரியும் கையெழுத்திட்டனர். இங்ஙனம் அவர்களால் வழங்கப்பட்ட நற்சான்று இதழின் துணைகொண்டு தரோகா என்பார் குதிரைகளின்மீது சின்னங்கள் பொறிக்கின்றனர்.''[79]

இங்ஙனம், குதிரைகளின்மீது மிக விழிப்பான முறையில் சூடு போடுவதன்மூலமும் போடப்பட்ட சூட்டுச் சின்னங்களின் விளக்கங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயார் செய்வதன் மூலமும் அக்பர் தம் குறிக்கோளில் ஓரளவு வெற்றியடைந்தார். எனினும், அம் முறையில் இயல்பாகவே குறைகள் பொதிந்து கிடந்த காரணத்தால் அவற்றை முழுவதுமாக நீக்கி விடுவதில் அக்பர் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது தேற்றம். ஏனெனில், பதௌனி என்பார் சொன்னபடி, ''கலிஸா நிலங்கள் (அரசர்க்குச் சொந்தமான இடங்கள்) தவிர நாட்டி

[77] Ibid. [78] Ibid., p. 232. [79] Ibid., p. 232.

லிருந்த மற்ற நிலங்களெல்லாம் அமீர்களுக்குச் சொந்தமான ஜாகீர்களாக இருந்தன.'' அவர்கள் ஆண்டுக்கொருமுறை தங்களுக்குரிய குதிரைகளை அரசர்முன் கொணர்ந்து கணக்குக் காண்பிக்கும்படி கட்டளையிடப்பட்டனர். ஆனால், பன்னிரண்டு ஆண்டுகளாகியும் கணக்கெடுப்புக்காகக் குதிரைகளைக் கொண்டு வராத அமீர்கள் பல பேர்கள் இருந்தனர். ஏனெனில், அவர்களுடைய ஜாகீர்களெல்லாம் வெகு தூரத்தில் இருந்தன. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ குதிரைகளைக் கொணர்ந்து கணக்குக் காண்பித்த மன்சப்தார்கள் பலபேர் இருந்தனர்.[80] அது பளிச்சென்று தெரியக்கூடிய ஒரு குறையாக இருந்தது. ''மேன்மை தங்கிய அரசரிடம் மிக அருகாமையில் ஊழியம் புரிந்தவர்களும் தங்களுடைய ஜாகீர்களைக் கவனித்துக்கொள்ள நேரம் இல்லா தவர்களுந்தாம் மாதந்தோறும் தங்களுடைய சம்பளத் தொகையை ரொக்கமாகப் பெற்று, அதன்மூலம் பதினெட்டு மாதங்களுக்கு ஒருமுறை தங்கள் குதிரைகளை அரசர்முன் சமர்ப்பித்தனர்.''[81] ஆனால், பொதுவாக எல்லாத் தளபதிகளும் பின் கண்ட விதிப்படி தங்களுடைய மாதாந்தர மானியங்களைப் பெற்றனர். ''அவரவர் வைத்திருந்த படைகளின் நிலைகளுக்கு ஏற்பவே அவரவர்களின் மானியம் வழங்கப்பட்டது. ஓர் அதிகாரியானவர் தமது மன்சப் பதவிக்குரிய எண்ணிக்கையுள்ள படையினரைக் கொணர்வாரானால் அவர் முதல்தர அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கொண்டு வரவேண்டிய எண்ணிக்கையில் பாதியளவு குதிரை வீரர்களையே கொணர்ந்த மன்சப்தார்கள் இரண்டாம் தரத்தில் வைக்கப்பட்டனர். இன்னும் குறைந்த எண்ணிக்கையுள்ள படைவீரர்களைக் கொணர்ந்தவர்கள் மூன்றும் தரத்தினராகக் கருதப்பட்டனர்.''[82] இதன்படி 5,000 குதிரை வீரர்களுடைய மன்சப்தார்கள் முதலாம் தரமானவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு 30,000 ரூபாய்கள் மானியமாக வழங்கப்பட்டன. இரண்டாம் தரத்திலும், மூன்றும் தரத்திலும் இருந்த மன்சப்தார்கள் முறையே மாதம் ஒன்றுக்கு 29,000 ரூபாய்களும் 28,000 ரூபாய்களும் பெற்றனர். ஆனால், நடைமுறையில் இது கடைப்பிடிக்கப்படவில்லை. வெறும் ஏட்டளவிலேயே அஃது உண்மையாக இருந்தது என்பதை நாம் பின்னர்ப் பரிசீலனை செய்வோம்.

மன்சப்தார்களால் வைத்து நிர்வகிக்கப்பெற்ற இக் குதிரைப் படை வீரருக்கு அடுத்தபடியாக அகாதிகள் என்ற குதிரைப்படை

[80] Ibid., p. 257. [81] Ibid.

[82] Ibid., p. 238.

வீரர்கள் விளங்கினர். அவர்களைக் கண்ணியமிக்க குதிரை வீரர்களென (Gentlemen-Troopers) அழைத்தல் தகும். ''மேன்மை தங்கிய அரசருக்கு அடுத்தபடியாக அவருடன் நெருங்கி இருந்து பணியாற்றியவர்கள் அவர்களே. அவர்கள் மிகவும் சுயேச்சையாக நடந்துகொண்ட காரணத்தால் கண்ணியமிக்கவர்களாக நாட்டில் கருதப்பட்டனர்.'' அவர்கள் நல்ல பயிற்சி பெற்றிருந்தனர். அவர்களுக்கெனச் சொந்தமான நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் தனியே ஒரு திவானும், பொருளாளரும், பக்ஷியும், அதிபதி அல்லது ஒரு தளபதியும் நியமிக்கப்பட்டிருந்தனர். தளபதியானவர் அநேகமாக நாட்டிலுள்ள ஒரு பெரும் அமீராகத் திகழ்ந்தவராயிருந்தார். ''படையில் சேரும் போது அகாதியானவர் பொதுவாகத் தமக்கெனச் சொந்தமான ஒரு குதிரையை வைத்திருப்பது வழக்கம். ஆனால், அதற்கப்புறம் அரசாங்கத்திடமிருந்து அவர் குதிரையைப் பெற்றுக்கொள்வார்.'' ஒரு சில அகாதிகள் ஒன்றுக்கு மேற்பட்ட குதிரைகளையும் வைத்திருந்தனர். ஆனால், ஐந்து குதிரைகளுக்குமேல் யாரும் தமக்கென வைத்துக்கொள்வது அநுமதிக்கப்படவில்லை. நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அகாதிப் படையில் ஆட்கள் திரட்டப்பட்டனர். அவர்களுடைய சம்பளச் சீட்டுகளில் திவானும், பக்ஷியும் கையெழுத்திட்டனர். மாதமொன்றுக்கு 500 ரூபாய்கள் அவர்களுக்குச் சம்பளமாக வழங்கப்பட்டது. சாதாரணக் குதிரை வீரர்களைப் போலன்றி அவர்கள் மிகமிக விழிப்புடனும் கவனத்துடனுமேயே படையில் சேர்க்கப்பட்டனர்.[83] போர்க்களத் துப்பாக்கிகளைச் செய்துவந்த நிறுவனத்திலும் அவர்கள் சேர்க்கப்படுவது வழக்கமாயிருந்தது.[84]

பாராவர்தி (Barawardi) என்ற குதிரைப்படை வீரர்கள் சாதாரணமாக ஏழைகளாக இருந்தனர். ''ஒரு குதிரையை வைத்துப் பராமரிப்பதற்கான பணம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களுக்கெனச் சில நிலங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. பேரரசுச் சின்னத்தைத் தங்கள் குதிரைகளின்மீது பொறிக்க வேண்டுமென்ற கட்டாயம் அவர்களுக்கில்லை.''[85] அரசருக்குச் சொந்தமான கலிஸா (Khalisah) என்ற நிலங்களில் வரி தண்டுவதே அவர்களின் கடமையாகும். அதற்காக அவர்களுக்கு மாதமொன்றுக்கு 75 ரூபாய்கள் பொதுவாகச் சம்பளமாக வழங்கப்பட்டன.

[83] Ain-i-Akbari—ஆயின்-இ-அக்பரி, Vol. I, pp. 259-60.

[84] Ibid., p. 119.

[85] Ibid., p. 241.

தரைப்படையின் மூன்ருவது பகுதியான காலாட்படையில் பலப்பல பிரிவுகள் காணப்பட்டன. பந்தூக்சிகள் (Banduqchis) அல்லது துப்பாக்கிப் படையினர் அவர்களுள் தலை சிறந்தவர்களாவர். பேரரசரின் துப்பாக்கிப் படையில் 12,000 பேர்கள் பணிபுரிந்து வந்தனர். அவர்களுக்கெனத் தனியே ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு சிப்பந்தியும், பொருளாளரும், தரோகாவும் நியமிக்கப்பட்டிருந்தனர். அதோடு அரசாங்கத்திடமிருந்து செயலுரிமை பெற்றவர்களும், பெருதவர்களுமாகப் பல அதிகாரிகள் அதில் பணியாற்றினர். சம்பளம் வழங்கப்படுதற்காக அவர்கள் ஐந்து வகுப்பினராகப் பிரிக்கப்பட்டனர். அவர்களில் ஓர் ஆயிரம் வீரர்கள் அரண்மனையைக் காப்பதற்காகப் பணிக்கப்பெற்றனர். அவர்கள் தர்பாரிகள் (Darbaris) என அழைக்கப்பட்டனர். காலாட்படையின் இரண்டாம் வகுப்பினர் கித்மதீயாக்கள் (Khidmatiyas) என அழைக்கப்பட்டனர். ''அரண்மனையின் சுற்று வட்டாரங்களைக் காப்பதும், ஒரு சில கட்டளைகள் நிறைவேற்றப்படுவதை வற்புறுத்துவதும் அவர்களின் கடமைகளாகும். அவர்களின் தலைவர் கித்மத் ராய் (Khidmat Rai) என்ற பட்டப்பெயர் கொண்டிருந்தார். மேன்மை தங்கிய அரசருக்கு எப்போதும் மிக அருகாமையிலிருந்துகொண்டு சேவை புரிந்த அணுக்கச் சேவகராக அவர் விளங்கினர்.'' காலாட்படையின் மூன்ரும் பகுதியினர் அஞ்சல் கொண்டோடுபவர்கள் (Runners). அவர்கள் மியூராக்கள் (Mewrahs) எனப் பெயர் பெற்றிருந்தனர். ''அவர்கள் வெகு தூரத்திலிருந்துங்கூட வேண்டிய செய்திகளை மிக உற்சாகத்தோடும் கொணர்கின்றனர். அவர்கள் மிகச் சிறந்த ஒற்றர்களாய் விளங்குகின்றனர்.''[86] அத்தகையோர் ஓர் ஆயிரம் பேர் அரசரிடம் பணிபுரிகின்றனர். இவர்களேயன்றி ஷாம்ஷெர்பாஸ் (Shamsherbaz) எனப்பட்ட வாட்போர் வல்லுநர்களும் (Gladiators), பயில்வான்கள் (Pahlwans) எனப்பட்ட மல்லர்களும், காகர்கள் (Kahars) எனப்பட்ட பல்லக்குத் தூக்குபவர்களும் நிறைய இருந்தனர். அவர்களும் காலாட்படையின் ஒரு பகுதியினராகக் கருதப்பட்டனர். அவர்கள் யாவரும் அவரவருடைய பணிகளின் தன்மைக்கேற்ப ஊதியம் பெற்றனர். காகர்கள் எனப்பட்ட பல்லக்குத் தூக்கிகள் பல்லாயிரக்கணக்காக அரண்மனையில் பணி புரிந்து வந்தனர். அவர்களில் மிகச் சிறந்தவர்களாக விளங்கியவர்கள் ''தக்காணத்திலிருந்தும், வங்காளத்திலிருந்தும்'' வந்தவர்களாயிருந்தனர்.[87]

---

[86] Ibid., p. 262.

[87] Ibid., p. 264.

காலாட்படையின் கடைசி வரிசையில் வந்தவர்கள் தாஹிலி (Dahili) துருப்புகள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் மன்சப்தார்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர்கள். ஆனால், மத்திய அரசாங்கமே அவர்களின் சம்பளங்களை வழங்கி வந்தது. விளக்கப் பட்டியலில் (Descriptive Rolls) அவர்கள், ''அரைகுறைக் குதிரை வீரர்கள்'' (Half-troopers) அல்லது நிமா சுவாரான் (Nimah Suwaran) எனக் குறிக்கப் பெற்றிருந்தனர். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் துப்பாக்கி தூக்கிகளாயும் (Matchlock-bearers), ஏனையோர் வில்லம்புகளைத் தூக்கிச் செல்லுபவர்களாயும் இருந்தனர். தச்சர்கள், கொல்லர்கள், நீர்ப்பானை தூக்கிகள் (Water-carriers), வழிகாட்டிகள் ஆகியோரும் இவ் வகுப்பைச் சேர்ந்தவர்களேயாவர்.[87a]

போர் நடைபெறும்போது ஒவ்வொரு மன்சப்தாருக்கும் கீழ் எத்தகையோர் பணிபுரிய வேண்டுமென்பதைப்பற்றி ஒரு விதிமுறை கையாளப் பெற்றது. அதாவது, பத்தாயிரம் குதிரை வீரர்கள் அடங்கிய படைக்குத் தளபதியாயிருந்த ஒருவரின்கீழ், ஹஸாரிகள் (ஆயிரம் படைவீரர்களுக்குத் தலைவர்கள்) போன்ற உயர்நிலை வீரர்கள் பணிபுரிந்தனர். 8,000 படைவீரர்களுக்குத் தளபதியாயிருப்பவர்களின்கீழ் 800 வீரர்களின் தலைவர்களான ஹஸ்த்சதிகள் (Hastsadis) சேவகம் புரிந்தனர். 7,000 படைவீரர்களுக்குத் தளபதியாயிருந்தவர்களின்கீழ் 700 வீரர்களின் அதிபதிகளும், 5,000 வீரர்க்கு அதிபதிகளின்கீழ் 500 வீரர்களின் தலைவர்களும், 500 வீரர்க்குத் தளபதியாயுள்ளவர்களின்கீழ் 100 வீரர்களின் தலைவர்களும் சேவகம் புரிந்தனர். நூற்றுக்குக் குறைந்த வீரர்களுக்குத் தலைமை பூண்ட மன்சப்தார்கள், உயர்நிலையிலிருந்த மன்சப்தார்களின் படையில் பணிபுரிவது வழக்கமில்லை.[88]

போர்த் தொழிலிலேயன்றி வேறு பணிகளிலும் பேரரசுக் குதிரைப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். அரண்மனையைக் காவல் புரியும் பணியில் அவர்கள் மாறிமாறி அமர்த்தப் பட்டனர். அபுல் ஃபாசல் என்பார் கூறுகிறபடி, ''பேரரசின் தரைப்படையானது பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதத்துக்கு முறை போட்டுக்கொண்டு அரண்மனை வாயிலில் காவல் புரிய வேண்டும். இந்த ஏற்பாட்டின்மூலம் தலைநகருக்கு அருகே இருப்பவர்களேயன்றி வெகு தூரத்தில் பணிபுரிபவர்களும்

[87a] ஆய்ன்-இ-அக்பரி (Ain-i-Akbari), Vol. I, pp. 267-8.

[88] Ibid., pp. 241-42.

அரண்மனைக்கு வந்துபோக ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால், எல்லைப்புறங்களில் வைக்கப்பட்டுள்ள படைவீரர்களும், அல்லது ஏதாவது ஒரு முக்கியமான கடமையின் நிமித்தம் நியமிக்கப் பட்டுள்ள வீரர்களும், அவர்கள் தங்கியுள்ள இடங்கள்பற்றியும் அவற்றின் நிலைமைபற்றியும் சரியான தகவல்களைமட்டுமே அனுப்பிக்கொண்டுள்ளனர். பேரரசுப் படையானது வேறு பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேன்மை தங்கிய அரசருக்கு அருகாமையிலிருந்து சேவகம் புரிவதற்கு ஒவ்வோர் பிரிவுக்கும் ஒவ்வொரு ஆண்டுக்கு வாய்ப்பு அளிக்கப் பட்டது. அரண்மனைக்கு வந்து ஊழியம் செய்யும்படி, அவர் களில் ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வோர் ஆண்டுக்கு முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.''[89] அவரது கூற்றிலிருந்து நாம் உய்த்துணரக் கூடியது என்னெனின், பேரரசுப் படையின் ஒரு சில பகுதிகள் எல்லைப்புறங்களில் எப்போதுமே வைக்கப்பட் டிருந்தன என்பதும், இன்னும் சில படைப் பகுதிகள் அரசருக்கு முறையாக வந்து பணிபுரிந்து வந்தன என்பதுமேயாகும்; இவையே அன்றி, மாநில அதிகாரிகளாயிருந்த சிபசாலர்கள் (Sipahsalars), ஃபௌஜ்தார்கள் (Faujdars) ஆகியோர் பயன் படுத்துவதற்காகவென்று ஒருசில படைப் பகுதிகள் ஒதுக்கப் பட்டு இருந்திருக்கக் கூடும். மற்றும் சில பகுதிகள் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், கோட்டைகளையும் காப்பதற்காகப் பணிக்கப் பெற்றிருத்தல் கூடும். எனினும், நிலைப்படையின் பெரும்பகுதியான காலாட் படையினரும், துப்பாக்கிப் படையினரும், குதிரைப் படையினரும் தலைநகரி லேயே எப்போதும் இருந்துகொண்டு அரசருக்குச் சேவை செய்யத் தயாராயிருந்தனரென்பதை நாம் ஈண்டுக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும்.

(e) பேரரசின் செயலகம் (Imperial Secretariat):

பேரரசின் நிர்வாகமானது, மன்சப்தாரி முறை என்ற ஒரு பேரரசு மத்திய ஊழிய முறையாலும் (Central System of Imperial Service) பேரரசின் அரசவையாலும், ஆலோசனை மன்றத்தாலும், மத்தியச் செயலகம் அல்லது தஃப்தர் (Daftar) என்ற நிறுவனத் தாலும் நடத்தப்பட்டும் ஒருங்கே இணைக்கப்பட்டும் வந்ததென் பதை நாம் வேறோரிடத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். மத் தியச் செயலகமானது, பல துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப்வாபுல் மல் (Abwab-ul-Mal), அப்வாபுல் தகவில் (Abwab-ul-Tahawil), தௌஜி (Taujih) வாகியாநவிஸ் (Wakianawis), சயூர் கல்கள் (Sayurghals) என்ற துறைகள் அடங்கியதாக அது விளங்

[89] ஆய்ன்-இ-அக்பரி (Ain-i-Akbari), Vol. I, pp. 267-8.

கிற்று. முதலில் கூறப்பட்ட மூன்றையும் சேர்த்தால் அஃது இக் காலத்திய நிதி (சிவில், இராணுவம் பற்றியது) இலாகாவை ஒத்ததாக விளங்குவதை அறியலாம். வாகியாநவிஸ் என்பது ஏறக் குறைய இக்காலத்திய மத்திய உளவறிதல் துறையையும் (Central Intelligence Department), பதிவுப்பத்திரங்கள் (Records) துறையையும் ஒத்து விளங்கிற்று. சயூர்கல் என்ற துறையானது அறப்பணிகளைச் செய்தல், மானியங்களை வழங்கல் போன்ற பணிகளை மேற்கொண்ட துறையாக விளங்கிற்று. பேரரசின் செயலகத்தில் உட்கொள்ளப்பட்டிருந்த இந்தத் துறைகளின் சிறப்பியல்புகளை ஆராய்வோமாக. அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகளும் எங்ஙனம் ஒன்றுக்கொன்று நெருக்கமாகப் பிணைக்கப் பட்டிருந்தன என்பதுபற்றியும், ஓர் உயிருள்ள ஜீவனைப் போன்று அவை எங்ஙனம் முழுமையாகச் செயல்பட்டன என்பதையும் ஓரளவு அறிந்துகொள்ள அவ்வாராய்ச்சி பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், அப்வாபுல் மல், அப்வாபுல் தகவில், தௌஜி என்ற இம் மூன்று துறைகளோடு நாட்டு நிர்வாகத் துறைகள் அனைத்தும் ஒன்றுநோக்கப்பட்டிருந்தன. பேரரசின் குடும்பம், பேரரசின் கருவூலம், பேரரசின் தொழிலகங்கள், பண்டக சாலைகள், ஜாகீர்கள், சயூர்கல்கள், இராணுவக் கணக்குகள், பேரரசு நியமனங்கள், பேரரசின் வருமானங்கள் முதலியவற்றைக் கவனித்துக்கொண்ட ஆட்சித்துறைகள் யாவும் மேற்கூறிய மூன்று நிர்வாகத் துறைகளோடு நெருங்கிய தொடர்புகொண்டு விளங்கின. வாகியாநவிஸ் என்ற துறையானது அரசவையிலும், தலைநகரிலும், பேரரசிலும் அன்றாடம் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் குறித்து வைத்தது. ஏறத்தாழ அஃது ஒரு மத்திய உளவறியும் துறையைப் போன்று விளங்கிற்று. பேரரசின் பிரச்சினைகள் பலவற்றையும் அறிந்துகொள்வதற்கு அத் துறை மிகவும் பயனுடையதாய் விளங்கிற்று. தஃப்தர் (Daftar) நிறு வனத்தின் பொறுப்பை மேற்கொண்டவர்கள் பேரரசின் ''உட னடியான கட்டுப்பாடுகளுக்குட்பட்ட'' ''நடுநிலைமிக்க அதிகாரி களாக இருந்தனர்.'' அவர்களுக்குக்கீழ்ப் பணிபுரிந்த சிப்பந்திகள் கூட்டமானது (Staff) ''திறமைமிக்க, நாணயமுள்ள, இலஞ்ச ஊழலற்ற அநுபவமுள்ள'' எழுத்தர்கள் (Writers) அல்லது குமாஸ்தாக்களை (Clerks) உட்கொண்டு விளங்கிற்று. இது போலவே வாகியாநவிஸ் துறையும் பேரரரசரின் உடனடியான கண்காணிப்புக்கு உட்பட்டிருந்தது. அவர் பார்த்து நியமித்த ஏராளமான குமாஸ்தாக்களும், அதிகாரிகளும் சேர்ந்து அதைச் செவ்வனே நடத்திக்கொண்டு வந்தனர். இத்துறையுடன்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இறங்கு வரிசையில் கூறப்படும் போது மீர் அர்ஸ் (Mir Arz), ரிஸல்தார் (Risaldar), வாகியா நவிஸ் (Wakianawis), பார்வான்ச்சி (Parwanchi) என்போராவர்.

அப்வாபுல்மல் என்ற துறையானது நாட்டின் வருமானத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் குறித்து வைத்தது. தஃப்தர் நிறுவனத்தின் இந்தப் பகுதியானது பேரரசின் வருமானத்தைப் பற்றிய விளக்கத்தை நன்கு எடுத்து காண்பித்தது. வருமானத்தில் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகள்பற்றிய விவரங்களையும் இது குறித்து வைத்தது. பேரரசில் கிடைக்கக்கூடிய எல்லா வகை வருமானங் களையும் அதற்குரிய ஆதாரங்களையும், அதாவது பரிசுகள், கப்பங்கள் முதலியவற்றையும் அத் துறை நன்கு திட்டப்படுத்திக் குறித்து வைத்தது. உண்மையில் அது மிகப் பெரியதொரு துறையாக விளங்கி இருக்கவேண்டும். அதனுடைய கிளை நிறு வனங்கள் பேரரசு எங்கணும் பரவி ஊடுருவிச் சென்றிருக்க வேண்டும். வரி வசூல் முறையில் அவ்வப்போது புகுத்தப்பட்ட மாற்றங்களை அது நன்கு கவனித்து அதற்கேற்ப நடந்து கொண்டது. அதுபோலவே அளக்கப்பட்டபின் நிலத்துக்கு விதிக்கப்பட்ட வரி எவ்வளவு என்பதையும், பல்வேறு வகையான வரிகள்பற்றிய செய்திகளையும் பல்வேறு சுபாக்களிலும் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும் நிலத்தின் தன்மை அவற்றின் விளைபொருள்களின் தன்மை ஆகியவை பற்றியும் இன்னும் இது சம்பந்தமான பல்வேறு செய்திகளையும் அது நன்கு உன்னிப்பாகக் கவனித்து வந்தது. அமீல்கள் அல்லது வரி வசூலிப்பவர்களும் ஃபோட்டாதார் (Fotahdars) அல்லது கருவூலக் காப்பாளர்களும் சிபசாலர்கள் (Sipahsalars) அல்லது சுபாக்களின் ஆளுநர்களும் இத் துறையோடு பெரிதும் தொடர்பு கொண் டிருந்தனர். பேரரசுக் கருவூலமும், பேரரசின் நாணயச் சாலையுங்கூட இதனோடு தொடர்புகொண்டு இருந்திருக்க வேண்டும். அடுத்தாற்போல் வருகின்ற அப்வாபுல் தகவில் (Abwabl-ul-tahawil) என்ற துறையானது அரசரின் குடும்பச் செலவுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதை விளக்கியது. அரசவையில் நியமிக்கப்பட்டிருந்த பொருள் காப்பாளர்கள் சார்பில் எவ்வளவு வரவு, எவ்வளவு செலவு என்பதையும், இறுதியாகக் குடும்பத்துக்காக வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட பொருள்களின் நிமித்தமாக அன்றாடம் செய்யப்பட்ட செலவுத் தொகை எவ்வளவு என்பதையும் இத் துறையானது குறித்து வைத்தது. சிவில் ஆட்சி முறையில் ஏற்பட்ட செலவுகள் அனைத்தும் இத் துறையின் கண்காணிப் புக்குள் வந்தன. எனவே, அச் செலவுகளைச் செய்த பல்வேறு

சிவில் துறைகளோடும் இத் துறை நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. சான்றுகப் பேரரசின் அந்தப்புரம், பேரரசின் தொழிலகங்கள், பேரரசின் களஞ்சியங்கள், படைக்கலச் சாலைகள், பேரரசுப் பயணங்கள், சயூர்கல் முதலியவைபற்றிய துறைகள் யாவும் இத் துறையோடு இணைக்கப்பட்டு இருந்தன எனலாம். இறுதியாக வருகின்ற தௌஜி (Taujih) என்ற துறையானது படைக்காகச் செலவிடப்பட்ட தொகைகள்பற்றிய கணக்குகளைப் பதிவு செய்து வந்தது. படைவீரர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு என்பதையும், அஃது எவ்வாறு வழங்கப்பட்டது என்பதையும் இத் துறையினர் குறித்து வைத்தனர். இராணுவ மன்சப்கள் என்ற நிறுவனமும், காலாட்படை நிறுவனமும் பேரரசுக் குதிரைக் கொட்டில்களும் கடற்படைத் துறையும் இன்னோன்ன பிறவும் இத் துறையோடு பெரிதும் தொடர்பு கொண்டு இருந்திருக்க வேண்டும். அப்வாபுல் தகவில், தௌஜி என்ற இரு துறைகள்தாம் எல்லாச் சன்னதுகளையும் (Sanads) வைத்திருந்தன. அதாவது, எழுதப்பெற்ற கணக்கு வழக்கு அறிக்கைகள் அனைத்தையும் அவை வைத்திருந்தன. அல்லது ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய ஊதியத்தைப் பெறுவதற்கான உறுதிச் சீட்டுகளை (Vouchers) இவையே வைத்திருந்தன. அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த அரசப் பட்டயங்கள், அதாவது ஃபர்மனேசப்திகள் (Farman-i-Sabtis) இங்கேதான் வந்தன. வக்கீல், வஜீர், பக்ஷி, சதர், சிபசாலர் போன்றவர்களின் நியமனப் பத்திரங்களும், அமீருல் உம்ரா (Amir-ul-Umra) போன்ற பதவிகள் மன்சப் பதவிகள் முதலியவைபற்றிய பதவிப் பத்திரங்களும் இங்கேதான் இருந்தன. சயூர்கல் வழங்கப்பட்டபோதும், புதிதாகக் கைப் பற்றப்பட்ட ஒரு நிலப்பகுதியை ஆட்சி புரியும்படி ஒருவர் நியமிக்கப்பட்டபோதும் அப் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. ஒருவர் செய்த இராணுவ சேவைக்காக மன்சப் அல்லது ஜாகீர் வழங்கப்படுமுன் அதுபற்றிய பத்திரங்கள் பல அதிகாரிகளின் கைக்குச் செல்ல வேண்டியிருந்தது. மானியமானது மன்னரால் உறுதி செய்யப்படுவதற்கும், சம்பளச் சீட்டு வழங்கப்படுவதற்கும் முன்னர் அதற்குரிய தாள்கள் திவானி ஜாஹீர், பக்ஷிகள், பக்ஷிகளின் தலைவர் ஆகியோரின் பார்வைக்கு உட்பட்ட பின்னரே அவை மன்னரிடம் சென்றன. அதன்பின் மறுபடியும் அவை பல்வேறு அதிகாரிகளின் கைகளுக்கு மாறவேண்டி இருந்தது. சாஹிபி தௌஜி (Sahibi Taujih) முஸ்டாஃபி (Mustaufi), முஷ்ரிஃபி திவான் (Mushrifi Diwan) வக்கீல் ஆகிய அதிகாரிகள் பார்வையிட்ட பின்னரே அத் தாள்களுக்கு ஒரு முடிவு கட்டப்பட்டது. அதன் பின்னரே (நிய

மனத்துக்கான) ஃபர்மன் (Farman) வழங்கப்பட்டது. அதோடு சம்பளச் சீட்டும் வழங்கப்பட்டது. பேரரசின் தொழிலகங் களிலும், குதிரைக் கொட்டில்களிலும் பணிபுரிந்துவந்த ஊழியர் களுக்கு ரொக்கமாக ஊதியம் வழங்கும்படி ஆணை பிறப்பிக்கப் பட்டபோதெல்லாம், அது சம்பந்தப்பட்ட தாள்கள் யாவும் ஷாஹீபி தௌஜி, நாஸிர் (Nazir), திவானி புயூதத் (Diwani-Buyutat), திவானி குல் (Diwani Kul), கானி சாமன் (Khani-Saman), முஷ்ரிஃபி திவான், வக்கீல் ஆகியோரின் மூலமாகவே மன்னருக்குச் செல்லும். அவைபற்றிய ஒரு முடிவுக்கு வரவேண் டியவர் மன்னரேயாவார். மன்சப்தார்களுக்கு வழங்கப்பட்ட ஃபர்மன்களும் இம்மாதிரியே தயாரிக்கப்பட்டன. ஆனால் பேரரசுத் தொழிலகங்கள், குதிரைக் கொட்டில்கள் ஆகியவற்றை நிர்வகித்த துறைகளுக்கு அத்தகைய ஃபர்மன்கள் அனுப்பப்படு வதில்லை. சயூர்கல் என்ற மானியங்களைப் பொறுத்த ஃபர்மன்கள் முதலில் முஸ்டாஃபி (Mustaufi) என்ற அதிகாரியின் கையெழுத் தைப் பெற்றபின் திவானி சாதத்தின் (Diwan-i-Saadat) தஃப்தர் களில் பதியப்பெற்றன. அதன்பின் சதர், திவானி குல் ஆகிய அதிகாரிகள் அதில் கையெழுத்திட்டனர். பேகம்கள், இள வரசர்கள், திவானி சாதத்தின் கண்காணிப்பிலுள்ளவர்கள், சேலாக்கள் (அடிமைகள்) தொழிலகங்களில் பணிபுரிந்த ஒரு சில அதிகாரிகள் ஆகியவர்களுக்குச் சம்பளங்கள் வழங்கப்படுதற்கும், பார்கிர் குதிரைகளுக்கு (Bargir horses) வேண்டிய தீனி வாங்கிப் போடுவதற்கான செலவுப்படிகள் (Allowances) வழங்கப்படுதற் கும் என வெளியிடப்பட்ட பர்வன்ச்சாக்கள் (Parwanchas) (இதுவே அதற்குரிய கலைச்சொல்லாகும்) சம்பந்தமான தாள்கள் முதலில் முஷ்ரிஃபுக்கும், அதன்பின் முஸ்டாஃபி, நஸீரி புயூதத், திவானி குல், கானிசாமன், முஷ்ரிஃபி திவான் ஆகிய அதிகாரி களுக்கும் சென்றன. இவர்கள் யாவரும் பார்வையிட்ட பின்னரே அவை வெளியிடப்பட்டன. அகாதிகளுக்கு வழங்கப்பட்ட பர்வான்ச்சாக்கள்பற்றிய தாள்கள், முஸ்டாஃபி, திவான், பக்ஷி, அகாதிபாஷி (Ahadibashi) அல்லது அகாதிகளின் தளபதி ஆகிய அதிகாரிகளால் பார்வையிடப்பட்ட பின்னரே செல்லுபடியாயின.[90] இந்த மூன்று ஆட்சித்துறைகளிலும், நிர்வாக சம்பந்தமான நடவடிக்கைகள்மட்டுமே பதிவு செய்யப் பட்டு வந்தபோது, வாகியாநவிஸ் துறைமட்டும், பேரரசில் நடை பெற்ற அத்தனை செய்திகளையும் அதாவது, நிர்வாக சம்பந்த மானதாயிருந்தாலும் அல்லது பொதுப்படையானதாயிருந் தாலும், தகவல்கள் அனைத்தையும் அன்றாடம் அது குறித்து

[90] Ibid., pp. 270-72.

வைத்துக்கொண் டிருந்தது. "மேன்மை தங்கிய அரசர் அன்றுடம் வெளியிடுகின்ற ஆணைகளும், அவருடைய செயல்களும் இத் துறையினரால் குறித்து வைக்கப்பெறுகின்றன. பல்வேறு துறைகளின் தலைவர்கள் மன்னரிடம் தெரிவிக்கின்ற தகவல்களை யும் அது குறித்துக்கொள்கிறது. மேன்மை தங்கிய அரசர் என்னென்னவற்றை உண்டார், எதைதைக் குடித்தார், எப்போது அவர் உறங்குகிறார், எப்போது விழித்தெழுகிறார், அரசவையில் என்னென்ன மரியாதை விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன, மேன்மை தங்கிய அரசர் எந்தெந்த நேரத்தை அந்தப்புரத்தில் கழிக்கின்றார், பொதுப் பேரவைக்கும், தனிப்பட்ட அவைகளுக் கும் அரசர் எப்போது செல்கிறார், வேட்டையாடுதற்காகச் செல் லும் கூட்டம் எத்தகையது, எப்படிப் பிராணிகள் கொல்லப் படுகின்றன, எப்போது அவர் அரண்மனையினின்றும் வெளியே பரிவாரங்களுடன் செல்கிறார், எப்போது அவர் வழியில் தங்கு கிறார், நாட்டு மக்களின் ஆன்மிக வழிகாட்டியாக நின்று அரசர் செய்கின்ற செயல்கள் யாவை, அவர் எடுத்துக்கொள்ளும் சபதங்கள் என்ன, என்னென்ன தர்மங்களை அவர் வழங்குகிறார், என்னென்ன பரிசுகளை அவர் தருகிறார், தினந்தோறும் மாதந் தோறும் அவர் என்னென்ன கடும் பயிற்சிகளுக்குத் தம்மை உட்படுத்திக்கொள்கிறார் என்பவற்றையெல்லாம்பற்றிய தகவல் களையும் மன்சப்களுக்கு வழங்குகின்ற பதவிகள், குதிரைப் படை யின் பகுதிகள், சம்பளங்கள், ஜாகீர்கள், இர்மாஸ் பணம் (Irmas money), சாயூர்கல், வரிப்பண ஏற்றமும் இறக்கமும், ஒப்பந்தங்கள், விற்பனைகள், பொருள் மாற்றங்கள், பேஷ்கஷ், வெளி அனுப்பப்படுகிற கடிதங்கள், வெளியிடப்படுகிற ஆணைகள், அரசரால் கையெழுத்திடப்பட்ட தாள்கள், வந்து சேர்ந்துள்ள அறிக்கைகள், அவற்றின்மேல் காணப்படும் குறிப்புகள், அரண்மனைவாசிகளின் வருகைகள், அவர்கள் திரும்பிச் செல்லுதல், பரிசீலனைக்கெனக் காலம் குறிக்கப்பெறல், காவலாளிகளை நோட்டம் பார்த்தல், போர்க்களங்கள், வெற்றி களும் தோல்விகளும், யாவராலும் அறியப்பட்ட பெருமக்களின் மரணங்கள், மிருகச் சண்டைகள், அவற்றின்மீது வைக்கப்படும் பந்தயப் பணங்கள், குதிரைகளின் சாவு, மரண தண்டனைகள், மேன்மை தங்கிய அரசரால் வழங்கப்பட்ட மன்னிப்புகள், பொதுப் பேரவையின் நடவடிக்கைகள், திருமணங்கள், பிறப் புகள், சௌஹன் விளையாட்டுகள், சௌபர்னர்ட் (Chawparnard), சதுரங்கம் (Chess), சீட்டு விளையாட்டுகள் முதலியன; அசாதா ரணமான காட்சி, ஆண்டின் அறுவடைகள், நிகழ்ச்சிகள்பற்றிய அறிக்கைகள்"[91] ஆகியவைபற்றிய தகவல்கள் அனைத்தும் இத்

[91] Ibid., pp. 268-69.

துறையினரால் குறித்து வைக்கப்பட்டன. மேலே குறிக்கப்பெற்றுள்ளவற்றைப் பார்க்கும்போது, அரசவையிலும் பேரரசிலும் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகள், பேரரசின் ஆணைகள், பேரரசின் அலுவற் கட்டுப்பாடுகள் (Engagements), கேளிக்கைகள், நியமனங்கள், பதவியுயர்வுகள், தண்டனைகள், பயிர்களின் நிலை, மாநிலங்களிலிருந்து வருகின்ற அறிக்கைகள் முதலியவைபற்றிய செய்திகளெல்லாம் அடங்கியதொரு தகவற் பட்டியல் அல்லது செய்தி அறிக்கையை (Bulletin) அது வெளியிட்டு வந்ததாகத் தெரிகிறது. ஏனைய மூன்று துறையாலும் செய்யப்பட்டு வந்த காரியங்கள் முற்றுப்பெற இத்துறையானது உதவி செய்தது எனலாம். பல சமயங்களில் அத் துறைகளில் ஏற்கெனவே செய்யப்பட்டவற்றை இது மீண்டும் செய்வதாக அமைந்து விடுவது வழக்கமாயிருந்தது. மத்திய உளவறியும் துறை (Central Intelligence Department) என்ற வகையிலும் ஆவணக் களரி (Record Office) என்ற வகையிலும் அது மிகச் சிறந்த பணியைச் செய்து வந்தது. ஷெர்ஷா காலத்தில் நடைமுறையில் இருந்த ஒரு விதியானது இக் காலத்திலும் கடைப்பிடிக்கப் பட்டது. அதன்படி மாநில அமீல்கள் அல்லது வரிவசூல் செய்பவர்கள் மாதத்திற்கு ஒருமுறை மன்னர் அவைக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும். ''மக்களுடைய வாழ்க்கை நிலைமைபற்றியும், ஜாகீர்தார்கள், அண்டையில் வசிப்போர், கலகக்காரர்களின் சரணடைவு, சந்தைகளில் நிலவும் விலைவாசிகள் குடியிருப்புகளுக்கு அப்போதைக்குத் தரப்படவேண்டிய வாடகைகள், ஏழை-அநாதைகளின் நிலை, சூழ்ச்சிக்காரர்களின் செயல்கள், தற்செயலாக ஏற்படும் நிகழ்ச்சிகள் முதலிய பலவற்றைப்பற்றிய செய்திகளும்''[92] அவ்வறிக்கையில் இடம் பெற்றிருக்கவேண்டும். இந்த அறிக்கைகள் யாவும் வாகியாநவிஸ் துறையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கடுமையான உழைப்பின் விளைவால் அவை யாவும் இத்துறையோடு சேர்க்கப்பட்டன. அதுபோலவே இரகசியத் தூதுவர்கள் அல்லது ஒற்றர்களால் கொண்டுவரப்படும் செய்திகளும் இத் துறையுடன் சேர்க்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய கணக்குகளைக் குறிக்க ஏராளமான எழுத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒரு நாளைக்குரிய கணக்குகள் முழுவதுமாகப் பதிவு செய்யப்பட்டபின், பேரரசின் ஊழியர்களில் ஒருவரால் அது சரிபார்க்கப்பட்டது. அதன் பின்னர் அது மன்னர்முன் அவருடைய ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. அதனுடைய சுருக்கம் அடங்கிய பிரதிகள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. இறுதியாக இவையெல்லாம்

[92] Ibid., Vol. II, p. 47.

முத்திரையிடப்பட்டுப் பல அதிகாரிகளால் கையெழுத்திடப் பட்டு அவற்றின் வாசகம் சரி என்பது நன்கு நிலைநாட்டப்பட்ட பின் வாகியாநவிஸ் செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நன்கு பாதுகாக்கப்பட்டது.

மத்தியச் செயலகத்தில் (Secretariat) நம்மால் இன்னும் ஆராயப்படாமல் எஞ்சி நிற்கிற துறை சயூர்கலைப்பற்றியதாகும். இத் துறையானது திவானி சாதத் என்றும் அழைக்கப்பட்டது. வஜீஃபா (Wazibah - ரொக்கமாகக் கொடுக்கப்பட்ட தொகை), மதாதிமாஷ் (Madadi mash - நிலங்களின் வடிவில் தரப்பட்டது) என்று அழைக்கப்பட்ட வாழ்க்கைப்படி வழங்கும் பணியை இத் துறையானது மேற்கொண்டு நடத்திற்று என்பதை ஏற்கெனவே நாம் கண்டோம். இதன் தலைவராக விளங்கியவர் சதர் என்று அழைக்கப்பட்டார். ''அவருடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து காஜி (Qazi) என்பவரும் மீர் ஆதில் (Mir Adil) என்பவரும் நடந்துகொண்டனர்.'' மானியங்கள் ஒருசில விதிகளுக்குட்பட்டு வழங்கப்பட்டன. அவையாவன: எல்லா சயூர்கல் நிலமும் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தில் பாதியாக இருக்கவேண்டும். சாகுபடிக்குத் தகுதியான நிலத்திலும் அது பாதியளவு இருக்க வேண்டும். பின்னுல் சொல்லப்பட்ட நிலம் இல்லாத வேளையில் (அதாவது, எல்லா நிலங்களும் சாகுபடி செய்யப்பட்டிருந்தால்) மொத்த நிலத்தில் நான்கில் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எஞ்சிய நிலத்துக்குத் தனிப்பட்ட புதிய ஒரு மானியம் வழங்கப்படவேண்டும்.''[93] அப்படிப்பட்ட மானிய மானது ஒருவர்பேரில் வழங்கப்படுவதற்காக ஃபர்மன் ஒன்று வெளியிடப்படவேண்டும். ஆனுல், அது வெளியிடப்படுமுன் தக்க அதிகாரிகளின்மூலமாகச் சென்று வெளிவரவேண்டும். முஸ்டாஃபி என்ற அதிகாரி அதில் கையெழுத்திடவேண்டும். அதன்பின் திவானி சாதத் என்பாரின் தஃப்தர்களில் அது பதிப் பிக்கப்படவேண்டும். இறுதியாகச் சதர், திவானி குல் ஆகிய இரண்டு அதிகாரிகளும் அதில் கையெழுத்திட்டு முத்திரையிட வேண்டும். இத்தகைய புறச் சடங்குகள் எல்லாம் நடைபெற்ற பின்னரே ஃபர்மன் செல்லுபடியாகும். அதன்பின்னரே அது மானியதாரிடம் சேர்ப்பிக்கப்படுதல் கூடும்.

மத்திய அரசாங்கத்தின் செயல்முறைபற்றிய இந்தப் பரிசீலனையிலிருந்து, நாட்டின் எல்லாத் துறைகளும் எங்ஙனம் ஒன்றுக்கொன்று நன்கு பிணைக்கப்பட்டிருந்தன என்பதை

[93] Ibid., Vol. I, p. 280.

எவருமே நன்கு அறிந்துகொண் டிருக்கக்கூடும். நரம்பு மண்ட லங்கள் யாவும் எங்ஙனம் இருதயத்தோடு தொடர்பு கொண் டுள்ளனவோ அதே போன்று ஆட்சித் துறைகள் அனைத்தும், பேரரசின் செயலகத்தோடு தொடுக்கப்பட்டிருந்தன. நிதித் துறை ஒன்றுதான் இவை அனைத்துக்கும் வேண்டிய நிதியை வழங்கி, அவை செயல்படும்படிச் செய்து வந்தது. திடமான தொரு நிதிமுறையை நிறுவுதல், திறமை மிக்கதோர் இராணு வத்தை உருவாக்கல் ஆகிய இந்த இரண்டு பணிகளேயன்றி, அரசாங்கமானது இயற்ற வேண்டிய வேறு பணிகள் மிகமிகக் குறைவென்றே கூறலாம். அவை இரண்டுமட்டுமே அரசாங் கத்தால் அன்று மேற்கொள்ளப்படவேண்டிய மிகத் தலை சிறந்த கடமைகளாகக் கருதப்பட்டன. அவற்றேடு, நிலங்களைச் சரிவர அளந்து அதற்கேற்ப வரி விதித்தல், அரசருக்குச் சேர வேண்டிய வருமானங்களைச் சேகரித்தல், நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டல், உள்நாட்டு வெளிநாட்டுப் படை யெடுப்புகளைச் சமாளிக்கக்கூடிய வகையில் எப்போதும் படை யினைத் தயாராக வைத்திருத்தல் ஆகியனவும் அரசின் முக்கியப் பணிகளாகக் கருதப்பட்டன. மக்களுக்கு நன்மை விளைக்கக்கூடிய செயல்களான கல்வியைப் பரப்புதல், கலையையும் இலக்கியத் தையும் ஆதரித்தல், பாதைகளை அமைத்தல், கட்டடங்களைக் கட்டல், தோட்டங்களை ஏற்படுத்தல், பொது நன்மைக்கான காரியங்களைச் செய்தல், நீதி வழங்கல், தரும கைங்கரியங்களை மேற்கொள்ளல் போன்ற செயல்களையும் மன்னர்கள் செய்து வந்தார்கள். ஆனால், அவை மக்களின் அன்பைப் பெறுவதற்கா கவும், தங்களுடைய தனியாட்சிக்கு ஆதரவைத் தேடிக்கொள் வதற்காகவும், அரசபதவியை நன்கு திட்டப்படுத்திக்கொள் வதற்காகவுமே மேற்கொள்ளப்பட்டனவே அன்றி வேறன்று. மேலும், அக் காலத்திலெல்லாம் அரசின் அவதாரமாக அரசன் கருதப்பட்ட காரணத்தாலும், மக்களின் அன்பையும் ஆதரவை யும் புறக்கணிப்பதென்பது மன்னரொருவர்க்குப் பேரபாயமாய் முடியக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்ததாலும், இத்தகைய நற்பணிகள் யாவும், அரசின் செயல்திட்டத்தின் பிரிக்க முடியாத தொரு பகுதியாகவே விளங்கிவந்தன. அரசாங்கச் செயல் திட்டத்தில் இவை யாவும் உண்மையிலேயே இரண்டாந்தர மானவையாகக் கருதப்பட்டன. ஆனால், அக்பர் இவற்றைச் சிறிதும் புறக்கணிக்கவில்லை. மக்களின் விசுவாசத்தைப் பெற்றுத் தமது தனியாட்சியை வலுபடுத்திக்கொள்ள இத்தகைய செய்கையானது எளியதோரு சாதனமாகும் என்பதை அக்பர் கண்டுகொண்டு அதற்கேற்ப நடக்கலானார்.

மாநில அரசாங்கம்

இப்போது நாம் பேரரசில் இருந்த மாநில அரசாங்கங்களின் செயல்முறைகளைப் பரிசீலனை செய்ய முற்போடுவோமாக: அக்பரது ஆட்சிக் காலத்தின் இருபத்துநான்காம் ஆண்டில், ஒவ்வொரு சுபாவிலும், சிபசாலர், திவான், பக்ஷி, சதரேஜஸ் (Sadr-i-Juz), மீர் ஆதில், பொருளாளர் அல்லது காஜிநதர் (Khazinadar), கொத்தவால் (Kotwal), மீர் பஹர் (Mir Bahr) வாகியாநவிஸ் ஆகிய அதிகாரிகள் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம்.[94] ஆனால், திவானுக்குச் சமாளித்தற்கரிய வேலைகள் ஏராளமாக இருந்த காரணத்தால், ஒவ்வொரு மாநிலத்துக்கும் வஜீர் ஒருவர் 1595ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.[95] அவர் ஆற்றவேண்டிய பணிகள் உண்மையில் திவானின் கடமைகளை ஒத்தனவாகவே இருந்தன. இவ்விருவரும் சேர்ந்து நாட்டின் வரிவசூல், வரித்தொகையை நிர்ணயிக்கும் பணி (Assessment) முதலிய எல்லாப் பொருளாதாரப் பணிகளையும் மேற்கொண்டனர். மாநில ஆட்சித்துறைகளின் தலைவர்கள், மாநில ஆளுநராயிருந்த சிபசாலரின் பொதுவான மேற்பார்வைக்கு உட்பட்டு இருந்தனர். அவர்களின் நடத்தையைப் பொதுவாக அவர் கண்காணித்து வந்தார். அவர்களின் நாணயம், விசுவாசம், தொழில் திறமை ஆகியவற்றை அவர் எடை போட்டுப் பார்த்து வந்தார். மற்றப்படி மாநில ஆட்சித்துறைகள் யாவும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே அடங்கி இருந்தன. அதாவது, மாநிலத்தில் நிர்வாகம் செய்த வஜீருக்கும், அல்லது முஷ்ரிஃபி திவானுக்கும் கட்டுப்பட்டிருந்தன. அதேபோல மாநில பக்ஷியானவர் மத்திய பக்ஷியின் கண்காணிப்புக்கு உட்பட்டு இருந்தார். பேரரசின் சதரும், கருவூலக் காப்பாளரும், மீர்பஹறும், வாகியாநவிஸும் அங்ஙனமே அவரவர்களின் துறையோடு சம்பந்தப்பட்ட மாநில அதிகாரிகளைக் கட்டுப்படுத்தி வந்தனர். இதற்கு ஒரே விதி விலக்காக அமைந்தவர் 'கொத்தவால்' எனும் மாநில அதிகாரிமட்டுமே ஆவார் எனத் தெரிகிறது. மாநிலம் ஒவ்வொன்றிலும் இருந்த ஒவ்வொரு முக்கியமான நகரத்துக்கும் ஒவ்வொரு கொத்தவால் இருந்திருக்கக்கூடும். அவர் அம் மாநிலச் சிபசாலரின் கண்காணிப்புக்கு உட்பட்டே தொழில் புரிந்து வந்தார். அவருக்கும் பேரரசின் செயலகத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. அதே போன்று பேரரசின் தலைநகரிலிருந்த கொத்தவாலுக்கும் அவருக்கும் எவ்விதத் தொடுப்

[94] Ibid., pp. 14, 271, 430., Vol. II, p. 49.

[95] அபுல் ஃபாசல், அக்பர் நாமா Vol. III, p. 670.

பும் இருக்கவில்லை. அதுபோலவே மாநிலங்களில் நிதிவழங்கப் படுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய உரிமை மத்திய அரசாங்கத் துக்குச் சிறிதளவும் இல்லை. அதாவது, ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டதாய், படிப்படியாக அமைந்துள்ள நீதி மன்றத் தொகுப்பு நாட்டில் காணப்படவில்லை. எனவே, மாநில அல்லது கீழ் நீதிமன்றங்களிலிருந்து மத்திய அல்லது மேல் நீதிமன்றங்களுக்கு மேல் முறையீடு செய்துகொள்வதென்பதும் அங்குக் காணப்படவில்லை. நீதிபரிபாலனம், கிரிமினல் குற்றங் களைக் கடிதல் ஆகியவைபற்றிய முழுப்பொறுப்பும் மாநிலங்களையே சார்ந்திருந்தது. போதிய அளவு செல்வமும் செல்வாக்குமுள்ள ஒரு சில உயர்குடி மக்களே பேரரசரின் நீதி மன்றத்துக்கு மேல் முறையீடு செய்துகொள்வது முடியக்கூடிய காரியமாயிருந்தது. நீதி வழங்கும் பணியைப் பொறுத்தவரையில் சிபசாலரே மன்னரின் பகராளாக (Representative) விளங்கினர். எனவே, காஜிகள், சதர்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு எதிராகச் செய்யப்படும் மேல் முறையீடுகள் அவரிடமே அனுப்பப்பட வேண்டும். அவற்றை விசாரித்து இறுதித் தீர்ப்பு வழங்கும் உரிமை அவருக்கு இருந்தது. ''நீதிபற்றிய உசாவுகையில் (Investigations) அவர் வெறும் சாட்சிகளைக் கொண்டும், சபதங்களைக் கொண்டும் நிறைவெய்தி விடக்கூடாது. பல்லாற்றானும் நிகழ்த்தப்பெறும் விசாரணைகள்(Inquiries)மூலம் அவர் வழக்கின் உண்மையைக் காண முயலவேண்டும்'' என்று அவருக்கு ஆணையிடப்பட் டிருந்தது.

(i) சிபசாலர் (Sipahsalar):

மாநிலங்களில் நல்லாட்சி நடைபெற வேண்டுமானல் அது சிபசாலரின் திறமை, செயல்நயம், விழிப்பு, பொது நடத்தை முதலியவற்றையே பெரிதும் சார்ந்திருந்தது. பலவகையிலும் அவரே மாநிலத்தின் அரசராக விளங்கினர். ஆனல், மத்திய அரசர், வக்கீல் ஆகியோரின் விழிப்போடு கூடிய கண்டிப்பான கட்டுப்பாட்டுக்கு அவர் உட்பட்டிருந்தார். மிகக் குறுகிய காலத்துக்குமட்டுமே அவர் பதவியில் இருக்க அநுமதிக்கப்பட் டார். அரசரின் விருப்பத்தைப் பொறுத்தே அவரது பதவிக் காலம் தீர்மானிக்கப்பட்டது. நீதிவழங்குவதில் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், சமய சம்பந்தமான காரியங் களில் தலையிடக் கூடாதென்றும், மக்களுக்கு நன்மை செய் வதில் ஆர்வமுள்ளவராயிருக்கவேண்டுமென்றும், தாராளமாகவும் பெருந்தன்மையோடும் மக்களிடம் நடந்துகொள்ள வேண்டுமென வும் அரசர் அவரிடம் எதிர்பார்த்தார். மாநிலப் பிரிவுகளை அவர் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஃபவுஜ்தார்களிடம்

(Faujdars) ஒப்படைத்தார். சாலைகளில் பயணம் செய்வோரைக் கொலை, கொள்ளை போன்றவற்றினின்றும் பாதுகாக்க வேண்டுவது அவரது கடமையெனக் கருதப்பட்டது. இரகசியமான செய்திகளைச் சேகரிப்பதற்காக அவர் ஏராளமான உளவாளிகளை (Spies) நியமித்தார். வரிவசூல் செய்பவர்களை நியமித்தவரும் அவர்களுடைய நடத்தைகளைக் கண்காணித்து வந்தவரும் அவரே ஆவார். திறமையுள்ளவர்களுக்கு அவர் உற்சாகம் அளித்தும், தகுதியுள்ளவர்களைத் தம் நண்பர்கள் ஆக்கிக்கொண்டும், ஏழைகளை ஆதரித்தும் அவர் தம் கடமைகளை ஒழுங்குறச் செய்து வந்தார். விவசாயிகளின் நிலையை உயர்த்த அவர் ஓயாமல் பாடுபடவேண்டியிருந்தது. அதற்காக அவர் நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தினர். ஆங்காங்கே பல கிணறுகளையும் கட்டுக் கால்வாய்களையும் (Acqueducts) வெட்டினர். தோட்டம் துரவுகளை ஆங்காங்கே ஏற்படுத்தினர். பொதுமக்களின் நன்மையைக் கருதிச் சராய்கள் (Sarais) அல்லது சத்திரங்களைச் சாலையின் ஓரங்களின் அவர் கட்டி வைத்தார். இவற்றுக்கெல்லாம் மேலாக, அவர் மாநிலத்தின் அமைதியைக் காத்தார். மாநிலப் படைக்கு அவரே தலைவராக அல்லது தளதிபதியாக விளங்கினர்.

(ii) ஃபௌஜ்தார் (Faujdar):

ஒவ்வொரு மாநிலமும் பல சர்க்கார்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சர்க்காரும் ஒரு ஃபௌஜ்தாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. சிபசாலரின் "உதவியாளராக அவருக்குக் கீழ்ப்பட்டிருந்த" அதிகாரிகளுள் அவரே முதலிடம் வகித்தார். அக்பராலேயே அவர் நேரிடையாக நியமிக்கப்பட்டார். அவர் ஆற்றவேண்டிய கடமைகள் ஏராளமாயிருந்தன. தமது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டவேண்டியது அவரது முக்கியப் பொறுப்பாகும். எவரேனும் ஒரு விவசாயியோ, அல்லது வரிவசூல் செய்பவரோ, அமீலோ அல்லது அரசாங்க மானியமளிக்கப்பெற்ற ஒருவரோ அரசாங்கத்துக்கு எதிராகக் கலகம் செய்ய முற்படுவாரேயானல், அக் கலகத்தை அடக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததாகும். தக்கபடி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் அவர் அத்தகைய கலகங்களை ஒடுக்கினர். எப்போதும் படை ஒன்றைத் தயாராக அவர் வைத்துக் காத்துவந்தார். மத்திய அரசவையினின்றும் வெளிப்போந்த ஆணைகள் அனைத்தையும் முறைப்படிச் செயலாக்குவதும் அவரது கடமையாகும்.[96]

[96] ஆயின்-இ-அக்பரி (Ain-i-Akbari), Vol. II, pp. 40-1.

(iii) கொத்தவால்:

ஃபௌஜ்தார் தம் கடமைகளை மேற்கொண்டு செய்தபோது அவருக்கு உறுதுணையா யிருந்துவந்தவர் கொத்தவால் எனும் அதிகாரியாவார். முக்கியமான நகரங்களிலும் பட்டணங்களிலும் அமைதி காக்கும் பணிகளை (Police Functions) அவரே மேற்கொண்டார். அவரிடம் மிகப் பெரியதொரு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரசாங்க அதிகாரிகளிலேயே மிக அதிகமாக உழைத்தவர் அவரே எனலாம். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகரகர் (Nagaraka) என்பவருக்கு அவரை ஒப்பிடலாம். நகரத்திலுள்ள வீடுகள் அனைத்தையும் அவர் ஒரு பதிவுப் புத்தகத்தில் (Register) குறித்து வைத்திருந்தார். நகரச் சாலைகளில் அடிக்கடி நடந்து சென்று அவர் வேவு பார்த்து வந்தார். நெருக்கடியும் அபாயமும் நிறைந்த நேரங்களில் நகரமாந்தர் அனைவரையும் கூட்டு முயற்சியில் ஈடுபடும்படிக் கட்டாயப்படுத்தியவர் அவரே. நகரின் பல பகுதிகளை அவர் தம் நம்பிக்கைக்குகந்த பகராட்களிடம் (Agents) ஒப்படைத்திருந்தார். அவ்வாட்கள் தம் கண்காணிப்புக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த குடிமக்களின் நடமாட்டங்களை ஊன்றிக் கவனித்து வந்ததோடு, நகருக்கு வெளியே இருந்து உள்ளே வந்தவர்களையும், உள்ளே இருந்து வெளியே சென்றவர்களையும் விழிப்போடு கண்காணித்து வந்தனர். நகரில் நடைபெற்று வந்த கைத்தொழில்கள், வியாபாரங்கள், பொருள்களின் விற்பனை, மிருகங்கள், விலையுயர்ந்த உலோகங்கள், நாணயப் புழக்கம், எடைகள், அளவைகள் போன்றவற்றையும் இன்னும் நகர வாழ்க்கைக்கே உரிய தனிப்பட்ட பல காரியங்களையும் அவர் மேற்பார்த்துக் கட்டுப்படுத்தி வந்தார். உளவாளிகளை அவர் தாராளமாகப் பயன்படுத்தினர். மக்களுடைய பொதுவான மனப்போக்குப்பற்றியும், இரகசியப் பெருங் குற்றங்கள் பற்றியும், அரசாங்கத்துக்கு விரோதமாக ஏற்படுத்தப்பெறும் சதிகளைப்பற்றியும் ஒற்றர்கள்மூலம் முன்னமே உணர்ந்து அவற்றைத் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை அவர் எடுத்துக் கொண்டார். ஓரளவு சமுதாயத்தின் அறநெறிக் காவலராயும் (Censor of Social Morals) அவர் திகழ்ந்தார். பெண்கள், குதிரை மீது சவாரி செய்வதை அவர் தடுக்கவேண்டுமென அனைவரும் விரும்பினர். எருது, எருமை, குதிரை அல்லது ஒட்டகங்கள் கொல்லப்படுவதை அவர் தடுத்தார். ''ஒருவரது உடலுரிமைக்கு ஊறு நேர்வதையும், மனிதர்கள் அடிமைகளாக விற்கப்படுவதையும் தடுக்க வேண்டுவது'' அவரது கடமையாகும். மங்கை ஒருத்தியை அவளது விருப்பத்துக்கு விரோதமாகத் தீயிலிட்டுக்

கொளுத்தும் வழக்கத்தையும் அவர் தடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தார். பன்னிரண்டு வயது நிரம்பப்பெறுமுன் ஒருவருக்குச் சுன்னத்துச் செய்யப்படுதலைத் தடுப்பதும் அவரது கடமையாகும். கசாப்புவேலை செய்பவர்கள், விலங்குகளை வேட்டையாடிப் பிழைப்பவர்கள், இறந்தோரைக் குளிப்பாட்டு பவர்கள், தெருக் கூட்டுபவர்கள் இன்னும் இதுபோன்ற இழி தொழிலில் ஈடுபட்ட பலருக்கும் தனியாகக் குடியிருப்புகளை ஒதுக்கித் தருவதுவும் அவரது பணியேயாகும். குறிப்பிட்ட சில நாட்களில் உயிர்வதை செய்யப்படுவதை அவர் தடுத்தார். அக்பரின் ஆணைப்படி நௌரோஜ் (Nauroz) போன்ற குறிப்பிட்ட சில பண்டிகைகளைக் கொண்டாடுமாறு[97] அவர் யாவரையும் வற்புறுத்தினர்.

(iv) காஜியும் மீர் ஆதிலும் (Qazi and Mir Adil):

சர்க்கார்களின் தலைநகர்களில் அமைதி காணும் நீதிபதிகளாக (Justices of the Peace) விளங்கியவர்கள் காஜிகளும் மீர் ஆதில் களுமாவர். காஜி என்பார், வழக்குத் தொடுத்தவர்களை நன்கு கேள்விகள் கேட்பதன்மூலம், வழக்குகளைத் தீர விசாரித்தார். "ஒவ்வொரு சாட்சியின் சாட்சியங்களையும் அவர் தனித்தனியே" குறித்து வைத்தார். சட்ட சம்பந்தமான விசாரணையானது முழுவதுமாக நடந்தேறியபின் அவர் வழக்குகளைச் சற்று ஆறப் போடுவது வழக்கம். விசாரணை சில காலம் இங்ஙனம் நிறுத்தி வைக்கப்பட்டபின் மறுபடியும் தொடங்கும். தீர மறுவிசாரணை செய்யப்பட்டபின் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. இங்ஙனம் ஒவ்வொரு வழக்கிலும் தீர்ப்பு வழங்குவதொன்றே காஜியின் கடமையாகும். "அவர், (காஜி) வழங்கிய தீர்ப்பை நடைமுறை யில் செயலாக்குவதே" மீர் ஆதில் என்பாரின் கடமையாகும்.[98]

(v) அமீல் (Amil):

நிர்வாக அமைப்பில் மிக முக்கியமான தல அதிகாரிகளுள் ஒருவராக விளங்கியவர் அமீல் அல்லது வரி வசூல் செய்பவராவர். ஒவ்வொரு சர்க்காருக்கும் ஓர் அமீல் இருந்திருக்கக் கூடுமெனத் தெரிகிறது. "எல்லாம் வல்ல இறைவனின் தனிப் பிரதிநிதியாக" அவர் கருதப்பட்டார். "ஒவ்வொருவரும் எளிதில் நெருங்கும் வண்ணம் அவர் தம் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்." கார்க்குன் (Karkun-வரி வசூல் பதிவாளர்), முக்கதம்

---

[97] Ibid., pp. 43-45.

[98] Ibid., p. 43.

(Mukkadam-ஊரின் முக்கிய வருமான அதிகாரி), பட்வாரி (Patwari-நில மேற்பார்வையாளர்) ஆகிய துணையதிகாரிகளைக் கொண்டு அவர் நிலவரியை வசூல் செய்தார். கிராமவாசிகளையும் உழவர்களையும் கிராமத் தலைவர் துன்புறுத்தாவண்ணம், மிக விழிப்போடும் கவனத்தோடும் அவர்களைப் பாதுகாக்கும்படி அரசர் தனிப்பட்ட முறையில் அமீலுக்கு அறிவுரை கூறியிருந்தார். ''ஒவ்வோர் உழவனோடும் நேர்முகத் தொடர்பு கொள்ளும்படி'' அமீல் கேட்டுக்கொள்ளப்பட்டார். அங்ஙனம் நேர்முகமாக அவர்களோடு தொடர்பு கொள்வதன்மூலம் எண்ணற்ற சில்லறைக் கொடுங்கோன்மைகளினின்றும் தொல்லைகளினின்றும் அவர்களைக் காக்கக்கூடுமென அரசர் கருதினார். ''நிலமளப்போர், வரி நிர்ணயிப்போர், இன்னும் பிற நிலவரி அதிகாரிகள் அனைவரிடமிருந்தும் பிணையத் தொகை (Security) ஒன்றை'' வரி தண்டுவோர் வாங்கினர். நில அளவை, வரி நிர்ணயம் முதலியவற்றின்மீது அமீல் ஓரளவு கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கக் கூடுமென்பது இதனால் நன்கு புலனாகிறது. குறிப்பிட்ட காலத் தவணைகளில் நிலச் சாகுபடியாளர்கள் நிலவரியைத் தாமே கொணர்ந்து நேரிடையாகத் தம்மிடம் செலுத்திவிட்டு அதற்குரிய பற்றுச் சீட்டைப் (Receipt) பெற்றுக்கொண்டு போகும்படி அவர் வற்புறுத்தினார். சாகுபடியாளரிடமிருந்து பெற்றுக்கொண்டவற்றைச் சரிவர விவரமாகத் தம் குறிப்பேட்டில் குறித்து வைக்குமாறு பட்வாரிக்கு, அமீல் அறிவுறுத்தினார். செலுத்தப்பட வேண்டிய வரித்தொகையில் நிலுவைகள் (arrears) எவையேனும் ஏற்பட்டால் அவற்றை அவர் அமீலுக்கு அறிவிக்க வேண்டும். அவ்வறிக்கையானது கிராமத் தலைவரின் ஒப்பக் கையெழுத்தைப் (attestation) பெற்றிருக்க வேண்டும். கருவூலக் காப்பாளர் துணைகொண்டு அவர் கருவூலத்தைக் கட்டுப்படுத்தினார். ''கருவூலத்தில் செலுத்தப்படுகின்ற தொகைகளை அவரே எண்ணிப் பார்த்துப் பரிசோதிக்க வேண்டும். அதன்பின் கார்குன் என்பவரிடமிருந்த தினசரிக் கணக்குப் புத்தகத்தோடு அத் தொகையைச் சரிபார்க்க வேண்டும். கருவூலக் காப்பாளரின் கையெழுத்தைக் கொண்டு அவர் அதைச் சரி பார்க்கவேண்டும். அதன்பின் அத்தொகையைப் பைகளில் இட்டு நன்கு கட்டி முத்திரையிடவேண்டும். பின்னர் அப்பைகளைக் கெட்டியான சுவர்களையுடைய ஓர் அறைக்குள் போட்டுக் கதவைத் தாழிட்டு, வெவ்வேறு வகையில் செய்யப்பட்ட பல்வேறு பூட்டுகளைக் கொண்டு இறுகப் பூட்டி விடவேண்டும். பூட்டு சாவிகளில் ஒன்றைமட்டும் தாம் வைத்துக்கொண்டு எஞ்சியவற்றை அவர் கருவூலக் காப்பாளரிடம் தந்து விடவேண்டும்.'' ஒவ்வொரு மாத இறுதியிலும், அன்றாட வரவு செலவுக் கணக்குகளை அவர் சரிபார்த்துக் கணக்கிட்டு அரசவைக்கு அனுப்பிவைக்க

வேண்டும். மொத்தம் இரண்டு லட்சம் டாம்கள் வசூலான உடனே, அவர் அதை நம்பிக்கைக்குப் பாத்திரமான பகராட்கள் மூலம் பேரரசின் தலைமைக் கருவூலத்துக்கு அனுப்பிவிட வேண்டும். இறுதியாக ஒவ்வொரு மாத முடிவிலும், அவர் தம் ஆட்சிப் பகுதியில் நிலவும் பொது நிலைமைபற்றி ஓர் அறிக்கையை அனுப்பவேண்டும். அவ் வறிக்கையில், ''மக்களின் நிலைமை, ஜாகீர்தார்களின் நிலைமை, அருகாமையில் வாசம் செய்வோரின் நிலைமை, கலகக்காரர்களின் சரணாகதி, சந்தையின் விலைவாசிகள், குடியிருப்புக்களின் அப்போதைய வாரங்கள், 'ஏழை-அநாதைகளின் நிலைமை, சூழ்ச்சிக்காரர்கள், இன்னும் பல தற்செயலான நிகழ்ச்சிகள்''[22] ஆகியவைபற்றிய விவரங்கள் அதில் அடங்கியிருக்கவேண்டும். பழைய பிரிட்டிஷ் மாவட்டக் கலெக்டர் அல்லது மாவட்ட ஆளுநரின் முன்னோடியாக உண்மையில் அவர் விளங்கினார். மக்களையும் மன்னனையும் இணைத்து வைக்கும் சங்கிலியாக அவர் விளங்கினார். நாட்டின் நல்லாட்சியும், முடியரசின் நிலைபேறும், அவருடைய திறமை, நாணயம், நேர்மை இவற்றைப் பொறுத்தே அமைந்தன எனலாம். அவரது அலுவலகப் பட்டம் அமீல் எனப்படும். மக்களிடமிருந்து என்னென்ன வரிகள் வாங்க வேண்டுமென்பது பற்றியும், அவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றியும் மத்திய அரசினரிடமிருந்து சதா அறிவுரைகள் அவருக்கு வந்துகொண்டே யிருந்தன. இறுதியாகக் ''கொத்தவால் என்பார் ஓரிடத்தில் இல்லாதபோது, அமீல் அவருடைய கடமைகளையும் தாமே மேற்கொள்ளவேண்டும்.'' இவர்களேயன்றிக் குரோரிகள் (Kroris) என்ற ஒருவகை அதிகாரிகளும் இருந்தனர். அவர்கள் அக்பரால் தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்டவர்கள். ஒரு கோடி டாம்களுக்கு (Dams)மேல் வரி வசூலாகின்ற இடங்களில் அவர்கள் நியமிக்கப்பட்டனர். அப்படிப்பட்ட வருமான மாவட்டங்களாகவே அக்பர் முதலில் தமது பேரரசைப் பிரித்திருந்தார். ஆனால், பிற்காலத்தே அவர் அம் முறையைக் கைவிட்டுவிட்டார். பிரிட்டிஷ் இந்தியாவின் ஜமீன்தார் போன்று அவர் ஏறத்தாழ விளங்கினார். ஆனால், உண்மையில் வரி தண்டுபவர்களாகவே அவர்கள் இருந்தனர்.

(vi) பிதிக்ஷி (Bitikchi):

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து, அமீல் என்பார் தம்முடைய ஏராளமான கடமைகளைத் தமக்குக் கீழ்ப் பணிபுரியும் ஏராளமான சிப்பந்திகளைக் கொண்டே நல்ல முறையில் செய்திருக்கக் கூடு

[22] Ibid., p. 50.

மென்பதை உய்த்துணர்ந்துகொள்ளலாம். அத்தகைய சிப்பந்திகளில் மிக முக்கியமானவர் பிதிக்ஷி என்பவராவர். அவர் ஓர் எழுத்தர் (Scribe). இக் காலத்திய அலுவலகங்களின் பதிவாளருக்கு (Registrar) ஒப்பாக அவரைக் கருதலாம். கானுங்கோக்களால் (Qanungos) அளிக்கப்படும் தகவல்களுக்கேற்ப அவர் பயிர்களின் நிலைமையைக் குறித்து வைத்தார். சாகுபடியாளர்கள் கலந்துகொண்ட எல்லா நிகழ்ச்சிகளையும் அவர் குறித்து வைத்தார். கிராமங்களின் எல்லைகளை வகுத்தவர் அவரே. சாகுபடிக்குத் தகுதியான நிலங்கள் எவ்வளவு, தகுதியற்ற நிலங்கள் எவ்வளவு என்பதை எல்லாம் மதிப்பிட்டுச் சொல்வதும் அவரது கடமையாகும். "முன்சீப், மேற்பார்வையாளர், நிலமளப்போர், தாணுதார், சாகுபடியாளர், கிராமத் தலைவர் ஆகியோரின் பெயர்களை அவர் குறித்து அவற்றுக்குக் கீழ்ச் சாகுபடி செய்யப்பட்ட பொருளின் தன்மையையும் குறிக்க வேண்டும்."[100] கிராமத்தில் வரி வசூல் செய்யும் பணியைப் பட்வாரி, முக்கதம் ஆகிய இரண்டு அதிகாரிகளும் மேற்கொண்டனர். அவர்கள் சர்க்காட் (Sarkhat), அதாவது, ஒரு நினைவுக் குறிப்பைச் சாகுபடியாளனுக்குக் கொடுத்தபின் வரி வசூல் செய்தனர். பட்வாரி, முக்கதம் ஆகியோரால் வைத்திருக்கப்பெற்ற பட்டியல்களான கஸ்ரா (Khasra)வையும், சர்க்காட்டையும் ஒருங்கே வைத்து ஒப்பிட்டுப் பரிசோதிக்க வேண்டிய கடமை பிதிக்ஷியினுடையதாகும். தம் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளில் வசூல் செய்யப்பெற்ற தொகைகளைப்பற்றியும், வருமான நிலுவைகள்பற்றியும், கருவூலத்தில் எவ்வளவு வரவு வந்தது, எவ்வளவு செலவுக்காக வழங்கப்பட்டது என்பதுபற்றியும் தகவல்களை மாதமொருமுறை மத்திய அரசவைக்கு அனுப்பி வைக்கவேண்டுவதும் அவரது கடமையாகும்.

(vii) ஃபோட்டாதார் (Fotahdar):

பதிவாளர் (Registrar), பிதிக்ஷி முதலியோரைப்போன்று ஃபோட்டாதார் என்ற பொருள்காப்பாளரும் மிகப் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்தவராவார். "கெட்டியான சுவர்களையுடைய ஓர் அறையில் அவர் பொருளை வைத்திருக்க வேண்டும். அங்ஙனம் வைத்திருப்பது ஷிக்தார் (Shiqdar), பதிவாளர் ஆகியோருக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஒவ்வொரு மாலையிலும் இருப்புத்தொகை எவ்வளவு இருக்கிறதென்பதை அவர் எண்ணிப் பார்த்துக் குறித்துக்கொள்ளவேண்டும். அக் குறிப்பில் அமீலின் கையெழுத்தைப் பெறவேண்டும். தினசரிக் கணக்குப் புத்த

[100] Ibid., p. 51.

கத்தையும், பதிவாளரின் கணக்கையும் ஒப்பிட்டுச் சரிபார்த்த பின் அக் குறிப்பில் அவர் கையெழுத்திட்டு இதன்மூலம் 'அது சரி' என்பதற்குச் சான்று தரவேண்டும்.''[101] திவானிடமிருந்து பற்றுச் சீட்டுகள் (Vouchers) வந்தாலன்றி எந்தத் தொகையையும் செலவுக்கு வழங்கக்கூடாதென ஆணையிடப்பட்டிருந்தது. ''காலதாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகள் எவையேனும் இருப்பின், பதிவாளர், ஷிக்தார் ஆகியோரின் இசைவின்பேரில் அவர் பணம் வழங்கலாம். வழங்கியபின் அதை அவர் அரசாங்கத்துக்கு விளக்கி எழுதவேண்டும்.''[102] இங்ஙனம் பொருள் வழங்கல் சம்பந்தமான (Disbursements) அதிகாரம் முழுவதும் திவானின் கைகளிலேயே இருந்தது. வரி தண்டுபவர், கருவூலத்தின் வரவைமட்டுமே கவனித்துக்கொண்டார்.

பர்கானா

சர்க்கார்களைப்பற்றி இதுவரை பார்த்தோம். சர்க்கார்களில் பர்கானாக்களும் கிராமப் பர்கானாக்களும் அடங்கி இருந்தன. பர்கானாவின் தலைநகரில் அமைதி நிலைநாட்டும் பணியைத் தானாதாரும் (Thanadar) பொருளாளர் பணியைப் ஃபோட்டாதாரும், அவருடைய கூட்டாளியும் முக்கிய நிதி அதிகாரியுமான ஷிக்தாரும் மேற்கொண்டனர். இவர்களையன்றி வருமான வரி அதிகாரிகளாயிருந்த கானுங்கோவும், தாசில்தாரும் அங்குப் பணியாற்றி வந்தனர். கானுங்கோ என்பார் ''உழவர்களின் புகலிடமாய்த் திகழ்ந்தார்.''[103] ஏனெனில், அவரிடமிருந்தே பர்கானாவின் ''நிகழ்கால, சென்றகால, வருங்கால நிலையானது உய்த்துணரப்பட்டது.''[104] பர்கானாவின் பொதுவான பொருளாதார நிலைபற்றி அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். நிலங்களை அளத்தலிலும், வரி நிர்ணயம் செய்வதிலும் அவர் நேரிடையாகத் தொடர்புகொண்டிருந்தார். தாசில்தார் என்பவர் அரசருக்குச் சேரவேண்டிய வரிகளை வசூல் செய்பவராக ஒருவேளை இருந்திருக்கக்கூடும்.

இவர்கள் இருவரையும் தவிர, முன்சிஃப் என்ற இன்னொருவரும் குறிப்பிடப்படுகின்றார். கானுங்கோவும், தாசில்தாரும்

[101] Ibid., p. 53.
[102] Ibid.
[103] Ibid., p. 72.
[104] Elliot and Dowson, Vol. IV, p. 414.

பர்காணு நிலங்களுடைய வரிகளை நிர்ணயம் செய்வதையும் வசூல் செய்வதையும்மட்டுமே தனிப்பட்ட முறையில் கவனித்துக்கொண்டிருந்த வேளையில், முன்சீஃப் என்பார் பர்காணுவின் பொதுவான ஆட்சி நிர்வாகத்தை மேற்கொண்டாரெனக் கொள்ளலாம். ஷெர்ஷாவின் ஆட்சியில் குதிரைகள் சூடு போடப்படுவதையும், எல்லைப் புறங்களில் படைக்கு ஆள் திரட்டப்படுவதையும் அவர் கண்காணித்ததாகத் தெரிகிறது. அக்பரது ஆட்சியிலுங்கூட அவர் அதை ஒத்த பணியையும் செய்து வந்திருக்கக்கூடும். ஏனெனில், ஒவ்வொரு பர்காணுவிலிருந்தும், மாநிலப் படைக்கும், மத்தியப் படைக்குமாகக் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட படைப்பகுதிகளைப் பர்காணு அதிகாரிகள் அனுப்பி வைக்கவேண்டும் என்பது அக்பர் காலத்துக் கட்டாயமாயிருந்ததெனக் கேள்விப்படுகிறோம். அப்படியானால் அத் துருப்புகளை அனுப்பி வைத்த பர்காணு அதிகாரி யார் என்ற கேள்வி பிறக்கிறது. பர்காணு அதிகாரிகளின் பட்டியலில், இப் பணியானது முன்சீஃப் ஒருவரைத் தவிர வேறு எவர்மீதும் சுமத்தப்பட முடியாதென்பதையே நாம் உணர்கிறோம்.

கிராமங்கள் பல ஒன்று கூட்டப்பட்டு ஒரு பர்காணுவாக ஆக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் பட்வாரி, முக்கதம் என்ற இரண்டு அதிகாரிகளும் அரசாங்கத்துக்கும் குடியானவர்களுக்குமிடையே நடுவர்களைப்போன்று நின்று பணிபுரிந்து வந்தனர். பட்வாரியும் முக்கதமும் கிராமத்தின் வரிகளை வசூல் செய்ததோடு, சாகுபடியாளர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருந்த நிலத்தின் அளவு, அவற்றினின்றும் வரவேண்டிய வாரம் இவைபற்றிய செய்திகளையுட்கொண்ட ஒரு தகவற்பட்டியலையும் தயார் செய்து வைத்திருந்தனர். குடியானவர்களுக்குச் சர்க்காட் (Sarkhat) அல்லது நினைவுக் குறிப்பை வழங்கவேண்டியதும் அவரது கடமையாகும். கிராமத்தின் நில அளவையின் பிரதி ஒன்றைப் பட்வாரி வைத்திருந்தார். அதற்கு கஷ்ரா (Khasra) என்று பெயர். கிராமத்தில் அமைதியையும் ஒழுங்கையும் காத்து வந்தவர் பெரும்பாலும் முக்கதம் என்ற அதிகாரியாகத்தான் இருந்திருக்கக் கூடும்.[105] அப் பணியோடு கூட, அவர் வரி வருமானத்தை வசூலித்துத் தரும் பொறுப்பையும் மேற்கொண்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அக்பர் காலத்திய கிராம ஆட்சிமுறை இங்ஙனமே அமைந்திருந்தது.

[105] Ain-i-Akbari, Vol, II, pp. 49-53, 72, 88.

அக்பர் காலத்திய இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படக் கூடியதொரு தகைமையைப் பெற்றிருத்தல் (Universal Competance of Indo-Islamic Polity under Akbar)

அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் ஒரு சில தனிப்பண்புகளைப்பற்றி ஒரு சில பொதுவான கருத்துக்களைக் கூறி, அக்பரது ஆட்சி முறைபற்றிய இவ்வாராய்ச்சியை முடிப்போமாக! அக்பர் உண்மையிலேயே ஆக்கத் திறன் வாய்ந்த ஒரு மேதையாவார் (Constructive genius) எனினும், அவர் சொந்தமாக ஒன்றைப் படைத்தார் என்பதைவிட, ஏற்கெனவே இருந்தவற்றை ஒருங்கு இணைப்பதிலேதான் இணையற்று விளங்கினார் எனக்கூறல் தகும். ஏற்கெனவே உள்ளதும், ஏனையோர்க்குத் தென்படாததுமான ஒன்றைக் கண்டுபிடிப்பதிலும், அதைப் புதிய முறையில் பொருள் பண்ணுவதிலும் அக்பர் தனிப்பட்ட ஒரு திறமை கொண்டவராய் விளங்கினார். சதா திரிந்துகொண்டும் தேய்ந்துகொண்டும் வந்த இந்திய அரசியல் மரபுகள் கூட்டத்தினிடையே ஒரு சில மிகப் பயனுள்ள கருத்துக்களையும் நிறுவனங்களையும் அவர் கண்டுபிடித்தார். கண்டுபிடித்தவற்றைத் தம் நோக்கத்திற்கேற்ப மிகமிகக் கவனத்தோடும் உற்சாகத்தோடும் அவர் மாற்றி அமைத்துக் கொண்டார். இந்திய அரசியல் மரபுகளின்படி அரசர் இந்நிலவுலகில் தோன்றியுள்ள கடவுட் பிரதிநிதியெனக் கருதப்பட்டார். மக்களின் அன்பையும் விசுவாசத்தையும் கிளறிவிடுவதற்கு, மிகவும் பயனுள்ள முறை ஒன்று இக் கருத்தில் பொதிந்து கிடப்பதை அக்பர் கண்டுகொண்டார். வேண்டுமென்றே அவர் இந்துக்களைத் தம் ஆட்சித் துறையில் சேர்த்துக்கொண்ட போதும் அல்லது இந்துக்களோடு திருமணத்தொடர்பு கொண்ட போதும், காலம், இடம் அறிந்து சமயத்துக்கேற்றபடி நடந்து கொண்டாரென்றோ அல்லது உணர்ச்சி மயமான உறவுமுறைகளுள் எல்லாம் மிகமிக மென்மையான ஒரு தொடர்பை நாட்டுப் பணிக்கெனப் பயன்படுத்திக்கொண்டாரென்றோ கொள்வது பெரிதும் உண்மையே எனினும், அவற்றின்மூலமாக வரம்பற்ற தம் முடியாட்சிக்கு (Absolute Kingship) அல்லது தெய்விக உரிமைபெற்ற முடியரசுக்குத் தக்க ஒரு பக்கபலத்தைத் தேடிக் கொண்டாரெனக் கொள்வதே உண்மைக்குப் பொருத்தமானதாகும். ஏனெனில், பொதுவாக இந்துக்களும், சிறப்பாக இராஜபுத்திரர்களும்மட்டுமே அவரால் கொண்டாடப்பட்ட தெய்விக உரிமையை மதித்துப் போற்றுவர் என்பதையும், அதோடுகூடத் தங்களது விசுவாசத்தின்மூலம் அம் மதிப்பை நடைமுறையில்

காண்பிப்பர் என்பதையும் அக்பர் நன்கு உணர்ந்திருந்தார். அவர்களிடமிருந்து பெறக்கூடிய ஆதரவை நன்கு வலுப்படுத்த இந்து அரசியல் மரபுகள் சிலவற்றை அவர் கடைப்பிடிக்கலானார். தம்மைத் தராசில் நிறுத்துத் தம் எடைக்கு எடை தங்கத்தை அல்லது விலையுயர்ந்த உலோகத்தை வறியோர்க்கு வழங்குகின்ற ஒரு வழக்கத்தை, அதாவது துலாதானம் என்ற சடங்கை அவர் கடைப்பிடித்தார். ஜரோகாவிலிருந்து மக்களுக்குத் தரிசனம் தரும் வழக்கம், ரக்ஷாபந்தனம், தீபாவளி போன்ற இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடும் வழக்கம் முதலியவற்றை அவர் மேற்கொண்டார். குரானில் விதிக்கப்பெற்றுள்ள நிபந்தனைகளுக்கு எதிராக அவர் ஓவியர்கள், இசைவாணர்கள், இந்து தத்துவ சாஸ்திரிகள், துறவிகள், ஆன்மிகத் தலைவர்கள் முதலியவர்களை ஆதரித்தார். இந்து இலக்கியங்களையும், சம்ஸ்கிருதப் படிப்பையும் அவர் ஆர்வத்தோடு வளர்த்தார். இந்து மதத்துக்கும் முஸ்லிம் மதமல்லாத வேறு மதங்களுக்கும் அவர் சமயப் பொறையை வழங்கியபோதும் அல்லது வட இந்தியாவிலிருந்து தக்காணம் வரை ஒரு பாதையைச் சாத்பூரா மலைகளுக்கிடையேயுள்ள கணவாய்கள் வழியாக அமைத்தபோதும், அல்லது ஆக்ராவிலிருந்து லாகூர் வரை ஒரு பாதையை அமைக்க முயன்ற போதும் அவர் மௌரியர்கள் காலத்திலிருந்து கடைப்பிடிக்கப் பட்டுவந்த இந்திய அரசாங்க மரபுகளையே தொடர்ந்து கைக்கொண்டாரேயன்றி வேறன்று: அவர் திருமணவரியை மக்கள்மீது சுமத்தினாரென்றால், விஜயநகரப் பேரரசு போன்ற இந்திய அரசுகள் கைக்கொள்ளக்கூடிய ஒரு கொள்கையையே அவர் கடைப்பிடித்தார் என நாம் அறிகிறோம். திருமணங்களைக் கண்காணிப்பதற்கென அவர் இரண்டு மேற்பார்வையாளர்களை-தாய் பேகியை-நியமித்துப் பெண், மாப்பிள்ளை இருவரது நிலைமைகளையும் நன்கு பரிசீலனை செய்யும்படிக் கட்டளையிட்டபோதும், ஸ்ரீதனங்களையும் பொருந்தாத் திருமணங்களையும், சதி என்ற வழக்கத்தையும் அவர் கண்டித்தபோதும் இந்துக்களால் போற்றப்படுகின்ற ஒரு கொள்கையை, அதாவது நல்லரசர் ஒருவர்க்குத் தேவையான பண்பை, தம் குடிமக்களைத் தந்தை போல் புரத்தல் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தாரேயன்றி வேறன்று. பொது மக்களால் விரும்பப்படுகிற கேளிக்கைகளையும், உணவையும், உடையையும், பட்டினி கிடக்கும் வழக்கத்தையும் அவர் குறை கூறியபோது மௌரிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறை மரபுகளுக்கும், அர்த்த சாஸ்திரத்தால் போதிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கும் ஏற்பவே நடந்துகொண்டாரென்பது தேற்றம். இத்தகைய ஓர் அரசராக அவர் நடித்ததன்மூலம், இந்துக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் முறையில் நடந்துகொண்

டாரென்றே கூறலாம். அவரது நடத்தையின்மூலம் அவர் ஓர் அந்நியர் என்ற எண்ணத்தையே மக்கள் மனத்தினின்றும் அகற்ற முடிந்தது. அதுதான் அவரது கண்டுபிடிப்பாகும்.

அது மட்டுமின்றித் தாம் வாழ்ந்த காலத்தின் இயல்பை நன்கு புரிந்துகொண்டு தக்க முறையில் அவர் அதைப் பயன் படுத்தினர். அவரது நிலையில் அவரைப்போல் இருந்த எவருமே அவரைவிடச் சரியாக அக் காலத்தைப் பயன்படுத்தியிருக்க முடியாதென்றே கூறலாம். ஒரு புதிய மதத்தின் கர்த்தா என அவர் தம்மை அறிவித்துக்கொண்டபொழுது, அவர் தம் காலத்தே வாழ்ந்த பலரைப் பின்பற்றியே அங்ஙனம் செய்தா ரெனக் கூறலாம். அவர்கள் அங்ஙனம் கொண்டாடிய உரிமையை எவரும் மறுக்கவில்லை என்றல், அக்பரால் கொண்டாடப்பட்ட உரிமையும் மறுத்தற்கியலாததொன்றே எனலாம். அதிலும் சிறப்பாக அவர் கொண்டாடிய உரிமையானது, அரசியல் சமாதானத்தையும், தேசீய ஒற்றுமையையும் வளர்க்க வேண்டு மென்ற எண்ணத்தால் உந்தப் பெற்று அதன் அடிப்படையில் தோன்றியதென்பதை நாம் பார்க்கும்போது அது மேலும் மறுக்கக் கூடாததொன்ருக ஆகிவிடுகின்றது. இந்த முயற்சியில் அவர் ஈடுபட்டதுங்கூட, அவர் ஏதோ புதியதொரு நடவடிக் கையில் ஈடுபடுவதாகவோ, அரசருக்குரிய கடமைகளினின்றும் அவர் புறம்பே செல்வதாகவோ இந்துக்களுக்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ தோன்றவில்லை. ஏனெனில், இந்துக்களுக்கு அவர் ஓர் ஆன்மிக வழிகாட்டியாகவும் அக் காலத்தை ஆக்கு பவராயும், அதாவது 'காலஸ்ய காரண'மாகவும் தோன்றினர். முஸ்லிம்களுக்கு அவர் நபிநாயகராகவும் அரசராகவும் ஒருங்கே இருப்பதாக, அதாவது மகமதுவைப்போல் அவர் நடந்து கொள்வதாகத் தோன்றிற்று. இந்தப் பரிசோதனைகளின் மூலமாகப் பெருமளவு உற்சாகமும், உண்மையான அன்பும் விசுவாசமும் மக்களிடையே கிளர்ந்தெழுந்தன. இவற்றின் திரண்ட விளைவுகளே அவருக்குக் கீழ்த் தோன்றிய இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறையின் சார மாகும். எனவே, அக்பர் காலத்து இந்தோ-இஸ்லாமிய அரசிய லமைப்பு ஒழுங்கு முறையானது இந்துக்களின் அரசியல் மரபுகளில் பெரிதும் வளைந்து கொடுக்கக்கூடிய ஒரு சில கூறுபாடுகளின் கூட்டுறவு வடிவமாகத் திகழ்கிறது எனலாம். இந்து மரபுகளே யன்றிக் கலீஃபாக்களிடமிருந்து அவருக்குப் பரம்பரையாக வந்த சொத்துக்கள் எனக் கருதக்கூடிய நிறுவனங்களின் நல்லியல்புகள், தைமூரின் இறைமை, டில்லி சுல்தானிய ஆட்சி முறை ஆகியவற்றின் நற்பண்புகள் யாவும் அவரது அரசிய

லமைப்பில் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன எனலாம். நபிநாயக அரசர் (Prophet - King) என்ற குறிக்கோளானது அக்பரால் சொந்தமாக உண்டாக்கப்பட்டதொன்றாகும். அதன்மூலமாக அரசியல் ஒற்றுமையை நிறுவ எண்ணினார். இந்தக் காரணிகள் யாவும் சேர்ந்து இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறைக்குப் புதியதொரு சிறப்பியல்பை உண்டாக்கின. அஃது அரசு, சமயம் ஆகிய இருபெருந் துறைகளும் கொண்டாடிய முரண்பட்ட உரிமைகளை ஒன்றுபடுத்த முயன்றது. அம் முயற்சியில் சமயமானது அரசின்மேல் ஆதிக்கம் செலுத்தாவண்ணம் அது பாதுகாத்தது. இந்திய மரபுகளும் முஸ்லிம் நிறுவனங்களும் ஒருங்கே இயைந்து காணப்பட்டன. அக்பரது மேதையின் முத்திரையானது அதில் நன்று பொறிக்கப்பட்டுக் கிடந்தது. இத்தகைய இணைப்புக் காரணமாக இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறைக்கு ஒரு தனிப்பட்ட பெருமை ஏற்பட்டது. டில்லி சுல்தானிய அரசானது என்றுமே கண்டிராததும் குடிமக்களால் என்றுமே வழங்கப்படாததுமான ஒரு தகுதியை அக்பர் கொண்டாட முடிந்தது இதனால்தான் எனலாம். மக்களது வாழ்க்கையின்மீது எவ்வளவு விரிவான ஆதிக்கத்தை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு பெரிய ஆதிக்கத்தை அக்பரது அரசு அடைய முயன்றது. மக்களுடைய அரசியல் விசுவாசத்தையும் சமய நம்பிக்கைகளையும் ஒன்றாக்குவதற்காக அக்பர், தீன் இலாஹி என்ற புதிய மதத்தை ஏற்படுத்தியதோடுகூட நாம் ஏற்கெனவே கண்டபடி எல்லா வழிகளிலும் மக்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி நல்வழியில் நடத்தப் பெரிதும் முயன்றார். இம் முயற்சியில் ஒரு பொதுமைத் தன்மை அல்லது யாவரும் ஒப்புக்கொள்ளும் தன்மையைக் காணலாம். அனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற ஒரு பொதுத் தன்மையானது அக்பரது அரசின் ஒரு சிறப்பியல்பாகும் எனக் கூறலாம். உணவுபற்றியும், உடைபற்றியும், உல்லாசக் கேளிக்கைகள், சமுதாய அறநெறிகள், திருமணங்கள், சீதனம், சதி, கல்வி, பொருள்களின் விலைகள் முதலியனபற்றிய விதிகள் ஆகியவை இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையானது ஒரு புதிய சிறப்பியல்பைப் பெற்றுள்ளதைக் காட்டுகின்றன. அதாவது, பல நூற்றாண்டுகளுக்குமுன் அசோகருடைய அரசானது எய்திய சிறப்பியல்பை அது பெற்றதாகக் கூறலாம். எனவே, இறுதியாக அக்பர் காலத்து இருந்த இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையானது பல்வேறு கோட்பாடுகளும் நிறுவனங்களும் ஒருங்கு இணைந்த தன்மையுடையதாய், அனைவருக்கும் பொதுவான கருத்துக்களை உடையதாக விளங்கியதென்று உறுதியாகக் கூறலாம். இத்தகைய இணைப்பும்

பொதுமையும், அவற்றைத் தோற்றுவித்தவர் இறந்துவிட்ட பின்னரும் நெடுநாளைக்கு அவ்வரசியலமைப்பில் தொடர்ந்து காணப்பட்டு வந்தன. அதன் விளைவாகவே பின்னால் வழிவழி வந்த பல தலைமுறைகளில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சிகளையும் கடுந் துயர்களையும் கடந்து அது நெடுநாள் வாழ முடிந்தது.

16. அவுரங்கசீபின் வகுப்புவாதக் கொள்கையானது இந்தோ-இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையின் அடிப்படையையே குலைத்துவிடுதல்

(Aurangazeb's Communalism undermines the Foundations of Indo - Islamic Polity)

அக்பரால் உருவாக்கப்பெற்ற முடியாட்சி மரபுகள்

1605ஆம் ஆண்டில் அக்பர் உயிர் நீத்தபொழுது, பல்லாற்றானும் தனிச் சிறப்புக்களுடன் மிளிர்ந்ததோர் அரசினைத் தமக்குப் பின் அவர் விட்டுச் சென்றாரென்றே கூறலாம். பரப்பில் விரிந்ததாய், வளம் நிறைந்ததாய், திறமிக்க ஆட்சித்துறை அமைப்பை உடையதாய், பேரரசுக்குரிய பெருமை எல்லாம் கொண்டதாய் அவரது அரசு விளங்கியதோடு மட்டுமின்றி, அவரால் உண்டாக்கப்பெற்ற புதிய சில நிறுவனங்களையும், மரபுகளையும் உட்கொண்டதாய்த் தனிச் சிறப்புடன் அது விளங்கியது. அனைவர்க்கும் பொதுவான அதன் தன்மையும், தனித்தலைமையும், அரசரது ஆளுமையின் (Personality) மூலமாக வெளிப்போந்தன. அவர் தெய்விக உரிமையின் வழியே நாட்டை ஆண்டார். கடவுளின் சாயையாக அவர் திகழ்ந்தார். உலகியல் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் ஒரு சிறிதும் பிழைபடாத் தன்மையை (Infallibility) அவர் தமது தனியுரிமையாய்க் கொண்டாடி வந்தார். அரச பதவியானது மனிதர்களால் எய்துதற்கரிய (Superhuman) மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டது. அரசரது உடம்பில் தெய்வத் தன்மையின் புனிதம் பொதிந்து கிடப்பதாக எண்ணப்பட்டது. முன்னைய முஸ்லிம் மன்னர்கள் காலத்தில் இருந்ததுபோன்று அரசாங்கமானது பாதிக்குப் பாதி சமயச் சார்புடையதாகவும் (Semi-Religious)

ஒருதலைப்பட்சமான மனப்போக்கு உடையதாகவும் இருக்க வில்லை. அது சமயச் சார்பற்றதாக (Secular) மாறிவிட்டது. எல்லா மக்களின் நன்மையைப் பெருக்கும் வகையில் நாட்டிலுள்ள சமயங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்துகின்ற உரிமையுடன் அது விளங்கிற்று. தமது ஆட்சியில் எல்லா மதங்களுக்கும் சம உரிமை உண்டு என அக்பர் அறிவித்தார். அவரது ஆட்சித் துறையில் எல்லா வகுப்பினரும் ஒத்துழைத்தனர். அரசபதவியில் பொதுமக்களின் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றதாய் அமைகின்ற வெளிப்பகட்டையும் அக்பர் கடைப்பிடிக்கத் தவற வில்லை. ஜரோகாவில் நின்று பொதுமக்களுக்குத் தரிசனம் தருவதன்மூலமும் தமது பிறந்தநாள் விழாவில் துலாதானம் செய்து, அதாவது, தமது எடைக்கு எடை தங்கத்தையும், விலையுயர்ந்த பொருள்களையும் நிறுத்து அனைவர்க்கும் வழங்குவதன் மூலமும், பொதுமக்களால் விரும்பிக் கொண்டாடப்படுகின்ற பண்டிகைகளான, ராக்கி (Rakhi-ரக்ஷாபந்தனம்), தீபாவளி (Divali), நௌரோஜ் (Nauroz), முகர்ரம் (Muharram) முதலியவற்றைக் கொண்டாடுவதன்மூலமும், தத்துவ சாஸ்திரிகள், துறவிகள், கல்விமான்கள் முதலியவர்களோடு அளவளாவுதலாலும் சாதி சமய வேற்றுமையின்றி எல்லா மக்களுடைய கலை இலக்கியங்களையும் ஆதரித்தலாலும், இன்னோரன்ன பல செய்கைகளின்மூலமாயும் அவர் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார். அக்பரால் உருவாக்கப்பெற்ற முடியாட்சி நிறுவனத்தோடு தொடர்புகொண்ட மரபுகள் இத்தகையனவேயாகும்.

அக்பரின் வழித்தோன்றல்கள் அவரால் போற்றி வளர்க்கப்பட்ட மரபுகளைக் கைவிடல்

புதியதோர் உணர்வால் (Spirit) உந்தப்பட்டே அக்பர் மக்களிடம் அவ்விதம் நடந்துகொண்டார். அவ்வுணர்வின் அடிப்படையில் தோன்றியவையே மேற்கூறப்பட்ட செயல்கள் யாவுமாகும். நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி இவை யாவும் தந்தை மனப்பான்மையை (Paternalism) அல்லது மக்களின் நன்மையை நாடும் யதேச்சாதிகார மனப்பான்மையை (Benevolent Autocracy) அதாவது, மக்களின் விருப்பு வெறுப்புகளை மதித்துப் போற்றி அதற்கேற்ப நடந்துகொள்ளும் ஒரு மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டவையாகும். மக்களோடு தாராளமாகப் பழகுவதை அக்பர் பெரிதும் விரும்பினார். ஏனெனில், அதன்மூலமே தம் குடிகளின் விருப்பு வெறுப்புகளைப் புரிந்து கொள்ள முடியுமென அவர் நம்பினார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. மிக அசாதாரணமான முறையில் அவர் தம்

நோக்கத்தில் வெற்றி பெற்றார். அதனாற்றான் அவர், மக்களின் மீது அத்தனை பெரிய ஆதிக்கத்தைச் செலுத்த முடிந்தது. அத் தகைய ஆதிக்கத்தைக் குடிமக்களின்மீது செலுத்தும் உரிமையைக் கொண்டாடக்கூடிய மன்னர்கள் மிகக் குறைவு. அதிலும் உண்மையிலேயே அத்தகைய ஆதிக்கத்தைச் செலுத்தக்கூடிய வர்கள் மிக மிகக் குறைவென்றே கூறலாம். மக்களின் இதயங் களின்மீது ஆட்சி புரியும் அரசராகவே அவர் முதலில் விளங்கினார். பின்னரே அவர் ஒரு பேரரசின் வேந்தராக விளங்கினார். அதிலேதான் அவரது பெருமையும் அவரால் விட்டுச் செல்லப்பட்ட மரபுகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் சிறப்பும் அடங்கிக் கிடக்கின்றன. எனவே, அவருக்குப் பின் வந்தவர்களின் பொறுப்பு அதிகமாகிவிட்டது. சமா ளிப்பதற்குக் கடினமான ஒரு காரியம் அவர்களை எதிர் கொண்டழைத்தது. அக்பரின் நிறுவனங்களுக்கும் மரபுகளுக் கும் உயிரூட்டத்தக்க வகையில் அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. பேரரசை ஆட்சி புரியும் பெரும் பணியில் அவர்கள், அக்பரின் தனிச்சிறப்புகளாய்த் திகழ்ந்த திறமையையும் ஒத்துணர்வையும், தைரியத்தையும், ஒப்புரவையும் ஈடுபடுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படிச் செய்தாலன்றி அவருடைய நிறுவனங்களை யும், மரபுகளையும் உயிருடன் வைத்திருக்க இயலாதென்பதை அவர்கள் நன்கு உணர்ந்தனர். எனினும், நடைமுறையில் அவர்கள் அங்ஙனம் நடந்துகொள்வது பெரிதும் கடினமா யிருந்தது. சான்றாக, மன்னர் என்பவர் உண்மையிலேயே கடவுளின் சாயை என்றோ, அல்லது ''உலகியல் துறை, ஆன்மிகத் துறை இரண்டிற்கும் அவர் இறைமை வாய்ந்தவர்'' என்றோ மக்களுடைய மனத்தில் ஓர் எண்ணத்தை ஏற்படுத்து வதென்பது அவ்வளவு எளிதாயில்லை. இஸ்லாமியச் சமய குரவரான கலீஃபா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்ட சுன்னி முஸ்லிம் அரசர்களுக்கு, சமயப் பொறைக் கொள்கையின் உட்கருத்தை நன்கு புரிந்துகொள்வதும் அவ்வளவு எளிதாயில்லை. டில்லி சுல்தானிய அரசாங்கத்தின் தனி இயல்புகளெனக் காட்சி யளித்த குருமார்களின் ஆதிக்கம், சிலைகளை வணங்கும் இஸ்லாமியரல்லாதாரின் சிலைகளை உடைத்தெறிய வேண்டு மென்ற சமயவெறி இவை உலவிய ஒரு பின்னணிச் சூழலில் சமயப் பொறையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள் வதென்பது அவ்வரசர்களுக்குச் சற்றுக் கடினமானதாகவே இருந்தது. அக் கொள்கையை நாட்டின் வழிகாட்டிக் கொள்கையாகக் கொள்வதென்பது அவர்களுக்கு இன்னும் கடினமான செயலாகவே இருந்தது. அதுமட்டுமன்று; சமயப்

பொறைக் கொள்கையைக் கடைபிடிக்குமாறு அக்பரைத் தூண்டிய சூழ்நிலைகளும் நாளடைவில் மாறிப்போயின. அக்பர் பட்டத்துக்கு வந்தபோது இருந்த ஒரு சூழ்நிலை, அவருக்குப் பின் வந்த மூன்று அரசர்கள் காலத்திலும் இல்லை என்றே சொல்லலாம். அக்பருக்குப் பின், மொகலாய ஆட்சி என்பது நன்கு நிலையாக அமையப்பெற்றதொரு நிறுவனமாகவும், மக்களில் பல வகுப்பினராலும் விரும்பப்படுவதொன்றாயும் மாறிவிட்டது. மொகலாயர்களின் மிகப் பெரும் பகைவர்களாக இருந்த இராஜபுத்திரர்கள் படிப்படியாக மொகலாயரின் நண்பர்களாக ஆக்கிக்கொள்ளப்பட்டனர். அவர்களுடைய வீரம் செறிந்த ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொண்டு மொகலாயர்கள் ஒரு பேரரசை ஏற்படுத்தினர். ஆப்கானியர்களை அறவே ஒழிக்கவும் அவர்களை மொகலாயர்கள் பயன்படுத்திக்கொண்டனர். இங்ஙனம், மொகலாய ஆட்சி நன்கு நிலைபேறு பெற்றுவிட்டது. அதோடு திறமிக்கதோர் ஆட்சி முறையும் நன்கு அமைக்கப்பட்டுவிட்டது. வரம்பற்ற முடியாட்சிக்கு வகை செய்யக்கூடிய ஆதாரங்கள் யாவும் நன்கு உறுதியாக அமைக்கப்பட்டுவிட்டன. மன்னரின் செங்கோலுக்கு ஒரு தெய்விகத் தன்மை கற்பிக்கப்பட்டது. தெய்விகத் தன்மை நிறைந்த ஒரு புனிதராக அரசர் மதிக்கப்பட்டார். அவரது முகத்தைச் சுற்றிலும் ஒரு தெய்விக ஒளி (Halo) வீசியதாக அனைவரும் எண்ணினர். மக்களின் இதய பூர்வமான ஆதரவின் அடிப்படையில் அரசு இயங்கிவந்தது, ஒரு பேரரசை ஆக்கவோ, அல்லது தோற்றுவிக்கவோ முனையும் ஓர் அரசனின்முன் நிற்கக்கூடிய தொல்லைகள் எவையும் ஜஹாங்கீர், ஷாஜஹான் அல்லது அவுரங்கசீபு ஆகிய மூவருக்கும் இருக்கவில்லை. எனவே, அவர்கள் தம் மனம் போனபடி எல்லாம் போகலாமென எண்ணினர். ஒரு பேரரசைப் படைத்து அதை முறையே அமைப்பதில் இருக்கக்கூடிய எல்லாச் சிக்கல்களும் ஏற்கெனவேயே களையப்பட்டுவிட்டன. எனினும், பேரரசு அமைக்கப்படுவதற்கு அக்பரின் வழக்காறுகளும், நிறுவனங்களும் எவ்வளவு தேவைப்பட்டனவோ, அதே அளவு அப் பேரரசின் தொடர்ந்த வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் அவை தேவை என்பது சொல்லாமலே பெறப்படும். அக்பரின் வழிவந்தவர்களில் திறமையும் தகுதியும் மிக்கவர்களே அவருடைய கொள்கைகளின் மேன்மையினை உணர்ந்து போற்றிப் பின்பற்றக்கூடும் என்பது தெற்றென விளங்கியது. ஆனால், மனித இயல்பு மாறாத தொன்று என்பதை அவருடைய வழித் தோன்றல்கள் நன்கு காட்டிவிட்டனர். சோம்பேறித்தனம், சிற்றின்ப வேட்கை, பிடிவாதம், குறுகிய மனப்பான்மை, தன்னல மனப்பான்மை,

ஆகிய தீயபண்புகள் அவர்களை ஆட்கொண்டு விட்டன. அதிகார மமதையாலும், ஆடம்பர மோகத்தாலும் அவர்கள் சில சமயங்களில் உந்தப்பட்டனர். வேறு சில சமயங்களில் மதத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு அவர்கள் பிடிவாதம் பிடித்தனர். அக்பர் வளர்த்து வைத்துவிட்டுச் சென்ற முடியாட்சியில் இயல்பாகவே பொதிந்துகிடந்த வரம்பற்ற அதிகாரப் பெருக்கத்தால் அவர்கள் இறுமாந்து கிடந்தனர். அவர்களைச் சூழ்ந்து நின்ற பெரும் புகழ் என்ற ஒளியினுல் அவர்களுக்குக் கண்ணே தெரியவில்லை. எனவே, அக்பர் கடைபிடித்த நெறியினின்றும் அவர்கள் சற்றே பிறழ்ந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. புதிய சூழ்நிலைகளுக்கேற்ப, புதிய முறைகளில் அக்பருடைய மரபுகளையும் நிறுவனங்களையும் கடைப்பிடிக்கலாமென அவர்கள் எண்ணுதற்கு வழி ஏற்பட்டது. புதிய சூழ்நிலையால் ஏற்பட்ட புதிய மனப்பான்மையின் விளைவாக, அக்பர் கடைப்பிடித்த நெறிகளை மாற்றியமைக்க அல்லது முற்றும் கைவிட்டுத் தீவிரமான புதிய நெறிகளை அவர்கள் கைக்கொள்ளக் கூடுமெனத் தோன்றியது. உண்மையிலேயும் அஃது அங்ஙனமே நடைபெற்றது. அக்பரின் நிறுவனங்களும் மரபுகளும் ஒரு சில சமயங்களில் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனுல், அக்பரின் மனப்பான்மைக்கு முற்றும் மாருகவே அவற்றை அவர்கள் மேற்கொண்டனர். ஜஹாங்கீர் காலத்தே அவருடைய மரபுகள் பெருமளவுக்குக் கடைப்பிடிக்கப்பட்டன. ஷாஜஹான் காலத்து ஒரு சிறிதே அவை மேற்கொள்ளப்பட்டன. எனினும், அக்பர் காலத்தே காணப்பட்ட ஓர் ஒப்புரவு மனப்பான்மை அவர்களின் செயல்களில் சிறிதும் காணப்படவில்லை. பரிவோடு மற்றவர்களின் மனப்பாங்கைப் புரிந்துகொள்ளுதல், மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துப் போற்றுதல் போன்ற அக்பரின் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. அவுரங்கசீபின் காலத்தே அவை முற்றும் மறைந்தன. அதற்குக் காரணம் மிகத் தெளிவானது. அக்பரை எதிர்கொண்டு நின்ற புதிர்கள் ஜஹாங்கீர், ஷாஜஹான் அல்லது அவுரங்கசீபின் காலங்களில் காணப்படவில்லை. ஆப்கானியர்களின் அதிகாரம் முற்றும் நொறுக்கப்பட்ட பின்னர், இராஜபுத்திரர்களிடம் நயமாகப் பேசி அவர்களின் நட்பினை நாடவேண்டிய கட்டாயம் போய்விட்டது. இந்துக்கள் மொகலாயர்களுக்கு முற்றும் பணிந்துவிட்ட பின்னர் அவர்களைப் பரிவோடு நடத்தி அவர்களின் மதத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்ற இன்றியமையாமையும் போய்விட்டது. இராஜபுத்திரர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றி ஆப்கானியர்களைத் தாங்கள் வென்றிருக்க முடியாதென்பதை மொகலாயர்கள் மறந்துவிட்டனர். அவுரங்க

சீபின் காலத்தில் நிகழ்ந்ததுபோன்று, தக்காணம் போன்ற புதிய நிலப்பகுதிகளை வென்று தம் நாட்டோடு சேர்க்கவேண்டு மானால் அதற்கு இராஜபுத்திரர்களின் ஒத்துழைப்பு எவ்வளவு இன்றியமையாத ஒன்று என்பதை அவர்கள் உணரவில்லை. சமயப் பொறையின் விளைவால் இந்துக்களின் விசுவாசத்தையும் ஆதரவையும் மொகலாயர்கள் பெற்றார்களென்றால், அதைக் கைவிடுதவதன் விளைவாக, நாட்டில் எங்கே பார்த்தாலும், அவுரங்கசீபின் காலத்து ஏற்பட்டதேபோன்ற அதிருப்தியும் கலகங்களும் தோன்றக்கூடுமென்பதை அவர்கள் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை. இராஜபுத்திரர்கள் இந்துக்களான தால் அத்தகைய கொள்கையால், அவர்களின் பகையானது கண்டிப்பாக ஏற்பட்டே தீரும் என்பது உறுதியாகிவிட்டது,

அக்பரின் பின்தோன்றல்கள் அரசியல் காரியங்களில் ஒப்புரவு மனப்பான்மையைக் காட்டினரென்பது

நாம் மேலே கூறியவற்றால் அக்பருக்குப் பின்வந்த மொகலாயப் பேரரசர்களுக்கு, மக்கள் மனப்போக்கைப் புரிந்து கொள்ளும் திறமை என்பது ஒரு சிறிதும் இல்லை என்று நாம் முடிவு கட்டிவிட்டதாக யாரும் எண்ணிவிடக் கூடாது. மக்களுடைய நலனில் உண்மையிலேயே அவர்கள் மனப்பூர்வமான அக்கறை காட்டினர். அக் குறிக்கோளை எய்த, தங்கள் சொந்தச் சுகத்தைத் தியாகம் செய்யவும், குடும்ப பாசத்தையேகூட மறக்கவும் அல்லது சொந்த விருப்பு வெறுப்புகளைக் கைவிடவும் அன்னார் தயாராயிருந்தனர். ''மகன் என்றும் மருமகனென் றும் அரசு யாரையும் மதிப்பதில்லை. அரசனுக்கு உறவினர் என்பார் எவருமில்லை''[1] என்று ஜஹாங்கீர் எழுதினார். ''நாட்டைப் பாதுகாப்பதும் நாட்டு மக்களின் நலம் பேணலுமே அரச பாரத்துக்குரிய கடமையேயன்றி, நன்கு இளைப்பாறி இன்பம் அடைவதோ அல்லது சிற்றின்பங்களில் ஈடுபடுவதோ அரசருக்குரிய கடமைகளல்ல''[2] என்று அவுரங்கசீப் கருதினார். எல்லோருமே அரச பாரத்தை ஒரு புனிதமான பொறுப்பாகவே (Sacred Trust) கருதினர். சான்றாக, ஜஹாங்கீருக்கு அரச பாரம் என்பது, பாரபட்சமற்ற நீதியிலும், ''தெய்விகமான கருணை யிலும்'' மட்டுமே அடங்கியிருப்பதாகத் தெரிந்தது. அக்பர் மக்களை நடத்திய முறைகளில் பெருமதிப்புக் கொண்டிருந்த

---

[1] ஜஹாங்கீரின் நினைவுக் குறிப்புகள், தொகுதி I, பக். 52 (Jahangir's Memoirs).

[2] ஜே. என். சர்க்கார் எழுதிய 'அவுரங்கசீப்', தொகுதி III, பக். 134.

ஜஹாங்கீர் அதுபற்றி எழுதும்போது பின்வருமாறு கூறுகிறார்: "தெய்விகக் கருணை என்ற பெருவெளியில் எல்லாச் சமயத்தவர்க்கும் எங்ஙனம் இடம் உள்ளதோ, அதேபோன்று மாறுபட்ட சமயத்தினர்க்கும், நல்லவையும் தீயவையுமான எல்லாவித நம்பிக்கைகளுக்கும் அரசரின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லாப் பகுதிகளிலும் இடம் இருந்தது. சண்டை சச்சரவுகளுக்கு அங்கு இடமில்லை. ஒளிக்கு என்னென்ன குணங்கள் உள்ளனவோ அதே குணங்கள் (இறைவனின்) நிழலுக்கும் உண்டு என்ற கொள்கையின் அடிப்படையில் அங்கு அவ்வாறு அமைந்திருந்தது."[3] இந்தச் சொற்கள் அவற்றை எழுதியவருடைய உள்ளக் கிடக்கையை நன்கு முழுமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அக்பருடைய நிறுவனங்களின்மீதும், மரபுகள்மீதும் ஜஹாங்கீர் பெருமதிப்பை வைத்திருந்தார். தம் தந்தையிடம் காணப்பட்டதாக அவரால் கூறப்படும் 'தெய்விகக் கருணை' (Divine Compassion)யினால் உந்தப்பட்டதாலேயே அவர் தம் ஆட்சியின் தொடக்கத்தில், பேரரசில் பணிபுரியும் அதிகாரிகளுக்கென பன்னிரண்டு நன்னடத்தை விதிகளை தஸ்த்துருல் ஆமால் (Dastur-ul-Amal) வெளியிட்டார். அவற்றில் ஒன்று அக்பரால் வெளியிடப்பட்ட கட்டுத் திட்ட விதியினை முற்றும் ஒத்திருந்தது. அவ்விதி பின்வருமாறு ஆணையிட்டது: "எனது பிறந்த நாளாகிய ரபியுல்அவ்வல் (Rabi-ul-Awwal) 18ஆந் தேதியிலிருந்து, ஒவ்வோர் ஆண்டிலும் ஒருசில நாட்களுக்கு அவர்கள் பிராணிகளைக் (உணவுக்காகக்) கொல்லாமல் இருப்பார்களாக! குறிப்பிட்ட ஓர் ஆண்டின்போது எனக்கு எத்தனை வயது நிரம்பியிருக்கிறதோ அத்தனை நாட்கள் அவர்கள் அவ் விரதத்தைக் கடைப்பிடிப்பார்களாக! மேலும், ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு நாட்களுக்கு, அதாவது நான் அரசு எய்திய நாளான வியாழக்கிழமையன்றும், என் தந்தையார் பிறந்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்றும் அவர்கள் இக் கொல்லா விரதத்தைக் கடைப்பிடிப்பார்களாக! தாம் பிறந்த நாள் என்ற காரணத்தாலும், ஞாயிறு தேவனுக்கென ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தாலும், உலகத்தின் தோற்றமே அந் நாளன்று ஏற்பட்டதாலும் ஞாயிற்றுக்கிழமையை என் தந்தை பெரிதும் மதித்துப் போற்றி வந்தார்.'"[4] உணவுக்காகப் பிராணிகளைக் கொல்லக்கூடாதென்ற கொள்கையுடைய இந்துக்களும், ஜைனர்களும் இந்த ஆணையைப் பெரிதும் விரும்பி வரவேற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. நீண்ட

---

[3] ஜஹாங்கீரின் நினைவுக் குறிப்புகள் (Memoirs), தொகுதி I, பக். 37.

[4] Ibid., Vol. I, pp. 7-10.

நாட்களுக்குப்பின் அவர் பின்வருமாறு எழுதினுர்: ''பதினுறு, பதினேழு ஆண்டுகளுக்கு முன் நான் அலகாபாத்தில் இருக்கும் போது, ஐம்பது வயது நிரம்பப்பெற்றபின் துப்பாக்கியினுல் சுடுகின்ற வழக்கத்தை நிறுத்திவிடுவதென்றும், என் கைகளினுல் எந்த உயிருக்கும் தீங்கிழைக்கக் கூடாதென்றும் ஒரு சபதம் எடுத்துக்கொண்டேன்.''[5] இத்தகைய கருத்துக்களைக் கூறியதோடு மட்டும் அமையாமல் நடைமுறையிலும் கடைப்பிடித்த காரணத் தால் ஜஹாங்கீரின் ஆட்சியானது மக்களின் கருத்தையும் கவனத் தையும் ஒருங்கே ஈர்க்கும் முறையில் அமைந்திருந்தது. அதிகாரி களுக்கென வெளியிடப்பட்ட இன்னெரு நன்னடத்தை விதி யானது ''இஸ்லாம் மதத்தை யார்மீதும் திணிக்கக் கூடா தெனப்'' பணித்தது.[6] இது பேரரசர் ஒருவருக்கே உரிய சிறப்பதி காரமாகும். அவுரங்கசீபின் காலம்வரையில் அவ் வதிகாரமானது வெளிப்படையாகச் செலுத்தப்படவில்லை. பாரபட்சமற்ற நீதி வழங்குதல்பற்றி ஜஹாங்கீர் கொண்டிருந்த கருத்து மிக வலிமை யானது. எனவே, வழக்கமாகக் கையாளப்பெறும் நீதி வழங்கும் முறை போதாதெனக் கருதி அவர் புகழ்பெற்ற தம் நீதிச் சங்கிலியைச் (Chain of Justice) ஏற்படுத்தினுர். ஒரு சமயம் ''விதவை ஒருத்தி, தன் மகளை முகராப் கான் (Muqarrab Khan) என்பான் காம்பே துறைமுகத்தில் பலவந்தமாகத் தூக்கிச் சென்றுவிட்டதாக முறையிட்டுக்கொண்டாள். நான் அதை நன்கு விசாரித்துப் பார்த்ததில், முகராப் கானின் வேலைக்காரன் ஒருவனே அத் தகாத செயலில் ஈடுபட்டவனென்பது தெரிந்தது. அதன்பின் அவ் வேலைக்காரனுக்குக் கொலைத் தண்டனை கொடுத் தேன். முகராப்கானின் மன்சப் பதவியை பாதியளவாகக் குறைத்தேன். தீங்கிழைக்கப்பட்ட பெண்ணுக்கு உதவிப்பணம் வழங்கப்பட ஏற்பாடு செய்தேன்.''[7] இங்ஙனம், ஜஹாங்கீர் எழுது கின்ருர். ஷாஜஹானும், அவுரங்கசீபும் புதன்கிழமைகளில் தர்பார் நடத்துவதில்லை. ஏனெனில், அந்நாளை அவர்கள் மக்களுக்கு நீதி வழங்குதற்கென்றே ஒதுக்கியிருந்தனர். அந் நாளில் அவுரங்கசீப் நீதி மன்றம் ஒன்றைக் கூட்டுவது வழக்கம். அந் நீதிமன்றம் திவானி மஸாலிம் (Diwani Mazalim) என அழைக்கப்பட்டது. அதைப்பற்றிய சுருக்கமான விவரங்களைப் பின்னர்த் தருவோம்.

வரி வசூல் விவகாரங்களைப் பொறுத்தமட்டில் மொகலாயரின் கொள்கை குடியானவர்களுக்குச் சாதகமாகவே

[5]Ibid., Vol. II, p. 35.
[6]Ibid., Vol. I, p. 205.
[7]Ibid., Vol. I. p. 172.

இருந்தது. சட்டத்துக்கு விரோதமாக வரி வசூலிக்கப்படுவதை அவர்கள் கண்டித்தனர். சட்டத்துக்குப் புறம்பான ஒருசில வரிகளை அல்லது அப்வாபுகளை (Abwabs) மொகலாய மன்னர்கள் அறவே ஒழித்துள்ளனர். அதற்கு நாம் ஏராளமான சான்றுகளைக் காட்டமுடியும். அக்பரால் ஒழிக்கப்பட்ட இடுவரிகள் (Imposts) என்னென்ன என்பதை ஆயின்-இ-அக்பரி என்ற நூலில் தொகுதி ii, பக்கம் 66-67இல் காணலாம். ஜஹாங்கீர் தம்கா (Tamgha) "மீர்பஹாரி (Mirbahari) போன்ற வரிகளையும், ஒவ்வொரு சுபாவிலும் சர்க்காரிலும் இருந்த ஜாகீர்தார்களால் மனம்போன போக்கில் வசூலிக்கப்பட்ட முறையற்ற பல வரிகளையும் ஒழித்தார்.[8] அவுரங்கசீப் ஏறத்தாழ 49 அப்வாபுகளை (Abwabs) ஒழித்தார் என்று மீராதி அஹ்மாதி (Mirati Ahmadi) என்ற நூல் கூறுகிறது.[9] ஆனால், பேரரசுக் கட்டளைகளுக்கு வரி வசூல் அதிகாரிகள் பல சமயங்களில் பணிய மறுத்தனர். குடியானவர்களிடம் கருணை காட்டும்படியும் தாராள மனத்துடன் நடந்து கொள்ளும்படியும் அப்வாபுகளை வசூலிக்காமல் விட்டுவிடும் படியும் குடியானவர்களின் குறைகளைக் களையும்படியும் பேரரசர்கள் கட்டளையிட்டவண்ணம் இருந்தபோதிலுங்கூட வரி வசூல் அதிகாரிகள் தம் பிரியம்போலவே நடந்துகொண்டனர். பேரரசுக் கட்டளையை மீறுவதென்பது அவர்களுக்குச் சர்வ சாதாரணமாய் இருந்தது. அக் கட்டளைகளுக்கு மாறாக, அவர்கள் குடியானவர்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குக் கசக்கிப் பிழிந்தனர். ஆனால், பேரரசர்களோ பொதுவாகக் குடியானவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அக்கறைகொண்டு இருந்தனர். தங்கள் படைகளை நடத்திச் சென்றபோதெல்லாம் பயிர்களுக்குச் சேதம் விளையாதபடி அவர்கள் பார்த்துக் கொண்டனர். ஷாஜஹான் என்னும் பேரரசர் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்றபோதெல்லாம் பாதையின் ஒரு பக்கத்தில் தம் வில்லாட்களுடன் (Archers) இருந்து பயிர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று பக்ஷி என்ற அதிகாரிக்குக் கட்டளை இடுவதும், பாதையின் மற்றொரு புறத்தைத் தம் துப்பாக்கி வீரர்களுடன் நின்று பாதுகாப்பளிக்கும்படி மீர் அடிஷ் (Mir Atish) என்பவருக்கு ஆணையிடுவதும் வழக்கம். இவ்விதம் விழிப்பாக நடந்துகொண்டபோதிலுங்கூடப் பயிர்களுக்குக் கெடுதி ஏற்பட்டாலோ அல்லது மக்களின் நலனுக்குக் குறைவு ஏற்பட்டாலோ "அவற்றையெல்லாம் விசாரித்து, இழைக்கப்பட்ட தீங்கின் அளவு என்ன என்பதை அரசருக்கு அறிவிப்பதற்

[8] Elliot and Dowson, Vol. VI, p. 493.

[9] J. N. Sarkar, Mughal Administration, pp. 90-91.

காகத் தரோகாக்களும், முஷ்ரிஃபுகளும், அமீன்களும் நியமிக்கப் பட்டனர். அதன் பின்னர் ரயத்துகளுக்கும் ஆயிரத்துக்குக் குறைவான ஏக்கர் நிலத்தை உடைய ஜாகீர்தார்களுக்கும் அவரவர்கள் அடைந்த இழப்புக்கு ஏற்ப ஈடு செய்யப்பட்டது.''[10]

அக்பருக்குப் பின்னர்ச் சமயக் கொள்கையானது சிறிது சிறிதாக மாறுகிறது

ஆன்மிக சம்பந்தமான காரியங்களில் ஒரு சில பேரரசர்கள் பெரிதும் உற்சாகம் காட்டினர். தங்களது உயர்ந்த அதிகார பீடத்திலிருந்து சற்றே இறங்கிவந்து அவர்கள் தங்கள் மிகத் தாழ்ந்த குடிமக்களோடு கூடிக் கடவுளின் இயல்புபற்றியும் முடிவான உண்மைபற்றியும் வாதம் செய்தனர். ஜஹாங்கீர் பேரரசர் ''பண்டிதர்களோடு, அதாவது இந்து அறிஞர் களோடு''[11] மிகமிகச் சாதாரணமாகவும், அதே சமயம் மிகமிக அறிவோடு கூடிய உற்சாகத்தோடும் கலந்துகொண்டார். முஸ்லிம் யோகிகள் அடங்கிய கூட்டத்தில் அவர் எவ்வளவு உற்சாகத்தோடு கலந்துகொண்டாரோ அதே அளவு ஊக்கத் தோடு அவர் இந்து ஞானிகளின் கூட்டத்திலும் கலந்துகொண் டார். ''சாமா, வாஜ்ட் (Wajd) போன்ற ஆன்மிக நடனங்களில் (துறவிகள் சேர்ந்துகொண்டு பேரின்ப மயக்கத்தில் கூத்தாடுதல்) பக்தி வெறிக்கும் குதூகலத்துக்கும் குறைவில்லை. அத்தகைய நிகழ்ச்சிகளில் அவர் எவ்வாறு பங்கு கொண்டாரோ அதேபோல, இந்து ஞானிகளின் ஆன்மிக நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்து கொண்டார்.''[12] ஜாத்ரூப் என்ற ஒரு துறவி அல்லது சந்நியாசி உஜ்ஜயினி நகரத்தில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டுக் கால் நடையாகவே அவரைத் தரிசிக்க ஜஹாங்கீர் சென்றார்.[13] அந்தச் சந்நியாசி மதுராவுக்குச் சென்று வசிக்கத் தொடங்கியபோது அவரைப்பற்றி மிகப் பெருமையாக அவர் பேசுவது வழக்கம். ஒரு சமயம் வெளிப்படையாக அவர் கூறியதாவது: ''நான் அவரது சகவாசத்தைப் பெரிதும் மதித்தேன். ஆகவே, அவரைக் காண நான் ஓடோடியும் சென்று அவர் தரிசனத்துக்காகக் காத்துக் கிடந்தேன். வேறு ஒருவரும் அருகில் இல்லாமல் தனி யாக நான் அவரோடு நெடுநேரம் அளவளாவி மகிழ்ந்து இருக் கின்றேன். உண்மையிலேயே அவர் இவ்வுலகில் வாழ்வதானது

[10] Elliot and Dowson, Vol. VII. p. 43.
[11] Jahangir's Memoirs, Vol. I, pp. 32-33.
[12] Ibid., p. 173.
[13] Ibid., pp. 356-7.

எனக்குப் பெருத்ததோர் இலாபமாக இருக்கிறது. அவரால் எவருமே பெரிதும் நன்மையும் களிப்பும் எய்துவர்.''[14] இந்துத் துறவிகளைப்பற்றி இவ்விதமாக எழுதக்கூடிய முஸ்லிம் பேரரசர்கள் ஒரு சிலரேயாவர். ஜஹாங்கீர் ஓரளவு தம் தந்தையின் இயல்புகளைப் பெற்றிருந்தார் எனலாம்.

ஜஹாங்கீர் சமயப் பொறையைப் புறக்கணித்தல்

ஆனால் இவ்விதம் தாராள நோக்குடனும் பரிவு மனப் பான்மையுடனும் நடந்துகொண்ட ஜஹாங்கீர்தாம் முதன் முதலாக இந்துக்களின்மீது வேண்டுமென்றே பல அடக்கு முறைகளைத் திணித்து, அலட்சியமாக நடத்தி மொகலாயர்களின் நற்பெயருக்கு ஒரு மாசு கற்பித்தவராவர். ஆஜ்மீரில் தங்கியிருந்தபோது புஷ்கர் என்ற இடத்திற்கு அவர் செல்ல நேர்ந்தது. அது ஒரு புண்ணியத் தலம். அங்கு, ''இரண்டு மூன்று நாட்களாக நான் குளத்தில் காணப்பட்ட நீர்ப் பறவைகளைச் சுட்டேன். அதன்பின் ஆஜ்மீர் திரும்பினேன்'' என்று அவர் எழுதுகிறார். ஆனால், அங்ஙனம் ஆஜ்மீர் திரும்புவதற்கு முன், குளத்தில் காணப்பட்ட நீர்ப்பறவைகளைச் சுட்டதோடுகூட இன்னும் ஓர் அடாத செயலையும் அவர் செய்துவிட்டுப் போனார். குளத்தைச் சுற்றிலும், பழையனவும் புதியனவுமான பல கோயில்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று ஓர் இலட்சம் ரூபாய் செலவில், ஜஹாங்கீரின் 'உயர்தரப் பிரபுக்களில்' ஒருவரான இராணு சங்கர் என்பவரால் கட்டப்பட்டது என்று கேள்விப்பட்டார். அதன்பின் அவர் செய்ததை அவரே பின்வருமாறு குறிக்கின்றார்: ''நான் அந்தக் கோயிலைப் பார்ப்பதற்காகச் சென்றேன். அங்கே கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஓர் உருவத்தைக் கண்டேன். அந்தக் கோரமான உருவத்தை உடைத்துக் குளத்தில் எறிந்து விடுமாறு கட்டளையிட்டேன். இந்தக் கட்டடத்தைப் பார்த்த பின்னர் அருகிலுள்ள மலையின்மீது இருந்த வெண்மையான ஒரு கோபுரம் என் கண்களுக்குத் தென்பட்டது. அந்தக் கோயிலுக்கு நாற்புறங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்துகொண் டிருந்தார்கள் எனக் கேள்விப்பட்டேன். அதற்குக் காரணம் என்னவென்று நான் வினவியபோது அவர்கள், அங்கே ஒரு யோகி இருப்பதாகக் கூறினார்கள். உடனே, நான் அக் கோபுரத்தை இடித்துவிடும்படியும், யோகியை அவ்விடத்திலிருந்து துரத்திவிடும்படியும், கோபுரத்துக்குள்ளிருந்த சிலையை உடைத்து எறியும்படியும் கட்டளையிட்டேன்.''[15] ஜஹாங்கீ

[14] Ibid., Vol. II, p. 104.

[15] Ibid., Vol. I, pp. 254-255.

ருடைய ஆட்சிக் காலத்தின் ஏழாம் ஆண்டில் இது நடை பெற்றது. அவரது ஆட்சியின் பதினாரும் ஆண்டில் கங்ரா என்ற கோட்டையை அவர் கைப்பற்றியபோது அவர் அவ் வெற்றியைக் கொண்டாட நினைத்தார். ஆனால், அது மிகக் கடினமான காரிய மாக இருந்தது. எனவே, அவர் ''குத்பா படிப்பதையும் அல்லாவைக் கூவி அழைப்பதையும் உடனே நிறைவேற்றும்படி பணித்ததோடு, எருது ஒன்றைப் பலியிடுமாறும் கட்டளை யிட்டார். அவரது கட்டளை அவரது முன்னிலையிலேயே நிறை வேற்றப்பட்டது.''[16] இத்தனைக்கும் ஓர் இந்து இளவரசனைக் கொண்டே கங்ரா கோட்டையானது பிடிபட்டது. அக்பரின் தனயரும் (இந்திய) ஜய்ப்பூர் இளவரசருமான ஓர் அரசர் நடந்துகொண்ட விதம் இவ்வாறு இருந்தது. இந்துக்களின் சமய உணர்ச்சிகளை இங்ஙனம் வெளிப்படையாகப் பேரரசர் ஒருவர் புறக்கணிக்க முன் வந்தது இதுவே முதல் தடவை. ஆனால், இஃது ஓர் உண்மையை வெளிப்படுத்தியது. வருங்காலத்திலே நன்கு வலிமை பெறக்கூடிய ஒரு புதிய மனப்பான்மையானது தோன்றி விட்டது என்பதை அந் நிகழ்ச்சி நன்கு படம் பிடித்துக் காட்டியது.

ஷாஜஹான் சமயப் பொறையைப் புறக்கணித்தல்

ஷாஜஹான் பட்டத்துக்கு வந்தபின் சமயப் பொறைக் கொள்கை வெளிப்படையாகவே புறக்கணிக்கப்பட்டது. இந்துக் கோயில்களை இடிப்பதென்பது முறையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கைங்கரியமாக மாறியது. பாத்ஷா நாமாவின் (Badsha Nama) ஆசிரியர் பின்வருமாறு எழுதியுள்ளார்: ''சென்ற ஆட்சிக் காலத்தே சிலை வணக்கம் செய்யப்படும் கோயில்கள் பல காசி மாநகரில் கட்டத் தொடங்கப்பட்டன. ஆனால், அவை முற்றுப் பெறுமல் நடுவிலேயே நின்றுவிட்டன. புறச் சமயிகளின் (Infidels) பெருங் கோட்டை என விளங்கும் காசியில், அக் கோயில்களைக் கட்டி முடிக்க அவர்கள் பெரிதும் விரும்புவதாகத் தெரிந்தது. சமயக் காவலராகிய மேன்மை தங்கிய அரசர், காசி யில் மட்டுமின்றித் தம் ஆட்சிக்குட்பட்ட எல்லா இடங்களிலும் புதியனவாகத் துவங்கப்பெற்ற கோயில்கள் யாவும் இடிக்கப்பட வேண்டும்.''[17] எனக் கட்டளையிட்டார். அதன் விளைவாகக் காசி மாவட்டத்தில்மட்டும் எழுபத்தாறு கோயில்கள் தரை மட்டமாக்கப்பட்டன. இஃது அவரது ஆட்சிக் காலத்தின் ஆரும்

[16] Ibid., Vol. II, p. 253.

[17] Elliot and Dowson, Vol. VII, p. 36.

ஆண்டில் (1632) நடைபெற்றது. அப்துல் ஹமீத் லாஹோரி என்பாரால் 'சமயக் காவலர்' (The Defender of the Faith) என அழைக்கப்பட்ட ஷாஜஹான், தம் குடிமக்களைக் கட்டாய மதமாற்றம் செய்வதிலும் பெரிதும் அக்கறை காட்டினார். 1633இல் கிறிஸ்தவக் கைதிகள் 400 பேர் சமயக் காவலரின் முன்னிலையில் கொண்ணர்ந்து நிறுத்தப்பட்டனர். உடனே அவர், அவர்கள் யாவர்க்கும் இஸ்லாமியச் சமயக் கருத்துக்கள் தெளிவாக எடுத்துரைக்கப்பட ஏற்பாடு செய்தார். அதன்பின் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துகொள்ளும்படி அவர் அனைவரையும் வற்புறுத்தினார். ஒரு சிலர் அவரது வற்புறுத்தலுக்கு இணங்கி முஸ்லிம்களாக மாறினர். ஆனால், அவர்களில் பெரும்பாலோர் தங்கள் மதத்தை மாற்றிக்கொள்ள இசையவில்லை. இஸ்லாம் மதத்தைத் தழுவ மறுத்தோர் யாவரும், "பல அமீர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டனர். வெறுக்கத்தக்க இப் புல்லர்களைக் கடுங்காவலில் வைத்துத் துன்புறுத்துமாறு அவ்வமீர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அவர்களில் யாரேனும் எப்போதாகிலும் மனம் மாறி உண்மை மதமான இஸ்லாத்தைத் தழுவ முன்வந்தால், அதை அமீர்கள் உடனே அரசருக்கு அறிவிக்க வேண்டும். அதன்பின் அத்தகையோர்க்குப் பல வசதிகளும் செய்து தரப்படும்."[18] 1653ஆம் ஆண்டில் பண்டேலா நாட்டு (Bundela) இளவரசராகிய ஜுஜ்ஹார் சிங் (Jhujhar Singh) என்பார் இறந்துபட்டபின்னர், கான் டௌரான் (Khan Dowran) என்பார் அவ்விளவரசரின் மனைவிகளையும், துர்காபன் (Durgabhan) என்ற அவருடைய மகனையும், துர்ஜன்சால் (Durjansal) என்ற அவருடைய பெயரனையும் கொணர்ந்து அரசரிடம் சமர்ப்பித்தார். "அரசருடைய ஆணையின்பேரில் அவர்கள் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர். இராணி பார்வதி அம்மையார் படுகாயப்பட்டுப் படுக்கையில் இருந்ததால் அவரை ஒன்றும் செய்யாது விட்டுவிட்டனர். ஏனைய பெண்டிர் யாவரும் அரண்மனையில் வாழ்ந்த முஸ்லிம் சீமாட்டிகளுக்கு ஏவல் புரிவதற்காக அனுப்பப்பட்டனர்."[19] இங்ஙனம், இக் கதையானது வளர்ந்து கொண்டே சென்று அவுரங்கசீபின் காலத்தில் அது தன் உச்ச கட்டத்தை எய்துகிறது. புனிதக் கோயில்களை இடித்து அவற்றை அசுத்தப்படுத்துவதோடு ஜஹாங்கீர் நிறுத்திக்கொண்டார். ஆனால், ஷாஜஹானோவெனில், அவரினும் ஒரு படி மேலே சென்று மக்களைப் பலவந்தமாக மத மாற்றம் செய்யும் பணியில் இறங்கலானார். இவர்கள் யாவரையும் அவுரங்கசீப் மீறிவிட்டார். மேற்

[18] Ibid., p. 42.

[19] Ibid., p. 51.

சொன்ன நடவடிக்கைகளோடு அவர் இன்னும் சிலவற்றையும் சேர்த்துக்கொண்டார். இந்துக்களின்மீது ஜெஸியா (Jeziya) வரியைத் திணித்தார். குரானியச் சட்டத்தை முழுக்க முழுக்கக் கடைப்பிடித்து அதன் வழியே மிகக் கண்டிப்பான முறையில் அவர் ஆட்சி செலுத்தலானார்.

அவுரங்கசீபின் மத ஒறுப்புச் செயல்கள்

குஜராத்தில் அரசப் பிரதிநிதியாக (Viceroy) இருந்தபோதே அவர் ஒரு மதவெறியர் (Bigot) என்பதைப் போதுமான அளவு காட்டிக்கொண்டார். அகமதாபாத்தில் அண்மையில் கட்டப் பட்ட இந்துக் கோயிலான சிந்தாமண் கோயிலை இந்துக்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடும்படி ஷாஜஹான் ஆணையிட்டிருந்த போதிலுங்கூட, அவுரங்கசீப் அதிலே வேண்டுமென்றே ஒரு பசுவைக் கொன்று அதன்பின் அதை ஒரு மசூதியாக மாற்றி விட்டார். 'சமய வழிகாட்டி' (Director of the Faith) என மாசிரி ஆலம்கிரி (Maasiri Alamgiri) என்பவரால் அழைக்கப் பட்ட அவுரங்கசீப், 1669ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பேரரசர் என்ற முறையில் ஓர் ஆணையை வெளியிட்டார். அதன் படி ''மாநிலங்களில் ஆட்சி புரியும் ஆளுநர்கள் யாவரும் இஸ்லாமுக்கு மாறாத புறச் சமயிகளின் கோயில்களையும், பள்ளிக் கூடங்களையும் மிகவும் விருப்பத்தோடு இடித்துத் தரைமட்ட மாக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதோடு கூட, சில வணக்க முறைகளைக் கடைப்பிடிப்பதையும், மற்றவர் களுக்குக் கற்பிப்பதையும் முற்றும் நிறுத்துமாறும் அவர்கள் கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டனர்.'' அதே ஆசிரியர் 1670ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மிகக் குதூகலத்தோடு பின்வருமாறு வருமாறு எழுதுகிறார்: ''நீதியை விரும்பும் அரசர், மதுரா விலிருந்த தேரா கேசவராய் என அழைக்கப்பட்ட இந்துக் கோயிலானது இடிக்கப்படவேண்டும் எனக் கட்டளையிட்டார். அதே இடத்தில் பெரியதொரு மசூதியானது பெருஞ் செலவில் கட்டப்பட்டது.'' கோயில் இவ்வாறு இடிக்கப்பட்டபின், அதிலிருந்த விலையுயர்ந்த நகைகளுடன் கூடிய சிலைகள் அகற்றப் பட்டு, ''ஆக்ராவுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. அங்கே நவாப் பேகம் சாஹிபின் மசூதிக்கு இட்டுச் செல்லும் படிகளின்கீழ் அவை பாவப் பெற்றன. உண்மை விசுவாசமுள்ளவர்களின் பாதங்களினால் சதா மிதிபடுதற்காகவே அவை அங்ஙனம் படிகளின்கீழ் அமைக்கப்பெற்றன.''[20] அதே ஆண்டு கிதக்கி

[20] Maasiri Alamgiri, Elliot and Dowson, Vol. VII, pp. 184-85.

லிருந்து, மேதினிபூர் வரை இருந்த கோயில்களை எல்லாம் இடிக்கும்படி அங்குப் பணிபுரிந்த எல்லா ஃபௌஜ்தார்களுக்கும் சிவில் அதிகாரிகளுக்கும் ஜாகீர்தார்களின் பகராட்களுக்கும் குரோரிகளுக்கும் அம்லாக்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. "கடந்த பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட ஒவ்வொரு சிலை வணக்கக் கோயிலும் அது செங்கல்லால் கட்டப்பட்டிருப்பினும் களிமண்ணால் ஆக்கப்பட்டிருப்பினும் ஒருவிதத் தாமதமும் இன்றி உடனே இடிக்கப்படவேண்டும்"[21] என்று அந்த ஆணை கூறியது. 1679ஆம் ஆண்டு கான் ஜௌரான் என்பவர் ஜோதிபுரியில் இருந்த பல கோயில்களைத் தரைமட்டமாக்கிவிட்டு டில்லிக்குத் திரும்பினார். அப்போது உடைக்கப்பட்ட சிலைகளை வண்டி வண்டியாகக் கொணர்ந்து அவர் இறக்கினார். அச் சிலைகள் யாவும் விலையுயர்ந்த நகைகளைக்கொண்டு மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு இருந்தன. அவற்றை "அரண்மனையின் நாற்சதுக்கத்திலும், ஜும்மா மசூதியின் படிகளிலும், முஸ்லிம்களின் பாதங்கள் படும்படியாகப் பரப்பும்படி அரசர் கட்டளையிட்டார்."[22] ஆம்பர் நகரமும் இதே கதிக்கு ஆளாகியது. அவரது ஆட்சியின் முடிவுவரை இதே கதைதான் தொடர்ந்து நடைபெறுகிறது. வெந்த புண்ணில் வேல் உருவுதல் எப்படி என்பதை அவுரங்கசீப் நன்கு உணர்ந்திருந்தார். கோயில்களை இடித்துத் தள்ளுவதோடு மட்டும் அவர் நிறுத்தவில்லை. அக் கோயில்களில் காணப்பட்ட சிலைகளை மசூதிகளின் படிகளின்கீழ்ப் பரப்பி முஸ்லிம்களின் பாதங்கள் அவற்றின்மீது படியும்படி செய்வதில் அவர் தனி இன்பம் கொண்டார். 1668ஆம் ஆண்டில் அவர் ஃபெரோஸ் துக்ளக்கின் கொள்கையைப் பின்பற்றி இந்துக்கள் தங்கள் புண்ணியத்தலங்களுக்கு அருகில் சந்தைகள் நடத்துவதை நாடெங்கும் தடுத்தார். "இந்துக்களின் விளக்குவிழாவான தீபாவளியையும் வசந்தகாலப் பண்டிகையான ஹோலியையும் கடைதெருக்களுக்கு அப்பால்மட்டுமே ஒரு சில கட்டுத்திட்டங்களுக்குட்பட்டுக் கொண்டாட வேண்டுமென"[23] அவர் கட்டளையிட்டார். இதன் விளைவாக இந்துக்களுடைய எதிர்ப்புணர்ச்சியும், பகைமையும் அதிகரித்தன. ஆனால், அதை எல்லாம் கண்டு அவுரங்கசீப் சற்றும் அஞ்சவில்லை. அடுத்தபடியாக 1679இல் அவர் ஜெஸியா வரியை இந்துக்களின்மீது திணித்தார். நூறு

---

[21] Sarkar, Aurangazeb, Vol. III, p. 283, Quotation from Muragat-i-Abdul Hasan.

[22] Maasiri Alamgiri, Text, p. 175.

[23] Sarkar, Aurangazeb, Vol. III, pp. 278-79.

ஆண்டுகளுக்கு முன்பு (1564) அக்பரால் ஒழிக்கப்பட்டதொரு வரியை அவர் மீண்டும் கொணர்ந்தார். அவ் வரியின்மூலம் முஸ்லிம்களல்லாதார் இழிமக்களாகக் கருதப்பட்டனர். வரி செலுத்துவதன்மூலம் அவ்விழிவு வெளிப்படுத்தப்படுவதாகக் கருதப்பட்டது. இந்துக்களை அவமதிக்கும் முறையில் அவ் வரி போடப்பட்டதுமட்டுமின்றி, அது வசூலிக்கப்பட்ட முறையும் அவர்களை இழிவுபடுத்தும் முறையில் அமைந்திருந்தது. ''அக் காலத்திய புலவர்களும், சமய நூல் வல்லார்களும் அவுரங்கசீபிடம் ஜெஸியா வரியானது முஸ்லிம் சமயச் சட்ட நூல்களில் கூறியுள்ளபடி சரியான முறையில் வசூலிக்கப்படவேண்டிய முறை என்ன என்பதைப்பற்றித் தெரிவித்திருந்தனர். அதன்படி ஒரு ஜிம்மியானவன் (Zimmi) நேரில் வந்தே ஜெஸியா வரியைச் செலுத்தவேண்டும். பகரான் ஒருவன் மூலமாக அவ் வரிப்பணம் அனுப்பப்பட்டால் அஃது ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. வரி செலுத்துவோன் கால்நடையாக வந்து, வரியை நின்றுகொண்டு செலுத்தவேண்டும். அதை வாங்குபவர் இருக்கையில் அமர்ந்து கொண்டு, தம் கைகள் ஜிம்மியின் கைகளுக்கு மேலே இருக்கும்படியாக வைத்துக்கொண்டு பணத்தை வாங்கவேண்டும். வாங்கும் போது அவர் 'ஓ, ஜிம்மி, பதிலீட்டுப் பணத்தை (Commutation Money) இதோ செலுத்துவாயாக!''[24] என்று கூறவேண்டும். இந்துக்களில் ஏழைகள், நடுத்தர வகுப்பினர், செல்வர்கள் ஆகியோர்மீது முறையே 12, 24, 48 திர்ஹாம்கள் (Dirhams) வீதம் அவ் வரி விதிக்கப்பட்டது. அது சமயச் சார்பு கொண்டது என்பது ஒருபுறம் இருக்க, வரிவிதிப்புக் கொள்கைகளுக்கு முற்றும் முரணான வகையில் அது மக்கள்மீது திணிக்கப்பட்டது. ஏனெனில், ஏழைகள்மீதுதான் அவ் வரிப்பளு அதிகமாகச் சுமத்தப்பட்டது. செல்வர்களையும், நடுத்தர மக்களையும் அஃது அதிகமாகப் பாதிக்கவில்லை. அரசாங்க அதிகாரிகள் அனைவரும் அவ் வரியினின்றும் விலக்கு அளிக்கப்பட்டனர். இங்ஙனம், வரி வீதமானது (Incidence) சற்றும் நியாயமற்ற முறையில் அமைந்திருந்தது. அதோடு இந்துக்களுக்கு ஒரு நீதி, முஸ்லிம்களுக்கு ஒரு நீதி என்ற முறையில் அஃது அமைந்திருந்தது. அவ் விரு வகுப்பாரிடையே மனக்கசப்பை வளர்க்கும் வகையில் அவ் வரி அவர்களைப் பாகுபாடு செய்தது. இந்துக்கள் அமைதியான முறையில் அவ் வரியை எதிர்த்தனர். ஆனால், அவர்களின் சாத்துவிக மறுப்பு முறைகள் எவையும் எந்தப் பலனையும் தரவில்லை. ஒரு வெள்ளிக்கிழமையன்று, பேரரசர் கோட்டையிலிருந்து ஜும்மா மசூதிக்குப் பொதுத் தொழுகையில் கலந்து

[24] Ibid., Vol. III, p. 269.

கொள்வதற்காகப் போய்க்கொண் டிருந்தபோது, வழியில் இந்துக்கள் பெருந்திரளாகக் கூடித் தம் குறை தீர்க்குமாறு அவரை வேண்டிக்கொண்டனர். ஆனல் அவுரங்கசீப், அவர்களின் முறையீடுகளுக்குச் சிறிதும் செவிசாய்க்காதவராய்த் தாமும் தம் பரிவாரங்களும் ஏறிவந்த யானைகளைப் பலவந்தமாகக் கூட்டத்திடையே ஓட்டும்படி ஆணையிட்டார். அதனல் பலர் கூட்டத்தினின்றும் ஓடிப்போயினர். பலர் யானைகளின் கால்களின்கீழ்ச் சிக்கி நசுக்குண்டனர்.

அவுரங்கசீபின் தீவிர சுன்னி மதமும் (Sunny Orthodoxy) அரசியல் துறையில் இந்து-முஸ்லிம் பாகுபாட்டுக் கொள்கையும்

இந்துக்களின் சமய உணர்ச்சிகளைப் புறக்கணித்து அவர்களை இழிவாக நடத்தியதோடு அவுரங்கசீப் நிற்கவில்லை. அரசியல் துறையிலும் மிகக் கடுமையான இந்து-முஸ்லிம் பாகுபாட்டுக் கொள்கையை அவர் கடைப்பிடித்தார். 1665இல் சில சுங்க வரிகளை அவர் ஏற்படுத்தினர். அவை முஸ்லிம்களுக்குச் சாதகமாகவும் இந்துக்களுக்குப் பாதகமாகவும் அமைந்திருந்தன. விற்பனைப் பொருள்களின் மதிப்பில் 5 சதவீதத்தை இந்துக்கள் சுங்கவரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனல், அதே பொருள்களுக்கு $2\frac{1}{2}$ சதவீதமே முஸ்லிம்கள் வரியாகச் செலுத்தினர். "1671ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஓர் அவசரச் சட்டமானது (Ordinance) அரசருக்குச் சொந்தமான நிலங்களில் முஸ்லிம்கள்மட்டுமே வரி வசூல் செய்பவர்களாக நியமிக்கப்பட வேண்டுமெனவும் அரசப் பிரதிநிதிகளும் (Viceroys), தாலுக்தார்களும் (Talukdars) அவர்களின்கீழ்ப் பணியாற்றி வந்த எல்லா இந்துத் தலைமை எழுத்தர்களையும் (பேஷ்கார்கள்) கணக்கர்களையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாக முஸ்லிம்களை நியமிக்க வேண்டுமெனவும் கூறியது."[25]

இத்தகைய நடவடிக்கைகளின்மூலமாக அவுரங்கசீப் இந்துக்களின் மாருப் பகைமையைத் தேடிக்கொண்டார். இந்துக்களல்லாத குடிமக்கள் அனைவரும் அவரது கடுமையான பகைவர்களாக மாறினர். எனினும், அதைப்பற்றி எல்லாம் அவுரங்கசீப் ஒருசிறிதும் கவலைப்படவில்லை. அவர் வேண்டுமென்றேதான் அக் கட்டளைகளை எல்லாம் வெளியிட்டார். இஸ்லாம் சமயத்தின் நிபந்தனைகளுக்கேற்பப் பேரரசை ஆளவேண்டும் என்ற ஒரே

[25] Ibid., p. 277.

தீர்மானத்துடன் அவர் செயல் புரிந்தார். அவர் தம் விருப்பப் படியே தம் செயற்பாதையை வகுத்துக்கொண்டார். தமக்குச் சரி என்ற பட்டதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அதன்படி நடப்பதில் அவருக்குத் தயக்கமோ தடையோ ஒருசிறிதும் இருக்கவில்லை. சுல்ஹிகுல் (Sulh-i-Kul) அல்லது சர்வசமய சமரச கொள்கைகளைக் கடைப்பிடித்து, இஸ்லாமியக் கோட்பாடுகளுக்குப் புறம்பாகச் செல்வதில் அக்பர் எவ்வளவு உற்சாகமாயிருந்தாரோ, அதேபோல இஸ்லாமியக் கொள்கைகளுக்குச் சற்றும் பிசகாது நாட்டை ஆளவேண்டும் மென்பதில் அவுரங்கசீப் உண்மையான உறுதி பூண்டு விளங்கினர். எனவே, அக்பர் தம் தந்தையாலும், பாட்டனாராலும் அமைக் கப்படக் கூடாத ஒரு பேரரசை அமைக்க முடிந்தது. ஆனல், அதே பேரரசு குலைக்கப்படுதற்குக் காரணமாயிருந்தவர் அவுரங்க சீபே ஆவார். மூன்று தலைமுறைகளில் ஆண்ட மன்னர்களால் செல்வமும் செல்வாக்கும் நிறைந்ததும்வலிமிக்கதுமான பேரரசாக மாற்றப்பட்ட ஓர் அரசியல் கட்டுக்கோப்பைக் குலைப்பதில் நேரிடையாகப் பங்கு கொண்டவர் அவுரங்கசீபெனக் கூறலாம். அவருடைய அரசியல் நிர்வாகக் கொள்கைக்கும், சமயக் கொள்கைகளுக்கும் எதிராகக் கிளம்பிய வருந்தத்தக்க கிளர்ச்சி களை அடக்கவோ, பயனற்றவைகளாகச் செய்யவோ வல்ல சக்திகள் எவையும் இல்லாமற் போயின. அக்பரால் கடைப் பிடிக்கப்பட்டனவும், அவருடைய சந்ததியார்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தனவுமான பழக்க வழக்கங்களையும், நிறுவனங்களையும் அவர் சிறிது சிறிதாக ஒழித்துவிட்டார். முடியரசை மக்களின் விருப்பத்துக்கு உகந்ததொன்ருக மாற்று கின்ற முறையில் அப் பழக்கங்கள் அமைந்திருந்தன. ஆனல், அவுரங்கசீபுக்கு அவை எல்லாம் பிடிக்கவில்லை. எனவே, அவற்றை அவர் கைவிட்டார். முதலில் அவர் ஜரோகாவில் நின்று மக்களுக்குத் தரிசனம் தரும் பழக்கத்தை நிறுத்தினர். பின் இசை வளர்ச்சியின்மீது அவர் தடை விதித்தார். சமயத்துக்கு முற்றும் ஒவ்வாததெனக் கூறி ஓவியக்கலைக்கு அவர் ஒரு முற்றுப் புள்ளிவைத்தார். நௌரோஜ், ராக்கி (ரக்ஷாபந்தனம்), தசரா போன்ற பண்டிகைகள் கொண்டாடப்படுவதை அவர் பெரிதும் வெறுத்தார். இஸ்லாம் சமயத்தைத் தவிர வேறு சமயத்தைச் சேர்ந்த புலவர்கள், துறவிகள், மெய்யறிஞர்கள் ஆகியோரோடு பழகுதல் இஸ்லாம் கொள்கைகளைக் கைவிட்டு விடுவதற்குச் சமமானதெனக் கருதி அப் பழக்கத்தைக் கைவிட்டார். இங்ஙனம், அக்பரின் மரபுகளும் நிறுவனங்களும் முற்றும் கைவிடப்பட்டன. எனவே, மக்களின் ஆதரவும் முற்றும் மாய்ந்தது.

அவுரங்கசீப் தம் தந்தையையும் சகோதரனையும் நடத்திய முறையால் ஏற்பட்ட விளைவு

இவை யாவும் நடைபெறு முன்னர் வாரிசுரிமைப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. அவுரங்கசீபின் பல தீய குணங்கள் அப் போராட்டத்தின்மூலம் வெளியாயின. அவர் சுயநலமே உருவானவர், தீவினைக்குச் சற்றும் அஞ்சாதவர், வஞ்சமும் பேராசையும் நிறைந்தவர், பெற்றோரிடம் பக்தியோ அல்லது சகோதர பாசமோ சிறிதளவும் இல்லாதவர் என்பனவெல்லாம் அப் போராட்டத்தினின்றும் தெரிய வந்தன. சர்க்கார் எனும் ஆசிரியர் கூறுகிறபடி, ''அவுரங்கசீப் தம் தந்தையை நடத்திய முறை அக் காலத்தே மக்கள் கைக்கொண்டிருந்த அற நெறிப் பண்பை அறவே புறக்கணித்ததோடல்லாமல், அக் காலச் சமுதாய மரபுகளுக்கும் அது சற்றும் பொருந்தாததாயிருந்தது. ஆட்சிப் பீடத்தில் இருக்கும் தந்தைக்கு விரோதமாகத் தனயன் கலகத்தில் இறங்குவதென்பது மொகலாயப் பேரரசுக் குடும்பத்தின் சாபத்தீடு எனக் கூறலாம். ஜஹாங்கீர் அக்பருக்குப் பகையாகவும், ஷாஜஹான் ஜஹாங்கீருக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்தனர். தந்தையின் தளபதிகளை அல்லது போட்டிக்கு உரிய சகோதரர்களை அவர்கள் எதிர்க்கவும் அல்லது கொல்லவுங்கூடத் தயங்கினதில்லை. ஆனால், போர்க்களத்தில் தம் தந்தையைச் சந்திக்க அவர்கள் ஒருநாளும் முன் வந்ததில்லை. தந்தையோடு நேருக்கு நேர் போர் செய்ய அவர்கள் கூசினர். பேரரசர் நேரில் வந்துவிட்டார் எனத் தெரிந்தவுடன் கலகம் செய்த இளவரசர் ஒன்று உடனே பணிந்துவிடுவார், அல்லது நாணத்தால் ஓடி மறைந்துவிடுவார். ஆனால், அவுரங்கசீபின் பேராசை அவருடைய கண்களை மறைத்துவிட்டது. சமுதாயத்தில் நன்கு வேரூன்றிவிட்ட மரபுகளுக்கும் பண்புகளுக்கும் முரணாக அவர் நடந்துகொண்டார்.''[26] அவருடைய சமகாலத்தவர்களாகிய இரண்டாம் ஷா அப்பாஸ் என்ற பாரசீக அரசர், அமானத் கான் குவாஃபி, லாகூர் திவான், நிக்கோலா மனூச்சி (Niccolao Manucci) போன்றவர்களுக்கெல்லாம் அவுரங்கசீபின் நடத்தையானது மிக இழிவானதாயும், மனிதத் தன்மை அற்றதாயும் தென்பட்டது. லாகூர் திவான் அவரைப்பற்றிக் கூறும் போது, ''ஆதாமின் வழிவந்தோர்களில் இத்தகைய செய்கைகளைப்பற்றிக் கேள்விப்பட்டவர் எவரேனும் உளரோ ?'' என்று கேட்கிறார். தம் தந்தை, சகோதரர்கள், நெருங்கிய உறவினர்கள் ஆகியோரை மிகக் கொடுமையாக நடத்தியதன்மூலம் அவுரங்கசீப் பொது மக்களின் மதிப்பையும் மரியா

[26] Ibid., Vol. III, pp. 144-45.

தையையும் இழந்தார். இத்தகைய பெருங்குறைபாடுடன் அவர் ஆட்சியைத் தொடங்கியதென்பது உண்மையில் பெரிதும் துரதிருஷ்டமேயாகும்.

ஆனல், அதைவிடத் துரதிருஷ்டமானது என்னவெனில், புறத்தே தவக்கோலம் பூண்டு அதன்மூலம் தம்மால் இழக்கப் பெற்ற தன்மதிப்பையும் (Self-Respect), பொதுஜன ஆதரவையும் மீண்டும் பெற்றுவிடலாமென அவர் கனவு கண்டதேயாகும். கடுமையான விரதங்களை கடைபிடித்துத் தூய வாழ்க்கை நடத்துவதன்மூலம் அவர், தாமே ஒருசமயம் எழுதியபடித் ''தாம் அபாயம் நிறைந்த அரச பாரத்தை ஏற்றுக்கொண்டது தமது சொந்த விருப்பத்திஞலன்று என்றும், வேறு வழியில்லாமையாலும் இன்றியமையாத காரணத்திஞலுமே - அதாவது, இறைவனது இறுதித் தீர்ப்பின்போது சரிவரப் பதிலிறுப்பதற்காக நாட்டில் அமைதியையும், இஸ்லாத்தின் விதிகளையும் நிலைநாட்டவும் மக்களை அழிவுப் பாதையினின்றும் மீட்கவும், முன்னேர்களால் விட்டுச்செல்லப்பட்ட பழம்பெருநாட்டில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கவுமேதான்''[27] என உலகத்தாருக்கு எடுத்துக் காண்பிக்க அவர் விரும்பினர். வேகமாகச் சீர் கெட்டு வரும் ஒரு பேரரசை நன்கு ஆட்சிபுரியவென்று தெய்வ சங்கற்பத்தால் பணிக்கப்பட்ட 'ஃபக்கிர்' (Faqir) அல்லது இரவலன் (Mendicant) என்று அவர் தம்மைத் தாமே குறிப்பிடத் தொடங்கி அதற்கேற்பவும் நடக்க முயன்ருர். அவர் இந்தியாவின் அரசர் போன்று அல்லாமல் ஒரு பக்கிரி போலவும் அல்லது இஸ்லாமியத் தெர்வெஷ் (Dervish) போன்றும் நாட்டை ஆண்டார். இஸ்லாமியக் கேட்பாடுகளின்மீது தமக்கு இருந்த உண்மையான மதிப்பின் காரணமாக, மொகலாய ராஜரீகத்துக்கும் (Kingship), இந்துஸ்தான் இராஜ்யத்துக்கும் (Kingdom) தேவையானவற்றைத் தம்மால் உணர்ந்துகொள்ள முடியவில்லை என அவுரங்கசீப் ஒருசமயம் சொன்னது முற்றும் உண்மையானதேயாகும்.

அவரை ஒரு கபடநாடகர் (Hypocrite) என்ருே, கொடுங்கோலர் (Tyrant) என்ருே கண்டிப்பது அநியாயத்தின் சிகரமாகும். வேகமாகச் சீரழிந்துவரும் ஒரு பேரரசைப் புதுப்பிக்க வேண்டுமென்ற கபடமற்ற எண்ணங்களால் உந்தப்பட்டே அவர் செயல் புரிந்தார் என்பதில் சற்றும் ஐயமில்லை. அந்தக் குறிக்கோளை அடைய அவர் மெய்வருத்தம் பாராமல் உழைத்தார். அவர் தம்மைத் தாம் வருத்திக்கொண்டு நோன்பு நோற்றவர், மிதமான

[27] Ibid., p. 134.

பழக்கவழக்கங்களை வாழ்க்கையில் மேற்கொண்டவர், எடுத்துக் கொண்ட கருமத்தை முடிக்கச் சலியாது உழைத்தவர், கடமை என்ற பலிபீடத்தின்மீது தம் சொந்தச் சுகம், ஆரோக்கியம் ஆகியவற்றைப் பலியிடத் தயாராயிருந்தவர் என்பனவெல்லாம் ஐயத்துக்கு இடமில்லாதவை. பாழ்பட்டு வரும் ஒரு பேரரசுக்குப் புத்துயிரளிக்க வேண்டும், புத்தமைப்பைத் தரவேண்டும் என்பதும், அதுவும் குரானியச் சட்டங்களின் அடிப்படையில் அஃது இருக்கவேண்டும் என்பதும் அவரது குறிக்கோளாகும். அப் பெருங் குறிக்கோளை எய்த அவர் தம் சொந்த முறையில், சொந்த நம்பிக்கைகளுக்கு ஏற்ப முயன்றார். அதற்காகவென்றே அவர் சர்வவல்லமை மிக்க ஒரு பேரரசின்கண்ணே அமைந்து கிடக்கும், மனத்தை ஈர்க்கத்தக்க போக போக்கியங்களையும் செல்வச் சிறப்புகளையும் அறவே துறப்பதெனத் தீர்மானித்து, தூய துறவியைப்போல் அல்லது தெர்விஷைப்போல் வாழ்ந்து வரலானார். அழகும் ஆடம்பரமும் தாண்டவமாடிய ஒரு சூழ் நிலையில், போக வாழ்க்கையில் மூழ்கிக் கிடந்தோர் நிறைந்த மொகலாய அரசவையில் (அதாவது, ஜஹாங்கீர் - ஷாஜஹான் காலங்களில்) அவுரங்கசீப் ஒருவரைத் தவிர வேறெவருமே அத்தகைய குறிக்கோளை அடைவதற்காக, அரச போகங்களை எல்லாம் வெறுக்க முன்வரக் கூடிய ஓர் ஒழுக்கத்தின் உறுதிப் பாட்டைப் பெற்றிருக்க முடியாது. இந்துஸ்தான் ஆட்சியைப் பொறுத்த வில்லங்கங்களினின்றும் நீக்கிவிட்டு அக் குறிக்கோளை நோக்குவோமேயானால், அது யாவராலும் கடைப்பிடித்தற் கேற்றதும் அதற்காக உயிரையே விடத்தக்கதுமான ஏற்றம் பொருந்தியதென்பதை யாரும் மறுக்கமுடியாது.

அவுரங்கசீபின் அறிவீனங்களை மிகைப்படுத்துவது எளிது. அவரது பெரும் வரலாற்றாசிரியரான சர்க்கார் என்பவராலேயே அக் குறையினின்றும் தம்மைக் காத்துக்கொள்ள இயலவில்லை. ஆனால், ஒரே ஒரு கோணத்தினின்று பார்க்கும்போதுமட்டுமே அஃது உண்மையாகும். அதாவது, அவுரங்கசீபின் இயல்புகளுக்கு முற்றும் மாறானதொரு கோணத்தினின்று பார்த்தால்மட்டுமே அஃது உண்மையாகத் தெரியும். ஆனால், தந்தை மனப்பான்மை மிக்க வல்லரசர்களான (Paternal Despots) மொகலாயர்கள் வேறொருவரின் மனப்போக்குகளைச் சற்றும் மதியாமல் தங்களது சொந்த மனப்போக்குக்கேற்பவே எதையும் நோக்கினர். தமது சொந்த மனப்போக்கின்படிப் பார்த்தபோது, அவுரங்கசீபுக்கு அவருடைய காரியங்களெல்லாம் ஏதோ அரசியல் கலையில் ஒரு குறிக்கோளை எய்த அவர் அரும்பாடு படுவதாகவே தென்பட்டது. அவர் ஒரு கபட நாடகருமல்லர்; கொடுங்கோலருமல்லர்; அவர்

ஒரு தெர்விஷ், இரவலர் - ஹஹீர், காதிமே ஆலம்கிர் (Khadim-e-Alamgir) எனலாம். இப்படித் தம்மைப்பற்றி எழுதியபோது அவர் தம்மைத் தாம் ஏமாற்றிக்கொண்டதாகவோ, அல்லது மக்களை ஏமாற்றியதாகவோ நினைக்க இடமில்லை. அவரது அரசவை வரலாற்றாசிரியனே அவரைப்பற்றி எழுதும்போது "ராஜரீகம் பொருந்திய அவரது பேரரசு உடையானது, அதற்குப் பின்னே அணியப்பட்டிருந்த தெர்விஷின் மேலங்கியை இலேசாக மறைத்துக்கொண்டிருந்ததேயன்றி வேறன்று"[28] என்று கூறுகிறார்.

அவுரங்கசீப் கோனாட்சியின் அடிப்படையையே குலைத்து விடுதல்

அக்பரால் ஏற்படுத்தப்பட்டுப் பேரரசுக்கு ஓர் உறுதுணையாயிருந்த கோனாட்சித் தத்துவத்தின் அடிப்படைகளையே அவுரங்கசீப் குலைத்துவிட்டார். முடியரசானது தெய்விகத் தன்மை பொருந்திய தொன்றென்றும் ஒழுக்கத்தின் மிக்க புனிதத் தன்மையுடையதெனவும் கருதப்பட்ட நிலை மாறிவிட்டது. ஷாஜஹான் போன்று 'அரசர்க்கெல்லாம் அரசர்', 'கடவுளின் சாயை' 'ஆன்மிக, உலகியல் துறை இரண்டிற்கும் இறைவர்' என்றெல்லாம் கருதப்பட்டவர் ஆக்ராவின் அந்தப்புரத்திலே சிறையில் கிடந்து வாடுகிறார் எனக் கேள்விப்பட்டபோதும், அல்லது அரசர் குறிப்பிட்ட மதத்தைமட்டுமே ஆதரித்துக்கொண்டு மதவெறியின் பாற்பட்ட செயல்களில் ஈடுபடுவதையும், மனித இதயத்தில் எழக்கூடிய போற்றுதற்குரிய சில உணர்ச்சிகளைச் சிறிதும் கவலையின்றி அவுரங்கசீபைப் போன்று ஒதுக்கித்தள்ளி அறிவுதோய்ந்த சில நிறுவனங்களையும் வழக்கங்களையும் அறவே புறக்கணிப்பதையும் கண்ட மக்கள் அரசர்களின்மீது வைத்திருந்த பெருமதிப்பை இழந்தனர். அவர்களை மூடிமறைத்துக்கொண்டிருந்த தெய்விகக் கீர்த்தி (Divine Glory) எனும் திரை கிழியுண்டது. அவர்களைச் சூழ்ந்து நிற்பதாக மக்கள் எண்ணிக்கொண்டிருந்த கண்ணியமும், அறத்தின்பாற்பட்ட புனிதத் தன்மையும் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்தன. அரசபதவியின் அரசியல் கண்ணியமும், அறநெறி அடிப்படையும், ஆன்மிகப் பெருமையும் இங்ஙனம் அகன்றுவிடவே அவுரங்கசீப் மக்களின் மனநிறைவுக்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்பவோ அல்லது தமது மனநிறைவுக்கேற்பவோ நடந்துகொள்ள முடியாமற் போயிற்று. அதற்குக் காரணம், அக்பரால் தோற்றுவிக்கப்பெற்று

[28] Maasari Alamgiri, Text, p. 333, Sarkar's Aurangazeb.

ஜஹாங்கீராலும், ஷாஜஹானுலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பெற்ற நல்ல மரபுகளையும், நிறுவனங்களையும் கொண்டதொரு நாட்டை மதவெறி பிடித்த சுன்னி முஸ்லிமின் தான்தோன்றித் தனமான மூடச் செயல்களைக் கொண்டு ஆள முடியாதென்பதை அவர் புரிந்துகொள்ளாததேயாகும்.

இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையை நிறுவவேண்டுமென்ற அவுரங்கசீபின் பேராவல் நிறைவேருதொழிதல்

ஆனல், இத்தகைய பிற்போக்குத் தன்மை பொருந்திய அரசாங்கமானது, மாறுபட்ட சூழ்நிலையின் வலியாலும், இஸ்லாமிய அரசின் இயற்கையான பண்பாலும் தானுகவே தடுக்க முடியாதபடி ஏற்பட்டதொன்றேயாகும். பேரரசை நன்கு நிறுவுவதற்கும் மொகலாய ஆட்சியை எல்லா மக்களுக்கும் உகந்ததாகச் செய்யவும், அக்பர் சுல்ஹிகுல் (Sulh-i- Kul) எனும் சர்வ சமயசமரசக் கோட்பாட்டைக் கடைப்பிடித்து இந்துக்களின் ஒத்துழைப்பை நாடினர். அக்பர் மரணம் அடைவதற்கு முன்பே அக் குறிக்கோளானது நிறைவேறிவிட்டது. ஏனெனில், இராஜபுத்திரர்கள் வெல்லப்பட்டு அவர்கள் மொகலாய அரசர் களின் நண்பர்களாக மாறிவிட்டனர். ஆப்கானியரின் அதி காரமும் ஒடுக்கப்பட்டுவிட்டது. இராஜபுத்திரர்களில் மீவார் இராணுமட்டுமே இன்னும் மொகலாயர்க்குப் பணியாமல் இருந்தார். ஆப்கானியர்கள் முறியடிக்கப்பட்டுவிட்டாலும், வங்காளத்தில் உஸ்மான் என்பாரின் தலைமையில் அவர்கள் இன்னும் குமுறிக்கொண் டிருப்பதற்கான அறிகுறிகள் தென் பட்டன. ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்திலேயே இராணு அவருக்கு அடிபணிந்துவிட்டார். உஸ்மானும் ஒடுக்கப்பட்டார். இங்ஙனம், மொகலாயர்களுக்கு விரோதமாயிருந்த கூறுகளின் இறுதிச் சின்னங்கள் மறைந்தொழிந்தன. ஷாஜஹான் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் எங்குப் பார்த்தாலும் அமைதியும் செல்வாக்கும் தடையின்றி ஓங்குதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. கான் ஜஹான் லோடி என்பார்மட்டுமே அவரது ஆட்சியின் தொடக்கத் தில் சிறிது கலகம் செய்தார். ஆனல், விரைவிலேயே அவர் நசுக்கப்பட்டுவிட்டார். அதன்பின் ஆப்கானிய ஆட்சி என்பது மீண்டும் உயிர் பெறுவண்ணம் அருகி(Extinct)விட்டது. ஆப்கானியர்களைப் போன்ற ஓர் எதிரி போரிடுவதற்கு இல்லாத காரணத்தாலும், மொகலாயர்கள் அந்நியர்கள்போல நடத்தப் படவும் அவர்களின் ஆட்சி அந்நியரின் ஆட்சியாகக் கருதப்

படவும் கூடிய பயம் மறைந்துவிட்டதாலும், மொகலாய மன்னர்கள் இந்துக்களின் விசுவாசத்தைப்பற்றியோ அல்லது இராஜபுத்திரர்களின் ஒத்துழைப்பைப்பற்றியோ சிறிதும் கவலைப் படாதொழிந்தனர். சிறிது சிறிதாக அவர்கள் தங்களுடைய சொந்தச் சமயத்தின் கோட்பாடுகளைப்பற்றி அல்லது அது சம்பந்தமான உரிமைகளைப்பற்றி அதிகமாக எண்ணமிடத் தலைப் பட்டனர். தாங்கள் முஸ்லிம்கள் என்ற உணர்வானது அவர்க ளிடையே மேலோங்கத் தலைப்பட்டது. அவ்வுணர்வானது அவர்கள் நாட்டையாளும் அரசர்கள் என்ற உணர்வை வென்று அடிப்படுத்திவிட்டது. எனவே, ஓர் இஸ்லாமிய அரசு, அதனால் வெல்லப்பட்ட நாடொன்றை எவ்வழி நடத்தவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதோ அவ்வழி நடத்தும் முயற்சியானது ஷாஜஹான் காலத்திலிருந்து தொடங்குகிறது. அவுரங்கசீப் இங்ஙனம் அக்பரின் கொள்கைகளை அப்படியே மாற்றி, அவருடைய நிறுவனங்களையும், மரபுகளையும் முற்றும் கைவிடுமாறு தூண்டப்பட்டார். அப்படிச் செய்வதன்மூலந்தான் இஸ்லாமிய அரசின் இயல்பான பண்புக்கொத்த முறையில் நாட்டை ஆள முடியுமென அவர் நம்பினார். உண்மையில் அக்பரின் ஆட்சியும், அவருடைய நிறுவனங்களும் மரபுகளும் ஓர் இஸ்லாமிய அரசின் நடைமுறைக்கு முற்றும் விதி விலக்காகவே இருந்தன. அதே சமயம் அவை காலத்துக்கேற்றனவாயும் இருந்தன. காஷ்மீரில் ஜைனுல் ஆபிதினும் (Zinul Abidin), வங்காளத்தில் ஹுஸேன் ஷாவும் (Hussain Shah), நுஸ்ரத்ஷாவும் (Nusrat Shah), பீஜபூரில் அடில்ஷாக்களும், இந்துஸ்தானத்தில் ஷெர்ஷாவும் ஆண்டுவந்த ஒரு காலத்துக்கேற்ற கோட்பாட்டையே அக்பர் கடைப்பிடித் தார். அக் காலத்திய மரபுகள் யாவும் அக்பரைப் பெரிதும் பண படுத்தின. அதோடு மொகலாயர்கள் இந்தியாவுக்குள் வந்தபோது அவர்கள் எத்தகைய நிலையில் உண்மையாகவே இருந்தார்கள், அவர்களைச் சூழ்ந்துநின்ற தொல்லைகள் எத்தன்மையன என்பன வற்றையெல்லாம் அவர் நன்கு தாமே சிந்தித்துப் புரிந்துகொண்ட தும் அவருடைய கொள்கைகளுக்கு ஒரு காரணமாகும். இங்ஙனம், தமது சொந்த யுக்தியின்படியும், காலத்துக்கேற்பவும் அக்பர் தம் மரபுகளையும் நிறுவனங்களையும் அமைத்தார். மக்க ளுடைய பலமான ஆதரவின்பேரிலேயே பேரரசு அமையப்பெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளின் அடிப்படையிலேதான் அவர் அங்ஙனமெல்லாம் செய்தார். அங்ஙனம் இருக்க அவருடைய கொள்கைகளையும் மரபுகளையும் அறவே புறக் கணித்துவிட்டு, இஸ்லாமிய அரசுக்குமட்டுமே உரிய தனிப்பண்பு களைக் கொண்ட மரபுகளையும் நிறுவனங்களையும் நிறுவ முயல் வது உண்மையில் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவ

தாகவே முடியுமென்பது தேற்றம். அதுவும் பண்டைய இந்திய அரசியலமைப்பு ஒழுங்கு முறையும், இடைக்கால இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையும் ஒருங்கே இணையப்பெற்ற தோர் அடிப்படையின்மீது எழுப்பப்பெற்ற இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையானது நன்கு நிறுவப்பெற்ற பல நூற்றுண்டுகளுக்குப் பின்னர் அக்பரின் கொள்கைகளேக் கைவிடுத லென்பது பிற்போக்கின் அறிகுறி என்பதை எவருமே எளிதில் உணர்ந்துகொள்ளலாம். ஆனல், அவுரங்கசீபுக்கென்னவோ அது புரியவே இல்லே. தாம் நினேப்பது ஒரு சிறிதும் நடக்காத காரியம் என்பதை அவரால் உணர்ந்துகொள்ளவே முடியவில்லே. அவருடைய ஆட்சிமுறைகளும், துப்புரவு மனப்பான்மையும் (Puritanic Outlook), மதச்சீர்திருத்தக் கோட்பாடுகளும், அணிகள் நிறைந்த ஆடம்பரத்துக்குள்ளே அமைதி நிறைந்த வறிய வாழ்க் கையை வாழ அவர் எத்தனித்ததும், இஸ்லாமியர்களல்லா தாரை வன்மையாக அவர் ஒறுத்த விதமும், எல்லாம் காலத்துக் கொவ்வாத கயமையாகவே (Anachronism) காட்சியளித்தன. அரசர் என்ற நிலேயில் வைத்துப் பார்க்கும்போது அவர் அப் பத விக்குச் சற்றும் தகுதியற்றவராகவே காணப்படுகிருர்.[29] இஸ்லா மிய அரசு எத்தனேயோ நூற்றுண்டுகளாக இந்தியாவிலிருந்து, எத்தனேயோ மாற்றங்களே அடைந்துவிட்ட பின்னர், இந்துக் களுக்கேற்ப எவ்வளவோ விட்டுக் கொடுத்துவிட்ட பின்னர் அது மீண்டும் பழைய முழுமையான தூய்மை நிலேயை அடைவ தென்பது முடியாத காரியம். இந்தியாவில் பல நூற்றுண்டு களாகவே நிலேபெற்று வந்துள்ள நிறுவனமானது இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையே அன்றித் தூய்மை யான இஸ்லாமிய அரசியலமைப்பன்று. அவுரங்கசீப் அந்த அமைப்பைக் கலேத்துவிட்டு, அதற்குப் பதிலாக அதே இடத்தில் தனிப்பட்ட ஓர் இஸ்லாமிய அரசியலமைப்பை நிறுவமுயன்ருர். பல்லாயிரம் இந்துக் கோயில்களே இடித்துவிட்டு அவை இருந்த இடங்களில் மசூதிகளேக் கட்டியதுபோல் இதுவும் எளிதாயிருக் கும் என அவர் ஒருவேளே எண்ணியிருக்கக் கூடும். இத்தகைய நாசவேலேகளில் அவர் பெரிதும் உற்சாகம் காட்டியது (Iconoclastic

[29] இளவரசரான அக்பர் அவருக்கு விரோதமாகக் கலகம் செய்தபோது, தாம் செய்தது நியாயமெனக் கூறித் தம் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினுர். அதில் அவர், ''நாடு முழுவதும் இதற் குள்ளாக உம் கொடுங்கோன்மையான செயல்களேக் கண்டு அலுத்துவிட்டது. முக்கியமாக, இந்துஸ்தானத்தில் வாழ்ந்த பல்வேறு வகுப்பார்க்கும் உம் முன்னேர்கள் வழங்கிவந்த உரிமை களேயும் சிறப்புரிமைகளேயும் நீர் பறித்துக்கொண்டதை அனே வரும் வெறுக்கின்றனர்'' எனக் குறிப்பிடுகிருர் (Manucci, Storia do Mogor, Vol. II, p. 245).

zeal) ஏருமடைக்கு நீர் கட்டியது போன்ற அறிவீனமான செயலாகவே முடிந்தது. மகமது கஜினி, பால்பன், அலாவுதீன் கில்ஜி, சிக்கந்தர் லோடி போன்றவர்கள் எவ்வளவோ சமய உணர்ச்சிமிக்கவர்களாயிருந்தபோதிலுங்கூட, ஓர் அரசனுக்குரிய கடமைகளை மேற்கொள்ளத் தவறியதில்லை. அவுரங்கசீபைப் போன்று அவர்களில் எவருமே அவ்வளவு முரட்டுப் பிடிவாதம் பிடித்ததில்லை. அவர்கள் எங்கெல்லாம் விட்டுக் கொடுத்தார்களோ அங்கெல்லாம் அவர் வளைந்து கொடுக்க மறுத்தார். அதிலேதான் அவரது மடமை (Folly) அடங்கியுள்ளது. பிடிவாதமாக அவர் தொடர்ந்து மூடத்தனமாக நடந்துகொண்ட காரணத்தால், அவர் தம் பெயரைக் கெடுத்துக்கொண்டார். பேரும் புகழுமிக்க ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தியிருக்கக்கூடிய ஒரு பெரும் பேற்றை அவர் இழந்தார். அரிதின் முயன்று அவர் நிலைநாட்டப் பாடுபட்ட அரசியல் கட்டுக்கோப்பு அவருக்குப் பின்னர் மிகக் கேவலமான முறையில் குலைந்தது. இந்தியா போன்ற நாட்டில் குறிப்பிட்ட ஒரு சமயத்தின் அடிப்படையில் அரசாங்கத்தை நிறுவ முயல்வதென்பது எவ்வளவு பயனற்ற செயல் என்பதை அது நன்கு எடுத்துக் காட்டிவிட்டது.

அவுரங்கசீபின் காலத்தே இஸ்லாமிய அரசானது இஸ்லாமியச் சமயத்தைப் பரப்பும் பணியை மேற்கொள்ளல்

இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமையப் பெற்ற ஓர் அரசியல் கட்டுக்கோப்பை இந்துக்களின் மீது அவுரங்கசீப் திணிக்க விரும்பினார். அப்படிச் செய்வதன்மூலம் அவர் முஸ்லிம்களின் ஆதரவை முழுமையாகப் பெற்றுவிடலாமென எண்ணினார். அதோடு தாம் எடுத்த காரியத்தை இனிது முடிக்க இறைவனது அருள் கண்டிப்பாகக் கிடைக்கும் எனவும் அவர் நம்பினார். இத்தகைய எண்ணத்தால் ஏற்படக்கூடிய நியாயமான தற்பெருமையுடன் அவர் ஒரு சமயம் தம் தந்தைக்குப் பின் வருமாறு எழுதினார்: ''என்னுடைய முயற்சிகளுக்குக் கடவுளின் ஆதரவு இல்லையானால், நான் எவ்வாறு இந்த வெற்றிகளை எல்லாம் அடைந்திருக்க முடியும்? இவ் வெற்றிகள் அனைத்தும் எல்லாம் வல்ல அவருடைய பரிசுகளல்லவோ? இறைவனின் திருவிருப்பப்படியன்றி ஒன்றும் நடைபெறாது. ஆகையால், இப்பெரிய நிகழ்ச்சியானது (வாரிசுரிமைப் போராட்டத்தை ஈண்டுக் குறிப்பிடுகின்றார்) ஏதோ சாதாரண மனிதனுடைய ஆற்றலாலோ திடசித்தத்தாலோ ஏற்பட்டது எனக் கொள்வதற்கில்லை''.[30]

[30] Sarkar's Aurangazeb, Vol. III, p. 134.

''தாராவின் (Dara) அரசு கைப்பற்றும் முயற்சிகளேயும், இஸ்லாமுக்குப் புறம்பான நடத்தைகளேயும், பேரரசெங்கும் சிலேவணக்கத்துக்கு ஏற்றம் தந்த செயல்களேயும் ஒழிக்கத் தாம் கங்கணம் கட்டிக்கொண்டபோது''[31] கடவுள் எங்ஙனம் அவரது ஆசை நிறைவேறுதற்குத் துணேபுரிந்தாரோ அதேபோல புறச்சமயிகள் (Infidels) நிறைந்த ஒரு நாட்டில் இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையை உயிர்ப்பிக்கவும் இறைவர் அருள் புரிவார் என அவர் நிச்சயமாக நம்பிஞர். இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்துப்படி 'முதலில் நாடெங்கும் சிலேவணக்கமானது ஒழிக்கப்படவேண்டும். இரண்டாவதாக, அவரது அதிகாரம் அனேத்தையும், செல்வமனேத்தையும் கொண்டு உண்மைச் சமயமானது நாடெங்கும் பரப்பப்படவேண்டும்.' பல தெய்வ வணக்கமும் (Polytheism) சிலேவணக்கமும் ஒருங்கே ஒழிக்கப்படவேண்டுமென்பதே அவரது விருப்பம். ஏனெனில், பல தெய்வ வணக்கமானது இஸ்லாமியக் கருத்துப்படி 'ஷிர்க்' (Shirk) என, அதாவது ''இறைவனேடு ஏனேயோர்களே (பொய்க் கடவுளர்களே) ஒன்ருகக் கலக்கின்ற''[32] குற்றமெனக் கருதப்பட்டது. எனவே, காஃபிர்கள் (Kafirs) என்போர்—அதாவது கஃப்ர் (Kufr) எனும் குற்றத்தைச் செய்தோர்—வாழ்வதற்கே தகுதியற்றவர்கள் எனக் கருதப்பட்டனர். ஆனல், அவுரங்கசீபின் பேரரசில் அத்தகைய காஃபிர்கள் கோடிக்கணக்காக இருந்ததாலும், ஜிஹாத் (Jihad) அல்லது புனிதப் போர்(Holy War)மூலமாக அவர்கள் அத்தனே பேரையும் கொன்றுகுவிப்பதென்பது முடியாத காரியமானதாலும், அவர் வேறு வழியின்றி இந்துக்களேப் பலவகையிலும் துன்புறுத்துவதில் இறங்கலானர். வெளிப்படையாக அவர் அவர்களே இழிவுபடுத்திஞர்; எல்லாவிதப் பதவிகளினின்றும், அதிகாரங்களினின்றும் அவர்களே நீக்கிஞர்; அரசரால் அவர்களுக்குத் தரப்படக்கூடிய பல சலுகைகளேயும் நிறுத்திவிட்டார்; அவர்கள் கொல்லப்படாமல் உயிர்வாழும் உரிமையைப் பெற்றுள்ளதற்காக ஜெஸியா என்ற வரியைக் கட்டவேண்டுமென அவர்கள் வற்புறுத்தப்பெற்றனர். அதோடு, முஸ்லிம்களெல்லாம் செலுத்த வேண்டாத ஒரு சுங்க வரியும் இந்துக்களின்மீது திணிக்கப்பட்டது.[33] இங்ஙனம், ஜிம்மிகளிடமிருந்து பெறப்பட்ட பணமானது உண்மைச் சமயத்தைப் பரப்புவதில் செலவழிக்கப்படவேண்டும், சமயப் பிரசாரத்துக்குத் துணே புரியும் முறையில் அத் தொகை

[31] Ibid., p. 132.

[32] Hughes, Dictionary of Islam, p. 579.

[33] Elliot and Dowson, Muntkhab-ul-Lubab, Vol. VII, p. 293.

பயன்படுத்தப்படவேண்டும் என அவுரங்கசீப் கருதினார். எனவே, இங்ஙனம் இந்துக்களும் ஏனைய ஜிம்மிகளும் (Zimmis) வரி விதிக்கப் பெற்றபோதும், அவர்கள் அதிகார பீடங்களினின்றும் அகற்றப்பட்டபோதும், அன்னாரின் கோயில்களும் புனிதக் கட்டிடங்களும் இடிக்கப்பட்டபோதும், அவர்களின் சமய வழிபாடு போன்ற நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெறுவதை அவர் தடுத்தபோதும்[34] அவுரங்கசீப் உண்மையானதொரு சமயத்துக்கு ஏதோ தொண்டு செய்வதாகவும், கடவுளின் கட்டளைகளை நிறைவேற்றுவதாகவுமே எண்ணிக்கொண்டிருந்தார். ஏனெனில், ஜிம்மிகள்மீது பொருளாதார நிர்ப்பந்தங்களையும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தினால் அவர்கள் அவற்றுக்கெல்லாம் அஞ்சி இஸ்லாமை ஏற்றுக்கொள்வார்கள் என அவர் நம்பினார். அதோடுகூடச் சர்க்கார் எனும் ஆசிரியர் கூறுகிறபடி, ''இஸ்லாம் சமயத்தைத் தழுவும்படிப் புறச் சமயிகளைத் தூண்டுவதற்காகப் பல முறைகளும் கையாளப்பட்டன. பணமாக இலட்சம் கொடுத்தும், உதவிப்படிகள் (Allowances) தந்தும், பட்டம் பதவிகளை வழங்கியும், சிறைத்தண்டனையினின்று விடுவித்தும், வழக்கிலுள்ள சொத்துக்களைப் பெற்றுத் தந்தும்''[35] பலவகையில் இந்துக்களை இஸ்லாமியச் சமயத்துக்குள் ஈர்க்க அவுரங்கசீப் அரும்பாடுபட்டார். அரசியலாதிக்கம் பெற்றிருந்த ஒரு சிறுபான்மைக் கூட்டத்தினரின் சமயத்தைப் பரப்பவேண்டி அரசு இங்ஙனமெல்லாம் மக்கள்மீது வலைவிரித்தது.

அவுரங்கசீபின் இஸ்லாமிய அரசு மக்கள்மீது அறநெறிக் கட்டுப்பாடுகளை விதித்தல்

இரண்டாவதாக, நிர்வாக சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளும், சமயச் சட்டங்கள் (Canon Law) எவ்வாறு ஆணையிடுகின்றனவோ அதற்குச் சற்றும் மாறுபடாத முறையிலேயே தீர்க்கப் பெற வேண்டுமெனவும், ஆட்சித்துறை நடவடிக்கைகள் அனைத்தும் இஸ்லாமிய சமயச் சட்டத்துக்கு முற்றும் ஒத்தனவாய் அமையவேண்டுமென்றும், தீவிர இஸ்லாமியராக இருந்த கலீஃபாக்கள் ஏற்கெனவே செய்து வைத்துப்போன முன்னிகழ் செயல்களை (Precedents) ஒத்தே எல்லாச் செயல்களும் நடைபெற வேண்டுமெனவும் அவுரங்கசீப் விரும்பினார். அதன்படி நாணயங்களிலிருந்து கலீமாவை (Kalima) அவர் நீக்கினார். நௌரோஜ்

---

[34] Maasiri Alamgiri (English translation published by R.A.S.B., 1947) pp. 51, 52, 61, Vol. VII, pp. 184-85.

[35] Sarkar's Aurangazeb, Vol. III, p. 276.

என்ற திருவிழாவானது நிறுத்தப்பட்டது. மக்களின் ஒழுக்கத்தைக் கண்காணிக்கப் பொது அறநெறிக் கண்காணிப்பாளர் (Censor of Public Morals) ஒருவர் (Muhtasib) நியமிக்கப்பட்டார். நிலங்களில் 'பங்' (Bhang) சாகுபடி செய்யப்படுவதை நிறுத்தி விட்டார். பழைய மசூதிகளும், மடாலயங்களும் பழுது பார்க்கப் பட்டு மீண்டும் நன்னிலையில் வைக்கப்படவேண்டுமென ஆணை யொன்றைப் பிறப்பித்தார். இசைப் பயிற்சி நாடெங்கும் தடை செய்யப்பட்டது. கைகளினுல் கும்பிடும் இந்தியப் பழக்கத்துக்குப் பதிலாகச் சலாமாலேகும் (Salam Alekum) எனச் சலாமிடும் முறையை அவர் புகுத்தினுர். இளவரசர் ஒருவர் தம் முன்னேரின் நாட்டை வழியுரிமையாகப் பெற்றபோது, பேரரசர் அவரது நெற்றியில் திலகமிடுகின்ற பழக்கத்தையும் அவர் கைவிட்டார். ஜரோகாவில் அரசர் நின்று காட்சி தரும் பழக்கத்தை[36] நிறுத்தினுர். மது அருந்தும் பழக்கம் முற்றும் ஒழிக்கப் பட்டது. பொதுமகளிரும், நடனமாதர்களும் கண்டிப்பாகத் தம் தொழில்களை விட்டுவிட வேண்டுமெனவும், திருமணம் செய்துகொண்டு எல்லாரையும்போல் வாழவேண்டுமெனவும் அவர் ஆணையிட்டார். இஸ்லாமுக்கு விரோதமாக யார் என்ன செய்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். "எந்த மகமதியனும் நான்கு விரற்கடைக்கும் மேலாக நீளமுள்ள தாடியை வைத்துக்கொள்ளக் கூடாதென்று" கூட அவர் ஆணை யிட்டார். அவ் வாணையை நடைமுறையில் கொண்டு செலுத் தற்கென அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டார்.[37] இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டு மாஞல், இப்படியெல்லாம் செய்யவேண்டுமென அவர் கருதினுர்.

அக்பருக்குப்பின் மொகலாயப் பேரரசின் ஆட்சித் துறையானது சீர்கேடடைதல்

முன்னுரையாகக் கூறப்பட்ட செய்திகளை இதோடு நிறுத்திக் கொண்டு, அக்பரது மரணத்துக்குப் பின்பிருந்து அவுரங்கசீபின் காலம் வரை, அரசாங்கமானது எங்ஙனம் அமைக்கப்பட் டிருந்தது என்பதை மேலோட்டமாக ஆராய்வோமாக. அக்பரால் வகுக்கப்பெற்ற அரசாங்க நிறுவனமானது, வளர்ந்து செல்லும் பேரரசின் தேவைகளுக்கேற்ப, அவருடைய சந்ததியார்களின் காலத்தில் பெரிதும் விரிவாக்கப்பட்டது. சில சமயங்களில் புதிய பணிகளை மேற்கொள்வதற்காகச் சில புதிய நிர்வாகத் துறைகள்

[36] Elliot and Dowson, Muntkhab-ul-Lubab, Vol. VII, p. 284.
[37] Manucci, Storia do Mogor, Vol. II, pp. 5-14.

உண்டாக்கப்பட்டன. நிர்வாகத் திறமையை மிகுதியாக்கவும், தாமதமின்மையை ஏற்படுத்தவும் பெருமுயற்சிகள் எடுக்கப் பட்டன. ஆனால், பேரரசு ஆட்சித் துறையில் பெருகி வரும் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அம் முன்னேற்றங்கள் எல்லாம் அமையப் பெறவில்லை என்பதற்கு நிறையச் சான்றுகள் இருக்கின்றன. நிர்வாகத்தின் திறமையும், திண்மையும் அதிகரிப் பதற்குப் பதிலாகச் சிறிது சிறிதாக அது நலிவடைதலை நாம் காண்கிறோம். அதற்குக் காரணங்கள் பல உள. பரப்பில் விரிந்து கொண்டே சென்ற பேரரசின் இதயமென விளங்கிய டில்லியிலும் அல்லது ஆக்ராவிலும், வேலைப் பளுவானது அளவுக்கு மீறி மிகுந்து கொண்டே செல்லத் தொடங்கியது. பல பாகங்களினின்றும் வந்த பிரச்னைகள் டில்லி அரசாங்கத்தை நெருக்கத் தொடங்கின. அந் நெருக்கத்தை அதனால் சரிவரச் சமாளிக்க இயலவில்லை. எனவே, தல ஆட்சி அல்லது மாநில ஆட்சிகளின்மீது மத்திய அரசாங்கத்தின் பிடிப்பு மெதுவாகத் தளரத் தொடங்கியது. மத்திய ஆட்சி நிறுவனத்தில் இரங்கத்தக்க பலவீனம் தோன்ற லாயிற்று.

தம் தந்தையர் உயிரோடிருக்கும்போதே அரியணையைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற பேராசையானது இளவரசர் களைப் பீடிக்கலாயிற்று. அப் பேராசைத் தீயின் பொறிகள் சில, அக்பரது ஆட்சிக் காலத்தின் இறுதியிலேயே தெறிக்கத் தொடங் கியதை நாம் காணலாம். அவை அவ்வப்போது பெருநெருப்பாக மாறி, வன்முறையிலும், சீற்றத்திலும் கொண்டுபோய் விட்டு விட்டன. ஷாஜஹான் காலத்தே அத்தகைய பூசல்கள் பேரரசு ஆட்சித் துறையின் கட்டுக்கோப்புக்கே பேராபத்தைத் தோற்று விக்கும் முறையில் அமைந்துவிட்டன. அக்பருக்கு விரோதமாக ஜஹாங்கீரும், ஜஹாங்கீருக்கு எதிராகக் குஷ்ருவும் ஷாஜஹா னும், அவுரங்கசீபுக்கெதிராக அக்பர் இளவரசரும் கிளர்ந் தெழுந்த நிகழ்ச்சிகள் மொகலாய வரலாற்றிலேயே மிக வெறுக் கத்தக்க நிகழ்ச்சிகளாகுமென்பதில் ஐயமில்லை. அவற்றினின்றும் நமக்குத் திட்டவட்டமாக வெளிப்படுகின்ற உண்மைகள் இரண்டாகும்: அவற்றுள் ஒன்று, மொகலாயர்களிடையே வாரிசுரிமைச் சட்டமென்று ஒன்றில்லை என்பது. இரண்டாவது, பேரரசை ஒவ்வொரு மன்னரும் தம் சொந்தச் சொத்தாக நினைத்துக்கொண்டு, அதை அடைதற்கு அரச குடிப்பிறப்பும், வலிமையுள்ள படையுமே உற்ற கருவிகளாகும் என எண்ணிய தாகும். மக்களுடைய இராஜ விசுவாசத்தைக் குறைக்க இது முக்கிய காரணியாயிருந்தது. அதோடு பேரரசு ஆட்சித்துறையின் திண்மையைக் குலைக்கவும் இது பெரிதும் காரணமாயிற்று.

மொகலாய ஆட்சியில் பட்டத்துக்கு உரிமை கொண்டாடக்கூடிய நிலையில் இருக்கிற வாரிசுதாரர்கள் தங்கள் தந்தையர்க்கு எதிராகவே கிளம்பக்கூடியவர்கள் என்பதையும், அதற்காக அவர்கள் சமுதாய நாகரிகப் பண்பையும் அறநெறியின் பாற்பட்ட கடமையையும் அரசுரிமையின் பாற்பட்ட பொறுப்புகளையும் காற்றில் பறக்க விட்டுவிடக்கூடியவர்களென்பதையும் அறிகின்ற மக்களுக்கு அரசாங்கத்தின்மீது மதிப்பும் மரியாதையும் ஏற்படுவதென்பது அரிதேயாகும்.

பேரரசர்கள் இங்ஙனம் தங்களது சொந்த விருப்புகளுக்கேற்ப மனம்போன போக்கில் தனியாட்சி செலுத்தியதன் விளைவாகவே (ஒரு சிலர் இக் குறைகளைப் போக்கிக்கொள்ள மனப்பூர்வமாக விரும்பினார்கள் எனினுங்கூட) நூர்ஜஹானின் ஆதிக்கம், மகபத்கானின் நடவடிக்கைகள், கான் ஜஹான் லோடியின் கிளர்ச்சி, சத்நாமிகளின் எழுச்சிபோன்ற நிகழ்ச்சிகள் நாட்டில் ஏற்பட்டன. பேரரசரை மகமத்கான் மிக எளிதில் சிறைப்படுத்திவிட்டதும், கான்ஜஹான் லோடி தக்காண விவகாரங்களை நடத்திச் சென்ற முறையும், இறுதியாக அவர் கலகத்தில் ஈடுபட்டதும், சத்நாமிகளின் எழுச்சியானது தடுப்பதற்கரிய பெருங் கிளர்ச்சியாக வடிவெடுத்த வகையும், மொகலாய அரசாங்கத்தில் இயல்பாகவே பொதிந்துகிடந்த பலவீனத்தை அல்லது மெலிவை நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இறுதியாக, மொகலாய அரசர்கள் தத்தம் விருப்பப்படித் தனியாட்சி செலுத்திய காரணத்தால், அரசாங்கத்தின் இயக்கு விசையைச் சரியான அளவில் நிலை நிறுத்தவேண்டிய பொறுப்பு முழுவதும் அரசர்களின் சொந்த ஆற்றல்களையே பெரிதும் சார்ந்து நிற்கலாயிற்று. அதாவது, நிர்வாகத்தின் சிறுசிறு நுணுக்கங்களையும் உன்னிப்பாகக் கவனிக்கின்ற திறமை, பேரரசின் பெரும் பிரச்னைகளைத் தீர்க்கும் முறையில் அவ்வப்போது கொள்கைகளை வகுக்கும் வன்மை, பேரரசில் வாழும் பல்வேறு மக்களினங்களின் தேவைகளையும் எதிர்காலக் கண்கொண்டு தைரியமாக நிறைவேற்றுகின்ற திண்மை இவற்றைப் பொறுத்தே அரசாங்கத்தின் இயக்கம் அமைந்தது எனக் கூறலாம். ஆனால் இந்தியா, ஆப்கானிஸ்தானம் ஆகிய இருபெரும் நாடுகளை உட்கொண்டிருந்த ஒரு பேரரசில் ஏற்பட்ட தொல்லைகளும் பிரச்னைகளும், அவுரங்கசீப் போன்ற உழைப்பும் திறமையும் ஒருங்கே கொண்ட மன்னர்களையே திகைக்கவைக்கும் அளவுக்குச் சிக்கல் நிறைந்தனவாயிருந்தன வென்றால், ஓரளவு திறமையிருந்தும் போக வாழ்க்கையில் ஈடுபாடுடையவர்களாயிருந்த ஜஹாங்கீர், ஷாஜஹான் போன்றவர்களுக்கு அவை தலைக்குமேல் போய்விட்ட வெள்ளமாகத்

தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. ஒவ்வொரு மனிதனுடைய திறமைக்கும் ஒரு வரம்பு உண்டு. அதற்குமேல் அவனால் செல்வதென்பது முடியாத காரியம். மொகலாயப் பேரரசர்களும் அங்ஙனமே ஓர் எல்லைக்குட்பட்ட திறமையுடையவர்களாகவே விளங்கினர். ஆனால், மொகலாயப் பேரரசோவெனின் அவர்களின் திறமைக்கு மீறிய செயல்களை வேண்டிநின்றது. பேரரசின் பிரச்னைகளைச் சமாளிக்க அசாதாரணமான திறமையானது தேவைப்பட்டது. அத்தகைய மனித வலிமைக்கு மேற்பட்ட ஒரு தெய்விகத் திறமையின் விளைவாகவே அக்பரின் ஆட்சி அவ்வளவு திறம்பட அமைய முடிந்தது. எதிர்கால முக்கியத்துவம் வாய்ந்த பல நடவடிக்கைகளை மேற்கொள்வதும், தன்னால் வகுக்கப்பட்ட ஆட்சிப் பொறியின் ஒவ்வோர் உறுப்பையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொள்வதும் அவருக்கு எளிமையாக இருந்தன. ஆனால், அவருக்குப்பின் பேரரசு பரப்பில் விரிந்தது. நிர்வாகச் செயல்கள் வரைதுறையின்றிப் பெருகிவிட்டன. பேரரசன் ஒருவன் சொந்தமாக அவற்றைக் கவனிப்பதென்பது முடியாத காரியமாகிவிட்டது. விரிந்து செல்லும் ஒரு பேரரசின் தேவைகளுக்கேற்பக் கொள்கையை வகுக்க வேண்டுமானால் பரந்ததொரு மனப்பான்மையும் எதிர்கால நோக்கும் அதற்கு வேண்டும். அக்பருக்குப்பின் வந்த மொகலாய அரசர்களிடத்தில் அவை இல்லை. எனவே, பேரரசு விரிந்துகொண்டு செல்லச் செல்ல அரசாங்கத்தின் நடைமுறைத் திறனும் சிறிது சிறிதாக நலியத் தொடங்கியது. அவுரங்கசீபின் காலத்தில் அந் நலிவு இன்னும் அதிகமாகிப் பேரரசின் வலிமையே குலைந்துவிட்டது. காரணமென்னவெனில், அவுரங்கசீப் தம் பேராற்றல்கள் அனைத்தையும் கொண்டு அக்பரைப்போல் ஒரு வரம்பற்ற முழு வல்லரசை நிலைநாட்ட விரும்பினதேயாகும். அவரது வல்லரசு அக்பருடையதைப்போலவே தொனித்தது. அக்பர் எவ்வாறு மக்களின் மனச்சான்றையும் வாழ்க்கை முறையையும் சீரமைக்க முயன்றாரோ அவ்வாறே அவுரங்கசீபும் முயன்றார். ஆனால், ஒரே ஒரு வேறுபாடுமட்டும் காணப்பட்டது: அக்பருடைய குற்றம் அளவுக்கு மீறிய தாராளத் தன்மையில் (Liberalism) தோன்றியது. ஆனால், அவுரங்கசீபின் குற்றமோவெனில், மதவெறியில் முளைத்ததாகப் போய்விட்டது; அதற்கும் மேலாக, அக்பருடைய தாராளத்தன்மையாலும், சகிப்புத் தன்மையாலுமே இஸ்லாமிய அரசு மாசு படர்ந்துவிட்டதென்றும், ஜஹாங்கீரும் ஷாஜஹானும் தங்களது அறிவார்ந்த ஆதரவை அதற்கு வழங்கியதாலேயே அது மேலும் வளர்ந்துவிட்டதென்றும் கூறி, அதைக் களைய முயன்றார். ஆனால், மக்கள் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வரும் மரபுகளுக்கும்

வேரூன்றிய நம்பிக்கைகளுக்கும் மாறுக அமைந்த ஒரு வல்லரசானது நெடுநாளைக்கு நீடிக்கமுடியாதென்பது உண்மை. அக்பரது வள்ளண்மையானது மக்களின் அடிப்படையான உணர்வுகளை மதித்தது. ஆனால், அவுரங்கசீபின் வல்லாட்சியோவெனின் மக்களின் உணர்ச்சிகளை வேண்டுமென்றே முறையாக அவமதித்தது. எனவேதான் அவரது வரம்பற்ற வல்லாட்சிக்கு மக்களிடையே எதிர்ப்புத் தோன்றியது. அவ்வெதிர்ப்பில் காணப்பட்ட பிடிவாதமானது மொகலாய ஆட்சியை வெற்றிகரமாக எதிர்க்கமுடியுமென்ற உண்மையை நன்கு நிலைநாட்டிவிட்டது. அதன் விளைவாக ஆட்சித் துறையில் ஒரு சீரழிவு ஏற்பட்டது; பேரரசின் வலிமையானது குலைந்தது. மொகலாய முடியரசானது (Monarchy) வரம்பற்றதொரு முழு முடியரசாகும்; மொகலாய ஆட்சியானது தனி மன்னர்களின் தனியாட்சியாகும். அதாவது, தனி வல்லரசு ஆகும். அக்பரின் காலத்தில் அது தந்தை மனப்பான்மை (Paternalism) எனும் பகட்டான போர்வையால் நன்கு மூடப்பெற்றிருந்தது. முன்னேற்றத்தை விளைவிக்கக்கூடிய தாராள மனப்பான்மையும், சகிப்புத்தன்மையும் அதில் அடங்கியிருந்தன. ஆனால், அவுரங்கசீபின் வல்லரசில் முழுக்க முழுக்க மத ஒறுப்பும் (Persecution) அரசியல் ஓர வஞ்சனையுந் (Political Partisanship) தான் தாண்டவமாடின. அதனாலேதான் அவுரங்கசீபின் தனி வல்லரசானது அரசாங்கத்தின் சீரழிவுக்கும், பேரரசின் நலிவுக்கும் காரணமாய்ப் போய்விட்டது. அதே சமயத்தில் பேரரசின் நலனுக்கும், பெருமைக்கும், அதன் ஆட்சிப் பொறியின் திண்மைக்கும் திறமைக்கும், அவுரங்கசீப் மனப்பூர்வமாக உழைக்கவில்லை என்று நாம் கூறுவதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. அதற்காக அவர் தம் முழுப் பலத்தோடும் உழைத்தார். அவருக்கு முன்பு ஆண்ட இரு பேரரசர்களைவிட மிகுதியாகவே அவர் அதற்காக முயன்றார். ஆனால், அதில் அவர் தோற்றார். தோல்விக்குரிய காரணத்தை அவரால் புரிந்துகொள்ள முடியாமற் போனதே அவரை அக் கதிக்கு ஆளாக்கியது. அவருடைய நம்பிக்கைகளுக்கு அது முற்றும் புறம்பானதாயும், அவரது புரிந்துகொள்ளும் சக்திக்கு மிகவும் அப்பாற்பட்டதாயும் விளங்கியதே அவரது தோல்விக்குக் காரணமாகும். அதினின்றும் வெளிப்போந்த முக்கியமான உண்மை என்னவெனின், இந்தியாவில், வேறு எந்த நாட்டிலும் இருப்பதைப் போலவே, சமயப் பிளவுகளின் அடிப்படையில் அரசியல் அதிகாரம் நிலைநாட்டப்படுவது இயலாத காரியமென்பதும், சமயத்துறையில் ஆர்வமும், அரசியல் துறையில் விவேகமும் ஒன்றுக்கொன்று மாறானவை என்பதுமேயாகும்.

பேரரசின் சுபாக்கள்

அக்பர் காலத்திய மொகலாயப் பேரரசானது வடக்கே காஷ்மீரம், காபூல், காந்தஹார் ஆகிய நாடுகளில் தொடங்கி, தெற்கே தபதி நதிவரை பரவியிருந்தது. வட இந்தியா முழுவதும், தெற்கே இப்போது பீரார் என்று அழைக்கப்படுகிற நிலப் பகுதியும் அதில் அடங்கியிருந்தன. பதினைந்து சுபாக்களாக அப் பேரரசு பிரிக்கப்பட்டிருந்தது. ஷாஜஹான் காலத்தில் தக்காணத்தின் பெரும்பகுதி வெல்லப்பட்டுவிட்டது. அகமத் நகர அரசு இருக்குமிடம் தெரியாமல் மறைந்தது. அவுரங்கசீபின் காலத்தே பீஜபூர், கோல்கொண்டா ஆகிய நாடுகள் வெல்லப் பட்டுப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. கர்நாடகத்தின் செல்வம் கொழிக்கும் பகுதிகளும் அதோடு சேர்த்துக்கொள்ளப்பட்டன. எனவே, அவுரங்கசீபின் காலத்தில் பேரரசானது இருபது சுபாக்களை உட்கொண்டிருந்தது. அவை யாவும் பேரரசரின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தன. டில்லி அல்லது ஆக்ராவிலிருந்து அவர் நாட்டினைத்தையும் ஆண்டார். மனூச்சி (Manucci) என்பாரும், முந்த் காபுல் லுபாப் (Munt-Khab-ul-Lubab) என்ற நூலும் கூறுகிறபடி இந்துஸ்தானத்தில் பதினைந்து சுபாக்களும், தக்காணத்தில் ஆறு சுபாக்களும் இருந்திருப்பதாகத் தெரிகிறது. இந்துஸ்தானத்தில் இருந்த சுபாக்கள், அக்பராபாத் (ஆக்ரா), ஷாஜஹானபாத் (டில்லி), ஆஜ்மீர், அலகாபாத், அயோத்தி, அகமதாபாத், லாகூர், காபூல், பீஹார், தாட்டா, மாள்வா, முல்தான், காஷ்மீர், வங்காளம், ஒரிசா ஆகியனவாகும். தக்காணச் சுபாக்கள் அவுரங்காபாத், பீரார், காந்தேஷ், பீடார், பீஜபூர், ஹைதராபாத் என்பனவாகும். இவை யாவும் ஆண்டு ஒன்றுக்கு 18-19 கோடி ரூபாய் வருமானத்தை[38] அளித்தன. பேரரசின் அமைப்பு முறையின் வடிவமும், அரசாங்கத்தின் போக்கும் அக்பராலேயே முதலில் நிர்ணயிக்கப்பட்டன. ஜஹாங்கீரும், ஷாஜஹானும் பேரரசின் அமைப்பு முறையின் புறவடிவத்தை அப்படியே ஏற்றுக்கொண்டனரேனும், அரசாங்கத்தின் தன்மையைப் பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் அவரவரது மனப் போக்குக்கும், ஆன்மிக உறுதிப்பாடுகளுக்கும், கால நிலைமைகளுக்கும் தக்கவாறு அதனை மெதுவாக மாற்றிக்கொண்டு விட்டனர்.

[38] Manucci, Storia do Mogor, Vol. II, p. 416; Munt-Khab-ul-Lubab, British Museum, Addl. MS. no. 26, 253, Fol. 51 et seq.

அரசாங்கத் துறைகள்

அக்பரது பேரரசு அமைப்பு முறையில், பலவிதமான துறைகள் இருந்தன என்பதையும், அவை ஒன்றுக்கொன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தன என்பதையும் நாம் முன்னரே விரிவாகக் கண்டோம். பேரரசரின் குடும்பம், தொழிலகங்கள் (கார்க்கானாக்கள்) படை ஆகியவற்றின் நிர்வாகத்துக்கும், பொது ஆட்சித்துறையின் நிர்வாகத்துக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. எல்லாம் ஒரே மாதிரியாகவே நடத்தப்பட்டன. அக்பர் காலத்தில் அஃது எங்ஙனம் இருந்ததோ அதேபோன்று தான் ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் காலத்தும் அது நடைபெற்று வந்தது. ஒவ்வொரு துறைக்கும் தனிப்பட்ட முறையில் சிப்பந்திகள் இருந்தனர். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேலைத் திட்டமும், தனித்தனியே பதிவேடுகளும் (Records) இருந்தன. எல்லாத் துறைகளும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்ததாலும், முடிவில் அவை யாவும் அரசனுகிய சுயேச்சாதிகாரியால் கண்காணிக்கப்பட்டும் கட்டுப்படுத்தப்பட்டும் வந்தமையாலும் ஏராளமான பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் வைத்திருக்கப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவற்றுள் கடிதப் போக்குவரத்துகள், ஆணைகள், தீர்ப்புகள், மாற்றல் உத்தரவுகள், நியமனம், பதவி உயர்வுபற்றிய கட்டளைகள் முதலியனவும் வரவு செலவுக் கணக்குக் குறிப்பேடுகளும், விளக்கப் பட்டியல்களும் (Descriptive Rolls) அதிகாரிகளின் ஊழிய கால வரலாற்றுப் பட்டியல்களும், செய்திக் கடிதங்களும், வெளியில் அனுப்பப்பட்ட கடிதங்களும் இன்னும் பேரரசு சம்பந்தமான ஆயிரக்கணக்கான கூறுபாடுகளைப்பற்றிய செய்திச் சுருள்களும் அடங்கியிருந்தன. அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு அல்லது சில சமயங்களில் மூன்று பிரதிகள்கூட இருப்பதுண்டு. அதனாலேதான் மொகலாய ஆட்சியைக் 'காக்ஜி இராஜ்யம்' (Kaghzi Raj) அல்லது 'காகித ஆட்சி' என்று கூறுவது வழக்கமாயிருக்கிறது.

அரசாங்கத் துறைகள் ஏறக்குறைய அக்பர் காலத்தில் இருந்ததைப் போன்றே இந்தக் காலப்பகுதியிலும் இருந்தன. பேராசிரியர் சர்க்கார் எட்டுத் துறைகளைப்பற்றிக் கூறுகிறார்: அவை: (1) கருவூலமும் வருவாயும், (2) பேரரசுக் குடும்பம், (3) இராணுவச் சம்பளக் கணக்கு வழக்குகள், (4) சமய சம்பந்தமான சிவில், கிரிமினல் சட்டங்கள், (5) சமயச் சார்பான மானியங்கள், அறப்பணிகள், (6) பொது அறநெறிக் கண்காணிப்பு, (7) துப்பாக்கிப் படை, (8) உளவு, தபால்கள்

முதலியனபற்றிய துறைகளாகும். இதில் காணப்படுகிற வரிசைக் கிரமம் தவருகத் தோன்றுகிறது. இதை உறுதிப் படுத்தக்கூடிய தகுந்த ஆதாரங்களில்லை. இதில் இராணுவம், ஜாகீர் மானிய அளிப்பு, அகாதிகள், பண்டங்களின் விலைகள், சந்தைகள் முதலியனபற்றிய துறைகள் ஒன்றும் கூறப்படவில்லை. எனவே, இக் காலப் பகுதியில் இருந்திருக்கக்கூடிய முக்கியத் துறைகள், நிதி, படை, அதோடு கூடிய சம்பளம், கணக்கு வழக்குகள், உணவு இவைபற்றிய துறைகளும் பேரரசுக் குடும்பம், நீதியும் சட்டமும், சமயச் சார்பான மானியங்களும் அறப்பணிகளும், பொது அறநெறிக் கண்காணிப்பு இவைபற்றிய துறைகளும், மத்திய உளவு அல்லது வாகியாநவிஸ் துறையுமாகும் எனக் கூறுவது சாலவும் பொருத்தமாயிருக்குமெனத் தோன்றுகிறது. அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட செயலகம் அல்லது தஃப்தர் (Daftar) என்ற நிறுவனமானது அவரது காலத்தில் இருந்ததைப் போன்றே திறமையுடன் பணி புரிந்து வந்தது. அக்பர் காலத்தில் இருந்ததைவிட அதிகமான திறமையுடன் அது செயற்பட்டு வந்தது என்றுகூடக் கூறலாம். இவை தவிர, பேரரசைச் சார்ந்த ஏராளமான பல கார்க்கானுக்கள், அதாவது தொழிலகங்களும் பண்டகசாலைகளும் இருந்தன. அவற்றிற்குத் தனியே மேற்பார்வையாளர்களும் தரோகாக்களும் இருந்தனர். அவர்கள் யாவரும் மீர் சாமன் (Mir Saman) அல்லது கானி சாமன்[39] (Khani Saman) என்ற அதிகாரிக்குக் கட்டுப்பட்டுப் பணிபுரிந்து வந்தனர்.

அரசின் அதிகாரிகள்

(i) வக்கீல் (ii) வஜீர் :

அக்பர் காலத்தே அதிகாரிகளுள் எல்லாம் தலைசிறந்தவராகக் கருதப்பட்டவர் வக்கீல் என்பவராவர். அபுல் ஃபாசல் அவரைப் பற்றிக் கூறும்போது, ''பேரரசைச் சார்ந்த நாட்டையும் வீட்டையும்பற்றிய எல்லாக் காரியங்களிலும், அவரே அரசரின் பகரத் தலைவராக (Lieutenant) விளங்குகிருர்'' எனக் குறிப்பிடுகின்ருர். வஜீர் என்பார் அவருக்கு அடுத்தபடியானவர்; ஆனுல், அவருக்குக் கீழ்ப்பட்டவர். அவரைத் திவான் எனவும் அழைப்பதுண்டு. ஆனுல், உண்மையில் வஜீரின் பணி வக்கீல் கடமையின் ஒரு பகுதியாகவே இருந்தது. எனவேதான், ஒரு சில அரசர்கள் இரண்டு பதவிகளையும் ஒருங்கே வகிக்கக்கூடிய ஒரு நபரைக் கண்டுபிடிக்க முயன்றதாக[40] அபுல் ஃபாசல் என்பார் கூறு

[39] Sarkar, Mughal Administration, p. 22.

[40] Ain-i-Akbari, preface, p. vii.

கிறுர். ஆனுல் அப்படிப்பட்ட ஒருவரைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாயிருந்தது. எனவே, இரண்டில் ஒரு பதவி மட்டுமே, அதாவது வஜீர் பதவிமட்டுமே நடைமுறையில் இருந்து வந்தது. ஷாஜஹான்மட்டும் இதற்கு ஒரு விதிவிலக்குச் செய்தார். தம் மனைவியின் வேண்டுகோளின்பேரில் அவர் ஆசஃப் கான் (Asaf Khan) என்பவரை வக்கீலாக நியமித்தார்.[41] ஆசஃப் கான் தம் அன்புக்குரிய மனைவியருள் எல்லாம் தலை சிறந்த மனைவியின் தந்தை என்பதனுலும், தாம் அரியணை எய்துதற்கு அவர் முக்கிய காரணமாயிருந்ததாலுமே அவருக்கு அப் பதவியை ஷாஜஹான் வழங்கினுர். ஜஹாங்கீர் காலத்தும் அவுரங்கசீப் காலத்தும் வஜீர் என்ற ஒருவரைப்பற்றிமட்டுமே கேள்விப்படுகிறேம். அக்பர் காலத்து இருந்ததைப் போன்றே அவர் தொடர்ந்து பேரரசின் நிதிபற்றிய விவகாரங்களைக் கவனித்து வந்தார். அந்த வகையில் அவர் உண்மையிலேயே நாட்டின் தலைமை அமைச்சராகக் கருதப்பட்டார். பல்வேறு துறைகளின் நிதி விவகாரங்களைக் கவனித்து வந்த அதிகாரிகள் அனைவரும் அவருக்குக் கட்டுப்பட்டிருந்தனர். மாநிலத் திவான்கள், திவானி குல் (Diwan-i-Kul) திவானி தான் (Diwan-i-Tan) திவானி கல்சா (Diwan-i-Khalsa), திவானி புயூதத் (Diwan-i-Buyutat), திவானி சதத் (Diwan-i-Sadat) ஆகியோரும் இன்னும் மற்றைய திவான்களும் அவருக்குட்பட்டே நடந்துகொண்டனர். வஜீர் என்பார் வருவாய்த்துறையின் தலைசிறந்த அதிகாரியாயிருந்தமையால், ஏனைய துறைகளின்மீதும் அவருக்கு நாளடைவில் ஆதிக்கம் தானுகவே ஏற்பட்டது. மாநிலங்களிலிருந்தும், படைக்கலங்களிலிருந்தும் வந்த வருவாய் சம்பந்தமான எல்லாக் கடிதங்களும், புள்ளிவிவரக் கணக்குகளும் (Returns) அவரது மேற்பார்வைக்கே அனுப்பப்பட்டன.[42] அபுல் ஃபாசல் வக்கீலைப்பற்றிக் கூறும்போது, ''அவர் எல்லா நிதி அதிகாரிகளின் தலைவர்களிடமிருந்தும் புள்ளி விவரக் கணக்குகளை வாங்கிக்கொண்டு, விவேகமான முறையில் அவற்றின் சுருக்கத்தைத் தயாரித்து வைத்துக்கொள்கிறுர்''[43] எனக் குறிப்பிடுகிறுர். அக் கூற்று அப்படியே வஜீருக்கும் பொருந்துவதாகும். மேலும், அவர் பல சமயங்களில் அரசரின் பிரதிநிதியாக இருந்து பேரரசுக்குரிய சடங்குகளைச் செய்வதும் உண்டு. பேரரசரின் 'ஆணைப்படி' (Hasb-ul-hukm) அவர் கடிதங்களை எழுதுவார். மொகலாயர்களின் புகழ்பெற்ற வஜீர்கள் பாரசீக

[41]Saksena, History of Shah Jahan, p. 65.

[42]Sarkar, Mughal Administration, p. 23.

[43]Ain-i-Akbari, preface, p. vi.

உரைநடையை எழுதுவதில் மிக வல்லவர்களாயிருந்தனர். அவர்கள் மன்னரின் சார்பாகப் பல கடிதங்களைத் தயாரித்து வெளிநாட்டு மன்னர்களுக்கு அனுப்பினர்.[44] அவ் வகையில் அவர்கள் மன்னர்களின் செயலாளர்களாகப் பணி புரிந்தனர்.

உண்மையிலேயே வஜீர் என்பார் பேரரசரின் செயலாளராக வும் அதே சமயத்தில் ''அவரது முதல் மந்திரியாகவும், முக்கிய ஆலோசகராகவும்'' விளங்கினார். வருவாய்த் துறையின் தலைவராக இருந்து பணியாற்றியதோடன்றி, மனூச்சி (Manucci) என்பார் கூறுவது போல, ''அவர்தாம் பிரபுக்களுக்கும் அவர்களின்கீழ்ப் பணியாற்றுபவர்க்கும் பதவிகளை வழங்குகிறார்.''[45] பேரரசின் முதன்மையான அதிகாரி என்ற முறையில் அவருக்குப் பல்வேறு கடமைகள் இருந்தன. ஏனெனில், அவரே மன்னரின் உண்மை யான பகரத்தலைவராக அல்லது துணைவேந்தராக விளங்கினவர். ஏனைய அதிகாரிகளைவிட அவரே அதிகமான உழைப்பையும், பொறுப்பையும் மேற்கொண்டவர். ஏனெனில், அவர் பேரரசின் நலனை முன்னிட்ட பல முக்கியமான காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. நிதி விவகாரங்களை மட்டுமின்றி, பதவி நியமனங்கள், பதவி உயர்வுகள், போர், சமாதானம், வெளிநாட்டு அரசுகளோடு தொடர்பு, உள்நாட்டு அமைதி, அரச பரம்பரையைச் சேர்ந்த இளவரசர்களின் மனப்போக்கு என்ற இவைபோன்ற ஆயிரக்கணக்கான காரியங்களை அவர் பார்த்துக் கொண்டார். எனவே, இயல்பாகவே அவருக்குப் பல துணை யதிகாரிகள் தேவைப்பட்டனர். இராணுவத் துறையில் மீர் பக்ஷி (Mir Bakshi), சாஹிபி தௌஜி (Sahibi Tauji) போன்ற அதிகாரிகள் அவருக்கு உதவி செய்தது போலவே நிதிக் கண் காணிப்புப் பணியிலும் அவருக்கு முக்கிய உதவியாளர்களாகத் திவானி தான், (Diwani Tan), திவானி கல்சா என்போர் நியமிக் கப்பட்டிருந்தனர். நாம் ஆராயும் இக் கால எல்லைக்குள் வஜீர் களாயிருந்த பெரியோர்களில் சிலர் வருமாறு: ஜஹாங்கீர் காலத்திய ஷரீஃப் கான் (Sharif Khan) ஒரு பிரபல வஜீர் ஆவார். அவர், 5,000 ஜட் (Zat) வீரர்களுக்கும், 5,000 சுவார் (Suwar) படையினர்க்கும் அதிபதியாக இருந்துகொண்டு அமீர் உல் உமாரா[46] (Amir-ul-Umara) என்ற பட்டத்தையும் பெற்றார். ஷாஜஹான் காலத்து மீர் ஜும்லா (Mir Jumla) என்பவரும்

[44]Sarkar, Mughal Administration, pp. 23-24.

[45]Manucci, Vol. II, p. 419.

[46]Jahangir, Memoir, Vol. I, p. 14.

அவுரங்கசீப் காலத்து ஜாஃபர் கான், ஆஸாத் கான் என்போரும் வஜீர்களாயிருந்தனர்.[47]

ஆசிரியர் சர்க்கார் வஜீரின் பல்வேறு கடமைகளைப்பற்றியும் விதந்தோதியுள்ளார். திவானி ஆலா (Diwani Ala) என்ற முறையிலும், திவானி குல் என்ற முறையிலும் அவர் அநேகமாக அரசின் எல்லாத் துறைகளையுமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அரசாங்கச் செலவுபற்றிய கணக்குகள் எதுவானாலும் அஃது அவருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். மான்கள் வாழும் பூங்காக்களை (Deer Parks) வைத்துப் பராமரிக்கவும் கால்நடைகளுக்குத் தீவனம் வைப்பதற்கும் ஆகும் செலவு முதல், பேகம்கள், இளவரசர்கள், பேரரசர் ஆகியோருக்காக ஆகும் செலவுவரை எல்லாச் செலவுகளைப்பற்றிய கணக்குகளும் அவருக்கு அனுப்பப்பட்டன. பேரரசின் மடைப்பள்ளி (Kitchen), தாம்பூலத்துறை (Betel- leaf Department), அகாதிகளின் சம்பளப் பட்டுவாடா, பேரரசின் குடும்பத்திலிருந்த அத்தனை பண்டக சாலைகள் இவை யாவும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தன.

அவருடைய முக்கியத் துணையதிகாரிகளான திவானி கல்சாவும், திவானி தானும் பொறுப்பு வாய்ந்த பல பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது. திவானி கல்சாதாம் உள்நாட்டு அதிகாரிகள் பலரை நியமனம் செய்தவர். "சுபாதார்கள், ஃபௌஜ்தார்கள், அமீன்கள், திவானி அதிகாரிகள், குரோரிகள், மாநிலத் தரோகாக்கள், ஃபோட்டாதார்கள் (Fotahdars), வெளியீட்டுச் சிப்பந்திகள் (பர் அமத் நவீஸன்-Bar- Amad- Navisan), அமீன்களின் தரோகாக்கள், முஷ்ரிஃபுகள், (மாநிலம் பற்றிய) கருவூலக் கஜாஞ்சிகள் (Khazanchis), சாஸாவால்கள் (Sazawals), முத்தாலிபா (அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும் திருப்பி வசூலித்தல்) வசூலிப்பவர்கள், ஜமீன்தார்களிடமிருந்து பணம் (உரிய கட்டணங்கள்) வசூலிப்பவர்கள்"[48] ஆகிய அரசாங்க அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு அவரிடந்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பேரரசு முகாம்களிலும் சுபாக்களிலும் நடைபெறும் வரவு செலவுக் கணக்குகள் பற்றிய ஓர் அறிக்கையையும் அவர் தயாரிக்கவேண்டும். பேகம்களுக்குத் தரப்பட்ட உதவிப் பணம்பற்றியும், அரசருக்குச் சொந்தமான மகல்கள் (கிராமங்கள்)பற்றியும், தொழிலாளர்கள்

---

[47] Sarkar, Aurangazeb, Vol. III, pp. 63-68.

[48] Sarkar, Mughal Administration, pp. 41-42.

பற்றியும் இன்னும் பல புள்ளிவிவரப் பட்டியல்களைத் தயாரித்து அவற்றின் சுருக்கங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

திவானி தான் (Diwan-i-Tan) என்பவர் ஜாகீர்களின் கட்டுப்பாட்டையும், சம்பளம், உதவிப்பணம் இவற்றுக்குப் பதிலாக ஒதுக்கப்பட்ட நில வருமானத்தைப்பற்றிய காரியங்களையும் கவனித்துக்கொண்டார். பேரரசின் வருவாய்களைத் திரட்டி வைப்பதும், பிரபுக்கள் அல்லது ஏழைகள் யாராயிருப்பினும், இறந்து போனவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதும், பதவியிலிருந்து நீக்கப்பட்டவர்களின் உடைமைகளைத் திரும்ப எடுத்துக்கொள்வதும், பதவிகள், அவைபற்றிய உதவிப் பணங்கள் ஆகியவற்றில் மாற்றம் செய்வதுமே அவருடைய முக்கியக் கடமைகளாகும்.[49] ஜாகீர்கள், ரொக்கப்பண டங்கா (Cash Tankha) ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், மன்சப்தார்கள், ஆகியோரைப்பற்றிய எல்லாக் காரியங்களையும் அவர் கவனித்துக் கொண்டார். மன்சப்தார்களுக்குக் கொடுக்கப்பட்ட முன் பணத்தைத் திருப்பிவாங்கல், வாழ்க்கைப்படி (Subsistance allowance - Madad-i- Maash) வழங்கல்பற்றிய விவகாரங்களும் அவராலேயே மேற்கொள்ளப்பட்டன. பேரரசர் வாயால் கூறுகின்றவற்றை-பர்வானக்களை (Parwanahs)-அவரது ஆணையின் படி (Hasb-ul-hukum) எழுதி, அதன்படி ஃபர்மன்களை (Firmans) வெளியிடுகின்ற எழுத்தகமும் (Writing Office) அவருடைய கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்தது.

(iii) மீர் பக்ஷி :

அக்பர் காலத்தில் இருந்ததுபோலவே மீர் பக்ஷி என்பார் சம்பள விநியோகத் துறைத் தலைவராயும், படைத்துறைத் தலைவராயும் ஒரே சமயத்தில் விளங்கினார். கணக்குத் தணிக்கைத் தலைவர் (Accountant - General) என்பதைவிட இராணுவ அதிகாரி என அவரை அழைத்தலே உண்மையில் பொருத்த முடையதாகும். இர்வின் என்பார் அவரது இராணுவ சம்பந்த மான கடமைகளை நன்கு விளக்கியுள்ளார். அவர் கூறியுள்ளபடி, முக்கியமான போர்க்களம் ஒன்று நிறுவப்பெறும்போது, அவர்தாம் பல தளபதிகளுக்கும் உரிய இடங்களை வகுத்து அளிப்பது வழக்கம். படையில் முன்னால் இருக்கத்தக்கவர் எவர், மையத்திலும் பக்கவாட்டிலும் யார் யார் நிற்கவேண்டும், பின் காவலுக்காக யார் யார் இருக்கவேண்டும் என்பவற்றை எல்லாம் தீர்மானித்தவர் அவரே. பேரரசரின் முன்பு வீரர்களின் வருகைப்

[49] Manucci, Vol. II, p. 419.

பதிவேடு (Muster Roll) ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுவதும் அவரது கடமையாகும். மனுச்சி என்பாரின் கூற்றுப்படி, "பேரரசின் குதிரைப்படை அனைத்துக்கும் அவரே பொறுப்பு வாய்ந்தவராவார்"[60] பேரரசின் ஒவ்வோர் அதிகாரியும், இராணுவத் தலைமை ஒன்றை மேற்கொண்டு அதற்கேற்ற பதவியையும் ஊதியத்தையும் பெற்று வந்த காரணத்தால், அவர்கள் யாவருடைய சம்பள விநியோகத்தையும் அநேகமாக மீர் பக்ஷியே கண்காணித்து வரவேண்டியிருந்தது. ஆனால், அது மறைமுகமாகவே நடைபெற்று வந்தது. அவர்களின் சம்பளங்களுக்கெல்லாம் இசைவுதரும் அதிகாரியாக அவர் விளங்கினார். ஆனால், உண்மையில் சம்பளங்களை வழங்கியவர் திவானி தான் என்பவரே யாவார். அவரே புதிய ஆட்களை வேலையில் அமர்த்தும் அதிகாரியாய் விளங்கினார். "புதிய ஆட்களைப் பேரரசர் முன் சமர்ப்பிக்கின்ற பொறுப்பு அவருடைய கைகளில்தான் கொடுக்கப்பட்டிருந்தது. அவரது தீர்ப்பின்படியே, யாருக்கு எத்தகைய மன்சப் பதவி வழங்கப்பட வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்டது. அவுரங்கசீபின் காலத்தே தலைநகரில் வேறு மூன்று பக்ஷிகள் இருந்தனர். மன்சப்தார் பதவிக்கு ஆள் சேர்ப்பதிலும், அவர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதிலும் மீர் பக்ஷிக்கு அம் மூன்று பக்ஷிகளும் உதவியாயிருந்தனர். அவர்களில் ஒருவர் அகாதிகளோடு தொடர்பு கொண்டிருந்தார். பேரரசரோ அல்லது வஜீரோ இல்லாத சமயங்களிலெல்லாம் மீர் பக்ஷி அல்லது பக்ஷி உல் மாமாலிக் (Bakshi-ul-Mamalik) என்பவர் தாம் அமீருல் உம்ரா (Amir- ul- Umra) என்ற பட்டத்துடன் போர்க்களத்தில முக்கியத் தளபதியாயிருந்து போர் செய்து வந்தார்.[51] மீர் பக்ஷிக்குத் துணைபுரிய ஏராளமான எழுத்தர்கள் இருந்தனர். ஏனெனில், படையில் ஆள் சேர்ப்பதோடு மட்டுமின்றி அவர் செய்யவேண்டிய எழுத்து வேலையும் நிறைய இருந்தது. மன்சப்தார்களின் பெயர் பட்டியல் ஒன்றை அவர் தயாரித்து வைத்திருக்க வேண்டும். அரண்மனையில் அல்லது மாநிலங்களில் இருக்கின்ற மன்சப்தார்கள் யார் யார் என்பதுபற்றிய விவரங்களை அவர் சேகரித்து வைக்கவேண்டும். மற்றும் அரண்மனைக்கு முன் காவல் புரிய வேண்டிய பணி யார் யாருக்கு எப்போது என்பதைத் திட்டப்படுத்துவதும் அவரது கடமையாகும். மேலும், சம்பளம் வழங்கப்படுவதுபற்றிய விதிமுறைகளைத் தயாரித்தல், குதிரைகளைச் சூடுபோடுதலை மேற்பார்வையிடல், குதிரைவீரர்களின் எண்ணிக்கையையும் குதிரைகளின் எண்ணிக்கையையும்

[60] Ibid.

[51] Irvine, The Army of the Indian Mughals, pp. 37-40.

கணக்கெடுத்தல், வேலைக்கு வராதவர்கள், இறந்தவர்கள், வேலையினின்று நீக்கப்பட்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை யைக் கணக்கெடுத்தல், ரொக்கப்பணம் முன்னாலேயே தரப் பட்டதுபற்றிய கணக்கைத் தருதல் போன்ற பல காரியங்களையும் அவர் மேற்கொண் டிருந்தார். எனவே, அவருக்கு நிறையப் பணித்துறை அலுவல்கள் இருந்தன[52] என்பது பெறப்படுகின்றது. மூன்று பக்ஷிகளின் உதவி அவருக்கு மிகத் தேவையாயிருந்தது. பணித்துறைச் சிப்பந்திகள் (Ministerial Staff) அக்பர் காலத்துப் போன்றே சாஹிபி தௌஜி (Sahib-i-Tauji) என்பவரின் கட்டுப் பாட்டுக்குள் இருந்து பணி புரிந்திருக்க வேண்டும்.

(iv) மன்சப்தார்கள் :

(a) அமைப்பு: நடைமுறையில், படைகளைக் கட்டியாள் பவராக விளங்கியவர் மீர் பக்ஷியே எனினும், இறுதித் தலைமை யானது பேரரசரிடமே பொதிந்திருந்தது. அவரே தானைத் தலைவராக அல்லது சேனாதிபதியாகக் கருதப்பட்டார். முக்கிய மான சமயங்களில் அவரே போர்க்களத்தில் படைகளை நடத்திச் சென்றார். இல்லாவிடில், எவரேனுமொருவரை அவரே நியமித்துப் படைகளை நடத்திச் செல்லும்படிக் கூறுவார். இந்தப் படைகளின் உட்பகுதிகள் மன்சப்தாரி முறையின் அடிப்படையில் அமைக்கப் பட்டிருந்தன. அஃது அக்பரால் தோற்றுவிக்கப்பட்டு மொகலாய ஆட்சிக் காலம் அனைத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டது. ப்ளோச்மேன் (Blochmann) என்பாரின் கூற்றுப்படி, 500 முதல் 5,000 குதிரை வீரர்களுக்கு அதிபதிகளாய் விளங்கிய மன்சப்தார்கள் அக்பர் காலத்தே 249 பேரும், ஜஹாங்கீர் காலத்தே 439 பேரும், ஷாஜஹான் காலத்தே 563 பேரும் இருந்தனர். 400 முதல் 10 வரை எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்க்கு அதிபதிகளான மன்சப்தார்கள் அக்பரின்கீழ் 1,551 பேரும், ஜஹாங்கீரின்கீழ் 2,502 பேரும் இருந்ததாகவும் அவரே கூறியுள்ளார்.[53] மன்சப்தார்கள் யாவரும், எந்தச் சமயத்தில் அழைத்தாலும் ஓடிவந்து எத்தகைய பணி புரியவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டனரோ அதற்கேற்ப இருபெரும் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒரு பிரிவினர் அரசரின் மெய்காப்பாளர்களாக அவரது அண்டையில் இருந்து கொண்டு எப்போதும் பணியாற்ற வேண்டியவர்கள். 'மாட்சிமை பொருந்திய அங்கவடியின் அருகிருப்பவர்கள்' (Hoozar-i-Rikabs) என அவர்கள் அழைக்கப்பட்டனர். இன்னொரு பிரிவினர் தலை

[52] Ibid.

[53] Ain-i-Akbari, Vol. I, pp. 535, 536.

நகரிலன்றி வேறு இடங்களில் பணிபுரிந்து வந்த தைனத்கள் (Tainat). அவர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். 20 முதல் 400 வரை எண்ணிக்கையுள்ள குதிரைவீரர்க்கு அதிபதிகள் மன்சப்தார்கள் எனவும், 500 முதல் 2,500க்கு உட்பட்ட வீரர்க்கு அதிபதிகள் உமாரா (பிரபுக்கள்) என்றும், 3,000 முதல் 7,000 வரையுள்ள வீரர்க்கு அதிபதிகள் அமீரி ஆஸம் (Amir-i- Azam-பெரும் பிரபுக்கள்) என்றும் அழைக்கப்பட்டனர். 5,000க்கு அதிகமான வீரர்க்கு அதிபதிகளான மன்சப்தார்களைத் தவிர ஏனையோரெல்லாம் அவர்கள் வகித்துவந்த ஜட் (Zat) அல்லது சுவார் (Suwar) பதவிகள்படி முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்பட்டனர். "5,000க்குக் கீழுள்ளவர்களில் யார் யாருக்கெல்லாம் ஜட் பதவியும் சுவார் பதவியும் சமமாக இருக்கின்றதோ அவர்களெல்லாம் முதல் வகுப்பினராகவும், சுவார் பதவி ஜட்பதவியில் பாதியாயிருந்தால் அவர்கள் இரண்டாம் வகுப்பினராகவும், சுவார் பதவி ஜட் பதவியில் பாதிக்கும் குறைவாயிருந்தாலும், அல்லது சுவார் பதவியே இல்லாதிருந்தாலும் மூன்றாம் வகுப்பினராகவும் கருதப்பட்டனர்."[54]

(b) சம்பளம்: மன்சப்தார்களுக்குக் கொழுத்த சம்பளம் கொடுக்கப்பட்டதைப்பற்றி இக்கால ஆசிரியர்கள் பலர் பெரிதும் கண்டித்து எழுதியுள்ளனர். இர்வின் ஒருவரைத்தவிர அநேகமாக ஏனைய ஆசிரியர்கள் யாவருமே மொகலாய அதிகாரிகள் "இக்காலக்கருத்துப்படி ஏராளமான" தொகையைச் சம்பளமாகப் பெற்றதாகவே கூறுகின்றனர். மூர்லண்டு (Moreland) என்பாரின் கணக்கும், எட்வர்டும் கேரட்டும் (Edward and Garrett) என்ற பாடப்புத்தக ஆசிரியர்களின் கணக்கும் உண்மைக்கு மாறுபட்டனவாகவே தோன்றுகின்றன. அபுல் ஃபாசல் என்பார் தந்துள்ள மன்சப்தார்களின் சம்பளப் பட்டியல்படி (Blochmann's Ain-i-Akbari Vol. I, p. 248) 5000த்துக்குடையவரான மன்சப்தார் மாதமொன்றுக்கு 30,000 ரூபாய்கள் சம்பளமாகப் பெற்றார். ஆனால் அது வெறும் ஏட்டளவில்தான் உண்மையாகும். உண்மையிலேயே 5000க்குடையவர்களான மன்சப்தார்கள் இன்னும் மிகமிகக் குறைவான தொகையையே சம்பளமாகப் பெற்றனர். அதாவது, மாதமொன்றுக்குச் சுமார் 20,000 ரூபாய்களே அவர்கள் பெற்றனர். அஃது எப்படியெனில், அவர்களில் எவருக்குமே மாதந்தோறும் சம்பளம் கிடைப்பதென்பது அரிதாகவே இருந்தது. பன்னிரண்டு மாதங்களிலும் சம்பளம் பெற்றவர்களும் மிகமிகக் குறைவு.

[54] Irvine, The Army of the Indian Mughuls, p. 6.

மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை சம்பளம் கிடைத்தால் அஃது அவர்களது நற்பேறு என்றே கருதவேண்டும். மிக உயர்ந்த ஒரு சூழ்நிலையில்கூட ஆண்டு ஒன்றுக்கு ஏழு அல்லது எட்டுமாதச் சம்பளங்களையே அவர்கள் பெற்றனர். விழிப்புடன் நன்கு ஆராய்ந்த பின்னர் இர்வின் என்பார் பின்கண்ட முடிபுக்கே வந்துள்ளார்: ''பன்னிரண்டு மாதச் சம்பளங்களையும் முழுமை யாகப் பெற்றவர்கள் மிகமிகச் சிலரேயாவர். ஆண்டு ஒன்றுக்கு அநுமதிக்கப்பட்ட சம்பளத்தொகை நான்குமாதச் சம்பளத் தொகையிலிருந்து பன்னிரண்டு மாதச் சம்பளத்தொகை வரை வேறுபட்டிருந்தது. அதோடு பேரரசரின் யானைகளையும், கால் நடைகளையும் பராமரிப்பதற்கான செலவுகளுக்காக ஒவ்வொரு வரும் தங்களுடைய படிகளிலிருந்து (Allowances) ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தவேண்டும். நாற்காற் பிராணிகளின் தீனிக்கான கட்டணம் அல்லது குராக்கி தவாப் (Khuraki-i-Dawab) என அஃது குறிப்பிடப்பட்டது.''[55] மற்றும் சம்பளம் வழங்கப் பட்ட இடத்திலேயே பிடித்துக்கொள்ளப்பட்ட தொகைகள் பல. அதாவது, ஓர் அதிகாரி 7 அல்லது 8 மாதச் சம்பளத்தைப் பெற்றுராஞல் 100க்கு 4 டாம்களும், அதற்குக் குறைவான மாதச் சம்பளங்களைப் பெற்றுல் 100க்கு 2 டாம்களும் பிடித்துக்கொள்ளப் பட்டன. இதோடுகூட ஆலம்கிர் காலத்தில், புழக்கத்திலிருந்த ஷாஜஹான் கால நாணயங்கள்மீது செண்ட்டுக்கு ஒரு ரூபாயும் (12 பென்ஸ்), அவர் கால நாணயங்கள்மீது செண்ட்டுக்கு ஒரு ரூபாய் வீதமும் (8பென்ஸ்) வரிகள் விதிக்கப்பட்டன.[56] இறுதி யான ரம்ஸான் மாதத்திலன்றி ஏனைய மாதங்களிலெல்லாம் மன்சப்தார்கள், அகாதிகள், பார்காஅன்தாஸ் (Barqandazes-துப்பாக்கி வீரர்கள்) ஆகிய எல்லா அதிகாரிகளின் சம்பளங்களி லிருந்தும் மாதந்தோறும் ஒரு நாள் சம்பளமானது பிடித்துக் கொள்ளப்பட்டது. இவ்விதமெல்லாம் பிடிபட்ட தொகை களோடு, ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ, அல்லது ஓய்வுச் சம்பளத்துக்காகவென்றே (Leave Salary) பிடிபட்ட தொகை களும் சேர்ந்துகொண்டன. இங்ஙனம், பிடிபட்ட தொகைகள் போக மன்சப்தார்களின் கைகளுக்குக் கிடைத்தது மிகக் குறை வான தொகையேயாகும். மூர்லந்தும், அவருடைய கருத்துக்களை ஒப்புக்கொள்பவர்களும், இந்தச் சம்பளப் பிடிப்புகளை எல்லாம் புறக்கணித்து விடுகின்றனர். இர்வின் என்பாரின் கணக்கெடுப்பு ஏனையோருடையதையும்விடச் சற்று நம்பத்தகுந்ததாகும். அவரது கூற்றுப்படி 5000க்குடைய முதல் வகுப்பு மன்சப்தாரின் ஆண்டுச்

---

[55] Ibid., p. 7.

[56] Irvine, The Army of the Indian Mughals, p. 19.

சம்பளம் ஏறக்குறைய ரூ. 2,50,000 ஆகும். இந்தத் தொகை யானது, ஜட் பதவியிலிருந்த 5,000 வீரர்களையும், சுவார் பதவி யில் இருந்த அதே அளவு எண்ணிக்கையுள்ள வீரர்களையும் வைத்துப் பராமரிப்பதற்குப் போதுமானது என்று அவர் கூறி யுள்ளது சரியன்று. ஏனெனில், அவர் கூற்றுப்படியே வைத்துக் கொண்டாலும், ஒவ்வொரு குதிரை வீரனுக்கும் மாதச் சம்பளம் ரூ. 16வீதத்தில் ஆறுமாதச் சம்பளம் ஆண்டொன்றுக்கு வழங்கப் பட்டாலுங்கூட, மொத்தம் ஒன்பதரை லட்சம் ரூபாய் செல வாகும். ஆனால், அவரது கருத்துப்படி, 5,000க்குடையவரான ஒரு முதல்வகுப்பு அமீர் 5,000 குதிரை வீரர்களையும் 5,000 சுவார் களையும் உண்மையில் வைத்திருக்கவில்லை; வைத்திருக்கவேண்டு மென்று எதிர்பார்க்கப்படவுமில்லை. பெரிய பெரிய மன்சப்தார் கூட அவரது பதவிக்குரிய குதிரைவீரர்கள் 5,000 என்றால், 2,000 வீரர்களைமட்டுமே கணக்கெடுப்புக் காலங்களில் மன்னரின்முன் கொண்டு வருவது வழக்கமாயிருந்ததென்பது யாவரும் அறிந்த ஒன்றே. அப்படி 2,000 வீரர்களை வழங்கிய மன்சப்தார் மிகவும் கடமையுணர்ச்சி உள்ளவராக மதிக்கப்பட்டார். ஏனைய கணக்கு களைவிட அது பகுத்தறிவுக்குப் பெரிதும் பொருத்தமாயுள்ளது. அதை ஒப்புக்கொள்வோமானால், ஒவ்வொரு பெரிய மன்சப் தாரும் தம் துருப்புகளுக்காகக் குறைந்தது 1,44,000 ரூபாயேனும் செலவழித்திருக்கவேண்டும். அதுவும் அவரே கூறியுள்ளபடி ஒவ்வொரு வீரனுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.16 சம்பளம் கொடுத் திருந்தால் அதுவும் போதாது. அதற்குப் பதிலாக மாதமொன் றுக்கு ரூபாய் 12 வீதம் ஆறுமாதச் சம்பளம் கொடுத்திருந் தால்மட்டுமே மேற்கண்ட தொகை அவருக்குப் போதுமானதா யிருந்திருக்க முடியும். ஆனால், அதுமட்டுமன்று; குதிரை வீரர் களைப் பராமரிப்பதுமட்டுமன்றி அவர் போக்குவரவுச் சாதனங் களாகப் பயன்பட்ட 160 வண்டிகளைப் பராமரிக்கவும், 20 கோவேறு கழுதைகள், 80 ஒட்டகங்கள், 100 யானைகள், 300 குதிரை ஆகியவற்றுக்குத் தீனி வாங்கிப் போடவும் வேண்டியிருந் தது. இவை அநேகமாக இன்றியமையாதனவாயிருந்தன. இவற் றுக்காக ஆண்டு ஒன்றுக்கு 40,000 ரூபாயாவது செலவாகக்கூடும். எனவே, இச் செலவெல்லாம் போக இவருக்கு ஆண்டொன்றுக்கு மிஞ்சக்கூடியது ரூ. 65,000 ஆகும். அதைக் கொண்டுதான் அவர் தம் பெருங்குடும்பத்தைப் பராமரிக்கவேண்டியிருந்தது. அக் குடும்பத்தில் ஏராளமான உறவினர்களும், சார்பினர்களும், வேலைக்காரர்களும், பாடகர்களும், நடனக்காரர்களும், இசை வாணர்களும் இருந்தனர். அதோடு தானதர்மங்களையும் அவர் அப் பணத்தைக்கொண்டு செய்யவேண்டும். பெருங்குடிப் பிறந் தோர்க்கு அத்தகைய தர்மகைங்கரியங்கள் புறக்கணிக்க முடியா

தனவாயிருந்தன. இன்னும் அவர் பேரரசர்க்கும் அரசவை மேலதிகாரிகளுக்கும் அவ்வப்போது வெகுமதி வழங்கவேண்டும்; தமக்குக் கீழ்ப் பணிபுரிபவர்களுக்குப் பரிசு தரவேண்டும். இங்ஙனம், அவர் பலவகையிலும் தம் பெருமையைக் காத்துக்கொள்ளப் பெரும் பணம் செலவழிக்க வேண்டியிருந்தது. அதே சமயத்தில் அது தடுக்க முடியாததோர் இன்றியமையாத செலவாகவே அக்காலத்தில் விளங்கியது. இப்படிப்பட்ட செலவுகள் அனைத்துக்கும் 65,000 ரூபாய் போதுமானதாயில்லை. எனவே, பெரும் புள்ளிகளில் பெரும்பான்மையோர் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏராளமாகக் கடன் வாங்கலாயினர். அக் கடனைத் திருப்பித் தராமலேயே அவர்களிற் பலர் மாண்டு போயினர். இதை அறிந்த அக்பர் தாம் முதலில் நியாயமான வட்டி வீதத்தில் மன்சப்தார்களுக்குக் கடன் கொடுப்பதற்காகத் தனிப்பட்டதொரு துறையையே ஏற்படுத்தியிருந்தார். எனவே, மன்சப்தார்கள் ஏராளமாகச் சம்பளம் வாங்குவதாக வெளிக்குக் காணப்பட்டாலும், உண்மையில் அஃது அவ்வளவு அதிகம் அன்று என்பதும், அவர்கள் அவசியமாகச் செய்யவேண்டியிருந்த பற்பல செலவுகளையும் பார்க்கும்போது அது மிகக் குறைவான சம்பளமே என்பதும் இதனால் நன்கு நிரூபணமாகிறது.

இரண்டாவதாக, அவர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பளத் தொகையானது அவர்களால் செய்யப்பட்ட சேவைக்கு மீறியதா இல்லையா என்பதை ஆராய்தல் வேண்டும். 5,000க்கு உடையவரான ஒரு மன்சப்தார் பிரபுக்களிலெல்லாம் முதன்மை பெற்றவராயும் பேரரசின் சிறந்த அதிகாரிகளுள் ஒருவராயும் திறமை மிக்க தளபதியாயும், பல சமயங்களில் ஒரு சுபா அல்லது மாநிலத்தின் ஆளுநராகவும் இருந்தவர். அத்தகைய ஒரு மனிதருக்கும், 2,000 வீரர்களைக்கொண்ட ஒரு படைக்குமாகச் சேர்த்துப் பேரரசில் ஆண்டு ஒன்றுக்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய்கள் செலவாயின. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், இந்திய மாகாணம் ஒன்றை ஆண்டு வந்த ஆளுநர்க்காக இந்தியக் கருவூலத்திலிருந்து எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்பதை இப்போது மொகலாய ஆளுநர் ஒருவர்க்கு ஆன செலவோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாக: பம்பாய், வங்காளம், சென்னை அல்லது ஐக்கிய மாகாணங்களை ஆண்டு வந்த கவர்னர் ஒருவருக்குப் பிரிட்டிஷார் ரூ. 1,20,000 சம்பளமாக வழங்கினர். அதோடு அவரைச் சார்ந்த நிலையங்கள் பலவற்றையும் பராமரிப்பதற்காகவென்று அவருக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்பட்ட உதவிப்பணம் வங்காளத்தில் 6,70,300 ரூபாயாகவும், சென்னையில் 5,76,100 ரூபாயாகவும், பம்பாயில் 5,38,500 ஆகவும் இருந்தது. அதாவது, ஆண்டு ஒன்றுக்கு

ஐந்தரையிலிருந்து ஆறு லட்சம் ரூபாய்கள் வரை ஆளுநர் ஒருவர்க்கு உதவிப்பணமாக வழங்கப்பட்டது. இதோடு இங்கிலாந்திலிருந்து அவர் வந்தபோது அவருடைய தேவைப் பொருள்களுக்காக வழங்கப்பட்ட 2,000 பவுனையும் கூட்டிக் கொள்ளவேண்டும்.[57] இவை யாவற்றையும் சேர்க்கும்போது, மொத்தம் ஆறிலிருந்து ஆறரை லட்சம் ரூபாய்கள் வரையில் ஓர் ஆளுநர்க்காகப் பிரிட்டிஷார் செலவு செய்ததாகத் தெரிகிறது. அதுவும் நிர்வாகத் துறையில் வெறும் சிவில் பிரிவைமட்டுமே கவனித்துக்கொண்ட ஒரு நபருக்கு அத்தனை செலவு செய்யப்பட்டது. அதோடு, இந்தியப் படையில் 2,000 துருப்புகளுடன் கூடிய முதல்தரத் தளபதியாக இருக்கும் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு என்ன சம்பளம் வழங்கப்படுகிறதென்பதைக் கணித்து அதையும் ஆளுநர் செலவோடு சேர்த்தால்தான், மன்சப்தாருக்கு ஆகும் செலவையும், ஆளுநர்க்கு ஆகும் செலவையும் ஒப்பிட்டு அவை ஒவ்வொன்றின் தராதரத்தையும் எடை போட முடியும். தோராயமாகப் பார்க்குமிடத்து, மொகலாயப் பேரரசில் 2,000 படைவீரர்களைக் கொண்ட சேனை ஒன்றைக் கொண்டிருந்த திறமைமிக்க தளபதியும் முதல்தரமான ஆளுநருமாயிருந்த ஒருவர்க்காகச் செலவிடப்பட்ட தொகையானது ஆண்டொன்றுக்கு இரண்டரை லட்ச ரூபாய்களாகும். ஆனால், சேனை எதுவும் கொண்டிராத, முதல்தரமான ஆளுநர் ஒருவர்க்கு இந்தியாவில் ஆண்டொன்றுக்கு ஆன செலவு ஆறு லட்ச ரூபாய்களாகும். 2,000 வீரர்களைக்கொண்ட சேனையை வைத்துச் சமாளித்த தளபதி ஒருவர்க்கு ஆண்டொன்றுக்குப் பத்துமுதல் பன்னிரண்டு லட்ச ரூபாய்கள் செலவாகியிருக்கக்கூடும். எனவே, ஆளுநரொருவர்க்காகச் செலவிடப்படவேண்டிய தொகை பிரிட்டிஷார் காலத்தில் ஏறக்குறையப் பதினாறிலிருந்து பதினெட்டு லட்சமாக இருந்தது. ஆனால், அதே நிலையில் இருந்த மொகலாய மன்சப்தார்க்கு இரண்டரை லட்ச ரூபாய்கள்மட்டுமே செலவாயிற்று. மூர்லந்து என்பாரது கணக்குப்படி, மொகலாயர் கால ரூபாயின் வாங்கும் சக்தியானது (Purchasing Power) தற்கால (1938) ரூபாயின் வாங்கும் சக்தியை விட ஆறு மடங்கு அதிகமாயிருந்தது என்பதை ஒப்புக்கொண்டபோதிலுங்கூட, 5,000க்குடைய ஒரு மொகலாய மன்சப்தாருக்குச் செலவிடப்பட்ட தொகையானது, அவர் செய்த சேவைகளின் மதிப்புக்கேற்றபடி அமையவில்லை. அவரால் செய்யப்பட்ட அதே அளவு சேவையைச் செய்த ஒருவர்க்குப் பிரிட்டிஷாரால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய தொகைக்கு மிகவும் குறைவான தொகையே அவருக்கு ஊதியமாக வழங்கப்பட்டதெனக்

[57] Palande, Indian Administration, p. 174.

கூறலாம். எனவே, மொகலாய அதிகாரிகளைப்பற்றிப் பொதுப் படையாகப் பேசும்போது பல்வேறு காரணங்களை நாம் ஆராய்ச் சிக்கு எடுத்துக்கொள்ளல் அவசியம். ஆங்கிலோ-இந்திய வாழ்க் கைத் தரத்தின்படிப் பார்க்கும்போது, அன்றைய சம்பளங்கள் அவ்வளவு அதிகமானவையல்ல எனக் கூறி இதை முடிக்கலாம்.

(c) ஜாகீர்: 'மிகப் பெருமளவு' சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு வாழ்க்கையைப் பிரபுக்கள் அநுபவித்து வந்தார்கள் எனக் கூறமுடியாது. அதற்குப் பதிலாக, அவர்கள் அடிக்கடி அவசியம் மேற்கொள்ள வேண்டியிருந்த செலவுகளின் காரண மாக அவர்களிற் பலபேர் கடன் எனும் கடலில் ஆழமாக இறங்கி விட்டார்கள். ஆகையால், அவர்கள் ரொக்கமாகச் சம்பளம் தரப்படுதற்குப் பதிலாக ஜாகீர்கள் வழங்கப்படுவதை வரவேற் றனர். அக்பரின் காலமாகிய அத்தனை முன்னைய காலத்தி லிருந்தே ஜாகீர் வழங்கும் வழக்கம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது. ஷாஜஹான் காலத்தில் ஜாகீர்கள் ஏராளமாக வழங்கப்பட்டன. பொதுவாக, மாநிலங்களிலும், பேரரசின் ஓரங்களிலும் நன்கு முழுவதுமாக வெல்லப்படாத பகுதிகளிலுமே ஜாகீர்கள் வழங்கப் பட்டன. இம் முறையினால் மத்திய அரசாங்கத்துக்கு இரண்டு வகையில் நன்மை ஏற்பட்டது. முதலாவதாக, ஜாகீர்தார்கள் தங்களுக்கு உட்பட்ட பகுதிகளை முழுமையாக வென்றுவிட வேண்டுமென்பதைத் தம் உற்ற கடமையாகக் கருதினர். அதோடு அங்கு அமைதியை நிலைநாட்டி அதன்மூலம் தங்களுக்குச் சேர வேண்டிய வருவாயை வசூல் செய்வதில் அவர்கள் குறியாயிருந் தனர். அப்படிச் செய்வதன்மூலம் தொலைவிலுள்ள இடங்களி லிருந்து வருவாயை வசூல் செய்து தலைநகர்க்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பினின்றும் மத்திய அரசாங்கத்துக்கு விடு தலை கிடைத்தது. இரண்டாவதாகத் தங்களுடைய விசித்திரமான பணியின் காரணமாக படை ஒன்றை எப்போதும் நன்னிலையில் வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஜாகீர்தார்களுக்கு ஏற் பட்டது. தேவையான சமயத்தில் மத்திய அரசாங்கம் உண் மையிலேயே அதைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இஃது ஏது வாயிற்று.

(d) சேலாக்கள்: ''இங்ஙனம் திரட்டப்பட்ட கூலிப் பட்டா ளத்தைத் (Mercenaries) தவிர, மன்சப்தார்கள் ஒவ்வொரு வரும், தம்மையே முழுவதுமாக அண்டி வாழும் 'சேலாக்கள்' எனும் அடிமைப் பட்டாளமொன்றையும் தம்மைச் சுற்றியும் வைத்துக்கொண் டிருந்தனர். முன் சொல்லப்பட்ட வீரர்கள்மீது அவர்களுக்கு அவ்வளவு கட்டுப்பாடு செலுத்த முடியாதிருந்தது.

ஆனல், பின் சொல்லப்பட்ட அடிமைத் துருப்புகள்மீது அவர்கள் முழு ஆதிக்கம் செலுத்தினர். ஏனெனில், அவர்கள் தம் எஜமானரையன்றி வேறெவரது துணையையும் நாடக்கூடாதவர்கள். அவர்களுக்கென்று தனி வீடோ உடைமையோ கிடையாது. அரசனது பாசறை எதுவோ அதுவே அவர்களின் வாழிடம். அவர் எங்கே செல்லுகிருரோ அங்கெல்லாம் உடன் சென்று அவருக்கு அணுக்கத் தொண்டு செய்துகொண் டிருப்பதொன்றே அவர்களது தலையாய கடமையாகும். அவர்களின் உணவு, உடை, படைப் பயிற்சி அனைத்தையும் மன்சப்தாரே கவனித்துக்கொண்டார். எனவே, அவர்கள் மன்சப்தார்கள் படையின் கரு (Kernel) எனத் திகழ்ந்தனர். சேலா (ஓர் அடிமை) என்ற இந்திப் பெயர் அத் துருப்பினர்க்கு வழங்கப்பட்டது.''[58] இந்த வழக்கமானது அக்பரால்தான் முதலில் தோற்றுவிக்கப்பட்டு, அவருடைய சந்ததியாரால் தொடர்ந்து பின்பற்றப்பட்டது.[59] நாளடைவில் இப் பழக்கம் அரசவையிலிருந்து பிரபுக்களிடமும் பரவியது.

(e) அகாதிகள் (Ahadis): சேலாக்கள் எனும் துருப்புகளேயன்றி அகாதிகள் அல்லது கண்ணியமிக்க துருப்புகள் (Gentlemen-troopers) எனப்படுவோரும் மன்சப்தார்களின் படைகளில் பணிபுரிந்து வந்தனர். சாதாரணப் படைவீரர்களைவிட உயர்ந்ததும், மன்சப்தாரைவிடச் சற்றுத் தாழ்ந்ததுமான ஒரு பதவியை அவர்கள் வகித்தனர். பேரரசருக்கு அண்டையில் இருந்துகொண்டு அவருடைய சொந்தச் சௌகரியங்களை அவர்கள் கவனித்து வந்தவர்கள். ''பேரரசரே அவர்களது உடனடியான படைத் தலைவராக விளங்கியிருக்க வேண்டும்'' என இர்வின் எனும் ஆசிரியர் 'செய்ருல் முடாகெரின்' (Seir-ul-Mutakherin) எனும் நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிருர். அரசருக்கருகாமையில் அவர்கள் இருந்ததே அவர் அங்ஙனம் எண்ணியதற்குக் காரணமாகும். ஆனல், உண்மையில் அவர்களுக்குத் தனியே ஒரு தளபதி இருந்தார். அவர் தரோகாயி காஸ் சௌகி (Darogha-i-Khas Chauki) அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட படைக்காவல் வீரர்களின் அதிகாரி எனப்பட்டார். அவர்களைப்பற்றி மனூச்சி என்பார் கூறும்போது ''இவர்கள் யாவரும் பொறுக்கியெடுக்கப்பட்ட ஆட்கள். கண்ணியமான பிரபுக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சாதாரணமாக நாலாயிரம் குதிரை வீரர்கள் கொண்ட படையினராக இவர்கள் இருப்பார்கள்''[60] என்று

[58] Irvine, The Army of the Indian Moghuls, p. 11.
[59] Manucci, Vol. II, p. 423.
[60] Manucci, Vol. II, p. 422.

குறிப்பிடுகின்றார். அவர்களுக்குக் கணிசமான அளவு சம்பளம் வழங்கப்பட்டது. ஆய்ன்-இ-அக்பரியில் கூறியுள்ளபடி, அவர்களில் ஒரு சிலர் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 சம்பளமாகப் பெற்றனர். பகதூர்ஷாவின் காலத்தில் அவர்களின் மாதச் சம்பளம் ரூ. 40 ஆக இருந்தது. பேரரசின் கருவூலத்திலிருந்து நேரிடையாக அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. ஒருவேளை அவர்கள் பேரரசரின் மெய்காப்பாளர்களாக இருந்திருக்கக் கூடும். ஆனால், உண்மையில் வாலா சாஹிகள் (Wala Shahis) எனப்பட்ட வீரர்கள்தாம் மெய்காப்பாளர்கள் போன்று இருந்தனரென்று ஒரு சிலர் வாதிக்கின்றனர். அவர்கள் பேரரசராலேயே நியமிக்கப்பட்டனர். அவரது சொந்தப் பணத்திலிருந்தே அவர்களுக்குச் சம்பளம் தரப்பட்டது. பக்ஷிகள் நால்வரில் - மீர் பக்ஷியும் அவருடைய மூன்று துணையாளர்களும்- மூன்றுமவர் வாலா ஷாஹிகளின் பக்ஷி என்றும், நான்காமவர் அகாதிகளின் பக்ஷி என்றும் அழைக்கப்பட்டனர்.[61]

(f) பீரங்கிப் படை (Artillery): தரைப்படையின் மிக முக்கியமான பகுதிகளில் பீரங்கிப்படையும் ஒன்றாகும். மனூச்சி என்பாரின் கூற்றுப்படி அவுரங்கசீபின் காலத்தில் பீரங்கிப்படைத் துறையை 12,000 இராஜபுத்திர வீரர்களைக்கொண்ட பட்டாளம் ஒன்றுமட்டுமே நிர்வகித்து வந்தது.[62] அப் பகுதியில் பொருளுற்பத்தி செய்வதற்கென ஒரு தனித்துறையும் வெடிமருந்து அல்லது படைக்கலப் பணித்துறை என ஒன்றும், போர்க்களத்தில் மெய்யாகவே பயன்படுத்தப்படும் பீரங்கிப்படைத் துறையும், கோட்டைகளில் பயன்படுத்தப்படும் துப்பாக்கிப் படைத் துறையும் என நான்கு துறைகள் இருந்தன. இவற்றில் முதல் இரண்டுக்கும் தலைவராக விளங்கியவர் கானி சாமன் (Khani-Saman) என்பவராவர். மீதி இரண்டு துறைகளின் தலைவராக விளங்கியவர் மீர் ஆதஷ் (Mir Atash) என்பவராவர்.[63] அக்பர் காலத்து இருந்ததைப் போன்றே அவருக்குப் பின்பும், பீரங்கிப் படையானது பேரரசுக் குடும்பத் துறையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது.[64] இத் துறையானது முற்றும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. மத்திய அரசாலேயே இது பராமரிக்கப்பட்டும் நிர்வகிக்கப்பட்டும் வந்தது. போர்க்களப் பீரங்கிகள், துப்பாக்கிகள் முதலிய வெடிமருந்துப் போர்க்கருவி

[61] Irvine, The Army of the Indian Moghuls, p. 40.
[62] Vol. II, p. 422.
[63] Irvine, op. cit., p. 113.
[64] Ain-i-Akbari, Vol. I, pp. 109-17.

கள் உற்பத்தி செய்யப்படுவதையும், வெடிமருந்துக் கிடங்கு களையும் கானி சாமன் எனும் அதிகாரி கண்காணித்து வந்தார். போர்க்களத்தில் பீரங்கிப்படை பயன்படுத்தப்பட வேண்டிய முறைகளைத் தீர்மானித்தவர் மீர் ஆதஷ் (Mir Atash) எனும் அதிகாரியாவர். மீர் ஆதஷ் அல்லது அடிஷ் என்பார்தாம் ஒருவேளை பீரங்கிப் படையின் தரோகா என அழைக்கப்பட்டிருத்தல் கூடும்.[65] மேற்சொல்லப்பட்ட அதிகாரிகள் இருவரும் சுயேச்சை யாகவே தொழிற்பட்டனர். பீரங்கிப்படையிலேயே இரண்டுவகை இருந்தது. கனமிக்க பெரும் பீரங்கிகள் ஒரு வகை. இலேசான சிறு பீரங்கிகளும் துப்பாக்கிகளும் இன்னொரு வகை. ''அளவில் மிகவும் பெரிதாய்க் காணப்பட்ட பீரங்கிகளின்மீது மொகலாயர் களுக்கு அலாதி பிரியம் இருந்தது. ஆனால், அவை வெறும் அலங்காரமாயும் ஆடம்பரமாயும் இருந்தனவே அன்றி அவ்வளவு பயனுடையனவாக இல்லை.''[66] பெரிய பீரங்கியின் சத்தந் தான் பெரிதாயிருந்ததே ஒழிய, அதனால் ஏற்பட்ட பலன் அவ்வளவு ஒன்றும் பயங்கரமாயில்லை. அவை பித்தளையால் செய்யப்பட்டிருந்தன. ஓரிடம்விட்டு வேறிடத்திற்கு அவற்றைக் கொண்டு செல்வதென்பது பெரிய பிரச்னையாயிருந்தது. எனவே, எங்கெல்லாம் அவற்றை விட்டுவிட்டுப் போக முடியுமோ, அப்படி விட்டுவிடுவதால், அவை எங்கெல்லாம் பத்திரமாக இருக்கு மெனத் தெரிந்ததோ அங்கெல்லாம் அவற்றை விட்டுவிட்டுப் போய்விடுவதே மொகலாய அரசர்களின் வழக்கமாகும்.

(v) மொகலாயரின் தரைப்படை :

மொகலாயரது தரைப்படையின் வலிமையினைப்பற்றி ஓரளவு ஆராய்ந்தபின் இப் பாடப் பகுதியை முடிப்போமாக. எந்த ஒரு காலத்திலேனும் மொகலாயத் தரைப்படையில் குறிப்பாக எத்தனை வீரர்கள் இருந்தார்கள் எனக் கூறுவது கடினம். சர்க்கார் எனும் ஆசிரியரின் கூற்றுப்படி, ஷாஜஹானின் தரைப் படையில் 1648ஆம் ஆண்டில் 4,40,000 பேர்கள் இருந்தனர். அவர்களுள் 2,00,000 பேர்கள் குதிரைவீரர்களாவர். 8,000 பேர்கள் மன்சப்தார்களாவர். மேலும், அதில் 7,000 அகாதி களும், 40,000 காலாட்படையினரான துப்பாக்கி பீரங்கி வீரர்களும், இளவரசர்கள், பிரபுக்கள் ஆகியோரால் தலைமை தாங்கி நடத்தப்பட்ட 1,85,000 குதிரைப்படை வீரர்களும் இருந்தனர். இவற்றோடு பர்கானாக்கள், சர்க்கார்கள் ஆகிய உள்நாட்டுப் பகுதிகளில் ஃபௌஜ்தார்கள், கரோரிகள்,

[65] Elliot and Dowson, Vol. VII, p. 344.
[66] Irvine, op. cit. p. 48.

அம்லாக்கள் ஆகியோரால் திரட்டி வைக்கப்பட்டிருந்த உள் நாட்டுப் படை(Local Militia)கள் வேறு இருந்தன.[67] மேலும், பேரரசருக்குத் திறை செலுத்தி வந்த சிற்றரசர்களாலும் தலைவர்களாலும் அவ்வப்போது திரட்டப்பட்ட நிலையிலிப் படைகளும் (Irregular contingents) இருந்தன. இவை யாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, ஷாஜஹான் தாம் சிறைவாய்ப்படுமுன் தம்மிடம் 9,00,000 துருப்புகள் இருந்ததாகக் கூறியது சரியாக இருக்குமென்றே தோன்றுகிறது. இராஜாக்களிடமும், திறை செலுத்தும் தலைவர்களிடமும் இருந்த நிலையிலிப் படைகளை ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானால், அக்பரிடம் இரண்டரை லட்சம் துருப்புகளும், ஷாஜஹானிடம் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகளும் இருந்திருக்கவேண்டுமெனத் தெரிகிறது.[68] ஆனால், திறமை என்பதைக்கொண்டு அவற்றை எடை போடுவோமேயானால் அக்பருடைய படைகள் அவருக்குப் பின்வந்த எல்லா அரசர்களின் படைகளையும் விஞ்சியனவாயிருந்தன. இதனாற்றான், அவுரங்கசீபின் காலத்தே இந்தியாவுக்கு வந்த மனூச்சி என்பார் இந்தியப் பேரரசு முழுவதையும் வென்று தன்னடிப்படுத்த 30,000 வீரர்களை உட்கொண்ட ஓர் ஐரோப்பியப் படை போதுமானது என்று கூறினார் எனத் தெரிகிறது.[69]

(vi) பேரரசுக் குடும்பம் (Imperial household):

பேரரசின் வாழ்வு, பேரரசரின் வாழ்வைச் சார்ந்து நின்ற காரணத்தால் அவரது வாழ்க்கை விலைமதிக்க வொண்ணுததாய்க் கருதப்பட்டது. எனவே, அவரது வாழ்வையொட்டிய பேரரசுக் குடும்பத்தின்மீது பெருங் கவனம் செலுத்தப்பட்டது. பேராசிரியர் சர்க்காரின் கூற்றுப்படி அவரது குடும்ப நிர்வாகமானது கானி சாமன் அல்லது உயர் பாதுகாப்பாளர் பிரபு (Lord High Steward) என்பாரின் கைகளில் இருந்தது.[70] ஆனால் அவரது கூற்று சரியற்றதாகவே தோற்றுகிறது. ஏனெனில், கானி சாமன் அல்லது மீர் சாமன் என்பவர் உண்மையில் பேரரசைச்சேர்ந்த பண்டகசாலைகளையும், தொழிலகங்களையுமே கண்காணித்து வந்தார். எனவே, அவரைச் 'செலவழிப்புக்குரிய திவான்' எனப் பலரும் அழைப்பது வழக்கம். அவரைப்போன்றே முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்கள், அரண்மனையின் வெளிப்

[67] J. N. Sarkar, Studies in Mughal India, p. 20.
[68] Moreland, India at the death of Akbar, p. 76.
[69] Storia do Mogor, Vol. II, p. 441.
[70] Sarkar, Mughal Administration, p. 22.

புறக் காவலாளிகளின் மேற்பார்வையாளரும், பெண் அதிகாரிகளும், அரண்மனைக்குள் காவல் புரிந்துவந்த இராக்கதப் பெண் காவலாளிகளும் ஆவர் (Amazonian Guards). அரண்மனைக்குள் வைக்கப்பட்டிருந்த பெரிய பெரிய இரும்புப் பெட்டிகளுள் பேரரசின் வருவாயெல்லாம் திரட்டி வைக்கப்பட்டிருந்தது. அது பேரரசின் கருவூலமெனப்பட்டது. அது திடமான சுவர்களுக்கிடையே வைக்கப்பட்டு மிக விழிப்போடு பாதுகாக்கப்பட்டு வந்தது. அபுல் ஃபாசல் என்பாரின் கூற்றுப்படி, பண்டங்களைத் திரட்டி விநியோகிக்கும் துறை, பேரரசின் கொட்டில்களை நிர்வகிக்கும் துறை, அரண்மனை அலங்கரிப்புத் துறை போன்ற சில துறைகளும் அரண்மனை நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தன. எனவே, அரண்மனை நிர்வாகத்தோடு பல பெரிய அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தனர். அதற்காக ஆன செலவுத் தொகை மிகப் பெரியதாயிருந்தமையால் நிதி அமைச்சர் அல்லது திவானி ஆலா (Diwan-i-Ala) என்பார் அதோடு நேரடியாகத் தொடர்புகொண் டிருந்தார். ஆனால், உண்மையாகவே அரண்மனைக்குரிய பொருளைச் செலவழித்தவர் மீர் சாமன் எனும் அதிகாரியே யாவர். அதேபோன்று மீர் பக்ஷியும் அதோடு தொடர்புகொண் டிருந்தார். ஏனெனில், அரண்மனையின்முன், முறைப்படி காவல் புரியவேண்டிய குதிரை வீரர்களின் சம்பளத் தொகையை வகுத்து அது வழங்கப்படுதற்கான இசைவு தர வேண்டியவர் அவரே. ஆனால், அக் காவல் வீரர்களை உண்மையிலேயே கட்டுப்படுத்தி வந்தவர் தரோகாயி காஸ் சௌகி (Darogha-i-Khas Chauki) என்பவரே யாவர். கடைசியாகப் பேரரசின் பொது நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்ட இரு பெரும் அதிகாரிகள் வக்கீலும் வஜீருமாவர். அக்பர் காலத்து வக்கீலும், அவருக்குப் பின்வந்த அரசர்கள் காலத்து வஜீரும் பேரரசர்க்கு அடுத்தபடியாக இருந்து அரண்மனைக் குடும்ப நிர்வாகத்தை நடத்தினர். அக்பரது காலத்துக்குப்பின் அரண்மனைக் குடும்ப நிர்வாகத்தின் மொத்த அமைப்பில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. அவரது காலத்திலிருந்தது போன்றே, ஏராளமான உயர்தர அதிகாரிகள் அரச குடும்பத்தோடு தொடர்புடைய பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பேற்று நடத்தி வந்தனர். மீர் சாமன் அல்லது கானி சாமன் இவர்களைத்தவிர மீர் அர்ஸ், அரண்மனைத் தளபதி அல்லது தரோகாயி காஸ் சௌகி, யானைகளுக்கு அதிபதி, முகாம்களுக்கு அதிபதி அல்லது மீர் மன்ஸில் (Mir Manzil), அரச உடைகளின் காப்பாளர் (Keeper of Wardrobe), மீர் பகாவால் (Mir-Bakawal), குதிரைகளுக்கு அதிபர் அல்லது அட்பெகி (Atbegi), பொருளாளர் (Treasurer) ஆகிய பல அதிகாரிகள் இத் துறையில் பணிபுரிந்து வந்தனர்.

(a) அந்தப்புரம் (Seraglio): பேரரசுக் குடும்பத்தில் கார்க்கானுக்கள் போன்ற புற நிறுவனங்கள் இருந்ததோடு, அரண்மனையின் உட்புறத்தே மகல் அல்லது அந்தப்புரம் என்ற ஒன்றும் இருந்தது. அதில் வெவ்வேறு இனத்தினைச் சேர்ந்த இரண்டாயிரம் மகளிர் இருந்தனர். "மகல் என்ற அந்தப்புரத்துக்குள்ளே ஏராளமான பெண் அதிகாரிகள் உள்ளனர். அரண்மனைக்கு வெளியில் அரசர்க்கு எப்படி அதிகாரிகள் இருந்தனரோ, அதே போல உள்ளேயும் பல பெண் அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் வெளியே இருந்த ஆண் அதிகாரிகளுக்கு இணையான பதவிகளைக் கொண்டிருக்கின்றனர். அரசர் அரண்மனையைவிட்டு வெளியே வராதபோதெல்லாம், ஒள்ளியரான இப் பெண்பாலாரின் வாய்களின்மூலமாகவே அரசரால் அனுப்பப்படும் ஆணைகளைப் புறத்தேயுள்ள ஆண் அதிகாரிகள் பெறுகின்றனர். இதில் பணிபுரியும் பெண்டிர்கள் மிக மிகக் கவனத்துடனேயே நியமிக்கப்படுகின்றனர். அவர்களிடம் மதிநுட்பம் நிறையக் காணக் கிடக்கிறது. நன்றிது தீதிது என எளிதில் முடிவுக்கு வரும் திறமையும் அவர்கள்பால் பொதிந்து கிடக்கிறது. பேரரசில் நடைபெறுவன அனைத்தையும் அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். எப்படி எனில், புறத்தேயுள்ள அதிகாரிகள் அனைவரும் அரசர்க்குக் கட்டாயமாகத் தெரிய வேண்டிய செய்திகள் அனைத்தையும் எழுதி அறிக்கைகளின் வடிவில் மகலுக்குள் அனுப்பவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றனர். அங்ஙனம் அனுப்பப்படும் அறிக்கைகளுக்கேற்ற பதில்களை மன்னர் இப் பெண் அதிகாரிகள்மூலமாகவே வெளியில் அனுப்புகிறார். அவரால் காட்டப்பட்ட நெறியின்படி அப் பெண்டிர் வெளிவந்து பதில்களைத் தருகின்றனர். வாகியாநவிஸ்களும், (Wakianawis), கூஃபியாநவிஸ்களும் (Khufianawis) தங்கள் அறிக்கைகளை அரசரிடம் அனுப்புங்கால், "அச் செய்திச் சுருள்கள், மகலைச் சேர்ந்த பெண்பாலாரால்தான் அரசரின் முன்னிலையில், ஏறக்குறைய மாலை ஒன்பது மணியளவில் படிக்கப்படுகின்றன." ஒற்றர்களின் அறிவிப்புகளும் இங்ஙனமே பெண் அதிகாரிகள்மூலந்தான் அரசருக்குப் படித்துக் காட்டப்படுகின்றன. மன்னர் தூங்கும்போது, "பெண் அடிமைகள்தாம் அவருக்குக் காவல் புரிகின்றனர். அவர்கள் வீரமிக்கவர்களாயும் வில்லம்புகளைக் கையாள்வதில் கைதேர்ந்தவர்களாயும் இருக்கின்றனர்."[71] அவர் தமக்கு எங்குப் பிரியமோ அங்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்கின்றார்." திறமைமிக்க காவலாளிகளால் அவர் நன்கு பாதுகாக்கப்பட்டு வந்தபோதிலுங்கூட, நயவஞ்சகச்

[71]Manucci, Vol. II, pp. 330-32.

செயல் ஏதேனும் ஏற்படக்கூடுமென அஞ்சி அடிக்கடித் தாம் இருக்குமிடங்களை அவர் மாற்றிக்கொள்கிறார்.[72] சந்திரகுப்த மௌரியரைப்பற்றி எழுதிய மெகாஸ்தனிஸ் என்பாரும் இதையே தான் கூறியுள்ளார். எனவே, இயல்பாகவே பேரரசரின் உடலுக்கு எவ்விதமான அபாயமும் ஏற்படாவண்ணம், மிக விழிப்போடுகூடிய கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததாயிருந்ததென்பது இதனால் நன்கு பெறப்படுகின்றது.

(b) மீர் சாமன் - அவரது பதவியும் கடமைகளும்: மேலே இறுதியாகச் சொல்லப்பட்ட காரணத்தாற்றான் பெண் அதிகாரிகளோடுகூடப் பல்லாயிரக்கணக்கான அலிகளும் அரண்மனையில் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள், சாதாரணமானவர்கள் என்று இரு வகையினர் இருந்தனர். "முக்கிய அலிகளுக்குள் ஒருவர் மற்றைய அனைவருக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் மகல் என்னும் அந்தப்புரத்தில் நடைபெற வேண்டிய காரியங்கள் அனைத்தையும் நெறிப்படுத்திக் கவனித்துக் கொண்டார். இப்பதவியை வகித்த மனிதர் அரசரால் பெரிதும் மதிக்கப்பட்டார். மிகப் பெரிய தொகை ஒன்று அவருக்கு உதவிப் பணமாக வழங்கப்பட்டது. கருவூலத்தின் பொறுப்பு அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அரசரின் ஆடை அணிகலன்களைப் பாதுகாப்பவரும் அவரே. எத்தகைய சரோபாக்கள் (Saropas) செய்யப்பட வேண்டும் என்பதையும் அவரே தீர்மானித்தார். சுருங்கக் கூறுமிடத்து அந்தப்புரச் செலவுகள் அனைத்திற்கும் அவரே பொறுப்பாளி ஆவார். அரண்மனைக்குள் வருகின்றனவும் வெளியே செல்கின்றனவுமான உடைகள், லினன் துணி வகைகள், விலையுயர்ந்த கற்கள், நகைகள் முதலியன யாவும் அவரது கண்காணிப்பிலேயே இருந்தன."[73] இந்த அதிகாரியின் பெயர் கானி சாமன் அல்லது மீர் சாமன் என்பதாகும். மனூச்சி என்பார் அவரை அரச குடும்பத்தின் பெரும் பாதுகாப்பாளர் என்று அழைக்கின்றார். அவரது பணி மிகப் பொறுப்பு வாய்ந்த ஒன்று. அரண்மனையில் இருந்த பொருள்கள் அத்தனையையும் அவரே பாதுகாத்தார். பொருள் பட்டியலை வைத்துக்கொண்டு அவற்றையெல்லாம் அவர் அவ்வப்போது பரிசோதித்துச் சரி பார்த்தார். அவ்வப்போது புதிய பொருள்களையும் வாங்கி எதிர்காலத் தேவைகளுக்காகப் பண்டகசாலைகளை அவர் நிறைத்து வைத்தார். அவர் தம் சொந்தப் பணத்தைக்கொண்டே பொருள்களையெல்லாம் வாங்கவேண்டுமென்றும் அனைவரும் எதிர்பார்த்தனர். அப்படித்தான் அவரும் வாங்கித் தேவைப்பட்டபோது அப்

[72] Ibid., p. 463.
[73] Ibid., pp. 35-51.

போதைக்கு இருந்த சந்தை விலைக்கே அவருடைய மக்களுக்கு விற்றார். கார்க்கானாக்களின் செலவு அனைத்தும் அவரது கண்காணிப்பிலேயே இருந்தது. அவர் செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட முக்கியக் கடமைகள் வருமாறு: (i) தொழிலாளர்கள், ஈனத்தொழில் புரிவோர் (Menials) ஆகியோருடைய சம்பளத் தொகைப் பட்டியல்(Bills)களில் சான்று பகர் கையொப்பமிடுதல் (Attestation); (ii) தரோகாக்கள், அமீன்கள், முஷ்ரிஃபுகள், பல்வேறு கார்க்கானாக்களின் தஹவில்தார்கள் ஆகிய அதிகாரிகளை நியமித்தல் (appointment), வெவ்வேறு பணிகளில் அமர்த்தல் (Posting), தேவையானபோது அப் பணிகளிலிருந்து அவர்களை அகற்றல் முதலியன; (iii) கார்க்கானாக்களின் வேலைமுறைபற்றிய விதிகளை ஏற்படுத்தல்; (iv) நஸார் (Nazar), தர்ம கைங்கரியநிதி, பரிசுகள் ஆகியவற்றைக் கவனித்துக்கொள்ளுதல்; (v) கால்நடைகளுக்குப் போடவேண்டிய அன்றாடத் தீவனத்தை நிர்ணயித்தல்; (vi) அரண்மனை மடைப்பள்ளியிலிருந்து உணவு வெளியே எடுக்கப்பட்டுப் பரிமாறப்படுவதை அநுமதித்தல்; (vii) இறந்தவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் (Escheat); (viii) தோட்டங்களிலிருந்து வரும் வருவாயையும், கடைகளிலிருந்தும் குடியிருப்பு வீடுகளிலிருந்தும் வரும் வாடகைகளைச் சேகரித்தல்; (ix) சுபாக்களின் நாட்குறிப்பேடுகளையும் (Diaries), அவாரிஜாக்களையும் (Awarjias) திரட்டி வைத்தல்; (x) அதிகாரிகள் முன்பணம் வேண்டி விடுக்கின்ற குறை விண்ணப்பங்களுக்குக் (Petitions) கையெழுத்திடுதல்; (xi) இளவரசர்களின் திருமணங்களுக்கு ஏற்பாடு செய்தல்; (xii) அரசினைச் சேர்ந்த கட்டடங்கள், குடியிருப்புகள் ஆகியவற்றுக்காக ஏற்படும் செலவுகளை மேற்கொள்ளல்; (xiii) மற்றும் கார்க்கானாக்கள் சம்பந்தமானவையும், அரச வருவாய் செலவுகள் பற்றியவையுமான பல்வேறு கடமைகளையும் ஏற்றல்.[74] அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள், பாசறைகளுக்கு வேண்டிய பொருள்கள்பற்றிய காரியங்களில் அவருக்கு மீர் மன்சில் (Mir-Manzil) என்பார் உதவியாயிருந்தார்; மனூச்சி என்பார் கூறுகிறபடி அரசர் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தபோதெல்லாம், குறைந்தது ஒரு நாளைக்கு முன்னதாகவேனும், அவருக்கு முன்னால் மீர் மன்சிலுடன் புறப்பட்டுச் சென்று அரசரின் பாடி வீடுகள் (Royal Tents) எங்கு அமைக்கப் பெறவேண்டுமென்பதைத் தீர்மானித்தவராவார்.[75] அரண்மனையைச் சேர்ந்த நஸீர்களை (Nazirs) அவர்தாம் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

[74] Sarkar, Mughal Administration, pp. 50-52.

[75] Manucci, Storia do Mogor, Vol. II, p.73.

நஸீர்களெனப்படுவோர் அரச குடும்பத்திலிருந்த ஒவ்வோர் அரசி, இளவரசி அல்லது கண்ணியமிக்க சீமாட்டியுடன் சொத்துக்களைப் பாதுகாத்தவர்கள் அல்லது மேற்பார்வை செய்து வந்தவர்களாவர்.[76]

மீர்சாமனின் கடமைகள் எண்ணிறந்தனவாகவும், பல்வேறு வகைப்பட்டனவாகவும், நெட்டி வாங்குவனவாகவும் (Exacting) இருந்ததால், அவருக்குத் துணைபுரிய ஏராளமான உயர்தர அதிகாரிகள் இருந்தனர். அவர்களுள் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவர் திவானி புயூதத் (Diwani Buyutat) என்பவராவார். கார்க்கானுக்களைக் கண்காணிக்கும் பணியில் அவர் சிறந்த முறையில் உதவி புரிந்து வந்தார். ஆய்ன்-இ-அக்பரியில், நஸீரி புயூதத் (Nazur-i-Buyitat) அல்லது கார்க்கானுக்களின் மேற்பார்வையாளர் என்றும், திவானி பியூதத் அல்லது கார்க்கானுக்களின் கணக்கர் என்றும் இரண்டு அதிகாரிகள் கூறப்படுகின்றனர்.[77] சர்க்கார் எனும் ஆசிரியர் திவானி பியூதத்தின் கடமைகளைப்பற்றி ஒரு பட்டியலைத் தந்துள்ளார். அவர் கூற்றுப்படி கானி சாமனுக்கு உதவி புரிதலே இவரது முக்கியக் கடமையாகும். கார்க்கானுக்களுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துத் தருவதிலும் பொருள்களின் விலைகளை நிர்ணயிப்பதிலும், கார்க்கானுக்களின் பொருளகத்தை மதிப்பிடுவதிலும், அவற்றின் தினசரிக் கணக்குகளை வரைதலிலும், தொழிலாளிகளுக்குச் சம்பளம் வழங்குதற்கான பொருளைத் தருவதிலும், புதிய பொருள்களை ஆக்குதற்கான துணைப்பொருள்களை வாங்குவதிலும் அவர் கானி சாமனுக்கு உதவி செய்தார்.[78] ''இறந்துபோனவர்களின் சந்ததியார்களுக்காகச் சொத்துக்களைப் பாதுகாக்கும் கடமை'' அவர்களுக்கு மிகக் குறைவாகவே இருந்தது. எனவே, சர்க்கார் கூறுகிறபடி, ''இறந்துபோன மனிதர்களின் உடைமைகளைப்'' பதிவு செய்கிற ஓர் அதிகாரியாக அவரைக் கருதுவதைவிட, கார்க்கானுக்களோடு தொடர்புகொண்ட ஓர் அதிகாரியாகக் கொள்வதே சாலவும் பொருத்தம் உடையதாகும். மொகலாய இந்தியாவில் இறந்தவர்களின் உடைமைகள் அவர்களின் சந்ததியார்களுக்குச் செல்வதென்பது மிக அருமையாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகவே இருந்தது.

(c) தரோகாயி காஸ் சௌகி (Darogha-i-Khas Chouki): ''அரசரது குடும்ப நிர்வாக அமைப்பில், தரோக் தோ

[76] Ibid., pp. 350-51.

[77] Ain-i-Akbari, Vol. I. p. vi.

[78] Sarkar, Moghul Administration, pp. 52-54.

காஸா சௌகி (காஸ் சௌகியின் தரோகா) என்று அழைக்கப்பட்ட அதிகாரி ஒருவர் இருக்கின்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் வீரர்களுக்கு அதிபர் என்றும் அவர் அழைக்கப்படுகிறார். காரணம் என்னை எனின், அவ் வீரர்கூட்டத்தில் பொறுக்கி எடுக்கப்பட்ட மனிதர்களும், மிக்க கண்ணியம் நிறைந்த பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவர்களுமே சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். சாதாரணமாக அக் கூட்டத்தில் நாலாயிரம் குதிரை வீரர்கள் இருப்பர். அதன் அதிபர் குஷல்கானு (Ghusal Khana)வின் பொறுப்பையும் மேற்கொண் டிருக்கிறார். அவரது ஆணைக்குக் கட்டுப்பட்ட அடிமை அதிகாரிகள் சிலர் உண்டு. அவர் களும் அவர்களுடைய மனிதர்களும் சேலாக்கள் (Chela), அதாவது சூடுபோடப்பட்டவர்கள் என அழைக்கப்பட்டனர்''[79] எனவே, பேரரசின் குடும்ப நிர்வாகத் தலைவர் கானி சாமன் ஒருவர்மட்டுமே என்ற சர்க்காரின் கூற்றுச் சரியானதன்று. மனூச்சி என்பார், கானி சாமனைப் போலவே மீர் சாமன் என்ப வரும் ''சிறியனவும், பெரியனவுமாக எல்லா அரசகுடும்பச் செலவுகளுக்கும் பொறுப்புள்ளவர்''[80] எனக் கூறுகின்றார். அதாவது, செலவுகளையும், பொருள் வழங்கலையும் அவர் கட்டுப் படுத்த, தரோகாயி காஸ் சௌகி என்பார், அரண்மனையில் பணிபுரிந்த காவலாளிகள், அடிமைகள் இன்னும் ஏனைய வேலைக் காரர்களனைவரையும் கட்டுப்படுத்தி வந்தார் எனலாம். இந்த இரண்டு அதிகாரிகளைத் தவிர, பேரரசரும் அரண்மனையில் நடை பெறுகிற காரியங்கள் அனைத்தையும் விழிப்புடன் கவனித்துக் கொண்டு வந்தார். ஏனெனில், ஏதாவது தப்பு நேர்ந்தால் அதனால் இறுதியாகப் பாதிக்கப்பட்டவர் அவரேயாவர். இவ்விடத்தே நாம் ஒன்று குறிப்பிட்டாக வேண்டும்: மொகலாய அரசாங்கத்தைப்பற்றி எழுதியுள்ள ஆசிரியர்கள் பலரும், சர்க்கார் என்பவரை உள்ளிட்டு, மொகலாய அரசியல் அமைப் பில் காணப்பட்ட ஒரு முக்கியக் கோட்பாட்டைப் புறக்கணித்து விட்டே எழுதிக்கொண்டு போயுள்ளனர். ஒவ்வொரு நிறுவனத் துக்கும், சம அந்தஸ்திலுள்ள இரண்டு அதிகாரிகளைத் (Co-ordinating officers) தலைவர்களாக நியமிப்பதென்பதே அக் கொள்கையாகும். மாநில அரசாங்கமாயினும், பேரரசுக் குடும்ப மெனினும், அல்லது நிதித்துறையேயாயினும் எல்லா நிறுவனங் களிலும் இக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. திறமை, நாணயம் இவற்றை நிலைநாட்டவும், எல்லாவற்றுக்கும் மேலாகப் பேரரசரின் நேர்முகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் இது

[79] Manucci, Vol. II, p. 422.

[80] Ibid., 419.

மிகவும் இன்றியமையாததாயிருந்தது. அக்பரது அரசாங்க அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை ஆராய்ந்தபோது நாம் இதைக் குறிப்பாக எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

(vii) சட்டமும் நீதியும் (Law and Justice):

சட்டம், நீதி பற்றிய துறையானது, அரசின் மிக முக்கியமான துறைகளுள் ஒன்றாகும். அஃது இக்கால இந்தியாவின் நீதித் துறை (Judiciary) அல்லது சட்ட நடவடிக்கைத் துறையை (Judicial Department) ஓரளவு ஒத்திருந்தது எனலாம். யாவர்க்கும் மேலான இறைமையைப் பெற்றிருந்த காரணத்தால், பேரரசரே நீதியின் பிறப்பிடமாய்த் திகழ்ந்தார் (Source of Jutice). எனவே, அவரே தலைமை நீதிமன்றமாகவும் விளங்கினார். அவருக்கும் கீழ்ப் பேரரசின் தலைமைக் காஜி (Qazi) அல்லது காஜி உல் குஸாத் (Qazi-ul-Quzat) என்பவர் இருந்தார். பேரரசர் வெளியே சென்றபோதெல்லாம் அவரும் உடன் செல்வது வழக்கம். ''ஒவ்வொரு நகருக்கும், ஒவ்வொரு பெரிய கிராமத்துக்குங்கூட அங்கங்கே தனிப்பட்ட காஜிகள் இருந்தனர். இப்பதவிகள் பல சமயங்களில் இலஞ்சங்களாக விற்கப்பட்டன. எனவே, மொகலாயர்கள் காலத்தே காஜி என்ற பெயரைக் கேட்டாலே மக்கள் வெறுப்புற்றனர். அவமானச் சின்னமாக அது பலராலும் மதிக்கப்பட்டது.''[81] அஃது உண்மையே என்பதைக் காட்ட மனூச்சி பல சான்றுகளைத் தந்துள்ளார்.[82] காஜி என்பார் நீதித் துறையில் தலையாய அதிகாரங்களைச் செலுத்தி வந்தார். மரண தண்டனை ஒன்றில்மட்டுமே அவருக்குச் சிறிது தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதாவது, ''யாரேனுமொருவர்க்கு அவர் மரணதண்டனை விதிப்பாரேயானால், அத்தண்டனையை நிறைவேற்றுமுன் அரசரிடம் அவர் மூன்று முறை அதைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள வேண்டும். மூன்றுமுறை விண்ணப்பித்துக்கொண்ட பின்னரே கைதி ஒருவரைச் சிரச்சேதம் செய்யுமாறு அவர் ஆணையிட முடியும்.''[83] கிரிமினல் வழக்குகளை எல்லாம் அவர் குரானியச் சட்டபடியே விசாரித்தார். சிவில் வழக்குகள் ஆதில்கள் அல்லது சிவில் நீதிபதிகளால் சாதாரணச் சட்டப்படி விசாரிக்கப்பட்டன.[84] அவருக்கு உதவி செய்ய மஃப்டிகள் இருவர் இருந்தனர். சட்டக் கோட்பாடுகள், முன்னிகழ்ச்சி (Precedents), சட்டமுறைமை

[81] Sarkar, Moghul Administration, p. 27.
[82] Manucci, Vol. II. pp. 419-20.
[83] Manucci, Vol. II, p. 419.
[84] Sarkar, Moghal Administration, pp. 27, 106.

(Legal Procedure) இவற்றில் அவர்கள் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். அவர்கள் இக் காலத்தே அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற வழக்குரைஞரின் தலைவர் அல்லது அட்வகேட்-ஜெனரல்களைப் போன்றவர்கள். சட்டசம்பந்தமான வழக்குகளில் நீதி வழங்குதல்பற்றிய ஆலோசனைகளை மஃப்டி என்பார் காஜிக்கு எடுத்துரைக்க வேண்டுமென எதிர்ப்பார்க்கப்பட்டார். தவருக ஏதேனும் ஒரு தீர்ப்பைக் காஜி வழங்கப்போகிருர் என்று தெரிந்தவுடன், மஃப்டி என்பார் அவருக்குத் தாழ்மையாக அவரது பிழையை எடுத்துக் காட்டிச் சரியான தீர்ப்பு என்னவாயிருக்கவேண்டும் என்பதையும் பணிவாகத் தெரிவிப்பார். மஃப்டி என்பார், ''ஒய்வு நேரங்களில் கற்ருேர்களின் சட்டத் தீர்ப்புகளையும் சட்டக் கொள்கைபற்றிய வாதங்களையும், ஆதாரம் பொருந்திய பாடப்புத்தகங்களினின்றும் தனியே எடுத்து எழுதிக்கொள்வதன்மூலம் சட்டத்துறையில் நல்ல பயிற்சியைப் பெறுதல் வேண்டும் (Manual 45-46)''[85] என எதிர்பார்க்கப்பட்டார். இந்தப் பாடப்புத்தகங்கள் முஸ்லிம் சட்டம் (Law), சட்டவியல் (Jurisprudence) ஆகியவற்றைபற்றி விரிவாகக் கூறின. இங்ஙனம் காஜியின் வேலை மிக எளிமையாக்கப்பட்டுவிட்டது. எனவே, நீதியோடும், நேர்மையோடும், ஓரவஞ்சனையில்லாமலும் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அரசாங்கத்தின் இருப்பிடத்திலுள்ள முறை மன்றத்தில் வழக்காடும் இரு கட்சியாருக்கும் முன்னிலையில் விசாரணை நடத்த வேண்டுமெனவும் காஜிகளை அரசாங்கம் வற்புறுத்தியது. பரிசுகள், மேல்வரும்படிகள் (Perquisites) முதலிய இலஞ்சம் எதையும் பெறுவதினின்றும் தடுக்கப்பட்டனர். மக்களால் நடத்தப்பெறும் களியாட்டங்களிலும் (Entertainments) அவர்கள் கலந்துகொள்ள அநுமதிக்கப்படவில்லை. ஆணைகள், விற்பனைப் பத்திரங்கள், அடைமானப்பத்திரங்கள் முதலிய சட்டசம்பந்தமான பத்திரங்களை மிக விழிப்போடும் அவர் எழுதவேண்டுமெனவும், வறுமையையே (Faqr) அவர் தம் மாண்பாகக் கருத வேண்டுமெனவும் (Manual pp. 43-44)[86] மன்னர் அவரிடம் எதிர்பார்த்தார். ஆனல், கடைசியில் சொல்லப்பட்ட நிபந்தனையை எவரும் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. அதை மீறுவதில் காஜிகள் காட்டிய ஊக்கமானது அதைக் கடைப்பிடிப்பதில் சற்றும் காணப்படவில்லை.

நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாக விளங்கியவர் பேரரசரேயாவார். ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில்

[85] Ibid., p. 28.

[86] Ibid., pp. 27-28.

அவர் முதல் வழக்குகளையும் (Original Cases), மேல்முறையீட்டு வழக்குகளையும் (Appellate Cases) திறந்த நீதி மன்றங்களில் தாமாகவே நீதிபதியாக அமர்ந்து விசாரணை செய்தார். அவர் அங்ஙனம் பணிபுரிந்த முறையைச் சர்க்கார் பின்வருமாறு விளக்குகிறார்: ''மக்களுக்குத் தரிசனம் வழங்கும் ஜன்னலிலிருந்து பேரரசர் சுமார் 8 மணியளவில் நேராகத் திவானி காஸ் (Diwan-i Khas) தனிப்பட்டவருக்குத் தரிசனம் வழங்கும் பட்டி மண்டபம் எனும் மண்டபத்துக்கு வந்து, மதியம் வரையில் அரியணையில் அமர்ந்து நீதி செலுத்துகிறார். இந்த அறையில் அரசைச் சேர்ந்த சட்ட அதிகாரிகள், சமயச் சட்டங்களைக் கையாண்ட நீதிபதிகள் (Qazis), சாதாரணச் சட்டத்தைக் கையாண்ட நீதிபதிகள் (ஆதில்கள்), மஃப்டிகள், சமய அறிஞர்கள் (உலேமாக்கள்), முன்னிகழ்வு ஆதாரங்களில் வல்ல கற்றறிந்த மேதைகள் (ஃபத்வா), நீதிமன்ற மேற்பார்வையாளர் (Darogha-i-Adalat), கொத்தவால், நகர அமைதிக் காவலர்களின் தலைவர் (Prefect) யாவரும் நிறைந்திருந்தனர். மிக அவசியம் இருந்தாலன்றி அவர்களைத் தவிர அரசவை உறுப்பினர்களில் வேறு எவருமே அங்கு அநுமதிக்கப்படுவதில்லை. நீதி அதிகாரிகள் வாதிகளை (Plaintiffs) ஒவ்வொருவராகக் கொணர்ந்து மன்னர்முன் நிறுத்தி, அவர்களின் குறைகளை எடுத்து விளம்பினர். மேன்மை தங்கிய அரசர் மிகக் கண்ணியமான முறையில் விசாரணை செய்து உண்மையான தகவல்களை உய்த்துணர்ந்தார். அதன்பின் உலேமாக்களிடமிருந்து சட்டத்தைக் கேட்டுக்கொண்டு, அதன்படியே தீர்ப்புகளை வழங்கினார்.

வெகு தூரத்தில் உள்ள மாநிலங்களிலிருந்து நாட்டின் மிக உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவரிடம் நீதி பெறுவதற்காக மக்கள் திரள் திரளாக வந்தனர். அவர்களது குறை விண்ணப்பங்கள் அவர்கள் எந்த எந்த இடங்களில் இருந்து வந்தார்களோ அந்த அந்த இடங்களில்மட்டுமே நன்கு விசாரிக்கத் தக்கனவாய் இருந்தன. ஆகையால், பேரரசர் அவர்கள் எந்த இடங்களில் இருந்து வந்தார்களோ அந்த இடங்களின் ஆளுநர்களுக்கு எழுதி அவர்களைப்பற்றிய உண்மைகளைக் கண்டுபிடிக்கும்படியும் ஆணையிட்டார். அதோடு அவர்களுக்கு எப்படியாவது நீதி வழங்கும்படியும், முடியாவிட்டால் தலைநகருக்கே மீண்டும் அவ்வழக்குகளைத் தங்களது அறிக்கைகளோடு அனுப்பிவைக்கும்படியும் அவர்களுக்கு ஆணையிட்டார்.[87] வில்லியம் ஃபிஞ்ச்[88] (William Finch),

[87] Sarkar, Aurangazeb, Chap. ii.

[88] Purchas. iv, pp. 72-73.

எட்வர்ட் டெரீ[89] (Edward Terry), பெர்னியர்,[90] மனூச்சி[91] ஆகியோர் கொடுத்திருக்கின்ற விளக்கங்கள் சர்க்கார் என்பவரால் மேலே தரப்பட்டுள்ள விளக்கத்தை முற்றும் ஒத்துள்ளன. மொகலாயப் பேரரசர்கள் எந்த அளவுக்குத் தங்களால் முடியுமோ அந்த அளவுக்குத் தங்கள் கடமைகளை நியாயமாக மக்களுக்குச் செய்ய முயன்றனர். நீதி உணர்ச்சியால் பெரிதும் உந்தப்பட்டே அவர்கள் செயல்புரிந்தனர் என்பதில் ஐயமில்லை. ஆனால், நடைமுறையில் அவர்கள் தங்களது முயற்சியில் தோல்வியையே கண்டனர். அவர்களது தோல்வி மிகப் பரிதாபகரமானதாகவே இருந்தது. டெர்ரி (Terry) என்பார் குறிப்பிட்டுள்ளபடி 'விசாரணைகள் மிகத் துரிதமாக நடைபெறுகின்றன.' தீர்ப்புகள் செயலாக்கப்பட்டதும் அங்ஙனமே ''மாநிலங்களிலும் நகரங்களிலுமுள்ள ஆளுநர்களும், அதே முறையிலேயே நீதி வழங்குகின்றனர்.'' அது வேறுவிதமாக இருப்பதற்கு வழியில்லை. ஏனெனில், நமக்கு இன்றைக்கு மிகச் சாதாரணமாய்த் தெரிகின்ற முறையான சட்டத்தொகுதிகளும், படிப்படியாய் அமைந்த விரிவான நீதிமன்ற முறையும், அவற்றின் அதிகார வரம்புபற்றிய திட்டமான வரையறுப்புகளும் அக் காலத்தே காணப்படவில்லை. அதில் காணப்பட்ட புகழத்தக்க ஒரே ஓர் அம்சமென்னவெனில், தற்கால நீதி வழங்கு முறையில் காணப்படுகிற காலதாமதமும் செலவும் நிரம்பிய, உள்ளத்தை வாட்டும் முறைகள் அப்போது இல்லை என்பதேயாம். மக்களிடையே வழக்காடும் மனப்பான்மை அப்போது அதிகம் காணப்படவில்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒத்துப்போவதன் மூலமும், பழிக்குப் பழி வாங்குவதன்மூலமுமே அப்போது பெரும்பாலும் நீதி வழங்கப்பட்டது.

நீதித்துறையோடு சம்பந்தப்பட்ட கொத்தவால் எனும் அதிகாரி ஒருவர் இருந்தார். மனூச்சி என்பாரின் கூற்றுப்படி, ''அவர் காஜி எனும் அதிகாரிக்கு உட்பட்டு அவரது ஆணையின்படி நடப்பவராக'' இருந்தார். அவர் ''காவல்துறைத் துணையதிகாரியைப்'' (Lieutenant of Police) போன்ற அல்லது இக்கால நகரக் காவல்துறை மேற்பார்வையாளரைப் (Superintendent of Police) போன்ற பதவியில் இருந்தவர். அவர் செய்யவேண்டிய கடமைகள் ஏராளமாக இருந்தன. நகரில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல், கிரிமினல் குற்றங்களைக் கண்டுபிடித்தல், மக்களின் நடமாட்டங்களையும், நடவடிக்கைகளையும் கண்காணித்

[89] Ibid., ix, 47.
[90] Travels in the Mughal Empire, p. 263.
[91] Storia, Vol. II, p. 462.

தல், நகர வருவாயை வசூலித்தல் ஆகியனவே அவருடைய மிக முக்கியமான கடமைகளாகும். ''ஏராளமான குதிரைவீரர்கள் அடங்கிய ஒரு படையும், காலாட்படையினர் பலர் அடங்கிய ஒரு படையும் அவரது கைவசத்தில் எப்போதும் இருக்கின்றன. அவ்வீரர்கள் அவரது ஏவலுக்கேற்ப நடக்கக் கடமைப்பட்ட வர்கள். நகரின் ஒவ்வொரு வாரியத்திலும் (Ward) ஒரு குதிரை வீரனும், இருபதுமுதல் முப்பது காலாட்படை வீரர்களும் வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தங்களது வாரியத்தைச் சுற்றி ஒருவகையான ரோந்து வருகின்றனர்.'' கிரிமினல் குற்றவாளிகளேயும், திருடர்களேயும் காஜியின்முன் கொணர்ந்து நிறுத்தியவர் கொத்தவாலேயாவார். அங்ஙனம், அவர்களைப் பிடித்துக்கொடுக்க அவரால் முடியாவிட்டால், அவர்களால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஏற்ற ஈடு செய்யவேண்டுவது அவரது கடமையாகும். அராக் என்ற சாராயவகை தயாரிக்கப்படுவதைத் தடுக்கவேண்டுவதும் அவரது கடமையாகும். நகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளேப்பற்றி அவ்வப்போது அவர் மேலதிகாரிக்கு அறிக்கைகளே அனுப்பி வரவேண்டும்.

(viii) சமய சம்பந்தமான மானியங்களும் தர்ம கைங்கரியங்களும் :

சமயச் சார்பான மானியங்கள், அறப்பணிகள்பற்றிய துறையானது சதரே சதுர் (Sadr-i-Sadur) அல்லது சதரே ஜஹான் (Sadr-i-Jahan) எனும் அதிகாரியின்கீழ் இயங்கி வந்தது. அக்பர் காலத்தே வரையறுக்கப்பட்டிருந்த அந்தக் கடமைகளேயே அவருக்குப் பின்பும் அவ்வதிகாரி கைக்கொண்டு ஒழுகினர். ''துறவிகள், கல்விமான்கள், பக்திமான்கள் ஆகியோரின் பராமரிப்புக்காகப் பேரரசராலோ அன்றி இளவரசர்களாலோ வழங்கப்பட்ட நிலமானியங்களேக் கண்காணித்தவரும், அவை பற்றிய வழக்குகளுக்கு நீதிபதியாக விளங்கியவரும்'' அவரே யாவர். எந்த நல்ல நோக்கத்துக்காக அம் மானியங்கள் வழங்கப்பட்டனவோ அந்நோக்கமானது சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடுவதும், மானியங்களேக் கோரி அரசருக்கு வரும் புதிய விண்ணப்பங்களேப் பரிசீலனே செய்வதும் அவருடைய கடமைகளாகும்.'' அதோடு அவர் ஒரு சிவில் நீதிபதியாகவும் விளங்கினர். ஆனல், அவருடைய அதிகார வரம்பானது, பொது அறநெறிக் கண்காணிப்பாளர் (Censor of the Public Morals) அல்லது மஹ்தாசீப் என்பவரின் அதிகாரங்களின் குறுக்கீட்டால் ஓரளவு குறுக்கப்பட்டது. மாநிலங்களிலிருந்த சதர்கள் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும், எப்படிப் பணிபுரிய வேண்டும் என்பதைச் சதரே சதுர் அவ்வப்போது அவர்களுக்கு அறிவுறுத்தி வந்தார்.

மக்களுடைய பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறையையும், தனிப்பட்ட ஆணைகள்மூலமும், அவசரச் சட்டங்கள் மூலமும் அக்பர் எங்ஙனம் சீர்திருத்த முயன்றாரோ அங்ஙனமே அவுரங்கசீபும் தம்மால் ஆனவரையில் முயன்றார். அதற்கென அவர் அறநெறிக் கண்காணிப்பாளர்கள் (Censor of Public Morals) என்ற தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்தார். குரானியக் கோட்பாடுகளின்படி மிகக் கண்டிப்பாகத் தாம் நடப்பதுமட்டுமின்றிப் பிறரையும் நடக்கும்படி செய்விப்பது அவரது கடமையாகும். முல்லவா அர்ஸ் வஜி (Mulla Arz Wajih) என்ற துரானிய சமய தத்துவ ஞானியை அறநெறிக் கண்காணிப்பாளராக அவுரங்கசீப் நியமித்தார். அதோடு ஓராயிரம் குதிரைவீரர்க்குத் தளபதியாயிருக்கும் ஒருவர்க்குரிய அந்தஸ்தையும் அவருக்கு அவுரங்கசீப் நல்கினார். பேரரசரின் ஆணைகளை அவர் நடைமுறையில் கொண்டு செலுத்துவதற்காக மன்சப்தார்களும் அகாதிகளும் அடங்கிய ஒரு படைப்பகுதியானது அவர் கைவசத்தில் விடப்பட்டிருந்தது. ஒழுக்கச் சீர்திருத்தம் என்கிற இப் புனிதமான பணியை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதில் மஹ்தாசீப்புகளுக்குத் தங்களாலான உதவிகளை எல்லாம் செய்யும்படி மாநில ஆளுநர்களுக்கு அவுரங்கசீப் ஆணையிட்டிருந்தார். மேலும், செய்யக்கூடியதிது (அமர்-Amr), செய்யக்கூடாதிது (நிஹி-Nihi) என்பனபற்றிக் குரானில் விதித்துள்ள கோட்பாடுகளை நடைமுறையில் செயலாக்கும்படியும் மக்களிடையே பரப்பும்படியும் அவர் மாநில ஆளுநர்களுக்குத் தம் வாழ்நாள் முடியுமட்டும் ஓயாமல் கூறிக்கொண்டு வந்தார். விபசாரம் போன்ற ஒழுக்கங்கெட்ட செயல்களில் ஈடுபடுபவர்கள், அறிவை மயக்கும் மதுபான வகைகளைத் தயாரிப்பவர்கள், சூது, சிலைவணக்கம் ஆகிய பழக்கங்களைக் கைக்கொண்டவர்கள், மற்றும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு விரோதமாக நடப்பவர்கள் ஆகியவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டியது மஹ்தாசீப் அல்லது அறநெறிக் கண்காணிப்பாளர்களின் முக்கியக் கடமையாகும். இக் கடமைகளோடுகூட, பொதுப் பாதைகளின்மீதும், கடைத்தெருப் பகுதிகளிலும் யாரும் அத்துமீறி நுழைந்து இருப்பிடம் தேடிக்கொள்வதையும், பொது மகளிர் நகருக்குள் நுழைந்து இழிதொழில் புரிவதையும் அவர் தடுத்தார்.

(ix) பேரரசின் செயலகம் (Imperial Secretariat):

அக்பர் காலத்தில் இருந்ததைப் போன்றே, எல்லா அரசாங்கத் துறைகளும் தஃப்தர் (Daftar) அல்லது பேரரசின் செயலகத்தோடு இணைக்கப்பட்டிருந்தன. அது அப்வாபுல் மால் (Abwab-ul

Mal) அப்வாபுத்தகவில் (Abwad-ut-Tahavil), தௌஜீ (Taujih), மத்திய உளவகம் (Central Intelligence) ஆகிய துறைகளை உட்கொண்டிருந்தது. இறுதியாகச் சொல்லப்பட்ட துறையில் ஏராளமான சிப்பந்திகள் இருந்தனர். நாட்குறிப்புகளை எழுதி வந்த வாகியாநவிஸ் (Waqianawis) என்பார்களும் இரகசியச் செய்திகளை மன்னருக்கு அறிவித்துவந்த கூஃபியாநவிஸ் (Khufia-nawis) என்பார்களும் நிறையப் பேர் இருந்தனர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த எல்லா மதிப்பீடுகளும் அல்லது டால்களும் (Dauls) நினைவுக் குறிப்புகளும் அல்லது யதாஸ்துகளும் (Yad-dasht) உறுதியளிப்பு ஆணைகளும் அல்லது அர்ஸி முக்கரார்களும், (Arzi Mukkarrar) மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட எல்லா அறிக்கைகளும், அரசவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரங்களும், உண்மையில் பேரரசரால் வெளியிடப்பட்ட எல்லா வகையான கடிதங்கள், ஆணைகள் முதலியவற்றின் பிரதிகளும் இங்குச் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. இந்த அலுவலகம் மேற்கொண்ட கடமைகளைப்பற்றிய விவரமான பட்டியல் ஒன்று, முன்னைய அத்தியாயம் ஒன்றில் ஆயின்-இ-அக்பரி என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோளின் வடிவத்தில் ஏற்கெனவே தரப்பட்டுள்ளது. இதைப்பற்றிச் சர்க்கார் எனும் ஆசிரியர் கொடுத்துள்ள விளக்கம் 'மீராதி அஹமதி' (Mirat-i-Ahmadi), 'ஆலம்கிர் நாமா' (Alamgir Nama), மற்றும் 'அலுவலர் கடமைகளைப்பற்றிய கையேடு'' (Manual of Officers' duties) என்று அவரால் கூறப்படுகின்ற ஒரு நூல் ஆகிய ஆதார நூல்களினின்றும் எடுக்கப்பட்ட செய்திகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனினும், அவர் கூறியுள்ளதற்கும், மேற்சொல்லப்பட்ட பட்டியலுக்கும் வேறுபாடு சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அதைச் சிறிதும் மாற்றாது அப்படியே வைத்துக்கொள்ளலாம். ஆனால், சர்க்காரின் விளக்கத்தில், பேரரசின் இந்த முக்கியமான அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த மிகச் சிறந்த ஊழியர்கள் சிலரைப்பற்றிய குறிப்புகளைக் கொடுக்க அவர் தவறிவிட்டார். பேரரசின் செய்திக் கடிதங்கள் ''அரசவையிலுள்ள தாக்சௌகியின் தரோகா (Darogha of Dak Chouki) அதாவது தபால், உளவுத் துறையின் மேற்பார்வையாளர் (Superintendent of Posts and Intelligence) என்று அழைக்கப்படும் அதிகாரிக்கு அனுப்பப்படுகிறது''[92] என்றுமட்டும் அவர் குறிப்பிடுகின்றார். அவர் கூறுவதிலிருந்து, தபால், உளவுத் துறை என்பது மத்திய உளவுத்துறை அல்லது வாகியாநவிஸ் துறையினின்றும் ஏதோ வேறுபட்டதொரு தனி இலாகா என்பது

[92] Sarkar, Mughal Administration, p. 74.

போல் தோன்றுகிறது. ஆனால், இது தவறாகும். அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தைப்பற்றிய ஆதாரங்களின்மீது அதிகமாக நம்பிக்கை வைப்பதாலும், ஆயின்-இ-அக்பரியின் துணையைக் கொண்டு அவ்வாதாரங்களைப் பூர்த்தி செய்துகொள்ளாத குற்றத்தாலுமே இத்தவறு ஏற்படுகிறது. அறிக்கைகள் எல்லாவற்றினுடைய சுருக்கங்களும் ''வாகியாநவிஸ், ரிஷல்தார், மீர் அர்ஸ், தரோகா ஆகிய அதிகாரிகளால் கையெழுத்திடப் பெற்று முத்திரையிடப்படுகின்றன''[93] என ஆயின்-இ-அக்பரி குறிப்பிடுகின்றது. இதில் அதிகாரிகள் ஏறுவரிசையில் குறிக்கப் பெறுகின்றனர். சர்க்காரால் குறிக்கப் பெறும் தாக் சௌகியின் தரோகா என்பவரும் நம்மால் குறிக்கப்பெற்ற தரோகாவும் ஒருவரேயாவர். மீர் அர்ஸ் (Mir Arz) என்பாரின் கடமைகள் முன்பொரு அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அக் கடமைகளை மேற்கொள்ளுமாறு அவர் பணிக்கப்பட்ட காரணத்தாலேயே அவர் இத் துறையுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கக் கூடும்.

பேரரசின் பல வட்டங்களிலிருந்தும் பல்வேறுவகையான செய்திகள் இத்துறைக்கு வந்து குவிந்தன. வாகியாநவிஸ், கூஃபியாநவிஸ் என இருவகைப்பட்ட அறிவிப்பாளர்கள் செய்திகளைத் திரட்டி மன்னருக்குத் தெரிவித்தார்கள். வாகியாநவிஸ் என்போர் நேர்முகமாகவே மன்னரிடம் செய்திகளை நவின்றனர். வாகியாநவிஸ்கள் வாரத்துக்கொரு முறையும் கூஃபியாநவிஸ்கள் வாரத்துக்கு இருமுறையும் அரசரிடம் செய்திகளை அறிவிக்க வேண்டுமென்பது, அதிகாரிகளின் கடமைகள்பற்றிய கையேட்டில் காணப்படும் விதியாகும். இவையே அன்றி நஸீம், திவான் ஆகியோரிடமிருந்து மாதம் ஒரு முறையும், ஹார்க்காராக்களின் அஃபார்களிடமிருந்து (Akhbars of the Harkarahs) மாதம் ஒரு முறையும் செய்திகள் வந்தன. மிக அவசரமான செய்திகள் உடனுக்குடனேயே மன்னரிடம் தெரிவிக்கப்பட்டன. கூஃபியா நவிஸ் என்பவர்கள், அரசரின் நம்பகமான இரகசியப் பகராட்கள் என்பது அப் பெயரிலேயே தொனிக்கிறது. இம் மனிதர்களைக் கண்டு அனைவருமே மெத்தவும் பயந்தனர். அவர்கள் சமயத்தில் உளவாளிகளாகவும் பணிபுரிந்து, தாம் பெற்ற தகவல்களை நேரிடையாக மன்னருக்கே அனுப்பிவைத்தனர். ''இந்தச் செய்திக் கடிதங்கள் பொதுவாக மன்னரின் முன்னிலையில் மாலை 9 மணியளவில் மகலில் இருந்த பெண்டிரால் படிக்கப்படுகின்றன''[94] இந்தப் பெண்டிர்கள் அந்தப்புரத்தில் பணிபுரிந்த

[93] Ain-i-Akbari, Vol. I, p. 259.

[94] Manucci, Vol. II, p. 331.

பெண் அதிகாரிகளாவர். இந்தச் செய்திக் கடிதங்கள் வாரம் ஒரு முறை வந்தன. அவை உடைக்கப் பெருமலேயே, மன்னருக்கு மீர் அர்ஸ் எனும் அதிகாரிமூலம் அனுப்பப்பட்டன. மீர் அர்ஸ், பேரரசுக் குடும்பத்துறையிலும் ஓர் அதிகாரியாக இருந்தார்.

(x) குஷல் கானு—தௌலத் கானுயி காஸ் :

அரசாங்கத் துறைகள் பலவும் மத்தியச் செயலகம் ஒன்றின் மூலம் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டன. அவற்றின் தலைவர்கள் அனைவரும் தினந்தோறும் மன்னரைச் சந்தித்து இரகசிய ஆலோசனை நடத்தினர். இந்த இரகசிய ஆலோசனைச் சபையே குஷல் கானு எனப்பட்டது. அக்பர் அவ்வப்போது கலந்தாலோசித்து வந்த இரகசிய அல்லது அந்தரங்க சபை ஒன்று இருந்ததாக நாம் போன அத்தியாயத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். அதுவே, அவருக்குப் பின்வந்த அரசர்களின் காலத்தில் திட்டவட்டமான ஒரு நிறுவனமாக மாறிவிட்டது. அதனுடைய நேரான பொருள் 'குளியல் இல்லம்' (Bathing House) என்ருலும், உண்மையில் அஃது அங்குக் கூடிய சிறிய ஆலோசனைச் சபையையே குறித்தது. பிரிட்டிஷ் அரசியல் அமைப்பில் 'கேபினட்' என்ற சொல்லானது எப்படி இயற்பொருளை விட்டுப் பிறிதொரு பொருளை உணர்த்துகிறதோ அங்ஙனமே குஷல் கானு என்ற பெயரும் தனிப்பட்ட ஒரு பொருளைக் குறிப்பாக உணர்த்துகிறது. டாக்டர் சாக்சேனு (Dr. Saksena) என்பார், திவானி காஸ் (Diwan-i-Khas) என்ற அத்தாணி மண்டபமே குஷல் கானுவாக, அக்பர், ஜஹாங்கீர் ஆகியோரின் காலங்களில் விளங்கியதாகக் கூறுகின்ருர். அப்துல் ஹமீத் லாஹோரி (Abdul Hamid Lahori) என்பவரால் எழுதப்பட்ட பாதுஷாநாமா (Padsha Nama) என்ற நூலில் இரண்டாந் தொகுதி, பக்கம் 220இல் கூறப்பட்டுள்ளதை அவர் தமது கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டுகிருர். ஷாஜஹான் ஷாபுர்ஜில் (Shahburj) தமது அந்தரங்க ஆசோசனை சபையைக் கூட்டினுர்.[95] மனூச்சி என்பார் அதைப்பற்றிக் கூறும்போது, ''இங்கேதான் நல்ல நல்ல ஆலோசனைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. நியாயமான ஆணைகள் யாவும் இங்கிருந்துதான் புறப்படுகின்றன'' என்று குறிப்பிடுகின்ருர். மற்றும், ''புதுமையான எனுமல் வேலைப்பாடும், விலையுயர்ந்த கற்களும் நிறைந்து, அவ்விடமானது கட்டடக் கலையின் அலங்காரம் அனைத்தும் கொண்டு விளங்குகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரண்மனைத்

[95] Saksena, History of Shah Jahan, pp. 241-42.

தண்டநாயகர் அல்லது தரோகாயி காஸ் சௌகி என்ற அதிகாரியின் தலைமையில் இத் துறையானது இயங்கி வந்தது. ஆனால், குஷல் கானவின் மேற்பார்வையாளராகத் தனிப்பட்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கக்கூடுமெனத் தெரிகிறது. ஏனெனில், அவுரங்கசீபின் காலத்தில் மீர்ஸா மகமது என்ற ஒருவர் அத்தகைய அதிகாரத்தை வகித்து வந்ததாக நாம் அறிகிறோம்.[96] மனூச்சி என்பாரின் கூற்றுப்படி ''மன்னர் இரண்டாம் தடவையாகக் காட்சி தருகின்ற இரகசிய இடம் அதுவே. அங்கேதான் ஆலோசனைச் சபை கூடுகிறது. நாட்டின் மிக முக்கியமான பிரபுக்களும் அதிகாரிகளும்மட்டுமே அங்குப் போகமுடியும்.''[97] டாக்டர் சாக்சேனு என்பாரின் கூற்றுப்படி அரசர் திவானி காஸ் மண்டபத்திலிருந்து ஷாபுர்ஜிக்குச் சென்றார். ''இளவரசர்களையும் (அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற பொருளில் கூறுகிறார்), மூன்று நான்கு அதிகாரிகளையும் தவிர வேறெவரும் அதற்குள் செல்ல அநுமதிக்கப்படுவதில்லை. அதிகாரிகள் தத்தம் வேலை முடிந்தவுடன் வெளியேறிவிடவேண்டும். ஷாபுர்ஜில் தான் இரகசியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. நம்பகமான ஆணைகள் இங்கேதான் தீட்டப்பட்டு மாநில அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. மற்றும் கல்சா நிலம் (Khalsa-அரசரின் நிலங்கள்), தலப் (Talab-சம்பளம்) அல்லது டன்க்வா (Tankhwah-சம்பளம்) முதலியவைபற்றிய காரியங்களும் இங்குக் கவனிக்கப்பட்டன. திவானி காஸ் மண்டபத்தில் ஆலோசிக்கப்படுதற்கு அருகதையற்றவை எனக் கருதப்பட்ட இவைபோன்ற காரியங்கள் இங்கேதான் பரிசீலனை செய்யப்பட்டன.''[98] இவையெல்லாம் காலை நேரத்தில் நடைபெற்றன. மாலை நேரத்தில் மீண்டும் இரவில் அவர் அந்தப்புரத்துக்குள் தூங்கச் செல்லுமுன் அரைமணி நேரத்துக்கு ஷாபுர்ஜில் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டினார். அக்பரது காலத்தில் இவ்வாலோசனைச் சபையானது காலையில் கூடுகிற வழக்கமில்லை. இரவிலேதான் பொதுவாக அது கூடுகிற வழக்கமாகும்.

அக்பரது காலத்திய அரசியல் அமைப்பைப்பற்றிய விளக்கத்தில் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி பேரரசானது நான்கு பெரும் நிறுவனங்களால் ஒன்றுபடுத்தப்பட்டிருந்தது. அவை மத்திய அரசவை, மத்திய ஆலோசனைச் சபை, மன்சப்தாரி முறை, மத்திய ஊழிய முறை, மத்தியச் செயலகம் என்பன

[96] Elliot and Dowson, Vol. VII, p. 315.

[97] Manucci, Storia, Vol. II, p. 400.

[98] Saksena, History of Shah Jahan, p. 242.

வாகும். அக்பர் காலத்தைப்பற்றிப் பேசும்போது அவைபற்றி நாம் கூறியவற்றுக்குமேல் அதிகமாக ஒன்றும் இங்குக் கூறு தற்கில்லை. அக்பர் காலத்து இருந்ததைவிட, ஷாஜஹான் காலத்தே அரசவையானது மிகப் பொலிவோடும் ஆடம்பரத் தோடும் ஒளிவிட்டுப் பிரகாசித்தது என்று கூறுவதற்கும் மேலாக, முக்கியமானதென்று குறிப்பிட்டுக் கூறும் வகையில் வேறொன்றும் பிற்காலத்தே நிகழவில்லை. அவுரங்கசீப் காலத்திலும் அரசவை அதே மேன்மையுடன் ஒளிவிட்டுப் பிரகாசித்ததே எனினும், ஆடம்பரம் சற்றே குறைக்கப்பட்டது. தூய்மையும் எளிமையும் அதிகமாக அங்குப் புகுத்தப்பட்டன. அந்தரங்க சபையானது அக்பர் காலத்துக் கூடியதைவிட அதிக தடவை கூடியது. மன்சப்தாரி முறையின் திறமை நாளுக்கு நாள் குறைய ஆரம் பித்தது. அம் முறை நாளுக்கு நாள் நலிந்துகொண்டு போவதை யாவரும் தெளிவாக உணர்ந்தனர். பேரரசின் பரப்பு மிக அதிக மாகிவிட்டதாலும், வருவாயும் மிக அதிகரித்துவிட்டதாலும் மன்சப்கள் இப்போது பெரியனவாக வழங்கப்பட்டன. 5,000க்கும் மேற்பட்ட வீரர்க்கு அதிபதி என்ற அந்தஸ்தானது பல பிரபுக்களுக்கு வழங்கப்பட்டது. சான்ருக, ஒரு சமயத்தே ஆக்ராவின் ஆளுநராக இருந்த இடிபர் கான் (Itibar Khan) என்ப வரை, ஜஹாங்கீர் 6,000 ஜட் வீரர்களுக்கும் 5,000 சவார் வீரர்களுக்கும் அதிபதியான ஒரு மன்சப்தாராக நியமித்தார்.[99] ஷாஜஹான் பட்டமெய்தியபோது மஹபத்கான் என்பவருக்கு 7,000 ஜட் வீரர்க்கும், 8,000 சவார் வீரர்க்கும் அதிபதி எனும் மன்சப் பதவியை வழங்கினர். ஆஸஃப் கானுக்கும் இன்னும் பெரிய பதவியானது வழங்கப்பட்டது. 8,000 ஜட் வீரர்க்கும் 8,000 சவார் வீரர்க்கும் அதிபதியாக அவர் நியமிக்கப் பட்டார்.[100] 30,000 முதல் 50,000க்குடைய மன்சப் பதவிகள் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களுக்கு வழங்கப்பட்டன,

(xi) மாநில அரசாங்கம் :

மத்திய அரசாங்கத்தைப்பற்றிய இவ் வாராய்ச்சிக்குப் பின் மாநில அரசாங்கத்தின் அமைப்பை இனி ஆராய்வோம். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிறிது சிறிது மாற்றப்பட் டிருந்ததே அன்றி மற்றப்படி அநேகமாக மாநில அரசாட்சி முறை மத்திய அரசாட்சி முறையையே பெரிதும் ஒத்து அமைக்கப்பட் டிருந்தது. மாநில அரசாங்கமானது, பணிமுறைப்படி நஸீம்

[99] Jahangir's Memoirs, Vol. II, pp. 257-58.

[100] Saksena, History of Shah Jahan, p. 64.

என்றும் பொதுமக்கள் எல்லாராலும் சுபாதார் என்றும் அழைக்கப்பட்ட ஓர் ஆளுநரையும், திவான், பக்ஷி, காஜிநதர் (Khazinadar), காஜி, சதர், புயூதத், கண்காணிப்பாளர் ஆகிய அதிகாரிகளையும் உட்கொண்டிருந்தது. அவர்கள் மாநிலத் தலைநகர்களிலேயே எல்லாக் காலத்திலும் வசித்து வந்தனர். பேரரசுத் தலைமைப் பீடத்தில் அவர்களுக்கு மேலே இருந்த அதே பெயர்கொண்ட அதிகாரிகளுக்கு அவர்கள் அடிபணிந்து தொழில் புரிந்தனர். சுபாதார் என்பார் பேரரசரின் அதிகாரங்களை எல்லாம் மாநிலத்தில் செலுத்தி வந்தார். நடைமுறையில் அவரே இராஜப் பிரதிநிதியாக (Viceroy) விளங்கினர். மாநிலத்தின் சிவில், இராணுவ நிர்வாகத் தலைவராக அவர் விளங்கினர். பல சமயங்களில் அவர், பேராற்றல் மிக்க ஒரு தளபதியாக இருந்தார். தேவை நேர்ந்தபோது அவர் போர்க் களத்துக்குப் படைகளை நடத்திச் சென்ருர். திவான் என்பார் பெயரளவில் அவருக்கு உட்பட்டவரே எனினும், இருவரும் சமமான அதிகாரத்தையே பெற்றிருந்தனர். வஜீர் என்பாருக்கு அவர்கள் நேர்முகமாகக் கட்டுப்பட்டு நடந்தனர். பேரரசு அரசாங்கத்தைத் தாங்கி நின்ற இருபெரும் ஆதரவுகளான இராணுவத்தையும், நிதியையும் சம அதிகாரம் படைத்த இரண்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதே மொகலாய அரசாங்கத்தின் ஒரு பெருங் கொள்கையாகும். நாட்டுப்புறங்களில் வசித்துவந்த மக்களுக்கும், தலைநகரில் வசித்து வந்த பேரரசர்க்கும் ஓர் இணைப்புச் சங்கிலியாக விளங்கியது மாநில அரசாங்கமேயாகும். (i) மாநில உட்பகுதிகளில் நியமிக்கப்பட்டிருந்த ஃபௌஜ்தார் மூலமாகவும், (ii) வருமானத் துறையில் நியமிக்கப்பட்டிருந்த சாதாரண அதிகாரிகள் மூலமாகவும், (iii) சுபாதார்களின் நீதிமன்றத்துக்கு ஜமீன்தார்கள் அடிக்கடி செல்வதன்மூலமாகவும், (iv) சுபாதாரின் சுற்றுலா (Tour) மூலமாகவும் மாநில அரசாங்கமானது மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டது.[101]

(xii) மாநில அரசாங்க அதிகாரிகள் :

(a) சுபாதார் : சுபாதாரின் முக்கியமான பணிகளாவன: அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டல், வருமானங்கள் வசூலிக்கப்படுதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தல், அரசரால் அவ்வப்போது அனுப்பப்படும் ஆணைகளை நிறைவேற்றல் ஆகியனவேயாம். அதிகாரிகளின் கடமைகள்பற்றிய கையேட்டில், (Manual) நம்பகமாக அதிகாரிகளை மாநிலங்களில் அவர் நியமிக்

[101]Sarkar, Mughal Administration, p. 56.

கும்படியும், அரசவையில் தம் கட்சியை எடுத்துரைக்கத் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பரை விட்டுவைக்கும்படியும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. குடியானவர்களின் பொதுவான நிலைமைபற்றியும், ஜமீன்தார்களின் மனநிலைபற்றியும் அவர் நன்கு செய்தி தெரிந்தவர்களிடம் கேட்டு உண்மைகளை உய்த்துணர்ந்து கொள்ளவேண்டும். அதிகாரத்துக்குப் பணிய மறுக்கும் ஜமீன்தார்களையும், சட்டத்துக்குக் கட்டுப்படாத நபர்களையும் அவர் கடுமையாக ஒறுத்தல் வேண்டும். குடியானவர்கள் வேளாண்மையைப் பெருக்கும் வகையில் அவர்களுக்கு அவர் ஊக்கம் அளிக்கவேண்டும். சிறு வருமான அல்லது அரசாங்கச் சிற்றதிகாரிகள் குடியானவர்களுக்கு எவ்விதமான தீங்கினையும் இழைக்காதவாறு பார்த்துக்கொள்வதும் அவரது கடமையாகும். கல்சா மகல்கள் அல்லது இறை நிலங்கள் (Crown Lands) பற்றிய விவகாரங்களில் அவர் தலையிடலாகாது. ஏனெனில், அவை திவானி கல்சா என்ற அதிகாரிக்கு நேரிடையாகக் கட்டுப்பட்டவை. மற்றும் ஷேக்குகள் (Shaikhs), காஜிகள் ஆகியோரை ஆதரிக்கவேண்டும். வறுமைமிக்க தார்விஷ்களுக்குப் (Darwishes) பொன்னும் பொருளும் கொடுத்து அவர்களைக் காக்க வேண்டுவதும் அவரது கடமையாகும். மேலும், தங்களுடைய மாநிலங்களின் எல்லைப்புறத்துக்கு அருகில் வாழ்ந்த சிற்றரசர்களிடமிருந்து கப்பப் பணத்தை வசூல் செய்து அரண்மனைக்கு அனுப்புவித்தல் வேண்டும். அவசியம் ஏற்பட்டபோது பரிசு முதலியவற்றைக் கொடுத்து அவர் ஜமீன்தார்களைச் சமாதானப்படுத்துதலும் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. ஏனெனில், அங்ஙனம் அவர்களைக் கைக்குள் போட்டுக்கொள்வது படையைக் கொண்டு அவர்களை அடக்குவதைவிடச் சிக்கனமாக இருந்தது. அவருக்குக்கீழ்ப் பணிபுரிந்த மன்சப்தார்களுக்குப் பதவியுயர்வு தரும்படி மன்னருக்குச் சிபாரிசு செய்யவேண்டியவர் அவரே. அநேகமாக அவர் செய்கிற சிபாரிசுகளை எல்லாம், மன்னர் ஏற்றுக்கொண்டு அதன்படிச் செய்வது வழக்கம். எனவே, பதவியுயர்வுக்காகச் சிபாரிசு செய்யும்போதுமட்டும் அவர் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டியிருந்தது. குற்றவாளிகளையும், கொள்ளைக்காரர்களையும், பணமோ பரிசுப் பொருள்களோ வாங்கிக்கொண்டு அவர் விடுவித்தல்கூடாது. ஏனெனில், அப்படிச் செய்வது இலஞ்சம் வாங்குதற்குச் சமானமாகும். அதைச் சிறிதே அநுமதித்தாலுங்கூட, இலஞ்சமானது காட்டுத் தீபோல எங்கும் பரவிவிடக் கூடியதென்பதை அரசர் நன்கு உணர்ந்திருந்தார். தமது மாநிலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எல்லாம் தொகுத்து அவர் மாதம் இருமுறை தாக் சௌக்கியின் மூலம் பேரரசர்க்கு அறிவித்தல் வேண்டும். எங்கே தேவையோ

அங்கே செல்வதற்குத் தயாராயிருக்கும் நிலையில் அவர் படையொன்றை எப்போதும் வைத்திருக்கவேண்டும். அத்தகைய படையொன்றை வைத்துப் பராமரிக்கப் போதிய பணவசதி செய்து தராவிடில், அவர் தம் சொந்தப் பணத்தைக் கொண்டே தம் படைப்பலத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னர் அவர் அப் பணத்தைத் தமது மாநில வருவாயிலிருந்துதான் திருப்பி எடுத்துக்கொள்ளவேண்டும்.[102] பொதுவாக, அவர்கள் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட முறையையே கைக்கொண்டனர்.

(b) திவான்: சுபாதாருக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தவர் திவான் என்பவராவர். ''சுபாதாருக்குப் போட்டியாளராக அவர் விளங்கினுர்.'' இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்காணித்துக்கொண்டனர். இங்ஙனம், ஒருவர் மற்ருெருவரின் செயல்களை எல்லா வகையிலும் கட்டுப்படுத்தி வந்தார். மாநிலத் திவான்களை மத்திய அரசாங்கத் திவான்கள் கட்டுப்படுத்தி வந்தனர். இரு திவான்களுக்கும் நேரடியான கடிதப் போக்குவரத்து இருந்து வந்தது. மாநிலத் திவான் நியமிக்கப்படும் வேளையில், அவரது ஆட்சி வரம்புக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பற்றியும், செலவுபோக மீதி கையிருப்பு எவ்வளவு என்பதுபற்றியும் மாதம் இருமுறை தமக்கு அறிவிக்குமாறு மத்திய திவான் அவருக்கு அறிவுறுத்துவது வழக்கம். நல்ல நாணயமுள்ள நபர்களை அமீன்களாக நியமிக்குமாறும், வேளாண்மை வளர்ச்சிக்குப் பாடுபடுமாறும் அவர் அறிவுறுத்தப்பட்டார். அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தே நியமிக்கப்பட்ட ஒரு மாநிலத் திவானின் நியமன ஆணைப்பத்திரம் அல்லது சனத் (Sanad) ஒன்றில் அவருடைய கடமைகள் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன:

''சாகுபடி செய்யும் நிலங்களையும், கிராமக் குடியிருப்புகளையும் பெருக்கவும், பேரரசுக் கருவூலத்தைக் கண்காணித்து, சரியான உத்தரவாதமின்றி யாரும் அதிலிருந்து பணம் எடுக்காதபடிப் பார்த்துக்கொள்ளவும், ஃபோட்டாதார்களின் (Fotahdars) பொருட் பெட்டிகளிலிருந்து பணம் எடுக்கப்பட்டுக் கருவூலத்துக்குக் கொண்டுவந்து கட்டப்பட்டபோதும், வேறு வழிகளில் பணம் கட்டப்படும்போதும் (Qabz-ul-Wasul), பணம் கட்டும் பகராட்களிடம் அதற்குரிய பற்றுச் சீட்டை அல்லது இரசீதுகளைக் கொடுத்துவிடுக. வசூலிக்கப்படக்கூடாதெனத்

[102] The Manual, 13-14, 27-32, quoted in Sarkar, Mughal Administration.

தடுக்கப்பட்டுள்ள தீர்வைகளை (Abwabs) எந்த அதிகாரியேனும் (Amil) வசூலித்துவிடாமல் பார்த்துக்கொள்க. ஒவ்வொரு வேளாண்மைப் பருவம் முடிந்தவுடன் முதலில் தோராயமாக வரையப்படும் ஆதித் தாள்களைக்கொண்டு (முதற் குறிப்பு) அமீல்கள் எவ்வளவு பொருளைக் குடியானவர்களிடமிருந்து பலவந்தமாகப் பறித்துள்ளனர் அல்லது கைப்பற்றி உள்ளனர் என்பதைக் கண்டுபிடித்து, அதன்படி அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை அவர்களிடமிருந்து வசூலித்து அதைப் பேரரசின் கருவூலத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும். அரசாங்கத்துக்கு உண்மையாக இல்லாத அல்லது தீய அமீல்கள் இருந்தால் அவர்களைப்பற்றி உடனே மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துக, வரவேண்டிய வருமானத்தைப் பல ஆண்டுகளாக வசூல் செய்யாமல், நிலுவைப் (வருமானத்தைப்பற்றிய) பணமானது சேர்ந்து கொண்டே போகும்படி யாரேனும் ஓர் அமீல் விட்டுவிடுவாரேயானால், சம்பந்தப்பட்ட கிராமத்திலிருந்து அத் தொகையை, ஒவ்வொரு பருவத்துக்கும் 5 சதவீதமாக எளிய தவணைகளில் வசூலிக்கவேண்டும். போன ஆண்டில் அரசாங்கத்தால் கொடுக்கப் பட்ட தக்காவிக் கடனை (Taqavi Loan) நடப்பு ஆண்டின் முதல் பருவத்தில் வசூலிக்கவேண்டும். அப்படி அவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்கவில்லையானால் அல்லது கொடுக்கத் தாமதித் தால் அப் பணத்தை ஈடுகட்டும்படி திவானையும் அமீனையுந்தான் அரசாங்கம் கட்டாயப்படுத்தும். இந்தக் கட்டுத் திட்டங்களுக் கேற்ப எல்லாத் தாள்களையும் பேரரசின் ஆவணக் களரிக்கு (Records Office) உடனே அனுப்பி வைக்கும்.[103]

இன்னும் எஞ்சியுள்ள மாநில அதிகாரியின் கடமைகளைப் பற்றி நாம் விரிவாக ஈண்டுக் கூறவேண்டுவதில்லை. ஏனெனில், அக்பரது ஆட்சியின்கீழ் அவர்கள் என்ன பணிபுரிந்து வந்தார் களோ அதையேதான் அவருக்குப் பின்பும் அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டு வந்தனர். அவுரங்கசீப் காலத்தில் மாநில அரசாங்கத்தில், 'ஆமினி ஜெஸியா' (Aamin-i-Jaziya) என்ற ஒரு புதிய அதிகாரி நியமிக்கப்பட்டார்.[104] 1679ஆம் ஆண்டுக்குச் சற்றுப் பின்னரே, அதாவது ஜெஸியா வரியானது விதிக்கப்பட் டதற்குப் பின்புதான் அவர் நியமிக்கப்பட்டார். அவ் வரியை வெகு கண்டிப்பாக வசூலிக்க வேண்டுவது அவர் கடமையாகும். வரியை குறைக்கக்கூடிய சூழ்நிலை இருந்தாலும் அதைச் சற்றும் கவனியாமல் மிகத் துல்லியமாக வரியை வசூலிக்க

---

[103]Sarkar, Mughal Administration, Aurangazeb's Firman to Rasik Das, pp.62-63.

[104]Muntkhab-ul-Lubab, Elliot & Dowson, Vol. VII, p. 310.

வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஜெஸியா வரியை வசூலித்த அமீன்களுக்குத் தலைவராக 1687இல் 'ஜெஸியா வரி கண்காணிப்புத் தலைவர்' என்னும் ஓர் அதிகாரி நியமிக்கப் பட்டார். அவர் நாடு முழுவதும் சுற்றி வந்து அவ்வரி சரிவர வசூலிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணித்தார்.[105] ஜெஸியா வரியை வசூலித்த அதிகாரியைத் தவிர, 'அறநெறிக் கண்காணிப்பாளர்' என்ற ஒரு புதிய அதிகாரியையும் அவுரங்கசீப் நியமித்தார். அவர்தாம் தலைநகரில் இருந்த 'மஹ்தாசீப்' என்னும் அதிகாரியாவார். அவரைப்பற்றி நாம் ஏற்கெனவே விளக்கியுள்ளோம். அவரைப்போன்றே மாநிலங் களிலும் பல அறநெறிக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப் பட்டனர்.

(c) சர்க்கார், பர்காணு, கிராம அதிகாரிகள்: ஒவ்வொரு மாநிலமும் பல சர்க்கார்களாக அல்லது மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டமும் பல பர்காணுக்களாக அல்லது கிராமத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. இப் பிரிவுகள் அக்பர் காலத்துக் கடைப்பிடிக்கப்பட்ட முறையின் அடிப்படை யிலேயே அமைந்திருந்தன. அவற்றின் அதிகாரிகளும் அக்பர் காலத்தில் செய்து வந்த பணிகளையே மேற்கொண் டிருந்தனர் என்றும், குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்றும் நாம் முன்பு ஓர் அத்தியாயத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அவற்றை மீண்டும் கூறுவதை விடுத்து, அக்பர் காலத்திற்குப் பின்னர் அவர்களால் இயற்றப்பட்ட பணியைப்பற்றிமட்டும் ஒரு சிலவற்றைக் குறிப்பாகக் கூறி மேலே செல்வோம்.

அக்பர் காலத்தே 'கரோரி முறை' என்ற ஒரு முறை யானது உண்டாக்கப்பட்டுப் பின்னர்க் கைவிடப்பட்டது என் பதை ஏற்கெனவே கண்டோம். ஆனால், கரோரி என்ற பெய ரானது அக்பர் காலத்திற்குப் பின்னும் வழக்காற்றில் இருந்த தாகத் தெரிகின்றது. ஆனால், வருமான அதிகாரியால் வசூலிக் கப்பட்ட தொகையை அது குறிப்பிடவில்லை. மற்றப்படி 'வரி வசூலிப்பவர்' என்ற பொருளில்மட்டுமே அது வழங்கப்பட்டது. கஞ்சுகள் (Ganjs) அல்லது சந்தைகளின் கரோரிகள் என்ற ஒரு வகை அதிகாரிகளும் இருந்தனர். அதிகாரிகளின் கடமைகள் பற்றிய கையேட்டில் அவருடைய கடமைகள் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன: ''அவர் தமது ஆட்சி வரம்பின் அளவுக்கு ஏற்பச் சிறு நாட்டுப்படை (Militia) ஒன்றை வைத்திருந்தார்.

[105] Sarkar, Aurangazeb, Vol. III, p. 273.

சரியான சமயத்தில் விழிப்போடு வரியை வசூலிக்க வேண்டுவது அவரது கடமை. வரியாக ஒன்றுமே தர இயலாத இடங்களி லிருந்து அவர் மகசூல்களைக் (அரசுக்குச் சேர வேண்டிய பணம் அல்லது தானியம்) கொடுக்கும்படி வற்புறுத்தலானார். அப்படி வற்புறுத்தினால் குடியானவர்கள் தம் இருப்பிடத்திலிருந்து ஓடி விடக்கூடும்; எனவே, அவர் குடியானவர்களிடமிருந்து வாங்க வேண்டிய அளவுக்கு மேலாக ஒரு சிறியதையும் வசூலிக்கக்கூடாது, சட்ட திட்டங்கள் விதித்த அளவுக்கு அதிகமாகக் குடியானவர் களிடமிருந்து வரி வசூலிக்கக்கூடாதென்று தமக்குக் கீழ்ப் பணி புரிந்த அதிகாரிகளுக்கு அவர் கண்டிப்பான ஆணையிட வேண் டும். அவர் நாணயமுள்ளவராக இருக்கவேண்டும்.'' புதிய கரோரி ஒருவருக்கு வழங்கப்பட்ட 'சனத்' (நியமனப் பத் திரம்) ஒன்றில் அவருடைய கடமைகளைப்பற்றிப் பின்வரும் அறி வுரைகள் தரப்பட்டுள்ளன. ''அமீன் என்பவரால் நிர்ணயிக்கப் பட்டுள்ளபடி பருவத்துக்குப் பருவமாக வரிகளை வசூல் செய்து, ஃபோட்டாதார் எனும் அதிகாரியிடம் அதைச் செலுத்திவிட வேண்டும். அமீன், ஃபௌஜ்தார் ஆகியோரின் ஆலோசனைப்படி (திரட்டப்பட்ட) பணத்தைப் பேரரசுக் கருவூலத்தில் சேர்த்து விட்டு ஃபோட்டாதாரிடம் நீர் ஒரு பற்றுச் சீட்டை அல்லது இரசீதைத் தந்துவிட வேண்டும், சட்ட திட்டங்களில் விதித்துள்ள படி அரசாங்கத்துக்கு உம்முடைய அலுவலகத்தில் வரவு செலவுக் கணக்குகளைப்பற்றிய சுருக்கமான கடிதத்தையும் மற்றும் பல தாள்களையும் அனுப்பிவிடவேண்டும். அப்வாப்புகளை, அதாவது 'நஹீப்' (Nahib) போன்ற கட்டணங்களை வசூல் செய்ய வேண் டாம். அதே போன்று மேல் வரும்படிகளையும் (தாசில்தாரி) அதனையொத்தவற்றையும் வாங்க வேண்டாம். அப்படி வாங் கினால் அப் பணமானது பறிமுதல் செய்யப்படுவதோடு பணம் வாங்கியோரும் வேலையிலிருந்து நீக்கப்படுவார்.'' மேலே சொல் லப்பட்டவற்றிலிருந்து கரோரி என்பவர் வரி வசூல் செய்யும் ஓர் அதிகாரியாக இருந்திருக்கவேண்டும் எனத் தெரிகிறது. தற் காலத்தே வரிகளை வசூல் செய்து அதில் ஒரு சதவிகிதத்தைத் தமக்குக் கூலியாக எடுத்துக் கொள்கின்ற 'மல்குஸார்' (Malguzar) என்ற அதிகாரிக்கு அவரை ஒப்பிடலாம், அவர் அர சாங்கத்தால் முறையாக நியமிக்கப்பட்டவர் அல்லர். ஆனால் அவருக்கு உதவியாக ஃபௌஜ்தார், அமீன், ஃபோட்டாதார் அல்லது பொருளாளர் ஆகிய அதிகாரிகள் இருந்தனர் என்பது மேலே சொல்லப்பட்ட மேற்கோளினின்றும் தெரிகிறது. முன்னைய அத்தியாயம் ஒன்றில் ஃபௌஜ்தார், காஜிநதர் ஆகிய இரு வருடைய கடமைகளும் அக்பர் காலத்தே எப்படி இருந்தன என் பதை நாம் குறிப்பிட்டுள்ளோம்.

அதிகாரிகளின் கடமைகள்பற்றிய கையேட்டில் (963—965) அமீனின் பணிகள்பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''தொன்றுதொட்டு வரும் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப அவர் நில வரியை நிர்ணயம் செய்யவேண்டும். அரசாங்கத்தின் பொருளைக் களவாடும்படி யாரையும் அநுமதிக்கக்கூடாது. நாட்டின் நிலங்கள் யாவும் சாகுபடி செய்யப்படுவதற்கு வழி செய்வதே அவரது முக்கிய கடமையாகும். வேளாண்மை செய்வதற்குரிய பருவம் துவங்குமுன் அவர் 'கானுங்கோ'க்களிடம் (Qanungoes) சென்று கடந்த பத்தாண்டு வரி நிர்ணயத் தாளை வாங்கி அதைக் குறித்துக்கொள்ள வேண்டும். கிராமங்களின் பரப்புப் பற்றிய பத்தாண்டுத் தாள்களையும் அவர் வாங்கிக்கொள்ள வேண்டும். பின் அவர், கரோரிகள், சௌதிரிகள், கானுங் கோக்கள், ஜமீன்தார்கள் புடைசூழக் கிராமங்களுக்குக் குதிரை மீது சவாரி செய்துகொண்டு போக வேண்டும். அங்குச் சென்று கிராமங்களின் நிலைமையையும் அவற்றின் பரப்பையும்பற்றி நன்கு விசாரிக்க வேண்டும். உண்மையாகச் சாகுபடி செய்யப் படும் நிலம் எவ்வளவு என்பதையும் தாள்களில் குறிக்கப்பட்டுள்ள நிலப் பகுதியின் பரப்பினையும் அவர் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அவை இரண்டும் ஒன்ருக இல்லையானுல் அதற்குக் காரணம்என்ன வென்று கானுங்கோவிடம் கேட்க வேண்டும். கிராம அதிகாரியை விளித்து, ''கிராமத் தலைவர் ஏன் பொய் சொல்ல வேண்டும்? கானுங்கோ ஏன் தப்புக்கணக்குக் காண்பிக்க வேண்டும்?'' என அதட்டுதல் வேண்டும்.

''கிராமத்தில் இருக்கின்ற கலப்பைகள் அக் கிராம மக்களுக் குப் போதுமானவைதாமா என்பதை விசாரிக்க வேண்டும். போதுமானவையல்ல என்று தெரிந்தால் தக்காவி (விவசாயக் கடன்) வழங்க வேண்டும். சாகுபடி செய்வதற்குத் தகுதியான நிலபகுதிக்கேற்பவும் அதற்கு வேண்டிய எருதுகள், விதைகள் முதலியவற்றை வாங்குதற்கேற்பவும் கடன் வழங்கப்பட வேண் டும். அதைத் திரும்பப் பெறுவதற்காகக் கிராமத் தலைவரிட மிருந்து ஒரு பத்திரத்தை எழுதி வாங்கிக்கொள்ளவேண்டும். அடுத்த ஆண்டு வருமானத்தின் முதற் பகுதியிலிருந்து கடனைத் தீர்த்துவிடுவதாகக் கிராமத் தலைவர் எழுதிக் கொடுக்கவேண்டும். கரோரிகள் இழப்பீட்டுப் பத்திரம் (Indemnity Bond-Muchilka) ஒன்றை எழுதிக்கொடுக்க வேண்டும். அதில் அவர்கள் அடுத்த ஆண்டு செலுத்தப்படும் வரியில் முதல் தவணையைக் கொண்டு கடனை அடைத்துவிடுவதாக உறுதி கூறுதல் வேண்டும்.''

மேலே கொடுக்கப்பட்டுள்ள நூற்பகுதியிலிருந்து கிராமத்தில் அமீன் என்னும் அதிகாரி இயற்றி வந்த முக்கியமான பணிகள்

என்னென்ன என்று நன்கு தெரிய வருகின்றது. குடியானவர்களின் நிலையை உயர்த்தலும் வேளாண்மைக்குத் துணைபுரிதலுமே அவருடைய முக்கியக் கடமைகள் எனத் தெரிகின்றது. பருவ மழையை நம்பிக்கொண்டிருந்த இந்தியக் குடியானவனுக்குத் தக்காவி என்ற விவசாயக் கடன் பெரிதும் உதவியாகவும் வரவேற்கத்தக்கதாயும் இருந்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக் கடனை அவர் கிராமத் தலைவருக்கே வழங்கினார். கிராம நலனின் பிரதிநிதி என்ற முறையில் அஃது அங்ஙனம் வழங்கப்பட்டது. கடனைப் பெறுமுன் 'தமாசுக்' என்ற பத்திரத்தை அவர் எழுதித் தரவேண்டியிருந்தது. அப் பத்திரத்தைச் சௌதிரி என்பார் ஆதரித்து எழுதுதல் (Endorse) வேண்டும், அதோடு காஜி என்பார் அதற்கு முத்திரையிட வேண்டும். கானுங்கோவும் ஜமீன்தாரும் அதற்குச் சான்றுபகர் கையொப்பம் (Attestation) வழங்க வேண்டும். கிராம நிர்வாகத்தில் கானுங்கோ எனும் அதிகாரியும் மிக முக்கியமான பங்குகொண்டிருந்தார். அவரது பெயரில் தொனிக்கிறபடியே அவர் கிராமியச் சட்டங்களையும் வழக்காறுகளையும் ஐயந்திரிபற அறிந்தவராய் இருந்தார். நிலங்களைப்பற்றிய எல்லா விவரங்களும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமென யாவரும் எதிர்பார்த்தனர். வரி வசூல் செய்தல், நில அளவை, வரி நிர்ணயம், நில மதிப்பீடு, நில உரிமைக் கால அளவு (Tenure), நிலங்களின் பரப்பு, நிலங்களின் மாற்றம் முதலிய இவைபற்றிய எல்லாத் தகவல்களையும் முறைகளையும் முன் நிகழ்ச்சிகளையும் (Precedents) அவர் அறிந்திருக்க வேண்டுமென யாவரும் எதிர்பார்த்தனர். ஒரு புதிய கானுங்கோவுக்கு கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் வருமாறு: ''உம்முடைய கடிதங்களில் நம்பிக்கையை வைத்தே பேரரசரின் காரியமெல்லாம் நடைபெற்று வருகின்றன. பங்கீடு பற்றிய தாள்கள் (Taqsim Papers of Division), ஒப்பீடுபற்றிய தாள்கள் (Muazana) முதலியன உமது அலுவலகத்தையே சார்ந்தவை... பதிவேடுகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு பிரதிகளை வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று உமது வீட்டில் இருக்கட்டும்; இன்னொன்று உம்முடைய அலுவலகத்தில் இருக்கட்டும் (உமது குமாஸ்தாவின் பொறுப்பில்). அப்போதுதான் நீராலும் நெருப்பாலும் ஏற்படுகின்ற அபாயத்தினின்றும் குறைந்தது ஒரு பிரதியேனும் தப்பக் கூடும்.''[106]

---

[106] Sarkar, Mughal Administration, pp. 86-90.

அரசாங்கத்தில் ஊழலும் சீரழிவும் ஏற்படல்

மேலே தரப்பட்டுள்ள நூற்பகுதிகளிலிருந்து கிராமத்தில் கிராமத்தலைவர், ஜமீன்தார், கானுங்கோ, அமீன் என்ற அதிகாரிகள் எவ்வளவு முக்கியமான பணிகளை ஆற்றி வந்தனர் என்பது நன்கு தெளிவாகத் தெரிகின்றது. கிராம மக்களின் வாழ்க்கையின்மீது அவர்கள் தனியாட்சி செலுத்தினர். அவர்களின் தயவுக்கேற்பவே கிராமவாசிகள் வாழ்ந்தனர் அல்லது வீழ்ந்தனர் எனலாம். வாழ்ந்ததைவிடப் பெரும்பாலும் அவர்களால் குடியானவர்கள் வீழ்ந்ததே அதிகம் என்று கூறலாம். தங்களுடைய பேராசையைத் தீர்த்துக்கொள்வதற்காக அவர்கள் குடியானவர்களைக் கொள்ளையடித்தனர். பல விவசாயிகளின் அழிவுக்கும் அவர்களே காரணமாயினர். கதியற்ற ஏழைக் கிராமவாசிகள் பொறியில் அகப்பட்ட எலியெனத் திண்டாடினர். கிராம அதிகாரிகளில் ஒவ்வொருவரும் மற்றவரின் பேராசைக்கு ஒரு தடையாக இருக்கவேண்டும் என்ற கருத்திலேயே மொகலாய அரசாங்கம் மிக விவேகத்தோடுகூட இவர்களை எல்லாம் ஒருங்கு சேர்த்து வைத்தது. ஆனால், அந்த எண்ணம் கைகூடவில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியே குடியானவர்களைச் சுரண்டலாயினர். சுரண்டுவதில் அவர்கள் முறை போட்டுக்கொண்டு தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டனர். ஒருவர் முறை வந்தபோது மற்றவர் வாளா இருந்தனர். ஒருவரின் நலன் இன்னொருவருடைய நலனோடு மோதிக்கொள்ளாமல் அவர்கள் பார்த்துக்கொண்டனர். அவரவருக்கு வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் தங்களால் ஆனதை அவர்கள் சுருட்டிக்கொண்டார்கள். இந்தப் புனிதமற்ற சதித்திட்டமானது ஒருசில சமயங்களில் சுபாதார் அல்லது விழிப்புள்ள திவான் ஒருவரால் சிறிது தடை செய்யப்பட்டது. ஆனால், அஃது எப்போதோ ஒருமுறை நடைபெறும் காரியமாகவே இருந்தது. அவுரங்கசீபின் ஆட்சிக் காலத் தொடக்கத்திலிருந்து அங்ஙனம் நடைபெறுவது ஒரு விதிவிலக்காக இருந்ததேயன்றி, ஒரு விதியாக இருக்கவில்லை. அவர் அரியணை ஏறுவதற்கு முன்னர் நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டத்தினாலும் அவரது ஆட்சிக் காலத்தில் நடுநடுவே தோன்றிய கலகங்களாலும், கட்டுப்பாடின்மையாலும், தக்காணத்தில் நடைபெற்று வந்த ஓய்வற்ற போரினாலும், பேரரசுடைய வலிமையும் வளமும் குன்றின. நிர்வாகத் திறமையானது மீண்டும் ஈடு செய்ய முடியாத அளவுக்குக் குறைந்துவிட்டது. குடியானவர்களின் நிலைமை மிகப் பரிதாபகரமாய்ப் போய்விட்டது. திவான்களும் அவருக்கு உட்பட்ட அதிகாரிகளும் நடந்துகொண்ட விதமானது இக் காலத்தே மொகலாய ஆட்சித் துறை

யானது எவ்வளவு திறமையோடு இருந்தது என்பதற்கு மிகக் கொடூரமான ஒரு விளக்கமாய் அமைகிறது. 1662-ஆம் ஆண்டில் ஒரிஸா மாநிலத்தின் சுபாதார் பின்வருமாறு எழுதினர்: "புதிய திவானுகிய மகமது ஹாஸீம் என்பாரது வருகைக்குப்பின் அரசருக்குச் சொந்தமான நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. அங்கு வாழ்ந்து வந்த மக்கள் எல்லாம் அதைவிட்டுப் போய்விட்டார்கள். அதன் நிர்வாகக் காரியங்கள் எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கின்றன. காரணம் என்னவெனில், பகுத்தறிவுக்கு ஒவ்வாத அளவுக்கு மீறிய வரியானது மிகக் கடுமையான முறையில் மக்களின்மீது திணிக்கப்படுகிறது. நுணுக்கமான விவரங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. புதிய திவான் பின்வருமாறு தம் காரியங்களைச் செய்கிறுர்." கரோரிப் பதவியை ஒருவர் ஒப்புக்கொண்டவுடனே ஹஷீம் அவர் பணிபுரிய வேண்டிய பர்காணுவின் வரி நிர்ணயத்தாளை அவரிடம் தருகிறுர். அத் தாளில் குறிக்கப்பட்டுள்ள வரித்தொகையை அவர்மீது சுமத்தி அவரை நேரே அவரது பர்காணுவுக்கு அனுப்பிவிடுகிறுர். தம் பர்காணுவின் (உண்மையான) மகசூல் என்ன என்பதை அவர் அறிந்துகொள்ளுமுன் அவர் அங்கு அனுப்பப்பட்டுவிடுகிறுர். சில நாள் கழித்து வேறொரு மனிதரை அப் பதவிக்கு ஹஷீம் கான் தேர்ந்தெடுத்துவிடுகிறுர். புதிய ஆளிடம் பணம் வாங்கிக்கொண்டு அவரை அப் பதவியில் நியமித்துவிட்டுப் பழைய ஆளை வேலையினின்றும் நீக்கிவிடுகிறுர். முதலில் நியமிக்கப்பட்ட ஆள் வசூலித்துத் தருவதாக ஏற்றுக்கொண்ட தொகைக்கு மேற்பட்ட தொகையைக் குடியானவர்களிடமிருந்து தண்டித் தருவதாக இரண்டாவது நபர் வாக்களிக்குமாறு வற்புறுத்தப்படுகிறுர். இன்னும் சில நாள் கழித்து மூன்றுவது மனிதர் வந்து தோன்றுகிறுர். அவர் இன்னும் அதிகமான தொகையை வசூலித்துத் தருவதாக வாக்களித்து அப்பதவியைக் கைப்பற்றுகிறுர். இரண்டாவது நபர் வேலையினின்றும் நீக்கப்பட்டு மூன்றுவது ஆள் பர்காணுவுக்கு அனுப்பப்படுகிறுர். கான் இங்ஙனம் நிலவருமானத்தை சில இடங்களில் இரண்டு மடங்காகவும், வேறு சில இடங்களில் மூன்று மடங்காகவும் அதிகரித்து (அதாவது, வெறும் காகிதத்தில் மட்டும்) விட்டார். குடியானவர்கள் அவ் வரியைக் கொடுக்க இயலாமல் கிராமங்களைவிட்டே ஓடிப்போய்விட்டனர். கிராமங்களெல்லாம் மக்களரவமற்ற காடுகளாக மாறிவிட்டன."[107] ஒரிஸா மாநிலத்தில் காணப்பட்ட நிலைமை இது. குஜராத் மாநிலத்தின் நிலைமை இன்னும் மோசமாயிருந்தது. அங்கு ஆளுநர், ஃபௌஜ்தார்கள், அரசாங்க வரிவசூல் செய்

[107]Sarkar, Studies in Aurangazeb's reign, p. xiv.

பவர்கள், செல்வர்கள் யாவரும் தனிப்பட்ட முறையில் எல்லா வகையான வியாபாரங்களிலும் ஈடுபட்டு வந்ததாக நாம் கேள்விப் படுகிறோம். அவுரங்கசீபின் பேரரான அஸிமுஷ் கான் (Azimush Khan) என்பவருக்குக்கூட அவர் வங்காள கவர்னரா யிருந்தபோது, இத்தகைய முறையில் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்ற நப்பாசை தோன்றிற்று. அப்படிப்பட்ட தீய ஆசையை அடக்கமுடியாமல் அவர் தம் மனம் விரும்பிய வழியே சென்ற காரணத்தால், அவுரங்கசீப் அவரைக் கண்டிக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அரசாங்க நிறுவனத்தின் அடித்தளத்தில் வேலைபார்த்துவந்த சிப்பந்திகள் எல்லா வகை யான பொய் பித்தலாட்டங்களையும் கடைப்பிடித்து மக்களிட மிருந்து பணத்தைக் கறந்தனர். பதான் நகரில், கால்நடைகள் புல் மேய்க்கப்படுதல்மீது மிகக் கடுமையான வரி ஒன்றை விதித்து அதைப் பலவந்தமாக அரசாங்க அதிகாரிகள் மக்களிடமிருந்து வசூலித்தனர். சாபர்மதி, வார்தக் ஆகிய நதிகளின் கரையோரங் களில் இருந்த நிலங்கள் மிகவும் செழிப்பாக இருந்தமையால் அவற்றின் சொந்தக்காரர்களை வற்புறுத்தி, ஃபௌஜ்தார்களும், கரோரிகளும் ரூ. 10 முதல் ரூ. 15 வரை தங்களுக்கெனப் பெற்றுக் கொண்டனர். அகமதாபாத்தில், ஒருவர் தம் முன்னோர்களின் நிலத்தில் உள்ள ஒரு மரத்தை வெட்டவேண்டுமென்றாலுங்கூட அதிகாரிகளுக்கு ஏதவாது இலஞ்சம் கொடுக்காமல் அது முடியாத காரியமாயிருந்தது. நகரத்தைவிட்டு எந்தப் பொருளேனும் விற்பனைக்காக வெளியே போனாலும் அல்லது உள்ளே வந்தாலும் அதிகாரிகள் அவற்றின்மீது மனம் போனபடி வரிகளை விதித்தனர். சட்டத்துக்குப் புறம்பாக மக்கள்மீது திணிக்கப்பட்ட பல்வேறு இடுவரிகளின் (Imposts) பட்டியல் ஒன்றைப் பேராசிரியர் சர்க்கார் தந்து, அதற்கு மிக விரிவான விளக்கம் ஒன்றையும் தந்துள்ளார். ஒவ்வொரு பேரரசரும் அத்தகைய வரிகளை முற்றும் ஒழிக்க விரும்பி அதற்கான ஆணைகளை அவ்வப்போது பிறப்பித்து வந்துள்ளனர். ஆனால் அவை கொஞ்ச நாளைக்கே பயன்தந்தன. அப்புறம் அதிகாரிகள் அவ்வாணைகளை அறவே புறக்கணித்தனர். பெரிய அதிகாரிகளும், சிறிய அதிகாரிகளும் தத்தம் போக் கிலேயே போய்க்கொண் டிருந்தனர். பொருள் சேர்ப்பதில் அவர்கள் கொண்டிருந்த பேராசையைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் பல முறைகளையும் கடைப்பிடித்தனர். கதியற்ற குடி யானவர்கள் வரிப்பளு எனும் பெரும்பாரம் தாங்கமாட்டாமல் அதன் அடியில் நசுக்குண்டு திணறினர். அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய பாக்கிகளைக் கொடுக்கவும் கையில் பொருளில்லாமல் அவர்கள் வாடினர். அங்ஙனம் அவர்கள் கொடுக்க இயலாத போது பலவிதத்திலும் மிக இழிவான முறையில் தண்டிக்கப்

பட்டனர். சாட்டையால் அடித்தல் போன்ற தண்டனைகள் சாதாரணமாக வழங்கப்பட்டன.[108] இவையெல்லாம் இப்படி நடைபெறுதல் தவிர்க்க முடியாததாய்ப் போய்விட்டது. ஏனெனில், அரசர்முதல் ஆண்டிவரை எல்லாருமே பிறரிடமிருந்து ஏதாவது பரிசை எதிர்பார்ப்பதென்பது ஒரு சமுதாய மரபாகவே (Social Etiquette) ஆகிவிட்டது. பேரரசரின் தேவைகளை நிறைவேற்றும் முயற்சியில் சுபாதார்கள் வறியோர்களாயினர். சுபாதார்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பணியில் சாதாரண அதிகாரிகள் பலரும் ஏழைகளாகிவிட்டனர். அதிகாரிகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் நல்குரவை அணைக்க நேர்ந்தது. இங்ஙனம், நாட்டில் எல்லாமே ஒரு நச்சு வளையமாக (Vicious circle) இயங்கிக்கொண்டு வரலாயின. அரசாங்கத்தில் ஊழல் மலிந்தது. குடிமக்கள் வறுமையிலும், தாங்கொணாத் துயரத்திலும் மூழ்கித் தவித்தது போன்றே அரசாங்கமும் ஊழலில் தோய்ந்துகிடந்தது.

[108] Manucci, Storia, Vol. II, pp. 450-51.

17. முடிவுரை

அரபுகளின் ஆட்சி நிலையான பலன் எதையும் விளைவிக்காதது

முஸ்லிம்கள் ஐந்நூறு ஆண்டுகளாக இந்தியாவை ஆண்டதால் ஏற்பட்ட விளைவுகளை மேல்வாரியாக ஆராய்ந்து அதோடு இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறைபற்றிய இவ்வாராய்ச்சியை முடித்துக்கொள்வோமாக. அதாவது, டில்லி சுல்தானிய அரசு என்று அழைக்கப்பட்ட முஸ்லிம் இராஜ்யமானது முதன்முதலாக நிலையாக நிறுவப்பெற்ற தேதியாகிய கி. பி. 1206இலிருந்து, நான்கு தலைமுறைகளாக ஆண்ட மன்னர்களால் நன்கு நிறுவப்பெற்ற மொகலாயப் பேரரசு எனும் மாண்புமிக்க நிறுவனத்தை வீழ்ச்சியடையச் செய்த அவுரங்கசீப் என்னும் அரசர் உயிர்நீத்த தேதியாகிய கி. பி. 1707 வரை பரந்ததொரு கால வரையறைக்குள் இந்தியாவில் காணப்பட்ட நிலைமையை ஈண்டுச் சுருக்கமாக ஆராய்வோமாக. அராபியர்களுடைய ஆட்சியானது சிந்துவில் கி. பி. 712ஆம் ஆண்டளவிலேயே நிறுவப்பட்டு, அதன்பின் ஒன்றரை நூற்றாண்டுவரை நீடித்தது. எனினும், அதனால் நிலையான பலன் எதுவும் ஏற்படவில்லையாதலால் இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறை வளர்ச்சிக்கு அஃது எவ்வகையிலும் துணைபுரியவில்லை என்பதை நாம் நன்கு கவனத்தில் பதித்துக்கொள்ள வேண்டியது அவசியம். முஸ்லிம்கள் இந்துக்களோடு முதன்முதலாகத் தொடர்பு கொள்ள நேர்ந்தது அப்போதுதான் ஆகும். ஆனால், மதத்திற்காகப் போர் செய்கிறோம் என்ற கடுமையான உணர்வோ, மதமாற்றம் செய்யவேண்டும் என்ற உற்சாகமோ அவர்களது படையெடுப்பில் காணப்படவில்லை. அதனால், முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் மனக்கசப்பு ஏற்பட வழியில்லாமற் போயிற்று. அரபுகளின் வெற்றி வெறும் இராணுவ வெற்றியேயன்றி வேறன்று.

அதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் சிந்துவில் குடியேறியதும் ஆட்சி செலுத்தியதும் கலீஃபாக்கள் வேறு இடங்களில் எங்ஙனம் நடந்துகொண்டார்களோ அதையொட்டியே நடைபெற்றன. அராபியர்கள் இந்துக்களைத் தங்களது நாட்டின் ஆட்சியிலிருந்து விலக்கிவைக்கவில்லை. அரசாங்கத்தில் இந்துக்களுக்கும் அவர்கள் ஒரு பங்கு அளித்தார்கள். ஆனுல், அப் பங்கானது மிகக் குறுகிய தாகவும், அரசாங்கத்தின் மிகமிக முக்கியத்துவமற்ற துறையைச் சார்ந்ததாகவும் இருந்தது. இந்தியத் தலைவர்கள் பொதுவாகக் கருணையோடும் மரியாதையோடும் நடத்தப்பட்டனர். அவர் களில் சிலர் ஏற்கெனவே ஆட்சி புரிந்துவந்த நிலப்பகுதியைத் தொடர்ந்து ஆண்டுவர அநுமதிக்கப்பட்டனர். சில சமயங்களில் அவர்கள் முஸ்லிம் அதிகாரிகளுக்கு மேலாகவும் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். சமயப்பொறை என்பது கலீஃபாக்களின் ஒரு கொள்கையாக இல்லாதிருந்தபோதிலும் 'தலை வரி' ஒன்றைச் செலுத்தியபின் சிந்துவிலிருந்த முஸ்லிம்கள் அல்லாதார் பெருமள விற்கு உரிமையோடு வாழவும் தத்தம் மதத்தை யாதொரு தடையுமின்றிக் கடைப்பிடிக்கவும் அநுமதிக்கப்பட்டனர். மத ஒறுப்பு என்பது அராபியர்களின் ஆட்சியில் அரிதாகவே காணப் பட்டது. அரசாங்க அமைப்பைப் பொறுத்தவரையில் அதில் அராபிய முறையும் இந்திய முறையும் ஏதோ தாறுமாறுன முறை யில் இணைக்கப்பட்டிருத்தலையே காண்கிறோம். ஆட்சித் துறையின் அடிப்படையில் இந்திய முறையும் மேல் தளங்களில், அதாவது அரசாங்க நடவடிக்கைகளைக் கண்காணித்தல், வழிநடத்துதல் ஆகிய பணிகளில் அராபிய முறையும் கடைப்பிடிக்கப்பட்டன. தல அரசாங்கமானது ஆங்காங்கே இருந்த உள்ளூர் மனிதர்களின் துணையைக்கொண்டே முழுவதும் நடத்தப்பட்டது. ஆங்காங்கு வாழ்ந்த சமுதாயக் கூட்டங்களின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப வும் மரபுகளுக்கு ஏற்பவுமே தல ஆட்சி முறையானது நடை பெற்று வந்தது. எனினும், இந்து-முஸ்லிம் தொடர்பானது ஆழ்ந்த நட்பாக மாறவில்லை. இந்து-முஸ்லிம் அரசியல் மரபு களும் ஒன்றிலொன்று ஆழமாகக் கலக்கவில்லை. எனவே, ஒன்றரை நூற்றுண்டுகள் அராபியர்கள் ஆண்டபின்பும் அவர்கள் வீழ்ச்சியுற்றபோது அவர்களுக்குப் பின்னர் எஞ்சி நிற்கக்கூடிய பலன்கள் எதையும் ஏற்படுத்தாமல் போய்விட்டனர்.

கஜ்னவீடுகள், டில்லி சுல்தான்கள் ஆகியோரின் ஆட்சி

இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களும் மத்திய ஆசியாவில் இராஜ்யங்களைத் தோற்றுவித்தவர்களுமான துருக்கியர்கள் பத்து, பதினேராம் நூற்றுண்டுகளில் ஆப்கானிஸ்தானத்தையும் பஞ்சா

பையும் அவற்றை ஆண்டுவந்த இந்து மன்னர்களிடமிருந்து பறித்துக்கொள்ள இடைவிடாமல் பாடுபட்டனர். இறுதியில், அவர்களது முயற்சி பலித்தது. இந்திய எல்லைப்புறத்தின் இரு மருங்கிலும், அதாவது மேற்கே ஆப்கானிஸ்தானத்திலும் கிழக்கே பஞ்சாபிலும் முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டது. இந்த வகையில் மகமது கஜினியின் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வட இந்தியாமீது மீண்டும் மீண்டும் படையெடுத்து அவர் பஞ்சாபைத் தம் நாட்டோடு சேர்த்துக்கொண்டார். அவர் ஒரு மத வெறியராக இருந்தபோதிலும், ஆட்சித் துறையைப் பொறுத்த வரையில் அவர் மக்கள் நலன் கருதிய அறிவுசான்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். பொறுப்பும் அதிகாரமும் வாய்ந்த பதவிகளில்கூட அவர் இந்துக்களைத் தாராளமாக நியமித்தார். அவருடைய கொள்கையை அவருடைய சந்ததியார்கள் அப்படியே கடைப்பிடித்தனர். 'சிவந்த் ராய்', 'பிஜய் ராய்', 'திலக்' போன்ற இந்துக்கள் தளகர்த்தர்களாகவும் மாநில ஆளுநர்களாகவும் பதவி ஏற்றனர். அரசருக்குக் கீழ்ப்படியாத, விசுவாசமற்ற கலகக்கார ஆளுநர்களை அடக்குவதற்கும் அவர்கள் சில சமயம் பயன்படுத்தப்பட்டனர். சிலை வணக்கம் செய்த இந்துக்களை அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்கின்ற இக் கொள்கையானது இஸ்லாமிய மரபுகளுக்கும் இஸ்லாமிய அரசுக்கும் முற்றும் முரணாக இருந்தது. முஸ்லிம் மரபுப்படி முஸ்லிம் அல்லாத ஒருவர் இஸ்லாமிய அரசுக்காகப் போர்புரியவோ அல்லது ஏதாவது ஒரு சிவில் துறையில் பணிபுரியவோ அநுமதிக்கப்படுவதென்பது என்றுமே வழக்கமில்லை. இஸ்லாமிய அரசில் உலகெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இக் கொள்கையினின்றும் மாறுபடுவதற்கு ஒருவர் துணிந்தாரென்றால், அது மிகமிக முக்கியத்துவமுள்ளதாகும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், இந்தியச் சூழ்நிலையில் இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறையில் புதியதோர் உணர்வானது ஏற்படத் தலைப்பட்டுவிட்டது என்பதையே இது சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

அரசாங்க அமைப்பு முறையைப் பொறுத்தவரையில் டில்லி சுல்தான்கள் கலீஃபாவின் ஆட்சி முறையை ஒட்டியே நடந்துகொண்டனர். அரசர் சுல்தான் என அழைக்கப்பட்டார். இந்தப் பட்டமானது துருக்கிய காவற்படைத் தளகர்த்தராயிருந்த அஷ்னஸ் (Ashnas) என்பவருக்கு வாசிக்பில்லா (Wasik-b-Illah) என்ற கலீஃபாவால் முதன்முதலாக வழங்கப்பட்டதாகும். சுல்தானுக்குப் பல அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைக்குத் தலைவராயிருந்தனர். அவர்கள் யாவருக்கும் மேலாகத் தலைமை அமைச்சர் அல்லது

'வஜீர்' என்பார் இருந்தார். நாட்டின் மிக உயர்ந்த அதிகாரிகளுள் அவர் முதலிடம் வகித்தார். இவ்வகையில் அப்பாசித்துகள் (Abbasids) காலத்து இருந்த முறையே இப்போதும் கடைப்பிடிக்கப்பட்டது. அரசாங்கம் முழுமைக்கும் அவர் பரவலாக பொறுப்பேற்க வேண்டியவராயிருந்தார். ஏனைய அமைச்சர்கள் குறிப்பிட்ட அரசாங்கத் துறைகளுக்குமட்டுமே பொறுப்பை மேற்கொண்டிருந்தனர். அத் துறை யாவும் சேர்ந்து 'திவான்' என அழைக்கப்பட்டது. அதைத் தற்கால அரசாங்கச் செயலகத்திற்கு (Secretariat) ஒப்பிடலாம். மிக உயர்ந்த அதிகாரிகள் எல்லாம் 'அமீர்' என்ற பட்டத்துடன் விளங்கினர். 'வஜீர்' என்பார் அமீருல் உமரா (Ameer-ul-Umara) என்னும் பட்டத்துடன் விளங்கினர். மாநில ஆளுநர்கள் 'நாயிபுகள்' அல்லது பிரதிநிதிகள் என அழைக்கப்பட்டனர். வஜீருக்கும் ஆளுநர்களுக்கும் அடுத்தாற்போல் முக்கியத்துவம் பெற்றிருந்த அதிகாரிகளாக அகமுடையார் (Chamberlain) அல்லது ஹாஜி, படைத்தலைவர் அல்லது அரீஜ், போலீஸ் படைத்தலைவர் அல்லது 'கொத்தவால்', இராணுவப் படைக்கலச்சாலைத் தலைவர் அல்லது முஷ்ரிஃப் (Mushrif), தலைமை நீதிபதி அல்லது காஜி, மதத் துறைத் தலைவர் அல்லது சதர் (Sadr) ஆகியோர் விளங்கினர். சுல்தானுடைய அந்தரங்கக் காரியதரிசி 'தவாத்கானு' (Dawat-khana) என அழைக்கப்பட்டார். தலைநகரமானது கொத்தவால் என்னும் அதிகாரியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அவர் செல்வாக்கு மிக்க அதிகாரியாய் விளங்கினர். நாட்டிலிருந்த ஒவ்வொரு நகரமும் அல்லது பட்டணமும் ஒவ்வொரு கொத்தவாலின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மாநிலங்களை ஆண்டு வந்த ஆளுநர்கள் ஆட்சித் துறையைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய முழுச் சுதந்திரம் உடையவர்களாக விளங்கினர்கள். அவர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவர்கள் சுல்தானுகவே நடித்தனர். ஒரு சில அதிகாரிகள் சுல்தானுல் நேர்முகமாக நியமிக்கப்பட்டார்கள். வேறு சில அதிகாரிகள் ஆளுநராலேயே நியமிக்கப்பட்டனர். இதுதான் கஜ்னவீடுகள் காலத்தே நிலவி வந்த அரசாங்க முறையைப்பற்றிய தோராயமான விவரமாகும். இந்த முறையையே டில்லி சுல்தான்கள் அனைவரும் கடைப்பிடித்தனர். அதாவது, கி.பி. 1200இல் தோற்றுவிக்கப்பட்ட டில்லி சுல்தானிய அரசானது மேற்கண்ட முறையையே பின்பற்றியது.

டில்லி சுல்தான்கள் கலீஃபாக்களின் பிரதிநிதிகளாக நின்று ஆட்சிபுரிதல்

ஏறக்குறைய ஒரு நூறு ஆண்டுகள்வரை டில்லி சுல்தான்கள் வட இந்தியாவை வெல்வதிலும், வென்ற நாடுகளை ஒன்றுபடுத்து

வதிலும் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். கலீஃபாக்களின் பிரதிநிதிகள் என்று அவர்கள் தம்மைக் கூறிக்கொண்டனர். பாக்தாத்திலிருந்த, கலீஃபா பதவியானது மங்கோலியர்களால் ஒழிக்கப்பட்ட பின்புங்கூட டில்லி சுல்தான்கள் கலீஃபாக்களின் பிரதிநிதிகளாகவே தாங்கள் இந்தியாவில் ஆட்சி புரிவதாகக் கூறிக்கொண்டனர். கெய்ரோவுக்கு மாற்றப்பட்ட கலீஃபாப் பதவிக்கு அவர்கள் வணக்கம் செலுத்தினர். கெய்ரோவுக்கு அவர்கள் தூதுவர்களை அனுப்புவித்துக் கலீஃபாவின் ஆசிகளைப் பெற்றதோடு தம் பதவிக்குரிய சின்னங்களையும் பெற்றனர். அத்தகைய மனப்போக்கின் காரணமாக 'ஷரியத்' (Shariat) அல்லது புனிதக் குரானியச் சட்டப்படியே தாங்கள் ஆளவேண்டியது கடமையென அவர்கள் எண்ணினர். தம் மதத்துக்குப் புறம்பானவர்களைத் துன்புறுத்துவதும் அரசியல் துறையில் இந்துக்களை நசுக்குவதுமே டில்லி சுல்தான்களின் முக்கிய நோக்கங்களாயிருந்தன. உலேமாக்களும் காஜிகளும், அதாவது முஸ்லிம் சமயநூல் வல்லுநர்களும் சட்ட நிபுணர்களும் நாட்டில் மிக மிக முக்கியத்துவம் அடைந்தனர். ஏனெனில், சுல்தான்கள் எவருமே புனிதச் சட்டங்களைச் சரிவர அறியாதவர்களாயிருந்ததோடு தம் சொந்த அதிகாரத்தை வலியுறுத்தத் துணிவில்லாதவர்களாகவும் இருந்தனர். எது சட்டத்திற்கு ஒத்தது, எது ஒவ்வாதது என்பதைச் சமயநூல் வல்லுநர்களும் சட்ட நிபுணர்களுமே சுல்தானுக்கு எடுத்துக்காட்டினர். இஸ்லாமிய அரசின் குறிக்கோள்களுக்கு ஏறத்தாழ ஒத்துவரக்கூடிய ஓர் ஆட்சி முறையை அரசர் எவ்வாறு நிறுவவேண்டுமென்பதை அவருக்கு விளக்கிக் காட்டியவர்களும் அவர்களேயாவர். அரசர் நீதி வழங்கியபோதும் அவர் அச் சமயநூல் வல்லாரின் உதவியையே நாடினார். ஒரு மன்னர் இறந்தபின் யார் பட்டத்திற்கு வருவது என்பதை உறுதிப்படுத்தவும் அவர்களின் உதவி தேவையாயிருந்தது. பட்டம்பெற்ற அரசருக்காக மசூதிகளின் மேடைகளிலிருந்து குத்பாவானது சமய வல்லுநர்களால் ஓதப்பட்ட பின்னரே அவரது அரச பதவி உறுதியாக்கப்பட்டது. இங்ஙனம், இஸ்லாமிய அரசானது இஸ்லாமிய மதத்தை வளர்க்கவும் முஸ்லிம் சமுதாயத்தின் நலன்களைப் பேணவுமே ஏற்பட்டதொன்று என்பது வற்புறுத்தப்பட்டது. அது மதக் காவலர்களின் ஒத்துழைப்போடு நன்கு நடைபெற்று வந்தது. பல சமயங்களில் முற்றும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களில்கூட அஃது அவர்களுக்குப் பணிந்து நடந்துகொண்டது. இங்ஙனம், அஃது ஒருதலைப்பட்சமான கொள்கையைக் கடைப்பிடிக்கலாயிற்று. எனவே, இந்துக்களின் ஒத்துழைப்பு அதற்குக் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள்மட்டுமே நாட்டை ஆளவேண்டு

மென்றும், அதன் அமைதிக்காகப் போராடவேண்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. அதே சமயத்தில் இந்துக்கள் இராணுவப் பணியிலிருந்தும் அரசாங்கப் பொறுப்பிலிருந்தும் ஒதுக்கப் பட்டனர். இத்தகைய ஓர் அரசானது அஃது எந்த ஒரு முஸ்லிம் சமுதாயத்திற்காக இருப்பதாகக் கூறிக்கொண்டதோ அந்த முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அதிகமாக எதை யும் செய்துவிடமுடியாது என்பதும், அதே சமயம் நிலைபெறுக இருக்கமுடியாதென்பதும் நன்கு தெரியவந்தது. பலவந்தமான முறைகளின் மூலமாகவன்றி வேறு வகையில் குடிமக்களின் ஒத்துழைப்பையும் விசுவாசத்தையும் அது பெறமுடியாமற் போய் விட்டது. அதனால் பல பயங்கர விளைவுகள் ஏற்பட்டன. பலாத் காரத்தால் அடக்கப்படவோ அல்லது மதமாற்றத்தால் வெல்லப் படவோ கூடாத இந்துக்கள் அரசுக்குக் கடும் எதிரிகளாக மாறினர். இஸ்லாம் மதத்தைத் தழுவிய இந்தியர்கள் அரசாங்கத் தில் நல்ல வேலைகளில் இருந்தனர். ஆனால், சிறு சமயம் வாய்த்த போதும் அவர்கள் அரசாங்கத்திற்கு விரோதமாகவும், விசுவாச மற்ற முறையிலும் நடந்துகொண்டனர். சமயம் கிடைத்த போதெல்லாம் அவர்கள் கலகம் செய்தனர். இந்தத் தொல்லை களுடன்கூட மங்கோலியப் படையெடுப்பாளர்கள் வட இந்தியா வின் வாயிற் கதவுகளை ஓயாமல் தட்டிக்கொண்டேயிருந்தனர். அதாவது, வட இந்தியாவில் டில்லிமீது அவர்கள் அடிக்கடி படை யெடுத்துத் தாக்கியவண்ணம் இருந்தனர். இத்தகைய ஒரு சூழ்நிலையில் டில்லி சுல்தான்கள் தங்களுடைய மதியீனத்தை உணர்ந்துகொண்டனர். முற்றும் இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் அரசாங்கத்தை நடத்துவதென்பது இஸ்லாமியச் சமயத்தின் வளர்ச்சிக்கும் முஸ்லிம் சமுதாயத்தின் நலனுக்கும் உகந்தது அன்று என்பதை அவர்கள் கண்டுகொண்டனர். இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்றபடியும் அவ்வப்போது ஏற்படுகிற தேவைகளுக்கு ஏற்பவும் இஸ்லாமிய அரசியல் நிறுவனங்களும் கொள்கைகளும் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே, விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை அவர்களிடம் முதன்முதலாகத் தோன்றியது. கஜ்னி வீடுகளின் அறிவுசான்ற கொள்கையில் முதன்முதல் வெளிப்பட்ட இக் கொள்கையானது இப்பொழுது மிகத் தெளிவாகத் தெரிய லாயிற்று. டில்லி சுல்தானிய அரசின் தலைசிறந்த அரசர்களில் சிலரது கொள்கையில் அது நன்கு பிரதிபலிக்கலாயிற்று.

சுல்தானிய அரசாங்கத்தின் குறைபாடுகள்

திறமையும் எதிர்கால நோக்கும் கொண்ட டில்லி சுல்தானிய அரசர்கள் தங்கள் அரசாங்கத்திலிருந்த இரண்டு குறைபாடுகளை

நன்கு அறிந்திருந்தனர். அவற்றில் முதலாவது, முழுவதும் இஸ்லாமியக் குறிக்கோள்களின் அடிப்படையில் அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்ததாகும். இரண்டாவது, முஸ்லிம் சமயநூல் வல்லுநர்களும், சட்ட அறிஞர்களும், அரசாங்கத்தின்மீது செலுத்திவந்த செல்வாக்கும் அதன் விளைவாக அரசரின் இறைமையின்மீதும் அதிகாரத்தின்மீதும் தடைகள் பல ஏற் படுத்தப்பட்டதுமாகும். இவற்றை உணர்ந்ததன் விளைவாக அவ் வரசர்கள் அரசு, அரசாங்கம் இவற்றின் அதிகார வரம்பு, இஸ்லாமியச் சமயம் அதன் சட்டங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பினின்றும் வேறுபட்டது என்றும், ஆகையால் இஸ்லாம் சமயக் காவலர்கள் அதன் சட்டங்கள் இவ்வாறான ஆதிக்கத் திலிருந்து அரசருடைய அதிகாரம் விடுபடவேண்டுமென்றும், பேரரசின் பொது நன்மையை வளர்க்கும் ஒரே பாதுகாப்பாள ராக மன்னர் திகழவேண்டுமென்றும் அவர்கள் அறுதியிட்டுக் கூறலாயினர். அலாவுதீன் கில்ஜியும், மகமது பின் துக்ளக்கும் இத்தகைய நோக்கத்தைக் கொண்டவர்களாக இருந்தபோதிலுங் கூட நடைமுறையில் அவற்றை முழுவதுமாகக் கொண்டு செலுத்த அவர்களால் முடியவில்லை. ஏனெனில், அதிகாரம் மையத்தில் குவிக்கப்பெற்ற திறமைமிக்க ஆட்சி முறையானது நாட்டில் அப்போது நன்கு நிறுவப்படவில்லை. இந்துக்களின் ஒத்துழைப்பும் அரசியல் மரபுகளும் இஸ்லாமிய இறைமை நிறுவனத்தை வலிமையாக்கிக்கொள்வதற்காகத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. இந்தியாவில் முஸ்லிம்களின் அரசுரிமைக்கு வழிவழிவந்த மரபுரிமை ஒன்றுமில்லை. பொதுமக்களின் விசு வாசத்தைப் பெறக்கூடிய அடிப்படையோ, அல்லது புனிதமோ அதன்பால் காணப்படவில்லை. வெற்றிபெற்ற ஓர் இராணுவத் தலைவர் அல்லது கொலைகாரர் அல்லது சதிகாரர் யாரேனும் ஒருவர்க்கு கலீஃபாவால் வழங்கப்பட்ட ஒரு பரிசாகவே இந்திய அரசுரிமை கருதப்பட்டது. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான்கள் அனைவருமே ஏறக்குறைய இராணுவத் தலைவர் களாகவோ அன்றித் திடீரென்று ஆட்சியைக் கைப்பற்றியவர் களாகவோ இருந்தனர். அலாவுதீன் கில்ஜியும் மகமது பின் துக்ளக்கும் வெற்றித் திருவுடைய தலைவர்களாக இருந்ததோடு மட்டுமின்றி பெருங் கொலைகாரர்களாகவும் இருந்தனர். ஆகவே, அவர்கள் பெற்ற பதவியிலோ அல்லது கலீஃபாவால் அப் பதவி உறுதி செய்யப்பட்டதிலோ, எவ்விதமான புனிதமும் தொனிக்க வில்லை. இயற்கையாகவே டில்லி சுல்தானியர்கள் காலத்து முஸ்லிம் அரசுரிமைக்கு ஒரு புனிதத்துவம் ஏற்படவில்லை. மேலும், அது ஒரு கட்சிச் சார்பாக இருந்த காரணத்தினால் மக்கள் அனைவரது விசுவாசம் என்ற ஓர் அடிப்படையை அதனால் நிறுவ முடியாமலே

போயிற்று. ஆகையினால், மன்னருடைய அதிகாரத்தை நிலை நிறுத்தவும் இறைமையை நிறுவவும் வேண்டி மதகுருமார்களின் செல்வாக்கை அரசிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் ஒழிப்பதற்காகச் செய்த முயற்சிகளனைத்தும் வீணாய்ப்போயின.

அரசாங்க முறையும், டில்லி சுல்தானிய நாடு சிதறுண்டு போதலும்

டில்லி சுல்தானிய நாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட அரசாங்க முறையானது கஜ்னவீடுகளின் முறையையே பெரும்பாலும் பின்பற்றியிருந்தது. அங்கே 'வஜீர்', 'திவான்', 'சதர்', 'ஹாஜி', 'முஸ்டாஃபி', 'பக்ஷி' போன்ற உயர் அதிகாரிகளும் வேறு சில சாதாரண அதிகாரிகளும் இருந்தனர். பால்பன், அலாவுதீன் கில்ஜி ஆகியோரின்கீழ் இம் முறையானது திறம்படச் செயல் புரிந்தது. அக் காலத்தே அரசாங்கத்தின் சிறப்பானது இங்கே ஒரு புதிய துறை தோற்றுவிக்கப்பட்டதாலும், அங்கே ஒரு புதிய பணி துவக்கப்பட்டதாலும் ஏற்படவில்லை; மையத்தில் அதிகாரச் செறிவு ஏற்பட்டதும், எங்கணும் கட்டுப்பாடு நன்கு ஏற்படுத்தப்பட்டதுமே அதன் சிறப்புக்குக் காரணம் எனலாம். மதகுருமார்களின் செல்வாக்கு ஓரளவு இருந்த போதிலும் அரசருடைய ஆதிக்கமும் குடிமக்கள்மீது அவர் செலுத்திவந்த அதிகாரங்களும் ஏராளமாகப் பெருகின. மதத் துறை அல்லது உலகியல்துறைபற்றிய விவகாரங்கள் அனைத்திலும் தம் தீர்ப்பே இறுதியானது என்று மகமது பின் துக்ளக் ஒரு விதியை ஏற்படுத்தினார். இஸ்லாமியக் கொள்கைகளினால் கட்டுப்படுத்தப்படாமலும் இஸ்லாமியச் சட்டக் காவலர்களின் அதிகாரத்தால் தடைப்படுத்தப்படாமலும் தங்களது இறைமையைக்கொண்டு செலுத்த வேண்டுமென்று அரசர்கள் தீர்மானித்து அதைத் தங்களது கொள்கைகளின்மூலம் வெளிப்படுத்தியபோதுதான் டில்லி சுல்தானிய அரசானது பலப்பல சிறு நாடுகளாகச் சிதறத் தொடங்கியது. இந்தியாவின் அரசியல் ஒற்றுமையானது குலைந்தது. நாடெங்கும் சுயேச்சையான பல இராஜ்யங்கள் தோன்றின. அவற்றில் ஒருசில இந்து அரசர்களாலும், வேறுசில முஸ்லிம் அரசர்களாலும் ஆளப்பட்டன. இந்த இராஜ்யங்களிலெல்லாம் இந்துக்களும் முஸ்லிம்களும் அருகருகே வாழ்ந்து வந்தனர். அதன் விளைவாக இந்து மன்னர்கள் முஸ்லிம் குடிமக்களைச் சமயப் பொறையுடன் நடத்தத் தொடங்கினர். அதற்கு எதிரொலியாக முஸ்லிம் அரசர்களும் தங்களது ஆட்சிக்குட்பட்ட இந்துக் குடிமக்களிடம் சகிப்புத் தன்மையோடு நடந்து கொண்டனர். உண்மையில் இந்து மன்னர்களுடைய போக்கில்

புதிதாக ஒன்றும் தோன்றிவிடவில்லை. ஏனெனில், சமயப் பொறை என்பதும் எம் மதமும் சம்மதம் என்பதும் இந்துக்களின் பண்டைய அரசியல் மரபாகும். ஆனல், முஸ்லிம் மன்னர் களிடையே சமயப்பொறை காணப்பட்டதுதான் இங்கு அதிசய மானதாகும். காஷ்மீர், மாள்வா, பீஜப்பூர், வங்காளம் ஆகிய நாடுகளில் ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் சமயப் பொறையைக் கடைப்பிடித்ததோடுமட்டுமின்றி முன்னேற்றக் கருத்துள்ளவர்களாகவும், மக்களின் நலன் கருதுகின்ற அறிவு சான்ற மன்னர்களாகவும் திகழ்ந்தனர். தாராள மனப்பான்மை யிலும், அறிவிற் சிறந்தவர்களை ஆதரிப்பதிலும், பண்பாட்டை வளர்ப்பதிலும், அரசாங்கத்தைப் பரந்த கொள்கைகளின்மீது அமைத்தலிலும் அவர்களில் பலபேர் அக்பருக்கு முன்னேடி களாகத் திகழ்ந்தனர். ஒரிஸ்ஸா, விஜயநகர், இராஜபுதனம் ஆகியவற்றை ஆண்ட இந்து மன்னர்கள் தம் சொந்த அரசியல் மரபுகளையே பின்பற்றி நடந்துகொண்டனர். அதன்படி அவர்கள் சமயப் பொறையையும், யாவர்க்கும் பாரபட்சமற்ற சமநீதியையும் வழங்கினர்.

சூர்கள் காலத்து அரசுரிமையும் மையத்தில் அதிகாரம் செறிந்ததோர் அரசாங்கமும்

ஆங்காங்கே வட்டார நாடுகள் தோன்றிய இக் காலமானது அரசியல் சீரமைப்புச் சகாப்தம் ஒன்றைத் தொடங்கியது எனலாம். அச் சகாப்தமானது ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு, அதாவது 1,400 முதல் 1,550 வரை நீடித்தது. இந்தக் கால வரையறைக்குள் டில்லியைத் தலைநகராகக்கொண்டு, சிந்து கங்கைச் சமவெளிகளின் வெவ்வேறு பகுதிகளைத் தம் எல்லை களாகக் கொண்ட மூன்று பேரரசுகள் தோன்றி வீழ்ச்சியுற்றன. 'லோடிகள்' நிலமானிய முறையை அடிப்படையாகக்கொண்ட அரசியலமைப்பு ஒழுங்குமுறை ஒன்றை நிறுவினர். அரசர் சமமானவர்களுக்குள் முதல்வராக விளங்கினுர். அங்ஙனம், சமமானவர்களாயிருந்தவர்கள் நிலமானியப் பிரபுக்களேயாவர். அரசானது ஒரு கட்சிச் சார்பாகவே இயங்கி வந்தது. சமயத் துறையில் சகிப்புத்தன்மை இல்லாத குறுகிய கொள்கையானது அதன் சிறப்பியல்பாக விளங்கிற்று. அதன் ஆட்சித்துறை நிறுவனமானது டில்லி சுல்தானியர்கள் காலத்து நிறுவனங்கள் போலவே பெரிதும் அமைந்திருந்தது. வஜீர், சதர், ஹஜீப், முஸ்தாஃபி, அரீஜ் முதலியவர்கள் மத்திய அரசாங்கத்தின் உறுப்பினர்களாயிருந்தனர். மாநில அரசாங்கங்களும் தல அரசாங்கங்களும் நிலமானியப் பிரபுக்களின் கைகளில் ஒப்படைக்

கப்பட்டிருந்தன. அவர்கள் தமக்குத் தேவையானபோது பொருளையும் வரிகளையும் குடியானவர்களிடமிருந்து கறந்து கொண்டபின் கிராமங்கள் எப்படியாவது போகட்டும் என விட்டு விட்டனர். கிராமங்கள் ஒவ்வொன்றும் தம்மைத் தாமே பாது காத்துக்கொள்ளுமாறு விடப்பட்டன. ஆப்கானிய லோடிகள் மொகலாயர்களால் தோற்கடிக்கப்பட்டனர். அதன் பின்னர், மொகலாயர்கள் ஆப்கானியச் சூர்களால் தோற்கடிக்கப் பட்டனர். சூர்கள் ஆப்கானிய அரசியல் அமைப்பில் காணப் பட்ட ஒருசில மோசமான கூறுபாடுகளை அகற்றினர். ஒரு புதிய அரசியலமைப்பு ஒழுங்குமுறையை, செம்மையானதும் நிலை யானதுமான அடிப்படைகளின்மீது அவர்கள் நிறுவினர். அவர் களுக்குள் சிறந்து விளங்கிய அரசரான ஷெர்ஷா என்பவர், அதிகாரமானது மையத்தில் பெரிதும் செறியப் பெற்றதும் அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கம் நிறைந்ததுமான ஓர் அரசாங் கத்தை ஏற்படுத்தினார். மக்கள் நலன் பேணும் அரசுக்கு அஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. அவரது அரசாங்கக் கொள்கை தாராளத் தன்மை வாய்ந்ததாக இருந்தது. மக்களுக்கும் அரசுக்கும் நலன் விளைப்பதாகத் தெரிந்த கொள்கைகளிலிருந்து அவர் இம்மியளவும் வழுவாமல் செய லாற்றினார். முற்றும் மதச்சார்பான கொள்கைகளுக்காக அவர் தம் அரசியற் கோட்பாடுகளை மாற்றிக்கொள்ள மறுத்து விட்டார். அரசாங்கத்தில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஒருவிதமான பாகுபாடுமின்றிச் சிறியனவும் பெரியனவுமான பல பதவிகளை அவர் தாராளமாக வழங்கினார். ஒருவனை ஒரு பதவியில் அமர்த்துவதில் அவர் தகுதியையே பெரிதாகக் கொண்டாரே யன்றிச் சாதியை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. ஆட்சித் துறை நிறுவனங்களில் அவர் இந்துக்களைச் சேர்த்துக்கொண்டார். அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான தளகர்த்தர்களில் ஒருவர் இந்துவாயிருந்தார். 'வஜீர்' 'திவான்', 'பக்ஷி', 'சதர்', இன்னும் ஒரு சில அதிகாரிகளை உட்கொண்டதாக அவரது மத்திய அரசாங்கம் விளங்கிற்று. இவ்வமைச்சர்கள் அரசாங்கச் செயலகத்தின் பல் வேறு துறைகளைக் கண்காணித்து வந்தனர். மாநில, தல ஆட்சி முறைகள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட் டிருந்தன. அரசாங்க அமைப்பு முழுவதிலும் ஒன்றையொன்று கட்டுப்படுத்தக்கூடிய பல படித்தரங்கள் வரிசையாயிருந்தன. மிகக் கீழேயிருந்த அரசாங்கத்துறைகள் அவற்றுக்கு மேலேயிருந்த துறைகளால் கட்டுப்படுத்தப்பட்டன. மேலே இருந்த துறைகள் மத்திய ஆட்சித் துறைக்குக் கட்டுப்பட்டிருந்தன. மத்திய ஆட்சித் துறையானது ஷெர்ஷாவின் நேரடியான மேற் பார் வைக்கு உட்பட்டிருந்தது. ஆட்சித் துறையின் அடித்தளத்தில்

கிராமங்களும், கிராமத் தொகுதிகளும் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் திட்டவட்டமான அதிகாரிகளேயும் பணிகளேயும் கொண்ட ஒரே மாதிரியான அதிகாரிகளின் கூட்டமொன்று ஆண்டுவந்தது. ஆட்சித் துறையின் நிறுவனத்தைச் சீரமைப்பதில் அவர் இரண்டு குறிக்கோள்களேத் தம்முள் வைத்திருந்தார். ஒன்று, அரசாங்கம் செம்மையாக நடைபெறுவதற்காக அதன் அதிகாரம் அனேத்தையும் மையத்தில் குவியச் செய்யவேண்டுமென்பதாகும். இரண்டாவது, எல்லா வகையான கொடுமைகளிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் குடியானவர்களேக் காக்க வேண்டுமென்பதாகும். விரிவான நில அளவை முறையையும் இன்னும் விரிவான நிலவரி நிர்ணய முறையையும் அடிப்படையாகக்கொண்ட வருமான நிர்வாகமும் உள்நாட்டுப் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட போலீஸ் முறைகளும் அவரது அரசாங்கத்தின் சிறப்புமிக்க தனிப் பண்புகளாகத் திகழ்ந்தன. பரந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட பொதுப்பணிகளும், தபால் முறையும், நாணயச் சீர்திருத்தங்களும், கலே, இலக்கியம் முதலியவை தாராளமாக ஆதரிக்கப்பட்டதும் ஷெர்ஷாவின் ஆட்சி முறையில் காணப்பட்ட மக்களின் நலன் பேணும் செயல்களாகும். இச் செயல்களின் மூலமாக ஷெர்ஷா யாரும் என்றுமே கண்டிராதபடி மக்களின் விசுவாசத்தை நிரம்பவும் பெற்ருர். இங்ஙனம், திறமைமிக்க ஆட்சித்துறை அமைப்பின்மூலம் பெறப்பட்ட அதிகாரச் செறிவுமிக்க மத்திய அரசாங்கத்தை அமைத்ததாலும், மக்களின் ஆதரவையும் விசுவாசத்தையும் பெற்றதாலும் ஷெர்ஷாவின் காலத்தே அரச பதவிக்கு அஃது ஒரு நிறுவனம் என்ற முறையிலிருந்த பெருமையும் நிலேபெருன தன்மையும் அதிகரித்தன.

அவருடைய மகனும் வழித்தோன்றலுமான 'இஸ்லாம்ஷா' இன்னும் ஒரு படி மேலே சென்று அரச பதவியின் கண்ணியத்தை உயர்த்தி அதை இறைமையின் சின்னமாக ஆக்கினுர். அல்லது இறைமையானது தன்பால் ஓர் உருக்கொண்டு எழுந்தது என்னும் படி அவர் நடந்துகொண்டார் எனலாம். மதம், மதச்சட்டம் ஆகியவற்றைக் காத்துவந்த மதகுருமார்கள்மீது அவர் ஆதிக்கம் செலுத்தினுர். தம்மிடமிருந்து அவர்கள் ஆணேகளேப் பெறுமாறு கட்டாயப்படுத்தினுர். உலகியல்துறை அல்லது மதத்துறை பற்றிய எல்லாக் காரியங்களிலும் தம் தீர்ப்பே முடிவானது என அவர் வற்புறுத்தினுர். அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் தொடங்கிய ஒரு முறையானது அவரது காலத்தே அநேகமாக முற்றுப் பெற்றது எனக் கூறலாம். அதன் முதலாவது கட்டத்தில் அரசாங்கத்தின் செயல்வரம்பும் இஸ்லாம் சமயம் அல்லது

சட்டங்களின் செயல்வரம்பும் தனித்தனியானவை என்பது வற்புறுத்தப்பட்டது. மகமது பின் துக்ளக் காலத்தில் இக் குறிக்கோள் நிறைவுற்றது. இரண்டாவது கட்டத்தில் மதகுருமார்களின் செல்வாக்கானது அரசாங்கத்திடமிருந்து நீக்கப்படவேண்டுமென்றும், அரசர் தமது வல்லமையின்மூலமும் தோற்றப் பொலிவின்மூலமும் அரசாங்கத்தின் இறைமையை நிறுவவேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது. அத்தகைய குறிக்கோளை இஸ்லாம்ஷா பூர்த்தி செய்தார். இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் படித்தர வளர்ச்சியில் இஃது ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிப்பதாகும்.

அக்பரின் அரசுரிமைப் பதவியில் பழைய இந்தியக் குறிக்கோள் மீண்டும் உயிர்ப்பிக்கப் பெறல்

இஸ்லாம்ஷா விட்டுச்சென்ற பணியை அக்பர் தொடர்ந்து ஆற்றலானுர். அதில் அவர் இஸ்லாம்ஷாவையும் விஞ்சி மேற்சென்முரென்றே கூறலாம். அவர் அரியணை ஏறியபோது, ஆட்சி புரிதற்கான இராஜ்யம் என்று ஒன்றில்லை. அடிப்படைகளிலிருந்தே அவர் எல்லாவற்றையும் தொடங்கவேண்டியிருந்தது. அவரது ஆட்சிக்காலமாகிய ஐம்பது ஆண்டுகளில் அவர் பரந்ததொரு நிலைபேறுன பேரரசை நிறுவியதோடு மட்டுமின்றி, அப் பேரரசுக்கு ஓர் அரசாங்கத்தையும், அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையையும் வகுத்துக்கொடுத்தார். அலாவுதீன் கில்ஜியின் காலத்தே தொடங்கப்பெற்ற அரசாங்க முறைமையானது அக்பர் காலத்துத்தான் முற்றுப்பெற்றது எனலாம். அக்பரின் கீழ் இருந்த அரசு, இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறைக்கு எழில்மிக்கதோர் எடுத்துக்காட்டாய் அமைந்தது. ஷெர்ஷாவினுல் நிறுவப்பெற்ற, அதிகாரச் செறிவு நிறைந்ததோர் அரசாங்க முறையை அவர் நன்கு பயன்படுத்திக்கொண்டதோடு, அதில் தம் சொந்தக் குறிக்கோளையும் புகுத்தினுர். அக் குறிக்கோள் இராஜரீகம்பற்றிய புதியதொரு கோட்பாட்டை - அதாவது, தெய்விக உரிமைப்படி கிடைக்கப் பெறுவதே இராஜரீகம் என்ற கொள்கையை - உட்கொண்டதாக இருந்தது. இதில் அவர் தம் முன்னேர்களின் கொள்கையையே கைக்கொண்டார் எனலாம். தாய்வழியில் சிங்கிஸ்கானையும், தந்தை வழியில் தைமூரையும் கொண்டிருந்த ஒரு வம்சத்தில் பிறந்த அக்பர், அவ் வம்சத்தாரின் பழைய மரபுகள், அரசியல் நிறுவனங்களில் பொதிந்துகிடந்த கருத்துக்களைத் தாராளமாக எடுத்துக் கொண்டார். தெய்விக ஒளியினின்றும் தோன்றிய ஒரு தெய்விகக்

குடும்பத்தைச் சேர்ந்தவர் எனச் சிங்கிஸ்கான் உரிமை பாராட்டினர். அவரும் அவருடைய வழிவந்தோரும், 'நீருன்' (Neirun) அல்லது 'ஜோதியில் தோன்றியோர்' என்று தங்களை அழைத்துக் கொண்டனர். தெய்விக உரிமையின்படியே இராஜரீகமானது தங்களுக்குக் கிடைக்கப்பெற்றது என அவர்கள் எல்லாருமே கூறிக்கொண்டனர். அமீர் தைமூர், சிங்கிஸ்கானின் குடும்பத்தில் பெண் கொண்டார். இங்ஙனம், அரச குடும்பத்தோடு அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர் நாடுகளை வெல்லும் வெற்றியாளராக மட்டுமின்றி, பேரரசு ஒன்றை அமைக்க வல்லவராகவும் திகழ்ந்தார். அதோடு தெய்விக உரிமையின் வழிவந்ததே இராஜரீகம் என்ற குறிக்கோளிலும் அவர் ஆழ்ந்த பற்றுள்ளவராயிருந்தார். அரசர்களென்போர் இந் நிலவுலகில் உலவும் இறைவனின் சாயைகள் எனவும், ஆகவே பிறப்பாலும், இருப்பாலும் அவர்கள் உலகியல் துறை, ஆன்மிகத் துறை ஆகிய இரண்டுக்குமே தலைவர்கள் எனவும் அவர் நம்பினர். இங்ஙனம் மொகலாய அரச குடும்பத்தில், தெய்விக அரசுரிமை மரபானது நெடுங்கால வரலாற்றைக் கொண்டதாயிருந்தது. அதனாற்றான் பாபர், ஹுமாயூன், அக்பர் ஆகியோரின் உள்ளங்கள் இக் குறிக்கோளில் நன்கு தோய்ந்து கிடந்தன. ஆனால், தெய்விக உரிமை வழி ஒரு முடியரசு ஏற்படவேண்டுமானல் அது வரம்பற்ற அதிகாரம் கொண்டதோர் அரசு ஏற்படுவதைக் குறிக்குமேயன்றி வேறன்று. அப்படிப்பட்ட அரசு ஏற்படவேண்டுமானல் மையத்தில் அதிகாரம் செறியப்பெற்ற திறமைமிக்க ஓர் அரசாங்கம் அதற்குத் தேவை என்பது ஒருதலை. அத்தகைய அரசாங்க அமைப்பை ஷெர்ஷா ஏற்கெனவே நிறுவிவிட்டுப் போயிருந்தார். இஸ்லாம்ஷா அதை மேலும் வலுவாக்கினர். இஸ்லாமியச் சமயக்காவலர்கள், சட்ட அறிஞர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் குலைத்து அவர் அரசருக்குரிய வரம்பற்ற வல்லாட்சிக்கு அடிக்கல் கோலினர். இங்ஙனம், அக்பருக்குக் தேவையான முன்னேற்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுவிட்டன. தம்முடைய முன்னோர்களிடமிருந்து வழிவழியாகப் பெற்றதோர் அரசுரிமைக்கோட்பாட்டுக்கு ஏற்றதோர் அரசியலமைப்பு ஒழுங்கு முறையை அக்பர் நிறுவுதற்கான அடிப்படையானது இங்ஙனம் அவரது காலத்துக்கு முன்பே நன்கு அமைக்கப்பட்டுவிட்டது.

ஆனல் அது மட்டுமன்று; புதிய அரச நிறுவனமொன்றைத் தம் முன்னோர்களின் மரபு வழி வெறுமனே அமைத்ததோடு மட்டும் அவர் நிற்கவில்லை. இந்து அரசியல் மரபுகளையும், நிறுவனங்களையும் கைக்கொண்டு அவற்றின்மூலம் மொகலாய அரச பத

விக்கு அவர் ஒரு வலிமையையும் திண்மையையும் ஊட்டினார். அதுவே அக்பரது மேதையின் ஒப்பற்ற சாதனையாகும். வேறு எவருமே சாதிக்காத புதுமையான ஒரு காரியத்தை அவர் வெற்றியுடன் செய்து முடித்தார் என்றால் மிகையாகாது. இந்துக்களின் கருத்துப்படி, அதாவது பண்டைய இந்திய அரசியல் மரபுகளின் படி அரசர் என்பவர், ''மானுட வடிவில் வந்த கண்கண்ட தெய்வம்'' எனவும், ''சமுதாய அமைதியையும் அறநெறி முறையையும் புரப்பவர்'' என்றும், ''யுகத்தை உண்டாக்குபவர்'' எனவும் மதிக்கப்பட்டார். அக்பர் இத்தகையதொரு பாகத்தை ஏற்று நடிக்க வேண்டுமானால், அல்லது அவருடைய முன்னோரான அமீர் தைமூர் கூறியபடி ''கடவுளின் சாயை'யாக இருக்க வேண்டுமானால், தம்மால் தலைமை தாங்கப்பெற்ற இஸ்லாமிய அரசின் கொள்கைகளையும் ஆட்சி முறையையும் முற்றும் மாற்றியமைக்க வேண்டுவது அவசியமாயிருந்தது. தம் ஆட்சி எல்லாருக்கும் உகந்ததாக - சிறப்பாக இந்துக்களுக்கும் ஏற்புடைத்தாக - இருக்கவேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். எனவே, அவர் இந்துக்களின் சமய உணர்ச்சிகளை மதித்து நடந்துகொண்டதோடு இராஜபுத்திரர்களோடு திருமணத் தொடர்பு கொண்டு இந்துக்களின் அன்பையும் விசுவாசத்தையும் பெற எல்லா வகையிலும் பாடுபட்டார். இஸ்லாமியச் சமயத்தையும் சட்டத்தையும் பேணி வந்த குருமார்களின் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் அவர் ஒதுக்கித் தள்ளினார். தலைமைச் சதர்ப் பதவியை அவர் ஒழித்தார். மத சம்பந்தமான காரியங்களில் அவர் தாமே 'பிழைபடா'(Infallible)வழிகாட்டி என்ற பாகத்தையும் ஏற்றுக் கொண்டார், முடிவில் அவர் தீன்-இ-லாஹி (Din-i-Ilahi) அல்லது தெய்விக மதம் ஒன்றிற்குத் தீர்க்கதரிசியாகத் தம்மைத் தாமே ஆக்கிக்கொண்டார். அம் மதமானது இந்து மதம், இஸ்லாம், ஜைனம், ஜொராஸ்டிரிய மதம் ஆகியவற்றில் காணப்படும் முக்கியக் கூறுபாடுகள் யாவற்றையும் உட்கொண்டு விளங்கிற்று. தம் பேரரசில் இருந்த பல்வேறு சமயப் பிரிவினர்களிடையே ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்ப்பதற்காகவே அவர் அம்மதத்தை ஏற்படுத்தினார். சமயத் துறையிலும், அரசியல் துறையிலும் அவர் ஒருங்கே தலைமை பெறுவதற்கு அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்ள எண்ணினார். அங்ஙனம் தலைமை பெற்றுவிடுவதால், மக்கள் அனைவருடைய விசுவாசமும் கீழ்ப்படிதலும் பிரிவுபட வழி இல்லாமற் போகுமெனவும், அவற்றை முழுமையாகத் தாமே பெறுவதற்கு வழி ஏற்படுமெனவும் அவர் கருதினார். இங்ஙனம் ஒரு புதிய சமுதாய, அறநெறி அமைப்பின் கர்த்தாவாக அவர் தம்மைக் காட்டிக்கொண்டார். அல்லது கௌடில்யருடைய சொற்களின்படி ஒரு 'தர்மப்

பிரவர்த்தக'ராகவும், இந்து இதிகாசங்களின் கூற்றுப்படி, 'யுகத்தை ஆக்குபவ'ராகவும், அல்லது 'காலஸ்ய காரண'மாகவும் அவர் விளங்கினார். எனவே, மக்களின் நல்வாழ்வுக்குத் தலைசிறந்த ஓர் ஆதாரமாக அவரும், அவர் வாயிலாக அவருக்குக் கீழ் இருந்த அரசும் அமையலாயின. அவரது காலத்தே ஏற்பட்ட பல்வேறு சாதனைகளின் மூலமும், முன்னேற்றத்தின் வாயிலாகவும், மக்கள் நலன் கருதிய அவருடைய நோக்கங்கள் யாவும் நன்கு வெளிப் பட்டன. அதுவே அவரது வெற்றியின் இரகசியமாகும்; முடியரசை மக்கள் போற்றியதற்கும் அதுவே காரணமாகும்.

இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறை— அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட ஓர் இணைப்பு

இங்ஙனம், அரசுரிமையைப்பற்றி இந்துக்களும் மொகலாயர் களும் கொண்டிருந்த குறிக்கோள்களும் மரபுகளும் மிக அழகான முறையில் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டன. அக்பரின் உருவில் வெளிப்பட்ட அரசுரிமையானது அரசியல் நிறுவனத்தில் எல்லாம் தலைசிறந்ததாக விளங்கியது. ஷெர்ஷாவால் அமைக்கப்பட்ட அதிகாரச் செறிவுமிக்க மையத்தைக் கொண்டதும், அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம் மிக்கதுமான ஓர் அரசாங்க முறையை அக்பர் அப்படியே எடுத்துக்கொண்டு அதில் மேலும் சில சீர்திருத் தங்களைச் செய்து அதற்கு இன்னும் திண்மையை ஊட்டினார். அத் தகைய அரசாங்க முறையானது முடியரசு நிறுவனத்தைத் தாங் கும் ஒரு தூண்போல அமைந்தது. அக்பரது அரச நிறுவனமானது ஒரு புதிய அரசின் அறிகுறியாகத் திகழ்ந்தது. மதச் சார்பற்ற தன்மையே அதன் உட்பொருளும் சிறப்பியல்புமாக விளங்கியது. ஏனெனில், பல்வேறு சமயப் பிரிவுகளிடையே சமரசம் செய்து வைக்கின்றவராக அரசரே விளங்கினார். யாவருக்கும் அவர் சம யப் பொறையை வழங்கினார். நாம் இன்றைக்கு மக்கள் நலன் பேணும் அரசு என்று எதைக் கருதுகிறோமோ, அத்தகைய அரசை அக்பர் ஏற்படுத்தினார். அதன் வல்லமையும் தகுதியும் இந்தியா அனைத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டன. பண்டைய இந்தியாவில் குப்தர்களின் காலத்தும் அசோகரது காலத்தும் எப்படி அரசர் களுடைய ஆணையானது நாட்டின் எப்புறத்தும் செல்லுபடி யானதோ அதுபோன்றே அக்பரின் அதிகாரம் நாடெங்கும் பரவி யிருந்தது. எல்லாவகை மக்களும் அவரது தலைமையை ஒப்புக் கொண்டனர். மக்களுடைய தனி வாழ்க்கையிலும் தலையிடக் கூடிய அளவுக்கு அவரது செல்வாக்கு பரவியிருந்தது. சமுதாய ஒழுக்கம்பற்றிய விதிமுறைகளை அவர் தம் விருப்பம் போல் வகுத்து அமல் நடத்தினார். 'சதி' என்ற கொடிய முறையைத்

தடுக்கவும், திருமண முறையினைக் கட்டுப்படுத்தவும், உணவு முறைகளை வரையறுக்கவும் இன்னும் இதுபோன்ற பல செயல்களைச் செய்யவும் இவரால் முடிந்தது. அசோகருடைய ஆட்சிக் காலத்து நடைபெறக்கூடிய காரியங்கள் அனைத்தும் அக்பர் காலத்தும் நடந்தேறின. புதிதாக ஏற்பட்ட இவ்வரசானது புற வடிவைப் பொறுத்தவரையில் முடியரசாக விளங்கியது. சமயச் சார்பற்ற தன்மையானது அதன் உட்பொருளாயும் சிறப்பியல்பாகவும் திகழ்ந்தது. அதிகாரத்தைச் செலுத்துவதில் அஃது எல்லையற்ற இறைமை பூண்டு விளங்கியது. எனவே, இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் தலைசிறந்த எடுத்துக்காட்டாக அது விளங்கியது. ஏனெனில், அதில் மொகலாயர்கள் இந்துக்கள் ஆகிய இரு சாராருடைய குறிக்கோள்களும் நிறுவனங்களும் மிக அழகிய முறையில் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. இத்தகைய எல்லா மரபுகளுடனும் கூடிய அரசுரிமை நிறுவனமே அக்பரின் வழிவந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆட்சி முறையைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்தில் அதிகாரச் செறிவை ஏற்படுத்த அவர் இரண்டு வழிகளைக் கையாண்டார். மத்திய அரசாங்கச் செயலகம் ஒன்றை அமைப்பதாலும், மத்திய அரசாங்க ஊழியம் ஒன்றைத் தோற்றுவிப்பதாலும் அவர் தம் குறிக்கோளை எய்த முயன்றார். மத்திய அரசாங்கச் செயலகம் (Secretariat) பல்வேறு துறைகளைக் கொண்டு விரிவான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அத் துறைகள் ஒன்றோடொன்று ஒப்புரவுடன் பணிபுரியும் வகையில் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தன. அரசாங்கச் செயலகம் முழுவதையும் நெறிப்படுத்திய ஒரு முக்கியமான கொள்கை என்னவெனில், 'ஒன்றுக்கொன்று தடை செய்துகொண்டு சமநிலை எய்தும்' கொள்கையே ஆகும் (Checks and balances). இங்ஙனம், அவரது ஆட்சித்துறையில் அதற்கே உரிய ஒரு வேகமும் அதே சமயத்தில் சமநிலையும் ஒருங்கே அமைந்திருந்தன. ஆகவே, அக்பரது காலத்திற்குப் பின்னும் அது தொடர்ந்து நீடித்தது. அடுத்து, மத்திய அரசாங்க ஊழிய நிறுவனம் (Central Service) ஒன்று நன்கு அமைக்கப்பெற்றிருந்தது. அதற்கு 'மன்சப்தாரி முறை' என்று பெயர். நாட்டின் அரசாங்க ஊழியர்கள் யாவரும் முப்பத்து மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு வகையும் ஒரு குறிப்பிட்ட படித்தரத்தை உணர்த்தியது. ஒவ்வொரு படித்தரத்திற்கும் தனிப்பட்ட ஊழிய நிபந்தனைகள் இருந்தன. ஊழியர்களின் ஊதியம் நன்கு வரையறுக்கப்பட்டிருந்தது. நிர்வாகத்திற்கும் நீதி நிறுவனத்திற்கும் இடையேயும் சிவில் துறைக்கும் இராணுவத் துறைக்கும் இடையேயும் வேறுபாடு அதிகம் காணப்படவில்லை. ஏறக்குறைய அவை

ஒன்றுபோலவே இருந்தன. திறமைமிக்க வருமானத் துறையானது நாட்டின் நிதிநிலைக்கு ஒரு முதுகெலும்பாய்த் திகழ்ந்தது. ஆட்சித்துறை அமைப்பு முழுவதும் நன்கு ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஜீவனுள்ள ஒரு நிறுவனமாக விளங்கியது. வரம்பற்ற அதிகாரத்தைக் கொண்ட முடியாட்சி நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்று அக்பர் கொண்டிருந்த குறிக்கோள் நிறைவேறுவதற்குத் தக்கபடி அஃது அமைந்திருந்தது.

இந்தோ-இஸ்லாமிய அரசியலமைப்பு மரபுகளினின்றும் வழுவல்

அக்பரால் நிறுவப்பெற்ற அரசாங்க முறையும் அரசுரிமை நிறுவனமும் குறிக்கோளும் அக்பருக்குப் பின் சில காலம் ஒருவித மாறுபாடுமின்றி அப்படியே இருந்து வந்தன. இந்தோ - இஸ்லாமிய அரசியலமைப்பு மரபுகளினின்றும் முதன்முதலாக அரசர்கள் வழுவத் தொடங்கியது ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஷாஜஹான் காலத்திலேதான். இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்று ஷாஜஹான் முயன்றபோதும், இந்துக்களைத் துன்புறுத்துவதற்கு அவர் இசைந்தபோதும் இந்தோ - இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறையின் குறிக்கோளாக அக்பரது காலந்தொட்டு விளங்கி வந்த மதச் சார்பற்ற தன்மை அல்லது கட்சிச் சார்பற்ற அரசு என்ற குறிக்கோளினின்றும் அவர் பெரிதும் இழிந்து வந்துவிட்டார். அக்பர், ஜஹாங்கீர் காலத்தில் இருந்தது போன்று இவர் காலத்திலும் இந்துக்கள் முஸ்லிம்களோடு ஒத்துழைத்து அரசாங்கத்தை நடத்தி வந்தனரென்பதும், முஸ்லிம்களைப் போன்று உயர்ந்த பதவிகளிலிருந்து வந்தனரென்பதும் உண்மையேயெனினும், அக்பரது காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசுரிமை மரபுகளினின்றும் வழுவிச் சமயப்பொறைக் கொள்கையைக் கைவிட்டதனுல் ஷாஜஹானுக்கும் இந்துக்களுக்குமிடையே ஒருவித அவநம்பிக்கை ஏற்பட்டது. ஷாஜஹானுக்குப் பின்வந்த அவுரங்கசீப் இன்னும் ஒரு படி மேலே சென்று குரானியக் கட்டளைகள், புனிதச் சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையின்மீது முற்றும் இஸ்லாம் மயமான ஓர் அரசினை நிறுவ எத்தனித்தார். இந்துக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளில் அவர் ஈவிரக்கமின்றி இறங்கினுர். இந்துக்களை மட்டுமேயன்றி சுன்னிகள் அல்லாத பிற முஸ்லிம்களின்மீதும் அவர் அடக்குமுறையைச் செலுத்தினுர். 'ஷீயா' முஸ்லிம்களைக்கூட அவர் விட்டுவைக்கவில்லை. பலவந்தமாகப் பலர் மதம் மாற்றப்பட்டனர். இந்துக் கோவில்கள் பல இடிக்கப்பட்டன, புனிதக் குரானியச் சட்டமானது எல்லா அரசாங்க அலுவல்களிலும் பெயரளவில் மட்டுமின்றி

உண்மையிலேயும் அமல் செய்யப்பட வேண்டுமென்று பேரரசி லிருந்து ஆணைகள் பல வெளியிடப்பட்டன. ஒரு நூற்றுண்டுக்கு முன் அக்பரால் ஒழிக்கப்பட்ட 'தலைவரி'யும் 'யாத்திரிகர் வரி' யும் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன. அரசாங்க அலுவலகங்களில் ஆட்கள் நியமிக்கப்பட்டபோது சமயஅடிப்படையில் பாரபட்சம் காட்டப்பட்டது. அக்பர் காலத்திய கொள்கைகளுக்கும் மரபு களுக்கும் முற்றும் விரோதமான முறையில் அவர் நடக்கத் தலைப்பட்டார். அக்பரால் நிறுவப்பெற்ற இந்தோ - இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறை என்ற கட்டடமானது இடிக்கப் பட்டு அதிலிருந்த செங்கற்கள் ஒவ்வொன்ருகப் பிடுங்கி எறியப் பட்டன. வகுப்புவாதம் நிறைந்ததும், ஓரவஞ்சனை நிரம்பியது மான அரசு ஒன்று ஏற்கெனவே இருந்த அரசின் அழிவுச் சின்னங் களிலிருந்து தோன்றியது. முஸ்லிம்கள் இந்தியாவில் ஆண்ட ஐந்து நூற்ருண்டுகளில் அவர்கள் செய்த முயற்சிகள் யாவும் முற் றும் பயனற்றுப் போயின. இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர்கள் பட்டபாடும் வீணுயின. இஸ்லாம் இந்தியாவிற்குள் புகுந்து ஆறு நூற்ருண்டுகளுக்குப் பின்னர் முற்றும் இஸ்லாமிய மயமான ஓர் அரசை நிறுவுவது என்பது முடியாத காரியம் என் பதை அவுரங்கசீபால் உணர முடியவில்லை. முற்றும் இஸ்லாம் மயமான ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்தப் பதின்மூன்று பதி ஞன்காம் நூற்ருண்டிலேயே முடியாமல் போயிற்று. இந்தியச் சூழ்நிலையில் அத்தகைய அரசாங்கம் முற்றும் தகுதியற்றது என் பதை அலாவுதீன் கில்ஜியும், மகமதுபின் துக்ளக்கும் உணர்ந் திருந்தனர். அங்ஙனம் பதின்மூன்று, பதிஞன்காம் நூற்ருண் டிலேயே அமைக்க முடியாததொன்று எனக் கருதப்பட்ட இஸ்லா மிய அரசைப் பதினேழாம் நூற்ருண்டில் நிறுவ எத்தனிப்பதென் பது, அதுவும் அக்பரது காலத்து மொகலாய ஆட்சியின் பெருமை யையும் புகழையும் மக்கள் கண்டபின் அத்தகைய முயற்சியில் ஈடுபடுவதென்பது வரலாற்று ரீதியில் பார்க்கும்போது காலத் துக்கு ஒவ்வாததொன்றென்பதும், அரசியல் ரீதியில் பார்க்கும் போது அத்துமீறிய அருவருப்பான செயல் என்பதும் வெள்ளிடை மலை. அப்படியிருந்தும் அவுரங்கசீப் அத்தகைய முயற்சியில் இறங்கியது மதியீனமான செயலேயாகும். அதனுலேதான் மொகலாயப் பேரரசானது அவுரங்கசீபின் காலத்தே சின்ன பின்னமாகச் சிதறுண்டது; அதோடு இந்தோ - இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையைத் தாங்கி நின்ற அரசாங்க நிறுவனமும் இடிந்து சிதறுண்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனினும், இந்திய மொகலாயப் பேரரசின் அழிவுச் சின்னங்களி லிருந்து எழுந்த அரசுகளின்பால், அதன் குறிக்கோள்களும் மரபு களும் தொடர்ந்து காணப்பட்டு வந்தன.

பொருள் குறிப்பகராதி

அ

அப்பாஸ் II (பாரசீக ஷா), 227
அப்பாஸித்துகள், 293
அப்துல் அஸீஸ், 130
அப்துன் நபி (தலைமை சதர்), 131
அப்துர் ரஹீம் கானி கான, 94
அபு சையத் மிர்ஸா, 97, 98
அபுல் ஃபாஸல், 149, 151, 171, 177
அபுல் கான் (ஷெர்ஷாவின் மகன்) 60, 62
அக்பர், 14, 15, 25, 70, 72, 73 74, 75, 76, 82, 83, 86, 87, 94, 100, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 143, 148, 150, 151, 154, 155, 156, 160, 167, 169, 171, 180, 193, 198, 204, 205, 206, 207, 209, 210, 212, 214, 215, 218, 220, 226, 227, 228, 229, 237, 238, 239, 240, 242, 243, 250, 256, 257, 261, 267, 271, 272, 275, 276, 281, 283, 298, 301, 303, 305, 306, 307
அலாவுதீன் கில்ஜி (சுல்தான்), 16, 27, 66, 125, 126, 128, 214, 296, 300, 301
அமீர் அப்துல் ஃபதுல்லா (தலைமை சதர்), 131, 132
அஷ்னஸ் (துருக்கிய காவற் படைத் தலைவர்), 292
அசோகர், 305
அவுரங்கசீப், 83, 84, 85, 213, 214, 215, 216, 222, 226, 227, 228, 229, 230, 234, 236, 237, 238, 239, 245, 247, 249, 272, 275, 277, 281, 288, 306
அஸிமுஷ்கான், 288
அஜீஸ் கோக்கா, 113

ஆ

ஆலங்குவா, 95
ஆலம்ஷா (சுல்தான்), 6
ஆஸம் ஹுமாயூன் (ஹைபத் கான் நியாஜி), 10, 17, 44

இ

இபாதத் கான, 116
இப்ராஹீம் ஷா (ஜான்பூர்), 5
இப்ராஹீம் ஷா (சூர்), 63
இல்துத் மிஷ், 65
இஸ்லாம் ஷா(சூர்), 3, 6, 15, 53, 55, 64, 69, 80, 91, 107, 300, 301

உ

உலுக் பெக், 92

க

கலீஃபா, 129, 211
கம்பரே அலி அர்குன், 130
கரா சார் நுயான் (சஹ்றை கானின் மருமகன்), 95

கா

கான் ஜஹான் லோடி, 231, 239
காஜி முல்லா மகமது மாசூம் (பீஹார்), 132

கி

கிசிர் கான் (சையத்), 39
கியாசுதீன் துக்ளக், 66

கு

குத்புதீன் முபரக் ஷா, 64
குலீஜ் கான் (வஸீர்), 165
குஷல் கானு, 153, 155
குஷ்ரு (இளவரசர்), 238

ச

சஹடை கான் (சிங்கிஸ்கானின் மகன்), 95
சத் நாமிகள், 84, 239

சி

சிங்கிஸ்கான், 95, 96, 103, 302
சிக்கந்தர் ஷா சூர், 15, 63

சு

சுல்தான் காஜா (தலைமை சதர்), 131
சுர்ஜன் ஹாடா (ராஜா), 113
சுல் ஹி குல், 120, 231

தா

தாரா ஷுக்கோ, 235

தீ

தீனே இலாஹி, 115, 121, 124, 131

தை

தைமூர் அமீர், 76, 91, 95, 96, 97, 103, 107, 126, 131

தோ

தோடர்மால் (ராஜா), 113, 153, 165

ப

பதௌனி அப்துல்காதர் (முந்த காபுத் தவரீஹ் என்ற நூலின் ஆசிரியர்), 132, 180
பகதூர்ஷா, (மொஹலாயப் பேரரசர்), 258
பகவான் தாஸ் (ராஜா), 113
பரமானந்தர் (மன்சப்தார்), 114

பா

பாபர், 72, 73, 74, 98, 129
பால்பன், 16, 27, 65, 234

பி

பிஹாரி மால் (ஆம்பரைச் சேர்ந்தவர்), 111
பிரம்மஜித் கௌர், 17, 19

பீ

பீர்பால், 153

பு

புஜஞ்சர் கான், 95

பெ

பெரோஷா, 67, 224

பை

பைராம் கான், 75, 102, 111

ம

மகபத் கான், 239
மகமது கஜினி, 65, 76, 90, 234, 292
மகமது ஷா (துக்ளக்), 39
மகமது சுல்தான் (ஜான்பூர்), 390

மீ

மீர்ஜுல்லா, 246

மு

முகமது பின் துக்ளக், 16, 27, 124, 125, 298, 302
முகமது நபி, 24, 67, 96, 106, 118, 207
முகமது ஷா ஆதில், 3, 6, 62
முபரக் ஷா (சையத் வமிசம்), 39
முபாரக் ஷா கில்ஜி, 67, 103, 107
முல்லா முகமது யஸ் டின், 117

மே

மேதினிராய் (மாள்வா), 19

மொ

மொய்சுதீன் முகமது கோரி, 76, 90

யூ

யூனுஷ்கான், 92

ரா

ராம் சந்திரா (ஒரிஸா ராஜா), 11.
ராய் பத்ர தாஸ், 114
ராஜ புத்திரர்கள், 204, 211, 231

லோ

லோடிகள்—இப்ராஹீம், 5, 13, 25, 31, 32, 41
பஹ்லோல், 5, 6, 8, 25, 26, 32, 34, 36
சிக்கந்தர், 5, 11, 25, 28, 29, 30, 31, 36, 40, 41
லோஹானி தார்யாகான், 31, 35

வா

வாசிக் பில்லா (கலீஃபா), 292

ஹு

ஹுமாயூன் (மொகலாயப் பேரரசர்), 2, 3, 13, 75, 76, 78, 99, 112, 139

ஜ

ஜமால்கான், 449
ஜஹாங்கீர், 76, 94, 212, 213, 214, 215, 216, 219, 221, 227, 228, 231, 238, 239, 240, 242, 245, 307

ஜா

ஜாஃபர்கான், 247

ஜெ

ஜெனியா, 112

ஜு

ஜுஜ்ஹார் சிங், 221

ஷா

ஷாஜஹான், 76, 83, 212, 213, 216, 219, 222, 228, 231, 238, 239, 240, 243, 246, 256, 260, 277, 306
ஷாருக், 92, 113
ஷாய்பானிகான் உஸ்பெக், 103, 107

ஷெ

ஷெர்ஷா, 2, 13, 15, 16, 17, 19, 22, 41, 42, 43, 45, 52, 53, 54, 55, 56, 57, 59, 60, 61, 62, 64, 68, 78, 80, 91, 94, 103, 107, 138, 151, 203, 299, 300, 302, 304

ஷே

ஷேக்ஷராஃப் (காராஃபாக் கைச் சேர்ந்தவர்), 130

தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகள், 1969

வரலாறு

ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு - I, II, III, IV —டாஸ்வெல்-லாங்மீட்

ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு - I,II,III —G.M. டிரெவெலியன்

இந்தியாவில் முகலாயரின் ஆட்சி - I, II —S. M. எட்வர்ஸ் —H. L. O. காரட்

பொருளாதாரம்

இந்தியப் பொருளாதார வரலாறு (1857 - 1956) — I —V. B. சிங்

பொருளாதாரம்-ஓர் அறிமுகம் —வீரா ஆன்ஸ்டி

அரசியல்

இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி - II, III —H. N. சின்ஹா

சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள் —எர்னஸ்ட் பார்க்கர்

அரசியலமைப்புச் சட்டம்-ஆய்வுக்கு ஓர் அறிமுகம் - I, II, III —A. V. டைசி

புவியியல்

சிஷோமின் வாணிகப் புவியியல் - I, II, III —L. டட்லி ஸ்டாம்ப்

தத்துவம்

இந்தியத் தத்துவம் - II —M. ஹரியண்ணு

மருத்துவம்

உடலியங்கியல் - I, II —K. M. பைகாவ்

என்புருக்கி நோய் —V. L. எய்னிஸ்

கூட்டுறவு

உலகக் கூட்டுறவு இயக்கம் —M. டிக்பி